

கல்கி
தீபாவளி
மலர்
KALKI DEEPAVALI NUMBER 1959


எந்த நேரத்திலும்
எந்த இடத்திலும்
எந்த சந்தர்ப்பத்திலும்
நீங்கள் எழில் மேம்பட காண்கிறீர்கள்
கடாவ்
வாயில்களில்

விரைவில் வருகிறது!



விநியோகஸ்தர்கள்: மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி உள்பட: மெஸர்ஸ் எவரஸ்ட் பிக்சர்ஸ், மதுரை வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு, பாண்டிச்சேரி உள்பட: மெஸர்ஸ் எஸ். ஆர். லிங்கம் பிலிம்ஸ், கடலூர் என். டி. கோயமுத்தூர், நீலகிரி: மெஸர்ஸ் ஈரோடு பிக்சர்ஸ் சர்க்யூட், ஈரோடு ★ சேலம்: மெஸர்ஸ் எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம் சிங்கப்பூர்: மெஸர்ஸ் நாஜு பிலிம்ஸ், கோலாலம்பூர் ★ சிலோன்: மெஸர்ஸ் சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட், கொழும்பு-2

இதர விவரங்களுக்கு: ஸ்ரீ விஜயகோபால் பிக்சர்ஸ், 8, கோபதி நாராயணசாமி செட்டி தெரு, சென்னை-17



"எங்கே, சிரியுங்கள்!" என்று அவர்களை சொல்லத் தேவையில்லை

பின்னி துணிகளை

அணிந்துகொண்டிருக்கும் இக்குடும்பத்தின் சந்தோஷத்திற்குக் கேட்கவும் வேண்டுமா?

பணிவுடன் சேவை செய்யும் வெங்கடேஷ் வஸ்திராலயா வின் மூன்று ஷோரூம்களிலிருந்து அதிகநாள் உழைக் கும் உயர்தர பின்னி துணிகளை வாங்குங்கள்!

கீழ்கண்ட பல ரகங்களில் உங்களுக்கு தேவையானவற்றை தேர்ந்தெடுங்கள்

ஹனுவா, ரிவிரா மற்றும் ஆன்டிகிரீஸ் ஸூட்டிங்குகள்; ஆர்ட்லின்; டஸ்ஸோர், ட்ரில்; லஸ்டலின்; காட்ஸ்வால்; ஜார்ஜெட், கிரேப் மற்றும் மிருதுவான பட்டுப் புடவை கள்; கேஸ்மெண்ட் துணி; கம்பளிகள், போர்வைகள்; பின் டெக்ஸ் கைத்தறி வேஷ்டிகளும் படுக்கை விரிப்புகளும்; டெர்ரிபைல் டவல்கள்

இன்றே விஜயம் செய்யுங்கள்

பாங்க் ஆப் மைசூர் கட்டிடத்தில் (ஹைகோர்ட்டுக்கு எதிரில்)


ஷோரூம் நெ. 1 இங்கு பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில் துணிகள் விற்கப்படும்.

ஷோரூம் நெ. 2 இங்கு பக்கிங்ஹாம் & கர்நாடிக் மில் துணிகள் விற்கப்படும்.

சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில்
(நெ. 2, தம்புசெட்டி தெருவிலிருந்து மாற்றப்பட்டது.)

ஷோரூம் நெ. 3 இங்கு பின்னி மில் துணிகளும் மற்ற துணிகளும் கிடைக்கும்.

வெங்கடேஷ் வஸ்திராலயா


ஜூபிலி பிலிம்ஸ்
வி.கோவிந்தராஜன்
அளிக்கும்
கல்கியின்
பார்த்திபன்
கனவு


திரைக்கதை
வசனஅமைப்பு
விந்தன்
சங்கீதம்
வேதா
படப்பிடிப்பு
செல்வராஜ்
காட்சிஜோடனைகள்
மணியம்
டைரக்ஷன்
யோகானந்த்



சிவாஜி கணேசன் அளிக்கும்
சரவணா பிலிம்ஸ்
பாகப்பிரிவினை
டைரக்ஷன்...A. பீம்சிங்
கதை, வசனம்
M.S. சோலைமலை
இசை
விஸ்வநாதன்-ராமமூர்த்தி
கேமரா
G. விட்டல்ராவ்
தயாரிப்பு...G.N. வேலுமணி
நெப்டியூன்
உலக உரிமையாளர்கள்.... அஜந்தா அருணாசலம், எம். திருப்பதி





விரைவில்
வருகிறது
மதுராம் பிக்சர்ஸ்
மீண்ட
ஸ்வர்கம்
புரொட்யூஸர் - T.A. துரைராஜன் B.A.B.Com.
காமரா - வின்செண்ட்
சங்கீதம் - சலபதிராவ்
கலை - செல்வராஜ்
கதை - வசனம் - டைரக்ஷன்
ஸ்ரீதர்
பூரண உரிமையாளர்கள் ஓரியண்டல் பிலிம்ஸ், சென்னை-17.

ELEGANT



நவம்பர் வெளியீடு!
சாண்டோ
M.M.A.சின்னப்பா தேவர்
அளிக்கும்
அமரா புரொடக்ஷன்ஸ்
உத்தமி பெற்ற ரத்தினம்
டைரக்ஷன்: M.A.திருமுகம்
கதை,வசனம்: ஆரூர்தாஸ்
சங்கீதம்: T.சலபதிராவ்
ஒலிப்பதிவு: C.V.மூர்த்தி
தயாரிப்பு E.ராதாகிருஷ்ணன்
உலக உரிமையாளர்: SM.AR.N.சுப்பையா செட்டியார் 7/1 லிஷப்வாலர்ஸ் அவென்யூ மதராஸ்-4.



தயாரிப்பவர்கள்

காலின்ஸ் அண்டு கம்பெனி, பம்பாய்-7

பூரண விற்பனை ஏஜெண்டுகள்

பெண்டக்ஸ் சேல்ஸ் கார்ப்பொரேஷன்

பெண்டக்ஸ் பில்டிங்ஸ், பம்பாய்-7



ஏஜண்டுகள்

ஏஜண்ட்ஸ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்

120, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 1

கேசத்தின் கருமையே உங்கள் இளமை

ஞாபகமிருக்கட்டும் — அடர்த்தியான, கருமையான கேசமே, உங்களை இளமையுடனும் . . . வசீகரத்துடனும் தோற்றமளிக்கச் செய்கிறது. ஆங்காங்கே இருக்கும் சில நரை மயிர்கள், உங்கள் இளமையை மறைத்து, உங்களை வயதிற்கு மீறிய முதுமையுடன் தோற்றமளிக்கச் செய்கிறது

உங்கள் கேசத்தில் நரை மயிர் தோன்றுவதை லோமாவை உபயோகித்து அறவே அகற்றி விடுங்கள் லோமாவில் அடங்கியுள்ள மருந்து சத்துப் பொருட்கள் உங்கள் கேசத்தைக் கருமையுடனும் பளபளப்புடனும் வைத்து, உங்களை இளமையுடன் தோற்றமளிக்கச் செய்கிறது. மேலும், லோமாவின் ரம்மியமான நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.



Loma

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரினில் புகழ் பெற்றது!

பூரண ஏஜண்டுகள்:
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்-1

ஏஜண்டுகள்:
நரோத்தம் & கோ., பம்பாய்-2

ஏற்றுமதி விவரங்களுக்கு:
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்-1

சென்னை ஏஜண்டுகள்: ஜே. பாலபாய் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள்: சிருல் கதிர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

பொருளடக்கம்



ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம் வெள்ளி விழா ஆண்டு 1959


ஸ்ரீ யோகிராஜ் உமேஷ் சந்திரஜி

சொற்பொழிவுகள்

ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்தர்ஜியும் மற்றும் பல அறிஞர்களும் யோகம், வேதாந்தம், பக்தி, தெய்வீகசக்தி போன்ற பல விஷயங்களைப்பற்றி ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமத்தில் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

உமேஷ் யோக தர்ஷன்

(முதல் பாகம்)

நான்கு மொழிகளில்: ஆங்கிலம், ஹிந்தி, குஜராத்தி, மராத்தி

ஆசிரியர்: ஸ்ரீ யோகிராஜ் உமேஷ்சந்தர்ஜி

யோகக் கலையின் உண்மையான சிறப்பை வெளிப்படுத்தும் இந்த அருமையான புத்தகம் ஸ்ரீ உமேஷ் சந்தர்ஜி அவர்களால் எழுதப்பட்டது. குடல் சம்பந்தமான தேகப் பயிற்சிக்கும், கட்டுப்பாட்டிற்கும் ஒரு சிறந்த வழிகாட்டி. (வயது, பருவகாலம், தேசம், கால நிலைகளுக்கு ஏற்றபடி) பல விதஆசனங்களைப்பற்றிய விரிவான விளக்கக் குறிப்புகளுடன், நூற்றுக்கு அதிகமான புகைப்படங்கள் உள்ளன. இதுவரை யோகத்தின் பலவித அம்சங்களைப்பற்றியோ, ஆசனங்கள், நேதி, தௌதி, முதலிய யோக சிகிச்சை முறைகளைப்பற்றிய புகைப்படங்களுடன் வெளிவந்துள்ள புத்தகங்களில் சிறந்தது. யோக சிகிச்சை முறை உணவு சிகிச்சை முறை, மனோதத்துவ சிகிச்சை முறை, இன்னும் பலவித சிகிச்சை முறைகளைப் பற்றியும் விளக்குகிறது. ஆரோக்கியத்துடன் இருப்பவர்களுக்கும் அல்லது ஆரோக்கிய மில்லாத சகல ஆண் பெண்களுக்கும் சிறந்த புத்தகம். ஆகையால் எல்லா வீடுகளிலும், புத்தகசாலைகளிலும் அவசியம் இருக்க வேண்டியது.

விலை ரூ. 15/-; தபால் செலவு ரூ. 2/- தனி; வி. பி. பி. கிடையாது

யோகாசனப் படம்

கண்கவரும் படங்களுடன் பளபளப்பான ஆர்ட் பேப்பரில் அச்சடிக்கப்பட்டுள்ளது. இதில் காணப்படும் ஆசனங்களை வீட்டிலேயே நீங்கள் செய்து ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்கலாம்.

ரூ. 2.50/- (தபால் செலவு உள்பட) மணியார்டர் மூலம் அனுப்பிப் பெறலாம்

யோகாசன வகுப்புகள் தினசரி காலை, மாலை ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமத்தில் நடத்தப்படுகின்றன பெண்களுக்குத் தனி வகுப்புகள் நடத்தப் பெண் உபாத்தியாயர்கள் உள்ளனர்

ராம்தீர்த் பிராமி ஆயில்

ஸ்பெஷல் நெ. 1 ரிஜிஸ்டர்டு

மயிர் உதிர்தல், சொட்டை விழாமல் தடுக்க ஓர் சிறந்த கூந்தல் தைலம். அனேக சிறந்த மூலிகைகளினும், ரசாயன முறைப்படி **ராம்தீர்த் பிராமி ஆயில்** தயாரிக்கப்படுகிறது. இந்த தைலம் மூளைக்குக் குளிர்ச்சியளித்து, உடலுக்கு ஆரோக்கியத்தை அளித்து. ஆழ்ந்த நித்திரையையும் கொடுக்கிறது. உடம்புக்குத் தேய்த்துக் குளிப்பதற்கு மிகவும் சிறந்தது. எல்லோருக்கும் எக்காலத்திற்கும் உகந்தது.

விலை பெரிய பாட்டில் ரூ. 4/- சிறிய பாட்டில் ரூ. 2/-

ஸ்ரீ ராம்தீர்த் யோகாஷ்ரமம்

தாதர் - சென்ட்ரல் ரயில்வே - பம்பாய்-14

ராம்தீர்த் பிராமி டெப்போ: 257, தங்கசாலைத் தெரு - சென்னை-1

வாத்தியாருடைய சுயசரிதை

ரங்கநாத சாஸ்திரியார் பரந்தாமனூரில் பள்ளிக்கூடத்துத் தலைமை வாத்தியார். மாணவர்களுக்கு இவரிடம் மிகப் பிரியம். விடுமுறை தினங்களில் குழந்தைகளுக்கு ராமாயணம், பாரதம், பாகவதம் இவற்றைச் சொல்லுவார். மாணவர்கள் தினசரி பாடங்களில் செலுத்தும் கவனத்தைவிட அதிகமாகவே இந்தக் கதைகளைக் கேட்பதில் செலுத்துவார்கள். சென்ற சரஸ்வதி பூஜை தினத்தன்று தம் சொந்த சரித்திரத்தைக் குழந்தைகளுக்குச் சொன்னார்.

"நான் நல்ல வைதிகக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என் தாயாருடைய தெய்வ பக்திக்கு வரம்பே கிடையாது. பூஜை, விரதம் எல்லாம் சரியாக நடத்தி ஏழைகளுக்குத் தானம் செய்வாள். ஊரார் அவரை மகாலக்ஷ்மியாகவே மதித்து வணங்குவார்கள். என் தகப்பனார் பெரிய பண்டிதர். சகல சாஸ்திரங்களும் படித்த வித்துவான். ஆயினும் என்னை ஆங்கிலம் படிக்கப் போட்டார். இது என் தாயாருக்குப் பிடிக்கவில்லை. 'இந்தக் காலத்தில் வைதிகப் படிப்பில் பிரயோசனமில்லை. பிழைப்புக்கு வேண்டிய படிப்பு வேண்டும். இங்கிலீஷே படிக்கட்டும்' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார். நானும் நன்றாகவே படித்துத் தேறி வந்தேன். மேல் படிப்புக்காகத் திருச்சி சென்றேன்."

திருச்சிக்குச் சென்றேன் என்று சொன்னவுடன் கதை கேட்டுக் கொண்டிருந்த குழந்தைகளுடைய உற்சாகம் பொங்கிற்று. சிரித்துக் கைதட்டினார்கள்.

"திருச்சியில் பெரிய கிறிஸ்துவகாலேஜில் சேர்ந்து பி. ஏ. படித்தேன். அங்கே மூன்று ஆண்டுகள் ஹாஸ்டலில் இருந்தேன்.

காலேஜில் படித்து வந்தபோது நான் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து விட்டேன். இது என் குடும்பத்தாரை ஆறாத துயரத்தில் வீழ்த்தி விட்டது. என் பாதிரி வாத்தியார்கள் மிக நல்லவர்கள். அவர்கள் என் மேல் காட்டிய அன்பும் படிப்பினால் என் மூளையில் உண்டாகிய கோளாறுமே நான் கிறிஸ்துவ மதம் சேர்ந்ததற்குக் காரணம். பாதிரிமார்கள் என்னைத் தூண்டவில்லை. ஹிந்து கோயிலிலுள்ள தெய்வங்கள் பிரயோசனமில்லை, வெள்ளைக்காரர்களுடைய சுவாமி தான் உண்மையான சுவாமி என்று எண்ணி, கிறிஸ்தவனாக விரும்பி மதம் மாறினேன்.

"நான் இப்படி எதிர்பாராத முறையில் நடந்து கொண்டதைப் பற்றி என் தகப்பனார் கண்ணும் கண்ணீருமாகத் திருச்சிக்கு வந்து பாதிரிமார்களைச் சந்தித்து வாதாடினார். 'பையனுக்கு வயதாயிருக்கிறது. அவனையே கேளுங்கள். அவன் இஷ்டப்பட்டால் அவனை அழைத்துப் போய் வேண்டியதைச் செய்யுங்கள்' என்று பாதிரிமார்கள் சொன்னார்கள்.

"ஆனால் நான் ஒப்பவில்லை. பிடிவாதமாக மறுத்து விட்டேன். அதன் பிறகு கிறிஸ்துவப் பாதிரிமார்கள் என்னைச் சம்ரக்ஷணை செய்து வந்தார்கள்.

"தகப்பனார் ஊருக்குத் திரும்பிப் போய்த் தாயாருக்கு விஷயம் தெரிவித்தார். 'இதற்கெல்லாம் காரணம் சரஸ்வதி பூஜை சமயத்தில் நடந்த தவறு தான்' என்றாள் என் தாயார்.

"'அந்தப் பைபில் புஸ்தகத்தைச் சென்ற நவராத்திரியின்போது ஏன் பூஜையில் வைத்தீர்கள்? ராமாயணம் முதலிய ஓலை கிரந்தங்கள் எல்லாம் பூஜைக்கு வைத்த போது பையன் கொடுத்த பைபில் புஸ்தகத்தையும் சேர்த்து வைத்து பூஜை செய்வித்தீர்கள். அதனால்தான் இந்த அபாயம் ஆயிற்று' என்றாள்.

"'முன் ஜென்மத்து பிராரப்தத்தினால் உண்டாயிற்று. என் பாபம்தான் இதற்கெல்லாம் காரணம். நீ சொல்வதெல்லாம் இல்லை. சரஸ்வதி தேவி உலகத்துக்கெல்லாம் தேவி. கிறிஸ்து சாஸ்திரம், நம் சனாதன தரும சாஸ்திரம், எல்லாவற்றுக்கும் அவளே தேவதை. பைபில் புஸ்தகத்தையும் வைத்துப் பூஜை செய்ததில் ஒன்றும் தவறில்லை. என்னுடைய ஜென்மாந்தர பாபங்கள்தான் இந்தத் துக்கத்துக்குக் காரணம்' என்றார் என் தகப்பனார்.

'நீங்கள் முன் ஜென்மத்தில் என்ன பாபம் செய்திருக்க முடியும்? அப்படி இருந்தால் இந்தக் குலம், இவ்வளவு சாஸ்திரம் படித்த இந்த ஜென்மம் உங்களுக்கு உண்டாயிருக்குமா?' என்றாள் என் தாயார்.

'அப்படி நல்ல குலத்தில் பிறந்து, சிரேஷ்டமான வைதிக மார்க்கத்தில் இருந்து, இந்த மாதிரியான சம்பவம் நடந்தால் தானே துக்கம் பெருந் துக்கமாக உயிரைக் குத்தி நோவுபடுத்தும். எல்லாம் கர்ம பலன்' என்றார் தகப்பனார்.

'என் கர்மம்தான் இது. உங்கள் பேரில் ஒரு குற்றமும் இருக்காது' என்று தாயார் அழுதாள்.

'உனக்கு ஒரு தர்மம் ஒரு விரதம்தான். அதற்கு மேல் எல்லாம் புருஷனுடைய பாரம். புருஷனைப்



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பூஜித்து பதிவிரதையாக இருப்பது உன்னைப் பரம பதமடையச் செய்யும். என் பாபத்தைத் தீர்த்துக் கொள்வது என் பாரம். ஆண்டவன் அருள். ஆண்டவன் சோதனை என்று ஏற்றுக் கொள்வோம். உன் புண்ணியத்தினால் உன் மகன் சில காலம் கழித்து நம் தர்மத்துக்குத் திரும்புவான். வைதிக வாழ்வுக்குத் திரும்பி வந்து சேருவான். துயரப்படாதே' என்று சொல்லி அழுது கொண்டிருந்த என் தாயைச் சமாதானப்படுத்தினார்.

படிப்பெல்லாம் முடிந்து ஒரு வாத்தியார் வேலையில் அமர்ந்தேன். அதன் பிறகு பல நூல்களைப் படித்தேன். என் அறிவு விசாலமாயிற்று. ஐந்து ஆண்டுகள் கழிந்து நம்முடைய சனாதன தருமமே நல்ல தருமம் என்று உணர்ந்தேன்.

"ஆயினும் அதன் பிறகும் கிறிஸ்து கோயிலுக்குத்தான் போய் வந்தேன். அங்கே கும்பிடும் போது நாராயணனைத்தான் மனத்தில் தியானம் செய்து கும்பிடுவேன்.

"பல ஆண்டுகள் கழிந்து, எனக்கு 45 வயது அப்போது. வடக்கே ஒரு யாத்திரை சென்றேன். மனத்தில் நிம்மதி இல்லாதிருந்தபடியால் யாத்திரை போய்ப் பார்க்கலாம் என்று காசி, கயா பல இடங்கள் சென்று கடைசியில் திருப்பதிக்கு வந்து ஹிந்து வேஷத்தில் கோயிலுக்குள் சென்றேன். 'எல்லா தருமங்களையும் நடத்தத் தவறினாலும் என்னை அடைக்கலம் புகு' என்று கண்ணன் கீதையில் சொல்லியிருப்பதை மனத்தில் தியானம் செய்து வேங்கடேசுவரனை வணங்கினேன். கீழே தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரித்தேன்.

"வா!" என்று ஒரு குரல் என் காதில் கேட்டது. 'பயப்பட வேண்டாம்' என்று பெருமானே சொன்னது போல் இருந்தது. எழுந்து நான் தங்கியிருந்த ஜாகைக்கு மனத்தில் ஒரு நிம்மதியுடன் சென்றேன். அன்று முதல் மறுபடியும் நான் ரங்கநாத சாஸ்திரி ஆனேன்.

"குழந்தைகாள்! எல்லா சமயங்களும் எல்லா பூஜைகளும் நாராயணனைத்தான் சேரும். எந்த மதத்தில் இருந்தாலும் தெய்வ பக்தியோடு நடந்து கொண்டால் பகவான் அருளைப் பெறலாம் என்பது நம் ஹிந்து தருமத்தின் உறுதி.

"நான் கிறிஸ்து நண்பர்களிடம் பல நன்மைகளைப் பெற்றேன். அவர்களையும் அவர்கள் எனக்குச் செய்ததையும் நான் என்றும் மறக்க மாட்டேன். ஆனால் நம் முன்னோர்களாகிய முனிவர்களும் பெரியோர்களும் நமக்குப் பெரும் செல்வம் வைத்துப் போயிருக்கிறார்கள். அதுவே நம்முடைய ஆசாரம், நம்முடைய வாழ்க்கை முறை, நம்முடைய ராமாயணம், பாரதம், பாகவதம், கீதை முதலிய சாஸ்திரங்கள். இவைதான் நம்முடைய பிதுரார்ஜித செல்வம். எவ்வளவு நன்றி செலுத்தினாலும் நம்முடைய கடன் தீராது. அவற்றைப் படிக்கப் படிக்க மனம் சாந்தி அடைகிறது.

"என்னுடைய தாய் இப்போது சந்தோஷப்படுவாள். ஆனால் அவள் உயிருடன் இருந்த வரையில் நான் கிறிஸ்துவனாகத்தான் இருந்து வந்தேன். என் தாயார் பட்ட துக்கத்தை இப்போது சரியாக உணர்கிறேன். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லி முடித்ததும், கைத்துண்டு எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"தாம் பிறந்து வளர்ந்து வாசம் செய்யும் தண்ணீரில் கரைந்து நிற்கும் காற்றே மீன்களுக்குப் பிராணவாயு. அதைத்தான் அவை மூச்சினில் இழுத்துக் கொண்டு உயிர் தரிக்கின்றன. தண்ணீரை விட்டு வெளியே எடுத்துப் போட்டால் மூச்சடைத்துத் திணறி மறுபடியும் தண்ணீருக்குள் குதித்து விடும். காற்றிலுள்ள பிராணவாயு அவற்றுக்குப் பயன்படாது. நமக்கோ அது பிராணாதாரம். மீன்களுக்குத் தண்ணீரில் கரைந்து நிற்கும் காற்றே பிராணாதாரம். அதைப் போல் நானும் கிறிஸ்து சமயத்தில் நிம்மதி பெறவில்லை. உயர்ந்த சமயம் என்று நான் எண்ணிய கிறிஸ்து மதம் எனக்குப் பயன்படவில்லை. மறுபடியும் நம்முடைய சனாதன தருமத்தில் சேர்ந்து அதில் மூழ்கிய பின்னரே நிம்மதி அடைந்தேன்."

குழந்தைகள் முகத்தில் சிரிப்பு இல்லை. சரித்திரத்தைக் கேட்டுக் கொஞ்சம் விசனமாக இருந்தார்கள்.

"இன்னொரு நாள் மீன்களைப் பற்றிச் சொல்லுகிறேன்" — என்று ரங்கநாத சாஸ்திரியார் சொன்னதும் மறுபடியும் குதூகலமடைந்து ஓடி விளையாடி வீட்டுக்குச் சென்றார்கள்.



அமுதத்தின் சுனை கண்டோம்

டி. வி. சுவாமிநாதன்

பொன்னறத்தின் புண்ணியனே!
 பொற்புடையோய்! தெய்வத்தின்
இன்னருளாம் கங்கைநதி
 இறங்கிவந்து மனிதகுலம்

உய்வடையச் செய்வதற்காய்
 உயர்கருணை நோன்பெடுத்து
மெய்யெனும்பொய் உடல்வாழும்
 மேலோனே! அஞ்சலிகள்.

ஆதவன்பே ரொளிதருவான்
 ஆறுதும் காணவிடான்;
மாதவத்தின் நீக்குளித்து
 மாசகன்ற தேஜஸெனும்

பொங்குமொளிக் கதிர்வீசிப்
 பூர்ணிமைபோல் தண்மைதரும்
சங்கரனைப் பார்த்ததனால்
 சார்ந்திரண்டு பாதத்துத்

தாமரைப்பூப் படுக்கையிலே
 தஞ்சமென்று வீழ்ந்ததனால்
நாமார்க்கும் குடியல்லோம்;
 நமனோடினி அஞ்சகிலோம்;

நரகத்தின் இடர்வென்றோம்;
 நாயகிக்கு இடம்தந்து
அரவைஅணி கொண்டாடும்
 ஆதிசிவன் நமைக்காத்தான்.

நாதக் கரும்புவில்லில்
 நாண்தொடுத்து விட்டகணை
வேதக் கருப்பொருளுள்
 வேர்விட்டு வளர்ந்ததரு

உச்சிக் கிளைபழுத்த
 உபநிஷதக் கனியறுத்து
இச்சைத் தணிவிக்கி
 எம்கரத்தில் தந்ததுபோல்

பேசரிய மூந்தவத்தும்
 பெற்றியினால் பெற்றிருக்கும்
ஆசிரியன் எம்மையெலாம்
 ஆட்கொள்ள இங்குவந்தான்.

மோகம் பெருவனத்துள்
 முந்திமுந்தி சென்றுபல
போகக் கனிதிரட்டிப்
 புலனைந்துக் கூட்டுகிறோம்;

வேகமின்னல் போற்குதித்து
 வேங்கைபெதிர்ப் பட்டவுடன்
தேகம்பதைக்கும்; அதைத்
 தின்னப் புலிக்கிந்து

ஏகுமுயிர் இவ்வுடலை
 எச்சிலெனத் துப்பினிடும்;
சாகும் பொழுதெமக்குச்
 சங்கரனே துணையாவான்.

தாகம் தணித்துதவும்
 தண்ணீர்போல் கானலினுல்
வேகுமனற் கங்குமொரு
 வேடிக்கை காட்டிவிடச்

சோகத்து வெம்பாலைக்
 கடுமணலில் வாடுகையில்
ஆகம் குளிரு(ம்)மறை
 அமுதத்தின் சுனைகண்டோம்.

நீலக் கடல்கொதித்த
 நீர்குடித்துச் செல்லுகையில்
ஞாலப் பெருவிளக்காம்
 ஞாயிறொளி புகையாக்க

மேலே கருண்டெழுந்து
 மிதக்கின்ற நீலாபி
கோலச் சுடர்மதியின்
 குளிர்படியப் புனல்பொழியும்

முகிலாய் அருள்தருவான்;
 முழுமதியால் முகில்கிழிப்பான்;
கதிர்தந்தால் ஞானமதா
 சூரியனைத் தரிசித்தோம்.

வையம் விளக்கஇரு
 வான்விளக்கு உள்ளதுபோல்
ஐயனருட் பேருலகை
 ஆளவந்த இளவரசன்

சிரிப்புத் தவழுமிதழ்
 சிலம்குடி கொண்டமுகம்
தரித்தானாம் புலன்வாழ்வைக்
 கனல்வரைத் துண்டாக்கும்

வாழ்வுமுறை ஏற்றிருக்கும்
 வாரி(கஜ)வன் புகழ்பேசத்
தாழ்வுமிடி துயர்நீரும்;
 தாயமெலாம் மலையேறும்;

ஐந்தருவி தேனருவி
 ஆகாய கங்கையிலே
சிந்திசைத்துத் தாவும்நீர்
 சிவவெள்ளம் ஆகியது.

சந்தனத்தேன் பொதிகைமலைச்
 சாரல்தரும் மாருதமோ
மந்திமனப் பித்தடக்கும்
 மந்திரமாய் வீசியது.

சந்திரநற் சேகரரும்
 சார்ந்தஜெய இந்திரரும்
வந்திரண்டு ஆண்டுகளாய்
 வாழ்க்கையெனும் மாணிக்க

வீணையிலே சுதிகூட்டி
 வேதஇசை பாடியருட்
தோணியிலே எமையேற்றித்
 துயர்க்கடலைத் தாண்டுகிறார்.

இந்திரனரசு வதிவரிசை
 இலக்குவனுக் குயிர்ந்த,
மந்திரமலைச் சஞ்சீவி
 மருந்தையெமக் கருளுவதால்

மூந்தைவினைப் பிணிமாயா
 மூர்ச்சை தெளிந்துயிரைச்
சந்திரமௌ ளீச்வரரின்
 சந்நிதியைச் சாருற்றோம்.



பழக்கும் பழக்கம்

இளமைப் பருவத்தில் நாம் படிக்கும் புத்தகங்கள் நம்முடைய மனத்தை எவ்வளவு தூரம் உருவாக்குகின்றன என்பதை நாம் முழுதும் அறிந்துகொள்ளுவதில்லை. இக்காலத்தில் அறிவு வளர்ச்சிக்காக நமக்குப் பலதரப்பட்ட சாதனங்கள் இருக்கின்றன. ரேடியோ, சினிமா, தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலிய சாதனங்கள் மூலம் நாம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறோம். இப்போது 'டெலிவிஷன்' சாதனம்கூட வந்திருக்கிறது. ஆனால் இச்சாதனங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் புத்தகங்கள் மூலம் அறிவை வளர்த்துக் கொள்வதுதான் சாலச் சிறந்தது. கருவிகள் மூலம் போதனை பெறுவதற்கும் புத்தகங்கள் மூலமாக அறிவைப் பெறுவதற்கும் வித்தியாசம் உண்டு. நமது சம்பிரதாயத்தில் 'அத்யயனம்' நமக்கெல்லாம் அவசியமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. புத்தகங்களை நமக்குத் தோழனாகக் கொண்டுள்ளபோது நாம் தனியாக இருக்கிறோம் என்ற உணர்ச்சியே இருப்பதில்லை. உண்மையில் நாம் தனியாக இருப்பதுமில்லை.

சமயத்தைப் பற்றிச் சொல்லும்போது, தன்னுடைய தனிமையை ஒருவன் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளுகிறான் என்பதையே சமயம் எனலாம் என்று புகழ்பெற்ற ஓர் அறிஞர் கூறுகிறார். சமய வளர்ச்சியைப் பற்றி அவர் குறிப்பிட்டாலும், கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, விஞ்ஞான சாதனைகள், நுட்பக் கலை அதிசயங்கள் முதலிய எல்லாமே மனிதர்கள் தனிமையைச் சரிவரப் பயன்படுத்திக் கொண்டதன் விளைவுகளே. இப்போதுள்ள நவீன உலகத்தில் நாம் எல்லோருமே மந்தை மந்தையாகச் சேர்ந்தே வாழப் பிரியப்படுகிறோம். நமக்குச் சிறிது ஓய்வு நேரம் கிடைத்தால், உடனே ஒரு ஜெப்புக்கோ அல்லது ஒரு சங்கத்துக்கோ அல்லது ஒரு விருந்துக்கோ அல்லது இவை போன்ற இதர சமூக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளவோ விழைகிறோம். நாம் தனித்திருக்கவே பயப்படுகிறோம். ஒன்றும் செய்யாமல் சிறிது நேரம் தனித்திருக்கவே தயங்குகிறோம். நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு ஏதாவது சிந்தனை செய்வதென்றால் முடியவே முடியாது. மற்றவர்கள் மத்தியில் நாம் சந்தோஷமாக இருக்கிறோம். நாம் மட்டும் தனியா யிருந்தால் அவ்வளவு இன்பமாக இருக்க முடிகிறதில்லை. தன்னுடைய அறையில் ஒருவன் தனிமையில் நிம்மதியாக இருக்கத் தெரியாததாலேயே உலகத்தில் காணும் தீமைகள் அனைத்தும் வளருகின்றன என்று பாஸ்கல் என்னும் அறிஞர் சொல்கிறார். புத்தகங்களைப் படித்தால் தனித்து சிந்திக்கும் ஆற்றலும், இன்பம் காணும் ஆற்றலும் ஒரு பழக்கமாகவே வளர்ந்துவிடும்.

எல்லாத் துறைகளிலும் இப்போதெல்லாம் தரம் குறைந்து விட்டது என்று பொதுவாகக் குறை கூறப்படுவதை நாம் காண்கிறோம். தங்கள் கடமை உணர்ச்சியிலிருந்து தவறிய தலைவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களுக்குத் தவறாகவே வழி காட்டுகிறார்கள்.

प्रधाना: धर्मं उल्लंघ्य अधर्मेण प्रजां प्रवर्तयन्ति

இந்தப் பரிதாப நிலைமைக்கு அடிப்படைக் காரணம் மனிதனிடத்திலேயே இருக்கிறது. நம்முடைய அரசியல், பொருளாதாரம், சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் அதுவே அடிப்படையாகும். ஆகவே, மனிதனுடைய தன்மையை மாற்றுவதற்கு நாம் முற்பட வேண்டும். மனிதத் தன்மையை மாற்றி யமைப்பதில் இலக்கியங்கள் ஒப்பற்ற சேவை புரிகின்றன. 'ஸாஹித்யம்' என்ற பதமே 'ஸஹித' என்ற சொல்லிலிருந்து வந்திருக்கிறது. கூடியிருத்தல், ஒருமைப்படுதல், பொருந்துதல் என்ற பொருள்களை உணர்த்தவே இச்சொல் வழங்கப்படுகிறது.

மகோன்னதமான காப்பியங்களை நாம் படிக்கும்போது நம்முடைய மனம் காப்பியக்

உபஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

கர்த்தாக்களுடைய சிந்தனைகளில் தோய்கிறது. வெள்ளை நூலில் சாயம் ஏறுவது போல் அவர்களுடைய சிந்தனைச் சாயம் நம் மனத்துக்கு ஏறுகிறது. வாசகர்களின் மனோநலத்தை உயர்ந்த நூல்கள் பேணி வளர்க்கின்றன. மனம் விசாலமடைந்து உண்மைநோக்குடன் எவ்விஷயத்தையும் காணும் ஆற்றலை அவை தூண்டி விடுகின்றன; நெறியுணர்ச்சியையும் நமக்கு ஊட்டுகின்றன. தன்னிச்சை வழியே சிந்திப்பதும் செயலாற்றுவதும் நாகரிகப் பண்புக்கு ஒவ்வாதது' அதைத்துரோகம் செய்ததாகவே கருதவேண்டும்.

संसारविषवृक्षस्य द्वे फले अमृतोपमे ।
काव्यामृतरसास्वादः सल्लापः सज्जनैः सह ॥

சில புத்தகங்கள் படிக்க உல்லாசமாக இருக்கும். சில புத்தகங்கள் அறிவூட்டுவனவாக இருக்கும். மற்றும் சில நூல்கள் நமது தன்மையையே உயர்த்தி விடும். இந்த மூன்றாவது இனத்தைச் சேர்ந்த நூல்களைத்தான் நாம் அவசியம் படித்துப் பயனடைய வேண்டும். நம் வாழ்க்கையின் இறுதியான லட்சியம், உள்ளத்து நிறைவு என்று நாம் எல்லோரும் கருதுகிறோம். உள்ளத்தின் நிறைவிலிருந்து எழும் ஆனந்தமே, வாழ்க்கை வெற்றியுற்றதின் அறிகுறி.

ஒரு புத்தகத்தைப் படித்து ஆனந்தமடையும்போது, நாம் படிக்கும்விஷயத்துடன் ஒன்றிப் போகிறோம், இனிமையான சங்கீதத்தைக் கேட்டு அதில் லயித்துவிடுவதுபோல். இன்பத்தைவிட ஆனந்தம் நீடித்து நிற்கக் கூடியது. துக்கத்தையும் ஊடுருவிச் சென்று நிலைத்து நிற்கும் தன்மையுடையது. ஆனந்தத்தைத் தூண்டக் கூடிய நூல்கள் நாமரூபங்களைக் கடந்து நிற்கும். அவை நமது அகங்காரத்தை ஒழிக்க வழி காட்டும். ரிஷி முனிவர்களைப் போன்ற காவிய திருஷ்டியில்லாத ஒருவன் உன்னதமான காவியத்தை இயற்ற முடியாது.

नानृषिः कुरुते काव्यम्

என்பது இதை உணர்த்துகிறது. நம் முன்னோர்களின் சிந்தனா சக்தியில் உருவான உன்னதப் படைப்புகள் உலக இலக்கியங்களில் மிக உயர்வாக இடம் பெற்று விளங்குகின்றன. நமது பழங் காலத்தை இக்காப்பியங்கள்தான் சிறப்பாக உணர்த்தி வைக்கின்றன. இவற்றைப் படிக்கும் போது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வசித்த மகா மேதைகளுடன் உறவு கொண்டாடுகிறோம். நம்முடைய சம்பிரதாயங்களைப் பற்றிய உணர்ச்சி வரவேண்டுமானால் இவற்றைப் படிக்க வேண்டும்.

विश्वश्रेयः काव्यम्

என்பதும் இங்கே கவனிக்கத் தகுந்தது.

நம்முடைய அறிவுத் திறன் குழம்பிக் கலவர மடைந்துள்ளபோதெல்லாம் உயர்ந்த நூல்கள் மிகவும் பயன்படுகின்றன. நம்மிற் பெரும்பான்மையினர் உண்மையில் மனிதர்களே அல்ல; மனிதர்களின் நிழல்கள். ஒன்றுக்கொன்று முரணான இயற்கை உணர்ச்சிகளால் நாம் கட்டுப்பட்டிருக்கிறோம். பயம், சம்சயம், பேராசை, பொறாமை முதலிய குணங்களோடு தயை, நல்லெண்ணம், பிறருக்குப் பணி செய்யும் உணர்ச்சி, உதவி புரியும் எண்ணம் முதலிய நற்பண்புகளும் கலந்துள்ளன! நமக்குள் இணக்கமான, முரண்பாடில்லாத மனித சமுதாயம் வளர வேண்டுமானால் முதலாவதாகச் சொல்லிய குணங்களையெல்லாம் கட்டுப்படுத்துவதுடன் இரண்டாவதாகச் சொன்ன குணங்களை வளர்க்கவும் வேண்டும். பொதுவாக மக்களிடையே ஆன்மீய சம்பத்து புது வளர்ச்சி பெற்றுப் பெருக வேண்டியது இன்றியமையாதது. மனித உள்ளங்களுக்கு அற்ப விஷயங்களையே ஊட்டி அவற்றின் தூய்மைக்கு மாசு விளைவிக்கக்கூடாது. நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த எல்லாப் பழக்கமும் மிகவும் சிறந்தது என்றே நான் கருதுகிறேன். ஒவ்வொரு நாளும் சிறிது நேரம் புனிதமான நூல்களைப் படித்துவிட்டுச் சற்று நேரம் தியானம் செய்த பின்னரே தினசரி அலுவல்களைத் தொடங்குவதில் நன்மை மிக உண்டு. செல்வம், சொத்து, ராஜ்யம் முதலிய எல்லாம் அழிந்து போகக் கூடியவையே. மக்களும்கூட இவ்வுலகில் நிரந்தரமாக இருப்பதில்லை. ஆனால் சத்தியம், கலை, அன்பு, கனிந்த தயவு — இவை அழிவற்றவை; என்றும் நிலைபெற்று நிற்பவை.

मानो हि महतां धनम् ।



பெரியவாள் சொன்ன சிறுகதை

நான் சென்ற பஸ் காஞ்சிபுரத்தின் எல்லையைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது. சித்திரை மாதத்து வெய்யில்; நடுப்பகல் கடந்து விட்டது; இரண்டு அல்லது இரண்டரை மணியிருக்கும். சாலையை அடுத்த ஒரு தோப்பு; அவ்வளவாகப் பசுமை இல்லை. நடமாட்டம் இல்லாத தோப்பு அது; பண்படுத்தப் படாத கட்டாந்தரை. அடர்த்தியே இல்லாத மரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்றன. இடையிடையே பல புற்றுக்கள். சாலையோரத்தில் ஒரு சைக்கிள் ரிக்ஷா இருந்தது; அதில் பட்டுக் குடை சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

"சுவாமியாரவங்க இந்தத் தோப்புக் குள்ளாரத்தான் இருக்கிறாங்க போலிருக்குது..." என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்ட கண்டக்டர், 'ஹோல்ட் ஆன்' போட்டான். நான் இறங்கினேன்; கண்டக்டர் மறுபடியும் வணங்கி விட்டு 'ரைட்' கொடுத்துவிட்டான். பையிலிருந்த தேங்காயை எடுத்துக் கொண்டு, சட்டையைக் கழற்றிப் பையில் திணித்துக் கொண்டு, மேல் வேஷ்டியை இடுப்பில் சுற்றிக்கொண்டு நான்கு புறமும் பார்த்தேன்; பெரியவாள் இருக்கிற இடமே தெரியவில்லை. இதற்குள் ஒருவர் ஓடி வந்தார். வரும் போதே 'பேச வேண்டா மென்று' ஜாடை காட்டினர்; நானும் பேசக் கூடாதென்றுதான் நின்றிருந்தேன்; வந்தவர், "பெரியவாளுக்கு உடம்பு சரியாயில்லை; பின் தலையில் ஒரு புண்; சிரம பரிஹாரம் ஆகிறது. ராத்திரி காஞ்சீபுரம் வந்துவிடலாம். நாளைக் காலையில்அங்கே தரிசனம் செய்து கொள்வது தான் உசிதம்" என்று திட்டம் கூறிக் கொண்டிருந்தார்.

"எரிந்துபோன கயிற்றுத் துண்டு, அதன் இழையும் முறுக்கும்கூடக் கலையாமல் கிடந்தாலும், அதைக் கொண்டு எதையுமே கட்ட முடியாது; அதுபோல் உடலும் உலக வாழ்வும் பெரியவாளை ஒன்றுமே செய்வதில்லை. அவர் ஜீவன் முக்தர். தலையில் புண்ணென்று நாம் நினைக்கிறோம்; நமது பார்வையில், அதுபெரியவாளுக்கு வேதனை தருமோ என்று அஞ்சுவது உண்மைதானே..." என்று நினைத்துக்கொண்டிருந்தேன்; இதற்குள் சற்றுத் தூரத்திலிருந்து விரல் நொடித்த சத்தம் கேட்டுத் திரும்பினேன். பெரியவாள் சைகை செய்து அழைத்த அழைப்பு என் ஆத்மாவைக்குளிர் வித்தது; உடல் புல்லரித்தது.

சொல்லுக்கு அடங்காத ஒரு தூய்மை மிகு மெய்ப் பொருளை விளக்க முற்பட்டு, விள்ளாது முடியும் உபநிடதத்தைச் சொல்லித் தரையில் விழுந்து வணங்கினேன். உடம்பெல்லாம் தூசி; உடை யெல்லாம் துரும்பும் சருகும்; பெரியவாள் எதிரில் இருக்கிறோம் என்பதை உணர்ந்



தும், உடம்பு முழுதும் சென்று தூசிகளைத் தட்டும் கைகளை என்னால் தடுக்க முடியவில்லை.

காவியுடை யெல்லாம் ஒட்டிக் கொண்டிருந்த சருகுகளும் தூசியும் துரும்புகளும் அப்படியே இருக்கப் புற்றின் மேல் வைத்துப் படுத்திருந்த கழுத்திலெல்லாம் மண் படிந்திருக்க, எழுந்து புற்றின் மேலேயே சாய்ந்து, கமண்டலத்திலிருந்து நீரெடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்ட பெரியவாளை, எந்த நினைவுமில்லாமல் நிஷ்டை கூடியதுபோல் உபநிடதப் பொருளில் ஆழ்ந்து விட்டார்கள.

"இவை யாவுமே ஒரே முழுமைதான் ; முழுமையிலிருந்து முழுமை பிறக்கிறது ; முழுமையின் நிறைவைப் பெற்றும் பின் முழுமை மிச்சப்படுகிறது" என்று தொடங்கி 'ஈசாவாஸ்யம்' என்ற இனிய உபநிடதக் காவியத்தை மெல்ல இசைத்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் சென்றது. ஆனந்த மயமாய்க் களித்தார் குரு மணி. மேடான இடத்தில் வைக்கப்பட்டிருந்த தேங்காய் தன்னிச்சையாக உருண்டோடி அந்தத் தூய திருவடிகளைத் தீண்டியது. வெப்பம் கலந்த வறட்சிக் காற்றும் வீசியது. எதிரே நான் ஒருவனும் நின்றேன் அஞ்ஞான வடிவமாய். எல்லாமாகச் சேர்ந்து அந்த மெய்ஞ்ஞான வடிவத்தின் தூய சமாதியைக் கலைத்து விட்டன.

"இங்கே நீ...எங்கிருந்து?"

"பூவனூரில் ஒரு கல்யாணம் ; வந்தேன் ; அப்படியே பெரியவாளையும்..."

"ஆக, மடத்துக்கு வரும் நினைவில்லை!" என்று ஒரு மோகனப் புன்னகை பூத்தார் குருநாதர்.

"என்ன செய்வேன் ; பிழைப்பு என்னை அடிமையாக்கி வைத்திருக்கிறது."

"வேதமெல்லாம் நினைவிருக்கிறதா? சாஸ்திரம்-வேதாந்தம் வாசித்தாயோ நீ?"

"முறையாகப் படிக்க முடியவில்லை."

"நீ உபந்யாஸங்களில் வேதாந்த மெல்லாம் சொல்கிறாயாமே? அநியாய வேதாந்தமோ?"

"அதென்னது? அநியாய வேதாந்தம்...?"

"உனக்குப் புரியவில்லையா? நியாயம் என்றால் தர்க்க சாஸ்திரம் ; அந்த ரீதியில் இல்லாத வேதாந்தம் தானே நீ சொல்வதெல்லாம்?" என்று மீண்டும் பிறவிப் பிணியறுக்கும் புன்னகை. மெய்ம்மறந்தேன்.

பெரியவாளுடைய ஏகாந்த உரையாடல் பற்றிப் பெரிய பெரிய மேதைகளெல்லாம் ஆச்சரியப்பட்டுக் கொள்கிறார்கள். இனிமேல் இப்படிப் பூபகம் ஒரு தெய்வம் உண்டா என்று சொல்கிறார்கள் ; நம் ஆசார்யாளுடைய பேச்சின் சுவை ஓர் ஆரா அமுதம். பழமொழிகளும் உபமானங்களும், உப கதைகளும் எல்லாமே மணி மணியாக வருமே அவர்கள் பேச்சில் ; ஆனால் சிறு கதை சொல்வதிலும் அவர்கள் அதியற்புதமான உத்தியைக் கையாளுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. பிரம்ம ஞானிகளுக்கு எல்லாக் கலைகளிலும் வல்லமை விளங்கும் என்ற தத்துவம் அன்று எனக்கு விளங்கியது. பகல் மூன்று மணிக்கு ஆரம்பித்த சம்பாஷணை, வெய்யில் தாழ்ந்து செக்கர் வானம் தென்படும் வரை நடந்திருக்கிறது ; பொழுது போனதே தெரியவில்லை. துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்றெல்லாம் பரந்து விரிந்தது. ஆங்கிலச் சொல்லாராய்ச்சி கூட நடந்தது.

பல தடவை என்னை உட்காரச் சொல்லி அவர்கள் வற்புறுத்தியதும், நான் நின்றுகொண்டே இருந்ததும் நினைவிருக்கிறது. ஆனால் உட்கார்ந்தது எப்போது என்பது நினைவில்லை.

'இராமாயணத்தில் அத்வைத அநுபவம்' என்ற தலைப்பில் நான் செய்த உபந்யாஸத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போது, மடத்தைச் சேர்ந்த ஒருவர் மெல்ல - ஜாடை மாடையாகப் பிரயாணம் தொடர வேண்டுமென்று காட்டிய சைகைகள் என்னை நினைவுக்கு மீட்டுக்கொண்டு வந்தன போலும். அப்போதுதான் அந்தி நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். முதல் அத்தியாயம் என்னை வெட்கச் செய்தது ; உதறிக்கொண்டு எழுந்து நின்றேன்.

"உட்கார்ந்துகொள்" என்றார்கள். நான் மெல்ல, இராமாயணத்தைப் பற்றிய ஒரு புஸ்தகத்தையும் அதன் ஆசிரியரைப் பற்றியும் பிரஸ்தாபித்தேன். அந்த நூல் தான் இராமாயணத்தைப் புதிய நோக்கில் ஆராயத் தூண்டிற்று என்றும் சொன்னேன் : அந்த நூல் திருச்சி உ. வே. ஏ. வி. கோபாலாச்சாரியார் எழுதிய ஒரு வடமொழி நூல் ; இதைத் தொடர்ந்து அந்த ஸ்வாமியைப் பற்றித் திரும்பிற்று சம்பாஷணை. இனி வருவதெல்லாம் எழுத்துக்கெழுத்து பெரியவாள் சொன்னது:

"ஆகா, கோபாலாச்சாரியாருடைய பெருமையே அலாதிதான். பெரிய பண்டிதர் அவர். நல்ல மேதாவி; மஹா ரஸிகர் ; அதிலும் அத்வைத ரஸாநுபவத்தில் அவருக்கு நிகர் அவரேதான். அவரும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், நம்ம மடத்துக்கு அடிக்கடி வருவார்கள். எல்லாருக்குமே என்னிடம் பிரீதி உண்டு ; எல்லாம் சரிதான் ; ஆனால்..." என்று நிறுத்திவிட்டார்கள் ஆசார்யாள். மௌனமாகத் தலையையும் கவிழ்த்துக் கொண்டார்கள் ; தீவிரமான ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தேன் நான்.

திடீரென்று நிறுத்திய அதிர்ச்சியில் நானும், "ஆனால் என்ன?... ஆனால் என்ன?" என்றேன் பரபரப்போடு.

"என்னிடம் பிரீதி உண்டு ; அவர் மிகுந்த ஞானம் படைத்தவர் ; எல்லாம் சரிதான் ; ஆனால் அவர் என்னை அஞ்ஞானி என்று சொல்லிவிட்டார்" என்று பெரியவாள் சொல்லி நிறுத்தியபோது நான் அதிர்ந்தேன். துடிதுடித்தேன் ; ஆனால் அவர்கள் கம்பீரமாகவே இதைச் சொல்லிவிட்டு, அதைவிடக்கம்பீரமாகவே என்னைப் பார்த்தார்கள் ; என் கண்கள் குழம்பின.

"அப்படியா! அவரா?" என்றேன்.

"அவரே, ஸாக்ஷாத் கோபாலாச்சாரியாரே சொன்னார், நான் அஞ்ஞானி என்று அழுத்தம் திருத்தமாய்."

"அபசாரம், அபசாரம் ; எனக்கு ஒன்றுமே புரியவில்லை; அவர் இப்படி அபசாரப் படவே மாட்டார் : இதில் ஏதோ..."

"பதறாதே..."

"எப்படிப் பதறாமல் இருப்பது? பெரியவாள்தானா இதைச் சொல்வது? நான்தானா இதைக் கேட்பது? ஒரே பிரமையாக இருக்கிறதே; விவரமாக..." என்று பதற்றத்துடன் இழுத்தேன்.

"சொல்லாமலா இருப்பேன் ; கேள் ; அவருக்கு எப்போதுமே அத்வைத சாஸ்திரத்திலும் சித்தாந்தத்திலும் ஈடுபாடு



கரிச்சான்குஞ்சு

அதிகம்; அதற்காக அவரைக் குறை கூறுகிறவர்களும் பலர் உண்டு. அவர் அதை லக்ஷ்யம் செய்வதே இல்லை; ஆனால் ஒரு வேடிக்கை. அத்வைதத்தைக் கண்டனம் செய்து பேசுகிறவர்களும் எழுதுகிறவர்களும் அவரிடம் ஆலோசனை கேட்பதுண்டு. அவரும் நுட்பமான தர்க்கவாதங்களைச் சொல்லித் தருவார்."

"அத்வைதத்தை மறுக்கவா?"

"ஆமாம், அதனால் என்ன? தர்க்கத்தின் சர்க்கஸ் வித்தை அது. ஆனாலும் அவர் பெரிய சபைகளில் கூட அத்வைதத்தைச் சிலாகிப்பார்: அநுபவிப்பார். கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருஷங்கள் அத்வைத ஆராய்ச்சி செய்தவர் அவர்; பெரிய செல்வமுண்டு; வருமானமும் உண்டு. ஏராளமான பேரன் பேத்திகள்; அவருடைய பேரன்கூட ஒரு ஜட்ஜ்; உனக்குத் தெரியுமே! மடத்துக்கு அடிக்கடி வருவதுண்டே?"

"நன்றாய்த் தெரியுமே!"

"கோபாலாச்சாரியாருக்கு வயது ரொம்ப ஆகிவிட்டது. உடம்பு குணமில்லாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தார். பேரனும் மற்றவர்களும் எவ்வளவோ சொல்லியும் அவர் மருந்து சாப்பிட மறுத்துவிட்டார், அவர்களும் என்னென்னவோ செய்து பார்த்தார்கள். பயனில்லை. இந்த வெறும் பூத உடலுக்கு-பிராரப்தமான சரீரத்துக்குக் கவலைப்படுவதெல்லாம் வெறும் பிரமை. சுத்தப் பைத்தியக்காரத்தன மல்லவா? எப்பவுமே அழிந்துகொண்டே இருப்பதல்லவா இதெல்லாம்?

'சாந்தி மயமாய், சாசுவதமாய் பரம மங்களமாய், ஒப்பற்றதாய் ஒரு பொருளாய் விளங்கும் அதை உணர உணர ஒரே ஆனந்தம் பொங்குகிறது. எனக்கு மருந்தும் வேண்டாம்; மாயமும் வேண்டாம்; மாயை, மாயை வெறும் மாயை' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, வைத்தியம் செய்து கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தார் அவர். வீட்டில் எல்லாருக்கும் ஏக வருத்தம். கடைசியில் அவருடைய பேரன் என்னிடம் வந்து வருத்தப்பட்டுக் கொண்டார். நான் சொன்னால் பெரியவர் கேட்பாரென்று அவர் எண்ணம்; நான் அவருக்குச் சொல்லியனுப்ப வேண்டும் என்று மிகவும் அவா அவருக்கு. உடனே நானும் நம்ம மடத்திலிருந்து ஸ்ரீமுகமும் பிரசாதமும் கொடுத்து ஒருவரை அனுப்பினேன். அவர் போனபோது, கிழவர், உபநிஷத்தின் வாக்கியங்களையும் பாஷ்ய வாக்கியங்களையும் வாய்விட்டுச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தாராம்; ஆனால் உடம்பு மட்டும் மிகவும் இளைத்துப் படுக்கையில் இருந்தாராம். பேரன் பேத்திகளெல்லாம் வந்து சூழ்ந்து, மடத்திலிருந்து பிரஸாதம் வந்திருப்பதைச் சொன்னதும், துள்ளிக் கொண்டு குதித்தெழுந்தாராம் அவர். 'பிரஸாதமென்றால் தெளிவு—மாசின்மை என்று பொருள். இன்று என் மனத்தில் நிலவும் தெளிவு ஆச்சார்யப் பிரஸாதத்தாலேதானே?' என்றாராம். மேலும், 'என்ன ஆச்சரியம்! ஆசார்யாளுடைய பாஷ்யாமிருத வெள்ளத்தில் தான் திளைத்துக் கொண்டிருக்கிறேன் நான்; ஆகா, என்ன ஸத்திய ஒளி, மனத்தையும் மாய்த்து இரண்டற லயமாகும் வழியைக் காட்டும் இன்ப மயமான சாஸ்திரம்' என்று கொண்டாடினாராம். ஸ்ரீமுகம் வந்திருப்பதைச் சொல்லவே இரைந்து படிக்கச் சொல்லிக் கேட்டாராம். சிரித்தாராம்.

"குழந்தைகளெல்லாம், 'தாத்தா! நாங்கள் சொல்லித்தான் நீங்கள் கேட்கவில்லை; இப்போ பெரியவாளே நீங்கள் வைத்தியம் செய்து கொள்ள வேண்டும், மருந்தும் சாப்பிட்டே ஆகவேண்டுமென்று எழுதியனுப்பியிருக்கிறார்கள்; இதோ இங்கேயே டாக்டரும் இருக்கிறார். இந்தாருங்கள் இதைச் சாப்பிடுங்கள் முதலில்' என்று நிர்ப்பந்தப்படுத்தினார்களாம். 'மாயை மாயை, அஞ்ஞானம் அஞ்ஞானம் என்று காதைப் பொத்திக் கொண்டாராம் பெரியவர். 'நாங்கள் எல்லாம் அஞ்ஞானிகள்; இருக்கட்டும்; பெரியவா கூடவா?' என்றார்களாம் குழந்தைகள்.

"அதற்கு அவர் சொன்னாராம்: 'வைத்தியம், வைத்தியம், ஐயோ, மாயை, அஞ்ஞானம் இதெல்லாம் உங்களுடன் கூடவே இருக்கிறதல்லவா! உங்களோடு கூடத் தானே பெரியவாளும் ஆடிப்பாடி வாழ்வதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அந்த அளவுக்கு அவாளையும் இந்த அஞ்ஞானம் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டுவிட்டது; அவ்வளவு தான் கதை' என்றாராம்."

இதைச் சொல்லிவிட்டுச் சிரிக்காமல் சிரித்த பெரியவாள், சிறந்த சிறுகதைச் சிற்பியாகவும் விளங்குவதைக் கண்டு வியந்தேன்; வணங்கினேன்.

அட்டைப்பட விளக்கம்

தேவரும் விழையும் தீபாவளி

தீபாவளித் திருநாளில் மண்ணுலகில் எங்கும் குதூகலம் கரை புரண்டோடுகிறது! சிறுவர்களும் சிறுமியர்களும் புத்தாடை உடுத்தி, மத்தாப்புகள் கொளுத்திக் களிநடம் புரிகின்றனர்.

புதுமணம் புரிந்த சதிபதிகள், ஒருவரையொருவர் வேட்கை நிரம்பிய பார்வையால் பார்த்துப் பார்த்து அவர்கள் உணர்வு ஒய்ந்துபோகிறது! வேறு சில ஜோடிகள் காதல் மொழிகள் பரிமாறிக் கொண்டு, என்றும் எய்தா இன்பத்தைத் துய்க்கின்றனர்!

வயது வந்த கிழவர்கள்கூட, தங்கள் தலை தீபாவளி நாளை நினைவுகூர்ந்து குதூகலிக்கின்றனர். பழைய இன்ப நாட்களின் நினைவு வற்றா இன்ப ஊற்றாக அவர்கள் உள்ளத்தில் பெருக்கெடுக்கிறது.

ஆனால் இன்ப உலகிலேயே இருக்கும் கந்தர்வ தம்பதிகள், மண்ணுலகம் தீபாவளித் திருநாளன்று விண்ணுலகைவிட மிஞ்சிய குதூகலத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு வியக்கின்றனர்.

அவர்கள் நாமும் இம்மாதிரி குதூகலம் அடைவது எப்போது என்று ஏங்குகின்றனர்.


இந்தத் தேவலோகத்தில் இருக்கும்வரை சாரமற்ற இன்பந்தான் இங்கு கிடைக்கும் என்று எண்ணி, மண்ணுலகத்துக்கு வருகின்றனர் துணிச்சலுள்ள இரு காதலர்கள்.

பூவுலகத் தீபாவளித் திருநாளில் அவர்களும் பங்கு கொள்ளுகின்றனர். தேவலோகக் காதலன் தன் காதலிக்குப் புத்தாடை அணிவித்து மகிழ்கிறான்!

இப்படித் தேவலோகத்தவர்களும் மண்ணுலகத்துத் தீபாவளி மகிழ்ச்சிகளை அனுபவிக்க ஆர்வங்கொண்டு வருகின்றனர் என்பது ஓவியர் ராஜத்தின் கற்பனை!

அதையே இவ்வருஷத் தீபாவளி மலரின் அட்டைச் சித்திரமாக வழங்கியிருக்கிறோம்.






சுபிட்சத்துக்கு வழி
அன்றும்
காங்கிரஸ்
கம்யூனிஸ்ட்
இன்றும்
சுபிட்சத்துக்கு வழி
காங்கிரஸ்
கம்யூனிஸ்ட்
பாண்டுங் மகாநாட்டில் சூ
இந்திய எல்லையில் சூ
இந்தியா சுதந்திர மடைந்து விட்டால் உன் வரிப் பளு குறையும்
வரிகள்
பிரிட்டிஷ் ஆட்சியில்
மாகாணத்தில் இன்னும் அதிக வரிகள் போடப் போகிறோம்
அதிக வரிகள்
வரிகள்
சுதந்திர பாரதத்தில்
நேற்று
அமெரிக்கா
ருஷ்யா
இன்று

நமது கார்ட்டூன் சைத்திரிகர் இவ்வருஷத் தீபாவளிக்குச் சில பரிசுகளை வழங்குகிறார்.




அவரது தலைவலிகளுக்கு மாத்திரைகள்.
நேரு
சோஷலிசக் கொள்கையை ஏற்காத காங்கிரஸ்காரர்களை விரட்ட ஒரு நல்ல குண்டாந்தடி!
கிருஷ்ண மேனன்
வீட்டுக்கு அனுப்பி வைக்க ஒரு பெட்டி
ஓய்வு எடுத்துக் கொள்ள ஒரு படுக்கை
வெளிநாடுகளில் யாசகம் புரிய ஒரு கோணிப்பை
மொரார்ஜி
சிறுபிள்ளைத் தனமான பேச்சுக்கு ஏற்ற குழந்தை வண்டி.
ஈ. வெ. ரா
நமது மந்திரிகளுக்கு:
ஒரு ஒன்றாற வெடி!
காமராஜ்



காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்களும் ஆட்சிமுறையிலுள்ள ஊழல்களும் கவலை அளிக்கின்றன.
இதற்குப் பரிகாரம் என்னவென்று யோசித்தார்.
பேனா வன்மையை உபயோகித்தார்.
நாவன்மையை உபயோகித்து காங்கிரசுக்கு எச்சரிக்கை செய்தார். கேட்கவில்லை
நாட்டு நலனில் அக்கறை கொண்ட பலதரப்பட்ட தலைவர்களையும் பிரமுகர்களையும் கலந்து ஆலோசித்து சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார்.
காங்கிரஸ்காரர்கள் முதலில் எள்ளி நகையாடினர்.
கிழவர்கள் கட்சி
காங்கிரஸ்காரர்கள்
கூட்டுப் பண்ணை குடியைக் கெடுக்கும்
நாகபுரி தீர்மானம் நாட்டைக் கெடுக்கும்
தனி நபர் சுதந்திரத்தை பறிக்காதே
சர்க்கார் தொழில் சாபக்கேடு
ஆனால் இன்றோ சுதந்திரக் கட்சி பலமுள்ள கட்சியாகி விட்டது..!

ஹிந்து மத ஸாரம்

ராஜாஜி

[நான் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரை இது. எக்காலத்துக்கும் பொருந்தும் சில விஷயங்களுள் இதுவும் ஒன்று. இந்தத் தீபாவளிக்கு அன்பர்களுக்கு என் ஆசியாக இதைக் 'கல்கி'யில் போடச் சொன்னேன். பாரத நாட்டில் பிறந்தவர்கள் பாரத தருமத்தைக் குற்றமற அறிந்துகொள்ள வேண்டும். அதன்படி நடப்பது அவரவர்கள் பெற்ற பாக்கியம்.]


பதினாயிர வருஷக் கணக்காகப் பாரத தேசத்தில் அவ்வப்போது தோன்றின பெரியோர்கள் தவமும் ஆராய்ச்சியும் செய்து பாரத தர்மத்தை வளர்த்து வைத்திருக்கிறார்கள். அது மிகப் பழைய ஆலமரம். அதன் நிழலில் நாம் வாழ்கிறோம். ஒரு கிளையைப்போல் மற்றொரு கிளை இல்லை. பார்ப்பதற்கு அதிக வேறுபாடுகள் இருக்கும். ஆனால் விருக்ஷம் ஒன்றே. வித்தியாசங்களைக் கண்டு மயங்கிப் போகக் கூடாது. சத்தியமே அதன் உயிர். உண்மையே பிரதானமெனக் கொண்டு புத்தியை எவ்வளவு தூரம் செலுத்த முடியுமோ, அவ்வளவு தூரம் செலுத்தி, நம்மைப் பெற்ற முன்னோர்களில் மகா ஞானிகளும் குணசீலர்களும் சத்திய சோதனை செய்து அடைந்த உண்மைகளே வேதாந்தம் என்பது. அதுவே ஹிந்துக்களின் மதம். மக்கள் அதைச் சரிவரப் பின்பற்றி வாழ்ந்தார்களானால் நாடு செழித்துச் சிறப்பு அடையும்.

ஆராயும் முறை

பாரமார்த்திக விஷயங்களை ஆராய்ச்சி செய்ய அறிவு மட்டும் போதாது. சமய நூல்களைப் படிக்கும்போது வெறுப்பும் துவேஷமும் இன்றிப் பக்தியுடன் படித்தால்தான் பொருள் விளங்கும். சீலம் வேண்டும்; தியானமும் கடவுள் வழிபாடும் வேண்டும்; தவமும் வேண்டும். தவம் என்றால் புறக்கரணங்களையும் அகக் கரணங்களையும் அடக்கி மனத்தைப் பரம்பொருளின் மேல் செலுத்துவது. உடலைத் துன்புறுத்திக் கொள்ளுவது தவம் அல்ல.

அனைத்திலும் ஆத்மா

நான், நீ, அவன் என்பது உடலல்ல! உடலினுள் மறைந்திருக்கும் உடலைவிட உயர்ந்த ஒரு பொருளைக் குறித்து அம்மொழிகளைப் பேசுகிறோம். அதுவே ஆத்மா. ஜீவன் அல்லது ஆத்மா என்பது தேகத்துக்குள் எங்கும் வியாபித்து உடலைக் கொண்டு எல்லாவற்றையும் நடத்தியும் அனுபவித்தும் வரும் பொருள். ஆத்மா வயிற்றிலோ மார்பிலோ தலையிலோ மட்டும் இருப்பது அல்ல. எல்லாப் பிராணிகளுக்கும் கொடி செடி மரங்களுக்கும் ஆத்மா உண்டு; மனிதனுக்கு மட்டுமல்ல.



ஆத்மாவுக்கு மரணம் இல்லை

மனிதனோ, வேறு பிராணியோ, தாவரமோ செத்துப் போனால் அது யாக்கைக்கு மட்டும் நடந்த நிகழ்ச்சி. உடல் புதைக்கப்படும், சுடப்படும், அல்லது பிராணிகளுக்கு இரையாகும். ஆத்மா சாகாது; அதைச் சாகவடிக்க முடியாது. மக்கள் இறந்தார்கள் என்று துயரப்படுவது மூடத்தனம். கிழிந்த துணியையோ, வேண்டாத உடுப்பையோ கழற்றிவிட்டு வேறு வஸ்திரம் அணிவதுபோல் ஆத்மா வேறு தேகத்துக்குள் செல்லப் பழைய தேகத்தை விட்டு நீங்கும். மரணம் என்பது இதுவே. ஆகையால் மரணத்தைக் கண்டு துயரமோ, பயமோ கொள்ள வேண்டாம்.

பரம்பொருள்

தேகத்துக்கு ஆத்மா அல்லது ஜீவன் எப்படியோ, அப்படி ஜீவனுக்குப் பரம்பொருள். ஜீவன் தேகத்தை எவ்வாறு சேதனப் பொருளாக்கி அதனுள் மறைந்து நிற்கிறதோ, அவ்வண்ணமே ஜீவனுக்குள் பரமாத்மா அந்தர்யாமியாய் நின்று அந்த ஜீவனைத் தாங்கி வருகிறது. எந்தத் தேகத்துக்குள்ளும் எந்த வஸ்துக்குள்ளும் பரம்பொருள் வியாபித்து நின்று அதைத் தாங்கி வருகிறது. இவ்வாறு உலகமனைத்துக்கும் ஆத்மாவாகிச் சர்வ வியாபகமாயிருக்கும் பரம்பொருளையே ஈசுவரன், நாராயணன் முதலிய பல பெயர்களிட்டு உலகில் பல மதத்தினரும் வணங்குகிறார்கள். பொருள் ஒன்று. பெயர் ஆயிரம்.

பிறவிக் குணங்கள்

சேதனமற்ற பூதப்பிரகிருதிப் பொருளைக் கொண்டு ஆக்கப்பட்ட தேகத்தின் மூலம் ஆத்மாவானது விஷயங்களை அனுபவிக்கிறது. அத்தேகத்தில் எண்ணிய எண்ணங்களும் செய்த செயல்களும் குணங்களாக மாறுகின்றன. குணங்கள் ஆத்மாவைப் பற்றிக்கொண்டு, ஆத்மா ஒரு தேகத்தை விட்டு வேறு தேகத்தைத் தரிக்கும்போது அந்தக் குணங்களும் ஆத்மாவின் கூடச் செல்லும். இவையே பிறவிக் குணங்கள்; புது ஜன்மத்தின் மூலதனம். ஓர் உடலைவிட்டு ஆத்மா வெளியேறும்போது

ஆத்மா அவ்வுடலில் அடைந்த குணங்களோடு புது உடலில் பிரவேசிக்கிறது. காற்றானது ஒரு தோட்டத்தின் வழியே வீசும்போது அவ்விடத்து வாசனைகளை எடுத்துச் செல்வதுபோல ஆத்மாவும் தன் கருமங்களைச் சூக்ஷ்ம வடிவத்தில் எடுத்துச் செல்லும்.

செயல்களின் பயன்

ஒருவனுடைய முன்னேற்றம் அல்லது வீழ்ச்சி அவன் ஆதீனத்தில் இருக்கிறது. நற்கருமமும் தீயகருமமும் செய்து தனக்குத்தானே நன்மையும் தீமையும் தேடிக் கொள்ளுகிறான். ஆத்மா மேன்மையடையவும் கீழே விழவும் அவன் செயல்களே ஏதுவாகும். இதுவே கர்ம நியதி. இந்த நியதியினால் ஜீவனுக்குப் பொறுப்பும் சுதந்திரமும் ஏற்படுகிறது. மனத்தில் உதிக்கும் எண்ணங்களும் ஆசைகளும் செயல்களே ஆகும். வெகு ரகசியமான மனத் தோற்றமும் கூடத்தான் பலனை உண்டாக்கியே தீரும். அந்தப் பலனைத் தீர்த்துக் கொள்ள ஜீவன் மறுபடியும் எத்தனித்துத்தான் தீர வேண்டும்.



ஒருவன் மற்ற ஜீவன்களுக்கு உண்டாக்கும் சுகத்துக்கும் துக்கத்துக்கும் தகுந்த தண்டனையோ வெகுமதியோ அடைவது ஒருபுறம் இருக்க, நாம் எண்ணும் ஒவ்வோர் எண்ணமும் செய்யும் செயலும் உடனே நம்மையே தாக்குகின்றன. ஒரு செயலைச் செய்கிறவனே அதன் பயனை முதலில் அடைகிறான். ஒரு பிராணியின் மேல் கல் எறிந்தால் அந்தக் கல் அந்தப் பிராணியைத் தாக்குகிறது. அது போக அந்தக் கல்லானது எறிந்தவன் குணத்தையும் அந்தச் சமயமே தாக்குகிறது.

சுதந்திரம்

ஒரு நல்ல எண்ணம் நான் எண்ணினேனானால், அல்லது நற்கருமம் ஒன்று செய்தேனானால், அந்த அளவுக்கு என் குணம் உடனே மேன்மை அடைகிறது. ஒரு தீங்கு நினைத்தேனானால், அல்லது இழிவான மனத் தோற்றத்துக்கு இடம் கொடுத்தேனானால், அந்த அளவுக்கு ஆத்மா கீழ் நோக்கிச் செல்கிறது. தட்டான் தங்க ஆபரணத்தைத் தட்டி உருவாக்குவது போல் நம்முடைய ஆத்மாவை நாம் கர்மம் என்கிற சுத்தியால் ஒவ்வொரு க்ஷணமும் தட்டிக் கொண்டே இருக்கிறோம். அது உடலை விட்டுப் பிரியும்போது அதன் உருவம் எத்தன்மையது என்பது வாழ்நாளில் செய்த செயல்களையும் எண்ணிய எண்ணங்களையும் பொறுத்தது. செய்த தீமைக்கோ, எண்ணிய இழிவான எண்ணத்துக்கோ,பச்சாத்தாபங்கொண்டுவருத்தப்பட்டால் மறுபடியும் அந்த எண்ணம் அணுகாமல் இருப்பதற்கு ஏதுவாகும். வாழ்நாளை எவ்வண்ணம் உபயோகிக்கிறோமோ அவ்வண்ணமேயாகும் மறு ஜன்மத்தின் தன்மை. கர்ம நியதியை மாற்ற இயலாது. ஆனால் செயல் நம்முடைய ஆதீனத்தில் உள்ளது. அதன் பயன் காரண காரிய சம்பந்தம் என்கிற கர்ம நியதிப்படி உண்டாகும். இதுவே முன்னேற்றத்துக்கும் விடுதலைக்கும் ஏது.

'எல்லாம் விதிக்குள் அடங்கி நிற்கும்; நாம் என்ன செய்தால் என்ன?' என்று பொறுப்பற்று நிற்பது கர்ம நியதியை உணர்ந்தவாறு ஆகாது. புருஷப் பிரயத்தனம் அல்லது முயற்சி அவசியம் என்பதே கர்ம நியதி. புருஷப் பிரயத்தனத்தால் பயனில்லை என்பது ஹிந்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட கர்ம நியதிக்கு நேர்மாறானது.

எல்லாம் ஈசன் செயல், ஈசன் அனுமதியின்றி ஒன்றும் நடக்காது என்பது உண்மை. ஆயினும், கர்ம நியதியும் கடவுள் செயலேயன்றி வேறில்லை. பிரபஞ்சம் முழுதும் ஓர் அமைப்புக் கிரமத்துக்கு உட்பட்டிருக்கிறது. அந்த அமைப்புக் கிரமத்தில் கர்ம நியதியும் ஒன்று. தீ எரிக்கிறது. நீர் நனைக்கிறது. அத்தகையதேகர்மநியதியும். அனைத்தும் ஈசன் இட்ட திட்டமே.

எல்லாம் ஈசுவர நியமனத்துக்கு உட்பட்டு நின்றாலும் காரண காரிய சம்பந்தத்திலிருக்கும் பெரிய சுதந்திரத்தை உயிர்கள் அனுபவிக்கின்றன. செயலின் பலனைத் தவிர்க்க முடியாது என்பது பெருந் தடை போலத் தோன்றினாலும் அதுவே நமக்குச் சுதந்திர சாஸனமுமாகும்.

செயல்முறை

சமுதாய க்ஷேமத்துக்கு வேண்டிய காரியங்கள் நடைபெற வேண்டும். அந்தக் காரியங்களில் அவனவன் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்து முடிக்க வேண்டும். குண பந்தத்திலிருந்து விடுபடுவதற்கு அதுவே வழி. ஒவ்வொருவனும் தனக்குச் சமுதாயத்தில் என்ன வேலை இடப்பட்டிருக்கிறதோ அதைக் கவனித்து நிறைவேற்ற வேண்டும்.

முன்னாட்களில் வெவ்வேறு குலங்களுக்கு வெவ்வேறு கடமைகள் சமுதாயத்தில் ஏற்பட்டிருந்தன. இக்காலத்தில் அவ்வாறு இல்லை. ஆயினும், ஒவ்வொருவனும் தன் சக்தி முழுதும் செலுத்தி, சமுதாயத்துக்கு உதவ வேண்டும் என்கிற தர்மம் இக்காலத்திலும் மக்களைக் கட்டுப்படுத்தும். தன் பிறவிக் குணங்களினாலோ, அமர்ந்த ஸ்தானத்தினாலோ, வேறு வழியில் ஏற்பட்ட சூழ்நிலையின் பயனாகவோ ஒவ்வொருவனுக்கும் கடமைகள் உண்டு. அதன்படி செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் சரிவரச் செய்ய வேண்டும். என் கடமையை நான் செய்கிறேன் என்ற எண்ணம் தவிர, காரியத்தின் பயனைப் பற்றித் தனக்காக ஓர் ஆசை வைத்துக் கொள்ளக் கூடாது. இவ்வாறு காரியங்களைச் செய்துகொண்டு வாழ்க்கை நடத்துபவன் கர்மயோகி. சுயநலத்தைக் கருதித் தொழில் செய்பவர்கள் செய்வதைப் போலவே கர்மயோகியும் தான் செய்யும் வேலையில் கண்ணும் கருத்தும் வைத்துச் செய்வான். வெளிப் பார்வைக்கு இருவகைச் செயல்களும் ஒரே தோற்றம் தரும். கர்மயோகியும் தான் செய்யும் தொழிலை உதாசீனமாகச் செய்ய மாட்டான். ஆனால் காரியத்தின் பலனுக்கும் அவனுக்கும் உள்ளத்தில் ஆசை என்கிற பந்தம் இல்லாமல் தனிப்பட்டு நின்றே வேலை செய்வான். காரியத்தில் கஷ்டங்களும் தடைகளும் ஏற்பட்டால் அவைகளை எப்படித் தாண்டுவது என்று மாத்திரம் யோசித்துச் செய்வானே யொழிய, அவைகளைக் கண்டு பயமோ, துக்கமோ, கலவரமோ அடைய மாட்டான். சுயநலம்

கருதாமல் கடமையைச் செலுத்துபவனுக்குச் சஞ்சலமும் கலக்கமும் நீங்கிய மனநிலை தானாக வரும்.

பழகப் பழக எதுவும் சுபாவமாகி விடுகிறது. நாம் ஆசையும் விட்டுக் கருமம் செய்வதும் இப்படியே அப்பியாசத்தால் சுபாவமாகும். செய்யும் கருமத்தை நன்கு முடிப்பதற்கும் இதுவே முறையாகும். பற்றும் ஆசையும் உள்ளத்தில் கவலையையும் பயத்தையும் உண்டாக்கும். இதனால் சாமர்த்தியம் குறையும். பற்றற்றுச் சுயநலம் நீங்கிக் கருமம்செய்வதே கருமங்களை நன்கு முடிக்கும் வழியுமாகும்.

துறவும் வேள்வியும்

உலக வாழ்க்கையையும் குடும்ப சம்பந்தங்களையும் விட்டுவிடுவது துறவு. அவ்வாறு விடாமல், உலகத்தோடு கலந்தே காரியங்களின் பலன்களைத் தனக்கென்று விரும்பாமல் கடமையாகச்செய்தால் அதுவும் துறவுதான். சுயநலப் பற்று அறுந்த பின் எந்தக் காரியம் செய்தாலும் அது மனிதனைக் கர்ம பந்தத்தில் சிக்கிக்கொள்ளாமல் இருக்கச் செய்யும்.

ஹிந்துமத சம்பிரதாயத்தில் முன்னாட்களில் வேள்விகள் செய்து வந்தார்கள். வேள்விகளின் முக்கிய தத்துவம் தியாகம். சுயநலத்தையும் அவாவையும் விடுவது வேள்விக்குச் சமமாகும். சுயநல ஆசை நீக்கிக் கடமைகளைச் செய்வதே மேன்மையான வேள்வி.

ஞானம்

சுயநலப் பற்று நீக்கிக் கடமையைச் செய்யப் பழகிக் கொண்ட இல்லறத்தான் மேலே ஏறவேண்டிய யோகப் படிகளில் எளிதில் ஏறலாம். அவ்வப்போது தனியாக இருந்து மனத்தை ஒருமுகப்படுத்தி இந்திரியங்களையும் மனத்தையும் விஷயங்களில் திரிய விடாமல் அடக்கிக்கொண்டு தியானம் செய்யலாம். அப்படித் தியானம் செய்வதனால் அறிவு அடைவான். எல்லா ஜீவராசிகளிலும் தன் ஆத்மா இருப்பதாக உணர்ச்சி பெறுவான். அனைத்தும் பகவான் திருவுள்ளத்தில் நிற்பதையும் காண்பான். சுகமும் துக்கமும், வெற்றியும் தோல்வியும் ஒன்றென்பதைக் காண்பான். இந்தக் காட்சியே ஞானம்.



ஞானம் அடைந்தவனும்தான் செய்யவேண்டிய கர்மங்களைக் கடமையாகச் செய்யவேண்டும். மாபெரும் ஞானியாகிய ஜனகனே உலகவாழ்க்கையில் கலந்துகொண்டு தொழில் புரியும் முறையை அனுஷ்டித்தான் என்று கண்ணபிரான் அருச்சுனனுக்கு எடுத்துக்காட்டி, பற்றற்ற செயல் முறையே மேலானது என்று உபதேசித்தான்.

ஞானம் அடைந்தவனுக்குத் தொழில் மார்க்கம் முன்னைவிட எளிதாகும். விறகு பற்றி எரிந்த தீயானது மேலும் விறகை எரிப்பதுபோல், முறையான ஞானம் வளர்ந்து ஆசை, பற்றுகளைச் சுட்டுச் சாம்பராக்கிச் செயல்களைப் புனிதமாக்கும்.

அமைதி

ஆத்மா, உலகம், பரம்பொருள், இவைகளின் இலக்கணங்களை ஆய்ந்து தெளிப்பதனால் மனத்தில் கிளம்பும் உத்வேகங்கள் அடங்கும். உள்ளம் பக்குவப்படாத நிலையில் துறவியாய்ப் போகப் பார்ப்பதில் பயன் இல்லை. பழவினைப் பயனாகச் சில குணங்களுடன் பிறக்கிறோம். அக்குணங்களைப் பலாத்காரமாக அடக்கப் பார்ப்பதில் நன்மை உண்டாகாது. மனம் பக்குவப் படாதிருக்கும் போது குணங்களின் மேல் அடக்கு முறை ஆரம்பித்தால் அவை உள்ளே வேலை செய்து கொண்டே போகும். வெளிக்குத் துறவு வேஷமும், உள்ளே காமக் குரோதாதி வேகங்களுமாக இருக்கும். புறத்தாரை மோசம் செய்வதோடு தன்னையும் மோசம் செய்து கொள்வதாகும். முடிவில் படுகுழியில் தள்ளிவிடும். சுயநலமின்றிக் கடமைகளைச் செய்யும் முறையே ஊழின் பயனாக உண்டாகும் பிறவிச் சுபாவங்களினின்று ஜீவனை விடுவித்துக் கொள்ளும் முறையாகும்.

மனத்தைக் காத்தல்

மனம் நடுநிலையினின்று வழுவுவதற்குக் காரணம் காமம், குரோதம், லோபம். இம் மூன்று உத்வேகங்களும் ஆத்மாவுக்குச் சத்துருப் படை. உள்ளத்தைச் சரியாகக் காத்தோமானால் மற்றதனைத்தும் எளிதாகும். மனத்தை அடக்கியாளாமல் விட்டு விட்டோமானால் பிறகு நிச்சயமாய் ஏமாந்து போவோம். ஆசை யெண்ணங்களை, வெறும் எண்ணங்கள் என்ன செய்யும் என்று அலட்சியம் செய்து கோட்டைக்குள் புகவிட்டால் அவை பிறகு நம்மை ஆட்கொண்டுவிடும். ஆகையால் கோட்டை வாயிலிலேயே பகைப் படையாகிய காமக் குரோத லோபங்கள் உள்ளே நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மனத்தைத் தளராமலும் தூங்காமலும் காக்கவேண்டும்.

முதலில் ஆசை மன மகிழ்ச்சிகள் அமிருதம் போல்தோன்றும். முடிவில் விஷமேயாகும். சுகம் போல்பாவனை காட்டிப் பின்பு துக்கமாகத்தான் முடியும். புலன்களையும் மனத்தையும் வசப்படுத்துவது முதலில் விஷம்போல் கசக்கும். ஆனால் அதுவே பின்பு அமிருதம் போன்ற சுகானந்தத்தைத் தரும். ஞானமே உண்மையான இன்பம்.

யோகம்

சுகத்திலும் துக்கத்திலும் மனம்கலங்காமல் அசையா நிலை அடைவதற்குத் தியானம் அவசியம். தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சுயநலம் கருதாமல் செய்து, கருமங்களின் முடிவைப் பற்றிக் கவலையும் மனக் கலக்கமும் இல்லாமலிருக்கப் பழகியபின், அவ்வப்போது தனிமையிடத்தில் தங்கித் தியானத்தில் அமர்வதனால் சித்தத்திலுள்ள மலங்கள் நீங்கி ஸ்திர நிலை உண்டாகும்.

தியானம் செய்யும் பொழுது மனம் ஓடித் திரியவே பார்க்கும். உற்பவமாகும் எண்ணங்களை அடக்கியாளாமற் போனால் அவை உள்ளத்தைக் கவர்ந்துவிடும். எவ்வளவு சிரமப்பட்டு அடக்கினாலும் திரும்பத் திரும்பக் கிளம்பும். நினைவு ஓடித் திரியும். இவ்வாறு மனம் வசப்படாததைக்

கண்டும் ஏக்கம் கொள்ளாமல் திரும்பத் திரும்ப நிலையில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு தியானத்தினால் மனத்தைப் பழக்கியவன் எவ்வுயிரையும் பகைத்தலின்றி 'யான்' என்பதும் 'எனது' என்பதும் நீங்கி, சுகத்தையும் துக்கத்தையும் நிகராகக் கொண்டு உள்ளத்தை வசப்படுத்தி எப்போதும் இன்ப நிலையில் இருப்பான்.

உடலைப் பற்றிய சில சாதனங்களும் சிகிச்சை முறைகளும் யோகம் என்று வழங்கி வருகின்றன. ஆனால் இவ்விடம் சொல்லப்பட்டது தியானம் என்கிற யோகம்.

பொறை

சுத்த வாழ்க்கை இல்லாவிடின் கேவலம் படிப்பினாலும், ஆராய்ச்சியினாலும், தியானத்தினாலும் கூட ஞானம் அடைய முடியாது. பயன்படும் அறிவு வேறு, பயன்படாத வெற்றறிவு வேறு. அறிவு பயன்பட வேண்டுமானால் புலன்களையும் மனத்தையும் செயலையும் அடக்கியாள வேண்டும். சுத்தமான வாழ்க்கையை அடையாமற் போனால் எவ்வளவு ஆராய்ச்சி செய்து அடைந்த அறிவானாலும் ஆத்மாவுக்குத் துணையாகாது. தீய நடத்தைகளினின்று விலகாதவன், புலன்களை வசப்படுத்தாதவன், மனத்திலுங்கூட விஷய ஆசைகள் நீங்கி அமைதி அடையாதவன், உள்ளத்தில் சாந்திபெற்றுப் பரம்பொருளைத் தனக்குள் காண முடியாது. அவ்வாறு காணாதவனுக்கு எவ்வளவு அறிவு இருந்தாலும் பயன்படாது.

பிறவியுடன் வந்த சுபாவம் அனைவரையும் வேதனைப்படுத்தும். அது ஊழின் பயன். இதை ஒருவனிடம் கண்டு நாம் கோபிக்கலாகாது. மற்றவர்களுடைய செயலைக் கண்டு வெறுப்புக் கொள்ளத் தோன்றும்போதெல்லாம் அவனவன் தன்னுடைய குறைகளை நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டும். "உன் இயற்கைச் சுபாவம் உனக்குத் தெரியுமே! மற்றவர்களுக்கு அது வெளிப்படையாகத் தெரியவில்லையாயினும் உன் மனம் ஓடித் திரிவதெல்லாம் நீ கண்டிருக்கிறாயல்லவா? அதை அடக்கினது உன் பாக்கியம். மற்றவர்கள் அந்தப் பாக்கியத்தை அடையாமற் போனதற்கு வருந்துவாயாக" என்று தனக்குத் தான் உபதேசித்துக்கொண்டு கோபத்தையும், வெறுப்பையும் ஆற்றிக்கொள்ள வேண்டும்.

பாவம் செய்தவன் என்று ஒருவனை நாம் துவேஷிக்கக் கூடாது; இழிவாகவும் நடத்தக் கூடாது. அந்தப் பாவம் நாம் செய்ததில்லை என்று கர்வப்படவும் கூடாது. பகவானுடைய அருளை அடைந்தால் தான் பிறவியுடன் வந்த கர்ம மூட்டையினின்று ஒருவன் தப்ப முடியும். மற்றவர்கள் செயலைக் கண்டு வெறுப்புத் தோன்றும்போதெல்லாம் இதை நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டும்.



சரணாகதி

மகா பாவம் செய்தவனாயினும், 'எனக்கு ஏது கதி!' என்று யாரும் ஏக்கப்பட வேண்டாம். செய்த பாவச் செயலைப் பற்றி உண்மையில் மனம் உருகித் துக்கப்பட்டு, பகவானைச் சரணம் அடைந்தால் எவனுக்கும் கதி உண்டு.

பகவானைச் சரணமடைந்து விடுதலை பெறுவதற்கு ஜாதியாவது குலமாவது சமயமாவது தடையாகாது. கடவுளை எந்தமுறையில் ஆராதனை செய்தாலும் ஒன்றே என்பது அறிந்து மதம், மத சம்பிரதாய பேதங்களைப் பகவான் பொருட்படுத்துவதில்லை. எல்லாவகை வழிபாடும் பகவானைச் சேரும். "மக்கள் எந்த மார்க்கத்தைத் தொடர்ந்து சென்றாலும், அது என்னை அடையும் வழியேயாகும்" என்று கண்ணன் அருச்சுனனுக்குச் சந்தேகத்துக்கு இடமின்றி விளக்கியிருக்கிறான்.

எத்தகைய ஞானியாயிருந்தாலும் பகவானைச் சரண் புகாமல் ஈடேறுவது முடியாது. சுயநல மற்று, சம சித்தத்துடன் கடமைகளைச் செய்வதோடு, செய்யும் செயல்களையெல்லாம் பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிடவேண்டும். முடிவில் ஈசன் அருள்தான் நம்மைக் காப்பாற்றும். அவன் அருள் இல்லாவிடில் புலன்களை அடக்குவதும் அமைதி நிலையும் நமக்குக் கிட்டா. அவன் அருள் இருப்பின் அனைத்தும் முடியும்.

முடிவுரை

எத்தகைய பாவியாயிருந்தாலும் பகவானைச் சரண் புகுந்தால் அவன் நாசமடைய மாட்டான் என்பது கண்ணன் அருச்சுனனுக்குச் சொன்ன உறுதி மொழி.

பொலிக பொலிக பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங் கியாதொன்று மில்லை
கலியும் கெடும்கண்டு கொண்மின்.


என்று நம்மாழ்வார் பாடியது கண்ணனுடைய இந்த உறுதிமொழியின் ஆனந்த பரவசமே.

தர்மத்தின்படி அனுசரிக்கும் நியமங்களில் தோல்வியோ, நஷ்டமோ இல்லை. பிரயத்தனத்திலேயே பயனடையலாம். குறைவின்றி முழுதும் செய்ய முடியாதாயினும் சிறிது நடத்தினாலுங்கூடப் பெரும் பயன் அடையலாம் என்பதும் கண்ணன் உறுதி மொழி.

இது ஹிந்து மத ஸாரம். இதற்கு மேல் விஷயங்களை அறிய விருப்பம் கொண்டால் கீதை உபநிஷத்துக்களைப் படித்தும் பெரியோர்களைக் கேட்டும் உபதேசம் பெற வேண்டும்.



உணர்ச்சி



நளன் கானகத்தில் காரிருளில் தன் காதலியாகிய தமயந்தியைக் கைவிட்டுச் சென்றான். போகும் வழியில் கார்க்கோடகனால் கடியுண்டு உருவம் குறைந்து, நிறம் மாறி, வாகுகன் என்னும் பெயருடன் நடந்தான். அயோத்தியின் அரசனாகிய இருதுபர்ணனிடம் வந்து அவனுடைய தேரை நடத்தும் பாகனாகவும் சமையற்காரனாகவும் அமர்ந்தான். இரண்டு கலையிலும் இணையில்லாத் திறமையாளன் நளன். தீயின்றியே அறுசுவையோடு கூடிய விருந்துணவு சமைக்கும் ஆற்றல் உடையவன் அவன்.

தமயந்தி காட்டிலிருந்து வழிப் போவோர் துணையோடு தன்னுடைய தந்தையாகிய வீமனிடம் போய்ச் சேர்ந்தாள். அங்கே அவர்களுடைய குழந்தைகள் இருவரும் இருந்தனர்.

மக்களுடன் தந்தை வீட்டில் இருந்தாலும் கணவனைக் காணாத துயரத்தால் வருந்தினாள் தமயந்தி. அவனை எப்படிக் கண்டுபிடிப்பது என்று ஆராய்ந்தாள். எவ்வளவு இழிந்த நிலையில் இருந்தாலும் நளன் கீழ்மக்களுடன் சேர்ந்து வாழ மாட்டான். எங்கே இருந்தாலும் தன்னுடைய பேராற்றலால் சிறப்பு அடையத்தக்கவன். ஆதலின் அரசர்களின் அவையிலே தேடினால் அவனைக் கண்டுபிடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாள்.


இந்த எண்ணத்தோடு ஓர் அறிஞனை அழைத்தாள் தமயந்தி ; "நான் சொல்வதை நீ ஒவ்வோர் அரசனுடைய அவைக்களத்திலும் சென்று சொல். யார் அது கேட்டு என்ன என்ன சொல்கிறார்கள் என்பதை எனக்கு வந்து சொல்" என்று அவனை விடுத்தாள். அவள் விருப்பப்படியே அவன் ஒவ்வோர் அரசனுடைய அவைக்கும் சென்று,

"கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்கும் போதுமோ ?"

என்பதைச் சொன்னான். அவன் கூறியதை யாரும் கவனிக்கவில்லை. ஏதோ மந்திரத்தையோ துதியையோ சொல்கிறான் என்று இருந்து விட்டார்கள்.


அவன் அயோத்திக்கு வந்தான். இருதுபர்ணன் அவைக்களம் சென்று வழக்கம்போல் அந்தப் பாட்டைச் சொன்னான். அங்கே வாகுகன் இருந்தான். அவன் காதில் இது விழுந்தது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்றது. அதற்கு விடை சொல்லி விட வேண்டுமென்ற வேகம் உண்டாயிற்று.

பலரறிதே ா ஒரு விடுகதைக்கு விடை கூறுபவனைப்போல் வாகுகனாகிய நளன் சொன்னான் :



வெள்ளம்

கி. வா. ஜகந்நாதன்



"ஒன்றோடு தன்னை உறக்கத்தே நீத்ததுவும்
பண்டை வினையின் பயனேகாண் ;—தண்டரளப்
பூந்தாம வெண்குடையோன் பொன்மகனை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ."

இதைக் கேட்டதும் அறிஞன் அதைத் தமயந்தியிடம் போய்ச் சொன்னான். அவள் அந்த விடையைச் சொன்னவன் நளன்தான் என்று நிச்சயித்துக் கொண்டாள். "அப்படிச் சொன்னவரை நீ அடையாளம் கண்டு கொள்ள வில்லையா? அவர் எப்படி இருக்கிறார்?" என்று கேட்டாள்.

"கறுப்பாகக் குட்டையாக இருந்தார். அவர் இருது பர்ண மன்னருடைய தேர்ப்பாகர் என்று தெரிய வந்தது" என்றான் அறிஞன்.

இப்போது தமயந்திக்குக் குழப்பம் உண்டாயிற்று. முதலில் உண்டான ஊக்கம் தளர்ந்தது. இரண்டு மூன்று முறை விசாரித்தாள். அறிஞன் சொன்னதற்கும் நளனது வடிவத்துக்கும் சம்பந்தமே இல்லை. "வேறு யாரும் இதைக் கவனிக்காமல் இவர் மாத்திரம் விடை கொடுப்பானேன்? அதுவும், செய்த குற்றத்துக்குச் சமாதானம் கூறுவது போல் இருக்கிறதே! ஒருகால் அவரிடம் நெருங்கிப் பழகியவராக இருக்குமோ?" என்று அவள் யோசித்தாள். "அவரை இங்கே வருவித்துப் பார்த்தால் உண்மை தெரியும். குதிரையை உளம் அறிந்து ஓட்டும் கலையிலும், நெருப்பின்றி உணவு சமைக்கும் கலையிலும் அவருக்கு நிகராக யாரும் இல்லை. அந்த இரண்டு கலையும் இந்த விடை கூறியவரிடம் இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும்" என்ற எண்ணம் உண்டாயிற்று.

அவள் மறுபடியும், முன்னே பல இடங்களுக்குச் சென்று வந்த அறிஞனை அழைத்தாள். "நீ இருதுபர்ண மன்னன் அவைக்களம் சென்று ஒரு செய்தியைச் சொல்லி வா" என்றாள். "என்ன செய்தி?" என்று அவன் கேட்க, அவள் அந்த விசித்திரச் செய்தியைச் சொன்னாள்: "தமயந்தி அம்பிகையின் அருளால் மீண்டும் கன்னித் தன்மையை எய்தினாள். ஆதலால் மறுபடியும் அவளுக்குத் திருமணம் நடக்க இருக்கிறது; நாளைக்குச் சுயம்வரம் என்று சொல்லி வா" என்றாள்.

துப்பறியும் வேலை இது என்பதை உணர்ந்த அவன் அயோத்தி சென்றான்.

அங்கே அவன் செய்தியைச் சொன்ன போது வாகுகன் திடுக்கிட்டான். இருதுபர்ணனோ தமயந்தியினிடம் உள்ள ஆசையால் அதை நம்பினான். "என் கழுத்தில் விழவேண்டிய மாலை தவறி நளன்மேல்விழுந்தது. இப்போது தமயந்தி என்னைத்தான் விரும்புவாள்" என்று அவன் ஆசை கூறியது. "தேரை ஆயத்தம்செய்" என்று பணித்தான்.

சுயம்வரம் மறுநாள் என்றால் அதற்குள் குண்டின புரத்தை அடைவது எளிதன்று. நளன் ஒருவன்தான் அந்தக் காரியத்தைச் சாதிக்க முடியும். அதை உணர்ந்தே தமயந்தி இந்தச் சூழ்ச்சியைச் செய்தாள்.

தேர் குண்டினபுரத்தை அடைந்தது. அந்தச் செய்தி தெரிந்தவுடனே தமயந்தி நளன்தான் அதற்குள் தேரை ஓட்டி வர முடியும் என்ற கருத்தால் மகிழ்ச்சி அடைந்தாள். வினாவுக்கு விடை கூறியது, மிக வேகமாகத் தேரை ஓட்டி வந்த ஆற்றல் ஆக இந்த இரண்டினாலும் அவன் நளனாகவே இருக்க வேண்டும் என்று அறிந்தாள். அவனுடைய உருவம் எப்படி இருக்கிறது என்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்ட போது, அவளுக்கு மீண்டும் கலக்கம் உண்டாயிற்று. இன்னும் சில சோதனைகள் செய்து தெளியலாம் என்று நினைத்தாள். நளன் மடைக் கலையில் வல்லவன் அல்லவா? அதிலும் சோதனை செய்து பார்க்க எண்ணினாள்.

ஒரு தோழியை அனுப்பி, அவன் உள்ள இடத்துக்குச் சென்று சமைத்தானா, சாப்பிட்டானா என்பதை அறிந்துவரச் செய்தாள். அவள் போய்ப் பார்த்து வந்து அதிசயமாகச் சொன்னாள். "நெருப்பு இல்லாமலே சமைத்திருக்கிறார்" என்று வியந்தாள். மூன்றாவது சோதனையிலும் அவன் நளன்தான் என்ற முடிவு கிடைத்தது. இனிக் கடைசியாக ஒரு சோதனை செய்ய எண்ணினாள்.

நளன் உருவம் மாறியிருந்தாலும் கலையிலும், அறிவிலும், பண்பிலும் மாறாதவன். தன்னை ஒருவன் எவ்வளவு மறைத்துக் கொண்டாலும் உணர்ச்சி விஞ்சினால் அது அவனைப் புலப்படுத்திவிடும். உணர்ச்சியைத் தூண்டி விட்டால் வாய்மொழியாகவே உண்மை வெளிப்படுவதும் உண்டு. "நெஞ்சு மிக்கது வாய் சோரும்" என்று பழம் புலவர்கள் சொல்வார்கள். ஆகவே வாகுகனுடைய உள்ளத்து உணர்ச்சியைத் தூண்டிவிட ஏதாவது செய்து, உண்மையைக் கண்டு கொள்ளலாம் என்று முடிவு செய்தாள் தமயந்தி. தான் பெற்ற மக்களிடத்தில் உள்ள அன்பு மனிதனிடம் வலிமையாக இருக்கும். நளன் பல காலமாகத் தன் இரு குழந்தைகளையும் பிரிந்திருக்கிறான். அவர்களைக் கண்டால் அவனுடைய உள்ளுணர்ச்சி பொங்கும்; தன்னையே வெளிப்படுத்தி விடுவான்.

இவ்வாறு எண்ணிய தமயந்தி தன் தோழியை அழைத்து, "நீ இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அவரிடம் போ. அவர்களைக் கண்டு அவர் என்ன செய்கிறார், என்ன சொல்கிறார் என்பதைக் கவனித்து வந்து சொல்" என்று அனுப்பினாள்.

நளனோ தன்னைப் புறத்தார் அறியாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு இருந்தான். தன்னை எந்தச் சிறு குறிப்பினாலும் காட்டிக் கொள்ளக் கூடாது என்று கவனத்தோடு இருந்தான்.

அவன் முன்னே அவனுடைய குழந்தைகள் இருவரையும் கொண்டு போய் நிறுத்தினாள் தோழி.

* * * *

நளன் குழந்தைகளைக் கண்டான். துறவிகளானாலும் தாம் பெற்ற குழந்தைகள் என்றால் உள்ளம் சற்றே சலனம் அடையும். அவன் துறவி அல்ல; இல்லறத்தான். பெற்ற குழந்தையைச் சீராட்ட வேண்டியவன்; கொஞ்சி முத்தமிட்டு இன்புற வேண்டியவன். இது வரையிலும் அவன் ஓரிடம், அவர்கள் ஓரிடமாக இருந்தார்கள். இப்போது இதோ கைஎட்டும் தூரத்தில் நிற்கிறார்கள். ஆனால், அவன் பல பல காதங்களுக்கு அப்பால் நிற்பவனானான். உரிமையோடு அவர்களைத் தொட முடியுமா?—அவன் உள்ளம் பொருமியது. பசியுடையவன்முன் உணவை வைத்துவிட்டு, அவன் கையைக் கட்டிப் போட்டால் அவன் உள்ளம் எப்படிக் குமுறும்? அப்படித்தான் அவன் உள்ளமும் குமுறியது. ஆனால் வேறு யாரும் அவனைக் கட்டவில்லை. அவன் தானே தன்னைக் கட்டிக் கொண்டிருந்தான். இந்த வேதனைக்கு என் செய்வது? அவன் தன் கண்ணாரத் தன் மக்களைக் கண்டான். அதில் தவறு ஒன்றும் இல்லை அல்லவா?

மக்களை முன் காணா.

[காணா—கண்டு.]

"இந்தக் குழந்தைகளை இப்படி விட்டுவிட்டு நான் இருக்கிறேனே! இவர்களுக்குத் தம் தந்தை இதோ இருக்கிறான் என்பது தெரியாதே! இந்தப் பாவி அருகிருந்தும் அயலானாக இருப்பதை உணர்ந்தால் இவர்கள் என்ன என்ன நினைப்பார்கள்? விதி செய்த சதியை என்னவென்று சொல்வது?'—அவன் உள்ளத்தே இப்படிச் சிந்தனை ஓடியது. அவன் மனம் கடமையைச் செய்யாது நிற்கும் தன் அவல நிலையை எண்ணி நடுங்கியது.

மக்களை முன் காணா, மனம் நடுங்கா.

[நடுங்கா—நடுங்கி.]

உள்ளத்தில் தோன்றிய நடுக்கம் வலிமையற்ற கோழையாக இருந்தால், ஒரேயடியாக வெடித்திருக்கும். அவனோ அதைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்ற உறுதியோடு இருந்தான். வெளியிலே ஒன்றும் நடக்கவில்லை. அத்தனைக்கு அத்தனை உள்ளே புயல் அடித்தது. அதை அவனால் அடக்க முடியவில்லை. அது இப்போது வேகம் அதிகமாகி வெளியேறியது; ஆம், பெருமூச்சாக வெளிப்பட்டது.

மனம் நடுங்கா வெய்துயிரா.

[வெய்துயிரா—பெருமூச்சு விட்டு.]

அவனுக்குத் தன் நிலையை எண்ணும்போது பரிதாபமாக இருந்தது. உள்ளப் புயல் வெளி நழுவிப் பெருமூச்சாக வெளிப்பட்டு விட்டது. இனி அது என்னாகும்? அவனே தன்னைக் கண்டு அஞ்சினான்; தன் உணர்ச்சியைக் கண்டு அஞ்சினான். அது எப்படி முடியுமோ?

'இந்தக் குழந்தைகளைக் கட்டித் தழுவ வேண்டும்' என்ற ஆசை அவனை உந்தியது. தடுக்கவே முடியாது போல் தோன்றியது. அவன் பின்னும் பெருமூச்சு விட்டான். அப்போது அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. 'சொந்தப் பிள்ளைகளாக இருந்தால்தான் தொட வேண்டுமா? தழுவலாமா? அயலார் பிள்ளையானால் என்ன? எடுப்பதற்கும், அணைப்பதற்கும் தடை ஏது?' என்ற நினைவு தோன்றியதோ இல்லையோ, மெல்ல அந்தக் குழந்தைகளிடம் நகர்ந்தான். 'உன்னை இழந்து விடாதே!' என்று அவன் அறிவு எச்சரித்தது. உணர்ச்சியோ உந்தியது. குழந்தைகளை அணுகினான்; எடுத்தான்; தன்னுடைய வீரப் புயத்தில் அணைத்துக் கொண்டான்.

புக்கு எடுத்து, வீரப் புயத்து அணையா.

[அணையா-அணைத்து]

இதுவரையிலும் அவனுடைய அறிவு அவனுக்குத் துணையாக இருந்தது; உணர்ச்சியைப் பிறர் உணராதபடி அடக்கிக் கொண்டான். மக்களைக் கண்ட போதே உணர்வு கொந்தளித்தது; அதை அடக்கினான். மனம் நடுங்கியது; அதை ஒருவாறு அடக்கப் பார்த்தான். வெய்துயிர்ப்பு வந்தது. பின்பு அணைக்க வேண்டும் என்னும் ஆசை தோன்றியது. அறிவு ஒரு வகையில் சமாதானம் செய்து கொண்டது. உணர்ச்சி உந்தப் புக்கு எடுத்து வீரப் புயத்து அணைத்துக் கொண்டான்.

மக்களைமுன் காணா,
மனம் நடுங்கா, வெய்துயிராப்
புக்கு, எடுத்து, வீரப் புயத்து அணையா.



"GOKUL"
SANTOL
TOILET POWDER
டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

அதுவரையில் அறிவு வேலை செய்தது. குழந்தைகளை அணைத்த அந்தப் போதில் அது நழுவிவிட்டது. வாகுகன் மறைந்தான்; உருவத்திலே அல்ல; உள்ளத்திலேதான். உணர்ச்சி விஞ்சியது; நளனாகிவிட்டான். அந்தக் குழந்தைகளைக் கட்டிக்கொண்டு 'ஓ'வென்று அழவேண்டும் போல் இருந்தது.

நிலநடுக்கத்துக்கு முன் பூமிக்குள் பலவகையான மாற்றங்கள் உண்டாகுமாம். பிறகு ஒருநாள் திடீரென்று பூமி பிளக்குமாம்; எரிமலை வெடிக்குமாம். அந்த நிலையில் நின்றான் நளன். இப்போது எரிமலை வெடித்து விட்டது; உணர்ச்சி பொங்கி விட்டது. "குழந்தைகளே! நீங்கள் என் குழந்தைகளல்லவா?" என்று வாய்விட்டுக் கதறி விட்டான்.

புக்கெடுத்து வீரப் புயத்துஅணையா —
"மக்காள் நீர்
என் மக்கள்!—"

நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து வந்து விட்டது. இதுவரையில் அறிவு கட்டிக் காத்த உணர்ச்சி நழுவி வெளிப்பட்டு விட்டது. ஒரு கணம் இந்த உணர்ச்சி வெளிப்பட்டு, அமைதியிலே, எல்லையில்லா அநுபவ மோனத்திலே, அறிவு நழுவ உணர்ச்சிக் கடலில் ஆழ்ந்து வாத்சல்ய அமுதை நுகர்ந்து தன்னை மறந்த லயத்திலே நளன் நின்றான்; ஒரே கணந்தான்.

அடுத்த கணத்தில் அறிவு விழித்துக் கொண்டது. 'ஆ! என்ன காரியம் பண்ணி விட்டோம்! நம்முடைய உறுதியைத் தளர்த்தி விட்டோமே! உணர்ச்சிக்கு இடம் கொடுத்து விட்டோமே!' என்று தவித்தான்.

* * *

இங்கே ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி விட்டு நளனிடம் வரலாம் என்று எண்ணுகிறேன்.

சென்னையில் மிகச் சிறந்த வெள்ளைக்காரப் பாரிஸ்டர் ஒருவர் இருந்தார். அவர் எடுத்துக் கொண்ட வழக்கிலெல்லாம் வெற்றியையே காண்பார்.

ஒருமுறை அவர் எங்கோ வெளியூர் சென்று சில நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு வந்தவர் அன்றே நீதி மன்றத்துக்குப் போக வேண்டியிருந்தது. கட்டுகளைப் பார்க்க நேரம் இல்லை. போய் விட்டார். வழக்கில் வாதாடவும் தொடங்கினார். அடுக்கடுக்காக நியாயங்களை எடுத்துச் சொல்லி வந்தார்.

அவருடைய கட்சிக்காரர் வயிற்றில் புளியைக் கரைத்தது. அந்தத் துரையின் உதவியாளர்கள் அவர் பேச்சைக் கேட்டுக் கையைப் பிசைந்தனர். தம் திறமை புலப்படும்படி அவர் வாதம் நிகழ்த்தினார். ஆனால் எதிர்க்கட்சிக்கு நலம் செய்யும் முறையில் அவர் வாதிட்டார். இன்ன கட்சிக்காக வாதிடுகிறோம் என்ற நினைப்பே அவருக்கு இல்லை.

அப்போது சிறிதே தம் துணையாளரை நோக்கித் திரும்பியபோது, "நம் கட்சிக்கு எதிர்க்கட்சியார் நியாயங்களல்லவா இவை?" என்று ஒருவர் குறிப்பித்தார். தாம் அதுவரையிற் பேசியவை தம் கட்சிக்கு விரோதமானவை என்பதை அவர் உணர்ந்து கொண்டார். மகாமேதையாதலால் அவர் திடுக்கிடவில்லை. "கோர்ட்டாரவர்களே! இதுவரையில் கூறிய நியாயங்களை என்னுடைய எதிர்க்கட்சி நண்பர் எடுத்துக் கூறலாம். ஆனால்—" என்று தொடங்கித் தாம் முன்பு கூறியவற்றை ஒவ்வொன்றாக எதிர்த்துத் தகர்த்தாராம். ஒரு கணத்தில் திசை மாற்றும் ஆற்றல் அவருக்கு இருந்தது.

உணர்ச்சியுள் மூழ்கி ஒரு கணம் அறிவை நழுவ விட்ட நளன் விழித்துக் கொண்டான்; தான் பெரிய பிழையைச் செய்து விட்டதை உணர்ந்தான். ஆயினும் அறிவாற்றல் உடையவனல்லவா? முன் நடித்த நாடகத்தைத் தொடர்ந்து திசையை மாற்றினான்.

"மக்காள்! நீர் என்மக்கள்"

என்று சொல்லிக் கண்ணை மூடித் தன்னை மறந்து நின்றவன் இப்போது விழித்துக் கொண்டு, ஒரே ஒரு சொல்லைச் சேர்த்தான். திசை அடியோடு மாறி விட்டது.

"மக்காள்! நீர் என்மக்கள் போல்கின்றீர்!"

என்று கூறிச் சமாளித்துக் கொண்டான்; அவனுடைய அறிவாற்றல் இப்போது அந்த ஒரு சொல்லினால், திருட்டை மூடி மறைத்து விட்டது. இனி நாடகத்தை முடிக்க வேண்டுமே!

"யார் மக்கள்?" என்றுரைத்தான்.

"நீங்கள் யாருடைய குழந்தைகள்?" என்ற கேள்வியைக் கேட்டான் நளன். குழந்தைகளைக் கண்டு அணைத்து உருகிய பிறகு கேட்கிற கேள்வியா இது? யாரையாவது கண்டால், "நீங்கள் யார்?" என்று முதலில் கேட்பதுதான் முறை. இங்கேயோ, நளனுக்கு அந்தக் குழந்தைகளைத் தெரியாமல் இருந்தால்தானே கேட்க வேண்டும்? ஆதலின் முதலிலே கேட்க வேண்டிய கேள்வியை அவன் கேட்கவில்லை.

இப்போது உணர்ச்சியை அடக்கி ஒரு வகையாக நிலை கொண்ட போது, 'அடடா! இவர்களை யாரென்றே கேட்கவில்லையே!' என்ற நினைவு வந்து, முதலிலே கேட்க வேண்டிய கேள்வியை, அறிவும் உணர்ச்சியும் போராடிய போராட்டத்தின் முடிவிலே கேட்டான். கண்டு, பெருமூச்செறிந்து, தழுவி, உள்ளம் வெளிப்பட்ட பிறகு, 'அடாடா! சோடை போய்விட்டோமே! சரியாக நடிக்கத் தெரியவில்லையே!' என்று அறிந்தபோது, சாமர்த்தியமாக, "என் மக்கள் போல்கின்றீர்" என்று கூறினவன், மேலே சம்பிரதாயத்தை நிறைவேற்ற, "யார் மக்கள்?" என்று கேட்டான்.

புகழேந்தி பாடிய நளவெண்பாவிலே இந்தக் காட்சி வருகிறது. காட்சியைச் சொல்லும் பாட்டு முழுமையும் வருமாறு:

மக்களைமுன் காணா,
மனம்நடுங்கா. வெய்துயிராப்
புக்கெடுத்து. வீரப்
புயத்தணையா — 'மக்காள்நீர்
என்மக்கள் — போல்கின்றீர்;
யார்மக்கள்?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

புகழேந்தி இங்கே நளனை, "வன்மக் களியானை மன்" என்று குறிக்கிறார். 'மதத்தினால் வெறிகொண்ட யானையை அடக்கியாளும் மன்னவன்' என்பது அதன் பொருள். உண்மையில் இப்போது குதிரையை அடக்கி ஓட்டும் வாகுகனாகத்தான் அவன் இருந்தான். அவனை இவ்வாறு சொல்வதில் பொருத்தம் இருக்கிறதா?

ஆம், இருக்கிறது. இப்போது நளன் உள்ளத்தே அறிவும் உணர்ச்சியும் பெரிய போர்க்களத்தையே உண்டாக்கி விட்டன. உணர்ச்சி மீதூர்ந்து வென்றது. ஆனால் இறுதியில் அறிவு ஒருவாறு உணர்வை அடக்கிச் சமாளித்து விட்டது. பொங்கு மதப் பெருங்களிற்றை அடக்கி ஆளும் திறலையுடைய நளன், இப்போது பொங்கிய உணர்ச்சியை அடக்கி நிலைகொண்டான். இரண்டுக்கும் பொருத்தம் இருக்கிறதல்லவா?


பாட்டில் உள்ள ஒவ்வொரு சொல்லும் நாடகத்தின் தனித்தனிக் காட்சி போல அநுபவிக்க வேண்டியது. 'மக்காள் நீர் என் மக்கள்' என்ற இடத்தில் நாடகத்தின் இடைவேளையே வந்து விடுகிறது. அங்கே பெரிய இடைவெளி. பிறகு தொடர்ச்சி வருகிறது. "போல்கின்றீர்" என்றது முதல் அறிவு வந்து நிற்கிறது.

சொல்லுக்குச் சொல் சுவையேற வைக்கும் இந்தப் பாட்டில் புறக்காட்சி ஒன்றும் மிகுதியாக இல்லை. ஆனால் அகக் காட்சி, உள்ளக் குமுறலின் வேகம், உணர்ச்சி வெள்ளத்தின் அலையோட்டம் நன்றாகப் புலனாகின்றன.

தமயந்தி அவன்தான் நளன் என்று தெரிந்து கொண்டாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

எஞ்சின் தொல்லை

சில வருஷங்களுக்கு முன்னால் எங்கள் ஊருக்கு ''சந்தோஷ சாகரம்'' என்று பெயர்கொண்ட ஒரு கண்காட்சி வந்தது. இரவோடு இரவாக எங்கள் ஊர் விளையாட்டு மைதானம் விளம்பரப் படுதாக்கள், காற்றில் படபடக்கும் நீண்ட கொடிகள் வண்ண வண்ண விளக்குகள், இவற்றால் ஜொலிக்க ஆரம்பித்து விட்டது. அந்த மாவட்டத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும் கண்காட்சியைக் காணக் கூட்டம் கூட்டமாக மக்கள் வந்து திரண்டார்கள். கண்காட்சியைத் திறந்த ஒரு வாரத்துக் கெல்லாம் நாளைக்கு ஐந்நூறு ரூபாய் வரையில்





'கேட்'டிலேயே வசூலிக்க ஆரம்பித்து விட்டார்கள். ''சந்தோஷ சாகரம்'' பற்பல விதமான வேடிக்கைகளையும், சூதாட்டங்களையும் இதர காட்சிகளையும் எங்களுக்கு அளித்தது. ஒவ்வொரு காட்சியும் நடைபெறும் இடத்தில் இரண்டணாவைக் கொடுத்து விட்டால், வித்தைகள் புரியும் வெளிகளிலிருந்து, சாவுக் கிணற்றில் வளைந்து வளைந்து வரும் மோட்டார் சைக்கிள் மன்னர்கள் வரையில் எதை வேண்டுமானாலும் பார்க்கலாம். இவற்றைத் தவிர லாட்டரிச் சீட்டுகளும் குறி பார்த்துச் சுடும் இடங்களும் இருந்தன. இவற்றில் ஒரு அணாவைக் கொடுத்து அதிர்ஷ்டம் இருந்தால் நூறு ரூபாய் ஜயிக்கும் சந்தர்ப்பம் எப்போதும் உண்டு.

இந்தக் கண்காட்சியின் ஒரு குறிப்பிட்ட 'மூலை எல்லோருக்கும் பிடித்தமானதாக இருந்தது. இங்கே எட்டணாக் கொடுத்து ஒரு டிக்கெட்டு வாங்கிவிட்டால் விதம் விதமான பொருள்களைப் பெறும் வாய்ப்பு இருந்தது. 'பின் குஷன்'கள், தையல் இயந்திரங்கள், காமிராக்கள், ஏன், ஒரு ரோட் எஞ்சினைக் கூடப் பெற்றுக் கொள்ளலாம். ஒருநாள் மாலை டிக்கெட்டுகளைக் குலுக்கிப் போட்டு ஒன்றைப் பொறுக்கி எடுத்தார்கள். நெ. 1005; அந்த டிக்கெட்டின் மற்றொரு பாதி என்னிடம் இருந்தது. எனக்குச் சொந்தமாகி விட்ட பொருள்களின் பட்டியலை மேலெழுந்தவாரியாகப் பார்த்தேன்; அவற்றில் அந்த ரோட் எஞ்சினும் ஒன்று! பரிசுப் பொருள்களில் அந்த ரோட் எஞ்சினும் எப்படி வந்து சேர்ந்தது என்று என்னைக் கேட்காதீர்கள். அதுதான் எனக்கும் தெரியவில்லை. அதனால் உங்களுக்கும் சொல்ல முடியாது.

நான் திகைத்துப் போய் நின்றேன். ஊர் ஜனங்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு ஏதோ விநோதமான பிராணியைப் பார்ப்பது போலக் கண் கொட்டாமல் பார்த்தார்கள். ''ரோட் எஞ்சினுக்குச் சொந்தக்காரனுமே, நல்ல வேடிக்கை!'' என்று சிலர் முணுமுணுத்துவிட்டு அடக்க முடியாமல் சிரித்தார்கள்.

குறுகிய காலத் தவணையில் வீட்டுக்குத் தூக்கிக் கொண்டு போகக் கூடிய பரிசாக இல்லை அது. அதை அங்கிருந்து எடுத்துச் செல்ல உதவுவாறு என்று கண்காட்சியின் சொந்தக்காரனைக் கேட்டேன். அவன் பதில் பேசாமல் ஒரு 'நோட்டீலை'ச் சுட்டிக் காண்பித்தான். வெற்றி பெற்றவர்களெல்லாம் பரிசுப் பொருள்களை உடனுக்குடன் தங்கள் சொந்த முயற்சியினால் அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று அது உத்தர விட்டது. இருந்தபோதிலும் என் விஷயத்தில் அவர்கள் விதி விலக்காகத் தான் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. கண்காட்சி முடியும் வரையில் ரோட் எஞ்சினை விளையாட்டு மைதானத்திலேயே





வைத்திருக்க ஒப்புக் கொண்டார்கள். அதன் பிறகு அதை எடுத்துச் செல்ல நானே தேவையான ஏற்பாடுகளைச்செய்து கொள்ள வேண்டியதுதான். ரோட் எஞ்சினுக்கு ஒரு டிரைவரைக் கண்டுபிடித்துத் தர முடியுமா என்று கண்காட்சியின் சொந்தக்காரனைக் கேட்டபோது, அவன் புன்னகை புரிந்தான்: ''அதை இங்கே கொண்டு வந்து சேர்த்த ஆசாமிக்கு அவன் செய்த வேலைக்காக நூறு ரூபாயும் நாளைக்கு ஐந்து ரூபாய் 'பேட்டா'வும் நான் கொடுக்க வேண்டியிருந்தது. அவனை அனுப்பிவிட்டு, லாட்டரியில் இது யாரிடமும் போய்ச் சேரவில்லையானால் அதன் தலைவிதிப்படி நடக்கட்டும் என்று இங்கேயே விட்டு விட்டுப் போய்விடுவது என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டேன். கண்காட்சியில் ஒரு புதுமையாக இருக்கட்டுமே என்று கொண்டு வந்தேன். அது எவ்வளவு தொந்தரவு கொடுக்க முடியும் என்பதை நிரூபித்து விட்டது, கடவுளே!''

''ஏதாவது ஒரு நகரசபைக்கு அதை விற்றுவிட முடியாதா?'' என்று கபடமில்லாமல் கேட்டேன் நான். அவன் குபீரென்று சிரித்து விட்டான். ''கண்காட்சிக்காரனாக இருந்து நகரசபைகளுடன் நான் பட்டிருக்கும் அவதி போதும். நானாக இருந்தால் அந்த வழிக்கே போக மாட்டேன்.''


என் நண்பர்களும் என் நலனைப் பேணும் அன்பர்களும் நான் புதிதாக அடைந்துள்ள பொருளைக் குறித்துப் பாராட்டச் சாரி சாரியாக வந்தார்கள். ஒரு ரோட் எஞ்சினுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பது யாருக்கும் நிச்சயமாகத் தெரியவில்லை. இருப்பினும் அதில் நிறையப் பணம் முடங்கிக் கிடக்கிறது என்று மட்டும் அவர்கள் உணர்ந்தார்கள். காயலான் கடைக்காரனிடம் விற்றாலும் இரும்புக்காகவே சில ஆயிரங்கள் கிடைக்கும் என்று சில நண்பர்கள் ஆணித்தரமாகச் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் என்னுடைய ரோட் எஞ்சினைப் பார்க்க விளையாட்டு மைதானத்துக்கு ஒரு முறை சென்று வந்தேன். அதை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. பளபளக்கும் அதன் வெண்கலப் பகுதிகளிடம் அன்பு கொண்டேன். அதன் அருகே நின்று ஆசையுடன் தட்டிக்கொடுத்தேன். அதைச் சுற்றிச் சுற்றி வந்தேன். கண்காட்சி முடிந்த பிறகுதான் தினமும் வீட்டுக்குத் திரும்பினேன். நான் ஒரு ஏழை. என்னுடைய கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு வழியாக முடிவுகாலம் வந்துவிட்டது என்று நினைத்தேன். என்ன மடமை! என்னுடைய கஷ்டங்களெல்லாம் அப்போதுதான் ஆரம்பமாகி யிருக்கின்றன என்று நான் சற்றும் ஊகிக்கவில்லை.

கண்காட்சி முடிந்து அதன் சொந்தக்காரன் மூட்டை கட்டியதும், நகரசபையிலிருந்து என்னுடைய ரோட் எஞ்சினைக் கவனிக்கும்படி ஒரு நோட்டீஸ் வந்தது. மறுநாள் அங்கே சென்றபோது, எல்லோரும் கைவிட்டுப் போய்விட்டது போல் சுற்றிலும் ஒருவருமின்றி தனித்துக் கிடந்தது அது. தரையில் கந்தலான கொடிகளும் கிழிந்து போன அலங்காரக் காகிதங்களும் குப்பையாகக் கிடந்தன. எஞ்சினை அது இருந்த இடத்திலேயே விட்டு விட்டுக் கண்காட்சியின் சொந்தக்காரன் போய்விட்டான். எந்த இடத்திலும் அது பத்திரமாகத்தானே இருக்கும்!

அதை என்ன செய்வது என்று தெரியாமல் சில நாட்கள் சும்மா விட்டு விட்டேன். நகரசபையிலிருந்து எனக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. இஞ்சினை மைதானத்திலிருந்து உடனே அப்புறப்படுத்த வேண்டுமென்றும் இல்லாவிட்டால் விளையாட்டு மைதானத்தில் அது இருப்பதற்காக வாடகை வசூல் செய்வார்கள் என்றும் உத்தரவில் கண்டிருந்தது. ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, வாடகை கொடுக்க ஒப்புக்கொண்டேன். அடுத்த மூன்று மாதங்களுக்கு மாதம் பத்து ரூபாய் வீதம் கட்டினேன். அன்பு மிக்க ஐயன்மீர், நானோ ஏழை. நானும் என் மனைவியும் வசித்து வந்த வீட்டுக்கே மாதம் நாலு ரூபாய்தான் கொடுத்தேன். ரோட் இஞ்சினுக்காக மாதம் பத்து ரூபாய் கட்டும் என்னுடைய நப்பாசையைப் பாருங்கள்! என்னுடைய குடும்ப பட்ஜெட்டின் பெரும்பகுதியை அது அடித்துக் கொண்டு போயிற்று. என் மனைவியின் ஓரிரண்டு நகைகளை அடமானம் வைக்க வேண்டியதாயிற்று. பயங்கரமான என் சொத்தை என்ன செய்யப் போகிறேன் என்று என் மனைவி தினந்தோறும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஊரில் மேலும் ஜோராக நடந்து கண்ணில் தென்பட்டவர்களிடமெல்லாம் அதை விலைக்குக் கொடுத்து விடுவதாகச் சொன்னேன். உள்ளூர் 'கிளப்' காரியதரிசி அதை வாங்கிக் கொள்வதில் சிரத்தை காட்டலாம் என்று யாரோ அபிப்பிராயப் பட்டார்கள். அவரை அணுகியபோது சிரித்துவிட்டு, ரோட் இஞ்சினை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்யவேண்டுமென்று கேட்டார். ''உமக்காக அதன் விலையைக் குறைத்துக் கொண்டு தள்ளி விடுகிறேன். உங்கள் இடம்தான் ஒரு 'டென்னிஸ் கோர்ட்' இருக்கிறதே. தினமும் காலையில் அதை அழுத்திச் சீர்ப்படுத்த எஞ்சினை உபயோகிக்கலாமே'' என்று ஆரம்பித்தேன். அவர் புன்னகை புரிவதைப் பார்க்கும் முன்னரே நான் சொல்வது முட்டாள்தனம் என்று எனக்கே தெரிந்து விட்டது. அடுத்தாற்போல் யாரோ யோசனை சொன்னார்கள்: ''நகரசபைத் தலைவரைப் போய்ப் பார், நகரசபைக்காக அவர் அதை ஒருவேளை வாங்கலாம் என்று. மிகுந்த மனக்கிலேசத்துடன் நகரசபை ஆபீசுக்கு ஒருநாள் போனேன். கோட்டுப் பொத்தான்களை யெல்லாம் சரியாகப் போட்டுக் கொண்டே தலைவரது அறைக்குள் நுழைந்து, வந்த காரியத்தைச் சொன்னேன். ரோட் எஞ்சினின் விலையில் தள்ளுபடி செய்து கொடுத்துவிடத் தயாராக இருந்தேன். நகரசபையின் கடமைகள், இந்தத் தலைவரின் ஆட்சிக் காலம், ஒரு ரோட் எஞ்சினைச் சொந்தமாக்கிக் கொள்வதின் அவசியம் இவற்றைப் பற்றி, காரசாரமாக ஒரு பிரசங்கம் செய்தேன். ஆனால் அவரிடம் பேசி முடிப்பதற்கு முன்பாகவே ஏதாவது ஒரு குழந்தை தெருவோரத்தில் வைத்துக் கொண்டு விளையாட அதை விற்று விடுவது இவரிடம் விற்பதை விடச் சுலபம் என்பது தெரிந்து விட்டது.

விளையாட்டு மைதானத்தில் இந்த ரோட் எஞ்சினை வைத்துப் பாதுகாத்து வருவதால் திவாலாகி விடும் நிலைக்கு என்னை நானே கொண்டு வந்து கொண்டிருந்தேன். என்றாவது ஒருநாள் எனக்கு ரொக்கமாகப் பணம் வரும், இப்போது நான் படும் அவஸ்தைகளையும் கடனையும் அது சரிக்கட்டி விடும் என்று உண்மையாகவே எதிர்பார்த்தேன். ஒரு கால்நடைக் கண்காட்சி நடைபெற

ஆர். கே. நாராயணன்



ஏற்பாடுகள் நடந்தபோது புதிய சிக்கல்கள் ஏற்பட்டன. கண்காட்சி மைதானத்தில்தான் நடைபெற இருந்தது. ரோட் எஞ்சினை அங்கிருந்து அப்புறப்படுத்த எனக்கு இருபத்திநாலு மணி நேரம் அவகாசம் கொடுத்தார்கள். இன்னும் ஒரு வாரத்தில் ஆரம்பமாகவிருந்தது கண்காட்சி. அதைச் சேர்ந்தவர்களில் சிலர் முன்கூட்டியே வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தடங்கலாகக் குறுக்கே நின்ற ரோட் எஞ்சினை அகற்ற வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தார்கள். நான் நம்பிக்கை இழந்து விட்டேன். ஐம்பது மைல் சுற்று வட்டாரத்தில் ரோட் எஞ்சினைப் பற்றி ஏதாவது அறிந்தவர்கள் ஒருவர் கூட இல்லை. அந்தப் பக்கமாகச் சென்ற ஒவ்வொரு பஸ் டிரைவரிடமும் எனக்கு உதவி புரியுமாறு குழைந்து கெஞ்சினேன், பலனில்லை. மெயில் இஞ்சின் டிரைவரிடம் ஒரு வார்த்தை சொல்லி வைக்கக் கோரி ரயில்வே ஸ்டேஷன்மாஸ்டரைக் கூட அணுகினேன். ஆனால் இஞ்சின் டிரைவர் தன்னுடைய இஞ்சினைக் கவனிக்க வேண்டி விருப்பதையும் யாருக்காகவும் வழியில் உள்ள ஒரு ஸ்டேஷனில் இறங்கி விடுவது பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாதென்றும் சுட்டிக் காட்டினான். இதற்கிடையில் நகர சபை அதை வெளியேற்றுமாறு என்னை வற்புறுத்திக் கொண்டிருந்தது. நான் யோசித்துப் பார்த்தேன். உள்ளூர்க் கோயில் அர்ச்சகரைப் போய்ப் பார்த்து அவரது அனுதாபத்தைப் பெற்று விட்டேன். கோயில் யானையை மனமுவந்து எனக்கு உதவினார் அவர். ரோட் எஞ்சினைப் பின்புறமிருந்து தள்ள ஐம்பது கூலிகளையும் அமர்த்தினேன். என்னிடமிருந்த ஆஸ்தியை யெல்லாம் இது கரைத்து விட்டது என்று நீங்கள் நிச்சயம் நம்பலாம். கூலிகள் தலைக்கு எட்டணா வேண்டுமென்று கேட்டார்கள். கோயில் யானை ஒரு நாளைக்கு ஏழு ரூபாய்க்கு வழி வைத்தது. அதைத்தவிர ஒருவேளை உணவை நான் அதற்குக் கொடுக்க வேண்டியதா யிருந்தது. விளையாட்டு மைதானத்தி லிருந்து ரோட் எஞ்சினை அப்புறப்படுத்திப் பிறகு சாலை வழியாக அரை பர்லாங்குக்கு அப்பாலுள்ள ஒரு வயல் வெளிக்குத் தள்ளிக் கொண்டு போகவேண்டு மென்பது என்னுடைய திட்டம். அந்த வயல் என் நண்பன் ஒருவனுக்குச் சொந்தம். அங்கே இரண்டு மாதம் ரோட் எஞ்சினை நான் வைத்திருந்தால் அவன் பொருட்படுத்த மாட்டான். அதற்குள் சென்னைக்குச் சென்று அதை வாங்க ஒரு ஆசாமியைக் கண்டுபிடித்து விடலாம்.

• ஜோஸப் என்ற ஒருவனையும் நான் வேலைக்கு எடுத்துக் கொண்டேன். வேலையை இழந்த பஸ் டிரைவர் அவன். ரோட் எஞ்சினைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றாலும் அதை எப்படியாவது நகரும்படி செய்து விட்டால் தேவையான பக்கம் திருப்பித் தள்ளலும் முடியும் என்றான்.

அற்புதமான காட்சி அது. தடித்த கயிறுகளால் ரோட் எஞ்சினில் கோயில் யானை பூட்டியிருக்க, ஐம்பது மனிதர்கள் பின்னாலிருந்து தீர்மானத்துடன் தள்ள, என்னுடைய நண்பன் ஜோஸப் டிரைவரின் ஆசனத்தில் அமர்ந்திருந்தான். ஒரு பெரிய கூட்டம் சுற்றிலும் நின்று கட்டுக்கடங்காத குதூகலத்துடன் வேடிக்கை பார்த்தது. ரோட் எஞ்சின் நகர ஆரம்பித்தது. என்னுடைய வாழ்க்கையிலேயே மிக முக்கியமான விநாடி அதுதான் என்று எனக்குத் தோன்றியது. விளையாட்டு மைதானத்தை விட்டு அப்பால் வந்து தெருவை அடைந்ததும், விநோதமான வகையில் நடந்துகொள்ள ஆரம்பித்தது அது. வீதியில் நேராகச் செல்வதற்குப் பதிலாக இப்படியும் அப்படியுமாக வளைந்து வளைந்து செல்ல முற்பட்டது. யானை ஒரு பக்கமாக இழுக்க; எங்கு போகிறோம் என்பதைப் பற்றிய எண்ணமே கொஞ்சமும் இல்லாமல், ஜோஸப் சக்கரத்தைத் தன்னால் இயன்ற அளவுக்குச் சுற்றிக் கொண்டிருந்தான்.



பின்னும் ஐம்பது மனிதர்கள் எப்படியெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தாங்கள் இஷ்டப்பட்ட இடத்துக்குத் தள்ளினார்கள். இந்தக் குழப்பமான நிலையின் பயனாக எஞ்சின் எதிரே நின்ற சுவரிடம் ஓடிச் சென்று அதன் பெரும் பகுதியைப் பொடிப் பொடி யாக்கிவிட்டது. உடனே கூட்டத்திலிருந்து சந்தோஷ ஆரவாரம் கிளம்பியது. யானை கூட்டத்தினரின் நடவடிக்கை பிடிக்காமல் உரக்கப் பிளிறிக் கொண்டே கயிறுகளை இழுத்துத் துண்டித்துக்கொண்டு மதில் சுவரின் மற்றொரு பெரும் பகுதியை உதைத்துத் தள்ளியது. ஐம்பது மனிதர்களும் பயந்து ஓடிப் போனார்கள். கூட்டத்தினர் ஒரேயடியாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். யாரோ என்னை முகத்தில் அறைந்தார்கள்—மதில் சுவரின் சொந்தக்காரர் அவர்! போலீஸார் ஸ்தலத்துக்கு விஜயம் செய்து வீர நடைபோட்டு என்னை இழுத்துக்கொண்டு போனார்கள்.

'லாக்அப்'பிலிருந்து விடுதலையானதும், கீழ்க்கண்ட காரண காரியங்கள் எனக்காகக் காத்திருந்தன: (1) பல கஜங்கள் நீளமுள்ள மதில் சுவரை நான் எழுப்ப வேண்டும் (2) ஓடிப் போன ஐம்பது மனிதர்களுக்குக் கூலி தரவேண்டும். வேலையைச் செய்யாதபோது கூலி தர வேண்டியதன் அவசியம் என்னவென்பதை விவரிக்க மறுத்து விட்டார்கள். (3) மதில் சுவருக்கு மேலாக எஞ்சினை ஓட்டிச் சென்றதற்காக ஜோஸப்புக்குச் சம்பளம். (4) மதில் சுவரை உதைத்து இடித்துத் தள்ளியபோது யானையின் முழங்காலில் ஏற்பட்ட காயங்களுக்குப் போட்ட மருந்தின் கிரயம். இங்கேயும், கோயில் அதிகாரிகள் மதிலை இடித்துத் தள்ளுவதற்காக யானையை அமர்த்திக்கொள்ளவில்லையென்று நான் சொன்னதைக் கேட்க மறுத்தார்கள். (5) போதாக் குறைக்கு ரோட் எஞ்சினை இப்போது இருக்கும் இடத்திலிருந்து உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்ற உத்தரவு.

ஐயன்மீர்! நான் ஒரு ஏழை. இவற்றுக்கெல்லாம் பணம் தர எனக்கு வகை தெரியவில்லை. வீட்டுக்குப் போனதும் என் மனைவி கேட்டாள்: "எங்கு பார்த்தாலும் உங்களைப் பற்றியே பேச்சாக இருக்கிறதே, என்ன விஷயம்?" என்று. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு என்னுடைய கஷ்டங்களை யெல்லாம் அவளுக்கு விவரித்தேன். அவளுடைய நகைகளை நான் மறுபடியும் கேட்கிறேன் என்று அவள் ஊகமாக அறிந்து கொண்டாள். நிதானம் இழந்து கோபித்தாள். தன்னுடைய அப்பாவுக்குத் தன்னை வந்து அழைத்துக் கொண்டு போய் விடும்படி கடிதம் எழுதப் போவதாக அறிவித்தாள்.

என் மூளையே குழம்பி வேலை செய்ய மறுத்தது. தெருவில் என்னைப் பார்த்தவர்களெல்லாம் புன்னகை புரிந்தார்கள். என்னுடைய கிராமத்துக்கு ஏன் ஓடிப்போய்விடக்கூடாதென்று தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தேன். தன் அப்பாவுக்கு எழுதும்படி தூண்டிவிட்டு என் மனைவி வெளியேற வகை செய்வது என்று தீர்மானித்தேன். என்னுடைய திட்டங்கள் என்ன என்பது ஒரு ஆத்மாவுக்கும் தெரியப் போவதில்லை. கடன்காரர்களுக்கு சால்ஜாப்பு சொல்லிக்கொண்டே வந்து திடீரென்று ஒரு இரவு மறைந்தே போய் விடுவது!

இந்தச் சமயத்தில்தான் ஒரு சுவாமிஜியின் உருவத்தில் எதிர்பாராத நிவாரணம் வந்து சேர்ந்தது. ஒரு நாள் மாலை மேன்மை தங்கிய நகரசபைத் தலைவரின் ஆதரவில் எங்கள் சிறிய டவுன் ஹாலில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. இலவச நிகழ்ச்சியானதால் சபை நிறைந்திருந்தது. நான் காலரியில் உட்கார்ந்திருந்தேன். சுவாமிஜியின் யோக சாதனை



ஹாண்ட்லூம் ஹவுஸ்

9, ரட்டன் பஜார், சென்னை - 3

இன்றைய மோஸ்தர் இதுவே

221, தாதாபாய் நௌரோஜி ரோடு, பம்பாய் - 1 - 3, லிண்ட்ஸே ஸ்ட்ரீட், கல்கத்தா - 16

அயல்நாட்டு விற்பனையாளர்கள் : ஏடன் ★ கொழும்பு ★ கோலாலம்பூர் ★ சிங்கப்பூர் ★ பாங்காக்

தலைமை ஆபீஸ் : ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பாப்ரிக்ஸ் மார்கெடிங் கோ - ஆபரேடிவ் சொஸைடி லிட்.
ஜென்மபூமி — சேம்பர்ஸ், போர்ட் ஸ்ட்ரீட், பம்பாய் - 1

களை மந்திரத்தால் கட்டுண்டவர்களாகப் பார்த்தோம். கண்ணாடி டம்ளர்களைக் கடித்துத் திருப்தியுடன் சாப்பிட்டார்; முள் படுக்கையில் படுத்துக் கொண்டார்; எல்லாவிதமான அமிலங்களையும் தயங்காமல் வாயில் விட்டுக் கொப்பளித்துக் குடித்தார்; நெருப்பாகச் சுடும் இரும்புக் கம்பிகளை நக்கினார்; கூர்மையான ஆணிகளை மென்று விழுங்கினார்; தம் இருதயத் துடிப்பை நிறுத்திக் காட்டினார்; பூமிக்கடியில் புதையுண்டு கிடந்தார். நிலைவழிந்து அங்கே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தோம். இதெல்லாம் முடிந்த பிறகு அவர் எழுந்து ஒரு சொற்பொழிவாற்றினார். தம் ஆசான் மக்களுக்கு விடுத்த செய்தியை இத்தகைமயாகப் பரப்பி வருவதாகச் சொன்னார். நிகழ்ச்சி நிரலின் கடைசிக் கட்டத்துக்கு வந்து விட்டதாகவும் எல்லாவற்றையும்விட இதுவே தலைசிறந்தது என்றும் சொன்னார். நகரசபைத் தலைவரைப் பார்த்துக் கேட்டார்: "உங்களிடம் ஒரு ரோட் எஞ்சின் இருக்கிறதா? அதை என் மார்பின்மீது ஓட்டிக்கொள்ள விரும்புகிறேன்." தலைவர் குழப்பமுற்றவராகத் தோன்றினார். தம்மிடம் ரோட் எஞ்சின் இல்லை என்று ஒப்புக்கொள்ள வெட்கினார். சுவாமிஜியோ "கண்டிப்பாக எனக்கு ஒரு ரோட் எஞ்சின் வேண்டும்" என்று வற்புறுத்தினார்.

"டிரைவர் இல்லை" என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தார் நகரசபைத் தலைவர். "அதைப் பற்றிக் கவலை வேண்டாம். என் சிஷ்யன் எந்தவிதமான ரோட் எஞ்சினையும் கையாளப் பயின்றிருக்கிறான்" என்று பதிலளித்தார் சுவாமிஜி. இந்தச் சமயத்தில் காலரியில் நான் எழுந்து நின்றேன். "ரோட் எஞ்சினுக்கு அவரைக் கேட்காதீர்கள். என்னைக் கேளுங்கள்..." ஒரே விநாடியில் நான் மேடைமீது சென்றேன். நெருப்பைத் தின்னும் அவரைப் போலவே எனக்கும் முக்கியத்துவம் வந்துவிட்டது. எல்லாப் பக்கங்களிலும் எல்லோருக்கும் என்னைப் பற்றித் தெரிந்திருந்தது எனக்குத் திருப்தியளித்தது. நகரசபைத் தலைவருக்கு முக்கியத்துவம் போய் விட்டது.

எஞ்சினை நான் கொடுத்து உதவுவதற்குப் பதிலாக சுவாமிஜி அதை நான் விரும்பும் இடத்துக்கு ஓட்டிச் செல்வார். நன்கொடையாகக் கொஞ்சம் பணமும் கேட்க எனக்கு விருப்பமென்றாலும் அதை ஆன்மிகப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவரிடமிருந்து எதிர்பார்ப்பதில் பயனில்லை என்று நான் அறிவேன்.

சீக்கிரத்திலேயே விளையாட்டு மைதானத்துக்கு எதிரே இருந்த மதில் சுவருக்கு அருகே கூட்டம் முழுவதும் இருந்தது. சுவாமிஜியின் சிஷ்யன் எஞ்சின்களைக் கையாள்வதில் நிபுணன். சிறிது நேரத்தில் என்னுடைய எஞ்சின் புகையைக் கக்கிக் கொண்டு பெருமிதத்துடன் நின்றது. நன்றிப் பெருக்குடன் நான் பார்த்தேன். சுவாமிஜி இரண்டு தலையணைகளைக் கேட்டார். ஒன்றைத் தலைமாட்டிலும் மற்றதைக் கால்மாட்டிலும் வைக்கச் சொன்னார்.

எஞ்சினைத் தம் மீது எப்படி ஓட்ட வேண்டும் என்பது பற்றி விரிவாகக் கூறினார். தம் மார்பின் மீது சாக்கட்டியினால் குறியிட்டுச் சொன்னார்: "சரியாக இதன் மீதுதான் போகவேண்டும். ஒரு அங்குலம் இந்தப்புறம் அந்தப்புறம் போகக் கூடாது." எஞ்சின் சீறிக்கொண்டு காத்திருந்தது. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் நிமிரென்று வருத்தப்பட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டார்கள். இந்தக் காரியம் பயங்கரமானதாகத் தோன்றியது. சுவாமிஜி தலையணைகளில் படுத்துக்கொண்டு சொன்னார்: "நான் 'ஓம்' என்றதும் ஓட்டிக்கொண்டு போ." அவர் கண்களை மூடிக்கொண்டார். கூட்டத்தினர் மிகுந்த மனக் கிலேசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு மனோநிலையில் இந்தக் காட்சி முழுவதையும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். 'ஒரு வழியாக ரோட் எஞ்சின் நகர்ந்து செல்லப் போகிறது.'

இந்தத் தருணத்தில் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் கையில் ஒரு பழுப்பு நிற உறையுடன் கூட்டத்துக்குள் நுழைந்து வந்தார். கையை உயர்த்தி சுவாமிஜியின் சிஷ்யனை ஜாடை காட்டி அழைத்துச் சொன்னார்: "'இந்தக் காட்சியை மேலே நீங்கள் தொடர முடியாது' என்று சொல்ல வேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். எஞ்சின் அவர் மீது ஏறுவதைத் தடுக்க மாஜிஸ்டிரேட் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்." சுவாமிஜி எழுந்து நின்றார். ஏகப்பட்ட கலாட்டாவாக இருந்தது. சுவாமிஜி வெறுப்பும் கோபமும் அடைந்தார். "இதை நூறு இடங்களில் நான் ஏற்கனவே செய்திருக்கிறேன். யாரும் என்னை அதைப் பற்றிக் கேட்டதில்லை. என் இஷ்டப்படி நான் செய்வதை யாரும் தடுக்க முடியாது. யோக நிஷ்டையின் சக்தியை இந்த நாட்டு மக்களுக்கு நிரூபித்துக் காட்டவேண்டுமென்பது என் ஆசானின் கட்டளை. யார் என்னைக் கேட்க முடியும்?"

"ஒரு மாஜிஸ்டிரேட்டால் முடியும்" என்றார் போலீஸ் இன்ஸ்பெக்டர். உத்தரவைத் தூக்கிக் காண்பித்தார்.

"உங்களுக்கு வேலை இல்லையா? நீயோ அவரோ இந்தமாதிரியாகத் தலையிடுவானேன்?" என்றார் சுவாமிஜி.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. இது அவருடைய உத்தரவு. விஷத்தை விழுங்குவதையும் இந்த ரோடு எஞ்சினை உங்கள் மார்பின் மீது ஓட்டிக்கொள்வதையும் தவிர மற்ற எல்லாவற்றையும் நீங்கள் செய்ய அனுமதி அளிக்கிறார். எங்களுடைய அதிகார எல்லைக்கு அப்பால் உங்கள் விருப்பப்படி என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளப் பூரண சுதந்திரம் உண்டு."

"சாபக்கேடு நிறைந்த இந்த இடத்தை விட்டு இந்தநிமிஷமேபோகிறேன்" என்று சுவாமிஜி மிகுந்த கோபாவேசத்துடன் சொல்லிவிட்டு சிஷ்யன் பின்தொடரப் போகப் புறப்பட்டார். நான் சிஷ்யனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சொன்னேன்: "ரோட் எஞ்சினைக் கிளப்பினதுதான் கிளப்பினாய்; அதை அப்படியே அந்த வயலில் கொண்டு போய் விட்டுவிட்டுப் போகக்கூடாதா?" என்னை விழித்துப் பார்த்தான் அவன். கையை உதறித் தள்ளிவிட்டு முணுமுணுத்தான்: "என்னுடைய குரு இவ்வளவு துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது எஞ்சினை ஓட்டும்படி கேட்க உனக்கு என்ன துணிச்சல்?" அவன் போய் விட்டான். "அவர் மார்பின் மீது தவிர வேறு எங்கேயும் அதை ஓட்டிச் செல்ல உன்னால் முடியாது போலும்" என்று நான் முணுமுணுத்தேன்.

எஞ்சினையும் அதனால் ஏற்பட்ட கடன்களையும் அதன் தலைவிதியிடமே ஒப்படைத்து விட்டு, இரண்டொரு நாட்களில் ஊரை விட்டே போய்விட ஏற்பாடுகள் செய்தேன். இருந்தபோதிலும் எதிர்பாராத விதத்தில் இயற்கை என்னைக் காப்பாற்ற வந்தது. அந்த வருஷத்தில் ஏற்பட்ட பூகம்பத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். வட இந்தியாவில் பல நகரங்களையே அழித்துவிட்டது அது. எங்களுடைய ஊரிலும் கூட அதன் அதிர்ச்சி இருந்தது. அன்று இரவு நாங்கள் கட்டில்களிலிருந்து தூக்கி எறியப்பட்டோம்; கதவுகளும், ஜன்னல்களும் கடகடத்தன.

அடுத்த நாள் காலை ஊரைவிட்டுக் கிளம்புவதற்கு முன்னால் என்னுடைய ரோட் எஞ்சினைக் கடைசியாக ஒரு முறை பார்த்துவிடச் சென்றேன். என்னுடைய கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. எஞ்சினை அங்கே காணோம். சுற்று முற்றும் பார்த்துவிட்டு ஓடிப்போன குற்றவாளியைப் பிடிக்க முயல்வதுபோலச் சத்தமிட்டேன். தேடுவதற்கு கூட்டம் கூட்டமாகச் சென்று சுற்றி அலைந்தார்கள். அருகே இருந்த ஒரு பாழும் கிணற்றில் பின்புறம் மேல்நோக்கி இருக்க, எஞ்சின் தலைகுப்புற விழுந்து கிடப்பதைக் கண்டு பிடித்தார்கள். இதனால் ஏற்படும் புதிய சிக்கல்களிலிருந்து காப்பாற்றும்படி இறைவனைப் பிரார்த்தித்தேன். ஆனால் அந்த வீட்டின் சொந்தக்காரன் அந்தப் பக்கமாக வந்து நடந்ததைப் பார்த்ததும் மனமாரச் சிரித்து விட்டுச் சொன்னான்: "நீ எனக்கு ஒரு பெருபகாரம் செய்திருக்கிறாய். இந்தக் கிணற்றில் உள்ளதைப் போல அழுக்கான நீர் இந்த உலகத்திலேயே கிடையாது. நகரசபை அதை மூடிவிடும்படி எனக்கு வாரா வாரம் உத்தரவு அனுப்பிக் கொண்டேயிருந்தது. அதை மூடுவதற்கு ஆகும் செலவை நினைத்துப் பயந்து கொண்டிருந்தேன். ஆனால் உன் எஞ்சின், புட்டியைக் கார்க்கால் அடைப்பது போல அதற்குப் பொருத்தமாக இருக்கிறது. அதை அங்கேயே விட்டு வைத்து விடு."


"ஆனால் ஆனால்...."

"இந்த ஆனாலெல்லாம் வேண்டாம். உன்மீது சுமத்திய குற்றங்களை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். இடிந்துபோன அந்த மதில் சுவரையும் நானே கட்டிக் கொள்கிறேன். இதையுமா விட்டுவைக்க விரும்பவில்லை."

"அது போதவே போதாதே." அந்த எஞ்சினால் எனக்கு நேர்ந்த இன்னும் சில செலவுகளை நான் குறிப்பிட்டேன்.

அவன் எல்லாவற்றையும் கொடுத்து விட ஒப்புக் கொண்டான்.


சில மாதங்களுக்குப் பிறகு நான் மறுபடியும் அந்தப் பக்கமாகப் போன போது மதில் சுவருக்கு மேலாக எட்டிப் பார்த்தேன். கிணற்றின் வாய் கச்சிதமாகச் சிமிட்டியினால் மூடப்பட்டிருப்பதைக் கண்டேன். அளவற்ற நிம்மதியுடன் நீண்ட பெருமூச்சு விட்டேன்.



சிற்பச் சித்திரம் -1
கல்கி தீபாவளி மலர் 1959

சிற்பச் சித்திரம் - 2




சிற்பச் சித்திரம்-4
கல்கி தீபாவளி மலர் 1959 . . .


சிற்பச் சித்திரம் - 3



மோட்டார் சைகிளில் போகும் மனிதர்


ஆண்மையும் வெற்றியும் திகழ, மக்களின் மனத்தைக் கவருகிறார்.

எங்கு போனாலும் சரி இவர் மக்களின் கவனத்தைக் கவருகிறார். கம்பீரத்துடன் எல்லோரையும் தாண்டி முன்னேறுகிறார். இவர் போன்றவர்க்கே வெற்றி தயாராகக் காத்திருக்கிறது.

ராயல் என்பீல்ட்

படிப்படியாக தயாரிப்பவர்கள்,
என்பீல்ட் இந்தியா லிமிடெட்.
மதராஸ்-19.


பூரண விற்பனையாளர்கள் :
மதராஸ் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்.
மதுரை பெங்களூர் டில்லி.



காலத்தின் கோலம்

நான்கு வருஷங்களுக்குப் பின்னர் ஒரு மாத விடுமுறையில் குமரன் தனது கிராமமான ஆத்தூருக்கு வந்தான். ரயில்வே ஸ்டேஷனில் அவனை வரவேற்க ஒரு கும்பல் கூடியிருந்தது. தனது பெற்றோர்கள், தங்கை, தம்பி, மாமன், மாமன் மகள் பார்வதி, பாலியத் தோழர்கள் எல்லோரும் சேர்ந்து அவனைக் கண்டு ஆரவாரம் செய்தனர். தனது அன்னையின் கண்களில் நீர் ஒழுகுவதைக் கண்டு குமரன் கண்களும் கலங்கின. "எதற்காக இவ்வளவு கூட்டம்? நான் மந்திரியாகிவிட வில்லையே?" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

"நீதான் எங்களை மறந்து விட்டாய். நாங்கள் உன்னை மறப்போமா? நேற்றுத் தான் இதே வண்டியில் ஒரு மந்திரி போனார். எங்களில் ஒருவரும் வரவில்லை" என்றான் முத்து.



மற்றவர்கள் ஒன்றும் பேசவில்லை. "உனக்கு எங்களை மறந்து விட்டிருக்க எப்படித்தான் மனம் வந்ததோ?" என்று அன்னை இறுகத் தழுவிக் கொண்டாள். பார்வதி கடைக்கண்ணால் அவனைப் பார்த்துக்கொண்டு நிற்பதையும் கவனித்தான். எல்லோரையும் முறைப்படி வணங்கி விட்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

"வீட்டிலேயே பல் தேய்த்துக் காப்பி குடித்து விடு. வெந்நீர் போடுகிறேன். ஆற்றுத் தண்ணீர் உனக்குப் பழக்கமில்லை" என்றாள் தாய் காமாட்சி.

"இல்லை! தம்பி சுந்தரத்தோடு ஆற்றுக்குப் போய் வருகிறேன்" என்று புறப்பட்டு விட்டான். வீட்டுக்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் வெட்டாறு அழகாக ஓடியது. அதன் கரையிலுள்ள மாமரங்களைப் பார்த்துப் பரவசமானான். அதுவரையில் மௌனமாக இருந்த குமரன் திடீரென்று "தம்பி! ஊரை விட்டுப் போகாதே. நான் ஒருவன் பம்பாய்ச் சந்தியில் சிக்கிக் கஷ்டப் படுவது போதும்" என்று கூறினான்.

"ஏன் அண்ணா, அப்படிச் சொல்லுகிறாய்? நான் இங்கிருந்து என்ன செய்வது? இந்த வருஷம் பள்ளி இறுதிப் பரீட்சை கொடுத்திருக்கிறேன். தேறி விடுவேன்" என்றான் சுந்தரம்.

"கிராமத்திலிருந்து கஞ்சி குடித்தாலும் போதும். பெரிய பட்டணங்களில் அல்ப வேலையில் இருப்பது நரகத்தில் இருப்பது போல்தான்" என்று உபதேசித்தான் தமையன்.

"அப்படியானால் அதை விட்டு விட்டு, நீயும் இங்கேயே இருந்து விடு" என்று கூறினான் தம்பி.

"அது சாத்தியமில்லை; எனக்கு இங்கு என்ன வேலை செய்ய முடியும்? நமக்கு இருக்கும் ஐந்து ஏக்கராக்களைப் பாகம் செய்தால், ஒருவருக்குப் போதாது. ஏதோ ஒரு வேலையில் தொத்திக் கொண்டு பழகி விட்டேன். தாய் தந்தையரோடு நீயாவது இருந்து சுகமாக வாழ வேண்டும்" என்று உரைக்கும்போது குமரன் கண்களில் நீர் ததும்பியது; சுந்தரம் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

வீட்டுக்குத் திரும்பிக் காலைச் சிற்றுண்டி அருந்தியதும், குடும்பம் முழுவதும் அவனைச் சூழ்ந்து கொண்டு விட்டது. ஆனால் சிறிய குடும்பம்தான். தந்தை வேலன், தாய் காமாட்சி, அடுத்த ஊரில் கல்யாணமாயிருந்த மீனு, தம்பி சுந்தரம் இவர்களே அந்தக் குடும்பத்தின் உறுப்பினர்கள்.

"என்ன தம்பி! நாங்கள் இருப்பதையே மறந்து விட்டாயா? அல்லது எங்களைப் பார்க்கவே பிடிக்கவில்லையா? நான்கு வருஷங்களாக ஏன் இவ்விதம் அலட்சியம் செய்து விட்டாய்?" என்று தொடங்கினார் தந்தை.

"எங்களை மறந்தாலும் பரவாயில்லை. அந்தத் தாயில்லாப் பெண் பார்வதி எவ்வளவு காலம் காத்திருப்பாள்? நீயே காலையில் கண்டாயே. எவ்விதம் வளர்ந்திருக்கிறாள், பார்த்தாயா?" என்றாள் காமாட்சி.

"ஒருவேளை கிராமத்தார்களையே அண்ணனுக்குப் பிடிக்காமலிருக்கலாம்" என்றாள் மீனு புன்னகையுடன்.

குமரனுக்கு என்ன பதில் சொல்லுவது என்று தோன்றவில்லை. கஷ்டமாக இருப்பினும் உண்மையை உடனே கூறி விடுவதே நலம் என்று நிச்சயித்தான்.

"நீங்கள் எல்லோரும் சற்று அமைதியாக இருங்கள். எனக்குக் கிராமத்தில் வெறுப்புமில்லை. உங்கள் பேரில் கசப்புமில்லை. இவ்வளவு அழகான கிராமத்தையும், அன்பு நிறைந்த வாழ்க்கையையும் துறந்து, மனிதனுக்குத் தகாத ஜீவனம் செய்து வரும் வருத்தத்தாலேயே இங்கு வரவில்லை. ஒரு துணி மில்லில் குமாஸ்தா வேலை செய்கிறேன். அங்கு பணி செய்து வரும் தொழிலாளர்களின் தினசரிக் கணக்கை வைத்துக் கொள்ளுவதே எனது உத்தியோகம். சம்பளம், படி எல்லாம் சேர்த்து ரூ. 120 கொடுக்கிறார்கள். மூன்றாவது மாடியில் ஒரு அழுக்கறைக்கு ரூ. 22 வாடகை கொடுத்து வருகிறேன். உங்களுக்கு மாதம் ரூ. 20 அனுப்பி வருவதே பிரம்மப் பிரயத்தனமாக இருக்கிறது. இந்த நிலையில் என்னுடைய கல்யாணப் பேச்சை எடுப்பதே தவறு. எப்படியோ பிரம்மச்சாரியாகக் காலம் தள்ள விரும்புகிறேன்" என்று கூறி முடித்தான்.

சிறிது நேரத்துக்கு ஒருவரும் பேசவில்லை. பின்னர், "நீ வேலையை விட்டு விட்டுப் பார்வதியை மணந்து கொண்டு வீட்டிலேயே இருந்து விடு. கஞ்சியோ, கூழோ எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளுவோம்" என்றாள் காமாட்சி.

"இதென்ன யோசனை? நான் படுகிற பாடு போதாதா? படித்த பிள்ளைகள் கிராமத்தில் என்ன செய்வார்கள்? உழுவதற்கும் கொத்துவதற்கும் உடல்



க. சந்தானம்

வணங்குமா? மாப்பிள்ளையைப் பாருங்கள். அரைப் படிப்பில் நின்று விட்டார். இருக்கிறது மூன்று ஏக்கரா. எல்லா வேலைக்கும் கூலி கொடுத்தாக வேண்டியிருக்கிறது. எத்தனை காலம் கடன் வாங்கிப் பிழைக்க முடியும்?" என்றான் மீனு.

"எனக்கும் மீனு சொல்லுவதுதான் சரி என்று தோன்றுகிறது. நானும் இரண்டு மாதங்களாக வயல் வேலைசெய்யப் பார்க்கிறேன். ஒரு மணி மண் வெட்டியைக் கொண்டு வேலை செய்த பிறகு, இதையெல்லாம் விட்டு விட்டுப் பிச்சை வாங்குவதே மேல் என்று தோன்றுகிறது" என்று ஆமோதித்தான் சுந்தரம்.



தந்தை வேலனுக்குக் கோபம் வந்தது. ஆயினும் அடக்கிக் கொண்டு, "உங்களைப் படிக்க வைத்ததன் பலன் இதுதான். இந்தப் பாழான படிப்பை எதற்காகக் கொண்டு வந்தார்களோ? குமார்! நீ வேலையை வைத்துக் கொள், அல்லது விட்டுவிடு, எனக்குக் கவலையில்லை. பார்வதிக்குத் தாலி கட்டிவிட்டு உன் விருப்பம் போல் செய். நான் வாக்குக் கொடுத்துவிட்டேன். அந்தப் பெண்ணும் நான்கு வருஷங்களாகக் காத்துக் கொண்டிருக்கிறது. லக்ஷக்கணக்கான பேர்கள் குமாஸ்தா வேலை செய்யவில்லையா? எல்லோரும் பிரம்மச்சாரிகளாகவா இருக்கிறார்கள்? இனி எங்களுக்கு நீ பணம் அனுப்பவேண்டாம். பலவிதமாகப் பேசுவதில் பயனில்லை" என்று உறுதியாக முடித்து விட்டார். கூட்டம் கலைந்தது. ஊருக்குத் திரும்பி வந்தது தவறு என்று கூடக் குமரன் நினைத்தான்.

குமரன் திரும்பிப் போவதற்கு ஒரு வாரத்துக்கு முன் விவாகம் நடைபெற்றது. ஒரு வருஷத்துக்குத் தனது பெற்றோர்களோடு இருக்கும்படி பார்வதியிடம் மன்றாடினான். ஆனால் அவள் காது கொடுக்கவில்லை. "ராமனுடன் சீதை காட்டுக்குப் போனாள். உங்கள் பம்பாய் தண்டகாரண்யத்தை விடக் கொடியதா?" என்று வினவினாள்.

"ஆமாம். கொடியதுதான்" என்று பதிலளித்தான்.

"பரவாயில்லை. உங்களுடன் எதையும் சகிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாள்.

2

சென்னை ரயிலில் கூட்டம் அதிகமாக இருந்தது. குமரனுக்கும் பார்வதிக்கும் ஒரு மூலையில் உட்காருவதற்கு மட்டும் இடம் கிடைத்தது. பார்வதி இரவு பத்து மணி வரையில் கஷ்டப்பட்டு விழித்துக் கொண்டிருந்தாள். அதற்கு மேல் முடியவில்லை. தினம் எட்டு மணிக்குத் தூங்கிப் பழக்கமான பெண். என்ன செய்வாள்? அவள் நிலையைக் கண்டு காலடியில் ஓர் விரிப்பைப் போட்டுப் படுக்க வைத்தான் குமரன். உடனே நித்திரையில் ஆழ்ந்தவள் எழும்பூர் ஸ்டேஷன் சேரும் வரையில் கண் திறக்கவில்லை. இந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை வைத்துக் கொண்டு, பம்பாயில் என்ன செய்வதென்று கவலையில் மூழ்கியிருந்த குமரனுக்கோ தூக்கம் வரவில்லை.

பம்பாய் வண்டியிலும் உட்காரவே, இடம் கிடைத்தது. மற்றவர்கள் முன்னிலையில் கணவனோடு பேசுவதற்குப் பார்வதியின் நா எழவில்லை. அவன் சொல்லுவதற்கெல்லாம் தலையசைத்தும், கண்ணால் சைகை செய்தும் பதில் சொன்னாள். அதைக் கண்டு குமரன் சிரித்தபொழுது, பக்கத்தில் இருந்தவர்களும் புன்னகை புரிந்தனர். வெட்கத்தால் தலைகுனிந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்த வண்ணமாகவே நாள் முழுதும் உட்கார்ந்திருந்தாள். இரண்டு நாட்களாகக் குளிக்காமல் இருந்ததால், உடம்பெல்லாம் தினவெடுத்துத் தவித்தாள். சாப்பிட முடியவில்லை. ஆனால் குமரனைத் திருப்தி செய்வதற்குச் சாப்பிடுவதுபோல் பாவனை செய்து அவன் வாங்கிக் கொடுத்த பட்டைச் சாதத்தை வெளியில் போட்டு விட்டாள். மற்ற என்ன கஷ்டங்கள் இருப்பினும், ரயில் பிரயாணத்தில் ஒரு சுகம் இருக்கிறது. புதிய ஊர்கள், காட்சிகள், காலையிலும் மாலையிலும் குளிர்காற்று, ஸ்டேஷன்களில் கூச்சல்களும் பரபரப்பும் — இவைகளெல்லாம் பொழுது போக்குக்கு உதவுகின்றன. புதிதாக நீண்ட பிரயாணம் செய்யும் பார்வதிக்குச் சிறிதும் அலுக்கவில்லை.

முடிவில் பம்பாய் வந்து சேர்ந்தனர். பார்வதியை முதலில் இறக்கிவிட்டுத் தங்கள் சிறிய பெட்டியையும் படுக்கையையும் குமரன் எடுத்துக் கொண்டான். போர்ட்டர் கிடைக்கவில்லை. ஒருவன் வந்து இரண்டு ரூபாய் கேட்டு விட்டுப் போய்விட்டான். பார்வதி அவனிடமிருந்து பெட்டியைக் கேட்டாள். குமரன் மறுக்கவே, அவளுக்குத் தனது தவறுக்காக அவன் ஏதோ தண்டனை கொடுப்பதுபோல் தோன்றியது.


'என் பேரில் கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் உங்கள் இஷ்டப்படியே இருப்பேன்' என்றாள்.


குமரன் சிரித்துக் கொண்டே, 'இந்த ஊரில் பெண்கள் மூட்டை தூக்கிக் கொண்டு ஆண்கள் கை வீசிக்கொண்டு நடந்து போவது நாகரிகமில்லை. நீ பேசாமல் வா' என்றான். பார்வதி நம்பவில்லை. பிடிவாதம் செய்து படுக்கையை வாங்கிக் கொண்டாள்.

இருப்பிடம் சேர்ந்து மூன்று மாடிப் படிகளையும் ஏறிக் குமரனுடைய சிறிய அறையில் சேர்ந்ததும், பார்வதிக்குத் திகிலெடுத்தது. எங்கே பார்த்தாலும் புகை, அழுக்கு. ஜன்னலுக்கு எதிரில் ஐந்தாறு மாடிகளுள்ள வீடுகள். ஆனால் பறவைக் கூண்டு போன்ற அறைகள். அவைகளில் புழங்கும் ஜனங்களைப் பார்த்து அவளுக்கு அருவருப்பு உண்டாயிற்று. ஜன்னலெல்லாம் அழுக்குத் துணிகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் ரயில் வண்டி ஓயாமல் ஓடிக் கொண்டிருந்தது. சிறிது தூரத்தில் டிராம், பஸ் வண்டிகள், ஒரே சத்தம். நாள் முழுதும் இப்பேரொலியில் எப்படி வசிக்கிறார்கள்?

அவள் கண்களில் தோன்றும் எண்ணங்களைக் குமரன் எளிதில் உணர்ந்தான். 'நான் கூறியதை நீ நம்பவில்லை. பம்பாய் எப்படியிருக்கிறது பார்த்தாயா?' என்று கேட்டான்.

"பத்து நாட்களுக்குப் பிறகு சொல்லுகிறேன். சிறிது பொறுத்திருங்கள்" என்று மழுப்பினாள்.


இந்தியாவின்
சிறந்த தரத்தின்
சிம்ம கர்ஜனை...
Spinners of superior quality
Cotton & Staple fibre yarn
'pecialising in: 40s, 60s, 80s and 100s hanks. 34s Cone 20s Staple fibre
GRAMS: LION
PHONE: SULUR 7
SEKHAR
தி நரசிம்மா மில்ஸ் லிமிடெட்.
கண்ணம்பாளையம்.... சூலூர்.P.O....கோயமுத்தூர்..
மானேஜிங் பார்ட்னர்: V.L.வெங்கிடபதி..
வரதராஜா & கோ..4/267,அவனசி ரோட், கோயமுத்தூர்.



இருவரும் சேர்ந்து அறையைச் சுத்தம் செய்து, பல குடும்பங்களுக்குப் பொதுவான இடத்தில் காத்திருந்து ஸ்நானம் செய்துவிட்டுச் சமையலுக்கு ஏற்பாடு செய்தனர். குமரன் தனது கட்டிடத்துக்குக் கீழிருந்த கடையில் சாமான்கள் வாங்கப் போனான். பார்வதி பாத்திரங்களைச் சுத்தம் செய்து அடுப்பை மூட்டி உலை கொதிக்க வைத்தாள். அன்று சாப்பாடு முடிந்ததும், இருவரும் படுத்து மாலை வரையில் தூங்கி விட்டனர்.

எந்தப் புதிய சூழ்நிலைக்கும் மனிதன் எளிதில் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ளுகிறான். புருஷர்களை விட, இது பெண்களுக்குச் சுலபம். முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் தோன்றினாலும், சில நாட்களுக்குள் பார்வதிக்குப் பம்பாய் பழைய ஊராகி விட்டது. பக்கத்து அறைகளில் வசித்த பெண்களுடன் சிநேகம் செய்து கொண்டாள். அவர்கள் பேசும் குஜராத்தி, மராட்டி, ஹிந்தி பாஷைகளில் சில வார்த்தைகளை எளிதில் கற்றுக் கொண்டு, மீதிக்குச் சைகைகளாலும், சிரிப்பாலும் சமாளித்தாள். புருஷனுக்கு மிகவும் பரிவுடன் பணிவிடை செய்தாள். நாள் முழுதும் மில்லில் வேலை செய்துவிட்டு வரும்பொழுது, மாலையில் வீட்டுச் சாப்பாடும், மனைவியின் அன்பும் காத்திருப்பது குமரனுக்கும் திருப்தியாக இருந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன் மணம் புரிந்து அழைத்து வந்திருக்கலாமென்றுகூட எண்ணினான்.

விடுமுறை நாட்களில் இருவரும் டிராம் வண்டியில் ஏறிக்கொண்டு பம்பாயில் ஒரு மூலையிலிருந்து மற்றொரு கோடி வரையில் செல்லுவது வழக்கம். கடைகளையும், கட்டிடத்தையும் கண்டு பார்வதிக்கு அளவற்ற ஆனந்தம். ஒரு மாத முடிவில் இப்படிப் போய்க் கொண்டிருக்கும் பொழுது பார்வதி, 'அத்தான்! பம்பாய் எனக்குப் பிடித்து விட்டது. எப்பொழுதும் திருவாரூர்த் தேர் மாதிரி இருக்கிறது' என்றாள். குமரனும் புன்சிரிப்புடன், 'எனக்கு உன்னையும் பிடித்து விட்டது. ஆனால் பணம்தான் போதவில்லை' என்று சொன்னதும் பார்வதியின் குதூகலமெல்லாம் மறைந்தது. தான் ஏதாவது வீண்செலவு செய்வதாகக் கணவன் நினைக்கிறானோ என்று பயந்தாள். அவள் முகத்தின் மாறுதலைக் கண்ட குமரன், 'உன்னைக் குற்றம் சொல்லவில்லை. இதைவிடச் சிக்கனமாகக் குடித்தனம் செய்ய முடியாது. கவலைப்படாதே. எப்படியாவது சமாளித்துக் கொள்ளுவோம்' என்று சமாதானம் செய்தான்.

ஆனால், தன்னால் குடும்பச் செலவு அதிகமாகிறது என்ற எண்ணம் பார்வதியின் மனத்தில் உறுத்திக்கொண்டிருந்தது. பக்கத்து அறைகளில் இருந்த சில பெண்கள் கடைகளிலும், மில்களிலும் வேலை செய்து சம்பாதித்து வந்தனர். ஆனால் அதற்கு ஆங்கிலம் தெரிய வேண்டும். இல்லாவிட்டால் சாதாரணக் கூலி வேலை செய்ய வேண்டும். ஏன் செய்யக் கூடாது? கிராமத்தில் வயலில் இறங்கி நாற்று நடவில்லையா? களை பிடுங்கவில்லையா? என்று பல நாட்கள் ஆலோசித்து ஒருநாள் குமரன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது, 'எனக்கும் மில்லில் ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள்' என்றாள். குமரன் திடுக்கிட்டான். 'அந்த வேலையெல்லாம் உனக்குச் சரிப்படாது. எனக்கும் சம்மதமில்லை' என்று கூறினான். 'நான் குடியானவப் பெண்தானே? வேலை செய்ய என் உடலில் வலிமை இருக்கிறது. நானும் சம்பாதித்தால் நலமல்லவா? ஊருக்கும் முன்போல் கொஞ்சம் பணம் அனுப்பலாம்' என்று மன்றாடினாள். அவள் கூறுவதில் உள்ள உண்மையைக் குமரன் மறுக்க முடியவில்லை. ஆலோசித்து முடிவு செய்வதாக அவன் ஒப்புக் கொண்டான்.

குமரன் வேலை செய்த மில்லில், மற்றும் இரண்டு தமிழரும் பணி செய்து வந்தனர். தனிமையாக இருந்து ஹோட்டல் சாப்பாட்டால் வருந்துவதைப் பற்றிப் பேசும் பொழுது, குமரன் 'நீங்களும் ஏன் என்னுடன் சாப்பிடக் கூடாது? என் மனைவி உங்களுக்கும் சமையல் செய்து போடுவாள். அதனால் அவளுக்கு அதிக வேலை இராது' என்றான். நண்பர்களும் உடனே ஏற்றுக் கொண்டனர். இரவு மட்டும் குமரன் வீட்டில் சாப்பிடுவதென்றும், தலைக்கு மாதம் 35 ரூபாய் கொடுப்பதாகவும் ஏற்பாடாயிற்று. இதைக் கேட்டுப் பார்வதி மகிழ்ச்சி யடைந்தாள். மிகவும் கவனத்துடன் அவர்களுக்கு நல்ல சமையல் செய்து போட்டாள். குமரனுக்குத் தெரியாமல் வேறு பல கை வேலைகளையும் கற்றுக் கொண்டாள். தையல் நன்றாகக் கற்றுக் கொண்டு ஒரு தையல் மிஷின் வாங்கிக் கொடுக்கும்படி கேட்டதும், குமரன் அவளுடைய சாமர்த்தியத்தை மெச்சி



விகாரி வருஷ நவீன பஞ்சாங்கம்

இவ்வருஷ மகர சங்கராந்தி தேவதை ஸ்திரீ - புருஷ வடிவத்தில் தனது காரிருள் மேனியைப் பவுடர், ஸ்நோ, லிப்ஸ்டிக் இத்யாதி அலங்காரங்களால் 'மேக்கப்' செய்து கொண்டு தன் வயதை மறைத்துக் குமரியாக, மந்தாகினி என்ற நாமதேயத்துடன் நாகரிக நைலான் உடையணிந்து கொண்டு கையில் 'டம்ப'ப் பையுடன் 'பாரசூட்' குடை சகிதம், தலையிலிருந்து காகிதப் பூச்சரம் இடை வரையில் தொங்க, கையில் 'ரிஸ்ட் வாட்ச்' பளபளக்க, தென் கிழக்கிலிருந்து வடமேற்குத் திசை நோக்கி 'ஸ்கூட்டர்' வாகனம் ஏறிச் செல்லுகிறாள்.

ஆகாரம்: 'ஐஸ் கிரீம்' கலந்த 'ப்ரூட் ஸாலட்'. பிரவேச லக்னம் விருச்சிகம்.

சங்கராந்தி பலன்: பிரவேச லக்னம், விருச்சிகமானதால் இருட்டில் சஞ்சரிக்கும் பிராணிகளுக்கு நன்மையுண்டாகும். 'மேக்கப்' அலங்காரப் பொருள் அணிந்திருப்பதால் இவ்வியாபாரத்தில் இருப்பவர்கள் சரக்குக் கிடைக்காமல் தவிப்பர். காகிதப் பூமாலைக்குப் பலன்; நாடக சினிமாக்காரர்களுக்கு நல்ல லாபம். டம்பப் பையோடிருப்பதால், பழைய மோஸ்தர்கள் மறைந்து புதிய 'பிளாஸ்டிக் மாடல்'கள் மலியும். 'ப்ரூட் ஸாலட்' அருந்துவதால் பழ வகைகளுக்குப் பஞ்சமும் பறங்கிக் காய்க்கு யோகமும் உண்டாகும். நைலான் உடை யணிந்திருப்பதால், நாசூக்கு வளரும். ஸ்கூட்டரில் செல்லுவதால், கன்னிப் பெண்களின் எண்ணிக்கை குறையும். வடமேற்குத் திசை நோக்கிச் செல்லுவதால் தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு லாபம். பொதுவாகக் கலை வளரும். இலக்கியம் செழிக்கும். ரசனை உணர்ச்சி அதிகரிக்கும்.

உடனே வாங்கிக் கொடுத்தான். குடும்பம் இனிமையாக நடந்தது.

3

ஒரு வருஷம் இவ்விதம் கழிந்தது. திடீரென்று ஒரு நாள் பார்வதிக்கு உடம்பு சுகமில்லாமல் போயிற்று. பக்கத்திலிருந்த தோழிகள் வந்து பார்த்து விட்டு, 'இது வேறொன்றுமில்லை. நீ கருத்தரித்திருக்கிறாய்' என்றார்கள். மாலையில் குமரன் வந்ததும் அவனிடமும் சொன்னார்கள். அடுத்த நாள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய், டாக்டர் மூலமாகவும் உறுதிப்படுத்திக் கொண்டனர். ஒருபுறம் சந்தோஷம். மறுபுறம் கவலை. நண்பர்களைமீண்டும் ஹோட்டலுக்கே போய்விடும்படி வேண்டிக் கொண்டான். பார்வதிக்கு வீட்டு வேலைகளிலும் உதவி செய்து, அவளை ஓய்வு எடுத்துக் கொள்ள வற்புறுத்தினான்.

பார்வதியின் மனம் திடீரென்று ஆத்தூர்ப் பக்கம் திரும்பியது. தனது குழந்தை அங்கே பிறக்க வேண்டுமென்ற ஆசை பெருகி வந்தது. ஆனால் கணவனிடம் உடனே சொல்லவில்லை. மூன்று மாதங்களுக்குப் பின் தனது பெற்றோர்களுக்குக் குமரன் தெரியப்படுத்தியவுடன், அவன் தாயார் பார்வதியை ஊருக்குக் கொண்டு வந்துவிட உத்தரவிட்டாள். அப்பொழுதே தனக்கும் அதே விருப்பமென்று தெரிவித்தாள். ஆறாவது மாதத்தில் கொண்டு போய் விடுவதாகக் குமரன் ஒப்புக்கொண்டு, அதற்காக லீவுக்கு மனுப் போட்டான்.

இத்தருணத்தில் தம்பி சுந்தரத்திடமிருந்து குடும்பத்தின் கஷ்ட நிலைமையைப் பற்றிய பரிதாபமான செய்திகள் கிடைத்தன. பூச்சி விழுந்து மாசுல் பாழாகி விட்டது. கடன்காரர்கள் நெருக்கினர். தந்தையின் உடல் நலம் மிகவும் கெட்டு வந்தது. முடிவில் தம்பதிகள் புறப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன், வேலன் இறந்து விட்டானென்று தந்தி கிடைத்தது. உடனே இருவரும் புறப்பட்டு ஆத்தூர் வந்து சேர்ந்தனர். சடங்குகள் முடிந்தவுடன், பார்வதியை ஊரில் விட்டு விட்டுக் குமரன் புறப்பட எண்ணினான். ஆனால் அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. 'நானும் உங்களோடு வந்து விடுவேன்' என்று பிடிவாதம் செய்தாள். சுந்தரமும் பம்பாயில் ஏதாவது வேலை தேட நிச்சயித்திருப்பதாகக் கூறினான். தாயார் மட்டும் தனியாக இருப்பாளா? எல்லோரும் ஆலோசித்து ஊரிலுள்ள நிலத்தை விற்றுக் கடன்களைத் தீர்த்து விட்டு, மீதிப் பணத்துடன் பம்பாயில் சேர்ந்திருப்பதென்று நிச்சயம் செய்தார்கள். நிலத்துக்கு முன்பணமாக ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு, மீதி ஏற்பாடுகளைப் பார்வதியின் தந்தையிடம் ஒப்புவித்துவிட்டு அனைவரும் பம்பாய் சேர்ந்தனர். ஆத்தூரில் ஒரு பழம் குடியானவர் வீடு பாழாயிற்று. ரயிலில் போகும் பொழுது சுந்தரம் ஒரு தமிழ்ப் பத்திரிகையில், கிராமத்தைத் துறந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறுவதைக் கண்டித்து ஒரு மாபெரும் தலைவர் பேசியிருப்பதைப் படித்துக் காண்பித்தான். 'அந்தத் தலைவருக்கு நம் ஆத்தூர் வீட்டைத் தானம் செய்யலாமா?' என்று குமரன் பரிகசித்தான். 'எனக்கு அவர் சொல்லுவதே சரி என்று தோன்றுகிறது' என்றாள் அன்னை காமாட்சி.





Kalinga tubes
for
WATER & GAS
Quality Steel tubes
black and galvanised,
conforming to British
Standard specifications.
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE, CALCUTTA-12
WORKS:
CHOUDWAR, CUTTACK, ORISSA :
KALPANA.K.2



காவிய நாயகிகள் கதைச் சித்திரம்

வாசவதத்தை: காதல் நிலையை நளினமாகச் சித்திரிக்கும் காவியங்களில் உதயணன் வாசவதத்தை கதையும் ஒன்று. தமிழில் கொங்குவேள் என்ற சிற்றரசர் உதயணன் கதையைக் காவியமாகப் பெருங் கதை என்ற பெயரில் இயற்றியிருக்கிறார். நளகிரி என்னும் மதம்பிடித்த யானையை அடக்கி அதன் மத்தகத்தில் அமர்ந்து யாழ் வாசித்துக் கொண்டு வருகிறான் உதயணன். அப்போது அரண்மனை மாடத்திலிருந்து வாசவதத்தை உதயணனைக் கண்டு மனம் மயங்கிக் காதல் கொள்கிறாள்.



பதுமாபதி: இராசகிரிய நகரத்துக் காமன் கோட்டத்தில் காமதேவனுக்கு விழா நடந்து கொண்டிருக்கிறது. பதுமாபதி அழகுக்கு அழகு செய்ததுபோல் கண்டோர் மயங்கும் வண்ணம் தன்னை அணிமணிகளால் அலங்காரம் செய்து கொண்டு சிவிகையில் வந்து காமன் கோட்டத்து வாயிலில் இறங்குகிறாள்.

அப்போது எதிரே காமன் கோட்டத்துப் புன்னை மரக்கிளையைப் பற்றியவாறு மாதவிக் கொடியின் தளிர்களை ஏந்தி நின்றுகொண்டிருந்த உதயணனை அவள் கண்கள் சந்திக்கின்றன; அந்தண வடிவத்தில் எளிமை பொங்கும் அழகுடன் காமவேள்போல் நின்று கொண்டிருந்த உதயணனும் அவளைக் காண்கிறான்; இருவர் கருத்தும் ஒன்றுபடுகிறது.




விரிசிகை: உதயணன் தன் பரிவாரங்களோடு இலாவண மலைச்சாரலில் தங்கிப் பொழிலாடியும் புனல்விளையாடியும் பொழுதை இன்பமாகக் கழித்துக் கொண்டிருக்கிறான். ஒரு நாள் அசோக மரத்தின் கீழமர்ந்து சிந்தனையிலாழ்ந்திருந்தபோது, இரு கைகளும் நிறையப் பறித்த நறுமண மலர்களை ஏந்திக்கொண்டு புள்ளிமான் துள்ளிவருவது போல் நடை பயின்று விரிசிகை என்னும் முனி குமாரி அவன் முன் தோன்றுகிறாள். எழிலரசியாக நின்ற அவள் தன் கையிலிருந்த மலர்களை உதயணனிடம் கொடுத்து மாலை கட்டித் தருமாறு வேண்டுகிறாள். உதயணனும் அவ்வாறே அவள் கொடுத்த மலர்களைத் தொடுத்து மாலையாக்கித் தானே அவளுக்கு அணிவித்து அனுப்புகிறான். மலர் மாலைக்கு நடுவே தன் நெஞ்சையும் கூட வைத்துத் தொடுத்தான் போலும்.



மானனீகை: உதயணன் தேவியராகிய வாசவதத்தையும், பதுமாபதியும் ஆயிரத்தெட்டுப் பணிப்பெண்களை இரு கூறாகப் பிரித்துக் கொண்டு அரண்மனை உரிமைப் பள்ளியில் தங்களுக்குள் பந்து விளையாடுகின்றனர். இந்தக் காட்சியைப் பார்க்க வேண்டுமென்று உதயணனுக்கு ஆசை உண்டாயிற்று. உரிமைப் பள்ளியில் நுழைய ஆண்மகனுக்கு அனுமதி கிடையாது. ஆகவே, உதயணன் ஒரு தந்திரம் செய்கிறான். தன்னைப் பேரழகியான இளம் பெண்ணாக உருமாற்றிக் கொண்டு ஒரு பெண் யானை மீதேறி உரிமைப் பள்ளி சென்று பந்தாட்டத்தைக் காண்கிறான். காண்போரைக் கவரும் விழிகளும், பொற் சிலைபோன்ற உடலும் கொண்ட மானனீகை என்ற பெண் வாசவதத்தையின் சார்பில் அற்புதமாகப் பந்தாடுகிறாள். அவள் அழகில் உதயணன் மனத்தைப் பறி கொடுக்கிறான். திடீரென்று பெண் வேடத்தைக் களைந்து விட்டு அவர்கள் முன் தோன்றித் திகைக்க வைக்கிறான் உதயணன். பெருங்கதையின் இந்தக் காவிய நாயகியை நமது ஓவியர் 'லதா' நயம்படத் தீட்டியிருக்கிறார்.

தீபாவளி வாழ்த்துக்கள்


MICO



LICENCE BOSCH

WORLD FAMOUS
BOSCH (GERMAN) QUALITY

MOTOR INDUSTRIES CO. LTD., BANGALORE



பொழுது புலர்ந்தது

திரைக்குப் பின்னிருந்து கணீரென்ற குரலொன்று பாடுகிறது:

பொழுது புலர்ந்தது பொய்மை தகர்ந்தது
பூத்தது தெய்வீகத் தாமரை-செந்தாமரை
பூத்தது புண்ணியத் தாமரை.

(பல குரல்கள் ஒன்றும்:)

தாமரை, தாமரை, தாமரை,
தாய்த் திரு நாட்டின் தவ வடிவே
எங்கள் தாமரை.

ஒரு குரல்:

சேறும் குழம்பிக் கலங்கித்
தியங்கிய மக்களின்
சிந்தையிற் சீறிடும் செங்கனலே
எங்கள் தாமரை.
விறுடனே இந்த வேற்றடிமைப்
புழு வாழ்க்கையை
வெட்டி விடுதலை காணும் வெறியே
செந்தாமரை.

(பல குரல்கள் ஒன்றும்:)

தாமரை, தாமரை தாமரை,
தாய்த் திரு நாட்டின் தவ வடிவே
எங்கள் தாமரை.

ஒரு குரல்:

பஞ்சைபராய் எங்கள் பாரத
நாட்டினில் இன்னமும்
பாவிப் பரங்கியின் சூழ்ச்சியில்
சிக்கிப் பிழைத்திட்டோம்.
நெஞ்சினிற் பொங்கிடும் வீர
நெடுவேள்வி தீயினில்
நின்று நடம் பயில் வெற்றியொளி
எங்கள் தாமரை.

(பல குரல்கள் ஒன்றும்:)

தாமரை, தாமரை, தாமரை,
தாய்த்திரு நாட்டின் தவவடிவே
எங்கள் தாமரை.
தாமரை, தாமரை, தாமரை!

(குரல்கள் மெல்ல மறைகின்றன.)

[சுமார் 110 ஆண்டுகளுக்கு முன்.

நாகபுரி பான்ஸ்லே வம்சத்து அரண்மனை மாளிகையில், ராணி அன்னபூரணியின் அறை.

பவானி சிலையொன்றின் முன், சங்கிலியில் தொங்கும் இரு விளக்குகள் எரிகின்றன. சிலையின் முன் உள்ள பீடத்தில், தெறித்துக் கிடக்கும் மலர்களும் குங்குமமும் உள்ளன. காட்சி தொடங்கும்போது, அறையில் ஒருவரும் இல்லை. ராணி அன்னபூரணி வருகிறாள். வயது ஐம்பது இருக்கும். நோயினாலும், கவலையினாலும் ஒடிந்து போன உடல். நரைத்த கூந்தலும், கூனிய முதுகும், சுருக்கம் நிறைந்த நெற்றியும் காலத்துக்கு முன் முதியவளானவள் என்பதைக் காட்டுகின்றன. தளர்ந்த நடை. வரும்போது, அச்சத்துடன் அங்குமிங்கும் மருண்ட விழிகளைத் திருப்பித் தள்ளாடுகிறாள்.]

அன்ன: (பெருமூச்சுடன்) பொழுது புலருமா, எனக்கும் [பொழுது புலருமா? தாயே, பவானி, உலகத்து நாயகியே, உன்னை நம்பி வாழ்ந்த இந்த பான்ஸ்லே வம்சத்தை இப்படிச் சோதிக்க வேண்டுமா? அரசர் குலத்திலே பிறந்தேன்; அரசனுக்கு மாலையிட்டேன். என்னை மலடியாக்கினாய்; என் கணவனைப் பறித்தாய். இப்போது என் அரண்மனையிலேயே, பறங்கி நாய்களிடமிருந்து ஒடுங்கியும் சிறு மூலையாய் என்னைப் பதுக்க விட்டாய். இதுவா தாயே உன் கருணை?

[உள்ளேயிருந்து நகைப்பொலி]

யாரது?

பேராசிரியர் அ. சீநிவாச ராகவன்

[ராணி வெங்கம்மா வருகிறாள். சுமார் முப்பது வயதிருக்கும். யௌவனத்தின் சோபை இன்னும் மங்கவில்லை. தன்னலமும், குரூரமும், பிடிவாதமும் படிந்து படிந்து, முகத்தின் அழகைக் கறைப்படுத்தி இருக்கின்றன. விரைந்து, மிடுக்கோடு உள்ளே வருகிறாள்.]

வெங்க: (பரிகாசமாக நகைத்து) ராணி ஸாஹிபா! பூஜை அறைதான் தற்போது தங்கள் தர்பார் மஹலோ? பொருத்தமான இடந்தான். காளியின் சந்நிதியிலே கூளி. கருணை வேண்டுகிறாய்; அன்னை பவானியிடம் கருணை வேண்டுகிறாய். உன் முகத்தைப் பார்த்தால் பவானி தேவி ஓடிவிடுவாளே! எப்படிக் கருணை காட்டுவாள்?

அன்ன: (சிறிது கோபத்துடன்) வெங்கம்மா....

வெங்க: நிறுத்து. இந்த அதட்டல் உருட்டல் எல்லாம் மகாராஜா மண்டையைப் போட்டதோடு போயிற்று. வெங்கம்மாவாம், வெங்கம்மா! பெற்றுப் பெயர் வைத்துப் பேணி வளர்த்தவளைப் போல் அழைக்கிறதைப் பார்! ராணி ஸாஹிபா, மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு. ஒன்றுக்கும் உதவாத ஜடமே, மலட்டுப் பிணமே, உனக்கு வாய் வேறு?

அன்ன: சகோதரீ!

வெங்க: என்னைச் சகோதரியாகவா நினைத்தாய்? மகாராஜா இருந்தபோது என்னை என்ன பாடுபடுத்தினாய்? பட்டத்து ராணி என்ற மமதையிலே, என்னை வெள்ளாட்டிலும் கேடுகெட்ட வேலையாட்டியாகத்தான் கருதினாய். பூஜை பூஜை என்றாய். அரசாங்கம் அரசாங்கம் என்று பூச்சாண்டி காட்டினாய். உன் ஆசாரக் கள்ளச் சாகசத்தால் அரசனை என்னிடமிருந்து பிரித்தாய். ஆனால்.... அன்னை பவானி என்பக்கம் இருந்தாள். வயிற்றைக் குழவி மாணிக்கங்களைப் பெறும் பாக்கியத்தை உனக்கு அளிக்கவில்லை, எனக்கு அளித்தாள்.

அன்ன: தேவி! வெங்கம்மா தேவி! உண்மைதான், அம்மா! நீ பெற்றெடுத்த செல்வங்களை, இந்த பான்ஸ்லே வம்சத்தை வாழ்விக்க வந்த சுடர்மணிகளாகவே நான்...

வெங்க: நிறுத்து. அன்னபூரணி! நீ வழிபடுவதாகப் பாசாங்கு செய்கிறாயே, அந்தப் பவானி மாதாவின் சந்நிதியில், பச்சைப் பொய்யைப் பேசாதே. கண் அவிந்து போகும்.

அன்ன: (பொறுமையோடு) வெங்கம்மா தேவி! நீ என்ன சொன்னாலும் என் சகோதரிதான். என்று என் கணவர் உன்னை இரண்டாம் மனைவியாக ஏற்றுக் கொண்டாரோ....

வெங்க: அன்று பிடித்தது சனியன். விந்திய மலைக் காட்டிலே மான் குட்டி போலச் சுதந்திரமாகத் திரிந்த என்னைப் பிடித்து வந்து இந்த அந்தப்புரத்திலே சிறை வைத்தார் உன்னுடைய கணவர். அவருடைய முரட்டு மோகத்துக்குப் பலியானேன். உனக்கு, உன் பொறாமைக்கு, உன் வஞ்சகத்துக்குத் தீராத உன் துரோகப் பசிக்கு உணவானேன். எங்கள் வேடர்சேரியில், ஏழை வேடன் ஒருவனைக் கைப்பிடித்திருந்தால், அரண்மனையும், இளைய ராணிப் பட்டமும் இல்லாமல் போயிருக்கும். ஆனால்... ஆனால்... இந்த இழிவு, என்ன இருந்தாலும் வேடுவச்சிதானே என்ற இந்த அவமானம் வந்திராது. இன்று வெள்ளைக்காரன் காலிலே சோற்றுக்குத் தவித்து விழும் கொடுமையும் வந்திராது.

அன்ன: உன்னை யார் அப்படிச் செய்யச் சொன்னது? நீயும் என்னைப்போல்....

வெங்க: (சிரித்து) உன்னைப்போலவா? என்ன சொல்கிறாய்? உன்னைப் போலவா? நல்ல வேடிக்கை. நீதான் எனக்கு வழி காட்டிய என் அரசியல்குரு. காளிகட்டத்துக்கு நீ தூது அனுப்பினாயே, அது எனக்குத் தெரியும். புதிதாக வந்த கவர்னர் ஜெனரலிடம் காவடி எடுத்தாயே, அதுவும் தெரியும். உன் துரோக முயற்சி பலிக்கவில்லை, என் வயிற்றில் பிறந்த குழந்தைகளுக்கு இந்த பான்ஸ்லே ஸமஸ்தானம் கிட்டக்கூடாதென்று நீ ஆடிய ஆட்டமெல்லாம் முடிந்தது. இதோ, வெள்ளையர்கள் நாகபுரி தர்பார் மண்டபத்தை இடித்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டத்து ராணி, பட்டத்து ராணி என்று குதூகலி நடந்தாயே, அப்படி நடந்த உன் அரண்மனையில், வெள்ளை நரிகள் புகுந்து வெறியாட்டம் ஆடுகின்றன; பளிங்கு மாடங்களை இடித்துத் தரையைத் தோண்டிப் புதையல் தேடுகின்றன. உன் பட்டத்து யானையைப் பறங்கியன் ஒருவன் ஏலம் கூறுகிறான்; உன் கோட்டையைத் தகர்த்துக் கழுதையால் உழுகிறான்; உன்னையும் நாளைக்குத் தூக்கிச் சென்று கடைத் தெருவிலே விலை கூறுவான்.

அன்ன: (காதைப் பொத்திக் கொண்டு) பவானி மாதா, பவானி மாதா எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

வெங்க: அப்படிச் சொல், தாயே! எனக்கும் என் குழந்தைகளுக்கும் நீ செய்த துரோகத்துக்கு, நீ இதுவரையில் பட்டது போதாது. பவானி மாதாவை அழைக்காதே! வாய் வெந்து போகும். நீ கண்ணிழந்து, உடம்பும் நாக்கும் அழுகி..

அன்ன: (பளிச்சென்று நிமிர்ந்து சீறி) வேட நாயே, நிறுத்து ... பொறுத்துப் பொறுத்துப் பார்த்தால் விஞ்சுகிறாய். போ, வெள்ளையன் காலைக் கழுவு. உன் போன்ற கீழ்ச்சாதிப் பன்றிகளுக்குரிய செயல் அது. போ, போ, போ.

வெங்க: (சிரித்து) உண்மை வந்து விட்டது பார்த்தாயா? உள்ளத்திலே இருந்த நஞ்சைக் கக்கி விட்டாய். நான் வேடுவச்சிதான். அதற்காக வெட்கப்படவில்லை; வருந்தவில்லை. ஆனால் ஏன் உன் கணவனை அறிவிழந்து என் காலில் விழவிட்டாய்? மகாராஜாதி ராஜ ராஜ ஸிம்ஹம் பான்ஸ்லே பகதூர் தன்னுடைய பட்டத்து ராணியை விட்டு, ஏன் இந்த வேடுவச்சிக் கழுதையைக் கட்டிக் கொண்டது? என்னைப் பார்த்தாயா? என்னை வேடுவச்சி என்று கரித்துக் கொட்டிய பாவந்தான் உன்னைச் சூழ்கிறது. வெள்ளையன் காலில் முதலில் விழுந்தது நீயா, அல்லது நானா?

அன்ன: (உணர்ச்சியை அடக்கிக் கொண்டு தணிந்த குரலில்) தவறாகப் பேசி விட்டேன், வெங்கம்மா! என்னை மன்னித்து விடு. நோயால், கவலையால், வேதனையால் என் அறிவு மழுங்கி விட்டது. இல்லாவிட்டால்...

வெங்க: (இடைமறித்து) இங்கே பார். இந்தப் பசப்பு வார்த்தைகளுக்கெல்லாம் இனி இந்த வெங்கம்மா மசிய மாட்டாள். உன்னுடைய தத்துப்பிள்ளை, அரச குடும்பத்திலே பிறந்த அந்த அழகுமூர்த்தி, அவனுக்கே பட்டம் என்று இதுவரை சாதிக்கப் பார்த்தாய். வெள்ளைக்காரன் இடம் கொடுக்கவில்லை. இப்போது, என்னைக் கையிலே போட்டுக் கொண்டு, என் பிள்ளைகளுக்குப் பட்டம் என்று ஆசை வார்த்தை காட்டி, நீ இந்த நாகபுரி அரசை ஆளப் பார்க்கிறாய். முடியாது, தாயே, முடியாது. இனி நான் ஏமாற மாட்டேன். நான் வேடுவச்சிதான். அதனால் என்ன? ஆட்டையும், மாட்டையும் கழுவித் தண்ணீர் குடிக்கும் பான்ஸ்லே குலத்தை விடப் புலியை எதிர்த்து வேல் வீசும் எங்கள் குலம் தாழ்ந்தா போய்விட்டது?

அன்ன: இல்லை, இல்லை, இல்லை. எந்தக் குலமும் தாழ்ந்ததே இல்லை. ஆனால், இதை நான்தான் முன்னமேயே உணராமற் போனேன். எங்கிருந்தோ கடை பரப்புவதற்கு வந்த வெள்ளைக்காரன் இன்று பூமியை ஆள்வதற்கு நீட்டிய தன் பேராசைக் கையால் என் கண்ணைத் திறந்தான். ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம். எங்கும், எல்லா உயிரிலும் இறைவன் இருக்கிறான். அது இப்போது தெரிகிறது. ஆசையிலிருந்து, அதர்மத்தில் இருந்து, உயிர்களை வாட்ட முற்படும் குரூரத்திலிருந்து மட்டும் அவன் விலகிக் கொள்கிறான். அதுவும் தெரிகிறது. இந்த நாட்டை அடிமைப்படுத்திவரும் அந்நியனுடைய இரும்புக் கை ஒருநாள் தளரும். அந்த ஈரம் நெஞ்சு ஒருநாள் உடைந்தே போகும்.

வெங்க: எப்போது இந்த ஞானோதயம் உண்டாயிற்றோ? உன் தத்துப் பிள்ளைக்கு அரசில்லை என்று வெள்ளையன் மறுத்த பிறகா? என் குழந்தைகளைக் காட்டிலே விரட்ட நினைத்தாயே? கைகேயியாவது தன் மகனுக்காக அப்படிச் செய்தாளாம். புராணம் பேசுகிறது. நீயோ? யாருக்கோ பிறந்த ஏமாளியை அரச குலத்தில் பிறந்த அம்பிக் குழவி என்ற காரணத்துக்காக, முடி சூட்டப் பார்த்தாய்; என் குழந்தைகளை ஏன் அரசருடைய மக்கள் என்று எண்ணவில்லை? பொறாமைதானே?

அன்ன: (அழாக் குறையாக) தவறு செய்து விட்டேன், வெங்கம்மா தேவி! அதற்காக என்னைச் சித்திரவதை வேண்டுமானாலும் செய். என் நெஞ்சை இப்படிப் பிய்க்காதே. இந்த உடைந்த உடம்பு எதையும் தாங்கும், என் மலட்டு வாழ்க்கையைக் கூடத் தாங்கிவிட்டதே! ஆனால் என் மனம் இனிமேல் ஒன்றையும் தாங்காது.

வெங்க: (குரூரமாக) அரச பதவியை மட்டும் தாங்கும், இல்லையா?

அன்ன: இல்லை, இல்லை. அப்படிப் பேசாதே. எனக்கு இந்த அரசியல் ஆசை கொஞ்சமும் இல்லை. இது சத்தியம். அன்னை பவானியின் பேரில் ஆணையிட்டுச் சொல்கிறேன். இது சத்தியம். என்னை நம்பு. நம்புவது கடினந்தான். மகத்தான இந்த பான்ஸ்லே வம்சம், தொடர்ந்து இந்த நாகபுரி ஸமஸ்தானத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று நினைத்தேன். அதற்காக, அரச குடும்பத்திலே

பிறந்த சிறுவன் ஒருவனைச் சுவீகாரம் செய்து கொண்டேன். ஆனால்...ஆனால், உன் குழந்தைகளுக்குத் துரோகம் செய்ய எண்ணவில்லை.

வெங்க : அவர்களை உன் தந்தைப் பின்னே அரசாளும்போது குதிரைக்காரர்களாக அமர்த்தத் திட்டம் போட்டாய். குதிரைக்காரர்களாகவா, யானைப்பாகர்களாகவா? இப்போது குதிரையும் இல்லை, யானையும் இல்லை, சிம்மாதனமும் இல்லை, குந்தியிருக்கக் குடிசைகூட இல்லை.

அன்ன : அதனால் என்ன? இன்னும் எத்தனை நாட்கள் இருக்கப் போகிறேன்? உன்னைப் பற்றியும், உன் மக்களைப் பற்றியும் இந்த நாட்டு ஜனங்களைப் பற்றியும் தான் கவலையாக இருக்கிறது. ரகுபதியும், முராரியும் ஒன்றும் அறியாச் சிறுவர்கள். அவர்களை வைத்துக் கொண்டு, நாம் நிர்க்கதியாய்ப் போன இந்தப் பயங்கர காலத்தில் என்ன செய்யப் போகிறாயோ?


வெங்க : (ஏளனமாக) அடாடா! என்ன பரிவு, என்ன பரிவு! என்னைப் பற்றியோ அவர்களைப் பற்றியோ உங்கள் உடம்பை அலட்டிக் கொள்ள வேண்டாம், மகாராணி! சாவு வந்து விடுமாம்! வருமா? உனக்கா? வரும், வரும். பிணம் தின்னிக் கழுகுகளை அவ்வளவு எளிதில் சாக விடுவானா பவானிநாதன்? மாட்டான். இங்கே பார். இதோ டல்ஹௌஸி பிரபுவிடமிருந்து, தளகர்த்தன் எனக்குக் கொண்டு வந்திருக்கும் கடிதம். என்ன எழுதியிருக்கிறார், தெரியுமா? கேள், படிக்கிறேன், கேள். மகாராணி வெங்கம்மா தேவிக்கு... காதில் விழுந்ததா? நீ எனக்குக் கொடுக்கக் கூடிய பட்டத்தை, எனக்கு நியாயமாக உரியதை, இதோ அந்நியன் வழங்கி விட்டான்.

அன்ன : ஏன் வழங்க மாட்டான்? அவனுடைய பிரித்தாளும் தந்திரம் இது.

வெங்க : நான் நம்பமாட்டேன். நீ என்ன சொன்னாலும் நம்ப மாட்டேன். இதோ, வசிப்பதற்கு எனக்கும் என் மக்களுக்கும் தெற்கு அரண்மனை. வருஷத்துக்கு மூன்று லட்சம் ரூபாய் எங்கள் செலவுக்கு. எனக்கு வேறென்ன வேண்டும்? உளுத்துப் போன உன் சிம்மாசனம் எனக்கோ, என் மக்களுக்கோ தேவையில்லை.

அன்ன : (நகைத்து) அப்படியா? அன்னியன் உனக்கு வாய்க்கரிசி போட வந்துவிட்டானா? ஐயோ, பிரிந்து பிரிந்து நாசமாய்ப் போனோம். பிராம்மண பேஷ்வா, இடையன் பான்ஸ்லே, ஹிந்து, முஸ்லிம், வடக்கு தெற்கு, மகாராஷ்டிரம், ராஜபுதனம், வங்காளம், சதாரா, நாகபுரி, குவாலியர் — எத்தனை எத்தனை பிரிவுகள்? என் நெஞ்சுக்குள்ளேயே பாதகப் பிரிவொன்று முளைத்ததே! அரசன், வேடர் என்ற பிரிவு நஞ்சு என் உள்ளத்திலும் பொங்கியதே! இப்படிப் பிரிந்து பிரிந்து பிளவுண்டு, பிளவுண்டு, என் சிறு வாழ்வே வாழ்வு என்று எண்ணி எண்ணி வாய் பிளந்து, அன்னியன் ஆட்டி வைக்கும் பாவைகளாக ஆற்றல் இழந்தோம். இருட்டில் தடுமாறுகிறோம். நண்பர்கள் யார், சகோதரர்கள் யார், உற்றவர் யார், அந்நியர் யார், உயிரினும் மேலான நாட்டின் உயர் நிலை எது என்பதை யெல்லாம் காணாத குருடர்களாய், வெறுப்பை நமக்குள்ளே பயிர் செய்து, நாட்டை, இந்தப் பழம் பெரும் நாட்டை மயானமாக்கி விட்டோம். நம் பாக்கியம் கையுமாக, வெள்ளைப் பேய் இங்கே கோரத் தாண்டவம் புரிகிறது. நல்லதுபோல் இச்சகம் பேசி, அங்கும் இங்கும் ஒரு சிறுக்கு வாய்க்கரிசி வீசி, மற்றவர்களை விழுங்குகிறது. விழுங்கிய பின், வாய்க்கரிசி வீசுவதை நிறுத்தி விடும்; வாய்க்கரிசிக்காக அங்காந்தவர்களையும் விழுங்கிவிடும்.

வெங்க : ஓகோ, பூச்சி காட்டுகிறாயா? இந்தக் காட்டுப் புலி இதற்கெல்லாம் பயந்து விடாது.



அன்ன : ஆம், இதை நான் காண்கிறேன். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, இந்தப் பாரத நாட்டைப் பிடித்தாட்டிய வேற்றுமை, பிளவு, துரோகம் என்ற பலவகை பிசாசுகள் இன்று பறங்கியன் கையில் கருவியாகி விட்டன. நாகபுரி, சதாரா இரண்டும் அழிந்தன. அந்நியன் பீரங்கியாலன்று; அவன் படை வலிமையாலன்று. நம்மை நாமே தேய்க்கும்படி ஓங்கியது நம்முடைய வேற்றுமை. அதை வளர்க்கிறான் வெள்ளையன்; அதைத் தனக்குப் பயன்படுத்துகிறான் அன்னியன். அதைக் கொண்டே நம்மை அடிமையாக்கி ஆளமுற்பட்டு விட்டான் எங்கிருந்தோ வந்த பறங்கியன். கொள்கை, கொள்கை என்று வாயளவில் பேசி, அந்நியனுடைய ஆதிக்க வெறியைப் புரிந்து கொள்ளாமல், அவன் அரசியல் தத்துவப் பகட்டை நம்பி, அவன் தவறே செய்ய மாட்டான் என்று நம்மவரையே நாம் பழிக்கும் அளவுக்கு இழிந்து விட்டோம். அவன் நாட்டெல்லையில் படையெடுத்தால், அது அமைதியை நிலைநாட்ட என்று களிக்கிறோம். அவன் நாட்டுக்குள்ளே துரோகத்தை

விதைத்தால், கருத்துப் புரட்சி, மக்கள் முன்னேற்றம் என்று மார் தட்டுகிறோம். நமது மக்கள் அதை எதிர்த்தால் குறுகிய மனப்பான்மை, அமைதியைக் குலைக்கும் கலகம், ஆட்சிபீடத்தின் ஆணவம் என்று குற்றப் பத்திரிகை படிக்கிறோம். இருட்டு, இருட்டு, இருட்டு! பவானி மாதா, இந்தத் தூர்ப்பாக்கியம் பிடித்த நாட்டுக்கு உய்வுண்டா?

வெங்க: ஓகோ, நாகபுரியை விட்டு நாட்டைப் பற்றியே எண்ணத் தொடங்கி யாகிவிட்டதா? நல்லது, நல்லது, அந்த மட்டுக்கும் நல்லதுதான்.

அன்ன: வெங்கம்மா தேவி, சகோதரி, குறுக்கிடாதே. சாவின் இருள் வெள்ளக் கரையில் நிற்கும் இந்த உயிர் உண்மையைக் காண்கிறது. பவானித்தாயின் அருளால். என்னைச் சுற்றிப் படர்ந்தெரியும் என் உயிர்த் தீயின் ஒளியில், காலத்தை ஊடுருவி, நான் பார்க்கிறேன். வேற்றுமை, பூசல், துரோகம், அன்னியன் ஆட்சி, அடிமைத்தனம், இருட்டு, இருட்டு, ஓயாத ஒழியாத அந்தகாரம். ஆனால்... ஆனால்....இங்கே நாகபுரியில், இல்லை, வடக்கே ஜான்ஸியில், தில்லியில், அயோத்தியில், பொழுது புலரப்போகிறது என்பதற்கான ஒளி ரேகைகள் தென்படுகின்றன. காண்கிறேன், ஆம், கண்முன்னே காட்சியாகக் காண்கிறேன். உனக்குத் தெரியவில்லையா, சகோதரி? இதோ பொழுது புலரப் போகிறது. புன்மை இருட்கணம் மாயப் போகிறது. பல்லாயிரம் மக்கள், பாரதத் தாயின் ஒரு வயிற்றிலே பிறந்த சோதரர், ஒன்று பட்டெழும் சிங்கநாதம் என் காதில் விழுகிறது. உன் காதில் விழவில்லையா? நான் இறந்தால் என்ன, இந்தச் சிறு உயிர் அணைந்தால் என்ன, இதை இருள் மூடிவிட்டால் என்ன, பாரத நாட்டின் சுதந்திரம் உதயமாகிறது. பொழுது புலர்கிறது. அப்போது....

வெங்க: அப்போது என்னவாம்?

அன்ன: அப்போது, உன் மக்கள் என்று பேசி, மூன்று லட்சம் ரூபாய்க்கு அடிமைப்படுத்த முயல்கிறாயே, அந்தச் சிறுவர்கள், தாங்கள் உன் மக்கள் இல்லை, பாரதத்தின் வீரமக்கள் என்பதை உணர்வார்கள். அந்தத்தாயின் குரலைக்கேட்டுத் தனி வாழ்வுச் சுகம் என்னும் உன் பேதைமைக் கூட்டை உடைத்தெறிந்து விட்டுப் பறந்து செல்வார்கள், பொழுது புலரும் திசையை நோக்கி. அப்போதாவது நீயும் அவர்களுடன் போ. தாயே...நான் போகிறேன். சாவு என்னை அழைக்கிறது. (போகிறாள்)

வெங்க: போய் விட்டாளா, பாதகி? ஆனால் உண்மையாக இருக்குமோ? அவள் பேச்சு விளங்கவில்லை. அதில் உண்மை இருக்குமோ? யார் கண்டது! பொழுது புலர்கிறதா, நாளைக்கா? ஏது, எனக்கு நம்பிக்கையில்லை. நாளை வருவது வரட்டும், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. இன்று கையில் தெற்கு அரண்மனை, மூன்று லட்சம் ரூபாய்... மூன்று லட்சம் ரூபாய்! (போகிறாள்)

3

[வெங்கம்மா தேவி அரண்மனையின் முன்புறம் உள்ள வீதி. நாலைந்து பேர் பின்தொடரச் சந்நியாசி ஒருவன் பாடிக்கொண்டு வருகிறான்.]

சந்நி:
சங்கர சங்கர சம்போ - நீல

எல்லோரும்:
சங்கர சங்கர சங்கர சம்போ.

சந்நி:
எங்கிருந்தோ விஷப்பாம்பு -
வெள்ளைப்பாம்பு-கள்ளப் பாம்பு-இங்கே
இருக்க இடந்தேடி வந்ததால் தீம்பு
தங்கவிடாமலே சாடு - பாம்பு
சாய்ந்து விட்டால் இந்தச் சாவடி விடு.

எல்லோ:
சங்கர சங்கர சம்போ.

சந்நி:
மூன்று கடல் அகழ் கொண்டு - விண்ணை
முட்டும் பனிமலை மாமதில் கண்டு
ஆன்ற பழம் பெருங் கோட்டை - இதில்
ஆடுது பார் வெள்ளைப் பேய் உயிர் வேட்டை.

எல்லோ:
சங்கர சங்கர சம்போ.

சந்நி:
செல்வம் கொழித்தது பண்டு - அதைத்
தின்று பருத்தது காண் வெள்ளை நண்டு
வல்லவர் நீங்கிது கண்டு - நாலு
வாக்கின்படியே எழுந்தனர் நன்று.

எல்லோ:
சங்கர சங்கர சம்போ.

[காவலாளி வருகிறான். அவனோடு வெங்கம்மா தேவியின் குமாரர்கள் ரகுபதியும், முராரியும் வருகிறார்கள்.]

காவலாளி: நிறுத்துங்கள். இதென்ன ஐயா, காலை நேரத்தில் கூச்சல்?

சந்நி: சிவோகம். சிவோகம். மகனே, என்ன சொல்லுகிறாய்? காலை நேரத்தில் என்ன கூச்சலென்று கேட்கிறாய்? அப்படிக் கேள், வீர மகனே, அப்படிக் கேள். காலை வந்தது. ஆகவேதான் மகாதேவனைத் தொழுகிறோம். திரிபுரம் எரித்த கால காலனை ஏத்துகிறோம். நாமும் திரிபுரம் எரித்து அசுரர்களை அழித்து உயிர்க் குலத்தின் விடுதலையைக் காண வேண்டாமா? காலை வந்தது. இத்தருணம் தப்பினால் இருப்பது மரணம். ஆம், மகனே, வா. நீயும் வா, சங்கரனைப் பாடுவோம். சங்கார வடிவங்களாக நிற்கும் வலிமையைப் பெறுவோம். நிலைமை மிதித்து ஆனந்த நடனம் புரிவோம். வா....

காவலாளி: ஏய், பக்கிரி! உன் ஆரவாரத்தையும் வாய் வீச்சையும் இங்கே வைத்துக் கொள்ளாதே. இது ராணி வெங்கம்மா தேவியின் அரண்மனை. இங்கே உன் கூச்சலை யெல்லாம்...

சந்நியாசி: அரண்மனையா? அதுதான் இப்படிப் பாழடைந்து கிடக்கிறதோ? இறைவனைப் பிரும்மார்த்தத்தை நோக்காத உயிரைப் போல். அரண்மனையா? இங்கேதான், இங்கேதான். கேளுங்கள் சகோதரர்களே,

செல்வம் கொழித்தது பண்டு - அதைத்
தின்று பருத்தது காண் வெள்ளை நண்டு.

ரகுபதி: பெரியவரே! அது வெள்ளை நண்டு என்கிறீர்கள்? நண்டு செல்வத்தைத் தின்னுமா?

சந்நி: மகனே! வெள்ளை என்றும் அறியாமை என்பது பொருள். அறியாமையினால் வேற்றுமை விளைந்தது. வேற்றுமையால் ஜுரமும், பயமும், துரோகமும் பெருகின. செல்வம் மறைந்தது. சுதந்திரம் தேய்ந்தது. இதை இங்கே நாகபுரியில் நீ காணவில்லையா? உன் தந்தை ஆண்ட அரண்மனையில் நாயும் நரியும் கொலுவிற்றிருப்பதை நீ பார்க்கவில்லையா?

முராரி: ஆமாம். அதற்கென்ன செய்வது?

சந்நி: அதற்கா?

வல்லவர் நீங்கிது கண்டு - நாலு
வாக்கின்படியே எழுந்தனர் நன்று

ரகுபதி: நாலு வாக்கா?

சந்நி: ஆம் மகனே, பாரதப் பெருநாட்டில் உள்ள நாலுவிதமான மக்களுடைய வாக்கு. அது ஒரு ரகசியம். உபதேசமானவர்களுக்கே தெரியும்.

முராரி: பெரியவரே! இவர்கள் அனைவரும் உபதேசம் பெற்றவர்களா?

சந்நி: ஆம், அப்பனே! இவர்களைப் போல் ஆயிரம் ஆயிரம் சீடர்கள் இந்தக் கட்டைக்கு உண்டு. எல்லோரும் பிரும்மார்த்தத்தை அறிந்தவர்கள். வெள்ளை என்ற அறியாமை விஷப் பூண்டை வேரோடு அழிக்கக் கங்கணம் பூண்டவர்கள். வீடு என்ற விடுதலையை நோக்கி நாலு வாக்கின்படி நடப்பவர்கள்.

ரகுபதி: அப்படியானால் எனக்கும், தம்பி முராரிக்கும் உபதேசம் செய்கிறீர்களா?

சந்நி: உன் பெயர் என்ன?

ரகுபதி: என் பெயர் ரகுபதி. இவன் என் தம்பி முராரி. நாங்கள் ராணி வெங்கம்மா தேவியின் மக்கள்.

சந்நி: உபதேசம் வேண்டும் என்கிறாயா? செய்வோம். உபதேசம் செய்வது தானே இந்தக் கட்டையின் பணி. ஆனால் ஒன்று...

முராரி: என்ன, சுவாமி?

சந்நி: நீங்கள் இந்தப் புண்ணிய பூமியைத் தொட்டுச் சத்தியம் செய்து தர வேண்டும்.

ரகுபதி: எதற்கு?

சந்நி: உபதேசத்தின்படி நடப்போம், இரகசியத்தைக் காப்பாற்றுவோம், உயிர் போனாலும் உறுதியாய் இருப்போம் என்று.

ரகுபதி (நகைத்து): துறவியே! பான்ஸ்லேயின் அரச ரத்தம் என்னுடைய உடம்பில் ஓடுகிறது. என் சொல் போதாதா? சத்தியம் செய்து தர வேண்டுமா? சொன்ன சொல்லை மீறும் கயவர்களுக்கா நீங்கள் உபதேசம் செய்யப் போகிறீர்கள்? அப்படியானால் உங்கள் உபதேசம் தேவையில்லை.

சந்நி: பொறு, மகனே, பொறு. பொறுத்தவர் மறுபடியும் பூமி ஆள்வார்.

முராரி: இப்படித்தான் பணத்துக் காகப் பொறுத்திருக்கும்படி வெள்ளையர்கள் கூறுகிறார்கள். நீங்களோ உபதேசத்துக்கும் பொறுத்திருக்கச் சொல்லுகிறீர்கள்.

சந்நி: அதற்கும் பொறுத்திருக்க வேண்டாம். பூமி ஆள்வதற்குத்தான் பொறுத்திருக்கும்படி சொன்னேன். உபதேசத்தின் முற்பகுதியை இப்போதே தொடங்கலாம். ஜய பவானி.

எல்லோ: ஹர ஹர மகாதேவ்.

சந்நி: மாதா யார்?

எல்லோ: பாரத மாதா.


புதுப்
பொலிவின்
Remy
SNOW
சாயி சுப்புலக்ஷ்மி
ரெமி
ஸ்னோ & பவுடர்


குதூகல தீபாவளிக்கு
இணையற்ற பரிசு
TELERAD
டெலிபங்கன்
முறையில்
உன்னத தயாரிப்பு
டெலிராட்
மாடல் D 778
விலை ரூ. 785/-
(வரிகள் தனி)
சென்னை. ஆந்திர ராஜ்யங்களுக்கு வினியோகஸ்தர்கள்
ஒபுல் ரெட்டி (மதருஸ்)
பிரைவேட் லிமிடெட்
31, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு,
சென்னை-2

சந்திரி: பிதா யார்?
எல்லோர்: இறைவன்.
சந்திரி: ஈச்வர்.
எல்லோர்: அல்லாஹ்.
சந்திரி: அல்லாஹு அக்பர்.
எல்லோர்: ஹர ஹர மகாதேவ்.
சந்திரி: காலம் எது?
எல்லோர்: விடியற்காலம்.
சந்: பூத்தது எது?
எல்லோர்: செந்தாமரை.
சந்திரி: (ரகுபதி, முராரி இருவரையும் பார்த்து) புரிந்ததா?
ரகுபதி: இல்லை.
முராரி: இல்லை.
சந்திரி: வானமே தந்தை, வையமே தாய். நாம் அனைவரும் சோதரர். இந்து, முஸ்லீம், ஏழை, பணக்காரன், அனைவரும் பாரதத் தாயின் வயிற்றிலே பிறந்த சோதரர்.
முராரி: முஸ்லீமும் இந்துவும் எப்படிச் சகோதரர்களாக வாழ முடியும்? சத்திரபதி சிவாஜியை எதிர்த்துச் சிறைபிட்ட முஸ்லீமை இன்று நாம்....
ரகுபதி: அது பழங்கதை. அதற்காக நாம் இரு சாராரும் ஒருவரையொருவர் பகைத்து, அன்னியனுக்கு இடந்தரவேண்டுமா? என்பதே சுவாமிஜியின் கருத்து.
சந்திரி: நல்ல போடு போட்டாய். மகனே இதற்குமேல் பேச வேண்டுமானால் தனியாக நாம் பேசவேண்டும். (தணிந்த குரலில்) நாட்டின் குரல் பிரும்மாவர்த்தத்தில் நானாசாஹேபாகப் பேசுகிறது. ஜான்ஸியில் ராணி லக்ஷ்மிபாயாக அதிர்கிறது. மகாராஷ்டிரத்தில் தளபதி தாந்தியா தோபேயாக வடிவெடுக்கிறது. எங்கும் ஆயிரம் ஆயிரம் சுதந்திர வீரர்களாக முளைக்கிறது. இதை யெல்லாம் நீ தெரிந்து கொண்டால் இங்கே நாகபுரியில் சுதந்திர தேவியின் முதல் தொண்டர்களாக நீயும் உன் சகோதரனும் திகழலாம். என்ன சொல்கிறாய்?
முராரி: முழு விவரமும் தெரியாமல் எப்படி....?
ரகுபதி: தெரிந்து கொள்வோமே! பெரியவரே! உன்னோ, எங்கள் அரண்மனைக்குள்ளே, போவோம். அங்கே பேசிக் கொள்வோம். என்ன முராரி, சரிதானே?
காவலாளி: எனக்கும் சரி என்று தோன்றவில்லை.
முராரி: உன்னை யார் கேட்டது? பேசாமல் இரு. போகலாமா, சுவாமி?
சந்திரி: போகலாம், போகலாம்.

பொழுது புலர்ந்தது. பூமி ஒளிர்ந்தது.
பொய்கையில் பூத்தது தாமரை
—செந்தாமரை

பொய்கையில் பூத்தது தாமரை.
எல்லோரும்:
பொய்மையை நகர்ந்தது தாமரை
—செந்தாமரை.
(எல்லோரும் போகிறார்கள்.)

4

[இரண்டாம் காட்சியில் கண்ட ராணி அன்னபூர்ணி தேவியின் பூஜை அறை. அதே பவானி சிலை. ஆனால் சரவிளக்கும், மலர்களும் இல்லை. கையிலே ஓலைச்சுருள் ஒன்று ஏந்தி வெங்கம்மா தேவி வருகிறாள்.]



கோமாளி: ஐயோ, கடவுளே! எல்லாரும் என் சொக்காயைப் போட்டுக் கிட்டாங்களே! நான் இனிமேல் எந்தச் சொக்காயைப் போட்டுக் கொள்வது?

வெங்க: வேடிக்கையாகத்தான் இருக்கிறது. பறங்கியின் துப்பாக்கியைப் பக்கிரிப் பட்டாளம் எதிர்க்கப் போகிறதாமே? பயமாகவும் இருக்கிறது. என்ன சொல்கிறாள் இந்த ஜான்ஸி ராங்கிக்காரி? (ஓலையைப் பிரித்துப் பார்த்த வண்ணம்)

மேரி ஜான்ஸி நஹீன் தேங்கே. ஜான்ஸியைத் தரமாட்டாளாம். அவளுடைய ஜான்ஸியைத் தரமாட்டாளாம். தரவேண்டாமே? எடுத்துக் கொள்ளுகிறார்கள். அவ்வளவுதானே? இங்கேயும் ராணி அன்னபூரணி தேவி அப்படித்தான் ஆடினாள். போய்த் தொலைந்தாள். ஆனால்....ஆனால்....இந்த வெள்ளையரையும் நம்ப முடியவில்லை. மூன்று வருஷமாக எனக்குத் தருவதாகச் சொன்ன பணத்தை அவர்கள் தரவில்லை. ஏதோ காரணம் சொல்லுகிறார்கள். அல்லது மௌனம் சாதிக்கிறார்கள். இந்த அரண்மனை கேட்பாரற்று, மாட்டுக் கொட்டில் ஆகிவிட்டது. மக்களோ.........அவர்கள் போக்கோ புரியவில்லை. பழையவாம், புராண படனமாம், நள்ளிரவில் பூஜையாம்! யார் யாரோ பக்கிரிகளும், சந்நியாசிகளும் ஏதேதோ பிரசாரம் செய்து கொண்டு திரிகிறார்களாம். அடிக்கடி, வீதியெங்கும் 'ஹரஹர மகாதேவ்' என்ற மராட்டிய சிங்கநாதம் ஒலிக்கிறது. அன்னபூரணிதேவி சாவதற்குமுன் ஏதோ வெறியில் பேசினாளே, அது உண்மையாக முடியுமோ? என் செல்வங்கள் ரகுபதியும், முராரியும்-என்ன சொன்னாலும் கேளாமல் மக்களோடு கலந்து உறவாடுகிறார்கள். செந்தாமரைப் பூ ஒன்று கைவிட்டு கைக்கு மக்களிடையே செல்கிறதாம். இரகசியப் பேச்சு, கலகம், குழப்பம், புரட்சி...ஐயோ. பறங்கியன் துப்பாக்கி முழக்கம்...என்ன ஆகுமோ, தெரியவில்லை. இந்த அழிவில் என் உதவி வேண்டுமென்கிறான், புருஷ வேஷம் பூண்டு திரியும் இந்த ஜான்ஸிப் பெண் அரசி. என் உதவியாம்! நான் என்னையும் என் குழந்தைகளையும் காத்துக் கொள்வதா, பிரும்மாவர்த்தத்திலிருந்து தாக்கிறு அனுப்பும் இந்தப் பிராமண பேஷ்வா நானாசாஹேப் சொல்வதைக் கேட்பதா? வேடுவச்சி என்று என்னை

ஒதுக்கித் தள்ளிய இந்தப் பிராமண பேஷ்வாவை எப்படி நம்புவது? என்ன ஆகுமோ தெரியவில்லை. யாரங்கே?

[காவலாளி வருகிறான்]

காவலாளி : மஹாராணி.

வெங்க : ராஜகுமாரர்கள் எங்கே?

காவலாளி : யாரோ ஒரு சந்நியாசியோடு...

வெங்க : உனக்கு எத்தனை தடவை சொல்வது? வெளியிலே அவர்களைப் போக விடாதே. இந்த வேஷதாரிகளோடு பழக விடாதே என்று?

காவலாளி : என்னைக் கோபித்தால்... நான்...நான்... என் பேரில் குற்றமில்லை. ராணி சாஹிபா. நான் தடுத்தால் குமார ராஜா ரகுபதி பகதூர் சிரிக்கிறார். முராரி பகதூர் வாளை உருவுகிறார்.

வெங்க : இப்போது அவர்கள் எங்கே?

காவ : இங்கேதான் வருகிறார்கள். அந்தச் சந்நியாசியோடு மேலக் கொத்தளத்தில் ஏதோ இரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். வெள்ளை நண்டை ஏதோ என்று....

வெங்க: வெள்ளை நண்டைத் தின்பதா? என்ன உளறுகிறாய்?

காவ : அப்படித்தான் என் காதில் விழுந்தது. அந்தச் சந்நியாசி அதைத் தான் உபதேசிக்க வந்தாராம். என்ன இருந்தாலும் நண்டை, அதுவும் வெள்ளை நண்டைத் தின்பது என்றால்...ஐயே...மன்னிக்க வேண்டும், ராணி ஸாஹிபா.

வெங்க : அட மூடமே, உன்னை யார் தின்னச் சொல்கிறார்கள்? ஏன் அவர்களை விட்டு வந்தாய்?

காவ : என்னை இருக்கப்படாது என்று விரட்டி விட்டார்கள். ராணி ஸாஹிபா இன்னொரு விஷயம்.

வெங்க : கந்த வீரன்தான். என்ன இன்னொரு விஷயம்?

காவ : அது...அது...அது இரகசியமாம். பிரும்மாவர்த்தமாம், நானாவாக்காம், செந்தாமரையாம்.

வெங்க : அட, சனியனே! இங்கேயே வந்துவிட்டதா? என் குழந்தைகளையே பலியிடப் போகிறார்களா? அரே, துக்காஜி, நீ ஓடிப் போய், இரு...இரு. அதென்ன சத்தம்?

[சந்நியாசி, ரகுபதி, முராரி, மற்றையோரும் வருகிறார்கள்.]

சந்நி : பொழுது புலர்ந்தது. புன்மை அகன்றது. பொய்ம்மையில் பூத்தது தாமரை.

எல்லோரும் : செந்தாமரை — பொய்மையைத் தகர்த்தது தாமரை.

வெங்க : இதுவென்ன நாடகம்? நீ யார்?

சந்நி : நான் ஒரு ஏழைத் துறவி, ராணி ஸாஹிபா.

வெங்க : இங்கே என்ன வேலை உனக்கு? அரண்மனையில் எப்படிப் புகுந்தாய்?

சந்நி : எனக்கு—நான் சந்நியாசி—எங்குமே வேலை உண்டு, மகாராணி. இது அரண்மனையா? நீங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது. மாட்டுக் கொட்டில் என்று நினைத்தேன்.

வெங்க : ஏய், பக்கிரி என்ன சொல்லுகிறாய்?

ரகுபதி, முராரி (கோபமாக) **:** சுவாமி!

சந்நி (நகைத்து) **:** கிடேவா நடம், கோடாலம். இந்தச் சினம் தன்மானத்தில் பிறந்தது: ஆகவே இதை வரவேற்கிறேன். இந்த அரண்மனையை மாட்டுக் கொட்டில் என்று சொன்னது பொறுக்கவில்லையே. இந்தப் பாரத நாடு முழுவதையுமே தன் குதிரை லாயமாக, பண்டகசாலையாகக் கருதி, இந்தப் பழம் பெரும் நாட்டைக் கடுகாடாக்கி விட்டானே வெள்ளையன். அதை எப்படிப்பொறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

முராரி (வாளை உருவி) **:** சகித்துக் கொண்டிருக்கும் பேடி எவன்? இதோ பான்ஸ்லேயின் வாள் பறங்கியின் இரத்தம் குடிக்கத் துடிக்கிறது.

வெங்க (சந்நியாசியைப் பார்த்து) **:** அட பாவி! இந்தக் குழந்தையை அதற்குள் மயக்கி விட்டாயா? கலகக் கூட்டத்தில், சதிகாரக் கும்பலில் சேர்த்து விட்டாயா? மகனே, முராரி! இப்படி வா. ரகுபதி நீயும் வா! நீங்கள் புத்திசாலிகள் என்றல்லவா நினைத்தேன்? பிராம்மண பேஷ்வாவின் கையாளான இந்தக் கபட சந்நியாசியின் பேச்சை நம்பி நம்மைக் காத்து வரும் ஆங்கிலேயருக்குத் துரோகம் எண்ணலாமா? பான்ஸ்லே வம்சம் செய்ந்நன்றி கொன்ற பாதகத்தில் இறங்குமா?

சந்நி : கேட்டாயா, மகனே! உன் தாய் சொல்வதைக் கேள். நாட்டை விழுங்கி விட்டு நாலு பணம் பிச்சைக்காக வீசி எறிந்த அந்நியனுக்கு நன்றி செலுத்த வேண்டுமாம். மாதரு தேவோ பவ என்று வேதம் பேசுகிறது. தாய் தருமோபதேசம் செய்கிறாள். அதைக் கேள். அப்பா!

ரகுபதி : சுவாமி! எங்கள் தாய் அன்பு மிகுதியால், ஏதோ தெரியாமல் பேசுகிறாள். கொஞ்சம் பொறுங்கள். அம்மா, யாருக்கு யார், அம்மா நன்றி செலுத்துவது? எங்கிருந்தோ வந்தான்; நமக்குரிய இந்த நாட்டைத் தன்னுடையது என்று வாரிக் கட்டிக் கொண்டான். பான்ஸ்லேயின் முதல் ராணிக்கு மக்கள் இல்லையென்றால், பறங்கியா நாகபுரி அரசுக்கு உரிமை கொண்டாடுவது? அவன் என்ன, தாயாதியா, எடுத்துக் கொண்ட நாட்டை ஏப்பம் விடுவதற்கு? அந்நியனை இந்த நாட்டிலிருந்து விரட்டும் வரையில் இந்த வாளும் உறைபுகாது.

[வாளை உருவுகிறான்]

வெங்க (அழுது கொண்டு) **:** அந்தப் படுபாவி அன்னபூரணி தேவி சொன்னது நடக்கத் தலைப்பட்டு விட்டதே! அப்பா, ரகுபதி, இந்தச் சந்நியாசியை நம்பாதே. வெள்ளையரை எதிர்க்க நம்மால் இயலாது. பிராம்மண பேஷ்வாவை...

முராரி : இது வெள்ளையன் சூழ்ச்சி, அம்மா! பிரிந்து நின்றோம். உண்மைதான். இதை அவன் வளர்த்தான் தன் லாபத்துக்காக. அந்தணன், பறையன், இந்து, முஸ்லீம் என்று பிரிந்து பிரிந்து அந்நியனுக்கு இடம் தந்தோம். விழித்துக் கொண்டோம். நாமிருக்கும் நாடு நம்முடையது என்பதை அறிந்தோம். இது நமக்கே உரியது என்பதும் அறிந்தோம். இனி ஏமாற மாட்டோம்.

ரகுபதி : ஆம், அம்மா! இனி இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று: ஒரே நிறை. ஒரே நிலை; எல்லோரும் சோதரர். அடிமை வாழ்வு எந்தத் தாழ்வுகளை, வேற்றுமைகளை அழித்து விட்டது. இனி அடிமை நிலையை அழிக்க வேண்டியது தான். மகாராஷ்டிரம், ராஜபுதனம், அயோத்தி, டில்லி அனைத்தும் விழுகொண்டெழுந்தன. ஜான்ஸி தேவி நாட்டுப் பணிக்கு அழைக்கிறாள். தளபதி தாந்தியா தோபே வீரவாழ்வுக்கு வழிகாட்டுகிறார். நாங்கள் போகிறோம், அம்மா!

வெங்க (வெறி கொண்டவள் போல்) **:** பாவி, பாவி, என் குடியைக் கெடுக்க வந்தாயே, மகனே, போகாதே. உன் தாயின் ஆணை. போகாதே. போனால், போனால்... ஐயோ, வெள்ளையன் சுட்டு விடுவான். போகாதே.

முராரி : போவதை இனி நிறுத்த முடியாது.

வெங் : நிறுத்த முடியாதா? ரகுபதி நீ என்ன சொல்கிறாய்?

ரகுபதி : ஆம் தாயே! போய்த்தான் ஆக வேண்டும். நாடு அழைக்கிறது. வீரமும் தன்மானமும் போ என்று கட்டியம் கூறுகின்றன.

வெங்க : நிறுத்த முடியாதா? நிறுத்த முடியாதா? இரு. நானே ஆங்கிலத் தளகர்த்தருக்கு உங்களைப் பற்றிச் செய்தி அனுப்பி விடுகிறேன். உங்களை அவன் கொன்றாலும்....கொல்ல மாட்டான்.

சந்நி : பேதையே! என்ன பேசுகிறாய்? அந்நியனுக்கு உன் வயிற்றில் பிறந்த மக்களையே காட்டிக் கொடுப்பாயா? நீ என்னதான் செய்ய மாட்டாய்? பவானி தேவியின் சந்நிதியில் இருந்த இந்த வாடா விளக்கை அணைத்து இருட்டாக்கிய நீ என்னதான் செய்ய மாட்டாய்? உன் போன்ற துரோகிகளால் அல்லவா இந்தப் பாரத நாடு அடிமை நாடு ஆயிற்று? செம்புக்கும் கொம்புக்கும் அந்நியன் விற்றுவைப்பட்டது. போ! போ! அந்நியனிடம் போய் உன் துரோக முறையீட்டைச் செய். ஆனால் ஒன்று. உனக்கும் சுதந்திர பாரதத்தில் இடம் உண்டு. புலர்கின்றபொழுது, தாமரைக்கு மட்டுமா, கள்ளிக்கும்கூடத்தானே!

வெங்க : நான்...நான்...போகிறேன். அன்ன பூரணி தேவி, செத்தும் சாகாமல் இருந்து என்னை வதைக்கிறாய். உன்னை விழுங்க நரகம் ஒன்றும் இல்லையா?

[போகிறாள்]

ரகுபதி (கோபத்தோடு) **:** அம்மா! என்ன பேசுகிறாய்?

சந்நி : அவள் போகட்டும். ஒன்றும் கடுமையாகச் சொல்லாதே. என்ன இருந்தாலும் உன் தாய்.

ரகுபதி : இல்லை, சுவாமி! இனி பாரதமே என் தாய். அவள் பணியே என் வாழ்வு. அவள் பொருளே இந்த உயிர். பாரதத் தாய்....

அனைவரும் : வாழ்க.

ரகுபதி : பாரதத்தாய்.


அனைவரும் : வாழ்க!

சந்நி : ஆம், மகனே, ஆம்.

ஆற்றும் நதிநாம் சாது — என்ற
ஆண்மை முடிவை அகத்தினில் மேவு.
ஏறேன வாள் கொண்டு தாவு — அதை
எட்டிக் களைந்தும் நேத்தினில் ஏவு.

பொழுது புலர்ந்தது பொய்ம்மை
தகர்ந்தது.
பூத்தது தெய்வீகத் தாமரை -
செந்தாமரை
பூத்தது புண்ணியத் தாமரை
ஜய பவானி!

அனைவரும் : ஹர ஹர மகாதேவ்.



உங்கள்
பல் டாக்டர்
'கோலினஸ்'
முறை
பற்களின்
ஆரோக்கியத்திற்கு
உகந்தது
எனக் கூறுவார்



புதிய சேர்க்கை 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசை அதன் 3 சுத்திகரணிகள் மூலம் பற்களை சுத்தம் செய்வதுடன் அவற்றைப் பாதுகாக்கிறது

இது புதியது! இது சிறந்தது! ஏனெனில், 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசை அளிக்கும் நுரையில் சாதாரணமாகவுள்ள 2 சுத்திகரணிகளுக்குப் பதில் 3 சுத்திகரணிகள் உள்ளன. இந்த அதிகப்படியான சுத்திகரணியுள்ள பற்பசையினால் பல் துலக்கும்போது பற்களிடையில் இருக்கும் சொத்தைப் பற்கள் ஏற்படுவதற்குக் காரணமான உணவுத் தூள்கள் அகற்றப்படுவதுடன் உங்கள் பற்களை இயற்கையான வெண்மையுடனும் பிரகாசத்துடனும் இருக்கச் செய்கிறது. வேறெந்தப் பற்பசையும் உங்களுக்கு இதைவிட அதிக திருப்தியை அளிக்கமுடியாது.

கோலினஸ் ஆரோக்கியமான பற்களை அளிக்கும்

'கோலினஸ் முறை' உங்களுக்கு அதிக ஆரோக்கியமான பற்களை அளிக்கும்

உங்கள் பல் டாக்டரைக் கேளுங்கள்

1. சரமான டூத் பிரஷின்மீது அரை அங்குல அளவுமட்டும் 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசையை உபயோகிக்கவும்.
2. காலையிலும் இரவிலும் இரண்டு நிமிஷங்களுக்கு உங்கள் பற்களின் எல்லாபாகங்களையும் நன்கு கவனித்து துலக்கவும்.
3. இரவில் பல் துலக்குவது மிகவும் அவசியம். ஏனெனில் அது சொத்தைப் பற்களுக்கு முக்கிய காரணமான உணவுத் துணுக்குகள் பற்களிடையில் தங்க விடாமல் வெளியேற்றுகிறது.
4. உங்கள் பல் டாக்டரிடம் வருஷத்திற்கு இரு முறையாகிலும் சென்று பற்களைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள்.

Registered User : GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.



தமாஷ் பலவிதம்
சிலந்தி:- பழைய கூடு எல்லாம் பூச்சிகளுக்கும் பழகிப் போச்சு. அதுக்குத் தான் புது மோஸ்தரில் ஒரு கூடு கண்டு பிடிச்சேன்!
என்னைக் கல்யாணம் செய்து கொள். வாழ்க்கை பூராவும் உன்னைச் சிரித்த முகமா வைத்துக் கொண்டிருக் கிறேன்.
எழுத்து வந்த விதம்
மனிதன் முதலில் தோன்றிய புடன் எழுத்துக்களைக் கல்லில் செதுக்கினான் என்றும்.....
..பிறகு ஓலைச் சுவடிக ளில் எழுதிய வரலாறும்.. பிறகு, காலம் கடந்து...
..அச்சடிக்கும் யந்திரம் வந்தது என்றும், சரித்திரம் கூறுகிறது. ஆனால்.....
இதற்கெல்லாம் முன்னால் முதன் முதலில் பிரம்மா மனிதனின் தலையில் எழுத ஆரம்பித்து விட்டதை எல்லோரும் மறந்து விட்டார்கள்.
சலூன்
சலூன்
1
அழாதே குழந்தை இந்தா காசு!
2
3
4
கா மா
இந்த உலகம் ஏன் இப்படி ஆகிவிட்டது! இந்த மனுஷன் கடந்த ஒரு மணி நேரமா மயக்கமா கிடக்கான். ஒருபயலாவது உதவி செய்ய வரலியே, பார்த்தீரா!



பாரதியாரும்

சுப்பிரமணிய பாரதியார் 1908ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசியலாரின் அடக்குமுறையிலிருந்து தப்ப பிரெஞ்சு ஆட்சியின் கீழ் இருந்து வந்த புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தார். அங்கே பத்து ஆண்டுகள் தங்கினார். வறுமை வாய்ப்பட்டுத் துன்பங்கள் பல அடைந்தார். ஆயினும், அப்புதுவையின் சூழ்நிலையில் தான் அவரது மேதாவிலாசம் பெருவிளக்கம் அடைந்தது. அங்கேதான் அவருடைய உள்ளமும் கவிதா சக்தியும் பூரண மலர்ச்சி அடைந்தது. அக்காலத்தில்தான் அவர் தம் தலைசிறந்த சக்திப் பாடல்களையும் வேதாந்தப் பாடல்களையும்; குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய அமர காவியங்களையும்; பகவத் கீதை, வேதரிஷிகளின் கவிதை, பதஞ்சலி யோகசூத்திரம் முதலிய நூல்களையும் இயற்றினார். சுருங்கக் கூறின், புதுவை வாழ்க்கையே தேசிய கவிஞராக விளங்கிய அவரைத் தெய்விகப் புலவராகவும் ஆக்கித் தமிழ் மொழியிலும் தமிழ் மக்கட் சமுதாயத்திலும் புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. அவர் 1918ல் புதுவையை விட்டுச் சென்னை சென்ற பின் சிறந்தவை எனச் சொல்லுதற்குரிய படைப்புக்கள் தோன்றவில்லை என்றே கூறிவிடலாம். புதுவையில் ஏற்பட்ட இம்மலர்ச்சிக்கு மகான் ஸ்ரீ அரவிந்தருடன் அவருக்கு ஏற்பட்ட தொடர்பே பெரிதும் காரணமாயிருந்தது என்பது இன்று அறிஞர் பலரின் பொதுக் கருத்தாகும். ஆனால் இத் தொடர்பு எத்தகையது? ஸ்ரீ அரவிந்தர் பாரதியாரின் உணர்வின்மீதும் எழுத்தின்மீதும் சிந்தனையின் மீதும் செலுத்திய செல்வாக்கு எந்தெந்த நிலைப்படிகளில் திட்டமாகக் காண்கிறது?— ஆகிய விஷயம் இன்னும் நன்கு ஆராயப்படாமல் இருந்து வருகின்றன. இலக்கிய விமர்சன ரீதியில் இத்தகையதோர் ஆராய்ச்சி எவ்வளவோ இன்றியமையாததல்லவா? இவ்வழியில் எம் சிற்றாராய்ச்சியில் கண்ட சில பொருள்களையும் பிரச்னைகளையும் கூறி உழைப்பும் ஆராய்ச்சியும் மிகுந்த எழுத்தாளர் இவற்றில் போதிய கவனம் செலுத்தத் தூண்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாம் மேற்கண்ட விஷயத்தில் நேராகப் புகுமுன், இவ்விரு மேதைகளின் ஆதி வரலாறுகளை ஒரு சிறிது அறிந்து கொள்வோம்.

ஸ்ரீ அரவிந்தர் 1872ல் பிறந்தார். அவரை விட இளையவரான பாரதியார் பத்தாண்டுகளுக்குப் பின் பிறந்தார். அரவிந்தர் சின்னஞ் சிறு வயதிலேயே இங்கிலாந்து சென்று கல்வி பயின்று மேலை நாட்டுக் கலை ஞானங்களின் கரையைக் கண்டார். 1893ல் தாய்நாடு திரும்பிப் பரோடாவில் அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்தார். உத்தியோக காலத்திலேயே கீழ்நாட்டு மொழிகள் கலைஞானங்களைக் கசடறக் கற்றார். மகாமேதையான அவரிடம் கீழ்நாட்டு நாகரிகமும் பண்பாடும் ஒன்றோடொன்று பொருந்தி இணைந்தன. 1902ம் ஆண்டிலிருந்தே அவர் நாட்டின் நிலையைப் பற்றிப் பெரிதும் கவலை கொள்ளலானார். திரைமறைவில் இருந்துகொண்டே அரசியலில் ஈடுபடலாரம்பித்தார். புரட்சியின் மூலம் விடுதலை அடைய, வெடி குண்டுகள் செய்வது, ஆயுதங்களைச் சேகரிப்பது, கொரில்லா யுத்த முறையில் பயிற்சி பெறுவது ஆகியவற்றைத் தம் திட்டமாகக்கொண்ட ரகசியப் புரட்சி சங்கங்களுக்கு ஆக்கமளித்து வந்தார். 1905ல் ராஜப் பிரதிநிதியான கர்ஸன் பிரபு வங்காளத்தைப் பிரிவினை செய்தார். மக்கள் கொதித்தெழுந்தனர். சுதேசி இயக்கம் நாடெங்கும் பரவியது. சுதந்திர தாகம் மேலிட்டது. வந்தேமாதர கோஷம் வானைப் பிளந்தது. மக்கள் தாய்நாட்டை அன்னையெனப் போற்றலாயினர். ஸ்ரீ அரவிந்தர் தம் வேலையை ராஜினாமா செய்து விட்டு, 1907ல் 'வந்தேமாதரம்' பத்திரிகையில் சேர்ந்து அதை மும்முரமாக நடத்தினார். அவரது சங்கநாதத்தைக் கேட்ட மக்கள் வீறு கொண்டெழுந்தனர்.

பிறவிக் கவியாகிய பாரதியார் இளவயதிலேயே கவிகள் பாடினார். 16 முதல் 20 வயது வரையில் காசியில் உயர் கல்வி பயின்றார். வடநாட்டின் சூழ்நிலையில் அவர் மனமும் உள்ளமும் விரிவடைந்தன. நாட்டுப் பற்றும் அதிகரித்தது. 22-ம் வயதில் அவர் மதுரையில் தமிழ்ப் பண்டிதரானார். ஆனால் விதி அவரைச் சென்னை மாநகரின் பெருவாழ்வுக்கு இழுத்துச் சென்று நாட்டுக் கிளர்ச்சியில் ஈடுபடுத்தியது. 1905ல் நாடெங்கும் பரவிய கொந்தளிப்பு அவரையும் தாக்கியது. வங்காளமே அதுசமயம் அரசியல் எழுச்சியில் தலைமை வகித்தது. பங்கிம் சந்திரரின் வந்தேமாதர கீதம் நாட்டின் சுதந்திர கீதமாகியது. அவர் எழுதிய ஆனந்த மடம் புரட்சி உணர்ச்சியை ஊட்டியது. பாரதியார் வந்தேமாதர கீதத்தைத் தமிழ்ப் படுத்தினார். 1906ல் கல்கத்தா காங்கிரஸில் கலந்துகொண்டார். தனிச் சுயராஜ்யமே நம் லட்சியம் என அது தீர்மானித்தது! காங்கிரஸிலிருந்து திரும்பி வருகையில் பாரதியார் நிவேதிதை அம்மையைச் சந்தித்தார். தாய்நாட்டை அன்னையெனப் போற்றுமாறும் சக்தியை வழிபடுமாறும் அவர் பாரதிக்கு உபதேசம் செய்தார். சென்னைக்குத் திரும்பி வந்ததும் பாரதியார் 'இந்தியா' பத்திரிகையில் உணர்ச்சியுடன் எழுதலானார். அரவிந்தர் நடத்திய 'வந்தேமாத'ரத்தைப் போலத் தென்னாட்டில் 'இந்தியா' விளங்கியது. தமிழ் நாட்டினருக்கு மேலும் சூடு ஏற்றப் பாரதியார் விபின்சந்திர பாலரைச் சென்னைக்கு அழைத்து வந்து உணர்ச்சி வைக்கின்றும் சொற்பொழிவுகளை ஆற்றச் செய்தார். 1907ம் ஆண்டின் இறுதியில் தமிழர் கோஷ்டிக்குத் தலைமை வகித்துச் சூரத் காங்கிரசுக்கும் சென்றார். திலகருடனும் ஸ்ரீ அரவிந்தருடனும் அவருக்குப் பரிச்சயமேற்பட்டது. ஸ்ரீ அரவிந்தர் 'வந்தேமாதர'த்தில் எழுதி வந்ததைப் போலவே பாரதியாரும் 'இந்தியா'வில் ஆவேசம் பொங்க எழுதி வந்தார். தேசியப் பாடல்கள் அதில் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்தன. 'இந்தியா' அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு இலக்காயிற்று. பாரதியார் 1908ல் ரகசியமாக வெளியேறிப் புதுவையில் அடைக்கலம் புகுந்தார். 'இந்தியா' புதுவையில் தொடர்ந்து நடந்தது.

நிற்க, ஸ்ரீ அரவிந்தர் வெடி குண்டு வழக்கொன்றில் சம்பந்தப்படுத்தப்பட்டு 1908 மே மாதம் 2-ந் தேதி கைதுசெய்யப்பட்டார். விசாரணையின் போது ஓராண்டு காவலில்வைக்கப்பட்டிருந்தார். பாரதியார் புதுவையில் இருந்துகொண்டே இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்து வந்தார். அரவிந்தர் 1909 மே மாதம் 9-ந் தேதி நிரபராதி என விடுவிக்கப்பட்டார். அரவிந்தர் 'கருமயோகி' என்னும் பத்திரிகையை ஆங்கிலத்திலும் 'தருமம்' என்னும் பத்திரிகையை வங்காளியிலும் நடத்தினார். அவற்றில் கீதை, உபநிடதங்கள், கலை, பண்பாடு, ஆத்மீகம் ஆகிய விஷயங்களைப் பற்றி எழுதியும் தேசிய நோக்கில் செய்திகளை விமர்சனம் செய்தும் வந்தார். அரவிந்தரின் இவ்வெழுத்துக்களை ஆர்வமுடன் படித்த பாரதியார் இவற்றைக் 'கருமயோகி', 'தருமம்' என்னும் தமிழ்ப்

அரவிந்தரும்

பத்திரிகைகளில் தமிழ்ப்படுத்தி வந்தார். அடக்குமுறை ஒருபுறமும் புரட்சி மற்றொரு பக்கமுமாகக் கோரத் தாண்டவம் புரிந்தன. அந்த நிலையில் ஸ்ரீ அரவிந்தர் தம் தலைமைப் பதவியைத் துறந்து சந்திரநாகூரில் யோகாப்பியாசம் செய்யத் தொடங்கினார். அவர் 1904-ம் ஆண்டிலிருந்தே யோக சாதனையில் ஈடுபட்டு வந்தவர். நாடு விடுதலை பெறச் சக்தியின் இன்றியமையாமையை உணர்ந்து சக்தியின் பொருட்டு யோகம் செய்ய ஆரம்பித்தவர். மெல்ல மெல்லத் தெய்வ சக்தியிடமே தம்மை ஒப்படைத்து உள்ளத்தில் உதித்த தெய்வ ஆணையின் படியே பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். புதுவை சென்று அமைதியாக யோகம் செய்ய வேண்டும் என்னும் ஆணை அவருக்குப் பிறந்தது. அதன்படியே அவர் கல்கத்தாவிலிருந்து 1910 ஏப்ரல் 1ந் தேதி புறப்பட்ட டூப்லேக்ஸ் கப்பலில் ரகசியமாக ஏறி, ஏப்ரல் 4ந்தேதி புதுவையை அடைந்தார். புதுவையில் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்வதன் பொருட்டு ஸ்ரீ அரவிந்தரால் அனுப்பப்பட்ட 'மோனி' என்ற சுரேஷ் சக்கரவர்த்தி அரவிந்தரின் வருகையைப் பாரதியாரிடம் அறிவித்திருந்தார். மண்டயம் ஸ்ரீனிவாசாச்சாரியும் பாரதியும் துறைமுகம் சென்று அரவிந்தரை வரவேற்று, கலவை சங்கரன் செட்டியார் இல்லத்துக்கு அழைத்து வந்தனர். ஒத்த பண்புடையவர்களின் உறவின்றி வாடிய பாரதியாருக்கு இம் மகானின் வரவு உற்சாகமும் புத்துயிரும் அளித்தது என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ அரவிந்தர் முதல் மூன்று நான்கு ஆண்டுகள் மிக எளிய வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. போதிய பொருள் இன்மையால் வசதியான வீடு கிடைக்கவில்லை. அடிக்கடி வீடு மாறவேண்டியிருந்தது. ஆயினும் அவர் யோக நிலையில் அமர்ந்து தம்முடன் ஒட்டிக்கொண்டிருந்த சீடர் மூவருடன் அமைதியாகவே வாழ்ந்து வந்தார். அக்காலங்களில் ஒவ்வொரு நாளும் தம் அறையில் அமர்ந்து நீண்ட நேரம் யோக சாதனை செய்வார். குறித்த நேரங்களில் நூல்கள் படிப்பார். எழுதுவார். மோனி, நளினி, சௌரின் ஆகிய சீடர்களுக்கு லத்தீன், கிரேக்க, பிரெஞ்சு மொழிகளில் பயிற்சி அளிப்பார். நாள்தோறும் எட்டு மணி நேரம் நடந்து சென்று வந்ததாயும் ஒரு சமயம் கூறியிருக்கிறார். பொதுவாக, தனிமையில் வாழ்ந்து வந்த போதிலும் தம்மைத் தேடி வந்தவரிடம் உரையாடாமல் இரார்! இந்தக் காலங்களில் பாரதியார் அவரை அடிக்கடி பார்க்கச் செல்வார். சிலசமயம் அவருடன் உலாவப் போவார். இரவில் பியர் பாலத்தில் அமர்ந்து நீண்ட நேரம் அளவளாவுவதும் உண்டு. இச் சமயங்களில் ஸ்ரீ அரவிந்தர் பாரதியாருடன் கீதை, உபநிடதங்கள், வேதங்கள் ஆகியவற்றைப் பற்றியும் இவை விஷயமாக மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் செய்துள்ள பல வகையான ஆராய்ச்சிகளைப் பற்றியும் தம் தெளிவான முடிவுகளைப் பற்றியும் கூறுவாராம். பாரதியாரும் இவ்விஷயங்களைப் பற்றி இயன்ற அளவு ஆராய்வாராம். சந்தர்ப்பம் ஏற்பட்டபோது பண்டைத் தமிழ்ப் பெரு நூல்களில் காணும் அரிய விஷயங்களை எடுத்துக் கூறுவாராம். ஓய்வு நேரங்களில் பாரதியார் அரவிந்தருக்குத் தமிழ் மொழி கூடக் கற்றுக் கொடுப்பாராம். மகா மேதையாகிய ஸ்ரீ அரவிந்தர் தமிழ் மொழியை எளிதில் கற்று நம்மாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார் போன்ற வைணவப் பெரியார்கள் பாடிய திருக்களைப் பாடல்களைப் பாரதியார் படிக்கவும் பாடவும் கேட்டுச் சுவைக்கும் அளவுக்கு முன்னேறியிருந்தார் என ஸ்ரீ அரவிந்தருடன் புதுவை வந்த சீடரும் இன்று ஆசிரமவாசியாக இருப்பவருமான நளினி காந்த குப்தா எமக்கு அறிவித்திருக்கிறார். பாரதியார் ஸ்ரீ அரவிந்தரின் மகா மேதையையும் ஆத்மீகத் துறையில் அவர் அடைந்துள்ள தேர்ச்சியையும் நன்குணர்ந்தவர். தாம் புதுவையில் வாடிக்கொண்டிருந்தபோது தமிழிலும் பல துறைகளில் சிறந்து விளங்கிய ஒரு பெரியார் தமக்கு நட்புரிமை அளித்ததை ஒரு பாக்கியமாகவே கருதினார். பாரதியார் அரவிந்தரை மதித்துப் போற்றியதைப் போலவே, அரவிந்தரும் தேசாபிமானியும் அருந் தமிழ்ப் புலவருமான பாரதியை உரிய முறையில் மதித்து வந்தார். அரவிந்தரின் மேதையும் புலமையும் ஆத்ம ஞானமும் பாரதியாரின்மீது தம் செல்வாக்கைச் செலுத்தலாயின. பாரதியாரின் உள்ளம் மெல்ல மெல்ல மலர ஆரம்பித்தது.

ஸ்ரீ அரவிந்தருக்கும் பாரதியாருக்கும் ஏற்பட்ட இத் தொடர்பின் முதற் பயன் பகவத் கீதையின் தமிழாக்கம். 1912-ம் ஆண்டிலேயே பாரதியார் பகவத் கீதையைத் தமிழ்ப்படுத்தி அதற்கு நல்லதொரு முன்னுரையை வழங்கினார். பாரதியாரின் கீதைக்கும் அதுவரையில் தமிழில் எழுதப்பட்டு வந்த கீதைக்கும் உள்ள வித்தியாசம் தெற்றென விளங்குவது. பாரதியார் பழைய உரையாசிரியர்களின் அடிச்சுவட்டில் செல்லவில்லை. கீதைக்கு இயற்கையானதோர் உரையையே அவர் தந்தார். கீதை சந்நியாசியின் துறவை உபதேசிக்கவில்லை. அது பற்றற்ற கருமத்தை வலியுறுத்துகிறது. யோக நிலையில் அமர்ந்து கருமம் செய்ய வேண்டும். யாவும் ஆண்டவன் செயலே என்னும் பாவனையுடன் செயலாற்றவேண்டும். ஆண்டவனை உள்ளத்தினுள் காண்பதைப் போல் பிற உயிர்களிலும் காணவேண்டும். கீதை ஞானத்தைப் போல் கருமத்தையும் பக்தியையும் வலியுறுத்துகிறது. இயற்கையின் பிடியிலிருந்து விடுபட்டு விடுதலையடைந்து இவ்வுலகில் பூரண வாழ்க்கை நடத்தும் மார்க்கத்தையே கீதை காட்டுகிறது. பாரதியாரின் முன்னுரையில் பாரதி, சுருங்கக் கூறின் இதையே கூறுகிறார். பாரதியாரின் இவ் விளக்கத்துக்கு அவர் ஸ்ரீ அரவிந்தருக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறார் என்னும் பிரச்னை எழுகிறது. கீதை பாரதியாரின் சொந்த முயற்சி. ஸ்ரீ அரவிந்தர் 1914-ல் ஆரியாவில் தொடர்ந்து எழுதப் போகும் கீதைக் கட்டுரைகளில் காணப்படும் ஆழத்தையும் விரிவையும் பாரதியாரிடம் காண்பதற்கில்லை. ஆயினும் அதில் ஒரு தெளிவும் புதுமையும் உள. அதுவே அதன் சிறப்பு யாவும். மேலும் ஒன்று சொல்லலாம். 1909-ல் ஸ்ரீ அரவிந்தர் கரும யோகி பத்திரிகையில் கீதையின் உட்பொருளைப் பற்றிச் சில அருமையான விஷயங்கள் கூறியிருக்கிறார். பாரதியார் இவற்றை ஆழ்ந்து கற்றிருக்க வேண்டும். அவற்றினின்று பெறக்கூடிய ஒரு புது நோக்கையும் ஒரு புதுத் தெளிவையும் பாரதியின் கீதையில் ஓரளவு காணலா


பி. கோதண்டராமன்



றோம். பாரதியார் வேத, உபநிடதம் போன்ற விஷயங்களில் ஸ்ரீ அரவிந்தருடன் நடத்திய உரையாடல்களும் இத்தெளிவுக்கு ஓரளவு காரணமாக இருக்கலாம். இவ்வளவே நாம் சொல்லக் கூடும்.

பாரதியார் வேதத்தோடு நின்று விடவில்லை. அவர் 1912-லிருந்து 'ஞானபானு' என்னும் பத்திரிகையில் வேத ரிஷிகளின் கவிதைகள் சிலவற்றை மொழிபெயர்த்து வெளியிட ஆரம்பித்தார். ஸ்ரீ அரவிந்தர் புதுவையை அடைந்தது முதல், பாரதியார் அவருடன் வேத, உபநிடதங்கள், வேதம் முதலியவற்றின் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்திருக்கிறார் எனக் கூறினோம். பாரதியார் ஸ்ரீ அரவிந்தருடன் செய்த ஆராய்ச்சியுடன் நின்று விடவில்லை. தாமும் மாக்ஸ் முல்லர் போன்ற அறிஞர்கள் வெளியிட்ட நூல்களையும் ஆராய்ந்திருக்கிறார் என்று தெரிகிறது. ஸ்ரீ அரவிந்தர் 1914-ம் ஆண்டு 'ஆரியா' என்னும் தத்துவ மாத சஞ்சிகையை ஆரம்பித்து, அதில் வேதத்தின் உட்பொருள் என்னும் தொடரில் ரிக்வேத ரிஷிகளின் கவிதைகள், அக்னி சூக்தங்கள் ஆகியவற்றைத் தம் விளக்கத்துடன் வெளியிட்டு வரலானார். பாரதியார் இவற்றை யெல்லாம் தொடர்ந்து படித்து வந்திருக்கிறார் எனத் தெரிகிறது. மேலும் தினந்தோறும் நாலு மணிக்குப் பாரதியார் ஸ்ரீ அரவிந்தர் மாளிகை சென்று சுமார் எட்டு மணிவரையில் உரையாடினார் என்று ஏ. பி. புராணி அவர்கள் எழுதியிருக்கும் ஸ்ரீ அரவிந்தர் ஜீவிய வரலாற்றிலிருந்து தெரிகிறது. இந்நேரங்களில் இவர்கள் வேத, உபநிடத ஆராய்ச்சியைப் பற்றியே பேசியிருக்க வேண்டும். பாரதியார் 'ஞான பானு' வில் 1915 வரையில் எழுதி வந்த ரிக்வேத சூக்தங்களும் அக்கினிப் பாடல்களும் இவ்வாராய்ச்சிகளின் பயனே என்பது வெளிப்படை. 'வேதரிஷிகளின் கவிதை' என்னும் நூலில் காணப்படும் சில பகுதிகள், சிறப்பாக மதுச்சந்த ரிஷி இந்திரனைப் பாடிய பாடல்கள், அக்கினி தேவனைப் பாடிய பாடல்கள், அக்கினி தோத்திரம் என்னும் தலைப்பின்கீழ் வரும் பாடல்கள் ஆகிய யாவும் ஸ்ரீ அரவிந்தர் 'ஆரியா'வில் வெளியிட்டுள்ளவற்றின் நேர் மொழி பெயர்ப்பு போலவே காண்கின்றன. அக்கினி விஷயமாக ரிஷிகள் எழுதியுள்ள கவிதையைப் பற்றிப் பேசும் போது, ''ஸ்ரீ அரவிந்த கோஷ் சொல்லுகிறார்:—'' என்று ஸ்ரீ அரவிந்தர் அக்கினித் துதிகளுக்கு முன்னுரையாக எழுதியுள்ள ஒரு பகுதியை மேற்கோள் காட்டுகிறார். 'வேதரிஷிகள் கவிதை'யில் ஈசாவாஸ்யோபநிஷத் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது. பாரதியாரின் இம் மொழிபெயர்ப்பை ஸ்ரீ அரவிந்தர் எழுதியுள்ள உரையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அத்துடன் பெரிதும் ஒத்திருக்கக் காண்போம். இவ்வுபநிடதம் புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமான தொன்று. ஆதி சங்கரர் இதற்குச் செய்துள்ள வியாக்கியானம் பிரசித்தமானது. ஸ்ரீ அரவிந்தர் இதை மிக ஆழ்ந்து ஆராய்ந்து அற்புதமான உரை எழுதியிருக்கிறார். பாரதியார் இதை ஒட்டியே தம் மொழிபெயர்ப்பைச் செய்திருக்கிறார் என்பது வெளிப்படை.

ஸ்ரீ அரவிந்தர் பாரதியாருடன் தமிழ் படித்தாரென்றும், திவ்ய பிரபந்தத்தில் ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகராழ்வார் ஆகிய வைணவ பக்தர்கள் அருளிய பாடல்களைச் சுவைக்கும் அளவுக்குத் தமிழ்மொழி யறிவில் முன்னேறியிருந்தாரென்றும் சொன்னோம். ''ஆரியா'' சஞ்சிகையில் முதல் தொகுதியில், ஆண்டாள் அருளிய குயிற்பத்தி லிருந்து மூன்று



ஏந்திய கை

ஏந்திய கையுடன் வந்தேன்—என்னை
ஏனென்றும் கேளாவுன் கருணைப் பெருக்கைப்
போந்தடி வைத்த கணத்தில்—உன்றன்
பெருவிழிக் கோணப்புன் னகையினிற்கண்டேன்

காணாத பெருண்மை கண்டேன்—வாழ்வில்
கற்றிட வேண்டிய பாடமும் கற்றேன்
நாணாது கைதொட்ட ஓட்டை—ஓரு
நாலெட்டுச் சுக்கலாய் வீசி உடைத்தேன்

ஈதல் உவகையும் கண்டேன்—உடைமை
எல்லாம் வழங்கிட வழிபார்த் திருந்தேன்
ஆதவன் தோன்றுமுன் கூடி—மக்கள்
அணியணி யாயுன்றன் வாயிலில் நின்றார்

தேவை யெலாம்பெற வந்தோர்—இருள்
சேர்ந்திடும் எல்லையில் அரவம் ஒடுங்கி
மேவிப் பலதிசை செல்ல—வானில்
மீன்சுடர் வந்துதம் பிறவிக்கு முன்னால்

புத்தொளிக் கன்னி எழுந்து—தொல்லைப்
புதையிருள் ஓடச் செய்த பெரும்போர்
வித்தக மாக்கதை யெல்லாம்—கேட்டு
மெய்மறந் துள்ளன போலவே காணும்

அந்தநல் வேளைநான் உன்றன்—அருள்
அடியிணை மலர்களில் வந்து பணிந்தே
இந்தநல் வீணையை ஏற்று—உயர்
இன்னிசை மீட்டென வேண்டுவன் ஐயா.

குறிப்பு: ரவீந்திரநாத தாகூர் பாடலின் அடிப்படையில் எழுதியது.

பெ. தூரன்

பாடல்களும், திருமணக் கனவை உரைத்தல் என்னும் தலைப்புடைய பாடல்களிலிருந்து நான்கு பாடல்களும் கண்ணன் இருக்குமிடத்துக்குக் கொண்டு செல்க என்னும் தலைப்பின் கீழ் வரும் பாடல்களில் ஐந்து பாடல்களும் வசன கவிதைகளாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. முன்னுரையில் ஆண்டவனைக் காதலனாகவோ காதலியாகவோ பாவித்து அனுபவிக்கும் மரபு, ஆழ்வார்கள் இம்மரபில் பாடிய ஆத்மானுபவப் பாடல்கள், ஆண்டாளின் வரலாறு ஆகிய யாவும் ரத்தினச் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. இதே தொகுதியில் நம்மாழ்வார் அடியார் திருக்கூட்டத்தைக் கண்டு வாழ்த்தல் என்னும் தலைப்பின்கீழ் பாடிய பத்துப் பாடல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. 'பரம வைஷ்ணவ பாகவதரும் கவியுமான நம்மாழ்வார்' என்னும் தலைப்பில் முன்னுரையொன்றும் காண்கிறது. இரண்டாம் தொகுதியில் 'காதற் பத்து' என்னும் தலைப்பின்கீழ் நம்மாழ்வார் பாடிய பத்துப் பாடல்கள் அழகிய கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அன்றியும், குலசேகராழ்வார் 'வித்துவக் கோட்டத்து அம்மானையே வேண்டி நிற்றல்' என்ற தலைப்பின்கீழ் வரும் 9 பாடல்கள் அழகிய கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஆரியா சஞ்சிகையில் 1915-16-ல் வெளியாகியுள்ளன.

இப் பாடல்களை மொழிபெயர்த்தவர் பெயர் காணவில்லை. பத்திரிகையாசிரியர் வழக்கமாகக் கூறுவதுபோல் "தாங்கள் மொழிபெயர்த்துத் தருகிறோம்" என்று முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ அரவிந்தர் எழுதிய சில உரைகளும் இங்ஙனமாகப் பெயரின்றி எழுதப்பட்ட விஷயங்களும் ஆரியாவில் பல காண்கின்றன. இம் மொழிபெயர்ப்புக்கள் இன்னார் செய்தவை என்று அறிவிக்கப்படாததால் இவை ஸ்ரீ அரவிந்தர் எழுதியவையே என்று நியாயமாகக் கொள்ளலாம். இவற்றைப் பாரதியாரின் உதவிகொண்டே ஸ்ரீ அரவிந்தர் மொழிபெயர்த்துள்ளார். பாரதியாரின் மூலமாகவே பாட்டின் முழுப் பொருளையும் ரஸித்திருக்கிறார். மகா மேதையாகிய அரவிந்தர் அவற்றைத் தம் மயமாக்கியே மொழிபெயர்த்திருக்கிறார்.

ஆதியிலிருந்து அரவிந்தருடன் இருந்து வந்தவரும் பாரதியாரை நன்கறிந்தவருமான நளினிகாந்த குப்தா அவர்கள் இப்பாடல்களை ஆரியாவில் மொழிபெயர்த்தவர் ஸ்ரீ அரவிந்தரே என்றும், ஆயினும் இதை மொழி பெயர்ப்பதில் பாரதியார் பெரிதும் உதவினாரென்றும் கூறுகிறார். ஆனால் பாரதி பிரசுராலயம் இவற்றைப் பாரதியார் எழுதிய 'அக்னி முதலிய கவிதைகள்', 'கட்டுரைகளும் துண்டுகளும்' என்னும் ஆங்கில நூல்களில் சேர்த்து, பாரதியார் எழுதியவை போலவே பிரசுரம் செய்திருக்கிறார்கள். பாரதியார் இவற்றை ஸ்ரீ அரவிந்தர் ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதப் பெரிதும் உதவினாராதலால், நாம் மேலும் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. உண்மை நிலையைமட்டுமே விளக்கினேம். பாரதியாரும் ஸ்ரீ அரவிந்தரும் இக் கலைப் பணியில் ஒத்துழைத்தனர் என்பதே முக்கியமான விஷயம்.

பாரதியாரின் வேதாந்தப் பாடல்களில் சோமதேவன்புகழ், தீ வளர்த்திடுவோம், வேள்வித் தீ என்னும் அருமையான பாடல்கள் வருகின்றன. இவை ஸ்ரீ அரவிந்தர் தொடர்பு கொண்டு செய்யப்பட்ட ரிக்வேத ஆராய்ச்சியின்று எழுந்தவை. இவை மொழிபெயர்ப்புக்கள் அல்ல. பாரதியாரின் சொந்தப் படைப்புக்கள். அக்னி சூக்தங்களில் வேத ரிஷிகள் தமக்குத் தடையாயுள்ள சக்திகளை வெல்ல வேள்வித் தீ வளர்த்து அத்துஷ்ட சக்திகளின் அழிவை வேண்டுகின்றனர். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு "வேள்வித் தீ" என்னும் பாட்டில் பாரதியார் அற்புதமான சிருஷ்டி ஒன்றைச் செய்துள்ளார்.

பாரதியாரின் சக்திப் பாடல்களும் ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து பாரதியார் பெற்ற அருள்ஞானத்தினின்று எழுந்தவையே எனச் சிலர் கருதுவர். ஸ்ரீமான் எம். என். சுப்பிரமணிய அய்யர் "தேசிய கவி ராஜ சிங்கம் சுப்பிரமணிய பாரதியார்" என்னும் பெயரில் 1955-ல் வெளியிட்டுள்ள நூலில் பின்வருமாறு கூறுகிறார்: "ஸ்ரீ அரவிந்தர் ஒரு பிரெஞ்சு மாதை ஆதி பராசக்தி என்றே எண்ணி நின்றார். அம்மாதை அனைவரும் 'அன்னை' என்று வழங்கினர். இவற்றையெல்லாம் உணர்ந்த பாரதியாருக்கு, பராசக்தி மீது பக்தி மிகுந்தது. ஆதலின் சக்தி தேவியைக் குறித்து எவ்வளவோ பாடியுள்ளார் பாரதியார்." இக் கருத்துக்களுக்கு ஆதாரமே இல்லை. தமிழர்கள் சக்தியாம் அன்னையை ஆதிகாலம் தொட்டுப் போற்றி வருகின்றனர். பெண்களுக்குத் தமிழர்கள் எப்பொழுதும் பெருமையளித்துவருகின்றனர். அவர்கள் சக்தியின் அவதாரங்களென்பர். சிவனைக் கூட 'உமையொரு பாகன்' என்றழைத்தனர். வங்காளத்தில் சக்திவழிபாடு மிகுதி. சுதேசி இயக்கத்தின்போது இச் சக்தித் தத்துவம் இந்தியா முழுதும் பரவியது. பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' கீதம் இவ் வழிபாட்டுக்கு ஆக்கமளித்தது. தாய்நாட்டை அன்னையெனப் போற்றினர். பாரதியார் சக்தியை வெகு காலமாக வழிபட்டு வருபவர். ஸ்ரீ அரவிந்தருடன் தொடர்பு ஏற்படுமுன்பே சக்திப் பாடல்கள் சில பாடியுள்ளார். ஸ்ரீ அரவிந்தரின் தொடர்பு ஏற்பட்டபின் சக்தியின் தத்துவம் அவரிடம் தெளிவுபெற்றது. அவ்வளவே சொல்லலாம். ஸ்ரீ அரவிந்தரின் தொடர்பேற்பட்டபின் பாரதியாரின் கவிதா சக்தி பன்மடங்கு பெருகியது. இப் பெருக்கத்தினின்று அற்புதமான சக்திப் பாடல்கள் வெளிப்பட்டன. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னை சின்னஞ்சிறு வயதிலிருந்து யோகசாதனை செய்து வந்தவர். அவர் தமக்கு வெகுகாலமாக மகான் ஒருவர் வழிகாட்டி வந்ததாக உணர்ந்தார். 1914-ம் ஆண்டில் அரவிந்தரைப் புதுவையில் கண்டபோது அவரே அம்மகான் என உணர்ந்தார். அவரின் முயற்சியால்தான் 'ஆரியா' வெளி வந்தது. அதுசமயம் பாரதியார் அவரைப் பார்த்திருக்கிறார். அப்போது அவர் போல்ரிஷார் என்பவரின் பத்தினி. 1915-ம் ஆண்டு அவர் புதுவையிலிருந்து சென்று விட்டார். பாரதியார் புதுவை விட்டுச் சென்னை போனபின்பே 1920-ல் மீண்டும் புதுவை வந்து ஸ்ரீ அரவிந்தரின் தெய்வப் பணியில் பங்கு கொள்ளலானார். ஆத்மானுபவங்களில் சிறந்து விளங்கிய அவரை அரவிந்தர் ஏற்று ஆசிரம நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைத்தார். அவர் மகிமையை அறிந்த அரவிந்தர் சாதகர்கள் அவரை அன்னையெனப் போற்றி வழிபடுமாறு உபதேசித்தார். பாரதியாரின் சக்திப் பாடல்களுக்கும் இந்த அன்னைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

கடைசியாக ஒரு பிரச்னை உள்ளது. பாரதியார் ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து எவ்வளவோ பெற்றார். ஆயினும் அவருடைய பாடல்களில் ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து தாம் பெற்றதைச் சூசகமாகவேனும் அறிவிக்கும் யாதொரு குறிப்பும் காணவில்லை. இது ஏன்? ஸ்ரீ அரவிந்தரைப் பாரதியார் மகா மேதையாகக் கருதினார். ஆனால் ஆத்மார்த்த விஷயங்களில் அவரைக் குருவாகக் கொள்ளவில்லை. 'ஆரியா'வில் 'தெய்விக வாழ்க்கை,' 'வேதத்தின் உட்பொருள்', 'கீதை', 'பூரணயோகம்' முதலிய விஷயங்களைப் பற்றி எழுதிய அரவிந்தர் ஆத்மீகப் பயிற்சியில் வெகு தூரம் சென்றவர் என்பது பாரதியாரின் மனத்தில் படவில்லைபோலும். ஆனால், மகா மேதை எனத் தாம் உணர்ந்ததையாவது ஒரு பாட்டிலேனும் சொல்லி யிருக்கலாமே! ஏனோ சொல்லவில்லை. இது ஒரு புதிர்.

இதுசமயம் சுத்தானந்த பாரதியார் 1946-ம் ஆண்டில் வெளியிட்ட கவிக்குயில் பாரதியார் என்னும் நூலில் 50வது பக்கத்தில் "அரவிந்தப் பாம்பு" என்ற தலைப்பின்கீழ் "பாரதியார் புதுச்சேரியில் இருந்த காலத்தில்தான் பாரதியார் நூல்கள் எல்லாம் கருக்கொண்டெழுந்தன; புதுச்சேரியையும் ஸ்ரீ அரவிந்தர் உறவையும் நீத்த பிறகு பாரதியார் சுதேசமித்திரனில் எழுதிவந்த கட்டுரைகளைத் தவிர வேறு விசேஷமாக ஒன்றும் எழுதவில்லை எனலாம்.

'உண்மை நிலை கண்டுறங்கும்
யோகப் பாம்பே!
உலகத்தைச் சமன் செய்ய
எண்ணும் பாம்பே
இன்மை நிலை கொண்டிருக்கும்
தெய்வப் பாம்பே!
தெய்விகத்தைக் காட்டுதற்குத்
தீவிரங் கொள்வாய்!
ஆதிசிவன் மேலிருக்கும்
நாகப்பாம்பே—எங்கள்
அரவிந்தப் பேர் புனைந்த
அன்புப் பாம்பே!
சோதிப் படர் தூக்கிட மாடி
வருவாய்—அந்தச்
சோலை நிழலையெமது
துன்ப மொழிவோம்!'

என்று அரவிந்தரைப் பாடுகிறார் கவி!" என்று கூறுகிறார்.

பாரதியார் இப்பாட்டை எங்கே பாடியிருக்கிறார்? இது எந்தப் பத்திரிகையில் வந்துள்ளது? இது அவரது சிருஷ்டிதானா?

இதைப் பாரதியார் பாடினது உண்மையானால் நம் புதிர் தீர்ந்து விடும். பாரதியார் அரவிந்தரின் மேதையைப் பற்றிக் குறிப்பிடாவிடினும் அவரது யோக வலிமையைப் பற்றிக் கூறி யிருக்கிறார் என்பது தெளிவாகும். இதை விளக்குவது சுத்தானந்தரின் கடமையாகும்.


It depends on the inks
when rigid forms have to print
on soft or hard, rough or smooth
stocks, with no sacrifice in quality,
choose:
GANGES PRINTING INKS
CALCUTTA
BOMBAY
MADRAS
DELHI


தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
ராதா ஸில்க்
எம்போரியம்
14, ஸன்னதி தெரு,
மைலாப்பூர், மதராஸ்-4.
போன்: 71188
தந்தி: "SILKEMP"
தபால் பெட்டி நெ. 622
உங்களுக்குத் தேவையான ஜவுளி வகைகளுக்கு எமது "ஏர் கண்டிஷன்" வசதி செய்யப்பட்டுள்ள ஷோ ரூமுக்கு விஜயம் செய்யுங்கள்
பட்டுச் சேலைகள் உற்பத்தியாளர்கள், மொத்த, சில்லரை வியாபாரிகள்
கூடிய சீக்கிரம் மௌண்ட் ரோடில் எமது புதிய ஷோ ரூம் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள்

யாழ்ப்பாணம் இலங்கையைச் சேர்ந்ததாயினும், அதன் வரலாறு தமிழ் மக்கள் வரலாற்றில் ஒரு பகுதியாக இடம் பெறத் தக்கது. யாழ்ப்பாணத்தில் 12-ம் நூற்றாண்டு முதல் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளாக ஓர் அரச பரம்பரை நிலைபெற்றிருந்தது. இந்தப் பரம்பரை அரசர்கள் 14-ம் நூற்றாண்டில் இலங்கை முழுவதிலேயும் ஏகாதிபத்தியம் பெற்றிருந்தார்கள். இவர்கள் தங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று கூறிக் கொண்டபோதிலும் தமிழ் மன்னர்களாகவே விளங்கினார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவித் தமிழையும் பெரிதும் வளர்த்தார்கள். இவர்களில் சிலர் தமிழில் சிறந்த புலமையுடையவர்களாக இருந்தார்கள்.

இவ்வரசர்களுடைய பூர்வீக வரலாறு இராமேசுவரத்தோடு தொடர்புடையதாகும். இவர்கள் சேதுகாவலர் என்ற பட்டம் தரித்திருந்தார்கள். சேதுநாடு இவர்கள் ஆதிக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. இவர்களுடைய நாணயங்களில் சேது என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தது. இந்நாணயங்களில் சில யாழ்ப்பாணத்துப் பொருட்காட்சிச் சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இராமேசுவர ஆலயத்தைப் பழைய காலத்தில் பரிபாலித்து வந்த பிராம்மண வம்சத்தோடும், கலிங்க நாட்டு அரச வம்சத்தோடும் ஆரியச் சக்கரவர்த்திகள் சம்பந்தப்பட்டவர்கள் என்று கருதவேண்டியிருக்கிறது. 12-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாம் குலோத்துங்கச் சோழன் நடத்திய கலிங்கப் போர்களில் தோற்றுண்ட கலிங்க அரச வம்சத்தைச் சேர்ந்த சிலர் இராமேசுவரத்துக்கு வந்து, அங்குள்ள ஆலயத்தைப் பரிபாலித்த பிராம்மணக் குடும்பங்களோடு கலப்புற்றனர் என்று ஊகிக்கப்படுகிறது. கலிங்க நாட்டு அரசர்கள் கங்கை வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஆரியச் சக்கரவர்த்திகள் இராமேசுவரத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த பிராம்மணர்களின் வழித்தோன்றல்கள் என்றும், கங்கை வம்ச அரசர்கள் என்றும் இவர்கள் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்த பாண்டிமழவன் என்ற ஒரு வேளாளத்தலைவன் மதுரைக்குச் சென்று, அங்கு பாண்டிய மன்னனிடத்தில் அரசகாரியம் பயின்று கொண்டிருந்த ஓர் அரச குமாரனைப் பாண்டிய மன்னன் ஆதரவுடன் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து அவனை அரசன் ஆக்கினான் என்று யாழ்ப்பாணச் சரித்திர நூல்கள் வாயிலாக அறிகிறோம். இந்த அரசகுமாரனே யாழ்ப்பாணத்தை ஆண்ட முதல் ஆரியச் சக்கரவர்த்தி ஆவான்.

இவனை அனுப்பிய பாண்டிய மன்னன் காலத்தில் புகழேந்திப் புலவர் அவனுடைய அவைப்புலவராக இருந்தார் என்று தெரிகிறது. இப்புலவர் பின் இலங்கைக்குச் சென்று, கதிர்காமத் தலத்தைத் தரிசித்து, யாழ்ப்பாணத்துக்கு வந்து இவ்வாரிய மன்னனால் சன்மானிக்கப் பெற்றார் என்று அவருடைய செய்யுள்கள் சிலவற்றால் அறியக் கிடக்கிறது. இச்செய்யுள்கள் தமிழ் நாவலர் சரிதை என்ற நூலில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்த ஆரிய அரசன் இவரைப் பாண்டியன் அவையில் முன்னரே அறிந்திருந்தவன் என்று கொள்ளத்தகும். இவ்வாரிய அரசன் இவருக்குச் சில யானைகளைப் பரிசாகக் கொடுத்தான் என்றும், இந்த யானைகளை வாங்குவதற்குத் தமிழ் நாட்டரசர்கள் இவருடைய வாயிலில் காத்திருந்தார்கள் என்றும் இவர் பாடிய செய்யுள் ஒன்று கூறுகின்றது.

"பாவலர் வாசலில் வந்தியம் வாங்கப் படிபுரக்கும்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி ஒன்பதினும்
மேவலர் மார்பினும் திண்தோளினும் செம்பொன் மேருவினும்
சேவெழுதும் பெருமாள் சிங்கை ஆரிய சேகரனே."

இச்செய்யுளில் "சே" என்பது ஆரியச் சக்கரவர்த்தியின் நந்திக் கொடியையும் "சிங்கை" என்பது அவனது தலைநகரத்தையும் குறிக்கின்றன.

இவ்வாரியச் சக்கரவர்த்தி இறந்ததைக் கேட்டு ஆற்றாது புகழேந்திப் புலவர் பின்வரும் உணர்ச்சி மிக்க செய்யுளைப் பாடியதாகச் சொல்லப்படுகிறது.

ஆக வித்தியோ அடலரி யசிங்கோமகன்
ஏ வெவரால் இறந்தநாள்—ஓஓ
தருக்கள் விழும் குளிர்ந்த தண்ணளிநத் தாண்ட
நீருக்கள் விழும் கடுமோ நீ.

புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தர் காலத்தவர் என்று ஒரு கர்ண பரம்பரை வரலாறு உண்டு. ஒட்டக்கூத்தரிடம் தமிழ் பயின்ற குமாரகுலோத்துங்கச் சோழன் பாண்டியன் மகளை மணம் செய்தபோது, அவளுடன் புகழேந்திப் புலவரையும் அப்பாண்டியன் சோழ அரண்மனைக்கு அனுப்பி வைத்தான் என்று இந்தக் கர்ணபரம்பரை வரலாறு கூறும். இவ்வரலாறு ஓரளவு உண்மையானதென்றே தோன்றுகிறது. இப்பாண்டியன், குமார குலோத்துங்கனுடைய தந்தையாகிய விக்ரம சோழனுக்குக் கலிங்கப் போரில் உதவி செய்த பராந்தக பாண்டியனாக இருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுண்டு. இவர்களுடைய காலம் 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். புகழேந்திப் புலவர் யாழ்ப்பாணம் சென்று ஆரியச் சக்கரவர்த்தியிடம் சன்மானம் பெற்ற காலமும் இதுவே என்று சொல்லலாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் செகராச சேகரன் என்றும் பரராச சேகரன் என்றும் ஒருவர்பின் ஒருவராகப் பட்டம் வகித்து வந்தார்கள். இவர்களுள் பரராச சேகரன் என்ற பட்டம் தாங்கிய ஒரு மன்னன் காலத்தில் கொடிய பஞ்சம் உண்டானபோது, புதுவையிலிருந்த சடையப்ப வள்ளல் நூற்றுக்கணக்கான படகுகளில் நெல் அனுப்பியதைப் பெற்றுக் கொண்டு அவன் தனது நன்றியை ஓர் அருமையான செய்யுள் வாயிலாக அறிவித்தான்.

இரவுநண்பகல் ஆகிலென்பகல் இருளாகிலென்
இரவிஎண்திசை மாறிலென்கடல் ஏழுமேறிலென் வற்றிலென்
மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர் போகிலென் ஆகிலென்
வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கை காரணமாகவே
கருதுசெம்பொனின் அம்பலத்திலோர் கடவுள்நின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகில் துயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்தரு சடையனென்றொரு தருமதேவதை வாழுமே.

சடையப்ப வள்ளலுக்குக் கம்பர்கூட இவ்வளவு பெருமை கொடுத்துப் பாடவில்லை. தில்லை நாதனோடும் அரங்க நாதனோடும் சடையப்ப வள்ளல் இந்தக்கவியில் சம இடம் பெறுவதைக் காண்கின்றோம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் முடிமன்னராக யாழ்ப்பாணத்தை ஆண்டபோதிலும், சேது நாட்டதிபதிகள் என்ற முறையில் பாண்டியருக்கு உட்பட்டு நட்புரிமை பூண்டவர்களாக இருந்தார்கள். பாண்டியர்கள் 13-ஆம் நூற்றாண்டில் மைசூர் நாட்டு ஹொய்சளர் என்ற போசலருடன் நடத்திய போர்களில் ஆரியச் சக்கரவர்த்திகள் உதவி புரிந்தார்கள். ஓர் ஆரியச் சக்கரவர்த்தி போசலரை வென்றதாகச் சொல்லப்படுகிறது. பாண்டியர்களும் ஆரியச் சக்கரவர்த்திகளுக்குத் துணை செய்தார்கள் என்று தெரிகிறது.

13—ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் சிங்களநாடு அவன் ஆட்சிக்குள் வந்தது. பாண்டியநாட்டு மந்திரியாகிய ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் ஈட்டிய வெற்றி இதற்குக் காரணம் என்று இலங்கைச் சரித்திர நூலாகிய மகாவம்சம் கூறுகின்றது.

இவ்வாரியச் சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்து அரசர்களில் ஒருவன் என்று திடமாகச் சொல்வதற்கில்லை; அவர்களோடு சுற்றத் தொடர்பு உடையவனாக இருந்

சு. நடேச பிள்ளை

தவன் என்று மாத்திரம் நிச்சயமாய்ச் சொல்லலாம். இவனது வெற்றி யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் தென் னிலங்கையில் பின்னர் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரண மாய் இருந்தது.

14-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வரோதய ஆரியச் சக்கர வர்த்தி என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்திலே தான் யாழ்ப்பாணம் உச்ச நிலையை அடைந்தது. இலங்கை முழுவதையும் இவன் ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்டான். இவன் காலத்தில் இயற்றப்பட்ட செகராச சேகரமாலை என்ற சோதிட நூல் இதைத் தெளிவாகக் கூறுகிறது. இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் வரும் ஒரு செய்யுளின்று, இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் மூத்த மகனுகிய சுந்தர பாண்டியன் மதுரையிலின்று துரத்தப்பட்டபோது அவனுக்கு உதவியளித்தான் என்று அறியக் கூடியதாக இருக்கிறது. இது நிகழ்ந்த காலம் கி. பி. 1310-ம் ஆண்டு என்று நிச்சயிக்கலாம்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளுள் இவ்வரோதயனே எல்லா வகையிலும் சிறப்புற்றவன். இவன் பெரிய கொடை வள்ளலாகத் திகழ்ந்தான். இவன் முத்தமிழி லும், வேதாகம புராணங்களிலும் பாண்டித்தியம் பெற்றவன். தக்கண கைலாச புராணத்தை இவன் தமிழ்ச் செய்யுட் காப்பியமாக, அந்தாதித் தொடையில் இயற்றியுள்ளான். இப்புராணம் அறுநூறுக்கு மேற்கொண்ட இனிய செய்யுள்களை உடையது. அவற்றுள் உதாரணமாக இரண்டு செய்யுள்கள் இங்கே காட்டத்தருவன.

காப்பிட் டலர்வாய் அளிமிஞ்சுக்கள்
  களிகோண் டசோகின் மலர்பாய
மீப்பட் டன்னம் மேற்பாய்ந்து
  வெடிக்கும் பலவின் கனித்தேனும்
பூப்பிட் டொழுகும் பசுந்தேனும்
  பொழிந்து பழுக்கும் வானரங்கள்
கூப்பிட் டயலார்க் குரைப்பனபோல்
  குயிலும் மயிலும் நூல்காட்டும்

காட்டும் கதலிக் கொழுங்கனியும்
  கமுகின் கனியும் மாங்கனியும்
கோட்டின் பலவின் கனிக்கனியும்
  கூட்டிக் கரியின் கோடிமிழ்ந்து
நாட்டின் கரும்பின் பிழிபொருத்து
  நறுநீர் வாவிதோறும் சேர்த்துத்
தோட்டின் கமலப் பொகுட்டுத்
  துயில்வன் டெழுப்பும் திருநாடு.

இவ்வரசன் காலத்தில் செகராச சேகர வைத்தியம் என்ற ஒரு நூலும் இயற்றப்பட்டது.

ஆனால் 14-ம் நூற்றாண்டின் இறுதியில், ஆரியச் சக்கர வர்த்திகளின் ஆதிக்கம் தளர்வுற்றது. அக்காலத்தில் இருந்த சிங்கள மன்னனின் மந்திரியாகிய அளகேசுவரன் என்பவன் ஆரியச் சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்ட மறுத்து, அவன் அனுப்பிய படைகளோடு போரிட்டு வென்றான். இதற்குப் பிறகு கி. பி. 1450-ம் ஆண்டில் ஆறும் பராக்கிரமபாகு என்ற சிங்கள அரசன் செண்பகப் பெருமாள் என்ற படைத்தலைவனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினான். அப்பொழுது அங்கு அரசனாயிருந்த கனகசூரிய ஆரியச் சக்கரவர்த்தி போரில் தோற்றுத் தன் நாட்டை இழந்து தென்னிந்தியாவுக்கு வந்தான். பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர் இவன் ஒரு படையைத் தென்னிந்தியாவின்று திரட்டிக்கொண்டு யாழ்ப் பாணத்துக்குச் சென்று போரிட்டுத் தான் இழந்த உரிமையை மீண்டும் பெற்றான்.

கனகசூரிய ஆரியச் சக்கரவர்த்திக்குப் பின் பரராச சேகரன் என்ற அரசன் ஆண்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்க் கல்வி மறுபடியும் தழைக்க ஆரம்பித்தது. தென்னிந்தியாவி லிருந்து அரிய தமிழ்ச் சுவடிகள் கொண்டுவரப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. மிகவும் விரிவான முறையில், பரராச சேகரம் என்ற ஒரு சிறந்த வைத்திய நூல் இயற்றப்பட்டது. அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகேசரி என்ற ஒரு புலவர் இக்காலத்தில்தான் இரகுவமிசம் என்ற தமிழ்க் காவியத்தை இயற்றியதாகச் சொல்லப்படுகிறது. இது காளிதாசரது வடமொழிக் காவியத்தைத் தழுவியதாகும். இதன் நடை கடினமாக இருந்தாலும் இது பல கற்பனை நயங்களை உடைய ஒரு சிறந்த இலக்கியம் என்று மதிக்கப் படுகிறது. இதிலுள்ள நாட்டுப் படலத்திலின்று இரண்டு செய்யுள்களை இதன் சொல்நயத்துக்கும் பொருள் நயத்துக்கும் உதாரணமாகக் காட்டலாம்.

கயல்பி றங்கின பிறங்கின கண்கள்சேல் கமலம்
அயல்பி றங்கின பிறங்கின முகங்களா ரத்தின்
இயல்பி றங்கின பிறங்கின வெண்ணகை என்னில
வயல்பி றங்கின பிறங்கின மாதரார் வயிறும்

வயல்களில் நாற்று நடுகின்ற பெண்களின் கண்களுக்கு மீன் களையும், முகத்துக்குத் தாமரைகளையும், வெண்பற்களுக்கு முத்துக்களையும் உவமானங்களாக இங்கு பொருத்திக் கூறப்படுகின்றன.

அம்பொன் நூபுரம் ஆர்த்தன ஆர்த்தன அன்னம்
கம்பு கையத் தொனித்தன ஒலித்தன கம்பு
தும்பி கோதையில் தொனித்தன தொனித்தன கரும்பு
வம்பொ ழுங்கயின் களித்தன களித்தன பழனம்

அப்பெண்களின் சிலம்புகளும், வளையல்களும் ஒலிப்பதை வயல்களில் அன்னங்களும் சங்குகளும் ஒலிப்பதோடு பொருத் தியும், அவர்கள் கூந்தல்மீது வண்டுகள் ஒலிப்பதை, வயல்களின் பக்கத்தில் வண்டுகள் ஒலிப்பதோடு பொருத்தியும் செய்யுள் வர்ணிக்கின்றது.

பரராச சேகரன் காலத்துக்குப் பின் வந்த அரசர்கள் போர்த்துக்கேயரோடு போராட வேண்டியதாயிற்று. பரராச சேகரன் மகன் கொடுங்கோல் ஆட்சி புரிந்தவனாயினும், போர்த்துக்கேயரை வீரத்துடன் எதிர்த்துத் தன் நாட்டைக் காப்பாற்ற முயன்றான். இவன் காலத்திலிருந்து போர்த்துக் கேயர்கள் யாழ்ப்பாணத்தைக் கவர்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்து மன்னர்களுக்குத் தஞ்சை நாயக்க அரசர்களுடைய உதவி சில சமயங்களில் கிடைத்த போதிலும், கடைசியில் 1621-ம் ஆண்டில் யாழ்ப் பாணம் போர்த்துக்கேயர் ஆட்சிக்குட்பட்டது.

ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரையில் கடைசி அரசனாக இருந்த எதிர் மன்னசிங்கம் பரராச சிங்கம் என்பவன் தமிழ்ப் புலமை படைத்தவனாயிருந்தான். இவன் காலத்தில் தென்னிந்தியாவி லின்று அந்தகக் கவி வீரராகவ முதலியார் யாழ்ப்பாணத் துக்கு வந்தார். அவர் இவ்வரசன்மீது வண்ணக் கவி ஒன்று இயற்றினார். இவருடைய கவித்துவத்தைப் பாராட்டி இவன் அவருக்குப் பல சன்மானங்கள் செய்தான். இவன் அவருக்குப் பொற்கிழி கொடுத்தபோது, தனது வறுமை அகன்றதோடு தனது புகழ் வெற்றி விளக்காக எங்கும் பரந்தது என்று பொருள்பட ஒரு செய்யுளை அவர் கூறினார்.

பொங்குபிடி யின்பந்தம் போயதே எங்களிக்
கேங்கும் விருதுபந்தம் ஏற்றதே—குங்குமம் தோய்
வெற்பந்தம் ஆனபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்தம் இன்றளித்த போது

அரசனும் புலமை உடையவனாக இருந்தபடியால், அவரைப் பாராட்டி இரண்டு கவிகள் கூறிப் புகழ்ந்தான் என்று சொல்லப்படுகிறது.


வீரகன் முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒப்பத் தோன்றிலும்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே

வீரராகவர் பாட்டைக்கேட்டுத் தலை அசைப்பதற்கு ஆயிரம் தலை யுடைய ஆதிசேடனும், கை கொட்டுவதற்கு ஆயிரம் கைகளைப் பெற்ற பாணாசுரனும் வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

இன்னம் கலைமகள் கைம்மீதில் புத்தகம் ஏந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக் கற்றுன் ஒருமுகத் தமிழையுமே

வீரராகவ முதலியார் வாய்ப்பாடமாக இராமாயணக் கவிகள் சொல்லிப் பிரசங்கம் செய்தபோது, அரசன் அவர் பிறவிக் குருடராயிருந்தும் தமிழ் கற்றதை வியந்து, கலை மகளையும் அவர் விஞ்சி விட்டார் என்று இந்தச் செய்யுளால் அவரைப் பாராட்டினான்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்கு ஆரியச் சக்கரவர்த் திகள் செய்த தொண்டுக்காக அவர்களை மறவாது தமிழுலகம் போற்றுவது கடனாகும்.


Coffee
ours for quality
RAW
ROAST
OR
GROUND
GANESH & Co
(MADRAS) PRIVATE LTD.
Retail Branches
285, China Bazar Road, MADRAS-1
71, Pondy Bazar, T. NAGAR, MADRAS-17

புயல் நடுவே...



ராமச்சந்திரன் அன்று உதகை நகரை விட்டுக் கிளம்புகையில் மாலை ஆறு மணிச் சங்கு ஊதிவிட்டது. சூழ்ந்திருந்த கருமேகப் படலத்திடை தெருவிளக்குகள் பனிச்சென்று பூத்துவிட்டன. பொழுது மங்கிவரும் அந்த வேளையில், கரு மேகங்கள் தன்னிச்சையாக நகரத்தையே விழுங்க முயல்வது போல் சூழ்ந்து கொண்டு வெறிகொண்டு ஊளையிடும் காற்றின் ஒலிக்கேற்ப ஆடுகையிலே, தெருக்கள், சாலைகளெல்லாம் மனித அரவமின்றி, வெறிச்சிட்டு, ஒருவித அச்சந் தரும் சூழ்நிலையை உண்டாக்கியிருந்தன. மழைக் கோட்டோ, கம்பளியோ கொண்டு தலையோடு கால் போர்த்திச் செல்லும் இரண்டொரு மனித உருவங்களும், அச் சூழ்நிலையை மிகைப்படுத்த இசைந்திருந்தன.

ராமச்சந்திரன் ஏறியிருந்த வண்டி புத்தம் புதுக் காரல்ல. ஓடி ஓடி ஓய்ந்த பழைய பஸ்ஸின் இறுதி உருவமான லாரி. கட்டையும் கல்லும் மண்ணும் சுமந்து அந்த மலைப் பாதைகளில் முக்கி முனகி ஏறி இறங்கும் மெருகழிந்த உழைப்பாளி வண்டி. குமரியாற்றங்கரையின் உருவாகும் அணைக்குச் சாதனங்கள் சுமந்து செல்ல அது வரும் வாய்ப்பில், வாரம் ஒரு முறை ராமச்சந்திரனையும் நகரத்துக்கு அழைத்து வரும்.

காற்று படபட வென்று, கொக்கிகள் சுழன்று தொங்கும் சன்னல் திரையை மோதி வெற்றி கண்டு, ராமச்சந்திரனின் உடலையும் கொடுங்கரம் கொண்டு தழுவியது. பூதாகாரமான கம்பளிக்கோட்டே, அந்தச் சாரல் காற்றுக்கு ஈடு கொடுக்கத் தவிக்கையில், அவனுடைய கைத்தறி முழுச் சட்டை எம்மாத்திரம்? அது அவிந்தது: அவனுக்குக் கைகள், நெஞ்சு எல்லாம் நடுநடுங்கின. பற்கள் கிடுகிடுத்தன.

''சை! இந்த மாசம் கம்பளிக் கோட்டும் நிஜாரும் கண்டிப்பாய்த் தைத்துவிட வேண்டும்'' என்ற எண்ணத்துடன் அவன் உடலைக் குலுக்கிக் கொண்டான். அவன் ஒருவன் கஷ்டப்பட்டு அந்தக் குடும்பத்தின் தன்மானம் என்ற இரத்தினம் மீட்கப்பட்டுவிடப் போவதில்லை. அதுதான் ஆழம் காண முடியாத கடன் என்ற சமுத்திரத்தில் விழுந்து விட்டதே. பொறுப்பற்ற தந்தையினால்......?

வெறுப்பென்னும் கொடியில் படர்ந்து ஓடிய அந்த எண்ணத் தொடர்பு கண்முன் கண்ட காட்சியில் சட்டென்று அறுந்தது.

அந்த வேளையில், அந்தக் காற்று மழையில், கரிய வடிவில் நீண்டு வளைந்து சென்ற அந்த நகரப் பாதையில், ஒரு பெண், தன்னந்தனியாக, எதிர்த்து வீழ்த்தும் காற்றுடன் போராடும் குடை, சேலைத்தலைப்பு, குளிர் இவற்றுடன், ஓர் அடி முன்னேறத் தத்தளித்துக் கொண்டிருந்தாள். போராடிப் போராடிக் குடை தலையும் கீழுமாய்த் திரும்பி விட்டது. அதை அவளால் மடக்கவும் முடியவில்லை, அப்படியே கொண்டு செல்லவும் இயலவில்லை.

ராமச்சந்திரனின் வாயிலிருந்து, அவனையும் அறியாமல், ''வேலு, வண்டியை நிறுத்து'' என்ற கட்டளை வந்தது.

தன்னுடைய அவல நிலையில், லாரி ஒன்று நின்று, அதிலிருந்து ஊருக்குப் பழக்கமில்லாத துணிச் சட்டை இளைஞன் ஒருவன் பற்கள் கிடுகிடுக்க இறங்கிவரவே, அவளுக்கும் வெட்கமாகவே இருந்தது.

''குடையை இப்படிக் கொடுங்கள். எங்கே போகிறீர்கள்? வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றான் ராமச்சந்திரன் குரலும் உடலும் நடுநடுங்க.

நடுக்கடலில் சந்தித்துவிட்டாற் போன்ற அந்நிலையில் சாதாரணமான தயக்கங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடமே உண்டாகவில்லை. இயலாது என்ற அவசியம் வந்த பிறகு, மனிதத் தன்மை ஒன்றுதானே மிஞ்சுகிறது?

''பாம்பே காஸில் போகவேண்டும்...... உங்கள் உதவிக்கு மிக்க வந்தனங்கள்...'' என்று நடுநடுங்க அவள் வாய் திறந்த பிறகுதான் அவனுக்கு, அந்த லாரி புஷ்பக விமானமல்ல, ஆளைப் பார்த்து இடமளிக்காது என்பது புரிந்தது. நெருக்கியடித்துக் கொண்டு முன்புறத்தில் டிரைவர் உட்பட மூவர் உட்காரலாம், கஷ்டப்பட்டால். குடையை வாங்கிப் பின்புறம் அடுக்கப்பட்டிருந்த கட்டைகளின்மேல் போட்டான்.

''நீங்கள் ஏறிக்கொள்ளுங்கள்......'' என்றான் ராமச்சந்திரன்.

''இல்லை, நான் ஓரத்தில் உட்காருகிறேன்'' என்றாள் அவள் ஒடுங்கிக் கொண்டு.

அப்போதுதான் அவளும் ஒரு வெறும் வாயில் புடவைக்குள் நனைந்து ஒட்டி, நடுங்குகிறாள் என்பதை அவன் கவனித்தான்.

இடிக்காமல் உட்கார முடியாது. வேறு வழியில்லை. ''கதவை நன்றாகச் சாத்தி விடுங்கள்!'' என்றான், அவன் உட்கார்ந்து கொண்டு.

வண்டி கர்ண கடூரமான ஓசையைக் கிளப்பிக் கொண்டு நகர்ந்தது.

''இந்த ஊருக்குப் புதிசு போலிருக்கிறது!'' என்றான் அவன் மெதுவாக.

''ஆமாம். ரெண்டு மாசம்தானாகிறது. நான் டி. இ. வி. ஹெட் ஆபிஸில்தான் டைப்பிஸ்டாக இருக்கிறேன்'' என்றாள் அந்தப் பெண்.

குமரியாற்றின் அணைத் திட்டத்தில் பங்கு பெற்றிருக்கும் 'இரவிக்ரமா இஞ்ஜினியரிங் கம்பெனி'யைச் சேர்ந்த சரக்கு லாரிதான் அது என்பதை அவள் அறிவாள். ராமச்சந்திரனை அவள் உதகை நிலைய அலுவலகத்தில் பார்த்திருக்கிறாள்.

''இந்த வேளையில் புறப்பட்டீர்களே?''

''என்ன செய்வது? அம்மாவுக்கு ஜுரம். டாக்டர் வீட்டுக்குப் போய்விட்டு மாத்திரை வாங்கி வருகிறேன். வழியில் சமாளிக்கவே முடியவில்லை......'' படபட வென்று திரைகள் காற்றோடு போராடின. அவள் இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

''ஓரத்தில் காற்று அதிகம் இருக்கும்... கதவை நன்றாகச் சாத்தினீர்களா?''

''பரவாயில்லை. நடுக்கடலில் தத்தளித்தவனுக்குக் கட்டுமரமேனும் கிடைத்ததே'' என்று அவள் மெள்ளச் சிரித்தாள்.

வண்டி 'சேரிங்கிராஸை'ச் சுற்றித் திரும்பி அவளை அந்த மலைப் பக்கம் கொண்டுபோய் விட்டுவிட்டுச் சற்றைக்கெல்லாம் திரும்பிவிட்டது.

சிறிது நேரம் அவள் வெளிச்சாரலை வாங்கிக் கொண்டு உள்ளே அடக்கமாகச் செய்திருந்தாள். இப்போது ராமச்சந்திரன் மீது சாரல் வீசியது.

......அவளும் ஒருவேளை குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு உடையவளோ, என்னவோ? தந்தை, மூத்த சகோதரர் எவரேனும் ஆதரவாக இருந்தால், இந்த இடத்துக்குப் புதியவளாக, 'டைப்பிஸ்ட்' வேலைக்கு வருவாளா?



தாய்க்கு ஜுரம் என்று அவளே வந்த தால், வேறு ஆதரவாளர் இல்லை என்பது அவனுக்கு நிச்சயமாகப் புலனாயிற்று.

தன்னைப் போலவே ஒரு பிறவி என்ற அநுதாபப் பெருமூச்சு வந்தது. மூத்த பையனாக, தன்மானத்தை மதிப்பவனாக அவன் ஏன் பிறந்தான்? அவளோடு எட்டுப் பேருக்குப் பிறவி அளித்துவிட்டுத் தாயும் கண்ணை மூடவேண்டுமா?

அவனுடைய தந்தை, பொறுப்புள்ள பதவியில்-ஊர் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியப் பீடத்தில் இருந்தும், பொறுப்புள்ள குடும்பத் தலைவராக இருந்தும், பொறுப்பை உணராத இன்னொருவரைப் போன்ற சுபாவம் உடையவர். கண்மூடித்தனமாகச் செலவு செய்வதில் சூரர். அந்த வருவாயைப் போல் நான்கு அளவு வருவாய் வந்தாலும், தேவையாக உள்ள குடும்பக் கப்பலை அறவே மறந்து ஆடம்பரச் செலவுகளுக்கு வருவாயை இரையாக்கிவிட்டு, கடன் பளுவை ஏற்றிக் குடும்பக் கப்பலை நகர்த்துவதே அவருக்கு வழக்கமாகி விட்டது. பொறுப்பறிந்து கப்பலைச் செலுத்தும் மாலுமியும் இல்லை. அவன் ஒருவனைத் தவிர, மற்றவர்கள், தலைக்குத் தலை இஷ்டமாக எப்படியோ வளர்ந்தார்கள். எல்லோருக்கும் பணம்; எல்லோருக்கும் தன்னலம்.

இந்த இரண்டுமே குறி. கடமை என்ற சொல், அவனைத் தவிர அந்தக் குடும்பத்தில் உள்ள வேறு எவரையுமே பாதித்திருக்கவில்லை.

தன்மானத்தை எண்ணி எண்ணிக் குறுகிப் போயிருந்த ராமச்சந்திரன் அசுர வேகத்திலே பல்லைக் கடித்துக் கொண்டு படித்து முடித்து, பரீட்சை எழுதியதுமே வேலைக்கு வந்து, தந்தை மூழ்க விட்டிருக்கும் இரத்தினத்தை எடுக்கக் கனவு கண்டான். அடுத்த தம்பி, தங்கைகள், உயர்நிலைப் பள்ளியைக்கூட முடிக்காமல், உல்லாசமாக நடப்பதை எண்ணிக் குனிந்து நடந்தான்.

அவன் கனவு நினைவாகும் காலத்தில், உண்மையான கடனழுத்தை நீக்கவே மலைப்பாக ...... எத்தனை கடிதங்கள்! அவனைப் போலவே, கடன் கொடுத்தவர்களும் அவன் வேலைக்கு வரும் நாளை எண்ணிக் கொண்டிருந்தார்கள் போலும்!

கடைக்காரர், தெருக்காரர்; சக ஆசிரியர்கள், ஒருவர் பாக்கியில்லாமல் அவர் கடன் பட்டிருந்தார். மூத்தவன் சம்பாதிக்கும் நாளை எதிர்பார்த்திருந்த தம்பி-தங்கைகளின் பணத்தேவையின் கோரிக்கைகளடங்கிய கடிதங்கள் வேறு; இத்தனைக்கும் மேல், கடனோ, முதலோ போட்டு அவனைப் படிக்க வைத்த தந்தை, கைநீட்டி வாங்குவதையே வழக்கமாகக் கொண்டிருந்தவர், அவனைச் சும்மா விட்டு விடுவாரா?

புகைச்சலைப் புகைத்துக்கொண்டு, தன் தேவைகளை எப்படியெல்லாமோ குறைத்துக் கொண்டு அவன் கடனழுத்தை நிரப்பத்தான் முயன்றான்.

இந்த இலட்சணத்திலே, அவனுக்குக் கல்யாண முயற்சிகளும் செய்யும் தந்தையிடம் அவனுக்கு ஆத்திரமும் கோபமும் மேலிடாமலிருக்குமா?

''வரதட்சிணை என்று நான் வாங்குவதாக இல்லை. அவர்கள் எல்லாச் செய்நேர்த்திகளும் செய்து, நம் செலவுக்கு மூவாயிரம் தருகிறார்கள். பெண்ணின் தகப்பனாருக்கு புள்ளி மத்திய சர்க்காரில் செல்வாக்குள்ள வேலை. உன் எதிர்காலம் நன்றாக அமைய அந்த வழியில் இடமிருக்கிறது. பெண்ணை நான் பார்த்து விட்டேன். அப்பழுக்குச் சொல்வதற்கில்லை. நீ பாவனியோடு ஒரு மாசம் லீவு எடுத்துக்கொண்டு ஏன்? அந்த வேலையைக்கூட விட்டு விடலாம்,—வந்தாயானால் நலமாயிருக்கும்.'' இதுதான் அவர் எழுதியிருந்த கடிதத்தின் முக்கியச் செய்தி.

இதிலே பாசத்தின் ரேகையோ, அன்பின் மணமோ ராமச்சந்திரனுக்குக் காணக்கிடைக்கவில்லை. சுயநலம்!

வேளை தவறாமல் உண்டு, உடுத்து, பள்ளிக்கூடத்தில் ஏமாந்த ஆசிரியன் தலையில் பளுவைச் சுமத்தி விட்டு, அதிகார புருஷனாய்த் திரியும் சுயநல உருவம்! இப்போதைய மூவாயிரத்தில், இப்போதைக்குச் சில நாட்கள் குபேர வாழ்வு நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும்!

அவன் ஓர் உஷ்ணப் பெருமூச்சுடன் உடலைக் குறுக்கிக் கொள்கையில்தான், காந்த எண்ணங்களுக்குக் கருவிபோல் இழைந்து வந்த வண்டிச் சத்தம் விட்டு விட்டு முக்கி முனகுகிறது. கானகத்தின் நடுவே செல்லும் மலைப்பாதையின் கொண்டையூசி வளைவு ஒன்றில் ஏற இயலாமல் சறுக்கிச் சறுக்கித் தோல்வி யடைகிறது. வேலு தன் சாகஸத் தந்திர சாமர்த்தியமனைத்தையும் காட்டுகிறான் என்பதெல்லாம் புரிய வந்தது.

''என்ன வேலு?''

''மழை பாருங்க?......'' என்று வேலு மறுபடியும் விசையை அழுத்தி ஏற்றப் பார்த்தான்.

''உய்... ..உய்......'' என்று உச்சத்தில் ஏறிவிட்டு, உயிரொலி ஒரேயடியாக மடிந்ததே ஒழிய, வண்டி ஏறவில்லை.

நிமிஷங்கள் பத்து, பதினைந்து என்று ஓடிக் கொண்டிருந்தன.

''இந்த ஓட்டம்தான் தகராறு......'' என்று விசையுடன் ஏற்ற, வேலு வண்டியைப் பின்னே தள்ளிப்போனான். பின்



புறம். பாதையை மேகம் மறைத்தது. ராமச்சந்திரன் திரும்பிப் பார்த்துக்கொண்டே, 'ரைட்...... ரைட்...ரைட்...' என்று சொல்லிக் கொண்டிருந்தான். இடமிருந்ததாகத்தான் தெரிந்தது. அவன் நான்காவது 'ரைட்' சொன்னதும் என்ன நேர்ந்தது என்று புரியவில்லை. முழு விசையுடன் தாக்கி எறியப்பட்டான்.

நிலம் சரிந்து, வண்டி சடபடவென்று கட்டைகள் சரியப் பேரோசையுடன் பள்ளத்தில் உருண்டு சரிந்ததொன்றும் அவனுக்குத் தெரியாது.

இரவு, உதகை ஆஸ்பத்திரியில் அவன் கண் விழித்ததும் நிலைமை உணர்வுதான் அவனுக்குப் புரிந்தது. "வேலு......!" என்று அலறினான். வேலு, காலில் சிறு காயத்துடன் முண்டான கட்டுடன் அருகில் தானிருந்தான்.

"எனக்கு ஒண்ணு மில்லீங்க ஸார், வண்டி 'ஸிலிட்'டாகு தோன்னு நான் அந்தப்புறம் அப்படியே குதிச்சிட்டேன் ஸார், உயிருக்குவந்த ஆபத்து......" மருண்டு அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் மேலதிகாரி, பெரிய டாக்டர் எல்லோருமே இருந்தார்கள்.

வலது கையில் அடிபட்டிருந்தது. மற்றப்படி அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மருந்தின் மயக்கம் கண்களைச் செருகியது. அன்றிரவு அவன் ஆழ்ந்த துயிலில் கழித்தான்.

பொழுது விடிந்து, சிந்தனை தெளிவான பிறகுதான் வலி முழு வேகத்தையும் காட்டியது. 'பாதை தெரியவில்லையா? தவறாக வழி காட்டி விட்டேனோ?" என்று உள்ளம் வண்டாகக் குடைந்தது.

ஒவ்வொருவராக வந்து பார்த்தார்கள்; அநுதாபம் தெரிவித்தார்கள்.

நிலச்சரிவினால் ஏற்பட்ட விபத்தென்பது முடிவாயிற்று. ஆனால் உள்ளத்திலே அவனுக்கு சொல்லொணாக் கசப்பைத் தந்தது வேதனை.

'விபத்து ஏன் ஏற்பட்டது? ஏற்பட்டது தான் ஏற்பட்டதே, உயிரை ஏன் விட்டு வைத்தது? அவன் சம்பாதிக்கும் பணத்துக்காக அல்லாமல் அவனுக்காக வருந்தப் போகிறவர் உண்மையாக எவருமில்லை. அவன் லட்சியமாக நினைத்த செயலும் நிறைவேறப்போவதில்லை. அவன் இருந்து என்ன செய்யப் போகிறான்?......

கையசைக்க முடியவில்லை. காற்றின் வெறி முதல் நாளைவிட மும்முரம்.

மாலை ஐந்து மணி இருக்கும். ஆஸ்பத்திரிக்கு அவன் வந்தான்.

"எனக்கு ஆபீஸ் போன பிறகுதான் தெரியும்" என்று பதறிக் கொண்டு அவனருகில் வந்தான்.

முதல் நாளைப்போலவே வாயில் புடவை. அவனது உடல் ஒட்டி விறைத்துக் கொண்டிருந்தது. குடை யில்லாமல் வந்திருக்கிறான் என்பது புலனாயிற்று.

"நனைந்திருக்கிறீர்களே? உட்காருங்கள்" என்று நாற்காலியைக் காட்டினான்.

மனவலிக்கு ஏதோ ஆறுதல் கண்டாற் போன்றதொரு பிரமை.



அவர்: மாப்பிள்ளை கோபித்துக்கொண்டு லெட்டர் எழுதி இருக்கான். அவன் இங்கே வருவதில் ரொம்ப சந்தோஷம் என்று நான் கடிதம் எழுதவில்லையாம். 500 ரூபாய் பணத்தையும் அனுப்பி வைத்து விட்டு சந்தோஷம்னு வேறு என்னால் எப்படி எழுத முடியும்?

"என்னைக் கொண்டு விட்டுப் போனீர்களே......? எப்படி...பாவமே...?"

"இந்த ஊர்ப் பாதையில் விபத்து ஏற்படக் காரணமும் வேண்டுமா?"

"உங்களுக்கு...... தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள், இங்கே எவரேனும் இருக்கிறார்களா?......"

"எனக்கு இந்த ஊரில் என்ன, உலகிலேயே யாருமில்லை. என் பணத்துக்குத் தான் மனிதர்கள் இருக்கிறார்கள்......"

அவன் படபடக்கும் சுபாவத்தினன் அல்ல. உள்ளக்கசப்பு அப்படிச் சட்டென்று வெளிவந்ததற்குக் காரணம் ஒரு வகை அநுதாப ஒற்றுமை உணர்ச்சிதான்.

"அப்படி ஏன் நினைக்க வேண்டும்? அப்படியானால் நீங்கள் விழுந்த இடத்திலேயேவிட்டிருப்பீர்கள். வீணில் மன வருத்தப் படாதீர்கள். உங்களுக்கு ஏதேனும் தேவையானால் சொல்லுங்கள்......"

"எனக்கு ஒன்றும் வேண்டாம். உங்கள் அன்புக்கு மிக்க நன்றி" என்று அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

உடனே சட்டென்று நினைவு வந்தவன் போல், "அந்த 'லாக்கருக்'குள் என் 'பர்ஸ்' இருக்கும், கொஞ்சம் எடுங்கள்..." என்றான்.

அவன் எடுத்துக் கொடுத்தான்.

அவன் அதை ஒரு கையாலேயே பிரிப்பதைக் கண்டு, அவன் பிரித்து, அவன் கேட்ட அதற்குள்ளிருந்த கடிதம் ஒன்றை எடுத்துக் கொடுத்தான். கடிதத்துக்குள் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன.

கடிதத்தைப் பிரித்தான். வரிகளில் அவன் கண்கள் ஓடின.

அன்புள்ள
ராமச்சந்திரன் அவர்களுக்கு,

இப்படி ஒரு கடிதம் எழுத மனமும் உடலும் கூன்றுகின்றன. எனினும் எழுதித்தானாக வேண்டுமென்றிருப்பதால் இதை வருத்தத்துடன் எழுதுகிறேன். என் தந்தை பரமசிவம் பள்ளியில் ஆசிரியராக இருந்த நாட்களில், உங்கள் தந்தைக்காகப் புத்தக வியாபாரிகளின் கடன் ஒன்றைத் தீர்த்திருக்கிறீர். அந்த வகையில் ரூ. 500 எங்களுக்குச் சேரவேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். சம்பந்தப்பட்ட ரசீது எங்களிடம் இருக்கிறது. ஐந்து வருடங்களாகியும் என் தந்தை இதைப் பொருட்படுத்தியிருக்கவில்லை. அவருடைய நிலை மறைவினால் குடும்பம் இன்று ஆதரவற்று நிற்கிறது. தங்கள் தந்தையாரிடம் கேட்டோம், பயனில்லை. எனக்கு இப்படி எழுத மனமில்லை. குடும்பத்தின் மூத்த மகன் என்ற பொறுப்பில், இன்னுமுள்ள ஐந்து பேருள்ள குடும்பத்தைத் தாங்கவேறு யாருமில்லாத நிலையில், மிக வருத்தத்துடன் எழுதுகிறேன். வேலைக்கு முயலுகிறேன். அது கிடைக்கும் வரையிலாவது, நெருக்கடியாக இருப்பதால் ஓர் ஆதரவற்ற சகோதரி என்ற முறையில் லேனும், அப்பணம் சேர்ப்பிலேனும் உதவினால் மிக்க நலமாக இருக்கும். காலத்தில் செய்த உதவி என மறக்கமாட்டேன்.

—கௌரி

ஏழை ஆசிரியர் என்பதற்குப் பிரத்தியட்ச எடுத்துக் காட்டாக ஒட்டி, உலர்ந்த அந்த உருவம் அவன் மனக் கண்முன் நின்றது. தனது தந்தைக்காக, இரவு பகல் பள்ளியில் வேலை செய்யும் அப்பாவி உருவம்! விடைத்தார்கள் முதற்கொண்டு அவனுடைய தந்தைக்காக அந்த அப்பாவி திருத்தித் தந்திருக்கிறார்! அவனே போய் வாங்கி வந்திருக்கிறான், அவர் வீட்டுக்குப் பல முறை சென்று.

கடிதம் வந்து இரண்டு மாதங்களாக அவனால் ஏதும் செய்ய முடியவில்லை.

"என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்."-அவன் நினைவுக்குக் கொணர்ந்ததும் அவன் நிமிர்ந்தான்.

"ஒன்றுமில்லை. இந்த ஐம்பது ரூபாயை இந்த விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். நேற்றே அனுப்ப எண்ணி வந்தேன். தாமதமாகி விட்டது. இன்று எவரிடமும் சொல்ல மறந்தேன். நல்ல வேளை! நீங்கள் வந்தீர்கள்."

அவன் கடிதத்தின் மூலையிலிருந்த விலாசத்தை எப்படியோ கிழித்துக் கொடுத்தான். அவன் கண்கள் அகல ஒரு முறை பார்த்து விட்டுப் பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டு எழுந்தான். "நாளை ரசீது கொண்டு வருகிறேன். வரட்டுமா?" என்று விடை பெற்றுச் சென்றான்.

மறுநாள் பகல் ஒரு மணிக்கு அவன் சொன்னபடி வந்தான்.

மழை, காற்று, தூற்றல், வெய்யில், ஒன்றுமில்லை. சலனமற்று, ஒளியற்று, களையற்று ஏதோ இயங்கியது ஊர்.

"இதோ ரசீது" என்று அவன் ஒரு சீட்டை அவனிடம் கொடுத்தான்.

'ஐம்பது ரூபாயைப் பெற்றுக் கொண்டேன். வந்தனம். ஜெனி'

அவன் விழிகள் நிலைத்தன.

"நீங்கள் தானா அது!"

"ஆமாம். இப்போது உங்களுக்குச் செலவிருக்கும். பணத்தை உபயோகித்துக் கொள்ளுங்கள்......"

"இல்லே, உங்களைவிட நான் அதிகம் சம்பளம் வாங்குகிறேன்."

"இல்லை, என்னைவிட உங்களுக்குப் பொறுப்பு அதிகம். நேற்று ஒரு கோட்டில்லாமல் நீங்கள் துன்புற்றதைப் பார்த்தேன்." அவன் விழிகள் தாழ்ந்தன. அவன் என்ன சொல்லியும் அவள் ஏற்கவில்லை. பலவந்தமாகப் பணத்தை பர்ஸில் போட்டு வைத்து விட்டு, "நாளை உங்களை இங்கிருந்து வீட்டுக்கு அனுப்பினால் ஊருக்குப் போவீர்களா?" என்றாள்.

"ஆமாம். கைக்குத்தான் பிட்டி பூசி விட்டார்களே? மூன்று வாரங்கள் கழித்து அவிழ்க்க வந்தால் போதும்! ஊருக்கு வரச் சொல்லித்தான் கடிதம் வந்திருக்கிறது. ஆனால் என் உடல் நிலைக்காக அல்ல..."

"பின்னே?"

"மூவாயிரம் ரூபாய்க்கு என் அப்பா என்னை விலை பேசி யிருக்கிறார். அதற்காக...!"

"ஏன் இப்படிக் கசந்து பேசுகிறீர்கள்?"

"அடைக்க வேண்டுமே என்ற தொல்லையில்லாத கடனல்லவா? என் தம்பிக்கு, தங்கைகளுக்கு நல்ல உடுப்பு, துணிமணிகள் வேண்டும். ஊர் சவாரி, உல்லாச விருந்து, எல்லாம் கிடைக்கும்."

"இப்படி எல்லாம் கசப்பாகவே ஏன் எண்ணிக் கொள்கிறீர்கள்? நீங்கள் கோழையாக இருப்பீர்கள் போலிருக்கிறதே?"

"......வீரனாக வழி இருந்தால் சொல்லுங்கள்!"

"கசப்பு, வெறுப்பு என்னும் போர்வைக்குள் பதுங்கிக் கொள்வதால், நீங்களும் நலம் காணப் போவதில்லை, பிறருக்கும் நன்மை வரப்போவதில்லை."

"பின்......"

"உங்கள் கசப்பின் முழுக் காரணமும் எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் யோசனை செய்து பாருங்கள். நான் வரட்டுமா?"

அவள் போய்விட்டாள்.

மழையும் சாரலும் மறைந்தன. பார்க்கும் இடமெல்லாம் பச்சை குலுங்கியது. ஒளிந்து நின்று, காதலியைக் கண்பொத்தி விளையாடிக் களிக்கும் காதலன் போல், இதமான இளநகையுடன் கதிரவன் வெண்பஞ்சு மேகத்துள் மறைந்து, பசுமை கொழிக்கும் அழகை யெல்லாம் மங்கச் செய்வதும், உடனே வெளிவந்து ஒளி கூட்டுவதுமாக இருந்தான். மலையருவிகள் மலை முகடுகளை எல்லாம் பிடித்துக் கொண்டு அடங்காக் குழந்தைகளைப் போல் கூச்சலிட்டுக் கொண்டு தாவிக் குதித்தன. கைக் கட்டுடன் பணி புரியும் இடத்துக்குப் போவதற்கில்லாமல் நகரக் கொட்டகைக்குள் அடைந்து கிடந்த ராமச்சந்திரனுக்கு, ஒன்றுமே பிடிக்கவில்லை. ஜுரமடித்தவன் நாவுக்கு ஒன்றுமே ருசியில்லாதது போல் தோன்றுமே, அப்படி ஒரு வெறுப்பு.

ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அவன் தந்தை!

கம்பளி உடுப்புக்களணிந்து கைப் பையுடன் பாதையில் வருபவர் அவர் தான்! எரிச்சல் பற்றி வந்தது அவனுக்கு.

அவருக்கென்ன?-நினைத்தார், உல்லாசப் பிரயாணம் வந்து விட்டார்போலும்!

"என்ன சந்துரு? எனக்குத் தகவல் தெரிந்ததும் இருப்புக் கொள்ளலே...... என்ன? கைக் கட்டு அவிழ்க்கவில்லையா இன்னும்? நீ விவரம்கூடஎழுதவில்லையே?"

"என்ன எழுத வேணும்? கை ஒடிந்தது. கட்டவிழ்க்க மூணு வாரமாகுமாம். இதை எழுதி என்ன?"

"என்ன, அப்படிச் சொல்லிவிட்டயே?" என்று அவராகவே உள்ளே வந்து தமது



பையை ஒருமூலையில் வைத்தார். ஒருமுறை கண்களை ஓட்டி இடத்தைப் பார்த்தார்.

"இந்த இடந்தானா? வசதியே இருக்காது போலிருக்கிறதே?"

"பின்னே பங்களாவா கட்டியிருக்கிறார்கள்? ஏதோ தங்க இடம்" என்று சொல்லிவிட்டு வேலைக்காரப் பையனிடம் சாப்பாட்டுக்குச் சொல்லி அனுப்பினான் ராமச்சந்திரன்.

"ம், போதும், நல்லவேளை. நான் வந்தது நல்லதாய்ப் போச்சு. என் லெட்டர் கிடைத்ததோ?"

"கிடைத்தது."

"நல்ல சந்தர்ப்பம் வர இருக்கிறது. இதற்குத் தலை முழுக்குப் போட்டுவிட்டு இப்படியே வந்துவிடு. என்ன ரோடுடா, இது. மகா மோசம்!"

"நல்ல ரோடிலே உல்லாசப் பிரயாணம் பண்ணவா படிச்சேன் பின்னே?"

"உனக்கு இது பிடிச்சுப் போச்சா, அப்பா?" என்று கேட்டார் அவர்.

"எனக்கு இது போதும். நீங்க குளிச்சு சாப்பிடுங்கப்பா..." என்றான் அவன்.

தந்தை விடுபவராக இல்லை.

"டில்லியிலே பெண்ணின் தகப்பனார் இருக்கிறார். நல்ல யோகிக இருக்கிறது. இதைப்போல் மூன்று மடங்கு சம்பளம் கிடைக்கும். பெண்ணின் போட்டோ கொண்டு வந்திருக்கிறேன். நம் வீட்டில் எல்லோருக்கும் பிடிச்சுப் போச்சு. உனக்கு இஷ்டமில்லையா?"


"இஷ்டமில்லையான்னு நேரடியாக் கேட்டா? இப்ப என் குடும்பத்தையும் பெருக்க வேணுமா? நான் அப்படிக் குடும்பம் வைத்தால் உங்களுக்கு ஒரு தம்பிடி உதவமுடியாது. நீங்கள் யோசியுங்கள். இப்போது நீங்கள் எதற்குச் செலவழித்துக்கொண்டு உல்லாசப் பிரயாணம் வந்தீர்கள்? ஒரு கம்பளிக் கோட்டில்லாமல் நான் இங்கே கஷ்டப்படுகிறேனே, தெரியவில்லையா? உங்களுக்குப் பணம் வேண்டும் என்பதற்காக நான் கல்யாணம் செய்து கொள்ளத் தயாராக இல்லை. எனக்கு வந்திருக்கும் கடிதங்களைப் பாருங்கள்!"-கடன்காரர்களின் கடிதங்களைத் தூக்கி எறிந்துவிட்டு அவன் கட்டிலில் சாய்ந்தான்.

அவர் முகம் வெளிறி விட்டது. ஒருநாளும் அவன் வெறுப்பை இப்படிக் காட்டியதில்லை.

"உங்கள் எல்லோருக்கும் சுயநலமே பிரதானம். ஒருத்தன் தியாகம் செய்ய வேண்டும், நீங்கள் சுகமாக அநுபவிக்க வேண்டும்!"

"சந்துரு, நீ இப்படிப் பேசுவாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உனக்கு இஷ்டமில்லை என்றால் விட்டுவிடு. தத்தளிக்கும் குடும்பத்துக்கு நீ ஊன்றுகோலாய் மட்டும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அப்படி எந்தத் தந்தையும் நினைக்கமாட்டான். நீ கல்யாணம்-கார்த்திகை என்று செய்து கொண்டு சுகமா யிருக்கவேண்டும் என்றே விரும்புகிறேன் நான். உன்னை ஒரு விஷயத்திலும் நிர்ப்பந்தப் படுத்தவில்லை. நீ என்னை அப்படியெல்லாம் நினைக்காதே. தன்னல நோக்கம் கொண்டு நான் கூறவில்லை. உன் நலனுக்காகவேதான் கூறுகிறேன்."

'என்ன நயவஞ்சகப் பேச்சு! இவர் எனக்கு என்ன பெரிதாகச் செய்து புரட்டி விட்டார்? தம் சுகம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தாரே யொழிய பின்னே படிக்கவேண்டும், படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று கடுகளவாவது எண்ணியிருப்பாரா? குழந்தை குட்டிகளிடம் பாசம் இருந்தால், இப்படிக் கடன் பட்டு தம் இன்பத்துக்கு மட்டும் வழி செய்து கொள்ளுவாரோமே! கடவுள் செயலில் கண் மூடிவிட்டால், குழந்தைகள் கஷ்டப்படுமே என்று கருதி அநாவசியச் செலவுக்கெல்லாம் அணை கோலி யிருக்கமாட்டாரா? இப்பொழுது பெரிதாக உபதேசம் செய்ய வந்து விட்டாரே! தன்னல நோக்கம் கொண்டு கூறவில்லையாமே! பெற்றெடுத்த பின்னே கல்யாணம் கார்த்திகை யென்று செய்து





அவர்: முன்பெல்லாம் வருஷா வருஷம் தீபாவளிக்கு மாப்பிள்ளை வருவார், போவார்; சந்தோஷமாயிருக்கும்.

மற்றவர்: ஏனுங்க அவர் இப்போதெல்லாம் வருவதில்லேயோ?

அவர்: வருகிறார், சுவாமி! வந்தால் போகிறது தான் கிடையாது.

கொண்டு சுகமாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறாராமே! என்ன நைச்சியமாகப் பேசி என்னை மசிய வைக்கப் பார்க்கிறார்! ரொக்கமாக வரப்போகும் மூவாயிரம் ரூபாய் அல்லவா அவரை இப்படி யெல்லாம் பேச வைக்கிறது!''

குமுறிக் கொதிக்கும் நெஞ்சுக்கு அவர் கனிவு, ஆறுதல் தருவதாக இல்லை. அவன் தன் வெறுப்பை, அவனுடைய பொருள் தேடுமட்டும் புதைத்து வைத்திருந்தான். பிறர் கையேந்தாத நிலைவந்ததும் அவன் தன் வளர்ச்சிக்குத் தந்தையையே காரணமாக நினைக்கவில்லை. 'நான் என் கடமையைச் சரிவரச் செய்யாத போதிலும், நீ எனக்காக உதவுகிறாயே!' என்று தந்தையிடம் புகழ் மொழிகளை எதிர்பார்த்தது அவன் உள்ளம். ஆனால், தந்தையோ, அவன் உதாசீனமாகப் பேசிய சொற்கள் அம்பெனத் தைத்து விட்டன. சந்துரு படித்து விட்டால் உதவியாக இருப்பான் என்று அவர் எத்தனை கஷ்டங்கள் பட்டிருப்பார்?

உள்ளிருந்த நோவு முற்றிலும் வெளியே வருமுன்னே அமுங்கி விட்டாற்போல், தந்தை தனித்து, ஒன்றும் பேசாமல் ஊருக்குத் திரும்பிப் போய் விட்டார்.

அவர் அவனை நிர்ப்பந்தப்படுத்துவது போல் வற்புறுத்தியிருக்கலாம். அதை அவனையறியாமலே அவன் உள்ளம் எதிர்பார்த்தது. முழு எரிச்சலையும் காட்டிவிட்டு அவன் தியாகம் செய்கிறேன் என்ற உணர்வில் இணங்கி விடுவான். அதையே அவன் உள்ளம் அவனையுமறியாமல் விரும்பியது.

இப்போதோ அவன் உள்ளம் புரட்சி செய்தது. தியாகம் செய்பவன் என்ற பீடத்திலிருந்து விழுந்து விட்டான். அவன் தந்தை அவன் நினைத்த மாதிரி நேர்மையற்றவர் அல்ல.

அன்று கட்டவிழ்த்துக் கொள்ள அவன் உதகைக்குச் சென்றான். அன்று சனிக்கிழமை. ஆஸ்பத்திரியிலிருந்து நிஜார் பைக்குள் கையை விட்டுக் கொண்டு அவன் வெளியே வந்தபோது, அந்தப் பகல் வேளையில் நகரமே பூத்துச் சொரியும் மலர்ச் செடிபோல், கலகலவென்று சிரிப்பை உதிர்க்கும் கள்ளமற்ற நங்கை போல் கவினுற விளங்கியது.

அவன் நினைவு சட்டென்று, அன்றொரு நாள் புயலில் சந்தித்து இரு குழந்தைகள் போல் தானும் அவளும் அந்த வண்டியில் நெருங்கி உட்கார்ந்த நேரத்துக்குத் தாவியது. "இந்த உலகத்தில் எனக்கு எவருமில்லை" என்று அவள் மொழிந்தபோது, "அப்படி நினைத்து விடாதீர்கள்" என்று அவன் மறுமொழி கூறிய அந்த நிமிஷத்தை எண்ணியது.

"ஒரு கோட்டுக்கூட இல்லாமல் துன்புறுகிறீர்களே?" என்றல்லவோ அநுதாபம் காட்டினாள் அவள்?

விறுவிறென்று கடைக்குள் நுழைந்தான். சம்பளப் பணம் இன்னும் செலவாகவில்லை. 'கோட்' ஒன்றுக்குத் துணி வாங்கித் தைக்கக் கொடுத்தான். அழகான முழுக்கைக் கம்பளிச்சட்டை ஒன்று வாங்கினான். அவளும் தானே வாயில் புடவை உடுத்திக் கொண்டு அந்தக் குளிரில் நடுங்கினாள்?

பகல் ஒரு மணிக்கு அலுவலகத்திற்கு வெளியே அவளைச் சந்தித்தான்.

"ஜெனி? 'பொடானிகல் கார்டன்' வரையில் போகலாமா?"

அவள் திடீரென்று மாறிப் போய்விட்டாற்போலிருந்தது அவனுக்கு.

"என்ன விசேஷம்? உங்கள் தந்தையைப் பார்த்தேன். உங்களைப் பார்க்க வந்திருந்தார்போலிருக்கிறதே?"

"ஆமாம். நான் கேட்டதற்கு மறுமொழியில்லையே? ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும்."

"அதற்கு 'பொடானிகல் கார்டனு'க்குப் போகவேண்டுமா?"

"ஆமாம்" என்றான் ராமச்சந்திரன். கபடப் புன்னகை ஒன்று நெளிந்தது அவள் இதழ்களில்.

"சரி..."

தோட்டச்சாலை முடியும் வரையில் பொறுத்திருக்கவில்லை.

"ஜெனி! என்ன விஷயமாக இருக்கும் என்பதை உன்னால் இன்னம் ஊகிக்க முடியவில்லையா?"

அவள் அங்கே மறுமொழி கூறவில்லை.

தோட்டத்தில் வந்து பெஞ்சில் அமர்ந்ததும், அவன் தன் கையிலுள்ள பாக்கெட்டை அவளிடம் கொடுத்தான்.

"என்ன இது? உங்களுக்கு வாங்கினீர்களா?"

"எனக்கு கோட்டுக்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கிறேன். இது உனக்கு. ஜெனி! நீயும் குளிரில் நடுங்குவதை நான் பார்க்கவில்லை என்று நினைக்கிறாயா நீ?" கண்கள் ஒளிர அவன் கேட்டான்.

"இதை....உங்கள் அன்புக்கு நன்றி. ஒரு சகோதரி என்ற முறையில்தான் என்னால் வாங்கிக்கொள்ள முடியும்..."

"ஏன்? ஏன் ஜெனி?"

"ஆமாம். நாமிருவரும் மணந்து கொள்வதானால் நம்முடைய இரு குடும்பங்களும் கஷ்டப்பட நேரும்"

"அப்படியானால்... நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்க மாட்டோமென்று நினைக்கிறாய், ஜெனி?"

"ஆமாம். நான் இப்போது மணந்து கொண்டால் என் தாயும் குழந்தைகளும் ஆதரவற்றுப் போவார்கள். ஒரு பொறுப்பு இருக்கையில் இன்னொரு குடும்பமும் அமைக்க முயலுவதானால், இரண்டு குடும்பங்களுக்கும் ஆதரவு வேண்டிய நிறைவு இருக்க வேண்டும். என்னை மணந்து கொள்வதில் தங்களுக்கும் நலனில்லை..."

"இவ்வுலகில் நீயே என்மீது அன்பு காட்டுகிறாய் என்று நினைத்தேனே ஜெனி?"

"இல்லை யென்று சொல்லவில்லையே? அன்று காற்று மழையிலே கண்டும் கடுகி ஓடி விடாமல், இறங்கி ஆதரவு தந்தீர்கள். அன்றே திக்கற்ற நிலையில் ஒரு சகோதரன் என்று எண்ணினேன்."

"இதுதான் உன் விருப்பமா?"

"ஆமாம். என் நலத்தை எண்ண எனக்கு இப்போது நேரமில்லை. சுயநலம் இல்லாத வகையில் நாமிருவரும் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கக் கூடாதா? அன்புக்கு அந்த ஒரே விளக்கம்தான் என்று நாம் ஏன் நினைக்கவேண்டும்?"

புரட்சி செய்ய விரும்பிய அவன் உள்ளம் மலைத்தது.

'நாம் தியாகம் செய்கிறோம்' என்ற கொஞ்ச நஞ்ச உணர்வையும் அவள் அழுத்திவிட்டாளே?

ஆம். அன்பு சுயநலம் கூடியதாக இருக்கும்போது, பளுவாகிவிடுகிறது. அந்தப் பளுவில்லாத, இருதயம் உணர்ந்த ஒற்றுமை... காற்று மழையிலே கண்டதொரு தீபம் போன்று, அன்று, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்த அந்தச் சில நிமிஷங்களின் இனிய நினைவு.....இருக்கிறது. அது வாடாமல் அவன் அதை உள்ளத்துள்ளே வைத்துக் காப்பாற்றுவான்....

தந்தை பட்ட கடனை அடைப்பது யார்? முழுகிவிட்ட தன்மானத்தை மீட்பது யார்?... அவன் தன் தலையெழுத்தை வெற்றி காண முயல்வான்...

அதற்காக இந்த நிலையை விட்டுப்போக நல்ல சந்தர்ப்பம் வந்தாலும் பற்றிக் கொள்ளவேண்டும்.

"சரி, ஜெனி!" என்றான்.

தொண்டை கரகரத்தது; விழிகள் பளபளத்தன. தன்னைப் பற்றிய கனம் கரைந்து விட்டது.


அம்பீஸ் கபே

சென்னை, ஜார்ஜ் டவுன் பகுதியிலேயே
தங்குவதற்கான வசதிகள் எல்லாம் ஒருங்கே அமைந்த


முதல்தரமான இடம்

★

- ✳ சம சீதோஷ்ணத்துடன் கூடிய 'ஏர்கண்டிஷன்' அறைகள்
- ✳ ஒருவர், இருவர் மற்றும் குடும்பத்தினர் தங்குவதற்கான குளிர்ந்த நீர், வெந்நீர் 'ஷவர் பாத்' வசதிகளுடன் கூடிய அறைகள்
- ✳ டெலிபோன், ரேடியோ முதலிய தற்கால நவீன வசதிகள்
- ✳ முதல், இரண்டாவது மாடிகளுக்குச் செல்ல 'லிப்ட்' வசதி
- ✳ குளிர்ச்சாதனம் அமைக்கப்பட்டுள்ள வரவேற்புக் கூடம்
- ✳ குளுகுளுவென்றிருக்கும் சாப்பாட்டு அறைகள்



அம்பீஸ் கபே · 6,7,8,9, பிராட்வே · சென்னை-1
PHONE: 4747, 2453.


கரிக்கடைக்காரர்: பட்டாசு வாங்கிக் காசைக் கரியாக்கிறது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காதுங்க!
நண்பர்: எப்படிப் பிடிக்கும்? நீங்கதான் கரியைக் காசாக்குறவராச்சே!
"எங்க அப்பாவுக்கும் பட்டாசுன்னு கட்டோடு பிடிக்காதுடா!"
"உதிர்த்து ஒவ்வொண்ணாத்தான் சுடுவாரோ!"
ஹாஸ்ய
"தீபாவளிக்கு மாப்பிள்ளை வந்திருக்காப்போல இருக்கே! இப்போ என்ன பண்ணிண்டு இருக்கார்?"
"முறுக்கு பண்ணிண்டிருக்கார்!"
"ஏண்டி! உன் பிள்ளை கையில் வைர மோதிரம் போட்டிருக்காளாமே அவன் மாமியார்!"
"ஆமாம்! அப்பத்தானே அவளைக் கையிலே போட்டுக்கலாம்!"
மருந்து
கணவன்: சாதாரணமாக யாராவது அழுதால், கைக்குட்டையாலே துடைத்து விடலாம். உன் அழுகையைத் துடைக்கப் புதுப் பட்டுப்புடவையல்லவா வேண்டியிருக்கிறது!
நண்பர்: அந்த ஆளு பட்டாசு வெடிக்கிறமாதிரி எரிஞ்சு விழுந்தாரே, எதற்கப்பா!
பட்டாசுக் கடைக்காரர்: நம்ப கடையிலே வாங்கின பட்டாசு வெடிக்கவே இல்லேன்னு கத்திட்டுப் போறாரு!
எஸ்.விஜயலக்ஷ்மி
"இந்த வருஷம் எல்லாம் வாணமாவே வாங்கிட்டேன்!"
"எங்க வீட்டிலே வெடியா வாங்கியும்கூட எல்லாம் வாணமாப் போயிட்டுது!"
"எங்கள் வீட்டிலே ரொம்ப மோசம்டா! வாங்குற பட்டாசுகளையெல்லாம் எங்கப்பாவே வெடிக்கிறார்!"
"பரவாயில்லையே! எங்கள் வீட்டிலே எங்கப்பாவுக்குக் கூடக் கிடைக்கிறதில்லே! எங்க தாத்தாவே எல்லாத்தையும் வெடிக்கிறார்!"

பொங்கழல் உருவன்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்



ஒரு பலத்த போட்டி. பிரம்மாவுக்கும் மகா விஷ்ணுவுக்கும் தான். ஆம், தந்தையும் மகனுமே தம்மில் யார் பெரியவர் என்று வாதமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாதத்தைத் தீர்த்துவைக்கச் சிவபிரான் வருகிறார். எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறார். இருவரும் கேட்கிற படியாக இல்லை. கடைசியாக அவரே ஒரு போட்டியை ஏற்பாடு பண்ணி அந்தப் போட்டியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பெரியவர் என்று நிர்மாணிக்கலாம் என்கிறார். இருவரும் இசைகிறார்கள். அவ்வளவுதான். அவர் வானுற ஓங்கி வளரும் ஓர் அனல் பிழம்பாக மாறுகிறார். அந்த அற்புத உருவின் அடியையோ முடியையோ யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்று போட்டி அமைகிறது. மகாவிஷ்ணு வராக உருவில் அடி தேடப் புறப்படுகிறார். அதல பாதலங்களையே ஊடுருவிச் செல்கிறார். அன்ன உருவில் பிரம்மா வானுலகில் பறந்து பறந்து செல்கிறார் முடிகாண. சென்று கொண்டே இருக்கிறார்கள் இருவரும். அடியையோ முடியையோ கண்டபாடாக இல்லை இருவருக்கும். இருவரில் விஷ்ணு கொஞ்சம் யோக்கியமானவர். ஆதலால் அடியைக் காண இயலவில்லை என்று தம் தோல்வியை ஒப்புக் கொண்டு திரும்பி விடுகிறார் பூலோகத்துக்கு. பிரம்மா அப்படித் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. ஏதாவது குயுக்தி பண்ணி இறைவன் முடியைக் கண்டு விட்டதாகச் சொல்ல விரும்புகிறார். அந்தச் சமயத்தில் ஒரு தாழம்பூ தனியாக வருகிறது. 'எங்கிருந்து வருகிறாய்' என்று கேட்டார். 'இறைவன் முடியிலிருந்து வருகிறேன். அதிலிருந்து நழுவிக் கற்பகோடி காலங்கள் ஆகிவிட்டன' என்று சொல்கிறது தாழம்பூ. அதைச் சரிக்கட்டுகிறார் பிரம்மா. தன்னை இறைவன் முடியிலிருந்து பிரம்மாவே எடுத்து வந்ததாகப் பொய் சாட்சியம் சொல்லச் செய்கிறார். இவர்கள் சொல்வது பொய் என்று அறிய எவ்வளவு நேரம் செல்லும் இறைவனுக்கு? பிரம்மாவை பூலோகத்தில் சாதாரண மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். தாழம்பூ தம்முடைய பூசைக்கே உரியதல்ல என்று இறைவனால் விலக்கப்படுகிறது. விஷ்ணு தம் தோல்வியை ஒப்புக்கொண்டதை மெச்சி, அவருக்குத் தம் அடியையும் முடியையுமே காட்டுகிறார். அதற்காக அழல் உருவில் இருந்த இறைவன் மலை உருவில் குறுகுகிறார். அப்படிப் பொங்கழல் உருவனாக இருந்த இறைவனே அண்ணாமலையானாக மாறித் திருமாலுக்குக் காட்சி தர நிற்கிறார்.

இப்படி ஒரு கதை, அண்ணாமலை என்னும் மலை பூவுலகில் தோன்றியதற்கு. இந்தக் கதையை எல்லாம் இன்றைய பகுத்தறிவாளர்கள் ஒப்புக் கொள்வார்களா, கதைக்குப் பின்னால் இருக்கும் தத்துவ உண்மையைச் சொல்லாவிட்டால்? தன்னைப் படைத்துக் காத்து அழிக்கும் தலைவனை இறைவனைக் காண மனிதன் எவ்வளவோ காலம் முயன்றிருக்கிறான். மக்கள் இரண்டு பிரிவினர். ஒருவர் செல்வத்தால் சிறந்த சீமான்கள், மற்றவர் அறிவால் உயர்ந்த அறிஞர்கள். செல்வத்தால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமே இல்லை என்ற செருக்குடையவர் செல்வந்தர். அறிவால் அறிய முடியாத விஷயம் ஒன்றும் இருக்கவே இருக்காது என்ற கர்வம் உடையவர் அறிஞர். உண்மை என்ன என்றால் இருவராலுமே இறைவனைக் காண்பது இயலாது. செருக்கும் கர்வமும் நிறைந்த உள்ளத்தால், இறைவன் முடியை என்ன, அடியையுமே காணமுடியாது என்ற உண்மையைத்தான் விளக்குகிறது அண்ணாமலையாரின் இந்தக் கதை.

செல்வராலும் அறிஞராலும் அறியொணாத இறைவன் பின்னர் யாருக்கு எளியவனாகத் தன் உருவைக் காட்டுகிறான் என்றால், 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும்' பக்தர்களுக்குத்தான். 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட'ப் பாடிய மணிவாசகர், அண்ணாமலையில் அந்தப் பொங்கழல் உருவனை அண்ணாமலையானைக் கண்டபோது 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி' என்ற தம் திருவெம்பாவைப் பாடலை ஆரம்பிக்கிறார். பத்தொன்பது பாட்டுப் பாடி முடிந்ததும் ஆதியாகிய முடி எங்கே யிருக்கிறது அந்தமாகிய அடி எங்கே



இருக்கிறது என்று கண்டு விடுகிறார். ஆம், இறைவன் காண்பதற்கு எளியனாக அமைந்து விடுகிறார். 'ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள்' என்று தானே, திருவெம்பாவை இருபதாம் பாட்டு கூறுகிறது. இறைவனது அடியும் முடியும் அவனது திருத்தாள்களே என்ற உண்மையைப் பக்தனான கவிஞன் எவ்வளவு எளிதாகக் கண்டு விடுகிறான். மகாவிஷ்ணுவையும், பிரம்மாவையுமே மண்ணைக் கல்ல வைத்து விடுகிறானே அவன். 'விண்ணிறைந்து, மண் நிறைந்து, மிக்காய் விளங்கொளி எண்ணிறந்த எல்லை இலாதானாக' இருக்கும் இறைவனை எவ்வளவு எளிதாகச் சுட்டிக் காட்ட முடிகிறது கவிஞனுக்கு. இத்தனை அரிய உண்மைகளை விளக்கிக்கொண்டு நிற்கின்ற மலைதான் திருவண்ணாமலை. அந்த மலையின் அடிவாரத்திலே கோயில் கொண்டிருக்கிறவர்தான் அண்ணாமலையார்.

அண்ணாமலையை நினைக்கின்ற போதெல்லாம், இல்லை, அண்ணாமலையானைக் கண்டு தொழுகின்ற போதெல்லாம் இறை வழிபாடு உலகத்தில் எப்படித் தோன்றிற்று என்ற உண்மையுமே விளக்கமுறும். மனிதனுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் அவன் வாழ்வதற்கு ஒளியும் என்று அறிகிறோம். சூரியன் இல்லாத பகலும், சந்திரன் இல்லாத இரவும், நக்ஷத்திரங்கள் இல்லாத வானும் இருந்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்ப்போமே. இறைவனது படைப்புகளில் எல்லாம் சிறந்த படைப்பு ஞாயிறுதானே. அதனிடமிருந்து எழுகின்ற ஒளியும் வெம்மையும் இல்லாவிட்டால் உலகமும் உயிர்களும் உய்வதேது. ஆதலால் சிந்திக்கத் தெரிந்த மனிதன், ஞாயிறையே, ஞாயிறு மூலமாக அதனை உலகுக்குத் தந்த இறைவனையே வந்தித்து வணங்க முற்பட்டிருக்கிறான். இப்படித்தான் எல்லாச் சமயத்தாரிடத்தும் இறைவழிபாடு ஒளிவழிபாடாகவே உரு எடுத்திருக்கிறது. இருள் போக்கும் தன்மையோடு, மருள் நீக்கும் தூய்மையும், ஆக்கிக் காத்து அழிக்கும் தன்மையும், அருவாய், உருவாய், அருவுருவாய் இயங்கும் இயல்பும், பஞ்ச பூதங்களில் ஒன்றான தீயினிடத்தே தான் மிகுந்திருக்கின்றன. இப்படி அக்கினியின் இயல்பும் இறைவன் இயல்பும் இணைந்திருப்பதன் காரணமாக ஒளி வழிபாடே தீ வழிபாடாகப் பரிணமித்திருக்கிறது.

இறைவனை 'ஞானச் சுடர் விளக்காய் நின்றவன்' என்று அப்பர் பாடினார், 'சோதி அந்தம் ஆயினும் சோதியுள் ஓர் சோதியானும்' என்று சம்பந்தர் வழிபடுகிறார். 'சோதியே, சுடரே, சூழ் ஒளி விளக்கே' என்று மாணிக்கவாசகரும் 'தூண்டா விளக்கின் நற்சோதி' என்று சுந்தரரும் இறைவனை அழைக்கிறார்கள். 'கற்பனை கடந்த சோதி, கருணையே உருவமாக' நிற்கிறானென்று சேக்கிழார் பாடிப் பரவி மகிழ்கிறார். 'பயிலும் சுடர் ஒளி மூர்த்தி பங்கயக் கண்ணன்' என்று நம்மாழ்வார் பாற்கடல்சேர்ந்த பரமனைக் குறித்தால், திருநக்க தேவர் 'சுடரிற் சுடரும் திருமூர்த்தி' என்றே பாடுவார். இப்படியே அடியார்களும் கவிஞர்களும் இறைவனைப் பொங்கழல் உருவனாகவே காண்கிறார்கள். இந்த அனல் வழிபாடே பின்னர் திருவிளக்கு வழிபாடாக மக்களிடை இன்றும் நிலைத்திருக்கிறது. இச்சிறிய திருவிளக்கு வழிபாடே, பெரிய கார்த்திகைத் திருநாளாக அண்ணாமலையில் கொண்டாடப்படுகிறது.




அண்ணாமலை கார்த்திகை தீபதரிசனம் ஒரு அற்புதமான அனுபவம். கார்த்திகை மாதம், கார்த்திகை நக்ஷத்திரத்தன்று லக்ஷக்கணக்கானவர்கள், ஆண் பெண் பிள்ளைகள் எல்லாம் அண்ணாமலையார் கோயில் பிராகாரத்திலும், நகரின் தெருக்களிலும், வீடுகளின் மாடிகளிலும் குழுமியிருக்கின்றனர். சரியாய் மாலை ஆறுமணிக்கு, முழுமதி வானில் எழுந்து கோபுர உச்சியைத் தடவி நிற்கிறது. அந்தச் சமயத்தில் கோயிலுள்ளே பஞ்சமூர்த்திகளும் மண்டபத்தில் வந்து நிற்கிறார்கள். அதிர்வெடியொன்று கிளம்புகிறது வானை நோக்கி. ஐந்து கற்பூர ஹாரத்தித் தட்டுகளை உயர்த்துகிறார்கள் அர்ச்சகர்கள். அதே சமயத்தில் அண்ணாமலையின் உச்சியில் உள்ள கற்பூரக் கொப்பரையிலிருந்து சுடர் எழுந்து வான்நோக்கி நிமிர்கிறது. 'அரோகரா, அண்ணாமலைக்கு அரோகரா' என்ற கோஷம் மக்களிடையே எழுகிறது உச்சஸ்தாயியிலே. பார்ப்பவர்கள் உடல் புல்லரிக்கிறது; உள்ளம் விம்மிப் பெருமிதம் அடைகிறது பொங்கழல் உருவனைக் காணுவதால்.

இத்தனை அனுபவத்திற்கும் நிலைக்களனாய் இருப்பது தான் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை என்னும் தலத்திலே உள்ள அண்ணாமலையார் கோயில். இக்கோயில் சுமார் இருபத்து நான்கு ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் அமைந்திருக்கிறது. கோயிலைச் சுற்றி உயரமான மதில். மதிலின் நான்கு புறத்தும்



நான்கு பெரிய கோபுரங்கள். கிழக்கே பிரதான வாயிலில் உள்ள ராஜ கோபுரம் பதினொரு நிலைகளும், இருநூற்றுப் பதினேழு அடி உயரமும் உடையது. பரத சாஸ்திரத்தில் உள்ள தாண்டவ லக்ஷணம் என்னும் நாட்டிய நிலைகள் நூற்று எட்டையும் விளக்கும் சிற்ப வடிவங்கள் இருபக்கத்துச் சுவர்களிலும் நிறைந்து இருக்கும். இந்த வாயிலைக் கடந்தால் முதலில் நாம் சென்று சேர்வது கம்பத்து இளையனார் கோவில். அருணகிரியாரின் பிரார்த்தனைக்கு இரங்கி, முருகப் பெருமான் கம்பத்தில் காட்சி அருளுகிறார். அந்த இடத்திலேயே இந்தத் திருக்கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு வில்லேந்திய வேலன் மயில்மீது காலூன்றி கம்பீரமாக எழுந்து நிற்கும் நிலை கலையுள்ளம் படைத்தவர் கண்களுக்கு ஒரு பெரு விருந்தாகும்.

இனி சர்வசித்தி விநாயகர், பாதாள லிங்கேசுவரர், கோபுரத்து இளையனார் முதலியவர்களைத் தரிசித்த பின் நாம் கடக்க வேண்டியது வல்லாள மகாராஜன் கோபுரம். உடல் நோயால் நலிந்த அருணகிரியார் தம் உயிரை மாய்த்துக் கொள்ள இக்கோபுரத்தின் மீதேறி அங்கிருந்து குதித்தார் என்றும், அப்போது முருகப் பெருமானே அவரைத் தம் கையில் ஏந்தித் தரைதனில் விட்டார் என்றும் அதுமுதல் உடலில் மட்டும் அல்லாமல் உள்ளத்திலேயும் நலிவடையாதவராய் திருப்புகழ் பாடத் துவங்கினார் என்றும் அறிகிறோம். இதன் பின் கிளிக் கோபுரத்தையும், பஞ்சமூர்த்தி மண்டபங்களையும் கடந்து சென்றால் அண்ணாமலையாரைக் கண்டு தொழலாம். நல்ல லிங்கத் திருவுருவில் அமைந்தவர் அண்ணாமலையார். பொன் போர்த்த நாகாபரணமும் நிறைய மலர் மாலைகளும் அணிந்தவராகவே காட்சி தருவார். இந்த அண்ணாமலையாரையே 'லிங்கோத்பவர்' என்று கலையுலகம் உருவாக்கியிருக்கிறது. ராஜராஜனும் அவனுக்குப் பின் வந்த சோழர்கள் கட்டிய கோயில்களில் எல்லாம் கோஷ்ட விக்கிரகமாக இவர் நின்று கொண்டிருப்பதை நாம் அறிவோம்.



அண்ணாமலையாரை வலம் வந்து பின்னர் அவருக்கு இடப் பக்கத்திலே கோயில் கொண்டிருக்கிற உண்ணாமுலையம்மையைத் தரிசிக்கப் போகலாம். மகா மண்டபத்தைக் கடந்து உள்ளே சென்றால் நவசக்தி மண்டபம். அங்கு உருவாகியிருக்கும் சக்திகளும் கால சம்ஹாரரும், விஷ்ணுகரரும், இருபதாம் நூற்றாண்டுச் சிற்பிகளின் கைத்திறன். ஆதலால் அவைகளில் மிக்க கலை அழகை எல்லாம் எதிர்பார்த்தல் இயலாது. கர்ப்ப கிருஹத்தில் இருக்கும் அண்ணாமலையாரின் தர்மபத்தினி உண்ணாமுலையம்மை. கம்பீரமான திருவுரு இல்லாவிட்டாலும் எழில் கொழிக்கும் உருவம். இந்த அண்ணாமலையார் கோயிலின் பெரும்பகுதி வல்லாள மகாராஜனால் கட்டப்பட்டது என்று கூறுவர்.

இக்கோயிலில் நூற்று ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. உத்தமச்சோழன், பரகேசரிவர்மன் ராஜேந்திர சோழதேவன், திரிபுவன சக்கரவர்த்தி ராஜராஜ தேவன் முதலிய சோழ மன்னர்களும் மாறவர்மன், குலசேகரன் முதலிய பாண்டிய மன்னர்களும் ஏற்படுத்திய நிபந்தங்களைக் குறிக்க எழுந்தவையே, இதில் பெரும் பகுதியான கல்வெட்டுக்கள். மேலவாயிலில் உள்ள ராஜகோபுரத்தை விஜயநகர மன்னன் கிருஷ்ண தேவராயன் கட்டி முடித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இவனே ஆயிரக் கால் மண்டபம், சிவகங்கைக் குளம் முதலியவற்றை உருவாக்கினான் என்றும் அறிகிறோம். விஜயநகர நாயக்க மன்னர்கள் ஆட்சிக்குட்பட்ட ராஜநாராயண சாம்புவராயன் ஒரு கோபுரம் கட்டினான் என்றும் அந்தக் கோபுரத்தில் இருந்தே 'ஸ்ரீவிநோதநாத நாலகம்' என்ற கோயில் திருப்பணி விளக்க நூலை வாமதேவன் எழுதினான் என்றும் ஒரு கல்வெட்டு கூறுகின்றது. கோயில் மிகவும் புராதனமான கோயில் என்பதும், இக்கோயிலைச் சோழர், பாண்டியர், நாயக்கர், நகரத்தார் எல்லாம் கட்டியும் புதுப்பித்தும் நிபந்தங்கள் ஏற்படுத்தியும் பாதுகாத்திருக்கிறார்கள் என்றும் அறிகிறோம்.

கோயிலை விட்டு வெளியே வருமுன் உங்களை ஓர் அற்புதமான மூர்த்தியின் முன் கொண்டு சென்று நிறுத்த விழைகிறேன். ராஜராஜ சோழனுக்கு முந்திய சோழ மன்னர்கள் கட்டிய கோயில்களில் எல்லாம்— கர்ப்பக்கிருகத்துக்கு வெளியே மேற்கே பார்த்த கோஷ்டத்தில் அர்த்தநாரியின் சிலாவுருவம் இருக்கப் பார்ப்போம். ஆனால் அற்புதமாக செப்புச் சிலை வடிவில் நடராஜரையும், திரிபுராந்தகரையும், பிக்ஷாடனரையும், வடித்தெடுத்த சோழ நாட்டுச் சிற்பிகள் அர்த்தநாரியை மட்டும் செப்புச் சிலை வடிவில் அமைக்க மறந்துவிட்டிருக்கிறார்கள். இதன் காரணம் யாதோ? திருச்செங்கோட்டு மலையில் உள்ள கோயிலில் அர்த்தநாரி என்னும் மாதிருக்கும் பாதியன், கல்லிலும் செம்பிலுமே உருவாகி இருக்கிறான் என்றால் அது சோழர்களுக்கு மிகப் பிந்திய காலத்தில்தான். ஆனால் அந்தமாதிருக்கும் பாதியனை, 'பஞ்சின் மெல்லடியாள் பாகனை' அற்புதமான செப்புச் சிலை வடிவில் பார்ப்பது இத்தலத்தில்தான். நல்ல சோழர்காலத்துச் செப்புச் சிலை மிகவும் அழகு வாய்ந்த திருவுருவம். அந்தத் திருவுருவின் முன் நின்று,


உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்

பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ

மண் ஆர்ந்தன
மழலை முழவு—அதிரும்

அண்ணாமலை தொழுவார்வினை
வழுவா வணம் அறுமே

என்று நாமும் ஞான சம்பந்தரோடு சேர்ந்து பாடினால் நமது வினைகள் அகலும். ஆதலால் தயாராயிருங்கள். அடுத்த திருக் கார்த்திகைத் திருநாளன்று அண்ணாமலை சென்று அண்ணாமலையானைத் தொழ.





மணம்

கோவி. மணிசேகரன்

தென்றல் தூதன் வருகையிலே - மேல்
திசையில் கதிரோன் தூங்குகிறான்!
நின்று நகைத்திடும் மலர்க்கூட்டம் - மன
நிம்மதி தந்தது ஆனந்தம்!

இளமைக் கனவின் இணைகள்பல - வள
இனிமை சுவைக்க வந்தனரே!
இளமைச் சிரிப்பில் கூத்தாடும் - மலர்
இதழ்கள் ஜாலம் செய்தனவே!

விழியில் பேசினர் பலர் ஒருபால் - பல
விந்தைகள் புரிந்தனர் சிலர் ஒருபால்!
தோளில் சேர்த்து உடல்சுருங்கி - ஒரு
துவண்ட மனிதன் அங்கு வந்தான்!

வண்ணப் பூக்கள் வரவேற்று - அவன்
வாடிய உடலைத் தேற்றினவே!
எண்ணம் நிறைந்த பூநகையில் - மணம்
எங்கும் நிரப்பி வழிந்தனவே!

மலர்மணப் போர்வையில் மகிழ்ந்தவர்கள் - அம்
மனிதன் வேர்வை சகியாமல்
குலைகள் குமட்டத் தும்பினரே - வீண்
குறைவாய் அவனை ஏசினரே!


அங்கம் அழுகத் தொழில்புரிந்து - மன
அமைதி தேடி வந்தவனே,
பங்கம் கண்டு பதைத்திட்டான் - உடன்
பாதை நோக்கியும் நடந்திட்டான்!

மலர்கள் அனைத்தும் வியந்தனவே - தொழில்
மனிதன் செல்லும் திசைநோக்கி!
கலகல வென்று உதிர்ந்தனவே - உடன்
கண்ணீர் துளித்து அழுதனவே!

மன்மத நினைப்பில் ஆழ்ந்தவர்கள் - மனம்
மருண்டு மலைத்தது நோக்கினரே!
நன்பகல் நாயகன் சென்றதிலும் - வனம்
நாணி மறைந்ததை யாரறிவார்?

மலரை நாடி வரும்மனிதா - அதன்
மணத்தில் மகிமை இல்லையடா!
உலரும் உந்தன் உடல்வேர்வை - மண
உயிர்ப்பைத் தருமாம் மலர்களுக்கு!

தென்றல் காற்றில் சுகமில்லை - மலர்த்
தேகம் அதனுக் மகிழ்வதில்லை!
உன்றன் மணமே அதன்மணமும் - இதை
உணர்ந்து வாழ்வாய் அனுதினமும்!







கண்ணன் என் காதலன்.1
கல்கி தீபாவளி மலர். 1959


கண்ணன் என் காதலன். ௨
கல்கி தீபாவளி மலர். 1959


கண்ணன் என் காதலன். ௩
கல்கி தீபாவளி மலர். 1959


கண்ணன் என் காதலன் . 4
கல்கி தீபாவளி மலர். 1959



கண்ணியம்

ஆர்வி

உலகளந்த பெருமாள் சந்நதியில்லாத ஊராகப் பார்த்து வந்துதான் பள்ளி கொண்டிருந்தார். கோயில் சின்னதுதான். கிழக்குப் பார்த்த சந்நிதி. ஆனால் அழகாக இருந்தது. அந்தக் கோயிலின் செப்புக் கலசத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள் பாப்பா. சுமார் நூறு கஜ நீளமுள்ள பசுந்திடலுக்கு அப்பால், வட கிழக்கு மூலையாக நீண்டு கிடந்தது கோயிலின் மதில் சுவர்.

கலசத்தைச் சுற்றி இரண்டு புறாக்கள் வட்டமடித்துக் கொண்டிருந்தன. காலை வெய்யில்தான் கண்களைக் கரித்ததா, உள்ளத்தின் வேதனைதான் கரித்ததா என்று தெரியாமல் கண்கள் பனித்து, அவள் பார்வையை மறைத்தன.

நெஞ்சில் ஒரே கேள்வி: "இனிமேல் என்ன?"

பாப்பாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கொல்லைப்புறத்து வேலி ஓரமாக வந்து பார்த்தபோதெல்லாம் திடல் வெறிச்சென்று கிடந்தது. விளையாட்டுப் போல் ஒன்று, இரண்டு, இன்று மூன்றாவதுநாள். இந்த நேரத்துக்கு அவன் வழக்கமாகக் கொல்லைப்புறத்தில் வந்து நிற்பதுண்டு; எட்டிப் பார்ப்பதுண்டு. மூன்று நான்கு வருஷங்களாக அவள் கண்கள் ஏமாந்ததே இல்லை. தொங்கும் வேஷ்டியை முழங்கால் அளவுக்கு மடித்துக் கட்டிக் கொண்டு, சில்க் பனியனும், துண்டுமாக அவன் நடந்து வருவான். அவன் நடையே தனிதான். நிமிர்ந்த நடை; நிதானம் பொருந்திய நடை. மதிலின் மறைவு தாண்டியதுமே அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு விடுவார்கள். பிறகு முதுகும் முகத்துப் புன்னகையும் தெரியும்வரையில் அவர்கள் கண்கள் வேறு புறம் பார்ப்பதில்லை.

ஆனால் இன்றோடு மூன்றாவது நாள். அவன் ஏன் வரவில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆமாம்; அவளுக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் இனி வரவே மாட்டானு என்பது அவளுக்குத் தெரியாது. அப்படியும் நடக்கக் கூடும் என்று அவள் நம்பத் தயாராக இல்லை. ஏனென்றால் அவள் அதை விரும்பவில்லை.

ஊர் சின்ன ஊராக இருந்தபோதிலும் அக்கப்போரில் பெரிய ஊர்தான். ஊர் ஏதாவது பேசப் போகிறதே என்பதற்காகக் கூட அவள் கவலைப்படவில்லை. இதைவிட எவ்வளவோ அது அவர்களைப் பற்றிப் பேசியிருக்கிறது. முன்னால் போக விட்டுப் பின்னால் நகைத்திருக்கிறது. அவள் காதுபடவே கதைத்திருக்கிறது. அதற்கெல்லாம் அஞ்சாதவள் இனி வேறு விதமாகப் பேசுமே என்பதற்காகவா கலங்கப் போகிறாள்? ஒரு நாளும் இல்லை.

ஆனால் அவளை அவன் ஏன் புரிந்து கொள்ளவில்லை? இதுதான் அவளுக்குத் துன்பத்தைக் கொடுத்தது. இது ஒன்றுதான் அவள் அமைதியையும் மகிழ்ச்சியையும் குலைத்தது.

அவள் சோர்ந்து போனாள். சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டாள். கால்கள் வீட்டினுள்ளே போகத் திரும்பின. ஆனால் திடலிலே தெரிய நிழல் விழுவதை அவள் பார்த்து விட்டாள். யார் அது வேணுவா? இல்லை? அவன் மனைவி தங்கம்! இடையிலே குடம்; நடையிலே ஒரு குழைவு.

தங்கம் எதற்காகக் குளத்துக்குப் புறப்படவேண்டும்? வழக்கமாக அவள் வெளியில் குளிக்க வருவது கிடையாதே. அவர்கள் வீட்டு மாமரக் கொல்லையில் 'பம்பு செட்டு' இருக்கிறது. ஒன்று அது இன்று வேலை செய்யாமல் போயிருக்க வேண்டும்; அல்லது அவள் வருவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்.

உள்ளே போவதா, நிற்பதா? பாப்பா தயங்கினாள். அவள் தயக்கம் நீங்குவதற்குள் தங்கம் திருகுக் கள்ளி வேலியை நெருங்கி விட்டாள்.

"குளத்துக்கா, தங்கம்?"

"ஆமாம், வாயேன் நீயும்?"

"நான் எங்கே வரது அதுக்குள்ளே!"

"ம்..என்னோடெல்லாம் வருவியா நீ?"

பாப்பாவுக்கு இது சுருக்கென்று பட்டது. இருந்தாலும் நிமிர்ந்துகொண்டு, "சித்தே இருப்பியா? இருந்தால் வருவேன்" என்றாள்.

சோப்புப் பெட்டி, பாதி இழைத்த மஞ்சள்: ஒரு பழந் துண்டு இவற்றுடன் ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு வந்தாள் பாப்பா. தங்கத்தின் பார்வை அந்தச் சோப்புப் பெட்டியின் மீது விழுந்தது. பாப்பா அதைக் கவனிக்காதவள் போல் முன்னே சென்றாள்.

இருவரும் குளிக்கத் தண்ணீரில் இறங்கினார்கள். கூட கவிழ்த்தது போல் தலையைத் தூக்கிக் கட்டிக் கொண்டு, சேலையை மார்போடு கட்டிக் கொண்டு, மற்றொரு தலைப்பை நனைத்துத் துவைத்தார்கள். பாப்பா அப்பொழுதுதான் தங்கத்தின் நடையில் இருந்த குழைவுக்கான காரணத்தைப் புரிந்துகொண்டாள்.

"சொல்லவே இல்லையே நீ!" என்றாள் அவள், தங்கத்தைப் பார்த்து.

"எதை?"—கேட்கும்போதே இலேசாக வெளுத்திருந்த அவளுடைய முகம் சிவந்து காணப்பட்டது.

"மாசம் இரண்டா, மூணா?"

"எல்லாம் மூணுதான்!" என்று நாணத்தால் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் தங்கம்.

பாப்பா தன் மகிழ்ச்சியைக் காட்ட, "மூணு? சொல்லவே யில்லையே!" என்றாள் மீண்டும்.

"யார் சொல்லவில்லை என்கிறாய், பாப்பா?"

பாப்பா விழித்துக்கொண்டு விட்டாள். பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா?

"ஊரில்தான் சொல்கிறேன். யாரும் சொல்லவில்லையே! ஒருத்தருக்கும் இது தெரியாது போலிருக்கு. நானே முதலில் கவனிக்கவில்லையே!"

இடுப்பளவுத் தண்ணீரில் இறங்கி முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு சோப்பு நுரையைப் போக்கக் கழுவிய போது பாப்பா, தங்கத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். தங்கத்தின் பேச்சு எப்போதும் போல் இல்லை என்று அவளுக்கு நன்றாகப் பட்டுவிட்டது. அதற்குக் காரணம் தங்கம் தாயாகப் போவதா? அல்லது வேணு இந்தப் பக்கம் வராமல் இருக்கப் போவதா?

இருவரும் தண்ணீர்க் குடத்தை எடுத்துக் கொண்டு கரையேறினார்கள். பிரியும் இடம் வரும் வரையில் அதிகமாக எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

ஒற்றைத் தெரு வந்ததும் பாப்பா, "வரட்டுமா தங்கம்?" என்று முந்திக் கொண்டாள்.

"அப்புறமா வீட்டுப் பக்கம் இப்படி வாயேன்! வரவே மாட்டேங்கிறியே! அவர் இங்கே வந்தாத்தான் நீ அங்கே வருவியோ?"

அவள் பேச்சின் பிற்பகுதியைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே பாப்பா, படலைத் தாண்டி மறைந்து விட்டாள். குடத்தைக் கொண்டுபோய் இறக்கிவைத்ததும் அவளுக்குத் தலையைச் 'சிர்'ரென்று சுற்றியது. உடலோடு ஒட்டிய ஈரப் புடைவையோடு அவள் கூடத்துக் கம்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நின்றாள். அந்தச் சுற்றல் வெகு நேரம்வரையில் நீங்கவேயில்லை.

அந்தக் கம்பத்துக்கு உயிர் என்று இல்லையே தவிர, அது ஒரு நாளும் அவளைக் கைவிட்டதே இல்லை. இன்பமோ,



துன்பமோ எது வந்தாலும் அவன் அதை அணைத்துக் கொண்டு நிற்பதுதான் பழக்கம். அப்படியும் இப்படியும் குறுக்கே போகும்போதும் வரும் போதும் அவன் செல்லக் கையால் அதைத் தட்டாமல் போக மாட்டான். ஆகவே உயிர் இருந்தால்தானா நட்பு? உயிரற்ற ஜடப் பொருள்களிடம் நட்புக் கொள்வது என்பது கிடையாதா?

பாப்பாவுக்கு அந்தக் கம்பம்தான் உற்ற துணை. வேணு வந்து திண்ணையில் உட்கார்ந்து கொள்ளும் போதெல்லாம் அவள் அந்தக் கம்பத்தில்தான் சாய்ந்து உதைத்துகொண்டு பேசுவாள்.

அவன் உள்ளே எப்பொழுதாவது வர நேர்ந்தால் கூட அந்தக் கம்பந்தான் எல்லைக் கல்; லட்சுமணன் கோடு. கம்பத்தை விட்டுச் சற்று விலகி வருவதென்றால் அவளுக்குக் கொஞ்சம் நடுக்கம்தான்.

வேணு முதல் முதலாக அவளைப் பார்த்தபோது அவள் அந்தக் கம்பத்தில்தான் சாய்ந்துகொண்டு கணவனிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. கோவிந்த ரெட்டியின் மனைவியா இவள்? மறுமுறை பார்க்கத் திரும்பிய போது அவள் சட்டென்று அந்தக் கம்பத்தின் மறைவில் போய் நின்றுகொண்டாள்.

இன்று நினைத்தால் கூடப் பாப்பாவுக்குச் சிரிப்பு வந்தது. அப்பொழுதெல்லாம் வேணுவின் பெயரைக் கேட்டாலே அவளுக்குப் பிடிக்காது. அவன் தன் கணவனைப் பார்க்க வந்திருக்கிறான் என்றாலே அவளுக்குப் பயந்தான். வெளியில் தலை காட்ட மாட்டாள். தப்பித் தவறி வர நேர்ந்தால் கம்பத்தில் தன்னைப் பாதி மறைத்துக் கொண்டுதான் நிற்பாள். அப்படி இருந்தவள் அப்புறம் எப்படி மாறிப் போய்விட்டாள்! அவ்வளவு பிடிக்காதவன் பிறகு எவ்வளவு வேண்டியவனாகிவிட்டான்!

அவளுக்கு இன்று எதுவுமே தொடர்ச்சியாக ஞாபகத்தில் இல்லை. எல்லாம் இந்த நாலைந்து வருடங்களுக்குள் நடந்த மாறுதல்தான். நாலைந்து வருஷமா, நாலைந்து வயது முதலே பழகியவர்கள் கூட இவ்வளவு நெருங்கிப் பழகுவார்களா என்பது சந்தேகம்தான்.

கோவிந்த ரெட்டி காலையில் நீராகாரத்தைக் குடித்துவிட்டுப் போனால் பொழுது போய் விளக்கு வைத்த பிறகுதான் வீடு திரும்புவான். இருந்தாலும் அவனுக்கு இவர்கள் பழகுகிற விதமெல்லாம் தெரியும். அவனுக்குப் பாப்பாவையும் தெரியும்; வேணுவையும் சிறுபிள்ளை முதலே தெரியும். அவன் திடீரென்று எங்கிருந்தோ வந்து குதித்து விட்டானோ? அப்பா இருந்தவரையில் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தான். இப்போது ஊரோடு வந்து விட்டான்! அவ்வளவு தானே? வயதில் இளையவனாக இருந்தாலும் அவன் படித்தவன் இல்லையா? பட்டணத்தில் பழகியவன் இல்லையா? கோவிந்த ரெட்டி ஒன்றும் கண்ணில்லாத குருடன் அல்ல; வாயற்ற ஊமையுமல்ல. அவனுக்கு எல்லாம் தெரியும். ஊர் சின்னதாக இருந்தாலும் ராஜாத் தேளைப் போல் எத்தனை பொல்லாதது என்பதும்கூடத் தெரியாதா?

ஒரு காலத்தில் ஒற்றைத் தெரு கோவிந்த ரெட்டி இருக்கிறான் என்றால் ஊர்ப் பெண்கள் அந்த வழியாக ஐயங்குளத்துக்குக் குளிக்கச் செல்லத் தயங்குவார்கள். அவ்வளவு நல்ல பெயர் வாங்கிய முரடன் இப்போது பல்லைப் பிடுங்கிய பாம்பு போல் அடங்கிவிட்டான். பெண்களை அவன் தலைநிமிர்ந்தே பார்ப்பதில்லை.


அப்படிப்பட்டவன் வேணுவிடம் இவ்வளவு தாராளமாகப் பழக அவன் எப்படிப் பாப்பாவுக்கு இடம் கொடுத்தான்?

அதுதான் ஒருவருக்கும் புரியவில்லை. வேணுவும்கல்யாணமானவன். தங்கம் என்னவோ ஒரு குறையும் இல்லாமல் சந்தோஷமாகத்தான் இருந்தாள்!



பாப்பாவே இப்படியெல்லாம் தன்னால் பேசிப் பழக முடியும் என்று நினைத்துப் பார்த்ததில்லை. அவளாவது பட்டணத்தில் வித்தியாசமில்லாமல் பழகியவள். அவன் பட்டணத்தைப் பார்த்ததே யில்லையே!

பாப்பா உயரத்தில் சற்றுமட்டுந் தான். ஆனால் கண் பார்வைக்கு அது தெரியாது. கை, கால், கழுத்துப் பட்டை எல்லாம் மொழு மொழு வென்று பூசினாற்போல் இருக்கும். நிறத்தில்கூட அவள் சாதாரணந் தான். ஆனால் அவளைப் பார்த்தால் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். அப்படி ஒரு மினுமினுப்பு! அவள் நகை நட்டுக்களை அணிய வேண்டாம். எண்ணெய் முழுக்கு அன்று கூந்தலைக் கோதி, கோடாலி முடிச்சுப் போட்டுக்கொண்டு, நெற்றியில் பொட்டு மட்டும் வைத்துப் பளிச்சென்று நின்றாளே, அது ஒன்றே போதும், அவள் அழகைக் காட்ட. எட்டு ரூபாய்ச்



பெரியவர் : என்னடா! ஒரு பட்டாசு கொளுத்த இத்தனைபேர் எதற்கு?

பையன் : இப்போதெல்லாம் கூட்டுறவு இருந்தாத்தான் நல்லதுன்னு சில பெரியவங்க சொல்றாங்க, அதனாலேதான் இத்தனைபேரும் சேர்ந்து ஒரு பட்டாசைக் கொளுத்தறோம்!!

சேலைதான் இடையில்; ஆனால் ஒரு கையில் பசுவின் தலைக் கயிறும் மறு கையில் ஆடாதொடைக் குச்சியுமாக வேப்பமரத்தடியில் வந்து நின்றால் வன தேவதை வந்து நிற்பதுபோலத்தான் இருக்கும். சிந்துகிற புன்சிரிப்பையும் முணுமுணுக்கும் இன்னிசையையும் பார்க்கவும் கேட்கவும் பக்கத்தில் ஏது வீடுகள்?

விளக்கு வைத்து வெகு நேரத்துக்குப் பிறகுதான் வாசலில் செருப்புச் சத்தம் கேட்கும்; கனைப்புச் சத்தமும் கேட்கும். வாசல் நிலையில் தொங்கும் விளக்கின் நிழலில் உட்கார்ந்தவாறே அவன் குரல் கொடுப்பான்.

வேணுவைக் கவர்ந்தது எது? அவளுடைய குரலா, குணமா? கவர்ச்சிக்குக் காரணம் எது என்று அவன் ஆராய்ச்சியில் இறங்கவேயில்லை. மாலையில் வந்து திண்ணையில் பேச உட்கார்ந்தால், பாப்பா அந்தக் கூடத்துக் கம்பத்தைப் பிடித்துக் கொண்டு நிற்பாள். கால் கடுத்தால் அதில் சாய்ந்துகொண்டே உட்கார்ந்தும் கொள்வாள். இடையிடையே எழுந்து சென்று வீட்டு வேலைகளையும் பார்த்துக் கொள்வாள். அடுப்பிலே கோவிந்த ரெட்டிக்கு வெந்நீர் காயும்; கொட்டிலிலே பசுவுக்குப் பருத்தியும் தவிடும் மணக்கும்; இருட்டி வந்தால் நிலையிலே அரிக்கேன் விளக்கு வந்து ஏறும்....ஆனாலும் பேச்சு என்னவோ தடைப்படாது; சிரிப்பு என்னவோ இருளிலே ஓசைப்படாமல் நடந்து வந்து, வட்டவிழி தெரிய, விளக்கைத் தாண்டி விடும்போது, இதய விளக்கையே தாண்டுவது போலிருக்கும். அவளுடைய குணத்துக்குத்தான் என்ன? இனிய குரலுக்கும் சாயலுக்கும்தான் என்ன?

நேரம் போவதே தெரியாமல் அவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். கோவிந்த ரெட்டி வந்த பிறகுகூடச் சில நாட்களில் அவர்கள் பேச்சுத் தொடர்ந்து நடைபெறும். தண்ணீர்த் தொட்டி ஓரமாக, இருட்டில் வெந்நீர் அண்டாவை எடுத்து வைத்துக்கொண்டு கோவிந்த ரெட்டி அவர்கள் பேச்சில் மகிழ்ச்சியோடு கலந்து கொள்வான். மனைவியின் பேச்சை மறுத்தும் பேசுவான்; அவன் பேச்சில் தன்னை மறந்தும் பேசுவான். தன்னைக் குறித்து அவள் குறை சொல்லும் விதத்தைக் கேட்டு அவனுக்கு ஒரு நாளும் கோபம் வந்ததேயில்லை; அதற்கு மாறாக அவனுக்கு அது தேனாகத்தான் இனித்தது.

கணவனே அவள், 'பாவா' என்றுதான் கூப்பிட்டாள். பார்க்கப்போனால் அவள், முதலில் கோவிந்த ரெட்டியின் குட்டி மைத்துனியாகத்தான் அந்த ஒற்றை வீட்டுக்கு வந்தாள். ஆனால் யாருக்குத் துணையாக இருக்க வந்தாளோ அந்த மகராசி, தங்கையின் துணையும் வேண்டாம், தாலி கட்டியவன் தயவும் வேண்டாம் என்று சீக்கில் விழுந்து விட்டாள்.

கோவிந்த ரெட்டிக்கு அப்போது முப்பத்தைந்து வயதுக்குக்குறைவில்லை. வெற்றிலைக் காவி ஏறி, வாய் இருட்டுக் குகை போல இருந்தது. பக்கத்தில் போனாலே புகையிலையின் வெப்பு நெடி ஒன்று வீசும். தலையில் நரையும் வழுக்கையும் அப்போதுதான் தொடங்கியிருந்தன.

பாப்பா அப்போது கம்பங்கொல்லைப் பயிரைப் போலத் தளதளவென்று பதினேழாம் வயதுப் படியில் நின்றாள். ஆயினும் அவளுக்கு ஆண்களைப் பற்றியும் அவர்களுடைய அழகைப்பற்றியும் என்ன தெரியும்? அது என்ன பட்டணக்கரையா வயதுக்கு முந்தியே இதெல்லாம் வக்கணையாகத் தெரிவதற்கு? மனைவியை இழந்து விட்டு மருண்டு மருண்டு, தயங்கி நின்ற பாவாவைக் கண்டு அவள் நெஞ்சம் உருகிவிட்டது.

அவளுக்கு ஒன்றரைக் காணிபோல, கம்பும் கடலையும் பயிராகும் கொல்லைக் காடு இருந்தது. இந்த ஒற்றைத் தெரு வீடும் அதைச்சுற்றித் தோட்டம் போடக் கூடிய மனையும் இருந்தன. அன்றாடச் செலவுக்குக் காணும்படி அவன் கையில் காசை பிடிக்கும் தொழிலும் இருந்தது.

பாப்பா முடிவு செய்து விட்டாள் போதாதென்று கழுத்தில் முடிச்சும் போட்டு வைக்கும்படி அவன் பெற்றோர் கோவிந்த ரெட்டியைத் தூண்டினார்கள். அதன்படி கல்யாணம் என்னவோ ஆகி விட்டது. ஆனால் அவர்கள் எப்போதும் போல் அந்த வீட்டில் பாவா-பாப்பா வாகத்தான் இருந்தார்கள்.

பாப்பா புள்ளி வைத்துக் கோலமிட்டாள்; நூல் வாங்கிப் பின்னல் போட்டாள். கொல்லையில் மலர்ந்த குடமல்லிகைப் பூவைப் பறித்துத் தொடுத்துச் சூட்டிக் கொண்டாள். மருதோன்றி இலைகளையுருவி வந்து, மசிய அரைத்துக் கைகால் விரல்களிலும் இட்டுக்கொண்டாள். கணவனுக்கும் அந்த விருந்தை வைத்துக் குளுமை செய்தாள். அப்படியும் மீந்த பூக்களையும், மருதோன்றி இலைகளையும் கோயிலடி வீடுகளுக்குப் போய்க் கொடுத்துவிட்டு வந்தாள். அவர்கள் வீட்டுக் குழந்தைகளை வாரி எடுத்துக் கொஞ்சினாள். வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து விளையாடினாள். பாலைக் காய்ச்சிக் கொடுத்து நைச்சியம் செய்தாள். யாராக இருந்தால் என்ன? வந்தவர்களிடம் எல்லாம் கலகலவென்று பேசினாள்; வெள்ளி மணி ஒலிப்பதுபோல் சிரித்தாள்.

வேணுவிடம் மட்டும் அவள் பயந்து கொண்டு இருப்பாளேன்? அவள் எதற்காக ஒருவரைக் கண்டு ஒளிய வேண்டும்? தெரிந்து மறைய வேண்டும்?

"தங்கம் சொல்லிச்சு; பட்டணம் போகப் போறீங்களாமில்லே?" - கோவிந்த ரெட்டியைத் தேடிக்கொண்டு அவன் வந்த போது, கூச்சத்தைக் கட்டி வைத்து விட்டு அவளாகப் பேசியது இதுதான் முதல் தடவை.

"ஆமாம்......ஏதாவது உங்களுக்கு வாங்கி வரணுமோ?"

"தங்கத்துக்கிட்டே சொல்லிப் பணமும் கொடுத்துட்டு வந்திருக்கிறேன்!" என்றாள் பாப்பா.

"அப்படியா, அதுக்கென்ன வேண்டியதை வாங்கிவந்தா போச்சு!" என்றான்.

அழகுப் பொருள்கள் என்றால் பாப்பாவுக்கு ஆசைதான். அதாவது கோவிந்த ரெட்டிக்கு நேர்மாறுதல். ஆனால் தனக்கு வேண்டியதெல்லாம் வேணுவிடம் சொல்லவும் முடியாது; கையில் அவ்வளவுக்குப் பணமும் கிடையாது. இப்போதைக்குச் சந்தன சோப்பும் வாசனைப் பவுடரும் போதும் என்று அவள் தன்னை அடக்கிக் கொண்டு விட்டாள்.


வேணு பட்டணத்திலிருந்து திரும்பி விட்டான். வந்து இரண்டு நாள் ஆகியும் அவன் வாங்கி வரச் சொன்னவை அவளுக்கு வந்து சேரவில்லை. ஒருநாள் மறந்து போயிருப்பானோ? அதைக்கேட்டு அனுப்ப யோசனையாக இருந்தது. நல்ல வேளை அவனே வந்து விட்டான். அப்போது கணவனும் அருகில் இருந்ததால் சிறிது தைரியமாகவே முன்னால் வந்து, "நான் வாங்கி வரச் சொல்லியிருந்தேனே - மறந்துட்டீங்களா?" என்று கேட்டாள் அவள்.

கோவிந்த ரெட்டி இருக்கும்போது இதைப் பற்றிக் கேட்கமாட்டாள் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் அவள் அதை அவ்வளவு ஒளிவு மறைவாக வைக்கவில்லை என்பது அவனுக்கு உற்சாகத்தையே கொடுத்தது.

"மறப்பேனா? வாங்கிக் கொண்டு வந்திட்டேனே. தங்கம் கொடுக்கலியா?"

'அனஸின்'

நரம்புத் துடிப்பால் ஏற்படும் தீராத தலைவலியைப் போக்குகிறது




தலைவலி ஏற்படுவதற்கு நூற்றுக்கு தொண்ணூறு காரணங்களை உங்களால் யாதென்று சந்தேகிக்கக்கூட முடியாது—உதாரணமாக, முதுகு, கழுத்து, தலை உச்சியிலுள்ள தசைகளில் ஏற்படும் விறைப்புநிலை காரணமாகவும் தலைவலியுண்டாகும். இந்த விறைப்புநிலை, சிறிய இரத்தக் குழாய்களிலும், நரம்புகளிலும் அழுத்தத்தை விளைவித்து வலியை உண்டாக்குகிறது. இந்த வலியின் காரணமாக விறைப்பு நிலையும் நரம்புத் துடிப்பும் அதிகமாகி தலைவலியைக் கடுமையாக்குகிறது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி நான்கு மருந்துகள் சேர்ந்த ஒரு கலவையாகும். ஆகையால் அது ஒரு டாக்டரின் குறிப்புபோல பாதுகாப்பு அளிக்கிறது. 'அனஸினி'ல் உள்ள விசேஷ மருந்துச் சேர்க்கை நரம்புத் துடிப்பைத் தளர்த்துகிறது, விறைப்பு நிலையிலிருந்து விடுவிக்கிறது. உடனேயே தலைவலியிலிருந்து நிவாரணமளிக்கிறது. 'அனஸின்' துரிதமாக தீராத தலைவலியை நிறுத்துகிறது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.

2 வில்லைகள் உள்ள பாக்கெட்களிலும், குடும்பத்திற்கென 32 வில்லைகள் கொண்ட ஏமாற்றுக்கிடமில்லாது சீல் செய்யப்பட்ட சீசாக்களிலும் கிடைக்கும்.



Registered User: GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.



Fine Cloth From Fine Yarn...
60s INDIAN
60s
60s FOREIGN
SUJANI TEXTILES PRIVATE LIMITED. COIMBATORE.
SUJANI
Fine Cloth
PHONE: 2004.
GRAMS: "DHANASAM"
SUJANI TEXTILES PRIVATE LTD.
SOWRIPALAYAM.,
COIMBATORE. 4.



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் டானிக்
ஆயுர்வேதாஸ்ரமம் (பிரைவேட்) லிமிடெட்
சென்னை - 17.

அப்ப நாளைக்கு நானே கொண்டு வந்து கொடுக்கிறேன்!'' என்றான்.

மறுநாள் அவன் வந்தபோது வழக்கம் போல் அவள் தன்னந் தனியாகத்தான் இருந்தாள். அந்தத்தனிமையைப் போக்க வந்தவன் போல அவன் திண்ணையில் அமர்ந்தான். அவள் வாங்கி வரச் சொன்னது என்ன? அவன் அவளுக்காக வாங்கி வந்திருப்பது என்ன?

''என்ன இது?''

''எல்லாம் வாங்கி வரச் சொன்னது தான்!'' என்றான் வேணு.

அழகாகக் கட்டியிருந்த பொட்டலத்தை அவள் பிரித்தபோதே பளபள வென்று எவர்ஸில்வரின் ஒளி கண்ணைப் பறித்தது. ஒரு சதுரப் பெட்டியினுள் சோப்பும் பவுடரும் சீப்பும் ஸ்நோவும் வைக்கத் தனித் தனி டப்பாக்கள்! முகம் பார்க்க ஒரு கண்ணாடி - மூடியில்!

''இதனுள்ளே சோப்பு! இதனுள்ளே பவுடர்!'' என்று அந்தந்த டப்பாக்களைக் காட்டினான் வேணு.

''ஆமாம், விலை?'' என்று விழுங்கினாள் பாப்பா.

''விலையா? அதெல்லாம் ஒன்றும் இல்லே. சோப்பு வாங்கக் கொடுத்த பணத்தைச் சீட்டுப்போட்டேன் அதில் விழுந்த பெட்டி இது!'' என்று அதைத் திண்ணையிலேயே வைத்துவிட்டு எழுந்து போனான் வேணு.

பாப்பா அதை நம்பவில்லைதான். இருந்தாலும் அந்தக் குறிப்பிலே வேணுவின் நல்ல சுபாவம் தெரிந்தது. போகப் போக அவனிடம் பயந்ததெல்லாம் வீண் என்பதை உணர்ந்தாள். அவன் தூய அன்போடு பழகினான். அவனிடம் பயப் படும்படி எதுவும் இல்லாததுடன் அவன் மீது நம்பிக்கை முழுவதும் வைப்பதற்கான பல சிறிய குணங்கள் அமைந்திருப்பதை அவள் உணர்ந்தாள்.

கோவிலடி வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் புறப் படும்போது பல நாட்களில் இருட்டிப் போயிருக்கிறது. பல தடவை அவள் கோயிலுக்குப் போய்விட்டுத் தனியாகத் திரும்பியிருக்கிறாள். ஆனால் இப்பொழுது வேணு அவளைக் கொண்டுவிட வராமல் இருப்பதில்லை. வந்தால் என்ன? மூச்சுக்காற்றுப் பட்டிருக்குமா? அவனுக்குத்தான் அவளிடம் எத்தனை மதிப்பு! எத்தனை மரியாதை, அன்பு! அவனுக்கும் அவளுக்கு மிடையே இருட்டா இருந்தது? அதிவொளியின் இடைவெளி இருந்தது!

ஒரு மைல் தூரத்தில் இருந்த ஊர் கடைகண்ணி உள்ள ஊர். அங்கே வந்திருந்த சினிமாவுக்கு அவன் தங்கத்தோடு அவளையும் அழைத்துச் சென்று, திரும்பவும் பத்திரமாகக் கொண்டு வந்து விட்டிருக்கிறான்.

''இந்தா தங்கம், என் டிக்கெட்டுக்குக் காசு. இருந்தாலும் இந்தச் சின்ன பாவா ரொம்ப மோசம். அவருகிட்டே சொல்லாதே!'' என்று எட்டணாவைக் கொடுத்தாள் பாப்பா, முதல் முதல். தங்கம் கணவனுக்கு அஞ்சி வாங்கிக் கொள்ளப் பயந்து விட்டாள். அது முதல் வேணு சின்ன பாவாவாக விளங்கினான்.


இப்படிப் பாப்பா அவனுக்கு உறவு முறையாகப் பெயரிட்டு விருந்து அவர்கள் பழக்கம் நட்பாக மலர்ந்து விட்டதாகத் தோன்றியது.

''நான் சின்ன பாவாவானால் நீ என்ன?'' என்று கேட்டான் அவன்.

''ஏன், நான் எப்போதும் எல்லாருக்கும் பாப்பாதான்!''

வேணுவுக்கு அவள் என்ன என்று தெரிந்தது என்பது விளங்கிவிட்டது. அண்ணன் ஒருவன் தன் இளைய சகோதரியைப் பெயர் சொல்லிக் கூப்பிடாமல் வேறு எப்படி அழைப்பான்?

அவளுடைய கணவன் கோவிந்த ரெட்டியே எதிரில் உட்கார்ந்திருந்தாலும் அவன் அவளைப் பெயர் சொல்லி அழைத்திருந்தான் பேசினான்.



அந்தத் தனிவீட்டில் வேணுவும் பாப்பாவும் மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருந்தார்கள். யார் யாரைப் பற்றியெல்லாமோ, எது எதைப் பற்றியெல்லாமோ பேசினார்கள். அந்தரங்கமான விஷயங்களைக்கூட ஒளிவு மறைவு இன்றி விவாதித்துக் கொண்டார்கள். இதனாலெல்லாம் அவர்களுக்குப் பரஸ்பர அன்பும் மதிப்புமே பெருகின. முன்னிலும் அதிகமாக அவர்கள் ஒருவரை ஒருவர் மதித்துக் கண்ணியமாகவே பழகினார்கள்.

ஆனால் ஊர் வேறு விதமாகவெல்லாம் பேசியது. கோவிந்த ரெட்டியின் காது படவும், தங்கத்தின் காதுபடவும் கூடக் கதைத்துப் பேசியது.

''நம்மைப் பத்தி ஊரிலே என்ன பேசிக்கிறாங்க தெரியுமா, பாப்பா உனக்கு?'' என்றான் வேணு ஒரு நாள்.

பாப்பா சிரித்துக்கொண்டே, ''தெரியாமே என்னங்க? பேசினால் பேசிவிட்டுப் போகட்டுமே!'' என்றாள்.

''கோவிந்த ரெட்டிக்கு இது காதில் விழுந்தால்...?''

''ம்...அதுக்கு இன்னும் எட்டாமத் தான் இருக்குதாக்கும்! மடியில் கனமிருந்தால்தானே வழியிலே பயம்?'' என்றாள் பாப்பா.

மாமரக் கொல்லையில் பழம் பழுத்தால் பாப்பாவுக்கு ஒரு கூடை போகும். மாதம் பிறந்தால் அடுத்த ஊர்க் கடையிலிருந்து காப்பிக் கொட்டையும் சந்தன சோப்பும், தைலமும் பவுடருமாக அவள் வீட்டுக்குத் தன்னால் வந்துவிடும். நாள் கிழமை என்று தங்கத்துக்கு ஏதாவது வாங்கினால், அதற்கு ஜோடியாகப் பாப்பாவுக்கும் போய்விடும்.

தங்கத்துக்கு எல்லாம் தெரியாமல் இருக்குமா? ஏதோ தெரிந்திருக்கும். அவ்வளவுதான். கேட்டால் பாப்பாவிடமிருந்து பணம் வந்து விட்டதாக வேணு சொல்லப் போகிறான்! இதைக் கேட்பானேன்? பொய் சொல்ல வைப்பானேன்? தங்கம் குணத்திலும் தங்கக் கம்பியாகத்தான் இருந்தாள். பணம் கொடுத்து விட்டதாகவே எண்ணிக்கொண்டு விடுவது எவ்வளவு புத்திசாலித்தனம்? வேணுவின் கையில் இருப்ப தெல்லாம் பாப்பாவின் பணம்தானே? பாப்பா நினைத்தால் அவ்வளவையும் வாங்கிக் கொண்டிருக்க முடியாதா?

கோவிந்த ரெட்டி இவ்வளவு மாறுதல்களையும் கவனிக்காமலும் காதில் போட்டுக் கொள்ளாமலும்தான் போய்க் கொண்டிருந்தான். காலையில் போனாலும் பொழுது சாய்ந்து திரும்புவதில் அவன் வரையில் மாறுதலே நேரவில்லை. யந்திரம் போல் ஒரே விதமான காரியத்தை ஒரே மாதிரியாகச் செய்யும் கணவனிடம் சலிப்புக் கொண்டாள், பாப்பா. அவன் உயிரும் உணர்ச்சியும் அற்றவனைப் போல நடந்து கொண்டது அவளுக்கு அலுப்பையும் சலிப்பையும் தந்தன. அவள் சோர்ந்து போனாள். தனிமையில் அவள் தன்னையே வெறுத்துக் கொண்டாள்.

''என்ன பாப்பா-என்னவோ போல் இருக்கிறியே!'' என்றான் வேணு.

''எல்லாம் இவ்வளவு இருக்கிறதே பெரிசு, சின்ன பாவா! நான் வேறே எப்படி இருக்க முடியும்?'' என்றாள் பாப்பா கனத்த இதயத்துடன்.

வேணுவுக்கு இதன் பொருள் சிறிதும் விளங்கவில்லை. மறுநாள் அவன் அவளைப் பார்க்க வந்தபோது, பாப்பா பசுங் கன்று ஒன்றைத் தூக்கியொருபுறத் தழுவிக் கொண்டு, முத்த மழை பொழிந்தபடி உட்கார்ந்திருப்பதைக் கண்டான். செல்வக் குழந்தையைக் கொஞ்சுவது போல் வாய்ஏதோமுணுமுணுத்துச்சீராட்டியது.

வேணுவைக் கண்ட பிறகும் அவள் கன்றுக்குட்டியைக் கீழே விடவில்லை. அவள் கண்களில் விசித்திர ஒளி எதற்கோ விளக்கம் கூறுவது போலிருந்தது. அவள் எதையுமே அவனிடம் ஒளித்ததில்லை. ஆனால் எல்லாவற்றிலும் மேலான அந்த ரகசியம் ஒன்றை அவள் தனக்கென்று மூடி வைத்துக் கொண்டிருக்கிறாளோ என்று தோன்றியது.

"எனக்கு இதுதான் குழந்தை!" என்றாள் அவள்.

"இதுவா? என்னவோ சொல்லு வார்களே, குழந்தை இல்லாத வீட்டில் கன்று துள்ளி விளையாடுகிறதா?" என்று கேட்டான் அவன்.

பாப்பா இதற்கு விடை எதுவும் சொல்லவில்லை. அவள் மௌனமாகக் கன்றுக் குட்டியைத் தொப்பென்று கீழே போட்டு விட்டு, வீட்டினுள்ளே சென்றாள். வெகுநேரம் பார்த்தும் அவள் வெளியில் வரக் காணவில்லை.

வேணு திண்ணையருகே போய் நின்று, உள்ளே எட்டிப் பார்த்தான். பாப்பா கூடத்துக் கம்பத்தில் சாய்ந்தவாறு, வாசல் நிலை வழியே தெரிந்த வெற்று வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் வந்ததைக் கவனித்த தாகவே தெரியவில்லை.

"பாப்பா!"

"உம்...."

"உனக்கு என்ன உடம்புக்கு!"

"எனக்கா? எனக்கு என்ன வந்தது? உடம்புக்கு என்ன, நல்லாத்தானே..."

"இல்லே...என்னிடத்திலே மறைக் காதே..கோவிந்து ஏதாவது கோபமாச் சொன்னானு?"

"எதுக்கு?" அவள் சிரிக்க முயன்ற வாறே, "என்னை எதுக்கு அது கோவிச் சுக்கப் போவுது? கோவிச்சுக்கிட்டா நானில்லே அதைக் கோவிச்சுக்கணும்!" என்று கூறினாள்.

"பின்னே ஏன் கொஞ்ச நாளாவே என்னமோ போலிருக்கே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. எப் போதும் போலத்தான் இருக்கேன்."

வேணு அவளைப் பார்த்துக்கொண்டே நின்றான். அவள் மெல்லக் கம்பத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"சரி, நான் வரேன்!" என்று போய் விட்டான் வேணு.

மாலையில் மேய்ச்சலுக்குப் போன பசு திரும்பும் வேளையில் அவன் மீண்டும் வாசலில் வந்து நின்றான்.

"பாப்பா!"

"இதோ வந்திட்டேன்!"

"நேரமாயிட்டுது; புறப்படு; வீட்டைப் பூட்டிச் சாவியை இறப்பிலே வச் சுட்டுக் கிளம்பு!" என்றான் வேணு.

"எங்கே, சினிமாவுக்கா?"

"ஆமாம், வேறே எங்கே?"

"இப்பவா?"

"எல்லாம் இப்பத்தான்! சட்டுனு முகத்தைக் கழுவி, ரெடி பண்ணிக்கிட்டுக் கிளம்பணும்!"

"தங்கம்?"

"எல்லாம் அவளும்தான்; நீ இப்படியே ஐயங்குளத்து வழியா சாலைக்கு வந்திடு. நான் அப்படியே வந்து உன்னுடன் சேர்ந்துக்கறேன்."

"கடு தண்ணிகூடப் போடலியே!"

"கைக்காட்டி என்ன? ஐயங்குளத்துத் தண்ணி அதுக்கு மேலேதான் கட்டுக் கிட்டு இருக்கு!"

அதற்கு மேல் நின்றால்தானே பேச்சு? வேணு போய் விட்டான். பாப்பா அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, முகத்தைக் கழுவிக் கொள்ளச் சென்றாள். சோப்பின் நறுமணமும் தண்ணீரின் தண்மையும் அவளுக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்தன. 'லிப் பான் சில்க்' புடைவையும், 'ஆர்கண்டி' ரவிக்கையும் 'லேஸ்'போட்ட உள்சட்டையும், "போட்டுக் கொள், போட்டுக் கொள்!" என்று அவளைப் பார்த்துக் கெஞ்சின. அடுக்கித் தொடுத்த மல்லிகை அரும்புகள் மகிழ்ச்சியால் சிரிக்கத் தொடங்கின.

தங்கத்துக்கும் ஒரு முழம் பூவைக் கையில் எடுத்துக்கொண்டு, சாவியைத் தேடி வீட்டைப் பூட்டிவிட்டு, அவள் அவன் சொன்னபடியே ஐயங்குளத்துப் பாதை வழியாக, இலுப்பைத் தோப் பைத் தாண்டிச் சாலையை அடைந்தாள். இலுப்பைத் தோப்பு வழியாகப் போவ தென்றால் அவளுக்குப் பயம்தான். ஆனால் வேணு சாலையில் காத்திருக்கும் போது அவள் ஏன் பயப்பட வேண்டும்?

நீண்ட சாலை; இரு புறமும் இருளை அதிகமாகக் காட்டும் அடர்ந்த மரங்கள். பெருமாள் கோவில் பாதை வழியாக வேணு வந்து கொண்டிருந்தான்.

"தங்கம் வரலியா, சின்ன பாவா!"

"முன்னால் போயிருப்பாள்; கொட் டோடைமதகண்டைக்காத்திருப்பாள்!"

வேணு அவள் முகத்தைப் பார்த்தே பேசவில்லை. அந்த இடத்திலிருந்து அடுத்த ஊர் சரியாக ஒரு மைல் தூரம் இருந்தது. அவர்கள் வேகமாக நடந் தார்கள். தங்கம் இவ்வளவு தூரம் தனி யாகவா போயிருப்பாள்?

"தங்கத்தைக் காணுமே, சின்ன பாவா! பொய்யா சொன்னீங்க?" என்று கேட்டாள் பாப்பா.

அவள் திரும்பதைப் பார்த்து, வேணுவும் நின்றான். பிறகு குற்றவாளியைப் போல் தலையைக் குனிந்து கொண்டு, "சினிமா வுக்கு அவள் வரலே" என்றான்.

"வரல்லியா, நீங்க கூப்பிடல்லியா?"

"நான்தான் கூப்பிடலே!"

"அப்போ சினிமாவுக்குப் போறதையே அவளுக்குச் சொல்லல்லியா?"

"ஆமாம்."

"ஏன்? ஏன், சின்னபாவா, சொல் லல்லே நீங்க?"

வேணுவின் பார்வை தீனமாக இருந் தது. "இது தெரியல்லியா, பாப்பா, உனக்கு? என் வேதனை உனக்குத் தெரி யல்லியா? இந்த வேதனைக்கு நீதான் காரணம் என்கிறதும் உனக்குத் தெரியல் லியா?" என்றான் வேணு.

மண்டையில் யாரோ "ஓங்கியடித்தது போல் இருந்தது பாப்பாவுக்கு. "நானு? நானு காரணம்?" என்று நாக்குழறக் கேட்டாள் பாப்பா.

"ஆமாம் பாப்பா! நீதான்! காலை யிலே நான் வந்தபோது ஏன் அப்படி இருந்தே நீ?"

"அதுக்காக?"

"எனக்குத் தெரியும், பாப்பா. என் னிடம் மறைச்சு வைத்தால் தெரியாமல் போயிடுமா? உன்னையே இத்தனை நாள் இத்தனை வருஷம் வரைக்கும் நீ தெரிஞ் சுக்கல்லே. என்னையும் நான் தெரிஞ்சுக் கல்லே. இன்னிக்குத்தான் எனக்கு எல் லாம் தெரிஞ்சுது" என்றான் வேணு.

பாப்பாவுக்கு அவன் பேசுவதே விளங்க வில்லை. கவலையோ, சோர்வோ, ஏக்கமோ ஒருவருக்கு என்றைக்காவது ஏற்படக் கூடாதா, என்ன? தன்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானு? தன்னிடம் இப்படிப் பேச அவனால் எப்படி முடிந் தது? புரியவில்லை அவளுக்கு. அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க அது நேர மும் இல்லை; இடமும் இல்லை.

இருள் நன்றாகப் பரவி விட்டது. சாலை நீண்ட குகை போல் காட்சியளித்தது. அருகில் நிற்பவனைக்கூடச் சரியாகப் பார்க்க முடியவில்லை.

"இங்கேயே இருங்க. இதோ ஒரு நிமிஷம்!" என்று சொல்லிவிட்டு அவள் வேகமாக அருகிலிருந்த ஆலமரத்துக்குப் பின்னால் போனாள்.

வேணு காத்திருந்தான். ஆனால் கால் மணி, அரை மணியாகியும் அவளைக் காணவில்லை. அவன் பொறுமையை இழந்து போய், "பாப்பா! பாப்பா!" என்று கூவினான்.

அவள் அங்கே இருந்தால்தானே, பதில் கொடுக்க? பகலிலேயே வரத் தயங்கிய தோப்பையும் தூரவையும் இப்பொழுது சிறிதுகூட லட்சியம் செய்யாமல் கடந்து, வீட்டை நோக்கித் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தாள் பாப்பா.

அப்புறம் என்ன நடந்ததோ, அவளுக் குத் தெரியாது. இன்று மூன்று நாள் ஆகியும் அவன் அந்தப் பக்கம் முகத்தைக் காட்டவில்லை.


LITப்பா மெதுவாக அந்தக்கம்பத்தை விட்டு எழுந்திருந்தாள். தலைச் சுற்றல் இப்போது அடியோடு நின்று விட்டது. வெகு நேரமாகச் சுற்றிக் கொண்டிருந்த சரப் புடைவையை மாற்றிக் கொண்டாள்.

கன்றுக்குட்டி, "அம்மா!" என்று தாபத்தோடு கத்தியது. "இதோ ஒரு நிமிஷம்! கஞ்சியை வைச்சுக் கொண்டு வரேண்டா கண்ணு!" என்று ஒரு தாயின் பரிவோடு எட்டிப் பார்த்தாள். ஆனால் திண்ணையில் வேணு எப்பொழுது வந்து உட்கார்ந்தான்?

"பாப்பா! உன்னைச் சரியாக நான் புரிஞ்சுக்கல்லே! ஏதோ ஒரு வேகத்தில் உன் கண்ணியத்தையும் குறைச்சு, என் கண்ணியத்தையும் இழந்துட்டு இருந் தேன்!" என்றான் அவன்.


அவளுக்கு அவன் செய்த தவறு கண் களில் படவில்லை. குழப்பம் தீர்ந்த அவ னுடைய தூய அன்புதான் கண் முன்னே வந்து நின்றது.

அவள் நீண்ட பெருமூச்சு விட்டாள். கண்ணியம் பிழைத்தது!



''மாப்பிள்ளையோட தாராள குணத்தைப் பார்த்தீங்களா! நம்ம குழந்தைகளுக்கு மத்தாப்புகளும், அதிர்வெடிகளுமா ஐம்பது ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்...!''


''அந்த அதிர்வெடி, குழந்தைகளுக்கு இல்லேடி; எனக்கு. இதோ பாரு, பட்டாசுக்கடைக்காரன் என் பேருக்கு அனுப்பியிருக்கும் 'பில்'லை!''



நண்பர்:— உங்கள் படத்தைத் தீபாவளிக்கு ரிலீஸ் செய்யப் போவதாய்ச் சொன்னீர்கள். ஒரு ஏற்பாட்டையும் காணோமே?

பட முதலாளி:— தீபாவளிக்கு ரிலீஸ் என்று சொன்னேன். எந்த வருஷத்துத் தீபாவளிக்கு என்று குறிப்பிட்டுச் சொன்னேனா?

சிரிப்பு வெடிகள்



மனைவி:— மாப்பிள்ளை ஏன் கையோடு ஒரு 'டேப்' கருவியும் கொண்டு வந்திருக்கிறார்?

கணவன்:— தலை தீபாவளிக்கு நாம் செய்து போடும் வைர மோதிரம், "நாலு அடி தூரமாவது" 'டால்' அடிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாரல்லவா? அதை அளந்து பார்ப்பதற்காக இருக்கலாம்!



தீபாவளிக்குப் போனஸ் கொடுப்பதற்காக எடுத்து வைத்திருந்த பணத்தையும், காஷியரையும் காணாததால் போனஸ் கொடுப்பது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

— ஒரு கம்பெனியின் அறிவிப்பு

ஏ.எஸ்.சுந்தரராஜன்



குடும்பத்தினர் எல்லோரும் மொட்டை மாடியில் நின்றபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்:


''எங்கள் மாப்பிள்ளை ஒரு பைலட் ஆபீசர் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. தலைதீபாவளிக்கு நிச்சயம் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். எந்த நிமிஷத்திலும் அவர் 'பாரசூட்' மூலம் இறங்கலாம்!''



சிரஞ்சீவி மாப்பிள்ளை அவர்களுக்கு,

வைர மோதிரம், தங்கச் சங்கிலி எல்லாம் தயாராகிவிட்டனவா என்று ஒவ்வொரு கடிதத்திலும் விசாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். என் மாமனார் என் தலைதீபாவளிக்குத் "தரவேண்டிய" மோதிரத்தையும், சங்கிலியையும் இந்த வருஷம் தருவதாகக் கூறியிருக்கிறார்! அதை வாங்கிக் கொடுத்து விடுகிறேன்......!

உலக சாம்பியன்



உருண்டார் மண்ணில்



திருமகள்





1. தொன்மையில்

உலகில் மனித இனம் தோன்றிய நாள் தொடங்கிக் கடவுள் வழிபாடு, அந்தந்தக் காலத்தின் அறிவு வளர்ச்சி, சமய உணர்ச்சி இவற்றுக்கு ஏற்ப மாறிக் கொண்டே வருகிறது. ஆனால் பண்டைய மனிதரின் கருத்துக்கள், அவர்கள் கண்ட உண்மைக் கோட்பாடுகள் வெளித் தோற்றத்தில் மாறி இருப்பினும், இன்றளவும் அழியாத ஐதிஹ்யமாக அவை நிலவுகின்றன. உருவிலாத ஒரு தத்துவத்துக்குக் கல்லிலும், செம்பிலும், மெழுகிலும், கூத்திலும், பாட்டிலும், சொல்லிலும், செயலிலும் வெளியுருவொன்றை மனிதன் கற்பிக்க முயல்கின்றான். தொன்மையில் இயற்கையின் சக்திகளையே மாந்தர் கடவுளாகக் கருதிப் போற்றி வணங்கினர். அன்னை அல்லது அத்தன் என்ற முறையிலேயே இறைவனை இறைஞ்சினர் எனலாம். ('**த்வம் ஹி ந பிதா வஸோ; த்வம் மாதா**' — ருக் வேதம். '**அப்பனும் நீ அம்மையும் நீ**' என்கிறது தேவாரம். **ஸ்ரீ** அல்லது திரு; லக்ஷ்மி அல்லது செய்யாள்; இக் கடவுளின் வழிபாடும் இவ்வகைத் தொன்மையதாகும்.

ஸ்ரீ என்ற வடமொழிச் சொல், சோபை, தருமம் அருத்தம், காமம், வைபவம், புத்தி, ஐசுவரியம், ஒளி, கீர்த்தி, வித்தி இவற்றையே குறிக்கும். அதேபோல் தமிழ்த் திருவும், அழகு, செம்மை, செல்வம், புகழ், நிறைவு, வளமை இவற்றைக் குறிப்பதாகும். ருக் வேதத்தில் பயின்ற இச்சொல், பாலுடன் சோமரசத்தைக் கலத்தல் என்ற பொருளிலேயே வருகிறது. இதை வைதிக பரிபாஷையில் '**அபிஷவணம்**' என்பர். **லக்ஷ்மி** (இலக்குமி) என்ற பதமும், வேதத்தில் பல இடங்களில் வருகிறது. அது ஒரு தெய்வத்தைக் குறிப்பிடவில்லை. '**பத்ரைஷாம் லக்ஷ்மீர் நிஹிதாதி வாசி**' என்ற ரிக்கின் பொருளாவது: அவர்களுடைய சொற்கோப்பில் மிகச் சிறப்பான அழகு மண்டிக் கிடக்கிறது. நன்மை தீமை இரண்டினையுமே '**பாபி லக்ஷ்மி**,' '**புண்ய லக்ஷ்மி**' என்றனர்.

ஸ்ரீயும், லக்ஷ்மியும் வெவ்வேறு சொற்களாக வழக்கில் இருந்தன. பின்னர் அவை வெவ்வேறு கடவுளைக் குறிக்கும் சொற்களாயின.

2. ஸ்ரீஸூக்தம்

இது ருக் வேதத்தைச் சேர்ந்த ஒரு ஸூக்தம். அதன் பத்தாவது மண்டலத்து இறுதியில் வரும் '**கில**' ஸூக்தத்தில் அடங்கிய மூன்று பிரிவுகள் உடைய பதினேழு ரிக் மந்திரங்களாகும். இவற்றைப் பாடிய ரிஷிகள்—ஆனந்தர், கர்தமர், ஸ்ரீத என்பவராவர். ஸூக்தம் என்றால் ஒரே பொருளைப் பற்றியதும், ஒரே தெய்வத்தைச் சுட்டுவதுமான மந்திரங்களின் தொகுதி. சிலர் இதை இடைச்செருகல் என்றும் சொல்லுகின்றனர். எனினும், இது பௌத்த யுகத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தோன்றியது என்பதில் ஐயமே இல்லை. திரு அல்லது இலக்குமி இதில் ஒரே கடவுளாகப் புகழுரைகளை ஏற்கிறாள். பிற்காலத்தில் எழுந்த புராண இதிஹாஸ வரலாறுகளில் வரும் திருமகளைக் குறித்த செய்திகள் இதனையே வித்தாகக் கொண்டு, கிளைத்துப் படர்வனவாகும். இந்த ஸூக்தம் திரு

க. நா. குமாரஸ்வாமி



மகளான லக்ஷ்மியை, **ஹிரண்ய வர்ணா** (பொன்னிறத்தவள்) **ஹரிணீ** (மான் வடிவினள்) **சந்த்ரா** (மதியன்னவள்) **அபகாமிநீம்** (தீய தவறுதவள்) **ஆர்த்ரா** (தண்ணியள்) **பத்மேஸ்திதா பத்ம வர்ணா** (தாமரையில் உறைபவள், வண்ணத்தாள்) **ஆதித்ய வர்ணா** (அருக்கன் ஒளியுடையவள்) **வருக்ஷோ பில்வ:** (கூவிளத்தில் தோன்றியவள்) **கரீஷிணீ** (பல்கிப் பெருகும் ஆவின் செல்வமுடையவள்) **ஈச்வரீ** (எல்லா உயிரிலும் உறையும் கடவுள்) **புஷ்கரணீ** (யானைகளால் வணங்கப் பெற்றவள்) **பிங்களா** (செம்மை நிறம் கொண்டவள்) **யஷ்கரிணீ** (தண்டம் விதிக்கும் தரும தேவதை) **ஸூர்யா** (கதிரவனை நிகர்த்தவள்) **ஹிரண்மயீ** (பொன்னி) என்று வழுத்துகிறது. முனிவர்கள் யாவரும் ஜாதவேதனான அக்கினியை வேண்டித் தமக்கு எல்லா நலன்களைத் தருவதற்குத் திருமகளை அழைக்கச் சொல்கின்றனர். ஸ்ரீஸூக்தம் அவளை **'ஹரிணீ'** என்று கூறுகிறது. இதற்குப் பச்சைமேனியள் என்றொரு பொருள் உண்டு; மான் என்ற அர்த்தமும் உண்டு. திருமகள் மானாகக் கானகத்தில் திரிந்து கொண்டிருந்தாள் என்ற புராணக் கூற்றை "பொரோபுதூர்" பௌத்த ஸ்தூபத்தின் ஒரு கலசில் பொறித்துள்ள பொன்மானின் சிற்பம் வலியுறுத்தும்.

ஸ்ரீ ஸூக்தம் நான்கு வேதங்களிலும் தனி உருவில் அமைந்துள்ளதென அக்கினி புராணம் கூறுகிறது. (ஸ்ரீ ஸூக்தம் ப்ரதி வேதம்ச ஜேயம் லக்ஷ்மி விவர்த்தனம்) **'ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம்'**—ரிக் வேதத்தில் வழங்குவது: **'ரதேஷ அக்ஷேஷு'**—இது யாஜுஷம்; **'ச்ராயந்தீய ஸாம'**—இது ஸாம வேதம்—**'ஸ்ரீயம் தாதர்மயி தேஹி'**—இது அதர்வம்.

3. திருமகளின் பிறப்பு

வேதத்தின் ஒரு பிரிவான சதபத பிராஹ்மணம் என்பதில் திருமகளின் பிறப்பைப் பற்றிய முதல் கதை வருகிறது. பிரஜாபதி மன்பதையைப் படைக்கத் தவம் புரிந்தார். அவருடைய தவத்தின் தீவிரம் தணிந்ததும் அழகுத் தெய்வம் அவனியிலே பிறந்தாள். பளபளக்கும் அவளுடைய திவ்ய வடிவினைக் கண்ணுற்று வானவர் அவளைத் தமதாக்கிக் கொள்ள விரைந்தனர். அவர்கள் பிரஜாபதியை அணுகி இந்தத் திருமகளைக் கொன்று அவளுடைய நலத்தைக் கொள்ளையிடப் போவதாகக் கூறினர். அதற்குப் பிரஜாபதி, ஆடவர் பெண்களைக் கொல்வது வழக்கமில்லை; அதனால் திருமகளைக் கொல்லாமல் அவளுடைய வளத்தைப் பகிர்ந்து கொள்வீரெனக் கூறினார். அதன் விளைவாக, அக்கினி அன்னத்தையும்; ஸோமன், அரசினையும்; வருணன் கடல்சூழ் ஞாலத்தையும்; மித்ரன் மெய்ம்மையையும்; இந்திரன், வன்மையையும்; ப்ருஹஸ்பதி, பிரம்ம வர்சஸையும்; ஸவிதா, நாடுகளையும்; பூஷா, ஒளியையும்; ஸரஸ்வதி செழுமையையும்; த்வஷ்டா, உருவினையும் பறித்துக் கொண்டனர். திருமகள் பிரஜாபதியை அடைந்து முறையிட அவர், 'யக்ஞேன ஏதாந் புனர்யாசஸ்வ'—வேள்வி செய்து மீண்டும் இவற்றைப் பெறுவாய் என்றார். ஸ்ரீ அல்லது திருமகள் இதன்படி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டாள்.

புராணங்கள் வேறு விதமாகக் கூறுகின்றன. விஷ்ணு புராணத்தில் இரண்டு உபாக்கியானங்களில் ஒன்றுக்கொன்று முரணாக அவளுடைய பிறப்பின் செய்தி வருகிறது. மற்றப் புராணங்கள் இவ்விரண்டினையும் கலந்து குழப்பி விடுகின்றன. தக்ஷனுடைய பதின்மூன்று பெண்களைத் தருமதேவதை மனைவிகளாகக் கொள்கிறார். அவர்களுள் ஒருத்தி லக்ஷ்மி. மற்றொரு இடத்தில், பிருகுபத்தினி க்யாதி என்பாள் வயிற்றில் தோன்றியவள் லக்ஷ்மி என்று வருகிறது. இந்த **'பார்கவியே'** தேவதேவனான நாராயணனை மணந்தாள்.

லக்ஷ்மி கடலினின்று தோன்றிய கதை, **'ஆர்த்ராம்'** என்ற ஸ்ரீ ஸூக்தத்தின் சொல்லிலிருந்து பிறந்ததாகும். புராணங்கள் வேறுவிதமாக இதைத் திரித்துக் கூறுகின்றன. ருத்திராம்சமான துர்வாஸ முனிவர் ஒரு வித்யாதரியிடமிருந்து கிடைத்தற்கரிய ஸந்தான புஷ்பத்தைப் பெற்று அதை இந்திரனுக்குக் கையுறையாக வழங்கிய பொழுது அவன் அவமதிப்புச் செய்யவே மூவுலகும் திருவை இழந்து நீங்கக் கடவது எனச் சாபம் கொடுத்து விட்டார். செல்வத்தை இழந்த தேவர்கள் பிரும்மாவைத் தலைவராகக் கொண்டு திருமாலைச் சரண் புகுந்தனர். தேவாசுரர்கள் சேர்ந்து கடலைக் கடைந்தால் அவள் கிடைப்பாள் என்றார் விஷ்ணு. இதன் விளைவாகத் திருமகள் கடலினின்று எழுந்தாள்.

ததஃ ஸ்புரத் காந்திமதீ
விகாஸி கமலே ஸ்திதா
ஸ்ரீ தேவி பயஸ்தஸ்மாத்
உத்திதா த்ருதபங்கஜா

—(விஷ்ணு புராணம்)





1. எல்லோரா லக்ஷ்மி
2. லக்ஷ்மி கணபதி
3. லக்ஷ்மி நரசிம்மன்

அப்போது ரிஷிகள் ஸ்ரீஸூக்தத்தைப் பாடினராம்; விசுவாவசு முதலான கந்தருவர்கள் யாழ் இசைத்தனராம்; க்ருதாசி போன்ற அப்ஸர மடந்தையர் ஆடல் புரிந்தனராம்; திக்கஜங்கள் பொற் குடங்களிலிருந்து உலகத் தாய்க்கு நீராட்டினவாம். சேறு படியாத மாகடல், தன் உருவுடன் தோன்றி முளரி மலரை அவளுக்குத் தந்ததாம். விசுவகர்மா பொன்விழைகளை அவளுக்குப் பூட்டினு னாம். (பொற் கொல்லரின் தெய்வம் அவரன்றியல்லவா?) இத்தகையவள் திரு மாலின் மார்பில் தனக்குரிய இடத்தைக் கொண்டாளாம். ('ஓர் அல்லித் தாமரையாள் ஒன்றிய சீர்மார்பன்' —பேயாழ்வார்.)

சில புராணங்கள் அவள் சூரியனுடைய பத்தினி என்றும், காமனை ஈன்றவ ளென்றும், தத்தாத்திரேயரின் இல்லாள் என்றும் கூறுகின்றன. வால்மீகி ராமா யணத்தில் பால காண்டத்தில் லக்ஷ்மி பாற்கடலிலிருந்து பிறக்கும் வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது.

பிரும்ம வைவர்த்த புராணத்தில் அன்னை லக்ஷ்மி, துர்கதி நாசினி, துர்க்கை பாகத் திகழ்கிறாள். விஷ்ணு புராணத்தில் இந்திரன், அவளை, மஹா வித்யா, குஹ்ய வித்யா, ஆத்ம வித்யா என்றெல்லாம் புகழ்கிறான்.

மார்க்கண்டேய சண்டியில் மஹா லக்ஷ்மி பராசக்தியாகப் போற்றப்படு கிறாள். அவளிடமிருந்தே யாவும் தோன்றுகின்றன. கூர்ம புராணம் இவளை விஷ்ணு சக்தி, விஷ்ணுமாயை என்றெல் லாம் வழுத்துகிறது.

'அஹிர்புத்ன்ய ஸம்ஹிதை' ஸ்ரீஸூக் தத்தை ஆராய்கையில், வெறும் திரு மகளை மட்டும் புகழாமல் பகவான் விஷ்ணு ஸ்ரீயுடன் இணைந்த உருவத் தையே பரவுகிறது. இவர்கள் ஒருவரை இன்றி ஒருவர் அமையார். (அப்போத் யமிச்ர)

வைகானஸ சம்பிரதாயத்தைச் சேர்ந்த 'காச்யப ஸம்ஹிதை' இந்தத் தேவிக்குச் செய்ய வேண்டிய காரியங்கள் யாவும் ஸ்ரீஸூக்தத்தை வைத்தே நடத்த வேண்டுமென விதி வகுக்கிறது.

வைஷ்ணவ சாஸ்திரங்கள் தோன்றிய பிறகே திருமகள், தனது தனித் தன் மையை இழந்து விடுகிறாள். அவள் விஷ்ணுவுடன் கலந்து விடுகிறாள்.

ராமானுஜர் பரப்பிய **ஸ்ரீ வைஷ்ண** வத்தில் திருமகளுக்குத் தனிச் சிறப்பு இராது போனாலும், லக்ஷ்மியின் இருக்கை பகவத் ஆஸனம், பகவானுக்குரிய விபவம் அவள் இன்றி இல்லை. ரத்தினத்துக்கும் அதன் ஒளிக்கும் உள்ள தொடர்பு போல வும், பூவுக்கும் அதன் மணத்துக்கும்





உள்ள சம்பந்தம் போலவும் பிரிக்க வொண்ணாதது இவர் களுடைய சேர்க்கை. நாரா யணனைச் சரண் புக ஸ்ரீ ராமானுஜர் தம் கத்யத்ரயத் தின் தொடக்கத்தில் '**அச ரண்ய சரண்யா**' என்று இந்தத் திருமகளைத்தான் வேண்டுகிறார்.



4. கஜலக்ஷ்மி

யானைகள் இரு புறமும் கலச நீராட்டும் லக்ஷ்மியே எங்கும் சாதாரணமாகத் தென்படும் உருவம். முதன் முதல் இந்த கஜலக்ஷ்மியின் வடிவிலேயே சிற்பியின் கனவு எழுந்தது. ஸ்ரீஸூக் தத்தின் வருணனையே இதற்கு அடிப் படையாகும். வேத காலத்திலேயே வேரூன்றிப்போன இந்தக் கற்பனை யைக் கல்லில் எங்கும் காணலாம். **தந்த்ரஸாரத்தில்** ஓர் அரிய தியான ஸ்லோகம்;

காந்த்யா காஞ்சன ஸந்நிபாம்
ஹிமகிரி ப்ரக்யைச் சதுர்பிர்கஜை:
ஹஸ்தோத்க்ஷிப்த ஹிரண்மயாம்ருத
கடை: ஆஸிச்யமானாம் ஸ்ரீயம்.

இந்தக் கருத்தையே மேல்வரும் ஒரு குறிஞ்சிக் கலிப் பாட்டில் காணலாம்:

வரிநுதல் எழில்வேழம்
பூநீர்மேல் சொரிதர
புரிநெகிழ் தாமரைமலர்
அம்கண் வீறெய்தி
திருநயந்து இருந்தன்னதேங்
கமழ்விறல் வெற்ப (கலி-44)

சீவக சிந்தாமணியும்,

திருமகளை வெள்ளிரு மதயானை
விழுமணிக் குடம் ஏந்தித்
தெள்ளறல் மண்ணு நீராட்டினர்
தேமலர் மேவு
ஒள்ளிழை அவள்" எனக் கூறுகிறது.

கம்பர் வாக்கும் இப்படியே:

செய்ய தாமரைச் செல்வியைத் தீம்புனல்
கையினூட்டும் களிற்றூ சொன்னவே"

எனப் பாடுகிறது.

பர்ஹுத் ஸ்தூபத்தில் ஒரு கஜலக்ஷ்மியின் உருவத்தைக் காணலாம். இதுவே அத் தகைய திருமகள் வடிவத்தின் முதல் எடுத்துக் காட்டாகும்.

ஸாஞ்சி ஸ்தூபத்தில், ஒரு கம்பத்திலும் ஸாரநாத் தோரணத்திலும், யானைகள்

---

1. **கஜலக்ஷ்மி** (மாமல்லபுரம்)
2. **கோஜாகரலக்ஷ்மி** (வங்காளம்)
3. **வராகலக்ஷ்மி** (மாமல்லபுரம்)

உடைய திருமகள் உருவங்களைக் காணலாம். எல்லோரா கைலாசநாதர் கோயிலில் உள்ள ராஷ்ட்ரகூடச் சிற்ப ரீதியான கஜலக்ஷ்மி அபூர்வ வனப்பு வாய்ந்தது. ஐஹோளேயிலும் இது போன்ற ஒரு திருவுருவம் உள்ளது.

பல்லவகாலத்துச் சிற்பங்களிலும் நிதர்சனமாகக் கஜலக்ஷ்மியின் உருவங்கள் இரண்டு மாமல்லபுரத்தில் காணலாம். திருக்குறுங்குடியில் கோபுர முகப்பின் நடுவில் அபூர்வமான செதுக்கு வேலைப்பாடு அமைந்த கஜலக்ஷ்மியைப் பார்க்கலாம்.

5. பௌத்தத்தில் திருமகள்

பௌத்த நூல்களில் லக்ஷ்மியைப் பற்றிச் செய்திகள் உள்ளன. ஸுத்த நிபாதத்தில் நாலக ஸுத்தத்தின் எட்டாவது பகுதியில் '**ஸிரீமா**' (ஸ்ரீமா)வைக் காண்கிறோம். 'சில' சிரத்தம் எனும் பௌத்த நூல் இவள் வழிபாட்டினை விளக்குகிறது. பர்ஹுத் சிற்பங்களில் இந்த 'ஸிரீமா'வின் சிலை ஒன்றுளது. இபீஷியன் (Iphesian) தேவதையான 'தயானு' (Diana) வின் கையில் உள்ளது போல் உற்பத்திச் சக்தியைக் காட்டும் முத்திரை (Fertility sign) அவள் கையில் இருக்கிறது.

கி. பி. முதல் இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த குஷானர்களின் சிற்ப ரீதியில் அமைந்த, செந்நிறக் கல்லால் ஆன, சற்றுச் சிதைந்த லக்ஷ்மியின் திருவுருவம் ஒன்று டில்லி காட்சிச்சாலையில் உள்ளது. உலகெங்கும் தேனும் பாலும் பெருகி ஓடத் தேவி தன் நகிலைத் தொடும் பாவனையாக அமைந்துள்ளது; பூர்ண கும்பத்தின்மீது இரு தாமரைகளில் திருவடிகளை ஊன்றி நிற்கிறாள். அவள் பின்புறம் கொடியுடன் தாமரை மலர்கள் படர்ந்துள்ளன.

6. ஜைனத்தில் லக்ஷ்மி

த்ரைலோக்ய தீபிகா-நாம-ஸங்க்ரஹணத்தில் ஜைனர்கள் திருவை ஜீவநகத்தின் தென்புறத்துப் பாதியைக் காக்கும் தேவதைகளில் ஒருத்தியாகப் பாவிக்கின்றனர். தீபாவளியின்போது இவளை வழிபடுகின்றனர். கணக்குச் சுவடிகளை ஒரு பீடத்தில் அடுக்கி வைப்பார்கள். புரோகிதர் ஜைனர்களின் நெற்றியிலும் எழுதுகோலிலும் சுவடி மீதும் சந்தனத் திலகம் இடுவார். புதுக் கணக்கு ஏட்டில் ஐந்து, அல்லது ஏழு, அல்லது ஒன்பது தடவை 'ஸ்ரீ' என்ற அக்ஷரத்தை எழுதுவார்கள். இதுவே தீபாவளிக்குப் பிறகு வரும் லக்ஷ்மி பூஜாவாகும்.

7. சிற்ப நூல்களில் லக்ஷ்மி

திருமகளின் வடிவங்கள் எவ்வாறு அமைய வேண்டுமென லக்ஷண கிரந்தங்கள் உள்ளன. **அம்சுபேதாகமத்தின்**படி, திருமகள் தாமரையில் வீற்றிருப்பாள்; பொன்னனிற ஒளியாள்; செவியில் தங்கக் குண்டலங்கள் அணிந்தவள்; செவ்வரி படர்ந்த கண்ணாள்; எழும்பிய மார்பினள்; கச்சார் கொங்கையாள்; தூயமணி உடையவள்; மேற்புறக் கைகளில் சங்கு சக்கரம் ஏந்தியவள்; கீழ்ப்புறம் வலது கரத்தில் முளரி மலரும் இடமதில் கூவிளங் கனியும் வைத்திருப்பவள்; அழகார் துகில் அணிந்தவள்; இடையில் மின்னும் மேகலையும், குறங்கு சரியும், உடலெங்கும் அணிகலன்களும் அணிந்திருப்பவள்.



குஷான லக்ஷ்மி

சில்பரத்னம் கூறும் லக்ஷணம்: பொங்கும் புது இளமை மிக்கவள்; தடங் கண்ணாள்; இன்முகத்தாள்; வெளிர் மேனியாள்; செப்பூரும் வாயிதழாள்; தாமரையில் இடம் கொண்டவள்; வெண்ணிறக் கலை பூண்டவள்; இரு புறமும் மகளிர் சாமரை இரட்டுவர்.

விஷ்ணு தர்மோத்தரம்: லக்ஷ்மியின் மேனி நிறம் கருமை என்கிறது.

ரூபமண்டனத்தின்படி, திருமகள் எட்டுத் தளமான தாமரை ஆசனத்தில் விநாயகரைப் போல் வீற்றிருக்க வேண்டும்; மேற்புறக் கைகளில் தாமரைகள் துலங்கும்; கீழ்ப்புறம் இடது கையில் அமுத கலசமும்; வலமதில் மாதுளங் கனியும் இருக்க வேண்டும்.

விச்வகர்ம சாஸ்திரம்: கொல்லாபுரத்து மகாலக்ஷ்மியின் லக்ஷணங்களைக் கூறுகிறது. தேவி எல்லா இழைகளையும் அணிந்தவள்; கீழ்ப்புற வலது கையில் கலசம்; இடது கையில் கேடகம்; மேற்புறம் வலமதில் கதாயுதம்; இடமதில் வில்வக் கனி; சிரமதில் லிங்கத்தைத் தரித்துக் கொண்டிருப்பாள்.

வராஹலக்ஷ்மி: வராஹ அவதாரத்தில் திருமால் பூமியை உத்தாரம் செய்துவிட்டுத் தம் சிரமத்தை மறந்திருக்கத் திருமகளைத் தம் தொடைமீது நிறுத்தி இன்பமடைகிறார். மாமல்லபுரத்தில் இவ்வமைப்புடைய சிலை பல்லவர் கலைத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஸ்ரீதேவி பகவானுடைய வலதுபுறம் இருக்கிறாள்.

லக்ஷ்மி நரசிம்ஹர்: திருமகளைத் தம் இடது மடிமீது அமர்த்திச் சினம் தணிந்தவராய் வீற்றுக் காட்சி அளிக்கிறார். சென்னை பொருட்காட்சிசாலையில் உள்ள இரு அழகிய உலோக விக்கிரகங்கள் இதற்கு நிதர்சனம்.

லக்ஷ்மி கணபதி: இது ஓர் அபூர்வமான இணைப்பு. அகோர சிவாசாரியார் தம் '**க்ரியாக்ரமத்யோதி**'யில் இதன் லக்ஷணத்தைத் தருகிறார். லக்ஷ்மியைத் தழுவிக் கொண்டதுபோல் உருவம் இருக்க வேண்டும்; தென்காசி விசுவநாதர் ஆலயத்தில் இந்தத் திருவுருவத்தைக் காணலாம்.

8. திருமகள் வழிபாடு, விரதங்கள்

பில்லர்கள் எனும் தொல்குடியினரின் தெய்வம் லக்ஷ்மியே.

தென்னாட்டில் மாலர் என்ற வகுப்பினர் ஆறு கலயங்களை அடுக்கி அவற்றைத் திருமகளாகப் பாவித்துக் கும்பிடுகின்றனர்.

குஜராத்தில் லக்ஷ்மி பூஜை ஒரு விசேஷ நிகழ்ச்சியாகும். ஆனால் நம் ரீதியில் அன்று. லக்ஷ்மியின் கையில் வீணை இருக்கும். சுக்ரநீதி ஸாரத்தில் வீணை ஏந்திய தியான ச்லோகம் வருகிறது.


மகாராஷ்டிரத்தில் உழவர்கள் லக்ஷ்மியைத் தொழுகின்றனர். பயிர் வளத்தைக் காட்டும் தேவதை அவள். ஒரு மரத்தின் கீழ் ஐந்து கற்களை நிறுத்தி அதற்கு மஞ்சள் குங்குமம் இட்டுக் கோதுமை மாப் படையல் சாத்துவர். மாலைப்பொழுது இளங் கதிர்களைக் கொய்து வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். அத்துடன் துணியில் மறைத்த ஒரு விளக்கினையும் ஏந்தி வருவர். அதுவே அவர்களுடைய லக்ஷ்மி.

ராஜபுதனத்தில் லக்ஷ்மியை அன்னபூரணியாக உபாசிக்கின்றனர். தானியம் அளக்கும் 'காரி' என்ற மரக்காலை லக்ஷ்மி வடிவமாக அமைத்துத் தாமரைப் பூக்களால் அலங்கரிப்பார்கள்.

இந்தோசீனாவிலும் திருமகளின் வழிபாடு நிலவுகிறது. அவள், தலையில் முத்துக் கிரீடமும், கைகளில் வளையல்களும் அணிந்திருப்பாள். மேற்புறக் கைகளில் சங்கு சக்கரம் இருக்கும். நாகக் குடை பூண்டிருப்பாள். கல்லறைகள் மீது திருமகள் உருவைப் பொறிப்பது அந்நாட்டு வழக்கம்.

தெலுங்கரும், தமிழகத்தில் ஸ்மார்த்த மரபினரும் **வரலக்ஷ்மி விரதத்தைக்** கொண்டாடுவார்கள்.

கோஜாகர பூர்ணிமை விரதம் வங்காளிகளிடையே நிலவும் லக்ஷ்மி பூஜை.


இத் தீபாவளி நன்னாள்
நாடுபூராவிலுமுள்ள எமது
ஆதரவாளர்கள், ஏஜண்டுகள்
பிரதிநிதிகள் அனைவருக்கும்
மகிழ்ச்சியையும் சுபிட்
சத்தையும் அளிக்கட்டும்
கேசவர்த்தினி
எங்கள் இதர தயாரிப்புகள்:
கேசவர்த்தினி ஷாம்பு
அஞ்சன் கண் மை
கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்... கோயமுத்தூர்....
GP

ஆச்வின மாதம் பூரணிமை தினத்தில் வெறும் இளநீரை அருந்தி விட்டு, இர வெல்லாம் கண் விழித்து (கோ ஜாகர) இந்த நோன்பினைச் செய்வார்கள்.

லக்ஷ்மிக்குத் தனியான பீடம் ஒவ் வொரு வங்காளிகள் வீட்டிலும் இருக்கும். அந்த இடத்தில் அன்றாடம் ஜலகும்பம் வைத்து, மாலை வேளைகளில் தீபதூபம் காட்டி, மங்கள சங்கம் ஒலிப்பார்கள். மேலும் **லக்ஷ்மிவாரமான (வியாழனில்** லக்ஷ்மி விரத கதையை வங்க மகளிர் பாராயணம் செய்வார்கள். வாழை இலையைக் கொண்டு லக்ஷ்மியின் உருவம் அமைத்து, வில்வக் கனியை அதற்கு நயனங்களாக வைப்பர். கூவிளங் கனிக்கு **ஸ்ரீபலம்** என்று பெயர்.

9. இலக்கியத்தில் திருமகள்

ஸ்ரீ லக்ஷ்மி புராணத்தைத் தவிர துர்வாஸர் பாடிய ஒரு **லக்ஷ்மி ஸ்தோத்திரம்** வழக் கில் இருக்கிறது. ஆதி சங்கரரின் **கனக தாரா ஸ்தவமும், ஸ்ரீ பஞ்சதசீஸ்தவமும்** திருமகளைப் புகழும் அழகிய பாமாலைகள். இவற்றை அன்றாடம் பாடிப் பரவுவோ ருக்குத் திருமகளின் பூரண கடாக்ஷம் உண்டாகும் என்பது ஆன்றோர் வாக்கு.

லக்ஷ்மிதந்த்ரம், மகாலக்ஷ்மி ரத்ன கோசம், மந்த்ர கல்பார்ணவம் இவற்றில் காணும் லக்ஷ்மி துதிகள் அழகு மிக்கவை. அவளை வழிபடுவதற்கு யந்த்ரங்களையும், அதன் பிறங்களையும் விளக்குகின்றன.

நம் தமிழ் இலக்கியத்திலும் திருமகளைப் பற்றிய செய்திகளைப் பரக்கக் காணலாம். திருக்குறளில் அவளைப் பற்றிய குறிப் புக்கள் :

'அகன் அமர்ந்து செய்யாள் உறையும்,
'மடியிலான் தாள் உளாள் தாமரை யினாள்'

தொல்காப்பியத்தின் ஓர் உரையில் காணும் பழம் பாட்டு.

'நெய்யொடு திரி ஒக்கச்
செய்யாளைச் சேர்வோர்க்கு
பொய்யாத உள்ளமே
மெய்யாதல் வேண்டும்

பௌத்த நூலாகிய மணிமேகலை அவளை,

'விரை மலர்த்தாமரை ஒரு தனி இருந்த திருவின் செய்யோள்'-என்கிறது.

10. அலக்ஷ்மி அல்லது தவ்வை

ஸ்ரீ லக்ஷ்மி புராணத்திலேயே இவளைப் பற்றிய செய்தி வருகிறது. 'அலக்ஷ்மீ : மே நச்யதாம் ; ஜ்யேஷ்டாம் அலக்ஷ்மீம் நாசயாமி அஹம்' — என்றெல்லாம். இவளே திருமகளின் அக்காள். கடலைக் கடைந்தபோது அதன் கல்மஷத்திலிருந்து தோன்றியவள். லக்ஷ்மிக்கு முன்னால் தோன்றியதால் இவளுக்கு ஜ்யேஷ்டா தேவி என்ற பெயர். மூதேவி-மூதவியில் வரும் **'மாமுகடி'** இவளே. யாருமே இவளை மணக்க விரும்பாததால், கபில முனிவர் மணந்து கொண்டார். அதனால் இவள் கபில பத்தினி. இவள் வாழும் இடம் அரச மரம். சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் இந்த மரத்தை எவரும் அணுகக் கூடாது. ஏனென்றால் லக்ஷ்மி தன் தமக்கையைச் சனிக்கிழமையன்று தான் சந்திப்பாளாம். அந்தச் சமயம் இடும்பை எதுவும் நேராதாம். இவளுக் குச் சில உருவம் உண்டு. காலைப் பரப்பி, ஸ்தூல மேனியளாய்ப் பக்கத்தில் இருவர் புடைசூழ வீற்றிருப்பவள். நெற்றியில் திலகம் இருக்காது. தலைமயிர் ஏகவேணி (பின்னல் இராமல்) யாக இருக்கும். வலது கரத்தில் நீலோத்பல (கருங்குவளை) மலரை வைத்திருப்பாள். தொடைமேல் ஒரு கையை ஊன்றி யிருப்பாள்; செந்நிற ஆடையே இவள் உடுத்துவது; கருநிற மானவள். இவளுடைய கொடியில் காக்கையின் உருவம் இருக்கும். இவளு டைய வாகனம் கழுதை. திருப்பரங்குன்றத் தில் முருகக் கடவுள் எனக் கருதப்படும் தெய்வ உருவம், இந்த ஜ்யேஷ்டா தேவி யின் சிலையென்றே தக்க சான்றுகளுடன் பழம் பொருள் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர்.

11. திருமகளைப் பற்றிப் பிற செய்திகள்

திருமகளின் வாகனம் ஆந்தை (பேசகம்) என்று வங்காளிகள் கூறுகின்றனர். ஆந் தையின் குரல், அது வீட்டு இறைவாரங்



பர்ஹூத் சிற்பத்தில் கஜலக்ஷ்மி

களில் வந்து வாழுவது யாவும் சுபத்தையே குறிப்பிடும் என்கிறார்கள்.

குபேரன் திருவின் உருவைத் தன் தேர் முகப்பில் பொறித்துள்ள செய்தி புரா ணங்களில் வருகிறது. அதேபோல், **'தெய்வ யுத்தி பொறித்த புனைபூண் பருமம்'** என்ற கலித்தொகையில் வரும் விஷயத்தை உரைகாரர் நச்சினார்க்கினியர் 'திருவைப் பொறித்து வைத்த கழுத்து மெத்தையினை உடைய யானை' என்கிறார்.

வீட்டு உத்தரங்களிலும், வாசல்படி யின் மேல் விட்டத்திலும், மங்கள தேவ தையான கஜலக்ஷ்மியின் உருவம் அமைக் கும் வழக்கம் இன்றும் நம் நாட்டில் நிலவுகிறது.

எழுதுகோலுக்கு **ஸ்ரீ கரணம்** என்று பெயர். சந்திரன் பாற்கடலிலிருந்து தோன்றினமையால் **ஸ்ரீஸஹோதரன** எனப்படுவான். பதினோராவது சந்திர கலை **ஸ்ரீகலையாகும். ஸ்ரீராகம்** மங்கள கரமான ஒரு பண். ஸங்கீத தாமோ தரத்தில் அதன் தியான ச்லோகம் வரு கிறது. எந்த வேளையிலும் பாட உகந்தது. முத்துஸ்வாமி தீக்ஷிதரின் **ஸ்ரீ வரலக்ஷ்மி நமஸ்துப்யம்** இந்த ராகத்தில்தான் வரு கிறது: **லக்ஷ்மிதாளம்** என்ற ஒரு தாள வகையும் உண்டு. **ஸ்ரீ** அல்லது **ஸ்ரீமான், ஸ்ரீமதி, ஸ்ரீலஸ்ரீ** என்ற மங்களச் சொல்லை மதிப்புக்குரியவர் பெயரின் முன்னால் சேர்ப்பது நம் மரபாகும். **ஸ்ரீவத்ஸம்** என்ற சொல்லுக்குத் 'திருமறு மார்பு' என்பது பொருள். மார்பில் வெளிர் ரோமத்தின் சுழல் நல்ல லக்ஷணம் என்ப தால் அதற்கும் இந்தப் பெயர் உண்டு.

12. திருமகளின் கோயில்கள்

லக்ஷ்மிக்குத் தனிக்கோயில்கள் உள் ளன. திருப்பதிக்கு அருகில் திருச்சா னூரில் அலர்மேல் மங்கைத் தாயாரின் சந்நிதி இருக்கிறது. கொல்ஹாபூர் (கரவீரபுரம்) மகாலக்ஷ்மி கோயில் பிர சித்தமானது. மைசூரில் தொட்டகட்ட நவள்ளியிலுள்ள லக்ஷ்மி ஆலயம் குறிப் பிடற்பாலது. பம்பாயில் மகாலக்ஷ்மிக்கு ஒரு கோயில் உண்டு.

ஸ்ரீ ஸிரஜம் என்பது பறவைகள் நீர் அருந்த வைக்கும் தொட்டி.

முத்திரையில் திருமகள் : அரசர்களின் செப்புச் சாஸன முத்திரைகளிலும், நாண யங்களிலும் திருமகளின் உருவம் பொறிக் கப்பெற்று விளங்கின. கனிஷ்கரின் முத்திரைகளில் ஒரு புறம் சிவனும், மறு புறம் சிம்மாதனத்தில் அமர்ந்த லக்ஷ்மி யின் உருவமும் காணப்படும். சமுத்திர குப்தனின் முத்திரையிலும் திருமகள் அரியணையில் வீற்றிருப்பது போல் பொறித்துள்ளது.

கல்வெட்டுகளில்: ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்களச் சொல்லுடனேயே தொடங்கு கிறது. அதே போல் தமிழ் வேந்தர் களின் **மெய்க்கீர்த்திகள்** திருமகளைக் குறிப்பிடுகின்றன.

திருமகளின் பரியாயப் பெயர்கள்: அமரகோசத்தில் வருவன: லக்ஷ்மி,பத்மா லயா, பத்மா, கமலா, ஸ்ரீ: ஹரிப்ரியா, இந்திரா, லோகமாதா, மா, க்ஷீரோதத நயா, ரமா, பார்கவீ, லோகஜனனீ, க்ஷீரஸாகரகன்யகா.

சூடாமணி நிகண்டுவில் காணும் தமிழ்ப் பெயர்களாவன :

'கடற்பிறந்த கோதை, மா, அரிப் பிரியை, செய்யாள், ஆக்கம், பொன், சீதேவி, அலர்மகள், பொருளின் செல்வி, தாக்கணங்கு, இலயாள், பூமின், இலக்குமி, சலதை, இந்திரை.

தீபலக்ஷ்மி : விளக்கே திருவின் உரு வாகும். விளக்கு ஏற்றாமல் எந்தப் பூசனை யும், நற்காரியமும் நாம் செய்வதில்லை. தீபம் இருளைக் கடிந்து ஒளியைப் பரப்பு கிறது. மங்களகரமான இந்த விளக்குப் பாவை (தீபநாச்சியார்) பல விசித்திர அமைப்புக்களைக் கொண்டு விளங்குவதை இல்லங்களிலும், கோயில்களிலும் காண் கின்றோம்.

இன்னும் எவ்வளவோ கூறலாம், திரு மகளைப் பற்றி. நம் மீது அவளுடைய கடைக்கண் நிலைப்பதாக.

ஸரஸிஜ நயனே ஸரோஜஹஸ்தே
தவலதராம்சுக கந்தமால்யசோபே
பகவதி ஹரிவல்லபே மநோக்ஞே
த்ரிபுவனபூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||



மெய் பொய்யானால்

சியாமா

விடிந்தால் தீபாவளி. கழுத்தில் மப்ளரைச் சுற்றிக் கொண்டு எழும்பூர் ரயில்வே பிளாட்பாரத்தில் செங்கோட்டைபாசஞ்சரின் வருகைக்காக மேலும் கீழுமாக நடந்துகொண்டிருந்த 'க்ரு இன்ஸ்பெக்டர்' கேசவனை இந்த உணர்வு சொல்லொண்ணா வேதனையில் ஆழ்த்தியது. பாழாய்ப் போன ரயில் நாளும் கிழமையுமாக இப்படித் தாமதித்தா வர வேண்டும்? அதுவும் ஒன்று, இரண்டா - ஆறு மணி நேரம்!

கிட்டத்தட்ட நடுநிசியை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலும் பிளாட்பாரத்தில் அங்கும் இங்குமாகச் சிறு கும்பல்களாக ஒரு முப்பது நாற்பது பேர்கள் இருந்தனர். "தலை தீபாவளிக்கு மாப்பிள்ளைகளை வரவேற்க வந்தவர்களாக இருக்க வேண்டும்" என்று கேசவன் எண்ணினான். இல்லாவிட்டால் அந்தக் குளிரில் ஸ்டேஷனுக்கு வந்து அவர்கள் ஏன் அவதிப்படுகிறார்கள்? கேசவனுக்கோ வேறு வழியில்லை. அவன் அவதிப்பட்டுத்தான் ஆக வேண்டும்; அது அவன் பிழைப்பு மட்டுமில்லை, பிழைப்பில் அவனுக்குள்ள கொள்கை.

ஆம், கொள்கைதான். எட்டுமணிக்கோ அல்லது ஒன்பது மணிக்கோ அவன் அன்று வீடு போயிருந்தால் ஒருவரும் அவனை ஏனென்று கேட்டுவிடப் போவதில்லை. வீட்டில் வேறு பிற்பகல் 'டியூட்டி'க்குக் கிளம்பும் முன் சீக்கிரம் வீடு திரும்பி விடும்படி குழந்தைகளும் மனைவியும் அவனை எச்சரித்திருந்தார்கள். முக்கியமாகக் குழந்தைகளுக்கு அப்பாவுடன் கடைக்குப் போய்க் கை நிறையப் பட்டாசும், வாணங்களும் வாங்கிவர வேண்டுமென்று ஆசை. நடுநிசியில் வீடு திரும்பும் வழியில் குழந்தைகளின் ஆசையை இன்னும் நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆனால் அப்பாவுடன் தாங்களும் போக முடியவில்லையே என்ற குறை குழந்தைகளுக்கு இருக்கத்தான் இருக்கும். அதற்கு அவன் தான் என்ன செய்வான்? பிழைப்பு, கடமை, கொள்கை போன்றவைகளில் நம்பிக்கையுள்ள ஓர் அதிசயப் பிறவி தான் அவன்!

பிளாட்பாரத்திலுள்ள பெரிய கடிகாரத்தில் பதினொன்று, பதின்மூன்று ஆகியிருந்தது. அப்போது ரயில்வருவதை அறிவிக்கும் மணி அடிக்கப்பட்டது. கேசவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் வெளிச் செல்லும் வழிக்குச் சற்றுத் தொலைவில் சென்று நின்று கொண்டான். மேலே உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்த பூதாகாரமான விளக்குகளைச் சுற்றி ஒரே பனிப் படலம். அந்தப் பனிப்படலத்தின் ஊடே ஆயிரக்கணக்கான விட்டில்பூச்சிகள் விளக்கின் ஜோதிப் பிழம்பைத் தாக்கிக் கொண்டிருந்தன. கீழே பூமியிலோ ரயில் வந்து நின்று அதிலிருந்து பெருக்கெடுத்த ஜனத்திரள் வெளிச் செல்லும் வழியை முற்றுகையிட்டிருந்தது. கழுத்தில் மப்ளரை இழுத்துக் கட்டிக்கொண்டு கேசவனும் உஷாரானான்.

அன்று ரயிலில் ஆறு மணி நேரம் தாமதித்து வந்து இறங்கியவர்கள், ஒருவரை ஒருவர் முண்டிக்கொண்டு வெளிச்செல்ல முயன்றதில் விந்தை யொன்றுமில்லை.

"அப்பாடா! தொல்லை ஒழிந்தது" என்று ஆச்வாச மூச்சு விட்டுக் கொண்டு கேசவனும் வீடு கிளம்பத் தயாரானபோது, அந்தப் பட்டிக்காட்டுப் பேர்வழி அவன் கண்களில் பட்டார். அவருக்கு வயது ஐம்பதைத் தாண்டியிருக்கும். கையில் ஒரே ஒரு துணி மூட்டை. மற்றவர்களைப்போல் வெளிச்செல்ல முயலாமல் பிளாட்பாரத்திலிருந்த ஒரு பெஞ்சின் அருகில் நின்று கொண்டு கலக்கத்துடன் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டிருந்தார். முகத்தில் இனந் தெரியாத ஒரு வேதனை; கலவரம், அவமானம், பயம் போன்ற உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. கேசவன் கண்களில் அவை ஒன்றும் படவில்லை. அவர் வசம் டிக்கெட்டில்லை என்பதை மட்டும் பழக்கத்தில் தெரிந்துகொண்ட அவன் பதினாறு அடிப் பாய்ச்சலில் அவரை நெருங்கினான். அந்தப் பசுவும் கூனிக் கூசிக் குறுகி, வேங்கையின் பார்வையிலிருந்து தப்ப முயன்று கொண்டிருந்தது.

"டிக்கெட்டை எடுங்கள்" என்று கூறினான் கேசவன்.

ஏதோ இடிஇடித்ததுபோல் கிழவர் நடுநடுங்கினார்.

"கேட்டது காதில் விழவில்லை?" என்று குரலை உயர்த்தினான் கேசவன்.

ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்த கிழவர், அவன் கண்கள் தம் பேரில் படத் தலையைக் குனிந்து கொண்டார். ஏதோ சொல்ல முயன்றார்; வார்த்தைகள் வெளி வந்தால்தானே? நேரத்தில் வீட்டுக்குப் போக முடியவில்லையே என்று ஏற்கெனவே வேதனைப்பட்டுக் கொண்டிருந்த கேசவனைக் கிழவரின் மௌனம் நிலைகுலையச் செய்தது. அவரை நெருங்கி அவர் தோள் மேல் கையை வைத்துக் குலுக்கி, "என்ன ஐயா! செவிடா,

ஊமையா? என் பேச்சுக் காதில் விழவில்லே?'' என்று கேட்டான் கடுமையாக.

அப்போதுதான் நிமிர்ந்து அவனைப் பார்த்தார் கிழவர். அந்தப் பார்வைக்குச் சக்தி யிருந்தால் அது கேசவனைப் பஸ்மமாக்கி யிருக்கும்.

"ரயிலில் பர்ஸ் பறி போய்விட்டது!'' என்றார் வெட்கித் திக்கிக் கொண்டே.

"டிக்கெட்டும் அதிலிருந்ததாக்கும்.''

கிழவருக்குப் பதில் சொல்ல என்ன இருந்தது...

"அப்போ டிக்கெட்டுமில்லே, அபராதம் செலுத்தப் பணமுமில்லே. எங்கிருந்து ஐயா வருகிறீர்?''

"நெம்பரத்திலிருந்து.''

"போறது, செங்கோட்டையிலிருந்தே வரவில்லேயே. பத்து ரூபாய்க்கு மேல் அபராதம் ஆகுமே. அதை எப்படிச் செலுத்துவதாக உத்தேசம்?'' என்று கேட்டான் கேசவன்.

கிழவர் வாயடைத்து நின்றார். அந்தச் சமயம் அவர் கையிலிருந்த துணி மூட்டை கேசவன் கண்களில் பட, "அந்த மூட்டையில் என்ன இருக்கு?'' என்றான்.

"மகனுக்கும், மருமகனுக்கும் தீவளிப் புடைவையும், வேட்டியும் வச்சிருக்கேன். பேரப் புள்ளேங்களுக்குச் சோமனும், பாவாடையும் எடுத்தாந்திருக்கேன்'' என்றார் கிழவர்.

"மருமகப்பிள்ளை ஸ்டேஷனுக்கு வரவில்லேயா?'' என்றான் கேசவன்.

"சொல்லாமல் கொள்ளாமல் வந்து அவங்களைச் சந்தோஷப்படுத்தனும்னு வந்தேன்'' என்றார் கிழவர்.

"கடைசியிலே அந்தச் சந்தோஷம் எனக்குக் கிடைச்சிருக்கு. ஆமாம், அபராதத்தை எப்படிச் செலுத்தறதா உத்தேசம்?'' என்று வினவினன்.

"விடிஞ்சதும் முதல் காரியமா உங்களைக் கண்டு பணத்தைக் கொடுத்துட்டுப் போறேன்.''

"போகாட்டி?''

"என்னைப் பாத்தா அப்படித் தோணுறதா?'' என்றார் அழாக்குறையாக.

"என் தொழில் டிக்கெட்டில்லாமே வரவங்க கிட்டே அபராதம் வசூலிக்கிறதே தவிர, அவங்க மூஞ்சி கிறியே குத்து ஜோஸ்யம் பார்க்க எனக்குத் தெரியவும் தெரியாது; அதிகாரமும் கிடையாது. அபராதத்தைச் செலுத்த முடிஞ்சால் செலுத்திட்டுக் குஷாலாக வெளியே போங்க. இல்லே, கையிலிருக்கிற மூட்டையையாவது ஸ்டேஷனிலே வைச்சிட்டுப் போங்க. காலமே அபராதத்தைக் கொடுத்திட்டு அதை எடுத்துக் கொண்டு போய் விடுங்க.''

கிழவர் மூட்டையை அணைத்து வைத்துக் கொண்டார்.

"இதில்லாமே வீட்டுக்குப் போகிறதை விட நான் இங்கேயே தங்கிடலாம்.''

"செய்யுங்க, தடை சொல்ல நான் யார்?'' என்ற கேசவன், சுற்றுமுற்றும் பார்த்தான். ரயில்வே போலீஸ்காரரையோ, போர்ட்டரையோ காணும். மணியோ பன்னிரண்டைத் தாண்டியிருந்தது. கிழவரை உடன் அழைத்துச் சென்று, பிரயாணிகள் தங்கும் அறையில் இருக்கச் சொல்லி, டியூட்டியிலிருந்த டிக்கெட் பரிசோதகரிடம் விஷயத்தை விளக்கி, அவரை நழுவவிடாமல் பார்த்துக்கொள்ளும்படி எச்சரித்து விட்டு அவன் வீடு கிளம்பினான். வாசல் வரை சென்றவன், திரும்பி வந்து கிழவரிடம், "இந்த மூட்டையை இங்கே வைத்து விட்டு நீங்க வீடு சென்று இப்போதே பணத்துடன் திரும்பி வந்தால்கூட, இங்குள்ள அதிகாரி அபராதத்தைப் பெற்றுக் கொண்டு உங்களை மூட்டையுடன் வீட்டுக்கு அனுப்பி விடுவார்'' என்று கூறினன்.

அதற்கு உடன்படக் கிழவர் பிடிவாதமாக மறுத்து விட்டார். நடுநிசியில் மருமகனை எழுப்பிப் பணம் கேட்பது அவமானமென்றும், தம்மை நம்பி வெளியே விட்டால் காலையில் முதல் காரியமாக அபராதத்தைச் செலுத்துவதாகவும், இல்லாவிட்டால் மூட்டையுடன் அங்



கேயே தங்கப் போவதாகவும் சொல்லி விட்டார். வேறு வழியின்றிக் கடமையைச் செய்துவிட்டோம் என்ற திருப்தியுடன் கேசவன் தீபாவளி நினைவுகளில் மூழ்கியவாறு வீட்டை நோக்கி நடந்தான்.

* * *

படுக்கும் முன் தாமதித்து வந்ததற்கு அவன் சொன்ன காரணம் அவன் மனைவி வடிவுக்குக் கோபத்தைத்தான் மூட்டியது.

"என்ன காரியம் செஞ்சீங்க? நேசமாகவே அந்தக் கிழவனரின் பர்சும், டிக்கெட்டும் களவு போயிருந்தால்?...'' என்றாள் பதற்றத்துடன்.

"நானென்ன செய்ய? எத்தனையோ அவருக்குச் சொல்லிப் பார்த்தேன். மனுஷன் மசிஞ்சால்தானே? மூட்டையை வைச்சிட்டு வீட்டுக்குப் போய்ப் பணத்தை வாங்கிவரச் சொன்னேன். அதுக்கும் அவர் உடன்படல்லே'' என்றான் கேசவன்.

"தீபாவளிச் சீரை ஸ்டேஷனில் விட்டு விட்டு அவர் மட்டும் மருமகன் வீடு போனால் நல்லா இருக்குமா?'' என்று குறுக்கிட்டாள் வடிவு.

"விடிஞ்சாத்தானே தீபாவளி? மனசிருந்தால் அதுக்குள்ளாற நானுவாட்டி வீடு போய்த் திரும்பி யிருக்கலாமே!''

"திரும்பியிருக்கலாம். ஆனால், அவர் சொன்னபடியே மருமகனை நடுநிசியிலே எழுப்பிப் பர்சைக் கோட்டை விட்டேன்னு சொல்ல அவருக்கு வெட்கமாக இருந்திருக்கலாமில்லேயா?''

"விடிஞ்சால் மட்டும் அந்த வெட்கம் பறந்தோடி விடுமா?'' என்றான் கேசவன்.

"விடிஞ்சால் ஒருவேளை மருமகனுக்குச் சொல்லாமல், மகள்கிட்டே ரகசியமாகப் பணம் வாங்கியாந்திருப்பார். அல்லது அக்கம் பக்கத்திலாவது கடன் வாங்கி அபராதத்தைச் செலுத்தி யிருப்பார். ஆனாலும் நீங்கள் பண்ணினது கன்றாவி, அக்கிரமம்'' என்றாள் வடிவு அளவற்ற ஆத்திரத்துடன்.

"நான் என் தொழிலோட கடமையைச் செஞ்சேன்'' என்றான் கேசவன்.

"உங்கள் தொழில் டிக்கட்டில்லாமே வரவங்களை நிப்பாட்டி வைக்க உங்களுக்கு உரிமை தருதா?''

"நானா நிப்பாட்டினேன்? மூட்டையை வைச்சுவிட்டுப் போகும்படி எத்தனையோ சொன்னேனே. மனுஷன் அசைஞ்சு கொடுத்தாத்தானே?'' என்றான் கேசவன்.

"அப்போ ஒரு போர்ட்டர், அல்லது ரயில்வே போலீஸைத் துணை சேர்த்துப் பணம் வாங்கி வரும்படி அனுப்பியிருக்கணும்'' என்றாள் வடிவு விடாமல்.

"ஒருவரும் சமயத்துக்கு அகப்படவில்லே. அப்படியே அகப்பட்டிருந்தாக் கூட அந்தக் கிழவனர் அவங்களோட போகச் சம்மதிச்சிருக்க மாட்டார். என்ன, விஷயம் அப்போதும் அவர் மருமகனுக்குத் தெரிஞ்சு விடுமல்லவா?''

ஆனால் அவன் சொன்னவை ஒன்றுமே வடிவுக்குத் திருப்தியளிக்கவில்லை. வழக்கம்போல் அநாவசியக் கொடுமையுடன் அந்தக் கிழவரிடம் அவன் நடந்துவிட்டதாகத்தான் அவளுக்குத் தோன்றியது. அதை நினைக்க நினைக்க அவள் உள்ளம் குமுறியது. அவனிடம் நேரிடையாகச் சொல்லவும் சொல்லி விட்டாள்.


"உங்களைப் பத்தி ஊரிலே என்ன சொல்லிக்கிறாங்க தெரியுமா? கல்நெஞ்சுக்காரர், வீண் கண்டிப்புக்காரர், மண்டைக் கர்வம் பிடித்தவர் என்றெல்லாம் அவங்க பேசிக்கிறாங்க.''

"பேசிக்கட்டுமே. தொழிலிலே நேர்மையா நடந்துக்கற எவனுக்கும் இம்மாதிரிப் பட்டங்கள் கிடைக்கத்தான் செய்யும்'' என்றான் கேசவன் ஏளனமாக.

"நல்ல நேர்மை; வெறும் மண்ணாங்கட்டி. உங்களுக்குத் தெரிஞ்ச நேர்மைக்கும், கொள்கைகளுக்கும் அப்பால் ஒரு நியாயம், சத்தியம் இருக்கலாங்கிறது ஏன் உங்களுக்குத் தெரியறதில்லே?''

"மண்ணாங்கட்டி'' என்று அவள் பாஷையிலேயே பதில் சொன்ன கேசவன் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

"ஏன் சொல்ல மாட்டீங்க? ஒங்க அசட்டுக் கொள்கைகளுக்காக ஒரு நல்ல



மனுஷருக்குத் தீபாவளி இல்லாமல் போனதுதான் மிச்சம்'' என்று சூடாகப் பதில் அளித்த வடிவு தானும் எதிர்ப்புற மாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

வெகு சீக்கிரமே அவள் தூங்கிவிட்டாள். ஆனால் அவனாலோ தூங்க முடிய வில்லை. அறையின் ஒரு மூலையில் 'முணுக் முணுக்' என்று எரிந்து கொண்டிருந்த இரவு விளக்குப்போல் அவன் மனச்சாட்சியும் அவனைச் சுருக்சுருக்கென்று தைத்துக் கொண்டிருந்தது. தீபாவளி இரவாதலால் சுற்றுவட்டாரத்தில் சத்தம் ஓய்ந்த பாடில்லை. பட்டாசுகளின் ஒலிக்குப் போட்டியாக வாணங்கள் சரசரவென்ற சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தன. அவர்கள் படுத்திருந்த அறை தெருவின் ஓரமாக இருந்தது. வெளியே கொளுத்தப்பட்ட வாணங்கள் அறைக்குள்ளும் தங்கள் ஒளியை அள்ளி வீசி மறைந்து கொண் டிருந்தன. அப்போது திடீரென்று விழித்துக் கொண்ட அவன் கடைக்குட்டி சோமு ''எனக்கெங்கம்மா பட்டாசு!'' என்று கேட்டான் கண்களைக் கசக்கிக்கொண்டே...

சிறுவனின் தூக்கம் முற்றும் கலைந்த பாடில்லை. அவனை இறுக அணைத்துக் கொண்ட கேசவன், ''தூங்கடா, குழந்தை! இன்னும் பொழுது விடியல்லே!'' என்றான். சோமு உடனே தூங்கியும் விட்டான்.

கேசவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். அவனுக்குத் தூக்கம் வர வில்லை, வருமென்றும் தோன்றவில்லை. அவன் தூங்குமுன், தனக்கும் வடிவுக்கும் நடைபெற்ற சம்பாஷணையை வரி சைக்கிரமமாக நினைவுபடுத்திக் கொள்ள முயன்றான். எத்தனை சுலுவாகத் தன் மேல் குற்றம் சாட்டி விட்டாள் வடிவு! அவனுக்காகவும், குழந்தைக ளுக்காகவும் பொழுது விடிந்தது முதல் இரவு தூங்கும்வரை அவன் எத்தனை அல்லல்பட வேண்டியிருக்கிறது? வேலை



செய்யும் இடத்தில் தினம் விதம் விதமான பிரச்னைகள்; புதிய புதிய தலை வலிகள்; யாருக்காக அவன் அவ்வளவையும் சகித்துக்கொண்டும் சமாளித்துக் கொண்டும் இருந்தான்?

படபடப்பில் என்னென்னவோ பேசிவிட்டாளே! அவன் கல்நெஞ்சுக்காரனும், வீண் கண்டிப்புக்காரனும், மண்டைக் கர்வம் பிடித்தவனும்! அவனை முற்றிலும் வெறுக்கும் விரோதிகள்கூட அவன் நேர்மைக்கும் நாணயத்துக்கும் சாட்சி சொல்லத் தயங்க மாட்டார்களே! அப்படியிருக்க வடிவா அவனை அப்படிக் குற்றம் சாட்ட வேண்டும்!

அன்றுகூட அந்தக் கிழவரை அவர் மகள் வீட்டுக்கு அனுப்ப அவன் எத்தனை முயற்சிகள் செய்தான். ஆனால் அந்த மனிதர் ஒரு வழிக்கு வந்தால்தானே? மூட்டையையும் விட்டுப் போக மாட்டாராம்; அபராதமும் செலுத்த முடியாதாம். அவன்தான் என்ன செய்வான்? சர்க்கார் பணத்தை வஜா செய்ய அவனுக்கு என்ன அதிகாரம்? அதுவா நேர்மை? அதுவா நியாயம்? அதுவா அவன் கடமை?......

ஒரு நல்ல மனிதருக்குத் தன்னால் தீபாவளி இல்லாமல் போய்விட்டது என்றாளே.

அது எப்படி?

ஒருவேளை அப்படியும் இருக்கலாமோ? அளவுக்கு மீறித் தான் கடுமையாக இருந்து விட்டோமோ? ஆனால் மனச்சாட்சிக்கு, தனக்கு உணவளிக்கும் ஸ்தாபனத்துக்குத் துரோகம் செய்யாமல் நடப்பதென்றால் வேறு எப்படித்தான் நடந்திருக்க முடியும்?.... அவன் சிந்தித்துப் பார்த்தான். முடிவுக்கு வருவது அப்படியொன்றும் அவனுக்குச் சுலபமாக இல்லை......

வீட்டில் தன் மனைவியும், குழந்தைகளும் போல,—ஒருவேளை கிழவரின் மகளும் அன்று அவரை எதிர்பார்த்திருப்பாள். அவருடைய பேரக்குழந்தைகள் தாத்தாவின் வருகைக்காகவும் சலுகைக்காகவும் வாசலில் காத்து நின்றிருப்பார்கள். தன்னால் அவர்களுடைய அந்த ஆசை நிராசை ஆகியிருக்குமோ?

''உங்களுக்குத் தெரிந்த நேர்மைக்கும் கொள்கைகளுக்கும் அப்பால் ஒரு நியாயம், சத்தியம் இருப்பது ஏன் உங்களுக்குத் தெரியவில்லை?'' என்றாளே வடிவு.



எதை அவன் அப்படிக் குறிப்பிட்டான்?

வீட்டைச் சுற்றி வெடிகளின் சத்தம் அதிகரித்துப் பொழுது புலர்வதற்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தது. எழுந்து சன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். தெருவில் பட்டாசும் வாணங்களும் கொளுத்திக் கொண்டிருந்த சில சிறுவர்களைத் தவிர, ஜனநடமாட்டம் இன்னமும் ஆரம்பிக்கவில்லை. அறையில் ஒரு மூலையிலிருந்த இரவு விளக்கின் அருகில் சென்று கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி மூன்று ஆகியிருந்தது. விடிவு எழ இன்னும் ஒரு மணி நேரமேனும் ஆகும். ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன் போல் உடுப்பை அவசரம் அவசரமாக மாட்டிக் கொண்டவன் வாயிற் கதவை இழுத்துத் தாழிட்டுக்கொண்டு வெளிச் சென்றான்.

ஸ்டேஷனில் பிரயாணிகளுக்கான அறையில் ஒரு மூலையில் குளிரில் முடங்கிக் கொண்டிருந்த கிழவர் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். விளக்கின் வெளிச்சத்தில் அவர் கண்கள் கூசின. கேசவனை அவர் அடையாளம் கண்டு கொள்ளவே சில நிமிஷங்கள் ஆயின. இன்னும் என்ன அவமானம் பாக்கியிருக்கிறதோ என்று எண்ணிக் கொண்டே அவனுடன் கிளம்பத் தயாரானார். ஸ்டேஷனுக்கு வெளியே வந்த கேசவன் அவரை ஒரு ஆட்டோரிக்‌ஷாவில் மூட்டையுடன் உட்காரச் சொல்லி, அதற்கான சில்லறையையும் டிரைவரிடம் கொடுத்தபோது கிழவருக்கு மூர்ச்சையே போட்டு விட்டது.

ஆட்டோரிக்‌ஷாவின் எஞ்சின் படபடக்க ஆரம்பித்தபோது கைகளைக் கூப்பிய கிழவர், "காலமே முதல் காரியமாக உங்களைச் சந்தித்து அபராதத்தைச் செலுத்தி விடுகிறேன். கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்" என்றார். அந்தக் கிழவரின் கண்கள் நிறைந்திருந்தன.

"பாதகமில்லை, சௌகரியம்போல் கொடுங்கள்" என்றான் கேசவன், அவருக்குப் பதில் வணக்கம் தெரிவித்துக் கொண்டே.

ஆட்டோரிக்‌ஷாவின் சிவப்பு விளக்கு இருளில் ஓடிப் புதைந்து மறைந்தது. கடைசி நிமிஷத்தில் கிழவரின் கண்களில் துளித்திருந்த கண்ணீர் கேசவனின் நெஞ்சில் ஓர் எதிரொலியைக் கிளப்பி விருந்தது. நேரே வீட்டுக்குப் போய் வடிவிடம் தான் செய்த காரியத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். அவள்தான் என்னைப் பற்றி எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறாள்?

அப்பொழுது யாரோ தோளின் பேரில் கை வைக்க, கேசவன் திடுக்கிட்டுத் திரும்பினான். ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் பின்புறம் நின்று கொண்டிருந்தான்.

"மன்னிக்க வேண்டும். அபராதம் செலுத்தாததற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் ஆளைப் பணம் வாங்கிக் கொண்டு, நீங்கள் வீட்டுக்கு அனுப்பியதை நான் என் கண்களால் பார்த்தேன். இம்மாதிரி அடிக்கடி நடப்பதாகப் பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளபடியால், என்னை இங்கு 'டியூட்டி'யில் போட்டிருக்கிறார்கள்" என்று அவன் அமைதியாகச் சொல்லிக் கொண்டிருந்தான்.

கேசவன் வாய்விட்டுச் சிரித்தான். "என்னைப் பார்த்தால் அப்படிப் பட்ட ஆள்மாதிரி தோணுதா?"

"என் தொழில் கண்ணால் கண்டதை நம்புவதே தவிர ஒருத்தன் மூஞ்சியிலிருந்து எனக்கு ஜோஸ்யம் பார்க்கத் தெரியவும் தெரியாது; அதிகாரமும் கிடையாது" என்றான் கான்ஸ்டேபிள் சாவதானமாக.

இதே வார்த்தைகளை எப்பொழுது, எங்கே கேட்டோம் என்று கேசவன் யோசிக்கலானான். போலீஸ்காரர் போகலாமா என்று குரல் எழுப்பியதும் இருவரும் ஸ்டேஷனை நோக்கிநடந்துகொண்டிருந்தார்கள்.

"பர்ஸைத் திறந்து அந்த ஆட்டோ ரிக்‌ஷாக்காரருக்கு நீங்க பணம் கொடுக்கவில்லையா?" என்று கேட்டான் போலீஸ்காரன், திடீரென்று கேசவனிடம்.

"கொடுக்கத்தானே கொடுத்தேன், வாங்கவில்லையே?" என்றான் கேசவன் நிர்மலமாக.

"எதுக்காகக் கொடுத்தீங்க? அந்தக் கிழவன் உங்க அப்பனா, மாமனா, இல்லே பாட்டனா?" என்றான் போலீஸ்காரன்.

சிந்தித்துப் பார்த்தான் கேசவன். உண்மைகூடச் சுலபமான விஷயமாக இல்லாமல் போய் விடலாம் என்று அப்போதுதான் அவனுக்குப் புலனாயிற்று. ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரிடம், "அந்த நல்ல மனிதர் தம் மகனுடனும், பேரக் குழந்தைகளுடனும் தீபாவளியைக் கொண்டாட என் கையிலிருந்து அபராதம் செலுத்தி அவரை விடுதலை செய்தேன்" என்று சொன்னால் அதை அவர்கள் நம்புவார்கள் என்பதுஎன்ன நிச்சயம் என்று திகைத்தான். ஒருவேளை தன் மெய் பொய்யாகி விட்டால்?......

"நீங்கள் அறிந்த நேர்மைக்கும் கொள்கைகளுக்கும் அப்பால் ஒரு சத்தியம், நியாயம் இவை இயங்கிக் கொண்டிருக்கின்றன" என்று வடிவு குறிப்பிட்டது இதைத்தானோ?

பொழுது நன்றாகப் புலர்ந்து, தீபாவளியும் வந்திருந்தது. புத்தாடைகளின் சலசலப்பும் பூவாணங்களின் மினுமினுப்புமாகத் தெருவெல்லாம் கோலாகலமாகக் கொழித்துக் கொண்டிருந்தது. அவன் மனைவி வடிவும் குழந்தைகளும் அவன் மனத்திரையில் நிழலாடினார்கள். ஒரு நல்ல மனிதருக்குப் பண்டிகையைக் கொண்டாட வாய்ப்பளித்த மகிழ்ச்சியில் தனக்குப் பண்டிகை இல்லாமல் போன வருத்தத்தைக் கூட மறந்து ஸ்டேஷனை நோக்கி நடந்து கொண்டிருந்தான் கேசவன்.....

லீவு லெட்டர்!



மாப்பிள்ளை: நான் போயிட்டு வரேன்.

மாமனார்—ஒரு ஹெட்மாஸ்டர்: (எங்கோ கவனமாக) அதெல்லாம் அப்படிச் சொல்லிவிட்டுப் போனால் ஒத்துக்கொள்ள மாட்டேன்; ஒரு லீவு லெட்டர் எழுதிக் கொடுத்துட்டுப் போ.

தண்டனை!



தகப்பனார்: இனிமேல் கொம்பு வாணத்தை வீட்டில் கொளுத்துவதில்லை என்று நூறு தடவை சிலேட்டில் எழுது....டம்!



அதிர்வு

தி.ஜானகிராமன்

பள்ளிகொண்ட ரங்கநாதனை யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை. கோவிலுக்கு வந்த அத்தனை பேரும் தூணோரமாக அமர்ந்திருந்த மனிதனை மொய்த்துக் கொண்டிருந்தார்கள். நெடுஞ்சாண் கிடையாக அவன்முன் விழுந்து எழுந்தார்கள். எழுந்து அங்கேயே நின்றார்கள்.

காலம் காலமாக நீட்டின கிடையாகக் கிடக்கும் ரங்கநாதனா எழுந்து பேசப் போகிறான்? நாளைக்கும் பார்த்துக்கொண்டால் போகிறது. இந்த மனித அதிசயத்தை அப்படிச் சொல்வதற்கில்லை. திடீரென்று மறைந்தாலும் மறைந்து விடும். இன்று ஓர் இடம், நாளை ஓர் இடமாகத் திரிகிற அதிசயம் இது; போனால் வராது என்றுதான் அலை அலையாக வந்த ஜனக்கூட்டம் நினைத்திருக்க வேண்டும்.

ஜனக் கூட்டம் நினைத்ததோ, என்னவோ. அது நினைத்ததாக நினைத்தாள் செங்கமலம். ஏதாவது ஒரு கணமாவது கடவுளையும் மிஞ்சி நிற்கிற இந்த மனிதப் புகழைக் கண்டு அவளுக்கு இலேசாகச் சிரிப்பு வந்தது. பொழுதுபோக்கத் தெரியாத மனித உள்ளம் சிறிதுநேரம் தன்னையும் மறந்து சிறுபிள்ளைத்தனமான எக்களிப்பில், பாமர ஆட்டமும் பாட்டும் பாடி யாடிக் குதிக்கிறது போலிருந்தது அவளுக்கு.

உண்மையில் கோபம்தான் இந்தப் பரிகாசச் சிரிப்பாக அவள் மனத்தில் சிரித்தது. அவளுக்கும் ஆசை; இந்த அதிசயத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று. ஆனால் கூட்டம் நகருகிற வழியாக இல்லை. இரண்டு பேர்கள் கிளைத்தால் நாலு பேர்கள் அடைத்துக் கொண்டார்கள்.

விலகுமோ என்று கூட்டத்தின் வெளி வட்டத்தின் அருகே சற்று நின்றாள். அவளைத் திரும்பிப் பார்த்தவர்கள்கூட, ஏதோ கல்லை மண்ணைப் பார்ப்பதுபோல் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டார்கள். செங்கமலத்துக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது. அவளைப் பார்த்த எந்தக் கண் இரண்டாம் தடவை அவளைத் திரும்பிப் பார்க்காமல் இருந்தது?

ஒரு நாழிகை, இரண்டு நாழிகையாகி விட்டது. நிமிர்ந்து நிமிர்ந்து கால்விரல் கடுத்தது. ஆனால் கண் கும்பலின் தலைகளையும் வேர்வை முத்திட்ட முதுகுகளையும் கடந்து செல்ல முடியவில்லை.

"வாங்கம்மா, போவோம்" என்றாள் வேலைக்காரி.

"நீங்க போங்கம்மா. உங்களுக்கு என்னத்துக்கு இந்த வம்பெல்லாம்?" என்று ஓரமாக முண்டிக் கொண்டிருந்த ஒருத்தி சொன்னாள். அதில் அர்த்த புஷ்டியாக நிறைந்து வீசிய கேலியைக் கேட்டு ஒரு க்ஷணம் உடல் குன்றியது செங்கமலத்துக்கு.

வேலைக்காரிக்குக் கூட அது புரிந்துவிட்டது. "ஏன், அவ்வளவு புண்யாத்மாவா இருக்கிறவங்க வேறு ஒரு தூணோரமா உக்காந்து சித்து விளையாடறது. இங்கு வந்து அலைமோதுவானேன்?" என்று ஓங்கிக் கடா வெட்டுகிறதுபோல் மாற்றுக் கொடுத்தாள் அவள்.

இது சண்டையாக வளரக் வேண்டிய வார்த்தை. ஆனால் அவள் பதிலுக்குச் சொன்னதைத் திடீரென்று எழுந்த கண்டாமணிரவம் விழுங்கிவிட்டது. மண்டபத்தில் அடிக்கிற மணியோடு கர்ப்பக்கிருகத்துக் கை மணியும் ஒலித்தது. கூட்டமும் முன்னே நகர்ந்தது.

"சித்து எந்துக் கிட்டுது. தீபாராதனை பார்க்க வருது" என்றது ஒரு குரல். காலை மிதித்த அது முன்னேறுகிற கூட்டத்திலிருந்து வேகமாகப் பாய்ந்து ஒதுங்கித் தூணோரமாக நின்றுகொண்டாள் செங்கமலம். ஜனத்திரள் நகர்ந்து நகர்ந்து வந்தது. உற்றுப் பார்த்தாள் அவள். கூட்டத்துக்கு நடுவே ஒரு வெற்று வட்டம். அதில் நகர்ந்து கொண்டு வந்தது அந்த மனித உருவம்.

மெதுவாக நடந்துவந்தது அது. சாதாரண உருவம் தான். நடுத்தர உயரம் சாதாரணக் கை, கால்.

"இதுக்குத்தானா இந்தக் கை மிதி கால் மிதி எல்லாம்" என்று உள்ளுக்குள்ளே நகைத்தாள் செங்கமலம். ஆனால் அந்தக் கேள்வி மனதில் கேட்கும் எதிரொலியாக நாலைந்து தடவைகள் கேட்டுவிட்டு மடிந்து விட்டன.

மாநிறம்போல் இருந்த அந்த உடல் வெறும் மாநிற நிறமாக இல்லை. பளிச்சென்று உடனே கண்ணைப் பறிக்கவில்லை. ஆனால் பசும் பொன்னின் நிர்மலமான ஒளியுடன் அடக்கமாக, அழுத்தமாக ஒளிர்ந்தது. கண்ணை ஊடுருவி, நெஞ்சைக் கடந்து உள்ளே பாய்கிற எதிர்க்க முடியாத ஒளியாக ஒளிர்ந்தது. உடலில் ஒரு கட்டு. ஆனால் மனித உடலில் தோன்றுகிற சாதாரண இளமையின் கட்டாக இல்லை. அவ்வளவு இளைய வயதில்லை. இந்த உடம்புக்கு என்ற கூட்டத்தில் கேட்ட செய்திகெல்லாம் ஞாபகம் வந்தது அவளுக்கு. எழுபது, எண்பது, நூறு, நூற்றிருபது என்றெல்லாம் சித்தரின் வயதைப் பற்றி மனம் போனபடி கூட்டத்தில் நடந்த ஊகம் எல்லாம் அவள் காதில் மீண்டும் ஒலித்தது.

இருபது முப்பதாக இருந்தாலும், இந்த உடற் கட்டை மனித உடலில் காண முடியாது என்று தோன்றியது அவளுக்கு. பெண்மையின் மென்மையும் ஆண்மையின் வைரமும் மட்டுமில்லை. அவற்றையும் கடந்த ஒரு சக்தி. ஒரு பொலிவு. பொலிவு என்றால் போதுமா?

முகத்தைப் பார்த்தாள். பாமரக் கூட்டத்துக்கும் புத்தியுண்டு என்றுதான் பட்டது. அது முனைந்து போல் இந்த முகத்தின் வயதை ஒரு திட்டமாகச் சொல்ல முடியவில்லை. இருபது வயதா, முப்பதா, முந்நூறா? மூவாயிரம் கூடச் சொல்லலாம். மூன்று நாட்கள் மூன்று கணம் என்றும் சொல்லலாம். செங்கமலத்தின் அறிவு திணறியது. ஒன்றும் முடிவாகச் சொல்ல முடியாமல் தவிக்க அடிக்கும் இது என்ன, என்ன, என்ன என்று கேட்டுக் கொண்டே அவள் நின்றாள்.

வைரத்தைப்போலவும் முதிர்ந்த நெடுங் காலக் கிழவனைப் போலவும் நின்ற அந்த உருவத்தின் கதையெல்லாம் கேள்வி கேள்வியாக அவள் கண்முன் வந்தது. இவனா சித்தன்? எட்டு திக்கும் வென்று வந்த ராஜராஜ சோழன் இவன் காலடியிலா விழுந்தான்? அந்த ராஜராஜன் கட்டிய மாபெரும் பெருவுடையான் கோவில் இவன் சென்று கோவில் என்ற சொல்லுக்கு உரித்தாயிற்று? மந்திரத் திறம், தந்திரத் திறம் ஜன்ம ஜன்மமாகச் சித்திகொண்ட ஆசார சீலர்களுக்கெல்லாம் கைவராத அஷ்ட பந்தனம் இவன் கை பட்டா உறுதிப்பட்டது? ராஜோபசாரம் செய்து இவனையா அழைத்துப் போய் இனி. இனி மன்னன் நெஞ்சைக் கலக்கிய அஷ்டபந்த





எந்தை இருக்கிறார்கள்! பொதிகை மலையில் இருந்து கொண்டு 'நெல்லையப்பா' என்று மூன்று முறைகள் அழைத்தும் விடை வராததால், கோவிலையே சபித்துவிட்ட கோபியா இவன்? பிறகு நெல்லையப்பனே காட்சி தந்து சினந் தணித்தானே, அந்தக் கருவூராரு இவன்? கருவூராரா—இவரா கருவூ ரார்?''.... இவரா கருவூர்த் தேவன்?

தொலைவில் கேட்பதுபோல் கோவில் மணி கேட்டது. தொலைவில் மினுக்குவது போல் மினுக்குகிறது தீபாராதனை ஒளி. அந்த ஒளி கருவூராரின் உடலில் பட்டுத் தகதகவென்று மின்னுவதுதான் செங்கம லத்தின் கண்களுக்குத் தெரிந்தது. அவள் ரங்கநாதனையோ, அவனை ஏந்தின ஏழ டுக்கு ஒளியையோ பார்க்கவில்லை.

'' வலித்து வலி.''

'' அதோ படுத்திருக்கிறானே, அவனைக் கேளு...உனக்கு...?''

'' எனக்கு வீட்டில் நிம்மதி வேணும்.''

'' அதோ அவனையே கேளு...உனக்கு?''

'' குழந்தைக்கு வலிப்பு...உசிரை வைச் சுக்கிட்டே செத்துக்கிட்டிருக்கு.''

'' இதெல்லாம் கவனிக்கத்தான் அவன் இருக்கிறானே'' என்று தலையைப் பள்ளி கொண்டான் பக்கமாக அசைத்தான் கருவூரான்.

கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து விட்டது.

அந்த உடலையே, வயதில்லாத அந்த உடலையே ஆண்மையையும் பெண்மையை யும் சேர்த்து உண்டு கண்ணே அள்ளின

'' ம்! அப்படியா?'' என்று ஆச்சரியப் படுவதுபோல் கேட்டார் தேவர். '' அப் புறம்....?''

''...........'' அந்தப் புன்னகையால் சித்தை மயக்க முடியாது என்று தெரியும் அவளுக்கு. இருந்தாலும் பெண்மை பழக்கம் போகாமல் அதைப் பூத்து வைத்தது.

'' ஓகோ... நானே இரவு அங்கு வரலாமல்லவா?''

விடை சொல்ல முடியாமல் புல்லரித் தது அவளுக்கு. தலையை மட்டும் அவள் அசைத்தாள்.

'' சரி, போகலாம்!''



மனிதக் கூட் டம் மறுபடி யும் வளைத்துக் கொண்டது. சித்தனை என்னென்னவோ கேட் டது. நோயில்லாத உடல், நொடியில்லாத நடை, பசியில் லாத வயிறு, முடையில்லாத இடை.

'' அப்படியா? அப்படியா..?'' என்று இலேசாகச் சிரித்துக் கொண்டிருந்தான் கருவூரான்.

அந்தக் கட்டைப் பார்த்துக் கொண்டு நின்றாள் செங்கமலம். முகத்தாலேயே ''உனக்கென்னவோ?'' என்று வார்த்தையில்லாத கேள்வியைக் கேட்டான் அவன், அந்தப் பையன், இல்லை அந்தக் கிழவன். இல்லை—அந்தச் சித்தன்தான்!

தரையை இரு கைகளாலும் தொட்டு வகிடுபட வணங்கினாள் செங்கமலம். எழுந்து நின்று பார்த்தாள்.

நிமிர்ந்து பார்த்தார் தேவர்.

'' என்ன வேண்டும்?''

'' சித்தின் கால் பட வேணும் என் னுடைய குடிலில்.''

விடை வந்ததும், வேலைக்காரியுடன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தாள் அவள். தேவரின் உடல் பொலிவையும் கட்டை யும்உள்ளத்தில் பதித்துக்கொண்டு அந்தச் சுமை தாங்க முடியாமல் நடந்தாள்.

வீட்டுக்குப் போய்ச் சோறு தின்னும் போது கை இலையில் வைத்தபடியே இருந்தது.

அரைத்து அரைத்துத் தேய்ந்த சந்தனக் கட்டையின் பொலிவைப் போல் முன் நின்றது அவர் நிறம். முந்தானையால் துடைத்த முத்துப் போலிருந்தது. கட்டுச் கட்டு ஒளிரும் பசும் பொன்னாக மலர்ந் தது. இல்லை, இதெல்லாம் அந்தப்

பொலிவுக்கு உவமை இல்லை. இது மனிதர்களுக்குக் கிட்டாத காந்தி. மனித நிலையை உதைத்து மேலே சித்த நிலையில் ஏறிய ஆத்மாவின் சாயல் இது. அந்தச் சித்தன் நானே இரவு........

"ஏம்மா எழுந்திட்டீங்க... இரண்டு கைகூட நீங்க சாப்பிடலியே" என்றாள் சமையல்காரி.

"அட!" என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. ...நல... போதும் போ!" என்று கை கழுவப் போனாள்.

கண்ணாடிக்குள் நின்ற பிம்பம் அவள் அழகைக் கண்டு வியந்தது. அவளுடைய அழகைக் கண்டு மோகித்தது.

மீறும். அந்தப் பொலிவு இல்லை. ஆனால் அந்தப் பொலிவோடு ஒன்றும் கணம் நாளைக்கு வந்து விடும்.

நம்பிக்கையும் அவநம்பிக்கையும் அவளை இப்பொழுதும் அப்பொழுதும் தள்ளிக் கொண்டே யிருந்தன. இவர் எப்படி வருவேன் என்று இசைந்தார்? உண்மையாக அந்தச் சொல்லை நான் கேட்டேனா? இல்லை, ஆசை இப்படி ஒரு பொய் யொலியை எழுப்பி விட்டதா? அவர் யார்? நான் யார்? அந்தப் பொன்னொளி எங்கே? இந்த இறைச்சியின் பித்தனின் ஒளி எங்கே!

"ரங்கீ!" என்று வேலைக்காரியை அழைத்தாள் அவள்.

"ஏம்மா?"

"அவர் என்ன சொன்னார்?"

"சித்தா?"

"ம்!"

"நானே வரேன்னு சொன்னாரம்மா."

"அவர் சொன்னதை நீ கேட்டியோ?"

செங்கமலத்துக்கு வேலைக்காரி கேட்டதாகச் சொல்வதுகூட ஒரு பிரமையோ என்று தோன்றியது. ஆனால் அவர் வருகிறேன் என்ற நம்ப முடியாத செய்திதான் இப்படி அவளை ஆட்டி வைத்தது. இந்த ஊசலிலும் அந்தத் தேகப்பொலிவின் நினைவிலும் இரவின் இருள் வெகு வேகமாக ஓடி விட்டது. பொழுது புலர்ந்தது. உச்சிக்கு ஏறியது. சாய்ந்தும் விட்டது.

நிலை கொள்ளாமல் தடுமாறிக்கொண்டிருந்தாள் செங்கமலம். முன்னே செய்வதைப் பின்னே செய்வதும், செய்ததை அழிப்பதும், பூட்டின நகையை எடுப்பதும் மாற்றி வேறு பூணுவதுமாக உள்ளம் இடறி இடறி விழுந்து எழுந்து கொண்டிருந்தது.

"அம்மா!" என்று பரபரப்புடன் வந்தாள் வேலைக்காரி. தலையையும் கையையும் காட்டி வரக்கூடாத வரவை அவள் அறிவித்தாள்.

இடைகழியில் வந்து நின்றாள் செங்கமலம். ஆமாம், வந்தே விட்டார். அவர் தான்... அவர்தான். வாசல்படி ஏறுகிறவர் கருவூர்த் தேவர்தான். பேரரசன் ராஜராஜன் தலைதொட்டு வணங்கிய அதே பாதம் இந்தப் படியில் ஏறுகிறது.

நினைவையும் உடலையும் உருக்கிய அந்த உடற்கட்டும் பொலிவும் அவளுடைய இதயத்தை இறுக்கி அணைப்பது போலிருந்தன.

அவளும் விழுந்து வணங்கினாள்.

கூடத்துக்கு வந்தவர் சிறிது நேரம் நின்று சுற்றுமுற்றும் பார்த்தார். அந்தப் புன்னகையில் வந்த கேள்விக்கு விடையாக அந்த அறையைக் காட்டினாள்.

அறைக்குள் அவர் செல்ல அவளும் தொடர்ந்தாள்.

மஞ்சத்தின் மீது உட்கார்ந்தவர், பட்டு விரிப்பின் வழவழப்பைக் கையால் தடவினார். இறைந்து கிடந்த மல்லிகை இதழ்களைப் பார்த்தார். பம்பித் தொங்கிய விதானத்துச் சித்திரத்தைப் பார்த்தார்.

எல்லாம் புதுவிதப் பார்வையாக இருந்தன. உண்மையாகவே அவர் பார்த்தாரா என்று புரியவில்லை. நெட்டுக்குத்தலாக விழுந்த பார்வை ஒவ்வொரு பொருளின் மேல் கோசத்தைக் கடந்து உள்ளே ஊடுருவுவது போலிருந்தது. ஒரு நாழிகை கழித்துத்தான் அவள் கண்மீது விழுந்தது அந்தப் பார்வை. அப்போதும் அதே பார்வைதான். புறத்தைக் கடந்து, சொல்லச் சொல்லக் கேளாமல் ஊடுருவுகிற பார்வை.

எண்ணத்தின் மறுவில் மயங்கிக்கிடந்த அவளுக்குப் பொறுமை நழுவிக் கொண்டேயிருந்தது.

லேசாகப் புன்னகை செய்தாள்.

அவர் உள்ளத்தில் கருக்கென்று அது தைத்திருக்க வேண்டும். அருகே வருமாறு சைகை காட்டினார் அவர்.

'அப்பாடா!' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டே அவர் கரத்தைப் பற்றினாள். என்ன இது!

கரத்தைச் சற்று அழுத்திப் பற்றிப் பார்த்தாள்.

பிருபிருவென்று அந்தக் கரம் வேகமாக அதிர்ந்து கொண்டிருந்தது. கண்ணால் உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. சாதாரணமாக இருந்தது. ஆனால் உள்ளுக்குள்ளே அதே அதிர்வு. புறத்தைத் தொட்டாள். ஆமாம்! கழுத்தைத் தொட்டாள். பிடரியைத் தொட்டாள். முதுகைத் தொட்டாள். தொட்ட இடமெல்லாம் படபடவென்று அதிர்ந்து கொண்டேயிருந்தது. நான்கைந்து விநாடிகளுக்குமேல் பொறுக்க முடியாமல் கை தானாகத் தொட்ட இடத்தினின்று மீண்டது. ஆனால் மீண்டும் தொடும் ஆசை உந்தியது. கரத்தைப் பற்றினாள். பகபக வென்று அதிர்ந்த அதிர்வு, அவள் கையில் மட்டும் இல்லை, காதில் ஒலியாகக் கேட்டது. உடல் முழுவதும் ஊடுருவி உதற அடித்தது. கையை விட மனமில்லாமல் பிடித்துக்கொண்டேயிருந்தாள். கண் மூடியது. உள்ளேயும் பாய்ந்த அந்த அதிர்வு பெரும் அரவமாகக் கேட்டது. எங்கு போகிறோம் என்று தெரியவில்லை. ஒரே வெற்று வெளியாக இருந்தது.

இருள் இல்லை. ஒளியில்லை. வெண்மை இல்லை; கறுப்பு இல்லை; வேறு வர்ணமும் இல்லை. வெளியும் வரம்பும் மேலும் கீழும் இல்லாத வெறும் வெளிவெளன்றில் நிற்பது போலிருந்தது. அவளுடைய உடலில் பகபக வென்று பரந்து கொண்டிருந்த அதிர்வு மட்டும் நிற்கவில்லை. பற்றியிருந்த விரல் வழியாகப் பாய்ந்து அவள் உடல் முழுவதையும் நடுங்கி அதிர வைத்துவிட்டது.

அவள் கண் திறந்தது. திறந்தபோது அவர் கைப்பிடிப்பினின்று விடுபட்டிருந்ததைக் கண்டாள்.

தூங்கி எழுந்தாற் போன்ற ஓர் அமைதி; ஒரு குளிர்ச்சி. விடியற்காலையில் கண் விழித்து, கொல்லையில் கரையும் கரிச்சானைக் கேட்பது போலிருந்தது. விடியற்காலையின் சீதளக் காற்று மேலே தவழ்வது போன்ற ஒரு குளிர்ச்சி உடலை ஸ்பரிசித்தது. உடலை மட்டுமில்லை; உள்ளத்தையும் தீண்டிக் கொண்டிருந்தது.

கருவூர்த்தேவர் அவளைப் பார்த்தார்.

"என்ன இது?" என்றாள் அவள்.

"வெந்து நீறை வெள்ளம் கொண்டு போய் விட்டது."

ஏதோ புரிவது போலிருந்தது செங்கமலத்துக்கு.

"மின்னல் விளக்கின் ஒளியை விழுங்கி விட்டது" என்றார் அவர்.

"நீங்கள் இதுவரையில் வாயைத் திறந்து பேசவே இல்லை. இப்போது பேசுவது புரியவில்லை."

"பேசித் தெரிவது ஒன்றுமில்லை. இந்நேரம் தெரியாதது இனிமேல் தெரியாது. நேற்றிரவு எதற்காக வரச் சொன்னாய்?"

அந்தக் கேள்வியைக் கேட்டு விடை தேடுவதற்காக முதல் நாளிரவை ஞாபகப் படுத்திப் பார்த்தாள் அவள். உடல் கூசிக் குன்றியது.

"வேண்டாம்" என்றாள்.

"என்ன வேண்டாம்?"

"நேற்றிரவை, இன்று காலையை, இன்று மாலையை நான் நினைக்கக்கூட முடியவில்லை. அஜீரணக்காரன் இனிப்பை எப்படி அமைதியுடன் காண முடியும்?"

"அஜீரணக்காரன் இல்லை. அமிர்தம் உண்டவன் என்று சொல்ல வேண்டும்."

"அ..! அமிர்தமா? அமிர்தமா உண்டேன் நான்?"

"ஆமாம். அமிர்தத்தின் ஒரு துளி. துளியிலும் துளி. அதன் இனிப்பில் மற்றதெல்லாம் கசந்து விட்டது."

"என் உடலையும் உயிரையும் தொட்ட மாத்திரத்தில் உலுக்கின அந்த அதிர்வு?"

"ரத்த ஓட்டமில்லை. கடவுளின் எல்லையில்லாத வடிவத்தின் ஒரு சிறிய புள்ளியைக் கண்ட அதிர்ச்சி."

அந்தக் கட்டுடலைப் பார்த்தாள் அவள். அந்தப் பசும் பொன்னைப் பார்த்தாள்.

கருவூரார் எழுந்து விட்டார்.

"நான் வருகிறேன்" என்றார். அவள் அதிர்ந்து போனாள். பிரிவு தாங்க முடியாமல் விசும்பி, விசும்பி அழுதாள்.

"உள்ளம் பொசுங்கி விட்டதே என்று சற்று அழ வேண்டியதுதான். இத்தனை நாட்களாக உறவாடிக் கொண்டிருந்த உறவுக்கு இந்த மரியாதை கூடக் காட்டாமல் இருக்க முடியாதுதான்."

"இல்லை! இந்தத் திருவடி என் வீட்டை விட்டு நீங்கப் போகிறதே என்றுதான்."

"நீ வேண்டும்போது நான் வருவேன். கள்ளும் இறைச்சியும், கோளிலும், குச்சம், தேனும், நஞ்சும் ஒன்றாகவே நிறைந்து விழுந்து புரள்கிற கட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிறேன்....ஒன்றே ஒன்று. மனிதர்களின் ஆசையைக் கெடுக்க வேண்டாம். நான் செங்கமலத்தின் மஞ்சத்துக்கு ஆசைப்பட்டே வந்ததாகவே, அவர்கள் நினைத்து ஆறுதல் அடையட்டும். உனக்கும் தொல்லையில்லாமல் இருக்கும். இந்தக் கடவுள் வியாதியை எல்லாரும் தாங்க மாட்டார்கள். ஒன்றிக் கட்டையான செங்கமலம் தாங்கலாம். கருவூர்ப் பித்தும் சற்றுத் தாங்க முடியும்" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தார் அவர்.

வாசல் கதவைச் சாத்தாமல் அவர் சென்ற வழியைப் பார்த்துக் கொண்டே பிரமித்து நின்றாள் செங்கமலம்.

விருந்தும் மருந்தும்

அன்று சுதாமரின் இல்லத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி தாண்டவமாடியது. தீபாவளித் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடந்திருந்தன. பெரியதோர் இல்லம். எங்கும் வாசனை. பரிமளத் திரவியங்கள் நிரம்பியிருந்தன. சுதாமரின் மனைவி 'க்ஷுத்க்ஷாமை' என்னும் சுசீலையின் முகத்தில் பிரகாசம் பரவிக் கிடக்கிறது. குழந்தைகள் ஒவ்வொருவரும் பாங்கும் பணிக்கையுமாகக் காணப்பட்டனர். 'குசேலர் வீட்டு ஏழைமை' என்ற பழமொழியே பொய்யாகி விட்டது. எல்லாம் பரமாத்மாவின் மகிமை. உண்மையான மித்ரபாவத்துக்கான வெகுமதி இவையெல்லாம்.

சுதாமர் பூஜை அறையில் ஸ்ரீமந் நாராயணனுடைய திவ்யத் திருமேனி தாங்கி நின்ற விக்ரஹத்துக்கு ஆராதனை செய்து கொண்டிருந்தார். இப்பொழுதெல்லாம் அவருக்கு வெளியே வீதி வலம் வந்து பிக்ஷை பெற வேண்டிய அவசியமில்லை.

ஆனாலும் அவர் தினமும் பகவந் நாமாவைப் பாடிக் கொண்டே வெளியே சுற்றி வரத் தவறுவதில்லை. அப்பொழுது ஆராதனைப் பிரசாதத்தை நகரக் குழந்தைகளுக்கு அன்புடன் கொடுப்பார்.

சுதாமரின் குழந்தைகளில் ஒருவர் வீட்டில் முத்தெனக் கோலமிட்டு, செங்குழம்பு கரை கட்டிக் கொண்டிருந்தனர். மாவிலைத் தோரணங்களும், மலர்த் தோரணங்களும் எடுத்து மைந்தர்கள் நால்வர் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்தனர். தந்தையின் ஆராதன கைங்கர்யத்தில் தங்கள் மனத்தை லயிக்கவிட்டுக் குழந்தைகள் சுதமதியும், சதாநந்தனும் பூஜை அறையில் அமர்ந்திருந்தனர். கொல்லைப்புறம் மூத்த மகள் கமலாக்ஷி பசு மாட்டுக்குக் குங்குமம் மஞ்சள் பூசிப் பூஜை செய்து கொண்டிருந்தாள்.

"சுசீலே!"

சுதாமர் பூஜை அறையிலிருந்து சுசீலையை அழைத்தார்.

சுசீலை, தான் தொடுத்துக் கொண்டிருந்த மாலையை மாமகனின் படத்துக்குச் சாத்தி விட்டுக் கணவரை நோக்கி வந்தாள். மற்றக் குழந்தைகளும் ஒவ்வொருவராக வந்தனர். தூபம் காட்டித் தீபாராதனை முடிந்தது. அனைவரும் கண்களை மூடி பக்தி பரவசமாக நின்று கொண்டிருந்தனர்.

பூஜை முடிந்ததும் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பினார் சுதாமர்.

சுசீலைக்குச் சற்று ஆதங்கம். இந் தீபாவளித் திருநாளிலும் கணவர் வெளியே செல்ல வேண்டுமா? மெள்ளப் பதியின் அருகில் வந்து, "ஒரு சிறு விண்ணப்பம்" என்றாள் குழைவுடன்.

சுதாமர் திரும்பி நோக்கினார். "என்ன வேண்டும் சுசீலே? ஏன் தயக்கம்?"

"ஒன்றுமில்லை, சிறு விஷயம்தான். இன்று தீபாவளித் திருநாளல்லவா?"

"ஆமாம். மாயன் எம்பெருமானின் கருணைகடாட்சத்தின் காரணமாக உலகிற்குத் தொல்லை தந்த நரகாசுரன் மடிந்தான்..." என்று சுதாமர் கூறியபோது, கடைக் குழந்தையான நாராயணன், "அப்பா, பாமாதேவியின் திருவருள் என்று கூறுங்கள். தேவியல்லவோ நரகாசுரனை வதம் செய்தவள்!" என்றான்.

"ஆமாம், குழந்தாய். ஆயினும் தேவியும் கடவுளின் அம்சமல்லவோ!... அதெல்லாம் புரிந்து கொள்ள உனக்கு இன்னும் வயதாக வேண்டும்."

"நம்முடைய வறுமை என்னும் அசுரனைக் கொன்றதுபோல் நரகாசுரனைக் கொன்று விட்டனர் தேவியும், திருமகளும்!" என்றாள் மூத்த பெண்.

"அப்பா! உங்கள் நண்பர் கண்ணனிடம் எங்களையும் அழைத்துச் செல்லுங்கள். தமக்கு இவ்வளவு ஐச்வர்யத்தைக் கொடுத்துதவிய பரந்தாமனை நாங்கள் கண்ணாரக் கண்டு ஆனந்திக்க வேண்டாமா?" என்று குழந்தைகள் ஆரம்பித்தன.

சுதாமர் சற்று முறுவலித்தார். "கண்ணனை மனத்திலே இருத்தி, கண்களை இதயத்திலும் செலுத்தி அங்கு காணுங்கள். பிறகு சமயம் வரும்போது அவரை நேரில் தரிசிக்கலாம்" என்று கூறி விட்டார் சுதாமர். மீண்டும் கண்ணனிடம் சென்றால், அவர் மேலும் ஐச்வரியங்களைக் கொடுத்து விடுவாரோ என்ற பயம் சுதாமருக்கு.

சுசீலை கூறினாள். "எனக்கும் அவரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல். அவர் பாதங்களில் பணிந்து நம் கஷ்டத்தை விலக்கிய அவருக்கு நேரில் வந்தனம் செலுத்த வேண்டியது நம் கடமையல்லவா? பணத்தைப் பெற்று மித்திரனை மறந்து விட்டார் என்று அவர் மனத்தில் நினைத்துக் கொள்ளக் கூடாதே!"

"சுசீலே, இன்னமும் என் நண்பனை நீ புரிந்து கொள்ளவில்லை. பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்பவன் அல்லன் அவன். வாய் திறந்து நாம் கேட்காத போது அனைத்தையும் கொடுத்தவன். அவன் விரும்பினால் நம் இல்லத்தை நாடி, தானாகவே ஓடி வந்து விடுவான்......கிடக்கட்டும், நீ ஏதோ சொல்ல வந்தாயே, என்ன அது?"

"ஒன்றுமில்லை. இன்று தீபாவளித் திருநாளல்லவா? இன்றும் வீதிவலம் வர வேண்டுமா? வீட்டிலேயே இருந்து பகவந் நாமாவை ஆனந்தமாகக் குழந்தைகளுடன் பஜித்துக் கொண்டிருக்கலாமே!"

"சுசீலே! நம் குழந்தைகள் மட்டும் பகவந்நாமாவை பஜிப்பது போதாது. நான் வீதிவலம் வரும்போது எவ்வளவு குழந்தைகள் என்னுடன் சேர்ந்து கண்ணனின் திவ்ய நாமத்தை உச்சரிக்கின்றன, தெரியுமா? மேலும் இன்று அவன் திருநாமத்தைக் கூற வேண்டிய திருநாள். குழந்தைகள் அனைவரும் கூறட்டும். ஆனந்தம் அடையட்டும். நல்மனம் அடையட்டும்" என்று கூறிய சுதாமர் வீதி வலம் வரக் கிளம்பி விட்டார்.

"நாராயண, நாராயண ஜெய, கோவிந்த ஹரே."









சுதாமரின் நாம சங்கீர்த்தனத்தைக் கேட்டு, குழலிசை கேட்டு ஓடி வந்த கூட்டம் போல், குழந்தைகளின் கூட்டம் சேர்ந்து கொண்டது.

சுசீலை பூஜை அறையில் தங்கி மெல்லிய குரலில் பரந்தாமனின் பக்திப் பாடல் களைப் பாடிக் கொண்டிருந்தாள்.

"அம்மா, அம்மா!" வாசலில் குரல் கேட்டது. சுசீலை வாசலுக்கு வந்தாள்.

ஒரு வயோதிகர் நின்று கொண்டிருந் தார். சியாமள வர்ணம். சற்றுக் கூனி நின்றிருந்தார். இடுப்பில் வேஷ்டியைக் கச்சமாகக் கட்டியிருந்தார். அவர் அருகில் அவரது மனைவி, அவளுடைய மஞ்சள் தீற்றிய முகத்தில் நெற்றிக் குங்குமம் மாபெரும் அணிகளைத் திகழ்ந்தது. அவளுடைய சிவந்த மேனியில் அணிந்திருந்த 'செந்நிறப்' புடவை, தேக காந்தியைப் பன்மடங்கு பிரகாசிக்கச் செய்தது. உடலில் வேறு ஆபரணம் ஒன்றும் காணப்படவில்லை. இடுப்பில் வைத்திருந்த மடிசஞ்சியுடன் அவள் தன் கணவரின் அருகில் பவ்யமாக நின்று கொண்டிருந்தாள்.

"ஏனம்மா, இதுதானே சுதாமரின் இல்லம்?"—வயோதிகர் கேட்டார்.

சுசீலை அவர்களை ஊன்றிக் கவனித் தாள். அவர்களைப் புரிந்தது போலவும் இருந்தது. புரியாதது போலவும் இருந் தது. பெயர் விசாரித்து இல்லம் தேடி வந்திருக்கிறார்கள். கணவரின் நண்பர் களில் எவராவது இருக்குமோ!

"வாருங்கள், சுவாமி! இதுதான் நீங்கள் தேடி வந்திருப்பவருடைய இல்லம், நான் அவர் மனைவி சுசீலை. தாங்கள் என் கணவரின் நண்பராக இருக்க வேண்டுமென நினைக் கிறேன்." முகமன் கூறி அவர்களை வர வேற்றாள் சுசீலை.

"சுதாமரின் பெரு மைகளை நாங்கள் கேட்டிருக்கிறோம். நாங்கள் வடக்கி லிருந்து வருகிறோம். சுதாமர் பெரும் பக்திமான் என்பார் களே! அவர் இப்பொ ழுது வீட்டில் இல் லையோ?" வாசற்படி யில் காலை வைத்துக் கொண்டே வயோதி கர் கேட்டார்.

"இதோ வந்துவிடு வார். வீதி வலம் வந்து குழந்தைகளை யும் பகவந்நாமாவை உச்சரிக்கச் செய்வதில் அவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. அதன் நிமித் தமே இப்பொழுதும் சென் றிருக்கிறார். தாங்கள் வீட்டி னுள் எழுந்தருள வேண்டும்" என்று கூறிய சுசீலை அவ்விரு வரையும் உள்ளே கூப்பிட்டாள். வயோதிகரோ தம் இல்லாளுடன் வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டார். "சுதாமர் வரட்டும். பிறகு உள்ளே வருகிறோம்!" என்று கூறி.

இதற்குள் குழந்தைகள் ஒவ்வொருவ ராக விருந்தாளியின் அருகில் வந்தனர். கடைசிக் குழந்தை நாராயணனுக்கு அவ ரிடம் ஒரு கவர்ச்சி காணப்பட்டது. மெது வாக அவர் அருகில் சென்று, "தாத்தா, உங்கள் பேரென்ன?" என்று கேட்டான்.

வயோதிகருக்குக் குழந்தை தம்மிடம் ஒட்டிக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி. பாலகனைத் தம் அருகில் அழைத்து "உன் பெயர் என்னப்பா?" என்றார்.

"என்ன பெயர் வைத்தார்களோ தெரியாது. ஆனால் அம்மாவும் அப்பா வும் 'நாராயணா' என்று கூப்பிடுவார்கள். நாராயணன் என்றால் யார் பெயர் தெரி யுமோ? எங்கப்பாவுக்குக் கண்ணன்னு ஒரு நண்பர் இருக்கிறார். அவருடைய பெயராம்."

"என் பெயரும் நாராயணன்தானடா கண்ணே!" என்று கூறிய கிழவர், பாலகனை நோக்கிப் புன்முறுவல் பூத்தார்.

உடனே குழந்தைக்கு ஒரே கொண் டாட்டம். அவர் மடியில் சுவாதீனமாக உட்கார்ந்தான். "அப்படியானால் நானும் நீயும் ஒண்ணு. உன் வாயிலே மண்ணு, என் வாயிலே சர்க்கரை." விளையாட்டுத் தனமாகக் கூறிக் குதித்தான் அவன்.

வயோதிகரும் சிரித்தார். "ஆமாம், ஆமாம். குழந்தைப் பருவத்திலே நான் மண்ணைச் சாப்பிடுவேன். அம்மாவிடம் அடியும் வாங்குவேன்." ஓரக் கண்களால் மனைவியை நோக்கியபடி கூறினார்.

தூரத்தில் நின்று இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சுசீலைக்கு வயோதிகரின் பேச்சும், பொருளும் எதையோ நினைவுபடுத்தின. இவர்...

இதற்குள் மற்றக் குழந்தைகளும் வயோதிகரிடம் ஒட்டிக்கொண்டுவிட்டன. அவருடைய மடியில் படுப்பதும் உட்காரு வதும், கதை கூறுவதும் கதை கேட் பதும், சிரிப்பதும் சிரிக்க வைப்பதுமாக வீடே திமிலோகப்பட்டது.

விளையாட்டின் நடுவே நாராயணனைப் பார்த்து, "குழந்தாய்! கண்ணன் உங்க ளுக்கு இவ்வளவு பணமும் பண்டமும் கொடுத்திருக்கிறார் என்று சொன்னாயே! நீ அவருக்கு என்ன கொடுத்தாய்?" என்று கேட்டார் கிழவர்.

"நான் என்ன கொடுப்பது? கண்ணன் பெரிய ராஜாவாயிற்றே! அவரிடம் எல் லாமே இருக்குமே! இருந்தாலும் தாத்தா, நீங்களே கூறுங்கள். கண்ணனுக்கு என்ன கொடுக்கலாம்?" என்று யோசனை கேட் டான் குழந்தை.

"உனக்கு உன் அம்மா பிரியமாக எதைக் கொடுப்பாளோ, அதைக் கொடு. அவருக்குச் சந்தோஷமாக இருக்கும்" என்று கூறி வைத்தார் கிழவர். அன்பை கொடுப்பது எதுவுமே நற்பண்டமாக இருக்கும் என்பது உலகமறிந்த விஷயம்.

அவர்கள் பேச்சு மேலே வளர்வதற்குள் சுதாமர் திரும்பி விட்டார். குழந்தைகள் வந்திருக்கும் விருந்தாளியைப் பற்றிக் கட்டியம் கூறினர்.

விருந்தாளியை இன்முகத்துடன் வரவேற்ற சுதாமர், "சுவாமி! தாங்கள் யாரென்று தெரியவில்லை. இருந்தாலும் தங்கள் வருகை காரணமாக என் இல்லம் பாக்கியம் அடைந்துள்ளது. தாங்கள் இல்லாளுடன் உள்ளே எழுந்தருள வேண்டும்" என்று உபசரித்தார்.

"சுதாமா! எங்களுக்கு உன்னைத் தெரி யும். உனக்கு எங்களைத் தெரியவில்லை. இத்திருநாளில் உன் இல்லத்தில் விருந் துண்ண வந்திருக்கிறோம்" என்று கூறிய வாறே கிழவர் உள்ளே நுழைந்தார்.

"அப்பா! இந்தத் தாத்தா ரொம்ப நல்லவர். எங்களுடன் விளையாடுகிறார்." குழந்தைகள் புகழ்மாலை சூட்டியபடியே அவரைப் பின்தொடர்ந்தனர்.

விருந்தாளியின் பாதங்களைக் கழுவ ஆரம்பித்த போது, அவர் பாதங்களைக் கண்ட சுசீலை அதிசயித்து நின்று விட்டாள். அவளுக்கு எல்லாமே புரிவது போலிருந்தது. ஆனால் எப்படி நிச்சயம் செய்து கொள்வது! குசேலரோ அவர் பாதங்களில் கவனத்தைச் செலுத்த வில்லை. கண்ணனின் திவ்ய நாமாவையும் அவன் பெருமைகளையும் புகழ் மாலையாகக் கூறிக்கொண்டே கால்களைக் கழுவியதால் மனம் துவாரகாபுரிக்குச் சென்றிருந்தது. கண்களின் வெளிப் பார்வைக்கு மனதில் மதிப்பு இல்லை. அதனால் அவர் சரிவரக் கவனிக்கவில்லை.

பாதபூஜை முடிந்ததும் சுசீலை ஒரு தட்டில் பழவகைகளைக் கொண்டுவந்து சமர்ப்பித்தாள். அத்துடன் கொஞ்சம் அவலும் கொண்டுவந்து வைத்தாள். பிறகு விருந்தாளியிடம் அவைகளில் அவருக்குப் பிடித்ததை ஏற்கும்படி பிரார்த்தித்தாள். அப்பொழுது சுதாமர் கூறினர்: "சுசீலே! பாலும் பழமும் தேனும் நிரம்பி இருக்கும் இந்தத் தட்டில் அவல் எதற்கு? இவரால் கடித்துச் சாப்பிடக்கூட முடியாதே!"

விருந்தாளியோ சுதாமர் கூறி முடிப்ப தற்குள்ளாக முதன் முதலாக அவலில் தான் கை வைத்தார். இடுப்பு வேஷ்டியில் அதைக் கட்டி முடிந்து கொண்டார்.

இப்பொழுது சுசீலைக்கு எல்லாம் ஸ்பஷ்டமாகப் புரிந்துவிட்டது. ஆஹா! இன்று அவள் இல்லம் எவ்வளவு பாக்கியம் அடைந்துவிட்டது. கணவர் இன்னும் புரிந்து கொள்ளவில்லையே!

சாப்பாட்டு நேரம் வந்தது. சுதாமர் அத்தம்பதிகளிடம், தாமரைக் குளத்தில் கைகால்களைக் கழுவி வரச் சொன்னார். அவ்விருவரும் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றபோது சுசீலை தன் கணவரை அருகில் அழைத்து, "கண்ணா, கண்ணா' என்று அவர்களை நோக்கி இருமுறை உரக்கக் கூப்பிடுங்கள்" என்றாள்.

"என்ன சொல்கிறாய் நீ? கண்ணன் இங்கு எங்கு வந்தான்?"

"பிறகு சொல்கிறேன். முதலில் நீங்கள் கூப்பிடுங்கள்."

சுதாமர் வாயிலருகிற் சென்று விருந்தாளிகளை நோக்கி, "கண்ணா! கண்ணா!" என்று உரக்கக் கூப்பிட்டார்.

அவ்வயோதிக விருந்தாளி சட்டெனத் திரும்பி நோக்கினார்.

"வயோதிக உருவத்தில் வந்திருப்பவர் யாரென்று புரிகிறதா? உங்கள் ஆப்த நண்பர் கண்ணனே இவ் வேடந்தாங்கி வந்திருக்கிறார். நீங்கள் 'கண்ணா' என்று கூப்பிட்டதும் தம்முடைய கபட நாடகத்தை மறந்து திரும்பி நோக்கிவிட்டார். அவர் பாதங்களைக் கழுவியபோது செந்தாமரை போன்ற மலர்த் திருவடிகளைத் தாங்கள் கவனிக்க வில்லையா? பாலும் பழமும் தேனும் வைத்திருந்த போது முதன் முதலாகத் தமக்குப் பிடித்த அவலை எடுத்துக் கொண்டாரே, அதைப் பார்க்கவில்லையா? பெயரைக் கூறிய மாத்திரத்தில் சகல ஜீவகோடிகளுக்கும் உதவ ஓடி வரும் சுபாவத்தையுடைய உங்கள் நண்பர் இப்பொழுது நீங்கள் கூப்பிட்டதும் தமது பிறவிக் குணத்தை மறக்க முடியாமல் திரும்பிப் பார்த்து விட்டார். இது தெரியவில்லையா உங்களுக்கு?" என்று சுசீலை அடுக்கிக் கொண்டே போனாள்.

சுதாமர் திக்குமுக்காடினார். கண்ணனா இவர்? என் ஆப்த நண்பனா? சகல சுக போகத்தையும் கொடுத்த காருண்ய வள்ளலா? ஆஹா, சுசீலை என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும்! கண்ணனின் திருவுருவத்தை நான் சொல்லக் கேட்டுக் கேட்டு, மனத்தில் பதிய வைத்து அடையாளம் கண்டுவிட்டாளே! அவன் குணாதிசயங்களைக் காதால் கேட்டே புரிந்து கொண்டுவிட்டாளே!

இதற்குள் வயோதிக உருவத்தில் வந்திருந்த கண்ணனும் தம் தவற்றைப் புரிந்துகொண்டார். இனி மறைப்பதில் பயனில்லை. கணவனின் தவிப்பைக் கண்ட ருக்மிணி சிரித்துக்கொண்டே கூறினாள்: "உங்களுடைய குணம் என்றென்றும் மறையாதே. பழங்களும் பாலும் தேனுமாக வைத்திருக்க தட்டில், அவலில் சபலம் தட்டி மனம் போயிற்றே. மாலை வீடு திரும்பும்போது நம்மைப் பற்றிக் கூறவேண்டுமென்றீர்கள். சுசீலை கெட்டிக்காரி. உங்களைப் புரிந்துகொண்டு விட்டாள். உங்கள் நண்பரை விட்டே உங்களைக் கூப்பிடச் செய்து மேலும் ஒரு பரீட்சை நடத்தி வெற்றி கண்டுவிட்டாள். கபடநாடக சூத்ரதாரி என்று கூறப்படும் நீங்கள் ஒரு விநாடியில் உங்கள் வேஷத்தை மறந்து போய் ஏமாந்து விட்டீர்கள்" என்று சொல்லிய படி தாமரைத் தடாகத்தில் இறங்கிக் கைகால்களைக் கழுவிக்கொண்டு கண்ணனுடன் கரையேறினாள்.

வயோதிகத் தம்பதிகள் இருவரும் சுதாமரின் இல்லத்தை மீண்டும் அடைந்த போது சுதாமர் ஓடோடி வந்தார். வயோதிக வேடத்திலிருந்த கண்ணனை இறுக அணைத்துக் கொண்டார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் முட்டியது. மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி விடவே, வார்த்தைகள் தொண்டையில் சிக்கி வெளிவர முடியாமல் தவித்து நின்றன. உடலெல்லாம் மயிர்க்கூச்ச லெடுத்தது.

"கண்ணா! என்ன சோதனை இது! நண்பனை ஏமாற்றலாமா! என் இல்லத்தை உன் சொந்த வீடாக நினைத்துச் சுய உருவத்துடன் வரக்கூடாதா? எதற்கு இந்தப் பரீட்சை? உன் திவ்ய சொரூபத்தைக் காணக் குழந்தைகள் ஏங்கி நிற்கின்றன."—தொண்டையில் சிக்கிய வார்த்தைகளை மெதுவாக வெளியே விட்டார் சுதாமர்.

கண்ணன் மாயப் புன்னகையுடன் சுசீலையை நோக்கி, "மன்னி! நீ அறிவுக் கூர்மையுள்ளவள். நீ நடத்திய பரீட்சையை உணராமல் நான் தோற்று விட்டேன். நீ வெற்றி கண்டு விட்டாய். உன்னை மனைவியாகப் பெற்ற சுதாமன் பெரும் பாக்கியசாலி!" என்றார்.

சுதாமரின் உள்ளம் பெருமையால் நிரம்பியது. சுசீலை தலைகுனிந்து நின்றாள்.

"கண்ணா, உன் உண்மை சொரூபத்தை நாங்கள் கண்டு களிக்கக் கூடாதா? இதென்ன வேஷம்?" என்றார் சுதாமர்.

"சுதாமா! என் வீட்டுக்கு நீ எவ்விதம் வந்தாயோ, அவ்விதமே உன் வீட்டுக்கு வரவேண்டுமென எனக்கு ஆவலாக இருந்தது. அதனால் பரம ஏழையைப் போல் வேடம் தரித்து வந்தேன். இவ்வேடத்தில் வந்ததிலெனக்கு மற்றொரு மகிழ்ச்சி. பணமும் பொருளும் அடைந்தும் உன் குடும்பத்தார் தங்கள் பழைய நிலையை மறக்காமல் ஏழை எளியவர்களை அன்புடன் உபசரிக்கிறீர்கள். இது என் மனத்துக்கு எல்லையற்ற இன்பத்தை அளிக்கிறது. சுயஉருவில் வந்திருந்தால் நண்பன் என்ற முறையில் எனக்கு நீ உபசரிப்பதாகத்தான் தோன்றும்" என்றார் கண்ணன்.

"என்ன இருந்தாலும் உன் விளையாட்டுக் குணம் உன்னை விட்டுப் போகவில்லை, கண்ணா! பாவம், ருக்மிணி தேவிக்கும் கஷ்டத்தைக் கொடுத்து அழைத்து வந்திருக்கிறாய். நீங்கள் இருவரும் இத்திருநாளில் இந்த ஏழையின் இல்லத்தில் காலடி எடுத்து வைக்க நான் என்ன பாக்கியம் செய்தேனோ?"

"ருக்மிணிக்கு என்ன கஷ்டம்? அவளைச் சந்தோஷப்படுத்தத்தானே அழைத்துவந்திருக்கிறேன். ஒவ்வொரு தீபாவளிக்கும் பாமாவின் இல்லத்துக்கு நான் சென்று விடுவதில் ருக்மிணிக்கு மனவருத்தம். அவள் பிறந்த வீட்டுக்குப் போகலாம் என்றாலோ அதுவும் முடியாத காரியம். உனக்குத்தான் கதை தெரியுமே! அதனால் நண்பன் சுதாமனின் இல்லம் 'பிறந்த வீடாக நினைக்கத் தகுதி வாய்ந்தது' என்று கூறி அழைத்து வந்திருக்கிறேன். உருமாறி வந்ததில் ருக்மிணிக்குச் சற்றும் விருப்பமில்லைதான். ஆயினும் என் நிர்ப்பந்தத்துக்காகத்தான் இப்படி வந்தாள். இப்பொழுதுதான் மன்னி எங்களைப் புரிந்துகொண்டு விட்டாளே! இனி இவள் பரம சந்தோஷத்துடன் பண்டிகையைக் குறைவற ஆனந்தத்துடன் கொண்டாடி விடுவாள்!" என்றார் கண்ணன்.

கிருஷ்ணனும், ருக்மிணியும் சுசீலையின் வேண்டுகோளின்படி சுயஉருவம் அடைந்தனர். குழந்தைகள் அவ்விருவரும் வந்திருப்பவர் யாரென்று அறிந்ததும் வியப்புடன் நின்றுவிட்டனர். எந்தக் கண்ணனைத் தரிசித்துத் தங்கள் நன்றியைத் தெரிவிக்க விரும்பினரோ, அக் கண்ணனே எதிரில் நின்றிருக்கும்போது அவர்களால் வாய்திறந்து ஒரு வார்த்தை கூற முடியவில்லை. கண்ணனிடமே கண்ணனைப்பற்றி ஏதேதோ கூறினோமே, அவர் என்ன நினைத்துக் கொள்வாரோ? அவர் மடியில் படுத்துக் குதித்து விளையாடினோமே, அவர் என்ன சொல்லுவாரோ? இவ்விதம் குழந்தைகள் மனம் தவித்தது.

கண்ணன் குழந்தைகளின் மனோபாவத்தைப் புரிந்து கொண்டார். பழையபடி



குழந்தைகளை அருகில் கூப்பிட்டார். ஊஹூம், ஒருவராவது வரவில்லை. மரியாதை உணர்ச்சி அவர்களை அவர் அருகில் செல்ல முடியாமல் தடுத்தது. கடைக்குட்டி நாராயணனுக்கு மட்டும் அவர் மடியில் உட்காரச் சற்றுச் சபலம். ஆனால் பெற்றோர்கள் கண்டிப்பார்களோ என்ற பயம்.

"சுதாமா, நீங்கள் இருவரும் என்னைப் புரிந்து கொண்டது தவறாகப் போய் விட்டது. குழந்தைகள் 'விருந்தாளித் தாத்தா'விடம் பழகுவதுபோல் என்னிடம் பழகத் தயங்குகிறார்களே!" என்று வருத்தத்துடன் கூறினார் கண்ணன்.

பெற்றோர் தைரியமூட்டவே, குழந்தைகள் கண்ணனின் அருகில் வந்தனர். ஆயினும் எவ்வளவு முயன்றும், அவர்களால் சரளமாகப் பழக முடியவில்லை. அவருக்கு உபசாரம் செய்தனர். ஆடினர்; பாடினர். ஆயினும் கூச்சல் போட்டு, சண்டை பிடித்து, அடம் பிடித்துக் குழந்தைகளின் மனோநிலையில் அவருடன் பழக முடியவில்லை. நாராயணன் ஒருவனே கண்ணனிடம் சிறிது ஒட்டிக் கொண்டான்.

விருந்து பலமாக முடிந்தது. அண்டை அயலிலிருந்து மக்கள் கண்ணனைத் தரிசிக்க வந்தனர். சுசீலையும், சுதாமரும் எல்லோரையும் தக்கபடி உபசரித்தனர்.

மாலையில் கண்ணனும் ருக்மிணியும் விடை பெற்றனர். ருக்மிணி, அந்நினைத்தை என்றுமே மறக்க முடியாதெனக் குதூகலத்துடன் கூறினாள். சுசீலையும் சுதாமரும் தெருக்கோடிவரை சென்று வழி அனுப்பி விட்டுத் திரும்பினர்.

கண்ணனும், ருக்மிணியும் குதூகலத்துடன் தங்கள் வழியே சென்று கொண்டிருந்தபோது "கண்ணு மாமா, கண்ணு மாமா" என்ற குரல் கேட்டது. கண்ணன் திரும்பி நோக்கினார்.

பாலகன் நாராயணன் ஓடோடி வந்து கொண்டிருந்தான். கண்ணன் தன் சுய உருவை அடைந்ததுமே அவன் "மாமா!" என்று கூப்பிட ஆரம்பித்துவிட்டான்.

ஓடிவந்த நாராயணன் தன் கையிலிருந்த சிறு பொட்டலத்தை எடுத்தான். "கண்ணு மாமா, அம்மா எனக்குக் கொடுப்பதை உனக்குக் கொடுக்கலாமென்றும் அல்லவா?" என்றான்.

"ஆமாமடா குழந்தாய், நீ என்ன கொண்டு வந்திருக்கிறாய்?"

"எது கொடுத்தாலுமே பிடிக்குமா?"

"ஓ, எதுவானாலும் சரி...எங்கே கொடு பார்க்கலாம்!" கண்ணன் அவன் கையிலிருப்பதை எடுக்க முயன்றார்.

அவனோ தன் கைகளை இழுத்துக் கொண்டு, "இருங்கள், அவசரப்படாதீர்கள்...ம், வீட்டுக்குப் போய் என்னைத் திட்டிப் பரிகசிக்க மாட்டீர்களே......" என்று நிபந்தனை போட்டான்.

"ஊஹூம். நீ சீக்கிரம் கையிலிருப்பதைக் கொடு." கண்ணன் அதை வாங்கிக்கொள்ள அவசரப்பட்டார்.



"தலைதீபாவளிக்கு மாமனார் வீட்டுக்குப் போனாயே, வெறும் கையோடேயா திரும்பி வந்தே?"

"இல்லே, பட்டாஸ் சுட்டு விட்டது. கட்டுப் போட்ட கையோடேதான் திரும்பி வந்தேன்!!"

நாராயணன் தன் கையிலிருந்து பொட்டலத்தை அவர் கையில் திணித்தான். பிறகு திரும்பியும் பாராமல் ஓட்டமாக ஓடி மறைந்து விட்டான்.

கண்ணன் பொட்டலத்தைப் பிரிக்க முயன்றபோது ருக்மிணி சட்டென அதைப் பறித்துக் கொண்டு விட்டாள். "குழந்தை அதில் ஏதாவது தின்பண்டம் வைத்திருப்பான். நீங்கள் உண்ட தின்பண்டம் போதும். இதை நானே சுவைக்கலாம்" என்றாள்.

இருவரும் துவாரகாபுரியை அடைந்தனர். பொட்டலத்தில் என்ன இருக்கும் என்பதைக் காணக் கண்ணனுக்கு ஆவல். ருக்மிணியோ கண்டிப்பாக அதைத் தர மறுத்துவிட்டாள்.

இரவு கண்ணனுக்கு, வயிற்றைச் சற்று சங்கடம் செய்தது. விருந்து அதிகமாகி விட்டதுதான் காரணம். ருக்மிணி சற்றுக் கண்களை மூடிப் படுத்தாள். அப்பொழுது, கண்ணனுக்கு ஒரு சபலம் தட்டியது.

மெள்ள மெள்ள அடிமேல் அடிவைத்து, ஒளித்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து பொட்டலத்தை எடுத்துவிட்டார். பொட்டலத்தைத் திறந்து பாதியை வாயில் போட்டுக் கொண்டுவிட்டார். ஐயோ, இதென்ன கசப்பும் காரமுமாக இருக்கிறதே!

இதற்குள் ருக்மிணி கண் விழித்து அவரைப் பார்த்துவிட்டாள். என்ன கஷ்டகாலம்! வெளியே துப்பவும் முடியாது போலிருக்கிறதே! திருட்டுக் குற்றத்தை மறைக்க வாயில் இருந்ததை வயிற்றினுள் தள்ளிவிட்டார் கண்ணன். அப்பொழுதுதான் ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. வயிற்றுச் சங்கடம் திடீரென மறைந்து விட்டது. ருக்மிணி நிலைமையைப் புரிந்துகொண்டு விட்டவள், "வயிற்றுச் சங்கடத்தில் இதென்ன சபலம்?" என்று கோபித்துக் கொண்டாள்.

கண்ணனோ இப்பொழுது ருக்மிணிக்குப் பயப்படவில்லை. பொட்டலத்தை நன்றாகத் திறந்து பார்த்தார். அதில் சுக்கு, திப்பிலி, மிளகு எல்லாம் பொடி செய்து வெல்லத்துடன் பக்குவமாகக் கிளறப்பட்ட மருந்து இருந்தது.

ஒரு வினாடியில் கண்ணனுக்கு எல்லாம் புரிந்தது. அரவணைத்துக் கொஞ்சி விளையாடி, தாலாட்டுப் பாடும் தாயே, மகனை நல்வழி திருப்ப நேரும்போது அடித்துப் பயமுறுத்தித் திட்டுவதுபோல், சுசீலையும் தன் குழந்தைகளுக்குத் தன் கையினாலேயே இன்சுவைப் பண்டங்களும் பணியாரங்களும் கொடுக்கும்நேரத்தில், குழந்தைகளின் உடல் நலம் கெடாமல் இருக்க மருந்தும் கொடுத்து வருகிறாள். அன்னை கொடுப்பது எதுவுமே அமிர்தமாக நினைக்கும் நாராயணன் மருந்தையும் மறுக்காமல் உண்டு வருகிறான். கண்ணனுக்கு அவன் வீட்டில் இனிப்புப் பண்டமும், பணியாரங்களும் அவன் பெற்றோர்கள் கொடுத்துவிட்டனர். கொடுக்கப்படாதது மருந்து ஒன்றுதான். அதை அவன் உயர்ந்த பொருளாகப் பாவித்துத் தன் அன்பளிப்பாகக் கண்ணனுக்குக் கொடுத்து விட்டான். கண்ணனுக்கும் அது ஒருவிதத்தில் பயன்பட்டுவிட்டது. வயிற்றுச் சங்கடத்தை நீக்கிவிட்டது. மருந்தின் குணம் மட்டுமல்லாமல் அதில் தாயின் அன்பும், குழந்தையின் அன்பும் பூரணமாக நிரம்பியிருக்கின்றனவே!

"ருக்மிணி! குழந்தை கொடுத்த பொருள் எவ்வளவு உயரிய பொருள் பார்த்தாயா? சுசீலை அவன் நலனைப் பேணி அவனுக்குக் கொடுக்கும் மருந்தை, அவன் என் நலனைப் பேணி எனக்குக் கொடுத்துவிட்டான். விருந்து கொடுக்க எல்லோரும் முன் வருவார்கள்; ஆனால் உடல் நலனைக் கொடுக்கும் மருந்து கொடுக்க யாருக்குத் துணிவு வரும்? குழந்தையின் கபடற்ற அன்பைப் பார்த்தாயா?" என்றார் கண்ணன்.

விஷயமறிந்த ருக்மிணி ஆச்சரியத்துடன் பிரமித்து நின்றாள். அன்று முதற்கொண்டு கண்ணன் ஒவ்வொரு தீபாவளித் திருநாளிலும் குழந்தையின் நினைவாக, அனைவரும் சுகமாக வாழவேண்டும் என்று வாழ்த்துக் கூறியபடி, ஓர் உருண்டை மருந்தை விழுங்கிவிட்டே பணியாரங்களில் கை வைக்கிறார்.

அதனால்தான் நமக்கும் அந்தப் பழக்கம் வழி வழியாக வந்துவிட்டதோ!

வசந்தசேனை

'மஹி'



*

கந்தர்வமேகக்கு மரிதன் வெள்ளுடை
காற்றில் பறக்கக் கரந்திடுவாள்,
சந்திரப் பூவிடைத்தாரகை வண்டுகள்
சல்லாபம் செய்யப் பறந்திடுமே !

வசந்தகன்னிகை வந்துவிட்டாள் என
வண்ணச் சிறகு இதழ்விரிக்கும்
ரசக்குளவி எனும்மலர் தம்முகம்
ரத்தினம்போலச் சிவந்துவிடும்.

வேம்பின் இனிப்புமலர் மணக்கும் குயில்
வெற்றிக் குலவைக்குரல் கொடுக்கும்
மாம்பழக் கொத்திப்பறக்கும் பறவைகள்
மாதுளை மொட்டினைக் கண்டயரும்

திசைகலங்கிய மோனத்தினின் ஒரு
தெற்கத்திக் கள்ளன் தவழ்ந்துவர
வசந்தக்கன்னிகை புன்னகைப்பாள் அவள்
வாயிடைப்பற்களோ மெல்லரும்பு !

காற்றும் நகரமறந்திருக்கும் அதைக்
கத்தி நகர்த்திடும் வண்டொலியில்
நேற்றுமறைந்த பனிப்பெண் சமாதியில்
நல்ல வசந்தம் பிறந்திருக்கும் !

கொன்றை மரத்தைமறைத்து மலர்தங்கக்
கோபுரம்கொண்டொரு தேர்அமைத்து
முன்றிலில்தங்க மலர்ப் படுக்கை தனில்
மோகனப்பெண்ணுடன் தென்றல்வரும்.

வசந்தசேனை அணிவகுப்பால் இந்த
வையகத்தே வானம் தோன்றுமம்மா!
கசப்பும் கற்கண்டு ஆகுமம்மா—இந்தக்
காசினி யெங்கும் இனிக்குமம்மா !



நட்சத்திரம்

பட்டுமுல்லைக் காடிருந்தும்
பறிக்க ஆளில்லே !—அதைப்
பறித்தெடுத்தும் மின்னலிலே
தொடுக்க ஆளில்லே !

கொண்டைக்குருவி கண்டும்கூடப்
பிடிக்க ஆளில்லே !—அதைக்
கூண்டிலேயும் மெல்லப்பிடித்(து)
அடைக்க ஆளில்லே !

கொட்டிவைரம் கிடந்தபோதும்
கோக்க ஆளில்லே !—அதைக்
கோத்துக்கண்ட சரமணிந்தும்
பார்க்க ஆளில்லே !

எல்லாம் புள்ளிச் சேலே ! அதும்
உடுக்க ஆளில்லே !—அதை
எக்களிப்பாய் உடுத்திக்கொண்டும்
நடக்க ஆளில்லே !

குண்டுகோலி உண்டெனினும்
ஆட ஆளில்லே !—அதைக்
கொண்டும்விளை யாட்டுச்சண்டை
போட ஆளில்லே !

பல்லாங்குழி, காய்இருந்தும்
சீந்த ஆளில்லே !—முத்துப்
பரல்இருந்தும் விளையாடத்தான்
தேர்ந்த ஆளில்லே !

விதம்விதமீன் மேய்ந்தும்வலை
வீச ஆளில்லே !—அதை
விரும்பிவாங்க எம்மிலேதான்
பேச ஆளில்லே !



தமிழழகன்

போர்ஹான்ஸ் பற்பசையைப் பற்றி ஆச்சரியகரமான செய்திகள்

இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் தாமாகவே பலர் அனுப்பியுள்ள நற்சாட்சிக் கடிதங்கள் போர்ஹான்ஸ் பற்பசையின் இணையற்ற சிறப்பை எடுத்துச் சொல்லுகின்றன.

சமீபத்தில் நடந்த போர்ஹான்ஸ் பளிச்சிடும் புன்னகைப் போட்டியின்போது பல பேர்கள் தாங்களாகவே பல கடிதங்கள் எழுதி அனுப்பி இருந்தார்கள். போர்ஹான்ஸ் பற்பசையின் சிறப்பை அவை அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சிலர் தங்களைப்பற்றிச் சொல்லிக்கொள்ளும் விபரங்களைப் படியுங்கள்:—

"என்னுடைய வயது இப்போது 65. ஒரு பல்லாவது சொத்தை இல்லை. பொய்ப் பல்லுமில்லை. எனக்கு ஈறு கோளாறுகள் எதுவுமில்லை. பற்கள் உறுதியுடனிருக்கின்றன . . . இவை யனைத்திற்கும் காரணம் நான் தவறாது போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிப்பதுதான்"

"பல்வலி என்றோ ஈறுக் கோளாறு என்றோ என்னிடம் வரும் நோயாளிகளுக்கு எல்லாம் நான் எப்போதும் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிக்கும்படி சிபார்சு செய்து வருகிறேன். இதற்காக அவர்கள் எல்லோரும் எனக்கு மிக்க நன்றி தெரிவிக்கிறார்கள்."

"1935-ம் ஆண்டு நான் முதன் முதலாக போர்ஹான்ஸ் பற்பசை உபயோகிக்க ஆரம்பித்தேன். அதற்கு முன்பெல்லாம் என்னுடைய ஈறுகளிலிருந்து ரத்தம் கசிந்துகொண்டே இருக்கும். இப்போது என்னுடைய பல்வரிசை மற்ற இளைஞர்களின் பல்வரிசைகளைக் காட்டிலும் மிகவும் உறுதியுடன் இருப்பதுமன்றி எனக்கு ஈறுகளின் கோளாறுகளே கிடையாது. இதைப்பற்றி மிகப் பெருமையுடன் கூறிக்கொள்ளுகிறேன்."

போர்ஹான்ஸ் பற்பசை டாக்டர் ஆர். ஜே. போர்ஹான்ஸ் என்னும் அமெரிக்க பல் டாக்டரால் கண்டுபிடிக்கப்பட்டது. போர்ஹான்ஸ் பற்பசை ஒன்றில்தான் ஈறுகளுக்கு உறுதியளிக்கும் டாக்டர் போர்ஹானின் தனித் துவர்ப்புப் பொருள் கலந்திருக்கிறது.



போர்ஹான்ஸ்

பளபளக்கும் முத்துப்பல் வரிசைக்கும், ஆரோக்கியமான ஈறுகளுக்கும் போர்ஹான்ஸ் பற்பசை இன்றியமையாதது

5. 23

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.



நால்வர் வாழ்வுக் காட்சிகள்

சுந்தரர் : ஆலால சுந்தரர் கைலாயத்தில் சிவபிரானுக்குத் தொண்டு புரியும் அடியார்களில் ஒருவர். ஒரு நாள் நந்தவனத்தில் அனிந்திதை கமலினி இருவரையும் சந்தித்து அவர்கள் அழகில் மயங்கிக் கடமையை மறந்து விடுகிறார். ஆலாலரின் மனக் குறிப்பை அறிந்து சிவபிரான் அவரை மண்ணுலகில் பிறந்து வாழ்க்கை இன்பங்களை நுகர்ந்த பின்பு கைலாயம் வருமாறு பணிக்கிறார். அதன்படியே ஆலாலர், சுந்தரமூர்த்தியாகவும் அனிந்திதை கமலினி இருவரும் பரவை, சங்கிலி என்ற பெயருடனும் பூலோகத்தில் பிறக்கிறார்கள். தம்பிரான் தோழராகிய சுந்தரர் திருவாரூர்க் கோயிலில் பரவைநாச்சியாரையும் திருவொற்றியூர்க் கோயிலில் சங்கிலியாரையும் சந்தித்து முன்னை ஊழ்வினை கடைக்கூட்ட நியதியின்படி இருவரையும் மணஞ் செய்து கொள்ளுகிறார். பின்னர் சுந்தரர் தென்னாட்டில் தல யாத்திரையை மேற்கொண்டு, சிதம்பரம் சென்று பொன்னம்பலத்தே ஆனந்தக் கூத்தாடும் எம்பிரானின் அழகைக் கண்டு உள்ளம் உருகப் பாடிப் பரவசமடைகிறார்.



திருநாவுக்கரசர்: திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் வீட்டுக்கு விருந்துண்ண வருகிறார். அடிகளின் மகன் இலை அறுத்து வர வாழைத் தோட்டத்துக்குச் செல்கிறான். அங்கே அவனைப் பாம்பு தீண்டி விடுகிறது. விஷம் தலைக்கேறுமுன் வாழை இலையோடு வீட்டுக்குள் வந்து மயங்கி வீழ்ந்து விடுகிறான். பெற்றோர் கலங்குகின்றனர். உண்மை தெரிந்தால் விருந்தினரான நாவுக்கரசர் உண்ண மாட்டாரே என்று எண்ணி, மகனின் சவத்தை ஓரத்தே மறைத்து வைத்துவிட்டு, ஒன்றும் நடக்காததுபோல மலர்ந்த முகத்தோடு நாவுக்கரசரை விருந்துண்ண அழைக்கின்றனர் தம்பதிகள். திருநாவுக்கரசரோ தமது ஞான நோக்கால் நிகழ்ந்ததை அறிந்து கொண்டு விடுகிறார். மகனின் சவத்தை ஆலயத்தின்முன் கொண்டுவரச் செய்து பதிகம் பாடுகிறார். தூங்கியவன் விழிப்பதுபோல் உயிர்பெற்றெழுகிறான் அரவு தீண்டிய அப்பூதியடிகளின் மகன். நாவுக்கரசர் திருக் கயிலாய யாத்திரைக்குக் கிளம்புகிறார். உடல் அழிந்தாலும் உமையொரு பாகனைக் கயிலாயத்தில் கண்டு களிப்பதென்ற அவரது வைராக்கியத்தைக் கண்டு தடுத்தாட்கொண்ட பெருந்தகையான எம்பெருமான் 'நாவுக்கரசனே! நான் கயிலாயத்தில் வீற்றிருக்கும் கோலத்தை நீ திருவையாற்றில் கண்டு மகிழலாம்' என்று அசரீரியாக மொழிகிறார். உடல் சிலிர்க்க உள்ளம் பரவசமடையத் திருவையாறு திரும்புகிறார் நாவுக்கரசர். பொய்கையிலே மூழ்கி எழுந்தவரின் முன்னே திருக்கயிலாயக் காட்சி காத்துக் கிடக்கிறது. இரு கரங்களையும் சிரமேற் கூப்புகிறார். கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிகின்றன.



மாணிக்கவாசகர்: பாண்டிய மன்னன் தன் அமைச்சராகிய திருவாதவூரரை நல்ல குதிரைகள் வாங்கி வருமாறு பெரும் பொருள் கொடுத்து அனுப்புகிறான். நடுவழியிலே ஒரு குருந்தமர நிழலில் ஒளிமயமான ஞானபுருஷன் ஒருவர் உட்கார்ந்திருப்பதைக் காண்கிறார் அவர். அந்த ஞானாசிரியனுக்கு அடிமையாகி உபதேசம் பெற்று மாணிக்கவாசகர் என்னும் தீட்சா நாமம் கொண்டு குதிரை வாங்கக் கொணர்ந்த பொருளையெல்லாம் அடியார் பணிக்கும் திருப்பெருந்துறையில் சிவன் கோயில் கட்டுவதற்கும் செலவழிக்கிறார். நாட்கள் மறைகின்றன. நடந்ததை அறிந்த மன்னன் மணிவாசகரைக் கொதிக்கும் ஆற்று மணலில் நிறுத்திக் கொடுமைப்படுத்துகிறான். மணிவாசகர் அண்ணலை எண்ணி அழுகிறார். அவர் கதறல் இறைவன் திருச்செவிகளை எட்டுகிறது. அடியார்க்கு அடியானாகிய அம்மையப்பன் அடுத்த விநாடியில் ஆயிரமாயிரம் குதிரைகளோடு தானே குதிரைக்காரனாகப் பாண்டிய மன்னனின் முன் தோன்றுகிறான். குதிரைகள் வந்ததும் பாண்டியன் மணிவாசகரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறான். அன்று முதல் வாதவூரர் சிவனடியாராகிறார். தலங்கள் தோறும் சென்று நாத்தழும்பேற நாதன் புகழ் பாடிக் களிக்கிறார். ஈழ நாட்டிலே பௌத்தர்களை வாதிலே வென்று சைவ சமயத்தின் பெருமையை உயர்த்துகிறார்.



சம்பந்தர்: ஞானசம்பந்தக் குழந்தை சப்பாணி கொட்டி விளையாடுவதைப் பெற்றோர் பார்த்து மகிழ்ந்து போகிறார்கள். ஒரு நாள் தகப்பனார் சிவபாத இருதயர் ஆலயத்தின் எதிரிலுள்ள பிரம்ம தீர்த்தக் குளக்கரையில் குழந்தையை உட்காரச் சொல்லிவிட்டுக் குளிக்க இறங்குகிறார். குழந்தைக்குப் பசி எடுக்கிறது. சாதாரணப் பசியா? ஞானப் பசி. சுற்றுமுற்றும் பார்த்தால், திருத்தோணி நாதர் கோபுரம் ஓங்கி உயர்ந்து நிற்கிறது. 'அம்மே! அப்பா!' என்று கூவியபடி கண்களைக் கசக்கிக் கொண்டு அழுகிறது குழந்தை. உமையொருபாகன் மலைமகளுடன் ஓடோடி வருகிறான். அழுது கொண்டிருந்த குழந்தைக்கு உமை தன் திருமுலைப்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்து ஊட்டுகிறாள். பாலோடு தெய்வீகத்தன்மையும் சிவ ஞானத்தையுமே புகட்டுகிறாள். பாம்பு தீண்டி இறந்த பூம்பாவையின் எலும்புகளுள்ள குடத்தைத் திருக்கபாலீச்சரத்து மதிலருகில் அம்முகத்தில் வைத்துப் பத்துத் திருப்பதிகங்கள் பாடுகிறார் சம்பந்தர். பாடி முடிந்ததும் குடம் உடைந்து அதிலிருந்து பன்னிரண்டு வயது இளம் பெண் ஒருத்தி எழுந்து நிற்கிறாள். இந்த அதிசயத்தை எல்லோரும் கண்டு மெய் சிலிர்க்கின்றனர். சமயக் குரவர் நால்வரின் வாழ்க்கைக் காட்சிகளை அற்புதமாக வரைந்து அளித்திருக்கிறார் நமது ஓவியர் வினு.

உயிர் விளக்கு

வை. சுப்ரமண்யம்

அவள் ஒரு ரிக்ஷாவில் வந்து இறங்கினாள். ரிக்ஷாக்காரன் அவளது உடைமைகளை ஒவ்வொன்றாகத் தரை மேல் இறக்கி வைத்தான். நிறத்தைத் தரு விழுங்கிக் கொண்டிருந்த நிலையில் ஒரு டிரங்க், ஒரு பெரிய டின், கப்பாணிக் கயிறு போட்டுக் கட்டிய படுக்கை ஒன்று—இவைகளே அவள் கொண்டு வந்தவை.

நான் வாசல் உள் ஜன்னலிலிருந்து அவள் வருகையைக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

"வாடியம்மா, குழந்தை! பீமனைப் போல இருந்த உன் தகப்பனை வாரிக் கொடுத்துட்டு இப்படி ஒண்டிக்கட்டையா வரணும்னு உன் தலையிலே எழுதியிருக்கா?" என்று என் தாயார் வரவேற்புரை கூறினாள் அவளுக்கு.

கைக்கு ஒன்றாக இரண்டு சாமான் களைத் தூக்கினாள் அவள்.

"உன்னாலே தூக்க முடியுமா? அப்படியே வச்சுட்டு வா. நான் அவனை எடுத்து வைக்கச் சொல்றேன். நல்ல வேளையா அவன் வெளியிலே வாசல்லே போகாமே இருக்கானே இங்கே.... பட்டப்பா! அந்தப் பெண் ராமி வந்திருக்காள். அவள் பெட்டி படுக்கையைச் சித்தே உள்ளே கொண்டு வாயேன்" என்று எனக்குக் கட்டளையிடுவதில் அம்மா தன் பேச்சை முடித்தாள்.

வளைப் பாம்பு வெளியில் தலைநீட்டுவது போல் நான் வெளியில் வந்தேன்.

"இருக்கட்டும், அத்தை! இதெல்லாம் அப்படி ஒண்ணும் கனமில்லே..." என்று கையில் எடுத்தவைகளுடன் உள்ளே வந்து கொண்டிருந்தாள். நான் வெளியே வருவதற்குள் கூடத்துக்கு வந்து விட்டாள் அவள்.

தின்னத் தூக்கப்போன என்னைப் பார்த்தது—பாராதது ஆகிய ஓர் இடை நிலையில் தடுத்தாள் அவள். "இருக்கட்டும்; உங்களுக்குச் சிரமம் எதற்கு? நானே எடுத்து வருகிறேன்" என்றாள்.

அவள் இன்னும் சில நிமிஷங்கள் வரை எங்கள் விருந்தாளியாக இருக்கப் போகிறவள். அதன் பிறகு நிரந்தரமாக எங்கள் குடும்பத்தில் ஒரு—மூன்றாவது என்று கூட இலக்கமிட்டுச் சொல்லி விடலாம்—அங்கத்தினராக இருந்துவிடப் போகிறவள். இரண்டே அங்கத்தினர்கள் கொண்ட குடும்பத்திலிருந்து மூன்றும் அங்கத்தினராக எங்கள் குடும்பத்தில் இணைந்து விட வந்திருக்கிறாள். ஒரு மாத காலத்துக்கு முன்பு என் மாமா இறந்து விட்டார். போய்ப் பார்க்கச் சென்றிருந்த என் தாயார் அவளை இங்கேயே வந்துவிடச் சொல்லி விட்டு வந்திருப்பதாக என்னிடம் சொல்லியிருந்தாள். கடைசிப் பிடிப்பாக இருந்த தகப்பனாரும் போய் விட்ட பிறகு ராமிக்கு என் தாயாரைத் தவிர துணை-உறவு என்று சொல்லிக் கொள்ள வேறு மனிதர்கள் யாரும் இல்லை.

விருந்தாளி வந்த சந்தடி காப்பியில் ஆரம்பமாயிற்று. அவளேதான் 'மள மள' வென்று காப்பி போட ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள் என்பதை நான் இருந்த அறையிலிருந்தே கவனித்தேன். இடம் கிடைத்த சுருக்கில் வெந்நிப் பூச்சி ஓடிஓடி வலை கட்டுமே, அதைப் போல நான் அந்த அறைக்குள்ளேயே 'ரவுண்ட்' அடித்துக் கொண்டிருந்தேன். அம்மா உபசாரம் பண்ணுகிற பெயரில் காப்பிக் கடை முன்னும் பின்னும் விசிறியை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாளே தவிர அவளால் ஒன்றும் முடியாது. தவிர, விருந்தாளிக்கு ஒரு 'முழுப் பாத்திர'த்தின் மதிப்பு வைக்க வில்லை அம்மா என்பதை அவள் உள்ளம் அறிந்த நான் அறிவேன். சின்னப் பெண் தானே அவள் என்ற காரணம் ஒன்று இதற்கு: மற்றப்படி வேறு காரணங்களும் உண்டு என்பதை மட்டும் இப்போதைக்குச் சொல்லி வைக்கிறேன்.

வாங்கின இரண்டு மூன்று நாட்களுள் கொட்டகைக்குள் பழகிக் கொண்டு விட்ட பசுவைப் போல் வீட்டுக் காரியங்களில் தன்னைப் பிணைத்துக் கொண்ட ராமி ஒரு பழைய மனுஷி போல் பழக ஆரம்பித்து விட்டாள். கப்பல் போல் பெரிய வீடு அது. நானும் அம்மாவும் மட்டும் இத்தனை நாள்வரை ஆளுக்கொரு மூலையில் இங்கே புழங்கிக் கொண்டிருந்தோம். இப்போது ராமி, கிளைக்குக் கிளை தாவி உட்கார்ந்து பார்த்து நிம்மதி காண முயன்ற சிட்டுக் குருவி போல் சந்தைக் கொரு தரம் வீடு நெடுகிலும் புழங்கிக் கலகலப்பை யுண்டு பண்ணிக் கொண்டிருந்தாள்.

அவள் சலனம் முழுவதையும் நான் பார்த்துக் கொண்டு மட்டும் இருந்தேனே தவிர, அவளிடம் பேசிப் பழகத் தொடங்கவில்லை. அம்மாவின் நிழலில் இருந்து பழகிவிட்ட நான் அவளுடைய நெஞ்சின் நினைவு போலும் அவளது நடப்பைப் போலும்தான் இயங்கியாக வேண்டும். இப்படித்தான் அவள் எதிர் பார்த்திருப்பாள். மேலும், ராமி சின்ன வயசிலெல்லாம் எங்கள் வீட்டுக்கு வந்து எங்களோடு பழகியதில்லை. நாங்களும் அடிக்கடி மாமாவின் வீட்டுக்குப் போனதில்லை. அம்மாவுக்கும் மாமாவுக்கும்—ஏன், மற்ற எந்த மனிதர்களிடமுமே கூட ஒட்டுதல் இராது. அதனால் இக் கரையிலுள்ள தனி மரம் போல் நாங்களும் அக் கரையிலுள்ள தோப்பைப் போல் மற்றவர்களும் இருந்து விடும்படியாயிற்று.

இந்தக் காரணங்களினால் ராமியிடம் நான் இயல்பாகப் பேச முடியவில்லை; பழக முடியவில்லை. அவள் ஒரு விளக்குப் போல் அந்த வீட்டில் இயங்கிக் கொண்டிருந்தாள். அவசியமானதற்குத் தவிர மற்றபடி அம்மாவிடம் கூட அவள் அதிகம் பேசவில்லை. வீட்டுக்குள் நடமாடும் போது மட்டும் விளக்கின் நிழல் இங்கும் அங்கும் சஞ்சரிப்பது போலிருக்கும். வீட்டின் எந்தப் பகுதியில் அவள் இருக்கிறாள் என்பது பாத்திரங்களின் சிறு ஓசையினாலோ அல்லது அவள் சிலசமயம் கீழ் ஸ்தாயி





யில் ஏதாவது பாட்டின் அடிகளைப் பாடும் போதோதான் தெரியும். அவள் எங்கிருந்தாலும் என் மனம் மட்டும் அவளைச் சுற்றத் தொடங்கியது.

அம்மா, கொஞ்சம் வியாதிக்காரி. நீரிழிவு பற்றியிருந்தது. வியாதியைக் கொண்டாடவும் அவளுக்குப் பிடிக்கும். இத்தனை நாள் அவளுக்கு நான் செய்த தொண்டுகளில் வீட்டுக்குள்ளேயே நடைபெற வேண்டியவை பெரும் பாலானவைகளையும் அவள் ராமியிடம் மாற்றி விட்டாள். கடையில் வாங்க வேண்டிய மருந்து, ரொட்டி வகையறா மட்டும் என் தொண்டுகள்.

ராஜபுதனத்துச் சக்கரவர்த்தினிகளின் மண்டபங்களில் கிடக்கும் திண்டுகள் போல் அம்மாவும் நடுக்கூடத்தில் ஒரு கட்டில் போட்டுக் கொண்டு வீட்டை அரசாட்சி செய்து கொண்டிருந்தாள். பாதிப்பொழுது அந்தக் கட்டில் காலியாகவும்—ஆனால் மெத்தை விரித்தும் கிடக்கும். படுத்த படுக்கை என்ற நிலை இல்லாததால் மேற்பார்வைப் பணியில் வீட்டில் இங்கும் அங்கும் நடமாடுவாள். பணத்துக்குப் பஞ்சமில்லாததால் டாக்டருக்குச் செலவழித்து வைத்தியம் நடந்து கொண்டிருந்தது. டாக்டர் பல சமயங்கள் வீட்டுக்கு வருவார். அம்மாவும் டாக்ஸி வைத்துக் கொண்டு டாக்டர் வீட்டுக்குப் போய்ப் போய் வைத்தியம் செய்து கொண்டு வருவாள்.

ராமி வந்தபின் ஒருநாள் அம்மா வெளியில் புறப்படுகிற சந்தர்ப்பம் வந்தது. டாக்டரிடம் போய்விட்டு மயிலாப்பூர் கோவிலுக்கும் போய் வருவதாகச் சொல்லி என்னிடம் டாக்ஸி கொண்டு வரச் சொன்னாள் அவள். டாக்ஸியில் ஏறுமுன் வாசல் நிலைப்படியருகில் நின்று கொண்டு, உள்ளே எச்சரிக்கையாகப் பார்த்தபடி என்னிடம், ''வயசு வந்த பெண் அவள். அவளிட்டே போய்ச் சிரிச்சுச் சிரிச்சுப் பேசி வைக்காதே. அதுவும் உன்னை அண்ட விடாதபடி பார்த்துக்கோ. போனதும் வந்ததுமா வந்துடறேன்'' என்றாள் அம்மா.

எனக்கு முதன் முதலாக அவள் பேச்சைக் கேட்டுச் சிரிப்பு வந்தது. எனக்கும் இருபத்தாறு வயசாகிறது. என்னை இடுப்பில் தூக்கிவைத்துக் கொள்ளாத குறையாக என்னைக் குழந்தையாக்குகிறாளே என்று எண்ணினேன். இதுகாறும் ஒரு நிலையில் அம்மாவுக்குக் கைகட்டி வாய் புதைத்து நின்ற உள்ளம் சற்றே புரண்டது. அந்தப் புரட்சிக்கும் 'அவளேதான் காரணம்!

அரைமணி நேரம் கழித்து ராமி என் அறை வாசற்படி அருகில் வந்து நின்றாள்.

''நீங்கள் இப்பொழுது சாப்பிடுகிறீர்களா, இல்லே, அத்தை வந்த பிறகு சாப்பிடுகிறீர்களா?''

நான் எழுந்து அவள் அருகில் வந்தேன். அவள் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். அத்தனை அருகிலும் இப்போதுதான் முதன் முதலில் நான் அவளைப் பார்த்தேன்: அவள் குரலும் இப்போதுதான் இப்படிக் 'கணீ'ரென்று கேட்டது. அவள் என் காதுகள் வழியாகவும் கண்கள் வழியாகவும் என் உள்ளத்தில் சிலையாய்ச் சமையப் புகுந்து விட்டாள்.

''நான் அப்புறம் சாப்பிடுகிறேன்; அம்மா வரட்டும். ஆனால் முதலில் கொஞ்சம் காப்பி கலந்து கொடேன்—உன் கையால்'' என்றேன். அம்மாவின் லட்சியத்துக்குப் புறம்பாக நடக்க முதல் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது எனக்கு. 'உன் கையால்' என்று சொல்வதற்குரிய தைரியமும் என் மனத்தில் புதைந்து கிடந்திருக்கிறதே என்று நினைக்க எனக்குப் பேராச்சரியமாக இருந்தது. அந்தச் சொற்களால் உணர்வு மாற்றம் ஏற்பட்ட ராமியும் தாழ்த்திய தலை நிமிராமலே திரும்பிச் சென்றாள்.

அவள் முகம் உருண்டை முகம்; கிராமச் சூழ்நிலையில் வளர்ந்திருந்ததால் சரீரத்தில் ஒரு மதமதப்பு. அது இந்தப் பட்டணத்துச் சோற்றினால் கரைந்துவிடும் சிறிது நாட்களில். அவள் கறுப்புத்தான். கறுப்பு என்பதனால் என் மனம் குறைந்து கொள்ளவில்லை. கறுப்பிலும் வெளுப்பிலும்' என்ன இருக்கிறது என்று என் 'அம்மாவிடம் நான் எத்தனையோ முறை வாதமிட்டிருக்கிறேன்—அவள் இந்தப் பிரச்னையை எப்போதாவது கிளப்பிய போதெல்லாம் கோயில் சிலைகள் கறுப்பாகத்தா னிருக்கின்றன. அவற்றின் கொள்ளை அழகுக்கு நம் மனித இனத்தின் அழகை உவமைக்குக் கொண்டு போகிறோமே, இது பேராசையல்லவா?

ராமியின் கண்களை இப்போதுதான் அருகில் கண்டபின் எனக்கு அவற்றின் மருட்சியும் அழகும் புரிந்தன. அவள் இந்தத் தனிமையையும் என்னிடம் பேச நேர்ந்ததையும் கண்டு அப்படி ஒரு மருட்சியில் தவித்திருக்கிறாள்; ஆனால், அந்த மருட்சியே அழகுக்குச் சாட்சியாக நிற்கிறது என்பது அதைக் கவனிக்கவும் ரசிக்கவும் ஒரு ஆன்மா இருந்தால்

தான் தெரியும். நான்தான் அந்த ரவிக்கு அது எப்போது கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருக்கிறேனே...!

ஆவி, மணம், ருசி இவற்றுடன் வந்த காப்பியை ரசித்தும் குடித்து விட்டு நிமிர்ந்தேன். ராமி இப்போது நிமிர்ந்த தலை குனியாமல் நின்று , கொண்டிருந்தாள். இந்த ஐந்து நிமிஷங்களில் அவளிடம் ஒரு மாறுதல்...தலையைப் படியச் சீவி பிருந்தாள். பௌடரை வாரி முகத்தில் அப்பிக் கொண்டிருந்தாள். அதன் புதுமணம்தான் என்னிடம் அவள் காப்பியைக் கலப்பதற்கு இடையே கண்ணாடி முன்பும் நின்று சிறிது சிங்காரித்துக்கொண்டு வந்திருக்கிறாள் என்று காட்டிக் கொடுத்தது.

"காப்பி பிலே ஜோர்! ராமி...அபிராமிதானே உன் முழுப் பெயர்?...நீ வந்த பிறகுதான் இந்த வீட்டில் காப்பி ருசிக்கிறது... காப்பி என்ன, சமையல், சாப்பாடு எல்லாமே நீ வந்த பிறகுதான் நன்றாயிருக்கின்றன..." என்றேன் உபசாரத்துக்கு. உண்மையும் அதுதான்.

"இத்தனை நாள் எல்லாம் எப்படி யிருக்கிறதோ என்று பயந்து கொண்டிருந்தேன். அத்தை ஒன்றுமே சொல்கிறதில்லை. நீங்களும்தான் என்னிடம் பேச றதே..." என்று மீண்டும் தலைகுனிந்தாள் ராமி.

"அம்மா எதிரில் உன்னுடன் பேச முடியாது ராமி!" என்று உண்மையைப் படித்தேன்.

"அத்தான்! நீங்கள் இப்படி இருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் எல்லாம் பட்ட ணத்திலே நாகரிகமாக இருக்கிறவர்கள், தாராள மாகப்பேசுவீர்கள், உங்களுடன் வெளியில் போய்..." இப்போதும் அத்துடன் நிறுத்தி விட்டாள் பேச்சை. அவள் பேச்சின் பொருள் என்னைக் குத்தாமல் இல்லை.

"உங்களை ஒன்று கேட்கிறேன்; சொல்வீர்களா?"

"என்ன ராமி?"

"நான் அழகா யிருக்கிறேனா?"

எந்தப் பெண்-ஏன், வயதான ஸ்திரீகூடத்தான்—கேட்காத அல்லது நினைக்காத கேள்வி இது?

"உன் அழகைப் பற்றி என்ன இப்போது ?"

"பார்த்தீர்களா! அதுதான் இப்படி விட்டேற்றி யாக என்னை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கிறீர் கள்...நான் அவ்வளவாக அழகில்லாதவள் என்பது எனக்குத் தெரியும். எனக்குப் படிப்பும் இல்லை. நான் அட்டைக் கரி வேறே. பைத்தியம் மாதிரி நான் ஏதாவது என் மனசில் நினைத்துக் கொண்டால் சரி யாகப் போய்விடுமா? இந்தப் பட்டணத்தில் எத்த டாக்டர், வக்கீல், ஜமீன்தார் வீடுகளில் உங்கம்மா எத்தனை பெண்களைப் பார்த்து வைத்திருக்கிறார் தெரியுமா...! உங்கள் மனசே யார்மேல்....நான்தான் நம் வீட்டுவாசல் வழி தாண்டிப் போகிற பெண்களை என்னிப் பார்த்திருக்கிறேனே ! ஆயிரம் பேருக்கு மேல்! ஆயிரம் பேர்! அத்தனை பேரில் யார்...."

அவள் பேச்சில் வெகுதூரம் போய் விட்டாள், பின்னே வந்த வண்டி நம்மை 'ஓவர்டேக்' பண்ணிக் கொண்டு முன்னே ஒரு மைல் சென்று விட்டமாதிரி.

"எனக்குக் கொஞ்சம் பேச இடம் கொடு."

அதற்குள் வாசலில் ஓடிய கார்களில் ஒன்று நின்ற மாதிரி இருந்தது. அம்மாவின் நினைவு வந்தது சட் டென்று. அவளுக்கும் நினைவு வந்திருக்க வேண்டும். தலைப்பின்னலை அவிழ்த்துக் கொண்டே சமையல் அறைப் பக்கம் சென்றாள்.

டாக்ஸியிலிருந்து அம்மா இறங்கி வந்தாள்.

"இன்றைக்கு இஞ்செக்ஷன் பண்ணினாரா டாக்டர்?" என்று உபசாரமாகக் கேட்டேன்.

எனக்குப் பதில் சொல்வதில் வேகம் காட்டவில்லை அவள்; ஆனால் அவள் கண்கள் வேகமாகச் சுழன்றன.

"காப்பி சாப்பிட்டாயா, என்ன?" என்றாள் மேஜை மேலிருந்த டபரா தம்ளரைப் பார்த்துக் கொண்டே.

"ஆமாம்; கொஞ்சம் தலையை வலிக்கிறது."

"வலிக்கும், வலிக்கும்!" என்று அறை வாசற்படி அருகில் வந்து நின்றுகொண்டு, "ராமி, இங்கே வா!" என்று இரைந்தாள். வெளியில் போய்விட்டுவந்திருந்த படபடப்பின் தொடர்ச்சியிலேயே அதை அதிகப் படுத்த வழி செய்து கொண்டிருந்தாள்.

அணில்போல் உடலைக் குறுக்கிக் கொண்டு அம்மா வின் எதிரே மௌனமாக வந்து நின்றாள் ராமி.



"இங்கே என்ன நாடகம் நடந்தது? உள்ளதைச் சொல்லு!"

"ஒன்றுமில்லையே அத்தை!"

"ஒன்றுமில்லையா? ஒன்றுமில்லாத உனக்கு உன் சத்தம் சிரிக்கிற நிலைமை வரப்படாதுன்னு நீ மணம் பெற்றிருக்க வழி பண்ணினேனே; அதுக்குப் பிரதியா என்கிட்டேயே உன் கத்த வித்தையைக் காட்டறயா?...இது என்ன இங்கே!"

மூன்று பேரும் கீழே குனிந்து பார்த்தோம். மூன்று நான்கு ரோஜா இதழ்கள். என்னுடன் ராமி பேசிக் கொண்டிருந்த போது தலைப் பின்னலை விஷமம் செய்த போது உதிர்ந்திருக்கலாம் அவை.

"இங்கே வந்து நின்னுண்டு அத்தான் கிட்டே கொஞ்சிக் குலாவினாயா?"

"காப்பி கேட்டார்..."

அம்மா விரைவாகத்தான் நடந்து கொண்டு விட்டாள். என்னென்னவோ அவளையும் என்னையும் பிடித்துக் காய்ச்சிய பிறகு முடிவாகச் சொன்னாள்:

"பட்டப்பா! நாளைக்கே கொண்டு போய் இவளை சேவாசதனத்திலே சேர்த்து விடறேன். இவள் மனசிலேயே அந்த யோசனையைத்தான் எல்லாரும் சொன்னா. நான்தான் இவளை இங்கே அனுப்பி வைக்கச் சொல்லிவிட்டு வந்தேன். ஏதோ இந்த வீட்டு வேலையைச் செய்துண்டு எனக்கும் ஒத்தாசையாக இருந்தாள்...இதற்கு வயிறு ரொம்ப ரெண்டு பருக்கை தானேன்னு பார்த்தேன். தலைக்கு மேலே மிஞ்சி விட்டது இதன் போக்கு!..."

தன் தீர்மானத்தில் பிடிவாதமாகத்தான் இருந்தாள் அம்மா. ராமியை அநாதாசிரமத்தில் சேர்ப்பதற்குரிய பாரங்கள் வாங்கி வந்தாகி விட்டது. மானேஜர் உத்தரவுப்படி தனக்கே 'புன்மின் உத்தரவு' அடித்துக் கொள்ள நேரும் துர்ப்பாக்கியம் பிடித்த டைபிஸ்ட் போல நானே அவளுக்காக அந்தப் பாரங்களைப் பூர்த்தி செய்தேன்.

அப்போதும் அம்மா தன் கடைசி அஸ்திரங்களை எடுத்துக் கொண்டாள்:

"அவளை அங்கே கொண்டு சேர்த்த பிறகும் அங்கே போய்ப் பார்த்துப் பேசிக் கிளி வைப்பாயோ?"

"ஏனம்மா இப்படியெல்லாம் பேசிச் சின்னதைப் பெரிது பண்ணுகிறே?" என்றேன் நான்.

"நானா பண்ணுகிறேன்? பெரிசைச் சின்னதாக அடிக்கக் கங்கணம் கொண்டு விட்டாயோடா? நம்ம குடும்பம் எப்படிப் பட்ட குடும்பம், தெரியுமா? ஐம்பது வேலிக் குடும்பம்! அதுக்குக் கறை தேட முனைச்சயே!...நான் உனக்கு விளக்கேத்தி வைக்க என்ன கனவெல்லாம் கண்டுண்டிருக்கேன், தெரியுமா?"

எனக்குத் தெரியும். அம்மாவின் ஒரு வகை அலட்சியப் போக்கு பற்றிக் குறிப்பிட்ட போது 'வேறு காரணங்களும்...' என்றேனே...இந்த வகைக் கனவுகள்தான் அவை!

"அவளை மறந்து விடுகிறேன் என்று எனக்குச் சத்தியம் பண்ணிக் கொடு!"

நான் துள்ளி எழுந்தேன். "ஒருவரை மறப்பதற்கு எதற்கம்மா சத்தியம்? நினைவில் வைத்துக் கொள்ளத்தான் சத்தியமும் சாட்சியமும் வேண்டும்!" என்றேன்.

"அப்படியானா அவளை மறந்துடறதாக வெறுமேயாவது சொல்லு. இரு; அவளைக் கூப்பிடறேன். அவளுக்கு நேரே சொல்லி விடு. நாளைக்கு அவளும் உன்னைத் தேடிக் கொண்டு..."

அம்மாவின் போக்கு எனக்கு அவமானமாகத்தான் இருந்தது. அவள் என் பேரில் உயிரையே வைத்திருக்கிறவள். ஆனாலும் இப்படி ஓர் ஆட்டம் அவளை ஆட்டுகிறது. அவள் குறிப்பிட்ட ஐம்பது வேலிகளின் பரப்பில் அநாயாசமாக முளைத்து எழுந்த ஒன்று அவளை அப்படி ஆட்டியது. என்னைப் பெற்ற தாயைப் பற்றிய **அதை** நானே எப்படிச் சொல்ல? அநுமானத்தில் சிக்காததா, என்ன!

ராமியைக் கூப்பிட வாயெடுத்தாள். அம்மாவைத் தடுத்து, "வேண்டாம், அம்மா; அவள் மனசையும் புண் பண்ணாதே! உன் நிழலிலும் நெஞ்சிலும் வாழ்ந்துவிட்ட எனக்கு உன் கட்டளையை மீற வழியில்லை. நான் வாக்குக் கொடுத்தால் போதாதா? அவளை அழைக்க வேண்டாம்!" என்றேன்.

அவள் படபடப்பு அடங்கியது.

டாக்டர் இஞ்செக்ஷன் பண்ணினாரா என்று கேட்ட என் கேள்விக்கு அம்மா பதில் சொல்லவில்லையே தவிர, டாக்டர் என்னிடம் விவரம் சொன்னார். அவள் காலில் ஏற்பட்ட ஒரு புண் அவளைத் தன் வழியில் அடக்கப் பார்க்கத் தொடங்கியிருக்கிறது என்பதைக் கேள்விப்பட்டவுடன் என் மனத்தில் கவலை தோன்றி விட்டது. 'டயாபடீஸ்' நோயாளியின் உடலில் புண் என்றால்...

தினசரி அம்மா இஞ்செக்ஷனுக்காகவும் காயத்துக்குக் கட்டுக் கட்டிக் கொள்ளவும் ஒரு வாரம் டாக்டரிடம் சென்ற பிறகு வீட்டுக்கே டாக்டர் வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. புண்ணுடன் என் அம்மாவும் டாக்டரும் போராடிக் கொண்டிருந்தனர்.

படுத்த படுக்கை என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு ஒரு வாரம் கழித்து ஒருநாள் அம்மா என்னைக் கூப்பிட்டாள்.

"பட்டப்பா! உன்னைப் பற்றி நான் கவலைப்பட ஆரம்பிச்சுட்டேன்..."

"பேசாமல் இரம்மா. உனக்கு என்ன இப்போது? இன்னும் ஒரு வாரம் போனால் எழுந்து விடுவாய்." அவளைப் போய்த் தேற்றல் தேற்றினேன் — கலகலத்துப் போன நெஞ்சின் பலவீனத்தை மறைத்துக் கொண்டு.

"நீ சொல்லிவிட்டால் சரியாய்ப் போச்சாப்பா? என் உள் நிலவரம் எனக்குத் தெரியாதா? உன்னிடம் சொல்லத்தான் கூப்பிட்டேன். எனக்கு இன்னும் நாள் கணக்குத்தான் போட்டிருக்கு. உனக்குச் செக்கச் செவேல ராஜாத்தியாட்டம் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைச்சு, இந்த வீட்டையும் சொத்தையும் ஒப்படைச்சக் கண்ணுலே காண நினைச்சேன்..."

சிவப்பில் என்ன இருக்கிறதோ, தெரியவில்லை! அம்மாவும் பறங்கிப் பழச் சிவப்புத்தான். அவள் மனத்தில் ஐம்பது வேலியின்...அந்த உணர்வு மனத்தில் புரை வைத்து விட்டது அவளுக்கு. இதோ அவள் காலில்கூடச் செக்கச் செவேரென்றுதான் ஒரு புண் வந்து தொலைத்திருக்கிறது. புரை வைக்க நாளைத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறது அது!

"உன் ஆசைப்படியே நான் சிவப்பாக ஒரு பெண்ணையே..."

"இரு, நான் சொல்லி முடிக்கவில்லையே!...அப்படியெல்லாம் நினைத்தேன். உனக்கு வாழ்க்கைப்படப் போகும் ராஜாத்தியுடன் நீ வாழ, நானும் உங்களைப் பார்த்துண்டு வாழப்போறேன்னு நினைச்சேன். இனிமேல் எனக்கப்புறம் உன்னைக் கவனிக்க யாரு இருக்கா? இரண்டு நாளா வியாதியோட போராடிக் கொண்டே மனசோடும் போராடிப் பார்த்ததுலே ஓர் உண்மை தெரிஞ்சுது. உனக்கு வேண்டியதைப் பார்த்துப் பார்த்துச் செய்யும் இந்தப் பெண் ராமியை விட நான் கண்ணுலே பார்க்காத எந்தப் பெண்தான் இன்னும் எப்படித்தான் உயர்த்தியாகச் செய்து விடப் போகிறாள்? இரண்டு நாளா இதே எண்ணம்தான் என் மனசிலே!"

அம்மா வேறு ஜன்மம் எடுத்துப் பேசுகிறாள் என்று நினைத்தேன். வியாதியில் உளறாமல் உண்மையைத்தான் பேசுகிறாளா?...

"என்னைப் பற்றி நீ கவலைப்படாதே அம்மா. உன் உடல்நிலைமை தெளிந்து..."

"என்னைப் பரிட்சை பண்ற டாக்டருக்கே தெரியாது என் நிலைமையைப் பற்றி! உனக்கு என்னடா குழந்தை தெரியும்? நாளை வெள்ளிக்கிழமை தாண்டாது அநேகமா..."

வெள்ளிக்கிழமை வந்தது. அம்மா சொன்னபடி அது தாண்டிச் சனிக்கிழமை வந்துவிடக் கூடாதே என்று கவலைப்பட்டேன். என்னை ஓர் இருள் மூடி வருவதாக ஒரு பயம் சூழ்ந்து விட்டது. அவள் தலைமாட்டிலேயே உட்கார்ந்திருந்தேன்.

"போன வெள்ளிக்கிழமைதானே?... வெள்ளிக்கிழமையும் அதுவுமா 'சத்தியம்' விடச் சொன்னேனே என் குழந்தையை! அதற்குத் தண்டனை வந்து விட்டது இன்னிக்கு. சத்தியம் வைக்க மாட்டேன்னு நீ தீர்க்கதரிசனமாகச் சொன்னயே, அது எவ்வளவு நல்லதாகப் போச்சு!" என்றாள் அம்மா.

நாலு தடவை வாந்தி எடுத்து அவள் அயர்ந்து கிடந்தாள்—கட்டிலில் கிடந்த தலையணைகளுள் ஒரு தலையணையைப் போல. அவள் தலையைக் கோதிக் கொண்டிருந்தேன் நான். கால்மாட்டில் பிழியப் பிழிய, "அத்தை! அத்தை!" என்று கேவிக் கேவி அழுது கொண்டிருந்தாள் ராமி.

"அத்தையைக் கூப்பிடுவதிலே இனி மேல் பயன் இல்லேடி, என் கண்ணே! 'அத்தான்' என்று என் காது கேட்கக் கூப்பிடு. அன்னிக்கு நான் உளறினதை மனசிலே வச்சுக்காதே!" என்று எங்கள் கைகளுக்காகத் தன் கையைத் தூக்கினாள் அம்மா.

கூடத்துக் குத்து விளக்கின் சுடர் மறைந்து அவளை ஒளி உலகில் வரவேற்கப் பயணம் தொடங்கி விட்டது. புரை வைத்த புண்ணினும் அவள் உயிர் தேறவில்லை; இறையுடன் உறைந்து விட்டாள். ஆனால் எங்கள் மனப் புண் புரையோடாதபடி ஆற்றி விட்டாள்.

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

நம்பிக்கையும் நாணயமும் தற்கால நாகரீகத்திற்கு ஏற்றதுமான

வெள்ளி சாமான்கள்


இயந்திரங்கள் உதவியால் விரைவில் தயார் செய்து மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்படும்
நேரில் விஜயம் செய்து தங்கள் தேவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்

*

நாதெள்ள சம்பத்து செட்டி சன் & கோ. (பிரைவேட்) லிமிடெட்

177, சைனா பஜார் ரோடு - - - சென்னை-1

தபால் பெட்டி 1625 • தந்தி: "நாதெள்ள" • போன்: ஷோரூம் 2002 - வீடு 61725



Welded Ornamental Gates, Grilles, Garage Doors Steel sliding doors



"Vikrama" Single & Double Wheel barrows Box and Pan type

Manufactured by:

THE VIKRAMA ENGINEERING COMPANY

ADYAR - - - MADRAS-20

FOR

ELECTRIC MOTORS: 1 H.P. to 30 H.P. Squirrel Cage and Slipring Types, Starters, Cables Electric Motor Pumpsets, Oil Engines, Oil Engine Pumpsets mounted on Trolleys and Baseplates, Lathes, Grinders, Power Hacksaw, Drilling Machines, Plate Bending Rolls etc.

Please write to

THE VIKRAMA ENGINEERING CO. (AGENCIES)

WEST BOULEWARD ROAD TEPPAKULAM P. O. **TRICHINOPOLY**	POST BOX No. 909 10, FIRST MAIN ROAD **GANDHINAGAR** MADRAS-20 (Head Office)	1/11, ERRABALU CHETTY ST. **MADRAS-1** (City Branch)





நெய்தலும் பரதவரும்

கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல் நிலமெனப்படும். அந் நிலத்தில் வாழும் மக்களைப் பரதவர், செட்டியார், பட்டினவர், பரவர், செம்படவர், "மீனவர்" என்று அழைப்பர். இவர்களைத் தவிர ஒரு சில குப்பங்களில் ஆதித்திராவிடர்களும், முகம்மதியர்களும், கன்னியாகுமரி போன்ற பகுதியில் கிறிஸ்தவர்களும் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிலர் எல்லோரையும் ஒரே இனத்தவர்களாக நினைத்து விடுகின்றனர்.

இவர்களுக்குக் கடல்தான் ஜீவநாடி எனலாம். இவர்கள் வசிக்குமிடங்களை, 'பாக்கம்' 'குப்பம்' 'பட்டினம்' என்றும் கூறுகின்றனர். எந்தெந்தக் கடற்கரைப் பகுதிகளில் இவர்கள் வசிக்கின்றனரோ, அந்தப் பகுதிகளேதான், அவரவர்களுடைய சொந்த ஊர். அப்பகுதிகளில் பேசப்படும் மொழிதான் அவர்களுடைய மொழி. பட்டிப்பலம், காட்டுக் குப்பம், அங்களங் குப்பம், பாலர் நடு குப்பம், செங்கல்பட்டு தென் பகுதி மீனவர் குப்பம், நாகையில் வேளாநகர் குப்பம் போன்ற இவர்களது குடியிருப்புக்குச் செல்ல வேண்டுமானால் கால்வாயில் இறங்கி, படகில் பயணம் செய்து, நடந்தும் தான் இன்றும் போக வேண்டும். மழைக் காலங்களில் சில சமயம் சில குப்பங்களுக்குப் போக்குவரத்தே இல்லாமல் போய் விடுவதும் உண்டு.

இவர்கள் குடிசைகளைத் தங்கள் வசிக்கும் இடத்துக்கும் தகுந்தாற்போலக் கட்டிக் கொள்கிறார்கள். சில இடங்களில் கோழிக் கூண்டு வடிவத்தில், ஒரு கோலை மட்டும் குடிசையின் நடுவில் ஊன்றிப் பஞ்சாரம் கவிழ்த்தாற்போல் கட்டுகிறார்கள். குடிசைகளை மணலே தெரியா வண்ணம் சாணத்தால் மெழுகிச் சுத்தம் செய்கிறார்கள். அல்லது அழகான கிளிஞ்சல் ஓடுகளைப் பொறுக்கி வந்து கோலம் போடுவது போல் தரையில் புதைத்து அழகு செய்கிறார்கள்!



குடிசைக்குள் சிறிய பரணை கட்டி, அதன் மேல் மீன் வலைகளுக்கு வேண்டிய சாமான்களை வைத்துக் கொள்கிறார்கள். இவர்கள் வீட்டில் சாதாரணமாகப் பித்தளைப் பாத்திரங்களை விட மண் பாண்டங்களைத் தான் அதிகமாகக் காணலாம். பொதுவாக, இவர்கள் குடிசையை இடம் விட்டு இடம் மாற்றுவதில்லை.

ஆண்கள் கறுத்த மேனியும் கட்டுமஸ்தான தேகமும் உடையவர்கள். கொஞ்சம் குள்ளமானவர்கள் என்றும் சொல்லலாம்.

வீட்டில் இருக்கும் பொழுதும் நாள்கிழமைகளிலும் பருத்தி ஆடைகளையேதான் அணிகிறார்கள். ஆனால் மீன் பிடிக்கும்போது மட்டும் கோவணமும் தலையில் பனை ஓலைக் குல்லாயும் அணிந்து காட்சியளிக்கிறார்கள். ஆண்களில் சிலர் காதில் கடுக்கனும், சிலர் வெள்ளி வளையமும் அணிந்து கொள்கிறார்கள். காது வளையத்தைப் 'பவனி' என்பர். பட்டாக் கத்தியைப் போல் மீன் வெட்டும் கத்தியை எப்பொழுதும் இடுப்பிலோ கையிலோ வைத்திருக்கிறார்கள்.

பெண்கள் நல்ல உயரமாகவும் மாநிறமாகவும் இருக்கிறார்கள். சிலர் கறுப்பாகவும் இருப்பதுண்டு. இவர்கள் அணியும் உடை புடவையும் ரவிக்கையுமே. மீன் கூடைகளை இடுப்பிலோ, தலையிலோ தூக்கிக் கொண்டு வீதியில் வேகமாகப் போகும் இம் மங்கையர்கள் கட்டமைந்த தேகம் படைத்தவர்கள்; நல்ல பல

சாலிகள். மீன் வியாபாரத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதையும் ஒற்றுமையாய்ப் பழகுவதையும் இன்றும் காணலாம். பண்டைக் காலத்தில் இவர்கள் ஓலையைச் சுருட்டித் தோடு போல் காதில் அணிந்திருந்தார்கள். இப்பொழுதோ வளையம், கம்மல் குருட்டு பால், ஜாகோட்டு, தட்டு முதலியவைகளை அணியத் தொடங்கியுள்ளனர்.




பண்டைக் காலத்தில் ஆண்களும் பெண்களும் கொண்டைதான் போட்டுக் கொள்வார்கள். தங்களுக்கு விருப்பமான பூவைத் தலையில் சூடுவதுண்டு. குழந்தை பிறந்ததும், தங்கள் வழக்கப்படி வெள்ளைத் துணியில் படுக்க வைப்பார்கள். குழந்தை பிறந்து ஒன்பதாம் நாள் அல்லது பதினோராம் நாள் ஏணை கட்டுவார்கள். தொட்டில் கட்டுவதில்லை. ஆனால் இப்பொழுதெல்லாம் தொட்டில் கட்டவும் தொடங்கி விருக்கிறார்கள். மூன்றாம் மாதம் வளர்பிறையில் குழந்தையைப் பாட்டனார் அல்லது பாட்டியாரின் மடியில் படுக்க வைத்து நாமகரணம் செய்வார்கள். நாமகரணத்தன்று குழந்தையைக் குளிப்பாட்டிக் கோடியுடுத்தி அழகு செய்வார்கள். அன்று நாமகரணத்துக்கென்று குழந்தையை மடியில் வைத்துக் கொள்பவர்கள் கிழக்குப் பக்கமாக உட்கார வேண்டும். அன்று அவர்கள் உணவில் புலாலும் சேர்ப்பதில்லை.



ருதுவான பெண்ணைக் குடிசையின் வெளித் திண்ணையில் பச்சை ஓலையால் மறைப்புக் கட்டி, உட்கார வைப்பார்கள். பெண் தனிமையில் உட்கார்ந்திருக்கும் வரை தினமும் குளித்த பின் அவளுக்கு நல்ல ஆகாரம் தருவார்கள். மீனவராக இருந்தும் பெண்ணுக்குச் சடங்கு முடியும் வரையில் மீன், இறைச்சி முதலியவை சேர்க்க மாட்டார்கள். மலைவாசிகளும், காட்டுவாசிகளும் ருதுவான பெண் இருந்த குடிசையைக் கடைசியில் கொளுத்தி விடுவார்கள். ஆனால் இவர்கள் ருதுவான பெண் உபயோகித்த பாயையும், பெண்ணின் மாமன் பிள்ளை மறைப்புக் கட்டிய தென்னை ஓலையையும் மட்டுமே கொளுத்திப் போடுவார்கள்.

இரவில் அவளுக்குத் துணையாக வெளித் திண்ணையில் பெண்ணின் பாட்டியோ, தாயாரோ படுப்பார்கள். ருதுவான பின் பெண்களைத் தனியாக எங்கும் அனுப்புவதில்லை. ஒரு மாதமோ மூன்று மாதங்களோ கழித்துத் தங்கள் குப்பத்தில் உள்ள முக்கியமான உறவினர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரியப்படுத்துவார்கள். முகூர்த்தம் குறித்துப் பந்தல் கட்டி, நல்லோரையில் பெண்ணை மனையில் உட்கார வைப்பார்கள். புரோகிதர் வந்து ஓமம் வளர்த்து, வந்துள்ள உறவினர்களுக்கெல்லாம் வணக்கம் செய்யச் சொல்லுவார். பிறகு வண்ணாத்தி வந்து திருஷ்டி கழிப்பாள். சுமங்கலிகள் கூடிப் பிட்டுச் சுற்றுவார்கள். பிட்டு சுற்றும் தட்டில் பிட்டு, பழம், மஞ்சள், குங்குமம், தாம்பூலம் என்று பல பொருள்கள் இருக்கும். பெண்ணுக்குக் கோடிப் புடவையும் எடுத்துக் கொடுப்பார்கள். விருப்பமுள்ளவர்கள் 'மொய்' எழுதுவதும் உண்டு.

கடைசியில் ருதுவான பெண்ணை மனையில் உட்கார வைத்துச் சுமங்கலிகள் மூவர் ஒரு வண்ணாத்தியுடன் ஆலம் தட்டு எடுத்துச் சுற்றுவார்கள். அப்புறமே பெண்ணை வீட்டுக்கு அழைத்துக் கொள்ளுவார்கள். வீட்டு அழைப்பு நாட்களில், இரவில் குறிப்பிட்டவர்கள் கூடித்தெருக்கூத்து ஆடுவதுண்டு. ஒவ்வொரு குப்பத்திலும் அதற்கென்று தனி ஆடைகள் வைத்திருப்பார்கள். திருவிழாக் காலங்களிலும், திருமணத்தின் போதும், சிவராத்திரி யன்றும் தெருக்கூத்து ஏகக் கோலாகலமாக நடைபெறும்.




சாதாரண நாட்களில் வீட்டு விலக்கானால், காலையில் குளித்து விட்டு, வீட்டு வேலைகளைக் கவனிப்பார்கள். ஆண்களும் பெண்களும் நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வதுண்டு. விதவைகள் திலகம் வைப்பதில்லை. குறத்தியர் மூலம் பாட்டுப் பாடி, தங்கள் உடலில் பச்சை குத்திக் கொள்வதில் ஆண்கள் பெண்கள் இருவருக்குமே விருப்பம் அதிகம். திருமணத்துக்குப்பின் கர்ப்பவதியானால், ஏழாம் மாதம் கோடிப் புடவை அணிந்து, தலையில் பூ முடித்துச் சடங்குகள் செய்து, தாயகம் அழைத்துச் செல்வார்கள். முதல் பிரசவம் தாயகத்தில்தான் நடக்கும்.

திருமணத்துக்கு முன் ஆணுக்கும் பெண்ணுக்கும் களவுப் ஏற்படுவதில்லை. திருமணத்துக்கு முன் இரண்டு சம்பந்திகளும் கலந்து பேசித் திருமணத்துக்கு மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு முன்னால், அந்தணர்களை அழைத்து வேதம் ஓதிச் சடங்குகள் செய்து, நவதானியங்களைக் குழியில் கொட்டித் தங்களுக்கு விருப்பமான இடத்தில் பந்தக்கால் நடுவார்கள். இவ் வழக்கம் தொன்று தொட்டு மீனவர்களிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. தற்காலத்தில் சில மீனவர் பெண்களைக் காதல் செய்து, திருமணம் செய்து கொள்கிறார்கள்.


காதல் கடிமணம் காரணமாகப் பெண்கள் திருமணத்துக்கு முன்னும் கர்ப்பவதியாகி விடுவதுண்டு. அப்படி நேரும்பொழுது பெண்ணின் பெற்றோ

பிலோ இருதயநாத்


Stay at the
AURANGABAD
HOTEL
AURANGABAD
Ideal Location
Excellent Service
Airy Rooms
Perfect Comfort
CR
Under the management
of the Central Railway

ரும், பஞ்சாயத்தாரும் கூடிக் கர்ப்பத்துக்குக் காரணமானவனுக்கே அவளைத் திருமணம் செய்துவிடுகின்றனர். நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிதம் வீட்டில்தான் திருமணம் நடைபெறும். வசதிக் குறைவோ பிரார்த்தனையோ இருந்தால் சிலர் கோவிலிலும், சத்திரத்திலும் கூடச் செய்கிறார்கள். இம்மாதிரி காலங்களில் சைவ உணவுதான்.

திருமணமானவனை ஒருவன் காதலித்தால், காதலியைக் காதலனுடன் அனுப்புவதும் அவனிடமிருந்து திருமணச் செலவைப் பஞ்சாயத்தார் மூலம் வாங்குவதும் உண்டு. தவிர, ஒருவரே சகோதரிகள் இருவரைக் காதல் செய்து திருமணம் செய்து கொள்ளும் பழக்கமும் இவர்களிடையே இருந்து வருகிறது.



திருமணத்துக்கு முன் தினம் பெண்ணை மஞ்சள் பூசி, நீராட்டி, மாப்பிள்ளையின் இல்லத்துக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கு அவள் தனி இல்லத்தில் இருப்பாள். மறுநாள் சுமங்கலிகள் சூழத் திருமணப் பந்தலுக்கு அழைத்து வரப்படுவாள். மணமகள், மணமகனின் இல்லத்துக்கு வந்தது முதல், மணமகள் வீட்டார் தங்கள் குப்பத்துக்குப் போகும் வரையில், மாப்பிள்ளை வீட்டார்தான் அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும்.

திருமணத்தன்று, சடங்குகள் செய்வதற்கு மணமகனின் வீட்டார் ஐயருக்கு ஒரு வராகன் அதாவது மூன்றரை ரூபாய் பணம் கொடுப்பார்கள். எல்லாச் சடங்குகளும் இரு கிராமத்துப் பெரியவர்களும் கூடி நடத்துவார்கள். மணமகன் வீட்டார்தான் மணமகளுக்குத் தாலி செய்ய வேண்டும். சிலர் பொன் தாலியைக் காசுபோல் வட்ட வடிவமாகச் செய்து, அதன் மத்தியில், மூன்று நாம வடிவமோ, அல்லது மூன்று கோடுகளோ இருக்கும்படி செய்வர். சில நமது பல் வேரின் வடிவமாக இருக்கும்.

மணமகளுக்குத் தாலி கட்டுவது மாப்பிள்ளைதான். சில குடும்பத்தார் திருமணத்துக்கு முன் தங்கள் குல தெய்வத்துக்கு உயிர்ப் பலி கொடுப்பார்கள். முகூர்த்த நாளைக்குச் சில மாதங்களுக்கு முன் உயிர்ப் பலி கொடுத்து முடித்து விடுவார்கள். ஆனால் பந்தக்கால் நட்டபின் எவ்வித உயிர்ப் பலியும் கொடுக்கமாட்டார்கள். திருமணத்துக்குப் பின் தம்பதிகள் மூன்று நாட்கள் தாயகம் செல்ல வேண்டும்.

மீனவ வகுப்பாரிடம் பண்டைக் காலத்தில் விதவா விவாகம் இல்லை. ஆனால், தற்காலத்தில் சிலர் இளம் விதவைகளைத் திருமணம் செய்து விதவா விவாகத்தை ஆதரிக்கின்றனர். விதவைகள் திருமணமாகும் வரை கொண்டையில் பூ வைத்துக் கொள்வதோ, மஞ்சள் தேய்த்து நீராடுவதோ, நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வதோ இல்லை. இளம் விதவைகள் பஞ்சாயத்தார், பெற்றோர் அனுமதியின் பேரில் தங்கள் மைத்துனர்களையே மறுமணம் செய்து கொள்வர்.

முக்கியமாக, குடும்பத்தில் ஏற்படும் ஒற்றுமையின்மையாலும், கணவனின் துர்நடத்தையாலும் விவாக விலக்கு ஏற்படுவதுண்டு. இந்நிலை ஏற்படும் போது கிராமத்திலுள்ள பஞ்சாயத்தார் முன்னிலையிலும், பெற்றோர்கள் முன்னிலையிலும், கிராமத்திலுள்ள வயதானவர்கள் முன்னிலையிலும், மனைவி தன் தாலியைக் கழற்றித் தன் கணவனிடம் கொடுத்துவிட்டு, கடலில் மூன்றுதரம் முழுகித் தாயகம் செல்ல வேண்டும்.

கணவன் வேண்டாமென்று பெண் தாயகம் சென்றால், அவள் பெற்ற குழந்தைகளில் ஆண் குழந்தைகள் தகப்பனிடமும், பெண் குழந்தைகள் தாயுடனும் பஞ்சாயத்தாரின் முடிவுப்படி பிரிந்து செல்லுவார்கள். இங்ஙனம் விவாக விலக்கு செய்யப்பட்ட தம்பதிகள் பிரியப்பட்டால் மறுமணம் செய்து கொள்ளலாம். விவாகரத்து செய்துகொண்ட அவர்களே மறுபடியும் சேர்ந்து வாழ விரும்பினால் பஞ்சாயத்தார் ஊர் விருந்தோடு சேர்த்து வைப்பார்கள்.

பேறு காலத்தில் தங்கள் குடும்ப மருத்துவச்சியைக் கொண்டே மருத்துவப் பணியைச் செய்கின்றனர்.

பிரசவித்தவளுக்குக் குடும்ப சம்பிரதாயப்படி பனை வெல்லமும், பெருங்காயமும் சேர்த்துக் கஷாயம் வைத்து, முதல் ஒன்பது நாளைக்குக் கொடுப்பார்கள். ஒன்பதாவது நாள் தலைக்கு வெந்நீர் ஊற்றிப் பகலிலும் இரவிலும் சாப்பாடு கொடுப்பார்கள். சாப்பாடு கொடுக்கும்போது முதல் மூன்று நாளைக்குச் சைவ சாப்பாடும், ஒன்பதாம் நாள் கோழிக்குஞ்சு சூப்பும் கொடுப்பார்கள். சூப்பு சாப்பாடு கொடுக்கும்போது, சுமார் முப்பது நாட்கள் வரையில் சுக்கையும், வெல்லத்தையும் ஒன்றாகச் சேர்த்து உருண்டை பிடித்துக் கோலி அளவுக்குக் கொடுப்பார்கள்.

மீனவரில் யாராவது இறக்கும் தறுவாயிலிருக்கும் போது, குடிசையின் முற்றத்தில் கொண்டு வந்து தலையை மேற்குப் புறமாக வைத்துப் படுக்க வைப்பார்கள். தலைமாட்டில் அகல் விளக்கு ஏற்றி வைத்துத் தேங்காய் உடைத்துக் கற்பூரமேற்றி வைப்பார்கள். பிறகு நெருங்கிய உறவினர்கள் ஒவ்வொருவராகத் தங்கள் பெயரையும், முறையையும் சொல்லி நோயாளியின் வாயில் பால் ஊற்றுவார்கள். கடைசியாக, யாருடைய முறைப் பெயர் சொல்லும்போது உயிர் போகிறதோ, அவர்களின் மேல் இறந்தவர்களுக்குப் பாசம் அதிகம் என்று எண்ணுவார்கள். ஆணுக்கும், பெண்ணுக்கும் மயானச் சடங்கு ஒரே மாதிரியானதுதான். இறந்தவர்களைக் கொளுத்துவது, புதைப்பது, இரு பழக்கங்களும் இருக்கின்றன.

மீனவரின் சம்பிரதாயத்தில் கணவன் இறந்தால், மனைவி மயானத்துக்குப் போகக் கூடாது. அவள், கருமாதி முடியும் வரையில் அதாவது பதினாறு நாட்கள் வெளியில் வரக் கூடாது. மனைவி இறந்தால் கணவன் மயானத்துக்குச் சென்று கொள்ளி வைத்து மற்றச் சடங்குகளையும் ஆண்களுக்குச் செய்வது போல் செய்ய வேண்டும். கருமாதி தினத்தன்று குடிசைக்கு வெளியில் பந்தல் போட்டுச் சைவ சாப்பாடுதான் சமைப்பார்கள்.

இரத்தக் கலப்புள்ள உறவினர்கள், கருமாதி முடியும் வரையில் சவரம் செய்து கொள்ள மாட்டார்கள். பதினாறும் நாள் சவரம் செய்து கொள்வார்கள்.

ஒவ்வொரு மீனவர் குப்பத்துக்கும் ஒவ்வொரு தலைவன் உண்டு. அவரைப் 'பெரியதனக்காரர்' என்று அழைக்கின்றனர். பெரிய தனக்காரரை அந்தந்தக் குப்பத்து மக்களே தேர்ந்தெடுக்கின்றனர். குப்பத்தில் குற்றங் குறைகள் உண்டானால் பஞ்சாயத்தார்கள் வட்டமாக உட்கார்ந்து, நியாயம் வழங்குவார்கள்.

பஞ்சாயத்தார் விதிக்கும் அபராதத் தொகையைக் கொடுக்க இயலாதவர்களைத் "தோப்புக்கரணம்" போட வைப்பார்கள்.

ஒவ்வொரு குப்பத்திலும், ஒவ்வொரு பூசாரி உண்டு. கொடிய வியாதிகள் பரவினால் தேவதைகளுக்குப் பூசை போட்டு, உடுக்கை அடித்து, மக்களையும், தெய்வத்தையும் திருப்திப்படுத்தும் பொறுப்பு பூசாரியினுடையது.

மீனவர்கள் தற்காலத்தில் கல்வி கற்று, பல உத்தியோகங்கள் செய்தாலும், மீனவர்களுக்கு முக்கியமான தொழில் "மீன் பிடிப்பதே." ஆண்கள் கொண்டு வரும் மீன்களை விற்பனை செய்வது, கருவாடு பதம் செய்வது, மீன் வலை பின்னுவது, தின்பண்டங்கள் செய்து விற்பனை செய்வது, சமைப்பது, வீட்டுத் தோட்டங்கள் போடுவது முதலிய அலுவல்களைப் பெண்கள் பார்த்துக் கொள்கிறார்கள். கூலிக்கு வேலையும் செய்கிறார்கள். ஆண்களும் கூலி வேலை செய்வது உண்டு. சில குப்பங்களில் மீன் பிடிக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் வலை கட்டியோ, தூண்டில் அம்பு எய்தோ உடும்பு, முயல், காட்டாடு முதலியவைகளை வேட்டையாடுகிறார்கள். சிலர் நன்செய், புன்செய் பயிர்களும் பயிரிடுகிறார்கள். கோவளம், புதுச்சேரி முதலிய இடங்களில் இருப்பவர்கள் நெசவுத்தொழிலும் செய்கிறார்கள். எல்லா மீனவர்களும், மழைக் காலங்களுக்கென்றும், கடல் கொந்தளிப்பு காலங்களுக்கென்றும், சில தானியங்களையும், பதம் செய்த மீன்களையும் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள்.

மீனவர்கள் தங்கள் வலையைப் பின்னுவதற்கு ஆறு, பத்து, இருபது என்ற எண்ணுள்ள நூல்களைக் கடைகளில் வாங்கி, வலைக்கு வேண்டிய அளவு ராட்டினத்தில் சுற்றி முறுக்கிக் கொள்கிறார்கள். நன்றாகக் காய வைத்து வலை பின்னிப் பிறகு கருவேலம் பட்டையை நீரில் ஊற வைத்து, அதில் கொதிக்க வைக்கிறார்கள். வலைக்கு இப்படிச் சாயம் ஏற்றுவதால் நூல் உறுதிப்படுகிறது. இப்படிச் செய்தால் உப்பு நீரில் மூன்று மாதங்களை உழைக்கக் கூடிய ஒரு வலை, ஆறு மாதங்கள் வருகிறது. வலைகளில் பல வகைகள் உண்டு.



அப்பா: எங்கேடி உன் புருஷன் தீபாவளி சமயத்திலே ஊருக்குப் புறப்பட்டுப் போகிறான்?
மகள்: கல்யாணம் ஆனதிலேயிருந்து நம்ம வீட்டோடேயே இருக்கிறதினாலேதான் நீங்கள் அவரைத் தீபாவளிக்கு அழைக்கிறதில்லையாம். அதனாலே ஊருக்குப் போனதும் உங்களை ஒரு தந்தி கொடுக்கச் சொன்னார்!

1. பெரிய வலை, இதைப் படகு வலை என்று கூறுவர். 2. மத வலை—நான்கு கட்டு மரங்களின் உதவியால் இதை வீச வேண்டும். 3. தூரி வலை - இரண்டு கட்டுமரங்களின் உதவியால் வலை வீச வேண்டும். 4. தரை வலை—ஒருவன் மட்டும் ஒரு கட்டு மரத்தில் செல்வான். 5. வாலை வலை—இது காணுக்கழுத்தி மீன் பிடிக்க உபயோகப்படும். இதற்கு ஒரு கட்டு மரமே போதும். 6. இருக்கா வலை—இதை வீச ஒரு கட்டு மரத்தில் மூன்றுபேர்கள் போவார்கள். 7. கவலை வலை—ஒரு கட்டு மரத்தில் ஒருவர் போவார். 8. சுறுவலை—சுறுமீன் மிகவும் ஆபத்தானது. இது மனிதர்களைக் கண்டால் இலேசில் விடாது. இதைப் பிடிப்பவர்கள் சமர்த்தர்களாயிருக்க வேண்டும். சுறுமீனுக்கென்று தனி வலையே பின்னுவார்கள். "வாஞ்சு" வண்டியில்தான் இதைப் பிடிக்கப் போவார்கள். இதன் உடலிலிருந்து எண்ணெய் எடுக்கின்றனர். 9. தூண்டில். இது எல்லோருக்கும் தெரிந்ததே.

சிங்கை அம்மன், காளி, மாரி, வீரன், காட்டேரி, முருகன், பெருமாள், கிருஷ்ணன் போன்ற தெய்வங்களையும் கடல் ஆமையையும் இவர்கள் வணங்குகிறார்கள். மீனவர்கள் கடல் ஆமையை வணங்கும் தெய்வமாகக் கருதுவதால், அதை இவர்கள் சாப்பிடுவதில்லை. நல்ல சுறுமீன்கள் கிடைத்துவிட்டால், கரை சேர்ந்ததும் மகிழ்ச்சியோடு கடல் தெய்வத்துக்கும் பூசை போடுவர்.

இவர்கள் எண்ணிக்கையில் இருபது லக்ஷத்துக்கு மேலிருக்கிறார்கள். இவர்களுக்கென்று 132 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. மீனவர் தொழிலின் முன்னேற்றத்தை நாடும் இக்கூட்டுறவுச் சங்கங்கள் கட்டு மரத் துண்டு, வலை தயார் செய்ய நூல், தூரக்கடல் சென்று மீன் பிடிக்க, "விசைப் படகு" முதலியவைகளை ஜனத்தொகைக்குத் தக்கவாறு கொடுத்து, உதவ வேண்டும். அதோடு அவர்களுக்குள்ள குறைபாடுகளை நீக்கவும் உதவ வேண்டும். அரசாங்க மீன் இலாக்காவிலும், மத்திய அரசாங்க மீன் ஆராய்ச்சி நிலையத்திலும், மீனவரில் வாசித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

சிறு வயது முதல் கடலிலும், மீனின் அனுபவத்திலும் தேர்ச்சி இருப்பதால் மேற்படி இலாக்காக்கள் நன்றாக வேலை செய்யவும், அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கவும் பெரிதும் உதவியாக இருக்கும். கல்வி வசதியும், வைத்திய சாலையும், மருத்துவ ஞானமும், மீனவர்கள் போக்குவரத்துக்கு வேண்டிய பஸ் வசதியும், பண உதவியும் வசதி இல்லாத குப்பங்களில் உடனடியாகச் செய்து கொடுத்தால் இன்னும் சில ஆண்டில் இம்மக்கள் முன்னேற்றமடைவதோடு, அரசாங்கத்தின் வருமானமும் அதிகரிக்கும்.

கல்யாணப் படம்

"இந்தக் கல்யாணப் படங்களை யெல்லாம் ஏன்தான் பத்திரிகைகளிலே வரிசை வரிசையாகப் போடுகிறார்களோ ?'' என்று தானே அலுத்துக் கொண்டாள், பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்த கல்யாணி.

தள்ளி யிருந்து தினசரிப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கல்யாணியின் கணவன் ஜயராமன் அதற்குப் பதில் ஏதோ சொல்ல வேண்டுமென்று, ''ஏன், உன் படத்தையும்தான் போட்டார்கள்? அதை உன் தோழிமார்களுக்கெல்லாம் நீ காட்டி, 'போதும் போதும்'என்று ஆகி விட்டது அவர்களுக்கு. என்னுடைய ஞாபகம் பிசகாமல் இருந்தால், அந்தப் படம் வந்த பத்திரிகைப் பிரதி நாற்பதோ ஐம்பதோ நீ வாங்கினாய். கல்கத்தா, பம்பாய், டில்லியிலுள்ள உன் தோழிகளுக்கெல்லாம் அனுப்பினாய்!'' என்றான்.

''இதோ பாருங்களேன், இந்தப் பெண்ணின் முகத்தில் உள்ள சோகத்தை. பாவம், அவள் மனசுக்குப் பிடிக்காத கல்யாணம். அவளை வலுக் கட்டாயமாகக் கட்டிக் கொடுத்து விட்டுப் பத்திரிகையிலும் போட்டு விட்டார்கள். ''மணமகள் மத்திய சர்க்கார் ரிட்டயர்ட் உத்தியோகஸ்தர் குப்புசாமி அவர்களின் கடைசிப் புதல்வி அனுராதா — மணமகன் ஸ்ரீமான் அ.ஆ.ம.தே.யம்'' என்று படத்தின் கீழ் போட்டிருந்த வாசகத்தையும் படித்தாள். காப்பி குடித்துக்கொண்டிருந்த ஜயராமன் 'அனுராதா' என்று கேட்ட மாத்திரத்தில் காப்பியைப் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையின் மேல் சிந்திக் கொண்டான்.

மனத்தில் ஏற்பட்ட பிரளயத்தை அடக்கிக்கொண்டு சாதாரணமாக இருப்பது போல் தோன்றுவதற்குப் பெரிய பாடாகப் போய்விட்டது அவனுக்கு.

*

மனமே விசித்திரம். அதிலும் பெண்ணின் மனம் மிகவும் விசித்திரம். மிக மிக ஆழம். ஆமாம், அந்த உண்மையை அனுராதாவிடம் கண்டான் ஜயராமன்.

உண்மையாக அனுராதாவுக்குத் தன் மீது நாட்டம் இல்லை என்று தெரிந்து கொண்டதாக எண்ணியதும் அன்றிரவே யாருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் கிராமத்துக்குப் போய் விட்டான்.

வாழ்க்கையில் ஏமாற்றம் ஏற்படுவது சகஜம்தான். ஆனால் இது அவன் அடைந்த பெரிய ஏமாற்றம்.

திருச்சியில் ஆனர்ஸ் பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டதும், வேலை தேடும் திட்டத்தோடு பட்டணத்துக்கு வந்தான் ஜயராமன். அவனுடைய தூரத்து உறவினரான மாமா ஒருவர் பட்டணத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். அவருடைய வீட்டில்தான் அவன் தங்கினான்.





வி.எஸ்.எஸ்

விஜயா.

வேலை என்ன சரக்கைப் போல் கடையில் காத்துக் கொண்டிருக்கிறதா என்ன, போய் மனசுக்குப் பிடித்ததை வாங்கிக் கொள்ள? பலர் பலவித யோசனைகள் கூறினார்கள். பல இடங்களிலுள்ள தெரிந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் கடிதம் எழுதினான். ஒரு நண்பன் பம்பாய்க்கு உடனே புறப்பட்டு வரும்படி எழுதினான். அந்தக் கடிதத்தைப் பற்றித் தீர்மானம் எதுவும் செய்ய முடியாமல் மயங்கிக் கொண்டிருந்தான் ஜயராமன்.

அந்தச் சிந்தனையோடு கடற்கரையில் ஒரு நாள் மாலை உட்கார்ந்து கொண்டிருந்த சமயம் தான், அனுராதாவையும் அவளுடைய தகப்பனாரான அந்த ரிட்டயர்டு உத்தியோகஸ்தரையும் சந்தித்தான் அவன்.

''உங்கள் பத்திரிகையைக் கொஞ்சம் கொடுக்கிறீர்களா? ஒரு நிமிஷம் பார்த்து விட்டுத் தருகிறேன்'' என்று கேட்டார் அவர். அவருக்குப் பின்னால் அனுராதா நின்று கொண்டிருந்தாள்.

'இதோ' என்று உட்கார்ந்தவண்ணமே பத்திரிகையை நீட்டினான் அவன். அதை வாங்கிக் கொண்டு சற்றுத் தள்ளிப் போய் மணலில் உட்கார்ந்தார். அனுராதா அவருக்கு அருகில் அமர்ந்தாள்.

ஜயராமனும் அனுராதாவும் கொஞ்ச நேரத்துக்குள் ஒருவருக்கொருவர் அநாவசியமாகப் பார்த்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தார்கள். ஜயராமன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதாக அனுராதா எண்ணினாள். அப்படித் தன்னையே தான் பார்த்துக் கொண்டிருந்தானா என்பதைக் கவனிக்கத்தான் அவன் அவளை ஓரக் கண்ணால் பார்த்தான்.

ஓர் ஆடவன் தன்னை அப்படிப் பார்ப்பது அழகல்ல என்று அவள் மனத்தில் பட்டதும் அனுராதா எழுந்து அலைகள் வந்து வந்து போய்க் கொண்டிருக்கும் கரை ஓரத்தில் போய் நின்றாள்.

வந்த அலை வேகமாய்த் திரும்பிப் போகும்போது, கால் அடியில் உள்ள மணல் கரைந்துபோவது அனுராதாவுக்கு வேடிக்கையாக இருந்தது; ஒருவித பயத்தையும் கொடுத்தது. அப்பொழுதும் ஜயராமன் தன்னையே பார்த்துக்கொண்டிருந்தானா என்று கழுத்தைத் திருப்பிக் கொண்டு ஜாடையாக வேறு கவனித்தாள். அந்தப் பொல்லாதவன் அவளைத் தான் கவனித்துக் கொண்டிருந்தான்!

தன்னைப் பயந்தாங்கொள்ளி என்று அவன் நினைத்துக் கொள்ளக் கூடாதே என்ற கவலை அவளுக்கு. இன்னும் கொஞ்சம் அலைகளுக்கு மத்தியில் சென்றாள். திரும்பிப் போகும் அலை கயிறு கட்டி இழுப்பது போல் இருந்தது. இன்னும் சற்றுத் தள்ளி முழங்கால் ஆழத்துக்குச் சென்றாள் அவள்.

ஜயராமனுக்கு அது அச்சத்தைத் தந்தது. அவளை எச்சரிக்க விரும்பினான்.

''ஸார்! உங்கள் பெண்ணைப் பாருங்கள். பயமில்லாமல் அலைகளுக்கிடையில் போகிறாள்'' என்றான். 'ஒரு நிமிஷம்' என்று சொல்லிப் பத்திரிகையை வாங்கியவர் சுமார் பதினைந்து நிமிஷங்கள் ஆகியும் அதில் ஆழ்ந்து போயிருந்தார். சற்றுத் தலையைத் தூக்கி, ''அனுராதா! இங்கே வா, அம்மா!'' என்று மட்டும் சொல்லி விட்டு மீண்டும் பத்திரிகை படிப்பதில் ஈடுபட்டு விட்டார் அவர்.

அப்போதுதான் அவள் பெயர் அனுராதா என்று தெரிந்தது ஜயராமனுக்கு. ''அனுராதா! — அனுராதா!'' என்று சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

அனுராதா தன்னுடைய நீண்ட பின்னல் அலை துள்ளிக் குதிப்பதைப் போல் ஆடி அசைய விட்டுக் கொண்டு ஓடி வந்து அப்பா அருகில் அமர்ந்தாள்.

பேப்பரைத் திருப்பிக் கொடுத்த வண்ணமே அவர், ''உங்கள் பேர் என்ன?'' என்று கேட்டார்.

''என் பெயர் ஜயராமன்.''

''என்னவேலை செய்து கொண்டிருக்கிறீர்?''

''சும்மாதான் இருக்கிறேன். காலேஜ் படிப்பு போன மார்ச்சில் முடிந்தது. வேலைக்காக இங்கே வந்திருக்கிறேன்.''


இவ்வாறு சொல்லி விட்டு அவன் அனுராதாவை ஜாடையாகப் பார்த்திருக்க வேண்டாம். இதுவரையில் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் கண்களைச் சந்தித்ததும் நிலத்தை நோக்கினாள்.

''சரி! நேரம் ஆகிவிட்டது. போக வேண்டியதுதான்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் அவர். அவர் முன்னால் நடக்க அனுராதா இறுதியாக அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவர்பின் நடந்தாள். ஜயராமனும் எழுந்து அவர்களைப் பின்தொடர்ந்தான்.

இதோடு அவர்கள் சந்திப்பு நின்றுபோயிருந்தால் இந்தக் கதையும் 'முற்றும்' ஆகியிருக்கும். ஆனால் பாவம், ஜயராமன் மீது குற்றம் எதுவும் சொல்லக் கூடாது. அவனை மீண்டும் சந்திக்க விரும்பியது அனுராதாதான் என்று சொன்னால் உலகம் ஒப்புமா? அப்புறம் நடந்தது என்னவென்றால், அப்பாவும் பெண்ணும் வழக்கம் போல் கடற்கரைக்குப் போனார்கள். அதே இடத்துக்குத்தான். ஜயராமனைக் காணவில்லை. அனுராதாவுக்கு வெறிச்சென்று இருந்தது. இருந்தாலும் ஆசை கெட்டவில்லை. என்றைக்காவது ஜயராமன் வராமல் போய்விடுவானா என்ற நம்பிக்கையோடு தினமும் கடற்கரைக்குப் போய் வந்தாள். அன்றும் அப்படித்தான்.

அனுராதா காரில் தனியாகக் கடற்கரைக்குப் போனாள். காரை 'மரீனா'வில் பரீட்சை ஹாலுக்கு அருகில் நிறுத்தி விட்டு விடுவிடு என்று அதே இடத்துக்குப் போனாள். யாரோ அந்த இடத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

நல்ல வேளை! அது ஜயராமனேதான்! கொஞ்சம் நடையைத் தளர்த்திக் கொண்டாள் அனுராதா. பிறகு தயங்கியவாறே அவன் பின்னால் சென்று குரலைக் கனைத்துக்கொண்டு, 'வணக்கம்' என்றாள்.



''நமக்கு வணக்கம் சொல்லுகிறது யாராயிருக்கும்'' என்று திரும்பிப் பார்த்தான் ஜயராமன்.

''ஓ! வ...ண...க்...கம் ...நீங்களா?''

''ஆம், நான்தான்.''

''உட்காருங்கள்!''

''உங்களைக் கடந்த ஒரு வாரமாக இங்கே காணவில்லையே?''

''தினமும் வர முடிகிறதா?''

''உங்களைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்பா சொன்னார்.''

''என்னைப் பற்றி என்ன பேச்சு?'' என்று மிகுந்த ஆச்சரியத்தோடு கேட்டான் ஜயராமன்.

''இல்லை, அன்று அலைகளுக்கு மத்தியில் நான் போனபோது நான் 'ஆழம் தெரியாமல் காலை விடுகிறேன்' என்று அப்பாவிடம் சொன்னீர்களாமே?''

''அட... ராமா! நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே!''

''அப்படியா! ஆனால் அது உங்கள் மனதில் இருந்திருக்கும்.''



"நல்ல கதை! அப்படி யெல்லாம் ஒன்றும் இல்லை. தப்பித் தவறி அப்படி ஏதாவது ஏற்பட்டிருந்தாலும், மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான் ஜயராமன்.

"தப்பும் இல்லை; தவறும் இல்லை. சரி— நீங்கள் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா? விலாசம் இதோ —இந்தக் கார்டில் இருக்கிறது."

"கட்டாயம் வருகிறேன். உங்கள் அப்பாவுக்கும் இலக்கியத்தில் விருப்பம் என்று சொன்னீர். அவரிடம் ரசமான விஷயங்கள் பற்றிப் பேசலாம்."

ஜயராமனுக்கும் அனுராதாவுக்கும் இந்த விதமாக ஏற்பட்ட பரிச்சயம் நட்பாக மாறியது. அடிக்கடி அவர்கள் வீட்டுக்கும் போய் வரலானான். அவனுக்கு எல்லாவிதச் சலுகைகளும் ஏற்பட்டன.

"நாளை மத்தியானம் சாப்பிட வருகிறீர்களா? நானே சமைக்கப் போகிறேன்" என்று ஒருநாள் சொன்னாள் அனுராதா.

"பேஷாய் வருகிறேன்" என்றான் ஜயராமன் உத்சாகத்துடன்.

மறுநாள் சுமார் பத்து மணி அளவில் ஜயராமன் அனுராதாவின் வீட்டுக்குச் சென்றான்.

"வாருங்கள், வாருங்கள். இன்னும் ஓர் அரைமணி நேரம் காத்திருக்க வேண்டும். நானே தனியாகச் சமைக்கிறேன். சமையல்காரருக்கும் லீவு. அப்பா வேறு நேற்றுத் திடீரென்று பங்களூர் புறப்பட்டுப் போய் விட்டார். நீங்கள் ஏதாவது புத்தகத்தைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருங்கள்" என்றாள்.

புடவையை வரிந்து கட்டிக் கொண்டு, சமையல் கட்டுக்கும் கூடத்துக்கும் நடந்து. அவள் வேலைகளைச் செய்வதே ஜயராமனுக்கு வேடிக்கையாக இருந்தது.

எல்லாம் தயாரானதும், "நீங்கள் சாப்பிடுங்கள். நான் பரிமாறுகிறேன்" என்றாள் அனுராதா அவனருகில் வந்து.

"இல்லை. இருவருமே சாப்பிடலாம். மேல்நாட்டுப் பாணியில் மேஜையின்மீது வைத்துக் கொண்டு வேண்டியவைகளை எடுத்துப் போட்டுக் கொண்டால் போச்சு" என்றான் ஜயராமன்.

சுவாரஸ்யமாய்ப் பேசிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தார்கள். ஜயராமனின் உத்தியோக சம்பந்தமாகப் பேச்சு திரும்பியது.

"டில்லிக்கு ஒரு வேலைக்கு மனுப் போடப் போகிறேன். இன்று போய்ப் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்று எடுக்க வேண்டும். சீக்கிரமாகவே அனுப்ப வேண்டும். நாள் நெருங்கி விட்டது" என்று கூறினான் ஜெயராமன்.

"அப்படியா? அந்த வேலை கிடைத்தால் டில்லியில்தான் இருக்க வேண்டுமோ?"

"ஆமாம் அங்கேதான். வேறு ஊருக்கு மாற்றல் கிடையாது."

சாப்பிட்டானதும் ஜயராமன் போக எத்தனித்தான். அனுராதா தடுத்து நிறுத்திவிட்டாள். "புகைப்படக்காரரை இங்கேயே வரவழைத்தால் போச்சு. ஒரு ஸ்டுடியோவுக்குப் 'போன்' செய்யுங்கள்."

ஜயராமனும் அப்படியே 'நவீன' போட்டோகிராபர்ஸுக்குப் 'போன்' செய்தான். சற்று நேரத்தில் ஒரு புகைப்பட நிபுணர் கருவி சகிதம் அங்கு வந்தார்.

பாஸ்போர்ட் அளவில் புகைப்படம் எடுத்து முடிந்தது.

இந்த மாதிரியாகப் பாஸ்போர்ட் போட்டோவோடு மட்டும் நின்றிருந்தால் பின்னும் ஒருவிதச் சிக்கலும் ஏற்பட்டிருக்காதோ என்னவோ? ஆனால் அம்மாதிரி இல்லாமல், யோசனைகள் வேறு மார்க்கமாய்த் திரும்பிச் செல்லலாயின.

"உங்கள் பாஸ்போர்ட் போட்டோ இருக்கட்டும். வேறு ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளுங்களேன்."

"தனித்தனியாக எடுப்பதை விட, இரண்டு பேரும் சேர்ந்து எடுத்தால் நன்றாக இருக்கும்." புகைப்பட நிபுணரின் யோசனையை இருவருமே வரவேற்றார்கள். அது இருவர் மனத்திலும் இருந்தது. வெளியில் சொல்லத்தான் முடியாமல் அவர்கள் இருவரும் தவித்தனர்.

இருவரும் சோபாவில் உட்கார்ந்தார்கள். ஜயராமனுக்கு என்னவோ அந்தச் செய்கை அடாத செய்கையாகப் பட்டது. அவன் மனத்தில் இன்னதென்று சொல்ல முடியாத சஞ்சலம் அரித்தது. அது அவன் முகத்தில் தெரிந்தது.

ஆனால் அனுராதா கவலையின்றி இருந்தாள். அவள் மனத்தில் சொல்ல முடியாத குதூகலம்.

"கொஞ்சம் புன்னகை செய்யுங்கள்" என்றார் புகைப்பட நிபுணர்.

ஜயராமன் புன்னகை செய்ய முயன்றான். அனுராதாவுக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் முகத்தில் பளிச்சென்று விளங்கியது புன்னகை.

மறுநாள் புகைப்படங்கள் வந்து சேர்ந்தன. இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம் உண்மையில் மிக நன்றாகத்தானிருந்தது.

"இந்தப் படம் நன்றாய் வந்திருக்கிறது, அம்மா! இதைப் பெரிது செய்து எங்கள் 'ஸ்டுடியோ' முன்னால் வைக்கப் போகிறேன்" என்றார் புகைப்பட நிபுணர்.

அனுராதாவுக்குத் திக்கென்றது.

அன்று மாலை ஜயராமன் வந்ததும் புகைப்பட நிபுணர் சொன்னதைச் சொல்லித் தன் பயத்தைத் தெரிவித்தாள்.

"வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அப்படி ஒன்றும் அசந்தர்ப்பமாகச் செய்ய மாட்டான். நேற்று எனக்கே பட்டது. இரண்டு பேரும் சேர்ந்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று."

"சேர்ந்து எடுத்துக் கொண்டதால் பாதகம் ஒன்றும் இல்லை. ஆனால் அவன் அதை அம்பலத்தில் கொண்டு வைக்கிறேன் என்றான்?..."

இதற்குப் பின்னர் அனுராதாவின் மனத்தில் அநாவசியமாய் எடுத்துக் கொண்ட அந்தப் புகைப்படம் உறுத்திக் கொண்டே யிருந்தது. அந்தப் போட்டோக்களில் இரண்டு அனுராதாவிடமும் ஒன்று ஜயராமனிடமும் இருந்தன.

பல தடவைகளில் அனுராதாவின் தந்தையிடம் தன் உத்தியோக சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்று நினைத்தான் ஜயராமன். ஆனால் அவனுடைய நாவெழவில்லை.

அன்று அனுராதாவே அவன் உத்தியோகப் பேச்சைப் பற்றி ஆரம்பித்தாள்.

"நீங்கள் தில்லிக்கு ஒரு உத்தியோகத்துக்கு விண்ணப்பம் செய்தீர்களே!"

"அதைப் பற்றித் தகவல் ஒன்றும் இல்லை. எந்தச் சமயத்திலும் அழைப்பு வரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"அதற்குத்தானே போட்டோவெல்லாம் எடுத்தீர்கள்?"

"ஆமாம். அதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை."

"ஒன்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன். ஆமாம் நாம் இருவரும் சேர்ந்து ஒரு படம் எடுத்துக் கொண்டோமல்லவா...?"

"ஆம்; அதற்கென்ன இப்போது?"

ஜயராமன் அவ்வளவு அசிரத்தையாகப் பேசியது அனுராதாவுக்கு என்னவோ போல் இருந்தது.

"உம். அந்த 'நெகடிவ்'வை எப்படியாவது வாங்கி வந்து விடுங்கள்."

"ஏன்? 'நெகடிவ்' எதற்கு? அதைக் கொண்டு பல காப்பிகள் எடுத்துக் கொள்ளப் போகிறாயோ?"

"நன்றாகச் சொன்னீர்கள். அதைத் தீயில் வைத்துப் பொசுக்கப் போகிறேன். அவன் அப்பொழுதே சொன்னான், பெரிது செய்து அவனுடைய ஸ்டுடியோ வாசலில் வைக்கப் போகிறேன் என்று."

ஜயராமன் பேசவில்லை. அவன் மனத்தில் கட்டியிருந்த கோட்டைகளெல்லாம் மணல் கோபுரம் சரிவது போல் சரிந்து விழுந்து தரைமட்டமாயின.

"என்ன, அவனிடம் கேட்டு அந்த 'நெகடிவ்'வை வாங்கி வருகிறீர்களா?"

"போட்டோக்காரர்கள் 'நெகடிவ்'வைச் சாதாரணமாய்க் கொடுக்க மாட்டார்கள். அப்படிக் கொடுக்கச் சம்மதித்தாலும் அதிகப் பணம் கேட்பார்கள்."

"ஆயிரம் ரூபாய் கேட்பானா? நான் தருகிறேன்" என்று சொல்லி விட்டுத் தடதடவென்று உள்ளே போய்ப் பீரோவைத் திறந்து பத்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்து அவன் முன்னிருந்த சிறு மேஜையின் மீது வைத்தாள்.

ஜயராமனுக்குச் சொல்லொணாத துக்கமும் அவமானமும் ஏற்பட்டன.

"சரி, அந்த 'நெகடிவ்'வை வாங்கி வருகிறேன்" என்று சொல்லி விட்டு விடுவிடென்று நடந்து வெளியேறினான்.

மேஜையின் மீது அவள் வைத்த பத்து நோட்டுக்களும் அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோல் கிடந்தன.

ஜயராமனுக்கு அவமானம் உள்ளத்தை எரித்துக் கொண்டிருந்தது. அனுராதாவின் உண்மை உருவத்தைக் கண்டதாக எண்ணினான். அவள் பேசிய பேச்சுக்களெல்லாம் வேறு அர்த்தங்களை உள்ளடக்கிக் கொண்டிருந்ததாகப் பட்டது. தனக்கு உத்தியோகத்தை வாங்கிக் கொடுத்துத் தன்னை எங்கேயாவது அனுப்பிவிட எத்தனிக்கிறதாக உணர்ந்தான். என்ன பொறுக்க முடியாத அவமானம்? அவர்கள் வீட்டுக்கு வலியச் சென்று தன் மரியாதையை இழந்துவிட்டதாக மனம் நொந்தான்.



'நவீன் போட்டோகிராபர்ஸ்' ஸ்டுடியோவில் அவன் எதிர்பார்த்தது போல் 'நெகடிவ்' எளிதில் கிடைக்கவில்லை. 'நெகடிவ்' வேண்டுமென்று கேட்ட மாத்திரத்திலேயே ஏதோ 'காமுசு' அதில் இருக்கிறதென்று பட்டது அவர்களுக்கு.

"நாளைக் காலையில் வாருங்கள். எடுத்து வைக்கிறோம்!" என்றார்கள்.

மறுநாளும் 'நெகடிவ்' கிடைக்கவில்லை. மத்தியானம் நிச்சயம் தருவதாய்ச் சொன்னார்கள். மத்தியானம் போனான்.

"நான் அப்போதே நினைத்தேன், சார்! ஏதோ சிறுபிள்ளைத்தனமாய் நீங்கள் அந்த அம்மாளோடு சேர்ந்து கொண்டு எடுக்கிறீர்கள் என்று. அந்த அம்மாவுக்கு வேறு கல்யாணம் ஏற்பாடு செய்து விட்டார்களோ?" என்று ஸ்டுடியோக்காரன் கிண்டலாகக் கேட்டான்.

ஜயராமனின் உடல் குன்றிப் போய் விட்டது. எப்படியோ 'நெகட்டிவ்'வை வாங்கிக்கொண்டு அங்கிருந்து அகன்றான்.

அனுராதாவுக்கு ஜயராமன் எப்பொழுது திரும்பி வருவான் என்று இருந்தது. இரண்டு நாட்களாக அவனைக் காணாமல் புழுப்போல் அவள் துடித்துக் கொண்டிருந்தாள். தான் ஏதாவது தவறாகச் சொல்லி யிருந்தால், தன்னை மன்னித்து விடும்படி கேட்டுக் கொள்ளவும் தயாராக இருந்தாள்.

ஆனால் நடந்தது வேறு.

"வாருங்கள். வாருங்கள். எங்கே வராமலேயே இருந்துவிடப் போகிறீர்களோ என்று பயந்து போய்விட்டேன்."

"அப்படி ஒன்றும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. என் தலையைக் கொடுத்தாவது 'நெகடிவ்'வை வாங்கி வருவேன். படம் எடுக்கும்போதே எனக்குத் துளிக்கூட விருப்பம் இல்லை. உன் கட்டாயத்தின் பேரில்தான் அந்த அடாத செய்கைக்கு இணங்கினேன்."

"அடாத செய்கையா?"

"அடாத செய்கைதான். வேறு என்ன? உன்னுடைய வீண் டம்பத்துக்கு ஆளானேன். அவ்வளவுதான். உன்னோடு சேர்ந்து படம் எடுத்துக் கொண்டால் எனக்கு இந்திரபதவி கிடைத்துவிடாது."

"எனக்கும் அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளுங்கள்."

"அது எனக்கு எப்போதோ தெரிந்து விட்டது."

"தெரிந்து விட்டதல்லவா? ரொம்ப சந்தோஷம்."

இருவருடைய குரலும் படிப்படியாய் உயர்ந்து கொண்டிருந்தது. அதனால் அங்கிருந்து எவ்வளவு சீக்கிரத்தில் அகல முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போகத் துடித்தான் ஜயராமன்.

"இதோ 'நெகடிவ்.' என்னுடைய கடமை முடிந்தது" என்றான் ஜயராமன்.

"இதைக் கொளுத்தினால்தான் என்னுடைய கடமையும் முடியும்" என்று சொல்லிய வண்ணம் சமையல் அறைக்குச் சென்று அதை அடுப்பில் போட்டாள்.

கண் இமைத்துக் கண் திறப்பதற்குள் 'நெகட்டிவ்' பொசுங்கிப் போய்ச் சுட வாசனை எங்கும் பரவியது.

அனுராதாவின் மனத்தில் ஏறிய பாரம் கொஞ்சநஞ்சமில்லை. ஜயராமனை மனப்பூர்வமாய் விரும்பினாள். அவனைத் தவிர அவள் மனத்தில் யாருக்கும் இடமில்லை. அவள் நினைத்ததெல்லாம் அந்தப் படம் எடுத்த செய்தி தப்பித்தவறி வெளியில் வந்து, அப்பாவுக்கும் தெரிந்து விட்டால் எவ்வளவு கேவலமாகப் போய் விடும் என்றுதான். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இப்போது எப்படியோ அந்தப் பயம் நீங்கியது. ஜயராமனிடம் இனி அமைதியாகப் பேசி அவன் கோபத்தைத் தணிக்க வேண்டுமென்று எண்ணிச் சமையல் அறையிலிருந்து ஹாலுக்கு வந்தாள்.

ஜயராமன் நின்று கொண்டிருந்தஇடம் சூன்யமாக இருந்தது. அவன் எப்போதோ அங்கிருந்து போய் விட்டான்.

மாலை வருவான், மறுநாள் வருவான் என்று அனுராதா எதிர்பார்த்தது தான் மிச்சம். ஆனால் ஜயராமன் அப்புறம் அங்கே வரவே இல்லை.

கதை இவ்வளவுதான். இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டுமானால் ஜயராமன் அன்று இரவே ரயிலேறித் தன் கிராமத்துக்கு வந்தான்.

கல்யாணியைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா என்று கேட்ட மாத்திரத்தில் ஒப்புக் கொண்டது அவன் அம்மாவுக்கே ஆச்சரியமாக இருந்தது.

கிடைத்த வேலையை ஒப்புக் கொண்டு மனைவியுடன் பட்டணத்துக்கு வந்து ஆண்டுகள் இரண்டும் மறைந்தன.

★

தினசரிப் பத்திரிகையை மடித்துத் தரையில் 'தொத்'தென்று போட்டு விட்டு எழுந்தான் ஜயராமன். கல்யாணப் படம் வந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். கல்யாணி குறிப்பிட்டது போல் அனுராதாவின் முகத்தில் உலகத்திலுள்ள அத்தனை சோகமும் ஏனோ தேங்கிக் கிடந்தது.

கல்யாணி குளிக்கும் அறைக்கு உள்ளிருந்தே, "என்னைக் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே!" என்றாள்.

"ஏன், என்ன?" என்று கேட்டான் தன் பெட்டியில் எதையோ தேடிக்கொண்டிருந்த ஜயராமன்.

"ஒன்றுமில்லை. கொஞ்சம் அடுப்பை ஒரு கண் கவனித்துக் கொள்ளுங்கள். இதோ நொடியில் வந்து விடுகிறேன்."

"இதுதானா பிரமாதம்?"


கொஞ்ச நேரம் கழித்துக் கல்யாணி ஸ்நான அறைக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

"என்ன? சமையல் உள்ளிலிருந்து சுடவாசனை வருகிறது. அடுப்புக்குள் எதைப் போட்டீர்கள்?"


"இங்கே கிடந்த காகிதம் எதையோ எடுத்துப் போட்டேன்" என்று பதில் கொடுத்தான் ஜயராமன்.

"நல்ல வேளை! சமையல் அறையில் பூஜை பண்ண ஆரம்பித்து விட்டீர்களோ என்று பார்த்தேன்!" என்றாள் கல்யாணி.

ஜயராமன் கனத்த இதயத்தோடு சமையல் உள்ளிலிருந்து வெளியில் வந்தான்.



REGD. TRADE MARK.



YARN

Best Quality of
2s to 80s
Carded Yarn

SRI RANGAVILAS
GINNING SPINNING & WEAVING MILLS LTD.,

PEELAMEDU. P.O.... COIMBATORE.6...

PHONE:
2536 & 2537.

MANAGING PARTNER..
G.N.VENKATAPATHY.

GRAMS:
"RANGAVILAS"

Managing Agents: P. S. G. & SONS



தமாஷ் வெடிகள்
பட்டாஸ் கடை
பட்டாசுக் கடைக்காரப் பையன்:— அப்பா! நீ கொடுத்த பட்டாசு ஒன்னு கூட வெடிக்கல்லே...ஏ...ஏ! எல்லாம் 'புஸ்'வாணமாப் போயிட்டுது!
தாயார்: 'சினிமா ஸ்டார்' மாதிரி ஏண்டா தலையை வச்சிண்டு இருக்கே?
பையன்: நம்ப அப்பா மாத்திரம் 'குருஜேல்' மாதிரி தலையை வச்சிண்டு இருக்காரே, அதுமட்டும் தேவலையோ?
"உனக்கு என்ன தைரியம்? ஊரிலே பசங்கள் நம்முடைய வாலில் தகர டப்பாவையும் பட்டாசுக் கட்டையும் கட்டிக் கொளுத்திவிடுவாங்க, அங்கே வெல்லாம் போகாதேன்னு சொல்றேன்; ரொம்ப அலட்சியமா இருக்கியே!"
"இதோ வரானே எங்க பெரியப்பா, ஒத்தருக்கும் தெரியாமல் வெங்காய வெடி பண்ணிணாரடா?ஆறு, இப்போ எல்லாருக்கும் அது தெரிஞ்சு போச்சு!"
"எங்கப்பா எனக்குப் பெரிய பெரிய வாணங்கள் வாங்கித் தந்திருக்காரே!"
"எங்கப்பா எனக்குப் பெரிய பெரிய சொக்காயும் டிராயரும் வாங்கித் தந்திருக்காரே!"
சாமா
"இத்தனை வெடிகளையும் வச்சிண்டு வருத்தமா உக்காந்திருக்கயே, ஏன்?"
"இப்ப இதை வெடிக்க சந்தோஷப் பட்டுடுவோம். அப்புறம் இன்னொரு தீபாவளிவரை என்ன செய்வது?"
"உன் வாணம் என்னடா ஓத்தி? அதுக்குக் கொம்பு முளைச்சிருக்கோ?"
"ஆமாம்! அது கொம்பு வாணமாக்கும்!"



ஸ்ரீ எம். சோமசுந்தரம் பிள்ளை



ஸ்ரீ ஏ. ஆர். ஷண்முகம் பிள்ளை

1919ம் வருஷம் எட்டு நபர்கள் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பஸ்ஸுடன் துவங்கிய லயன் ஆட்டொமொபைல் ஸர்வீஸ் கம்பெனி இன்று 53 சொந்த பஸ்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தையும் வழங்கி, இதர வசதிகளை அளித்து வருபவர்கள் டி.வி.எஸ். ஸ்தாபனத்தார்.

"எட்டு நபர்கள் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பஸ்ஸுடன் திருநெல்வேலி ஜங்ஷனில் திரு ஏ. ஆர். ஷண்முகம்பிள்ளை 1919ம் வருஷம் "லயன் ஆட்டோமொபைல் ஸர்வீஸ் கம்பெனி"யைத் துவக்கினர். அதுமுதல் அவருடன் பணியாற்றி வந்த திரு. எம். சோமசுந்தரம் பிள்ளை 1930ல் அவரது பங்காளியாகி விட்டார். இந்த ஸ்தாபனம் திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் 23 வழிகளில் 53 பஸ்களை தினம் 5,900 மைல்கள் செலுத்துகிறது.

நாங்கள் டி.வி.எஸ்.ஸ்தாபனத்தாரோடு பண்புடன்கூடிய நல்ல உறவைக் கொண்டுள்ளோம். எங்களிடம் உள்ள எல்லா பஸ்களையும் அந்த ஸ்தாபனத்தார் கொடுத்திருப்பதுடன் மோட்டார் உறுப்புகளையும், அத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற எல்லாத்தேவைகளையும் வழங்கி யுள்ளனர்."

(ஒப்பம்)

ஏ. ஆர். ஷண்முகம் பிள்ளை

எம். சோமசுந்தரம் பிள்ளை

தற்கால வியாபாரத்தின் வெற்றி அதனை உபயோகிக்கும் மக்களின் நல்வாழ்வையும் சுபிட்சத்தையும் பொருத்திருக்கிறது. இந்த லட்சியம் எங்களுக்கு மக்களின் நல்லெண்ணத்தை லாபமாக அளித்திருக்கிறது. மக்கள்தான் எங்கள் முன்னேற்றத்துக்கு போஷாக்கு அளிக்கிறார்கள்.

இன்று டி. வி. எஸ். ஸ்தாபனம் அதன் பல கிளைகளோடு தென்னிந்தியாவில் நாளுக்குநாள் பெருகிவரும் மோட்டார் தொழிலின் சகலவிதத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறது.

டி. வி. எஸ் ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், பிரைவேட் லிமிடெட்
மதுரை–திருச்சி–திருநெல்வேலி
புதுக்கோட்டை–சேலம்
கோயமுத்தூர்
மோட்டார் வாகன விற்பனையாளர்கள், ஆட்டோமோபில் என்ஜினியர்கள் மற்றும் பாடி நிர்மாணிப்பாளர்கள்.

சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை
பஸ் லாரி போக்குவரவு ஸ்தாபனம்

மதராஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்,
மதராஸ்-பெங்களூர்.
மோட்டார் உறுப்பு விற்பனையாளர்கள்.

சுந்தரம் இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட்,
புதுக்கோட்டை-மதராஸ்.
சீர்கேடான டயர்களை புதுப்பித்துத் தரும் ஸ்தாபனம்.

மதராஸ் மோட்டார் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ்.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்–பெங்களூர்
பியட், பிரேமத், பார்கோ, லேலண்ட் மற்றும் பெர்கூஸன் டிராக்டர்கள்—இவைகளின் விற்பனையாளர்கள்

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்.

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் ஆக்ஸெஸரீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்.
அகில இந்தியாவிற்கு ஜி எம் (GM) உறுப்பு விற்பனையாளர்கள்.

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

TVS 781 A



இந்தச் சேலைகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன.

நல்ல விலையும் கூட கிடைத்தது!

காரணம், குறித்த நேரத்தில் வியாபாரிகளுக்கு கிடைத்தன.

சேலைகளின் விற்பனை, மற்ற சரக்குகளைப் போலவே, அவை உங்கள் வியாபாரிக்கு எப்போது போய் சேருகின்றன என்பதையே பொறுத்திருக்கிறது. உங்கள் சரக்குக் கிடைக்கவில்லையானால், வாங்குபவர்கள் வேறு சரக்கைத்தேடிப் போய் விடுவார்கள். இதனால்தான் வியாபாரிகள் தங்கள் சரக்குகளை அனுப்ப டி. வி. எஸ். சதர்ன் ரோட்வேஸை மென்மேலும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

டி. வி. எஸ். கீழ்க்கண்ட இணையற்ற அனுகூலங்களை அளிக்கிறது:

டி. வி. எஸ். லாரிகள் எல்லாம் கால அட்டவணைப்படி ஓடுகின்றன. உங்கள் சரக்குக்கு விசேஷமான கிராக்கி ஏற்பட்டிருக்கையில் வியாபாரிகளுக்கு அவை போய்ச் சேரும்படி செய்ய முடியும்.

உங்களுக்கு சாமான் கைவிருப்பு, வட்டி, கிடங்கு இடவசதி ஆகிய இனங்களில் கணிசமான மிச்சம் ஏற்படுகிறது.

349 ஊர்களில் பிரத்யேகமாக மூடப்பட்ட சாமான் கிடங்குகள் உள்ளன. அவ்விடங்களில் சரக்கை டெலிவரி எடுத்துக்கொள்ளும் வரை அவற்றை பத்திரமாக வைத்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சரக்கேற்றுவது இறக்குவதுபோன்ற அலுவல்களை எல்லாம் பெரிய அநுபவம் வாய்ந்த சிப்பந்திகள் செய்கின்றனர். திருடு போகாமல் தடுக்க ஒவ்வொரு லாரியும் அது ஊரைவிட்டுக் கிளம்பு முன் பூட்டப் பெறுகிறது.

தென்னாட்டில் அநேகமாக எல்லா முக்கிய பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும் போய் வரக்கூடிய ரஸ்தா போக்குவரத்து சாதனம் டி. வி. எஸ். ஒன்றுதான்.

லாரி அளவில் சரக்கு இருக்கும் பட்சத்தில் ஒரு டி. வி. எஸ். லாரியை பிரத்யேகமாக வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தென்னிந்தியாவில் உங்களுக்கு வேண்டிய எந்த இடத்திற்கும் சரக்குகளை அனுப்பலாம்.

இதற்கான பெருமை அனைத்தும்


TVS சதர்ன் ரோட்வேஸுக்கே

உங்கள் பார்ஸலை குழந்தைபோல் அணைத்துச்செல்வோம்

"பார்க்கப்படும் படம். இதர விவரங்கள் கொண்ட பிரசுரத்துக்கு எழுதுங்கள்.




சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை (டி. வி. எஸ். ஸ்தாபனம்)


பாலர் மலர்
வேலுச் சாமியின் வீரச் சயல்கள்
கதை கௌசிகன்
படம் பாபு.
வீராசாமி ஹோமல் பெயிண்டிங் ஒர் நாணயமான கடை. வீராசாமியின் மகன் வேலுச்சாமி ரொம்பச் சூட்டிகை. தீபாவளி சமயம். தகப்பனுக்கு உதவியாக வேலுவும் கடையில் வேலை செய்து கொண்டிருந்தான். அப்போது வீதியில் ஒரு சினிமா விளம்பர வண்டி போகிறது.
அலாவுதீன் அற்புத விளக்கு
அலாவுதீன் அற்புத விளக்கு - அந்த விளக்கு என்னிடமிருந்தால்.. நான் அலாவுதீனை சந்திக்க நேர்ந்தால்..
அந்த விநாடி வேலு ஒரு புதிய இடத்தில் இருப்பதை உணர்ந்தான். முன்னால் விளக்குடன் ஒரு பையன்..
தம்பி.. தம்பி.. நான் உன் விரோதியல்ல இது மந்திர விளக்குமல்ல.. நீ தான் அலாவுதீனா? உன்னைக் காண எனக்கு வெகு நாளாக ஆசை..!
யாரடா நீ? உன்னிடமும் ஒரு மந்திர விளக்கோ? இதோ உன்னை என்ன செய்கிறேன்...
என்னை ஏமாற்றவா பார்க்கிறாய்.. 'ஷாஸம்!' மந்திர விளக்கின் பூதமே இவனைத் தூக்கிக் கொண்டு..
என்னைத் தூக்கவா..? பூதமே நீ வெறும் புகை இதோ பார் நெருப்பு...! எப்படி இருக்கும்...?
ஐயையோ! அந்த மந்திர விளக்கின் முன்னால் என் பூதம் அலறிக் கொண்டோடுகிறதே
ஹா.. ஹா.. ஹா! தீயைக் கண்டதும் சுருண்டு பதுங்கி விட்டது பூதம்...
அலாவுதீனுக்குப் பிறகு பல கைகள் மாறி மாய விளக்கு இப்போது சுங்லுங் என்ற சீனப் பையனிடம் வந்திருக்கிறது. பூதத்திற்கு முன்போல சக்தி கிடையாது. மாஜி மந்திரவாதி வம்சத்தில் வந்த ஒருவன் அதை அடையமுயலுகிறான்.
பயலே! சரியாக மாட்டிக் கொண்டாயா? கொண்டா அந்த விளக்கை...
தம்பி.. சுங்லுங் கவலைப் படாதே.. உன் விளக்கை மீட்டுத் தருகிறேன்
அதோ அவர்கள்...
இதோ என் காரியமும் முடிந்து விட்டது. அவர்கள் வரும் வழியை நன்றாகக் காய்ச்சி விட்டேன்..



இயோ... அப்பா...! கால் போச்சே!
வேலுச்சாமி, உன் வேலைத்தனம் அபாரம்! நீ இல்லாவிட்டால் இன்று என் வீடு பறி போயிருக்கும்...
அறுசுவை உண்டி கொண்டு வந்து கொடுக்கத் தான் பூதத்தினால் முடியும். மற்ற சக்திகளை எல்லாம் குன்றிய பூதம் வேலுவுக்கும் சுங்லுங்குக்கும் உணவருந்தும் போது அவர்களுக்கு 'பாங்கா' போட்டுக் கொண்டிருக்கிறது...
பிரபுக்களே! உணவு போதுமா? இன்னும் பழங்கள் கொண்டு வரட்டுமா?
அப்போது ஒரு இரும்புக்கரம் சுங்லுங்கின் தோளில் விழுகிறது. பூதம் மறைந்து விடுகிறது. சுங்லுங் அந்நாட்டு சுல்தானின் அடிமை. அதிகாரி அவனைத் தேடி வருகிறன்.
யாரய்யா நீ? அவனைப் பிடித்து ஏன் இழுத்துப் போகிறாய்?
நீ யாரடா பொடியா? இவன் எங்கள் அடிமை
துடுக்குப் பயலே!... வா... இன்றிலிருந்து நீயும் ஒரு அடிமை. மற்றவர்களோடு நீயும் பாங்கா வீசவேண்டும்
யாரங்கே? பசி காதை அடைக்கிறது. கொண்டா பழங்களை... உஸ்...! ஒரே புழுக்கம்...
கையெல்லாம் ஒரே வலி இதற்கு ஒரு முடிவு தேட வேண்டும்...
பாவம் வேலு, சுல்தானுக்கு சாமரம் வீசி வீசிச் சலித்துப் போனான். தன் முறை முடிந்து இளைப்பாற உட்கார்ந்த வேலு தன்னை அடிமையாக்கிய முரடனுக்குப் பாடம் கற்பிக்க எண்ணுகிறன்
போ... போ... சுல்தானுக்கு உணவு தயாரிக்க வேண்டும். நீ இங்கிருக்கக் கூடாது


அதோ பார் வேலு மசாலாப் பொடியை தூவி வருகிறான்.
குனிந்து மண்டியிட்டு உணவை நீட்டிய போது கொடு முரடனின் மூக்கில் நெடி...
ஹா... அச்... அச்... ஐயோ கண் போச்சு!
உணவை முகத்தில் வீசிய குற்றத்திற்கு சுல்தான் விதித்த தண்டனையை வேலு முன் வந்து நிறைவேற்றுகிறான்.
தம்பி, நீ யார்? உன்னைப் பார்த்தால் புத்திசாலியாகத் தெரிகிறது. இனி யாருமே இங்கு அடிமையில்லை. எல்லோரையும் விடுதலை செய்து விட்டேன். அந்தப்புரத்துக்குப் போகலாம்..
முரடன் ஒரு சதிகாரன். சுல்தானுக்குக் கொடுத்த உணவு விஷம் கலந்தது. வேலுவிற்கு அது தெரியாது. தற்செயலாக வேலு செய்த வேலைத்தனம் உணவைச் சுல்தான் சாப்பிடாமற் செய்தது. அரண்மனை அந்தப்புரத்தில்..
உங்களைக் காண ஒருவன் வந்து ஒரு பேழையைக்கொடுத்துப் போனான். இதோ இருக்கிறது பாருங்கள்......
யாராயிருக்கும்..? அழகான பேழை இதனுள்ளும் உயர்ந்த பொருள் தான் இருக்க வேண்டும்...
பயப்படாதீர்கள் பேகம் சாஹிபா..
ஹா..!... ஐயோ..பாம்பு!
விஷ நாகம். இது யாரோ சதிகாரனின் செயல்..
வேலு..பேகம் சாஹிபா மூர்ச்சையாகி விட்டாள்
பாம்பை அடித்துக் கொன்று விட்டேன் பாதுஷா!
பாதுஷா.. அபாயம்.. அபாயம்.. சட்டென்று தரையில் படுத்துக் கொள்ளுங்கள்



சுல்தானின் கழுத்துக்குக் குறி வைத்த சதிகாரனின் கட்டாரி கண்ணாடியில் பாய்ந்தது. வேணுவும், சுல்லுவும் சதிகாரனைத் தொடர்ந்து ஓடுகிறார்கள்.
வேணுவை அழைத்துச் சென்றவன் தான் சதிகாரர்களின் தலைவன். அவன் திட்டங்கள் தோல்வியடையவே தன் சகாக்களோடு சேர்ந்து கொண்டு ஆலோசிக்கிறான். முன்னால் உள்ள திரையில் சித்திர யாளி உருவம். அதன் பின்னும்...


உங்கள் குழந்தைக்கு இங்கிலே ஏற்பட்டால்
மானேர்ஸ்
கிரைப் மிக்சர் கொடுத்து,
MANNERS
GRIPE MIXTURE
அது சிரித்து
மகிழ்வதைக் கண்டு
அனுபவியுங்கள்.
உன்னத தரத்தின் இந்த
சின்னத்தைக் கவனியுங்கள்.
இது ஒரு மானேர்ஸ்
தயாரிப்பு
GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. BOMBAY • DELHI • CALCUTTA • MADRAS

தேய்ந்த டயர்களைப் புதுப்பித்தல் செயற்கைப் பற்கள் கட்டுவது போன்றதே



இவைகளை நிபுணர்கள்தான் நிறைவேற்ற முடியும்

புது டயர்களுக்கு இப்போது பற்றுக் குறை ஏற்பட்டிருக்கிறது. உங்கள் வசமுள்ள பழைய டயர்களுக்குப் புத்துயிர் அளிக்க டி.வி.எஸ். 'ரீட்ரெட்' இலாகாவுக்கு அனுப்பிவையுங்கள்.


டி.வி.எஸ். புதுப்பித்துத்தரும் டயர்கள் புத்தம் புதிய டயர்களுக்கு இணையாக உழைக்கும்


ஒரு புது டயர் வாங்கும் பணத்திற்கு மூன்று பழைய பஸ்-லாரி டயர்களைப் புதுப்பித்து விடலாம்

டி.வி.எஸ். வினல் ரீட்ரெட் செய்யப்படும் டயர்கள் அதிக கனமுள்ள ரப்பர் உபயோகிப்பதால் அதிக மைல்தூரம் உழைக்கின்றன

டயர்களுக்கு ஏற்படும் குத்து வெட்டுகள், விரிசல் வெடிப்புகளுக்கு சிகிச்சை அளித்து சீர்படுத்த பிரத்தியேக இயந்திரத்தில் விஞ்ஞான முறையில் டயர்கள் பழுது பார்க்கப்படுகின்றன

ஒட்டுப் போடாமல் ஒரே நிதானமாக வட்ட இணைப்பு





'காமல் பாக்' (ரீட்ரெட் ரப்பர்) டி.வி.எஸ். குளிர்பதன அறைகளில் வைக்கப்படுவதால், சீதோஷ்ண வெடிப்பு காணுவதில்லை.



போக்குவரத்து தொந்தரவு நீங்க சதர்ன் ரோட்வேஸ் ஆபீஸ் மூலம் டயர் (புதுப்பித்ததும், புதுப்பிக்காததும்) செலவில்லாமல அனுப்பலாம்.

நினைவிருக்கட்டும். முன்னதாக அனுப்பினால் மூன்று மடங்கு லாபமாகும். ஆம்! தேய்வு கண்ட உடனே ஒரு டயரை அனுப்பி வைப்பது, மூன்று முறை அதைப் புதுப்பிப்பதற்கு சமமாகும். டயர்கள் வழுக்கை விழுமுன் அனுப்பி விடுங்கள்.

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

(டி.வி.எஸ். ஸ்தாபனம்) புதுக்கோட்டை— மதறாஸ்.

பாலர் மலர்


வேடிக்கை விளையாட்டு

வாண்டு மாமா



நடக்கும் நாட்டிய பொம்மை

இது 'கதக்' நாட்டியக்காரரின் படம். இதை அப்படியே ஓர் அட்டையில் ஒட்டி உருவத்தின் ஓரமாக உள்ள கறுப்புக் கோட்டினூடே வெட்டித் தனியாக எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு உருவத்தின் பாவாடைகளும் சேரும் பகுதியில் புள்ளியிட்ட இடத்தில் மடித்துக் கொள்ளுங்கள். இப்போது மடித்த அட்டையின் இரு பக்கமும் நாட்டியக்காரரின் உருவம் தெரியும். அடுத்த படியாக இதேபோலப் பக்கத்தில் உள்ள பாதங்கள் வரையப்பட்ட வட்டத்தையும் ஒரு வெள்ளை அட்டையில் ஒட்டித் தனியாகக் கத்தரித்துக் கொள்ளுங்கள். அட்டையின் மறுபக்கத்திலும் இதேபோன்ற பாதங்களை வரைந்து கொள்ளுங்கள். அடுத்தபடியாக இந்தப் பாத வட்டத்தை நாட்டியக்காரரின் அட்டை மடிப்பினுள் வைத்து அதன் மத்தியப் புள்ளிக்கும், நடன உருவத்தின் பாவாடையின் கீழ் பாகத்திலுள்ள புள்ளிக்குமாக ஒரு பித்தளைக் குமிழ்க் காகிதக் கிளிப்பை பாதங்களுள்ள வட்ட அட்டை தாராளமாகச் சுழலும்படி இணைக்க வேண்டும். இனி நாட்டிய உருவத்தின் கையைப் பிடித்து மெதுவாகத் தள்ளினால்......? தள்ளிப் பாருங்களேன்.





சரித்திரத்தை மாற்றியமைத்த சந்திப்புகள்

△ சித்தார்த்தனும்—பிணி, மூப்பு, சாக்காடுகளும்: சோதிடர்களின் எச்சரிக்கையினால் தன் மகன் சித்தார்த்தன் துறவியாவதை விரும்பாத மன்னன் சுத்தோதனன், துன்பங்களே அவனைத் தொடாதபடி பாதுகாத்து வளர்த்து வந்தார்..... ஒருநாள் சித்தார்த்தன் பரிமீதேறி நகர்வலம் வரும்போது பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய காட்சிகளைக் கண்டார். இவை அவர் உள்ளத்திலே பெரும் புரட்சியை உண்டாக்கின. உலக இன்பங்கள் உளுத்த மரம் போன்றது என்ற உண்மையை அறிந்தார். அன்றே துறவறம் மேற்கொண்டார். போதி மரத்தடியிலே ஞானஒளி பெற்றார். பாரதத்திலே புதியதொரு மதம் — பௌத்த மதம் — பிறந்தது.

▽ அலெக்ஸாந்தரும் போரஸும்: (கி. மு. 326.) கிரேக்க நாட்டு மாஸிடோனியா தேச மன்னன் மகா அலெக்ஸாந்தர் இந்தியாவுக்குள் புகுந்து சிந்து நதியைக் கடந்து தக்ஷசீலத்திலே அடியெடுத்து வைத்தான். ஆண்மையோடு அலெக்ஸாந்தரை எதிர்த்த போரஸ் தோற்றுப் போக நேர்ந்தது. கைதியாகி அந்நியன் முன் நின்றபோதும் அஞ்சாது 'என்னை ஒரு அரசனைப் போல் நடத்து' என்றான் போரஸ் ஆண்மையுடன். கிரேக்க வீரனோ இந்தியனின் வீரத்திலே உவகை கொண்டான். வென்ற நாட்டை அவனுக்கே கொடுத்துத் திரும்பிச் சென்றான். அலெக்ஸாந்தர் — புருஷோத்தமன் சந்திப்புக்குப் பிறகு இந்திய நாட்டிலே கிரேக்க நாகரிகமும் கலையும் புகுந்தன.





△ சந்திரகுப்த மௌரியரும்—சாணக்கியரும் : (கி. மு. 322-297) உச்சிவேளை. சிந்தனையில் தன்னையே மறந்தபடி நடந்து வந்து கொண்டிருக்கிறது அந்த உருவம். அதைத் தடுமாறி நிலைகுலைய வைக்கிறது வழியிலே முளைத்திருந்த ஒரு புல். தன்னைத் தடுக்கி விழவைக்க இருந்த புல்லை வேரோடு கெல்லிப் பிடுங்கி எடுத்துச் சாம்பலாக்கி ஊதிய பிறகுதான் அந்த உருவத்தின் முகத்திலே நிதானம் திரும்புகிறது. அதன் இத்தகைய செயல்களையும் மற்றொரு உருவம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இவரே தன் காரியத்தைச் சாதித்துக் கொடுக்கும் வல்லமையுடையவர் என்று அவர் நட்பை நாடுகிறது. முதல்வர் கௌடில்யர் என்னும் சாணக்கியர், மற்றவர் சந்திர குப்தன். இவர்கள் சந்திப்பால் நந்தவமிசம் அழிகிறது; மௌரிய வமிசம் ஸ்தாபிக்கப் படுகிறது. எக்காலத்துக்கும் பொருத்தமான அரசியல் முறையை விளக்கும் அர்த்த சாஸ்திரத்தைச் சாணக்கியர் உருவாக்கி உலகுக்கு அளிக்கிறார்.

▽ அசோகரும்—உபகுப்தரும் : (கி. மு. 262) கலிங்கப் போர்க்களம். பிணக்காடு. எங்கு திரும்பினாலும் உயிர்த்துடிப்பால், உடல் வேதனையால் ஓலமிடும் காயம்பட்ட ஜீவன்களின் அவக்குரல். கரியும், பரியும் காலாட்படைகளும் கண்டதுண்டமாகச் சின்னாபின்னமாகிக் கிடக்கும் கோரக் காட்சியைச் சுற்றிப் பார்த்து வந்த மன்னனுக்கே வேதனை தாங்க முடியவில்லை. தன்னால்தான் இத்தனையும் என்பதை எண்ண எண்ணச் சக்கரவர்த்தி அசோகனின் உடல் நலிகிறது. அங்கே—அந்தப் போர்க்களத்திலே தோன்றுகிறார் உபகுப்தர் - புத்தபிக்ஷு. நொந்த மனத்தினராக இருந்த அசோகனுக்குப் பௌத்தமத உபதேசம் செய்கிறார். அஹிம்சையின் அரிய தத்துவத்தை விளக்குகிறார். அசோகன் வாளை வீசி எறிகிறான். பௌத்த மதத்தைத் தழுவி அன்புப் பிரசாரம் செய்யத் தன்னை அர்ப்பணிக்கிறான். தர்மசக்கரம் சுழலுகிறது. இந்தியாவிலும், கடல் கடந்தும் புத்தரின் பொன்மொழிகளைப் பரப்புகிறான் அசோகன்.





△ ஹர்ஷரும்—ஹியூன் சாங்கும்: எங்கும் இதே பேச்சு. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் ஒற்றரும் மற்றையோரும் அந்தச் சீன யாத்திரிகனையும் அவன் கல்வி அறிவையும் பற்றிச்சொன்னார்கள். ஹர்ஷன் சீன தர்ம நாயகனைக் காணும் ஆவலுடன் தன சோதரி ராஜ்யஸ்ரீயுடன் தானே அவரைக் காண விரைந்தான். அறிவின் சிகரமும் ஆற்றலின் இருப்பிடமும் சந்தித்துக் கொண்டன. சீன யாத்திரிகனின் பேச்சிலும், வாதத் திறமையிலும் மனத்தைப் பறி கொடுத்த மன்னன் மகாயான பௌத்த சமயத்தை ஆதரித்ததோடு யாத்ரிகனைப் புத்த விஹாரங்களில் நிலைமை தாங்கச் செய்து தக்கபடி கௌரவித்தான். இவர்கள் சந்திப்பின் காரணமாக இந்தியாவின் கலாசாரம் கீழ்த்திசை நாடுகளுக்கும் பரவியது. அந்தக் காலத்து நாகரிகத்தையும் மக்கள் நிலையையும் மன்னர்களின் சரித்திரத்தையும் நாம் அறிந்து கொள்ளுவதற்கு ஹியூன் சாங்கின் யாத்திரைக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன.

▽ இராஜேந்திரன் — சத்தியாச்ரயன்: சோழப் பேரரசே அன்று குதூகலத்தில் மூழ்கிக் கிடந்தது. ஒரே கோலாகலம். மேலைச் சளுக்கிய மன்னன் சத்தியாச்ரயனை வென்று, வெற்றி வாகைசூடி வருகிறான் இளவரசன் இராஜேந்திரன். கைகட்டி வாய் பொத்தித் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு யுத்த நஷ்ட ஈடாக அளித்த பெரும் பொருளை யானைகளிலும் ஒட்டகங்களிலும் குதிரைகளிலும் பொதிமாடுகளின் மீதும் ஏற்றிவரும் தன் மகனை வரவேற்று வாரி அணைத்து மகிழக் காத்திருந்தார் மாமன்னர் ராஜ ராஜ சோழர். இத்தனை பொருளையும் வேறு மன்னர்களாக இருந்தால் என்ன செய்திருப்பார்களோ? ஆனால் ராஜராஜன் அத்தனை செல்வத்தையும் தான் கட்டிக்கொண்டிருந்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் பணியில் செலவிட்டான். காலத்தாலும் அழிக்க முடியாத கலைக்கோயிலாக ராஜராஜேச்வரம்—பிரகதீச்வரர் ஆலயமாக இன்றும் நின்று நிலவுகிறது.





△ ஜயச்சந்திரன்—முகம்மதுகோரி: கி. பி. பனிரண்டாம் நூற்றாண்டின் இறுதி. ராஜபுத்திரர்களின் வீரம் விளங்கிய காலம். இல்லை; அவர்கள் தங்களுக்குள் வீண் கர்வத்தையும் பொறாமையையும் பூசல்களையும் வளர்த்துக் கொண்டிருந்த காலம் என்றேகூடச் சொல்லலாம். முகம்மது கோரி இத்தகைய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பாரத நாட்டின் மீது படையெடுத்து வந்தான். அருமை மகளைத் தூக்கிச் சென்றவனை அழித்தே தீருவேன் என்ற வன்மத்தோடு கன்னோசி மன்னன் ஜயசந்திரனே அந்நியனான கோரிக்கு உதவினான். முடிவு...? இந்தியத் தாயை அந்நியன் தீண்ட விடாதபடி எதிர்த்து நின்ற ஒரு சுத்த வீரன்—பிருதிவிராஜ்—காட்டிக் கொடுக்கப்பட்டுக் களத்திலேயே மாண்டான். இந்தியாவில் முகம்மதியர் ஆதிக்கத்துக்கு அஸ்திவாரம் போடப்பட்டது. முகம்மது கோரியை ஜயசந்திரன் சந்திக்காதிருந்தால்? சரித்திரத்தின் போக்கே மாறியிருக்கு மல்லவா?

▽ ஹரிஹரர்—புக்கரும்—வித்யாரண்யரும்: (கி. பி. 1336) சங்கமன் என்ற மன்னனுக்கு ஐந்து குமாரர்கள். இவர்களில் ஹரிஹரர் புக்கர் என்ற இருவரும் சிறந்த ஞானியும் கல்விமானும் துறவியுமான மாதவ வித்யாரண்யர் என்பவரிடம் கல்வி பயின்று வந்தனர். அதன் விளைவாக அவர்கள் உள்ளத்திலே, சீரும் சிறப்பும் மிக்க ஒரு இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டு மென்ற பேரவா தோன்றியது. வித்யாரண்யர் தம் சீடர்களின் விருப்பத்தை உணர்ந்தார். ஆசிர்வதித்து அனுப்பினார். இவர்கள் துங்கபத்திரை நதிக்கரையில் வித்யாரண்ய நகரம் என்ற பெயரில் ஒரு நகரைத் தோற்றுவித்தார்கள். அதுவே பிற்காலத்தில் மருவி விஜயநகரமாயிற்று. சுமார் மூன்று நூற்றாண்டு காலம் பாரத தேசத்தின் பழம் பண்பாடு, மதம், கலாசாரம் இவைகளையும் வடக்கிலிருந்து அலைபோல் மோதிய அந்நியப் படையெடுப்புக்களிடமிருந்து தென்னகத்தைக் காப்பாற்றியும் வந்தது விஜயநகர ராஜ்யம்.






ஷாஜஹான்—சிற்பி உஸ்தாத் ஈஸா முகம்மது : (கி.பி. 1643) மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹானைத் திவான் ஈ காஸில் பாரசீக இளைஞன் ஒருவன் வந்து சந்தித்தான். உயிரிலும் கல்லுக்கு உயிரளிக்கும் ஒப்பற்ற கலைஞன் என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான் அவன். கலைஞனின் கண்களால் அளவிடும் ஆற்றல் படைத்த ஆலம்பனா உஸ்தாதைத் தன் ஆஸ்தானச் சிற்பிகளுள் ஒருவனாக்கி விட்டார். மும்தாஜ்மஹாலின் அந்தரங்கத் தோழி, அற்புத எழிலரசி நஸீம் கலைஞனின் காதல் மணவாட்டியானாள். தன் அன்பின் பரிசாக, காதலின் காணிக்கையாக ஓர் அற்புத மாளிகையை நஸீமுக்கு எழுப்ப நினைத்தான் சிற்பி உஸ்தாத். அதற்கு முன்மாதிரியாகக் களிமண்ணிலே பொம்மை மாடல் ஒன்றை நிர்மாணித்து வைத்திருந்தான். ஷாஜஹானின் இதயகீதமாக இருந்த மும்தாஜ் திடீரென்று இறந்தாள். அவள் கல்லறை மீது அற்புதமானதொரு கட்டடம் எழுப்ப நினைத்தார் மன்னர். சிற்பி உஸ்தாத் தம் மனைவிக்காகத் திட்டமிட்டு வைத்துள்ள மாதிரியைப் பற்றிக் கேள்விப்பட்டார் மன்னர். ஓடோடியும் சென்று அதைப் பார்த்தார். அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது அந்தப் பொம்மைக் கட்டடம். காதல் மாளிகையான அந்தக் கட்டடமே உலகம் புகழும் தாஜ்மஹாலாக உதயமாயிற்று.



△ சிவாஜி—அப்சல்கான்: (கி. பி. 1659) நாளுக்குநாள் வலிமைபெற்று வரும் மராட்டிய வீரன் சிவாஜியை அடக்கி ஒடுக்கத் திட்டமிட்டது பீஜப்பூர் அரசு. அந்தப் பணியைத் தானே முடிப்பதாகக் கூறிக் கிளம்பினான் தளகர்த்தன் அப்சல் கான். வஞ்சகனை வஞ்சகத்திலேயே ஒழிக்கத் திட்டமிட்ட சிவாஜி, தான் பணிந்து போக விரும்புவதாகக் கடிதம் விடுத்தான். அப்சல்கான் அடங்கா மகிழ்ச்சி கொண்டான். சிவாஜியும் அப்சல்கானும் பிரதாப்கர் கோட்டைக்கு வெளியே அமைக்கப்பட்ட கூடாரத்தில் சந்தித்துப் பேச ஏற்பாடாயிற்று. அப்சல்கான், ஆலிங்கனம் செய்து கொள்வது போல் சிவாஜியின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொல்ல முயன்றான். வஞ்சகனின் சதிச்செயலை அறிந்திருந்த சிவாஜி தற்காப்புக்காக மறைத்து வைத்திருந்த புலி நகத்தால் அவன் குடலைக் கிழித்துக் கொன்றான். இவர்கள் சந்திப்பிலே சிவாஜி மரித்திருந்தால் மகாராஷ்டிரச் சரித்திரத்தின் போக்கே மாறியிருக்கும்.

▽ சாமோரினும்—வாஸ்கோடகாமாவும்: பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் கண்டறியப்பட்ட பூகோளப் புதுமைகள் உலகின் பல நாடுகளுக்கு இடையே இருந்துவந்த வாணிபத் தொடர்புகளில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டுபண்ணின. போர்ச்சுகீசிய மாலுமித்தலைவன் வாஸ்கோடகாமா கி. பி. 1498 ல் இந்தியாவுக்குக் கடல் வழிகள் கண்டுபிடிப்பதில் முனைந்தான். இந்தியாவின் மேலைக் கடற்கரையில் உள்ள கள்ளிக்கோட்டையில் வந்திறங்கினான். அங்கு அப்போது அரசு புரிந்துவந்த சாமோரின் என்ற மன்னன் காமாவுக்கு மகத்தான வரவேற்பளித்தான். வாஸ்கோ கேட்ட வியாபார வசதிகள் யாவையும் அளித்தான் சாமோரின். மேற்றிசை நாடுகளுடன் வாணிபம் புரிய வேண்டும் என விரும்பிய ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியாவுடன் நேரான வாணிபத் தொடர்பு கொண்டனர். இவர்கள் சந்திப்பே பிற்காலத்தில் இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் வேரூன்றக் காரணமாக அமைந்தது.





தீபாவளி
மங்கள
வாழ்த்துக்கள்
ஓடி ஒளிந்திடும் இருளதுபோல்
கனலெனப் பொசுக்கும் புழுக்கமெலாம்
ஐ. ஈ. டபிள்யூ. பங்காதான்
சுற்றிட யாவும் பறந்திடுமே!
JAMES FINLAY & CO., LIMITED
Selling Agents in South for
THE INDIA ELECTRIC WORKS LTD.
CHATNATH BUILDINGS, 29, MOUNT ROAD, MADRAS-2



குட்டிப் பென்சில்

சாதுவான நமது காந்தி
　　தமது அறையி னுள்ளே
ஏதோ ஒன்றைத் தேடித் தேட
　　இங்கு மங்கும் பார்த்தார்.

ஆர்வத்தோடு அந்த அறையை
　　அலசிப் பார்க்க லானார்.
கூர்ந்து மூலைமுடுக்கு யாவும்
　　குனிந்து பார்த்தும் காணோம்.

அறையினுள்ளே சிடர் ஒருவர்
　　அந்தச் சமயம் வந்தார்.
"சிரமப்பட்டு எந்தப் பொருளைத்
　　தேடு கின்றீர்?" என்றார்.

"சின்னப் பென்சில் ஒன்றை நானும்
　　தேடு கின்றேன் இங்கே.
என்னை அதுவும் ஏய்த்துவிட்டு
　　எங்கோ சென்ற" தென்றார்.

சட்டைப்பையில் கையை விட்டுச்
　　சட்டென் றந்தச் சிடர்
நெட்டைப் பென்சில் ஒன்றையெடுத்து
　　நீட்டி னாரே முன்னால்.

"நெட்டைப்பென்சில் எனக்கு வேண்டாம்
　　நீரே வைத்துக் கொள்ளும்.
குட்டைப் பென்சில் அதனை நானும்
　　விட்டுப் பிரிய லாமோ?"

இந்த வார்த்தை கூறிக்காந்தி
　　இங்கு மங்கும் தேட
அந்தச்சிடர் என்ன செய்தார்?
　　அவரும் தேட லானார்.

பாடுபட்டுத் தேடிக் காந்தி
　　பலனைக் கண்டு விட்டார்!
"தேடிப்பார்த்த பென்சில் கையில்
　　சிக்கிக் கொண்ட" தென்றார்.

சிரமங்கொடுத்த பென்சில் தன்னைச்
　　சிடர் உற்றுப் பார்த்தார்.
சரியாய் ஒற்றை அங்குலம்தான்
　　சற்றும் பெரிதாய் இல்லை!

பொக்கை வாயைத் திறந்துகாந்தி
　　புன்சி ரிப்புச் சிரித்தார்.
"மிக்கநல்ல பென்சில் இதனை
　　விடவே மனம் இல்லை.

சென்னை நகரில் இருந்தபோது
　　* சின்னப் பையன் ஒருவன்
அன்பளிப்பாய்த் தந்தான் இந்த
　　அருமைப் பென்சில்!" என்றார்.

---

* 'இந்தியன் ரெவ்யூ' என்ற பத்திரிகையை நடத்தியவரும், பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டிருந்தவருமாகிய காலஞ் சென்ற திரு ஜி. ஏ. நடேசன் அவர்களின் புதல்வன்தான் இந்தச் சிறுவன்.

அழ. வள்ளியப்பா




அவர்கள்
செவ்வாய், சுக்கிரன்
முதலிய கிரகங்களில்
வாழ்பவர்களுக்கும்
ஆடையணிவிக்க
முயல்கிறார்கள்..
U.S.S.R.
U.S.A.
...ஆனால்
நாம் நம்
தேவையைப்
பூர்த்தி செய்ய
வேண்டியிருக்கிறது
GANGA TEXTILES
Manufacturers of: 60s, 80s and 100s, Cones and Hanks.
*
KARTHIKEYA MILLS
Manufacturers of: 40s, 60s 80s, and 100s carded single and Double combed yarn.
64s and 40s Cone and Hanks and 20s Staple Fibre yarn.
SEKHAR
PHONE: (OFFICE) 3016.
(RES.) 2829.
PHONE: 2397. (OFFICE)
2829. (RES.)
ஸ்ரீ கார்த்திகேயா
ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் (P) லிட்
சிங்காநல்லூர், கோயமுத்தூர்.
த.பெட்டி. 18
தந்தி: "கங்கா" கோவை-5
G. ராமசாமி & கோ.
கங்கா டெக்ஸ்டைல்ஸ்
2/249, அவினாசி ரோட், P.N. பாளையம்
தந்தி: "கீர்கோ."



கலியபெருமாளின் கனவு

அகிலன்

கலியபெருமாள் பிறந்து வளர்ந்தது தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். அவனுடைய கல்லூரிப் படிப்பு நடந்த இடம் திருச்சி. இப்போது அவன் கலைக்கோட்டையான பட்டணத்தை முற்றுகையிடுவதற்கு எழும்பூரை நோக்கி ரயிலில் வந்து கொண்டிருக்கிறான்.

பி. ஏ. பரீட்சை முடிந்தது. விடுமுறையும் விட்டு விட்டார்கள். வட இந்தியாவுக்குத் தன் நண்பர்களுடன் புறப்படுவதாக வீட்டில் ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுப் பை நிறையப் பணம் எடுத்துக்கொண்டு அவன் இந்தத் தலைநகர யாத்திரையைத் தொடங்கியிருக்கிறான். தலைநகரம் அவனைப் பொறுத்த மட்டில் கலை நகரம்.

எழும்பூர் ரயிலடியில் இறங்கி அவன் விழித்த விழிப்பைக் கண்டுவிட்டு, முன்பின் தெரியாத ஓட்டல்காரர் ஒருவர், நெடுநாள் பழகியவர்போல் அவனிடம் நெருங்கினார். அவனுக்காகவே காத்திருப்பவர் போல் தேன் சொட்டப் பேசினார். அவர் சார்பில் கூலியாட்களை அதட்டிப் பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொள்ளச் செய்தார். வெளியில் நின்றுகொண்டிருந்த 'டாக்ஸி'யில் ஏறிக்கொண்டு அவர்கள் இருவரும் ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஓட்டலில் சாப்பாடும் உண்டு; தங்குவதற்கு அறையும் உண்டு; ஏவலுக்கு ஆளும் உண்டு.

புது மாப்பிள்ளைக்கு நடக்க வேண்டிய உபசாரங்கள் அங்கே அவனுக்கு நடந்தன. காலைக் காப்பி, குளிப்பதற்கு வெந்நீர், பிறகு பலகாரம், அடுத்தாற்போல் பத்திரிகை இவை யாவும் அவன் கேட்காமலே அவனுக்குக் கிடைத்தன. ஏற்கெனவே அவன் ஓட்டல் வசதிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அவனுக்கு வியப்பொன்றும் ஏற்படவில்லை.

செய்தித் தாளை அகலமாகப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினான் கலிய பெருமாள். அவனுக்குப் பிடித்தமான தினசரி அது. கலிய பெருமாளிடம் இப்போது எதையும் ஆழ்ந்து

படிக்கும் வழக்கமில்லை. அகலமாகப் படித்தே பழகி விட்டவன் அவன்.

'நாட்டு நடப்பில்' நாட்டம் செலுத்தி யது அவன் மனம். கொலைவழக்கு, கள்ளச் சாராயம், நடுத்தெருச் சோரம், பருத்திச் சூதாட்டம், பொய் புனை சுருட்டு இவையே அவனுக்குப் பிடித்த மான நாட்டு நடப்புக்கள். முற்காலத்தி லிருந்த 'மூடர்கள்' இவைகளுக்குப் பஞ்சமா பாதகங்கள் என்று பெயர் வைத்திருந்தார்கள். இந்தக் காலத்து இளம் அறிவாளிகளின் கருத்துக்கு அவை உணவாகப் போகின்றன என்று அவர் களுக்கு எப்படித் தெரியும்?

அடுத்தாற்போல் அவனைக் கவர்வது சினிமாச் செய்தி. அதற்கும் அடுத்தாற் போல் கட்சி அரசியல் சண்டை. இவர் அவரை இன்றைக்கு எப்படித் திட்டி னார்; அவர் இவரை எப்படித் திருப்பித் திட்டினார்; இத்யாதி...இத்யாதி.

ஓட்டல் மானேஜர் ஒரு நோட்டுப் புத்தகமும் கையுமாக அவனிடம் வந்து சேர்ந்தார். செய்தித் தாளில் 'இந்திய எல்லையில் சீனத் துருப்புக்கள்' என்ற பகுதியை ஒதுக்கித் தள்ளிவிட்டுக் குமாரி குந்தளா என்ற எக்ஸ்ட்ரா நடிகை யின் அந்தரங்க வாழ்க்கையாகிய நாட்டு நடப்புக்குள் அவன் அப் போது புகுந்துகொண்டிருந்தான். செய்தித் தாளும், சீனத் துருப்புக் களுக்குக் கொடுக்காத மகத்து வத்தைக் குமாரி குந்தளாவுக்குக் கொடுத்து, அவளுக்காக அரைப் பக்கத்தையும் ஒதுக்கி யிருந்தது.

ஓட்டல் மானேஜர் நடுத்தர வயதும் முதல்தர உடம்புமாக முறுக்கிவிட்ட மீசையுடன் காமா பயில்வானின் தம்பி போல் இருந் தார். அகலமான நெற்றி, மல் ஜிப்பா, மல்வேஷ்டி, மூக்குக் கண்ணாடி அவருக்கு.

பையனை ஒருமுறை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஏற இறங் கப் பார்த்தார். ஓட்டலுக்கு வரு கிறவர்களை எடை போட்டுப் பழகிப் போன கண்கள் அவ ருடைய கண்கள்.

பையனுக்கோ ஒல்லியான உடம்பு. திலீப் குமார் கிராப்பு, நறுக்கு மீசை, ஜாக்கெட் துணியில் மேல் சட்டை, தொள தொளத்த பைஜாமா, விலைஉயர்ந்த செண்ட் மணமும், சிகரெட் மணமும் அவனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன. 'புள்ளி சுமாரான புள்ளிதான்' என்று தமக்குள் புள்ளி போட்டுக் கொண்டார் மானேஜர்.

மெல்லக் கனைத்துத் தம் வருகையை வெளிப்படுத்திக் கொண்டு, "எவ்வளவு நாட்களுக்குப் பட்டணத்திலே தங்கறதா உத்தேசமோ?" என்று குழைவுடன் ஆரம்பித்தார் அவர்.

குமாரி குந்தளாவிடம் ஒட்டிக்கொண் டிருந்த மனத்தை வெட்டி விடத் துணிந்த அவரைச் சற்றுக் கடுப்புடன் பார்த்து விட்டு, "எதுக்காக இதையெல்லாம் கேக்கிறீங்க?" என்றான் கவியபெருமாள்.

"இல்லே, உங்க சொந்த ஊர், நீங்க இங்கே வந்த காரணம், நீங்க எத்தனை நாள் இங்கே தங்கப் போறீங்கங்கற விஷயம் இதையெல்லாம் நான் குறிச்சுக் கணும். அதனாலே கேட்டேன்."

பையன் யோசனை செய்தான். அவன் பட்டணத்துக்குப் புதியவன். ஓட்டலுக் குப் புதியவன். கேள்வி ஞானத்தால் மட்டும் விவரம் தெரிந்துகொண்டு வந்திருக்கிறான்.

"நீங்க என்ன சொல்றீங்களோ, அதை நாங்க எழுதிக்கிறோம்" என்றார் மானே ஜர், அவனுடைய யோசனையைப் பார்த்து விட்டு. 'உண்மையைத்தான் சொல்ல ணும்கிறது இல்லே; நீங்க சொல்றதுதான் எங்களுக்கு உண்மை' என்று மறைமுக மாக அவர் சொல்வது போலிருந்தது.

அதை அவன் புரிந்து கொள்ளாமல், "எத்தனை நாட்கள் இருக்கப்போறேன்னு எனக்கே தெரியாது" என்றான். பிறகு, "ஏன், இவ்வளவு நாட்கள்தான் தங்க லாம்னு எதுவும் கட்டாயம் உண்டோ?" என்று கேட்டான்.

"சே! இதை உங்க சொந்த வீடுமாதிரி நினைச்சுக்குங்க. ஒரு நாளைக்கு அஞ்சு



ரூபாய் அறை வாடகை. காப்பி, சாப் பாடு, வெந்நீர், தவிர இதெல்லாம் தனிச்செலவு. நீங்க நிரந்தரமா இங் கேயே தங்கலாம். ஆமாம், வந்த வேலை என்னன்னு சொல்றீங்களா?"

"ஒருவேலையா இருந்தால் சொல்ல லாம். எனக்கு எத்தனையோ வேலைகள். சினிமா, சங்கீதம், அரசியல், பேச்சு, எழுத்து, சித்திரம்..."

'ஓ! சகல கலாவல்லவர் போலிருக்கு!' என்று தமக்குள் சொல்லிக் கொண்டு, "அப்படின்னு, 'கலைப்பணி'ன்னு ஒரே வார்த்தையிலே சொல்லிடுங்க. கலைப் பணின்னு நோட்டிலே எழுதிக்கவா?"

"ஆமாம், கலைத்தொண்டுதான் என் வாழ்க்கை இலட்சியம். அதுக்காக என் உடல், பொருள், ஆவி எல்லாத்தையும் கொடுக்கறதுன்னு முடிவு பண்ணிட் டேன். பட்டணத்திலேதானே அதுக் கெல்லாம் இடமிருக்கு!"

"தெரியாமலா 'கெட்டும் பட்டணம் சேர்'னு சொன்னான்?...அட்வான்ஸ் ஒரு நூறு ரூபா தர்றீங்களா?" என்றார் மானேஜர்.

நூறு ரூபாய் நோட்டை எடுத்து அலட்சியமாக மானேஜரிடம் நீட்டினான் கவியபெருமாள். அதை அவர் வெளிச் சத்தில் பிடித்து நோட்டம் பார்த்து விட்டு, நல்ல நோட்டுத்தான் என்று தெரிந்து கொண்டபிறகு அவனுக்கு ரசீது கொடுத்தார்.

"இன்னும் உங்களுக்கு என்னென்ன வசதி வேணுமோ, கேளுங்க. உங்களைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளை போலத் தோணுது. எங்களாலே முடிஞ்ச உதவியை யெல்லாம் செய்யக் காத்துக் கிட்டிருக்கோம்."

"முதல்லே நான் ஊரைச் சுத்திப் பார்க்கணும். யார் - யார் எங்கெங்கே இருக்காங்கன்னு தெரிஞ்சுக்கறதுக்கே ஒரு வாரம் ஆகும். அதுவரையிலே ஒரு பையனை எனக்குத் துணையாக அனுப்பி வைச்சீங்கன்னு, அதுதான் பெரிய உதவி."

சற்று நேரத்துக்கெல்லாம் ஓர் இருபது வயது இளைஞனுடன் திரும்பி வந்தார் மானேஜர். குப் பத்து இளைஞனாக இருந்தாலும் அவன் வெளுப்பான சட்டையும் சராயும் போட்டுக் கொண்டிருந் தான். "பையன் யோக்கியமான பையன்; நீங்கள் இவனை நம்ப லாம்" என்று சொல்லி விட்டு, அவனிடம் திரும்பி, "டேய், மன்னார்! ஐயாவை நீ கவனிச் சுக்க; அவர் உன்னைக் கவனிச்சுக்கு வார். தெரிஞ்சுதா?" என்றார்.

"ஆமாம், கொண்டு போய் நீ பாட்டுக்குத் தப்புத் தண்டாவிலே மாட்டி விடாதே!"

"என்னங்க, இது! சாமியைப் பார்த்தா நல்லவரு மாதிரித் தோணுது. நான் அப்படி யெல் லாம் செய்வேனுங்களா?"

அன்றிலிருந்து கவியபெருமாள் பட்டணத்துக்குள் மணிக்கு இருபது முப்பது மைல் வேகத்தில் சுற்றத் தொடங்கினான். 'டாக்ஸி யின் மீட்டர்' சுற்றிய வண்ண மாகவே இருந்தது. தார் ரோட் டில், காற்றில் பறப்பதுபோல் காரில் போவதில் ஓர் ஆனந்தம் இருக்கத்தான் செய்கிறது. குளிர்ந்த காற்றுள்ள சினி மாக் கொட்டகைகளில் உட்கார்ந்து படம் பார்ப்பதிலும், இந்த மாடியுள்ள ஓட்டல்களில் உட்கார்ந்து பலகாரம் சாப் பிடுவதிலும், வரிசைவரிசையாகப் பங்க ளாக்கள், கார்கள், பெண்களை வேடிக்கை பார்ப்பதிலும் அந்த ஆனந்தம் அதி கரிக்கத்தான் செய்கிறது.

கவியபெருமாளின் தகப்பனார் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப் பணம் சேர்த்த மிராசுதார். தாமும் உழைத்தார்; வேலையாட்களையும் விரட்டி வேலை வாங்கினார்; நியாய விலைக்கும் நெல்லை விற்றார்.

அவருடைய மூத்த பிள்ளைக்குச் சேலத் தில் துணி வியாபாரம். அதுவும் நன்றாகத்தான் நடந்தது.

அவருடைய அடுத்த பிள்ளை ஏதோ ஒரு ஊரில் டாக்டராக இருந்தான். தொழிலையும் கவனித்துக் கொண்டு அவன் புதிய மருத்துவ ஆராய்ச்சிகளையும் செய்து வந்தான். அவனுக்கு அவன் இருந்த வட்டாரத்தில் நல்ல பெயர்.

அவருடைய மூன்றாவது பிள்ளைதான் கலியபெருமாள். எல்லோருக்கும் செல்லப் பிள்ளை அவன்.

பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் அவனைக் கல்லூரிக்குள் தள்ளி விடுவதற்கு அரும்பாடு பட்டார் அவனுடைய தகப்பனார். பிடிக்காதவர்களை யெல்லாம் பிடித்து, கெஞ்சாதவர்களிடமெல்லாம் கெஞ்சி, கிடைக்காத இடத்தைக் கிடைக்கச் செய்தார்.

ஆரம்பத்தில் படிப்பில் கருகருப்பு ஏற்பட்டது. பிறகு அது படுத்துக் கொண்டது. கல்லூரி நாடகங்கள், பேச்சுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் இவற்றில் நாட்டம் கொள்ளலானான். படிப்பையும் கவனித்துக் கொண்டு மற்ற விஷயங்களையும் கவனிப்பதற்கு அவனுக்கு நேரம் இருந்தது. நேரம் இருந்தால் போதுமா? மனம் வேண்டாமா?

அவனுடைய வகுப்பில் பாடப் புத்தகங்களை மட்டும் அரித்துத் தின்னும் கரையான் கூட்டத்தாரும் இருந்தார்கள். கல்வி அறிவையும் பொது அறிவையும் வளர்த்துக் கொண்ட புத்திசாலிகளும் இருந்தார்கள். 'படிப்பதே பாவம்! வகுப்பில் கவனிப்பதே குற்றம்! கல்லூரியே சிறைச்சாலை!' என்று நினைக்கிற பிறவி மேதைகளும் சிலர் இருந்தார்கள்.

பெற்றோரை முட்டாள்களென்று நினைத்த இந்தப் பிறவி மேதைகளின் வட்டத்துக்குள் கலியபெருமாள் எப்படியோ அகப்பட்டுக் கொண்டான். பாடப் புத்தகங்கள் பரிதாபத்துக்குரிய பொருள்களாகி விட்டன. நாட்டு நடப்பைப் பற்றியும் கலைப் பணியைப் பற்றியுமே அவனுக்கு இரவு பகல் எந்த நேரமும் சிந்தனை.

'நாட்டு நடப்பெ'ன்றால் கலியபெருமாளின் அகராதியில் கோர்ட்டு நடப்புகளும் கட்சி அரசியல் விவகாரங்களும் தான் ஆகும்.

'கலைப் பணி' என்றால் சினிமாவில் நடிப்பது, பாடுவது அதற்கு எழுதுவது முதலிய வேலைகளாகும்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக!' என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார் அல்லவா? நாட்டுக்கு நல்ல பணிகள் பல செய்ய வேண்டுமென்றால், அதற்கு முதலில் புகழ் வேண்டும். புகழ் பெறுவது எப்படி? - அவன் ஒரே சமயத்தில் ஒரே ஒரு வழியில் புகழ் தேடமுனைந்திருந்தாலும் அதில் பொருள் உண்டு. ஆனால் கலியபெருமாளோ திரைப்படத்தில் பற்பல வேடங்களில் நடிக்கவும் விரும்பினான்; மேடையேறிச் சொற்போர் நடத்தவும் விரும்பினான்; காவியம் எழுத நினைத்தான்; ஓவியம் தீட்டத் துடித்தான்; தேர்தலுக்கு நின்று அமைச்சராகி நாடாளவும் ஆசைப்பட்டான்!

பரீட்சையின் விளைத் தாள்களைத் தயாரித்தவர்கள் நாட்டு நடப்பைச் சிறிதும் அறியாத கொள்கையற்றவர்கள். பாடப் புத்தகங்களிலிருந்தே அநாவசியமாகக் கேள்விகளைக் கேட்டு வைத்திருந்தார்கள். கொள்கை இல்லாமல்தானே இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான கல்லூரிகள் தோன்றி யிருக்கின்றன? விவசாயம், பொறி இயல், மருத்துவம், கணிதம், இலக்கியம் இவையெல்லாம் கொள்கைக்குரிய கல்விகளாகுமா என்ன! இவற்றைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதால் இந்த நாடு உருப்படப் போகிறதா, என்ன?

ஆகவே, தான் பரீட்சை கொடுத்த அதிர்ச்சி தாங்காமல், கலை என்ற பொன் குடையைப் போர்த்திக் கொண்டு புகழ்



பெறுவதற்காக, அவன் தமிழ் நாட்டின் நல்ல நகரமான கலை நகரத்துக்கு வந்து சேர்ந்துவிட்டான்.

* * *

முதல் வாரம் பளபளப்பும் மினுமினுப்பும், கண் கூசும் வெளிச்சமும், காதடைக்கும் சத்தமும் நிறைந்த சென்னமா நகரத்தைச் சுற்றிப் பார்ப்பதில் கழிந்தது. குபேர பட்டணம் என்று கதையில் வருகிற பட்டணம் இதன் ஒரு தெருவுக்கு உறை போடக் காணுமா? கார் போகிற வேகத்தில், உட்கார்ந்திருக்கும் 'ஸீட்'டைவிட உயரத்தில் இருந்த பொருள்களே கண்ணுக்குத் தெரிந்தன.

இரண்டாவது வாரம் கலைப் பிரமுகர்களைச் சந்திப்பதில் கழிந்தது. காருக்குக் காசு அதிகமானாலும் முதல் வாரத்துப் பழக்கம் அடுத்த வாரமும் அவனை விட்டு விடவில்லை.

மூன்றாவது வாரம் ஆட்டோரிக்ஷா, சைக்கிள் ரிக்ஷா, மனித வாகனம்.

நான்காவது வாரம் நடை. வெளியில் வேலையுமில்லை; அவனுக்குப் போவதற்கு மனமும் இல்லை.

அவனுடைய அபிமான நடிக நட்சத்திரங்களைப் பேட்டி காண்பதற்குள் அவன் பாடு பெரும் பாடாகி விட்டது. வீட்டுக்குப் போனபோது ஸ்டுடியோவுக்குப் போயிருந்தார்கள். ஸ்டுடியோவுக்குப் போனபோது வீட்டில் இருந்தார்கள். சில சமயங்களில் வீட்டுக்குள்ளும் நுழைய முடியவில்லை; ஸ்டுடியோவுக்கும் அநுமதி கிடைக்கவில்லை.

எப்படியோ ஒருவரைச் சந்தித்து, "நீங்கள் எப்படி இந்தத் துறையில் புகழ் பெற்றீங்க?" என்று கேட்டான்.

"புகழாவது, மண்ணாங்கட்டியாவது! அஞ்சாவது வயசிலே நாடக மேடையிலே வாத்தியார் கிட்ட வாங்கின அடியை நினைச்சா இன்னும் பயமா இருக்குது. நடிக்கச் சொல்லி அவர் படுத்தின பாடு ரொம்ப அதிகம். அப்ப அவர் மேலே எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இப்ப நான் அவரை நினைக்காத நாள் இல்லே. பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முந்தி நல்ல துணி ஏது? சோறேது? —புகழைப் பத்திப் பேச வந்திட்டீங்களே!"

"எனக்கும் உங்களைப் போல் நடிக்கணும்னு ஆசையா இருக்கு. ஒரு சந்தர்ப்பம் கிடைச்சால்..."

"ஆசைப்படறது நல்லதுதான். ஆனால் இந்த நாட்டிலே வீட்டுக்கொரு பிள்ளை நடிக்கணும்னு ஆசைப்பட்டால், நான் யாருக்குத்தான் சந்தர்ப்பம் வாங்கிக் கொடுக்கிறது? ஏற்கெனவே நடிக்க ஆசைப்பட்டவங்க ஆயிரக்கணக்கானபேர்கள் சந்தர்ப்பம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கிட்டிருக்காங்க, தெரியுமா?"

அப்போதே நூற்றுக்கணக்கானவர்கள் வெளியில் காத்துக் கொண்டிருப்பதும் தன்னைப் போலவே அவர்களும் சென்னைக்கு வந்தவர்கள் என்பதும் அவனுக்குத் தெரிந்தது.

அடுத்தாற்போல் புகழுக்குரிய அரசியல் கட்சித் தலைவர்களைப் பேட்டி காண்பதற்காக முயற்சி செய்தான். பலர் ஊரில் இல்லை. வரப் போகும் பொதுத் தேர்தலுக்கும் பணம் தேடுவதற்காகவும், ஆதரவு தேடுவதற்காகவும் அவர்கள் வெளியூர்களுக்குப் போயிருந்தார்கள்.

பார்க்க முடிந்த ஒருவரிடம் தனக்கு நன்றாக மேடையில் பேசத் தெரியும் என்றும் நாட்டுப் பணி செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் அவன் கேட்டுக் கொண்டான்.

"மேடையிலே பேசற நாட்டுப் பணி இப்ப போதாது, தம்பி!" என்றார் அவர். "வரப் போகிற தேர்தலிலே உன்னோட

கட்டாரத்திலே நீ நம்ப கட்சிக்காகப் பாடுபடு. உன்னோட உழைப்பைப் பார்த்திட்டுப் பின்னாலே யோசிப்போம்'' என்றார்.

இன்னும் பல இடங்களுக்குப் போய்ச் சலிப்பு ஏற்பட்ட பிறகு, 'சும்மா இவரையும் தான் பார்த்துவைப்போமே!' என்ற எண்ணத்துடன் ஒரு எழுத்தாளரைப் போய்ப் பார்த்தான். அவர் புகழுக்கு உரியவரே தவிரப் பொருளுக்கு உரியவரல்ல. தன் தகப்பனிடம் பொருள் இருந்ததால், புகழ் கிடைத்தால் போதுமென்று நினைத்தான் கவியபெருமாள்.

அவன் போய்ச் சேர்ந்த நேரத்தில் அவர் கதை எழுதுவதற்காகக் கற்பனையைத் தேடிக் கொண்டிருந்தார். அவன் தன்னுடைய கதையை அவரிடம் சொல்லத் தொடங்கவே, அவருக்குக் கற்பனை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. தூண்டித் துருவி அவனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்போல் கேட்டார்.

அவருக்குக் கதை கிடைத்து விட்டது. பதிலுக்கு அவனுக்கு ஏதாவது கைம்மாறு செய்ய வேண்டுமல்லவா?— அவனோ கதை எழுதவும் ஆசைப்பட்டான்.

''நீங்க சொன்னதைத் தான் நான் இப்ப எழுதப் போறேன். இதை நீங்ககூட எழுதலாம். ஆனால் பயிற்சி வேணும். உழைத்துப் பழகணும். புகழுக்காகவோ பொருளுக்காகவோ ஆரம்பத்திலே பலர் இதில் ஈடுபடுவதில்லை. பிறகு தன்னாலே அது வந்தாலும் வரும்; வராமல் போனாலும் போகும். புகழ்ச்சி கிடைக்கிறப்போ இகழ்ச்சியும் கிடைக்கும். இதை மறந்திடாதீங்க.''

''நான் வரட்டுமா?'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு எழுந்தான் கவியபெருமாள்.

''இன்னொரு விஷயமும் கேட்டுக்குங்க: 'ஒன்றே செய்க. அதை, நன்றே செய்க!' என்பதையும் மனசிலே போட்டு வையுங்க. ஏதாவது ஒரு கலையிலே உங்கள் ஊக்கத்தையும் திறமையையும் ஒருங்கே காட்டி நீங்கள் நீண்டநாள் அயராமல் உழைச்சீங்கன்னு கட்டாயம் வெற்றி பெறுவீங்க.''

* * *

கவியபெருமாள் இப்போது சென்னை நகரத்தின் ஒரு தெருவோரத்தில் மரத்தோடு மரமாக நின்று கொண்டிருந்தான். ஓட்டலில் அடுத்த அறையில் வந்து தங்கியிருந்தவர் அவனைச் சினிமாவில் சேர்த்து விடுவதாகச் சொல்லி, அவனிடம் இருநூறு ரூபாய்கள் வாங்கிக் கொண்டு, எங்கோ கம்பி நீட்டிவிட்டார். மேற்கொண்டு பணத்துக்கு வீட்டுக்கு எழுதியிருந்தான். பணம் வந்து சேரவில்லை. ஓட்டல் மானேஜரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டுப் பிறகு அவனை மரியாதையுடன் வெளியில் அனுப்பி வைத்தார்.

பாக்கிப் பணத்துக்கு ஈடாக அவனுடைய உடைமைகள் யாவும் அவரிடம் அகப்பட்டுக் கொண்டன. சாப்பிடுவதற்கு அவனிடம் கையில் காசில்லை; தங்குவதற்கு இடமில்லை. மாற்றுடைகளையோ மானேஜர் வைத்திருந்தார்.

நேரம் இரவு நேரம். இந்த நேரத்தில் சென்னையில் யார் முகத்தில் போய் விழிப்பது? யாருக்கு அவனுடைய முகம் தெரியும்? இரவு நேரத்துச் சென்னை நகரத்தின் முகத்தை நன்றாக உற்றுப் பார்ப்பதற்காக, அவன் கால் போன போக்கில் நடக்கத் தொடங்கினான்.

பகல் நேரத்துச் சென்னை நகரத்துக்கும் இரவு நேரத்துச் சென்னை நகரத்துக்கும் எவ்வளவோ வேற்றுமை இருந்தது. காரில் போகும்போது கண்ட நகரம் வேறே; கால் நடையாகப் போகும்போது காணும் நகரம் வேறே. பணக்காரர்களின் நகரமான அது அவனுக்கு நிக

பூம்பொழிலில்

மல்லிகை பூத்து மணக்கையிலே — அந்தி
மாலையென்பாள் நட மாடையிலே
புல்லும் பொறிவரி வண்டினங்கள் — இசை
பூத்துக் களித்திடும் பூம்பொழிலில்

மாதுளை மீது மலருருத்தே — மர
மல்லிகை அன்னப் சொரிகையிலே
காத வழிசென்று மீண்டுவந்த — குயில்
காதலி யோடு குலாவுகையில்

வண்ண விசித்திர வானவில்லும் — நீ
வானத்தைத் தொட்டு வளைகையிலே
மண்ணக முற்றும் அணுவணுவாய் — இருள்
மண்டி விழுங்க முயலுகையில்

நெஞ்சத் தடத்தில் நடம்புரியும் — அன்னை
நிந்திலப் புன்னகை கண்டுவிட்டேன்!
விஞ்சி யெழும் அன்பு வெள்ளத்திலே—அவள்
வித்தகத் தோணியில் வீற்றிருந்தாள்!

வித்துவான் வி. துரைசாமி

சென்று ஏழைகளின் நரகமாக மாறி விட்டது.

தெருவோரத்துச் சில தொட்டிகளைச் சில இடங்களில் மனிதர்கள் மொய்த்தார்கள். கால்நடைகளைக் கட்டிப் போடுவதற்காவது தனி இடம் உண்டு. மனிதர்கள் தங்கள் கட்டைகளை விட்டெறிவதற்கு அங்கே இடமில்லை. தெருவோரங்களில் கண்ட கண்ட இடங்களில் அவர்கள் படுத்துக் கிடந்தார்கள்.

பசியும் களைப்பும் அதிகமாகப் போனதால் ஓரிடத்தில் சோர்ந்து போய் உட்கார்ந்தான் கவிப் பெருமாள். கையிலே அவன் கட்டியிருந்த கடிகாரம், முன்பு கால் சட்டைப் பைக்குள் இருந்ததால் அது ஓட்டல் மானேஜரின் கண்களுக்குப் படவில்லை. இப்போது கடிகாரத்தைக் காசாக மாற்றிப் பசியாற்றிக் கொள்ளவும் முடியாது. கடைகளை யெல்லாம் அடைத்து விட்டார்கள்.

ஓட்டல் விவகாரம் முன்னறிவிப் பின்றித் திடீரென்று ஏற்பட்டதால், அந்த அதிர்ச்சி வேறு அவனை வாட்டிக் கொண்டிருந்தது. கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான். இரவு மணி ஒன்று ஆகியிருந்தது.

உட்கார்ந்திருந்த அவனிடம் வந்து யாரோ ஒரு பெண் பின்னே பேச்சுக் கொடுக்கப் பார்த்தாள். சினிமாவில் சேருவதற்காக வந்து சேர்ந்த பெண்களில் அவளும் ஒருத்தியாக இருக்கலாமோ என்று அநுதாபத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். வயது, பருவம், உருவம் எல்லாமே அவளுடைய அழகின் வாட்டத்தை அவனிடம் எடுத்துச் சொல்லத் தொடங்கின.

"நீங்க எந்த ஊருங்க?"

"எல்லாம் இந்த ஊருதான்!" என்று சலிப்போடு கூறினான் கவிப்பெருமாள். அடுத்த வார்த்தை அவன் பேசுவதற்குள்; முரட்டுத்தடியன் ஒருவன் ஓடிவந்து, அவனை அடிப்பதுபோல் அடித்து, வேறு பக்கம் இழுத்துப் போட்டான். "ஏன்டா பயலே!" என்று சாராயவாடை வீசக் கவிப்பெருமாளின் மீது புலியைப்போலத் தாவினான் அந்த முரடன்.

அவனும் கவிப்பெருமாளுக்குக் கிடைத்தது ஒன்று; பறி போனது மற்றொன்று. கிடைத்தது முகத்தில் குத்து; பறி போனது கைக்கடிகாரம். போகிற போக்கில் முதுகுத்தோலைப் பிய்த்தெடுத்துக் கொண்டுபோக நினைத்தவன், சட்டைத் துணியைப் பிய்த்தெடுத்துக் கொண்டதோடு விட்டு விட்டான்.

பொழுது விடிந்த பிறகும் அவனும் அந்த இடத்தை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. அங்கேயே விழுந்து கிடந்தான். இத்தனை ஆண்டுகளாக அவன் தெரிந்து கொள்ளாத உண்மைகளை யெல்லாம் அந்த ஒரு இரவு அவனுக்குப் போதித்து விட்டது.


தன் பசியால் நாட்டின் பசியையும், தனது நிலையால் நாட்டின் நிலையையும் அறிந்து கொண்டான் அவன். ஜுர வேகத்தில் முனகிக் கொண்டிருந்த அவனை ஒரு ரிக்ஷாக்காரன் இரக்கப்பட்டுப் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

ஆஸ்பத்திரியில் அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்தார்கள். உணவு கொடுத்தார்கள்; உடை கொடுத்தார்கள்; இடம் கொடுத்தார்கள்; மருந்தும் கொடுத்தார்கள்.

உணவு கொடுத்தபோது தந்தையின் நினைவும், உடை கொடுத்த போது பெரிய தலைவனின் நினைவும், மருந்து கொடுத்தபோது சிறிய தலைவனின் நினைவும் அவனுக்கு வந்தன. ஆயிரக் கணக்கான நோயாளிகளுக்குப் புகலிடம் அளித்துள்ள அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை அண்ணாந்து பார்த்தான்.


முன்பு அவன் சந்தித்த எழுத்தாளர் நினைவுக்கு வந்தார். அவர் கூறிய அறிவுரைகளை எண்ணிப் பார்த்தான்.


'பிழைத்துக் கிடந்து ஊர் போய்ச் சேர்ந்தால் நான் பெரிய இன்ஜினியராகி இதைப்போன்ற பல கட்டிடங்கள் கட்டுவேன். வீடில்லாதோருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பேன்' என்று தனக்குள் ஓர் முடிவு செய்துகொண்டான். இதுவே அவனுடைய கடைசி முடிவு.




"நம்ம எசமானர் கஞ்சு மோசம், அண்ணே! இவுளிக்கு எண்ணெய் தேய்ச்ச முழுக்குக்கூட லீவு கொடுக்க மாட்டேங்கறாரு!"

விபத்துக்குப் பின்......!




psg
ELECTRIC MOTORS
CENTRIFUGAL PUMP-SETS
MACHINE TOOLS
EDUCATIONAL EQUIPMENT
TEXTILE MACHINERY
Wishing you
a happy
Deepavali
P. S. G. INDUSTRIAL INSTITUTE
COIMBATORE 4, S. INDIA.



ரோஜா

ஜெயகாந்தன்

"சில நினைவுகள்
உயிர்க் கருதாமலே
செப்புதற் கரிதாக
விருக்குமால்
நிறை வான்நுதலார்
தரும் மையலாம்
தெய்விகக் கனவு
அன்னது வாழ்வே"

—பாரதியார்

o

மதனபுரி!

தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து, வடநாடெங்கும் சுற்றித் திரிந்து உத்தியோகம் புரிந்து கையில் காசும் பணமும் சேர்ந்த பின் எஞ்சிய வாழ்நாட்களை அந்தச் சிற்றூரில்தான் கழிக்க வேண்டுமென்று தோன்றிற்று அவருக்கு.

உலகோர் வியக்கும் 'காதற் கோயி'லிலும், பிருந்தாவனங்களிலும், ஓவியக் குகைகளிலும், இமயாவின் அடிவாரத்தில் கனவுகள் பூத்துப் பரந்து கிடக்கும் ஏரிக்கரைப் பள்ளத்தாக்குகளிலும் ஏற்படாத லயிப்பு அவருக்கு இந்தச் சிற்றூரில் ஏற்பட்டிருந்தது.

அதனால், ரகுராமன் மதனபுரிக்கு வந்து சேர்ந்தார்.

'மீனாட்சி விலாஸ்' என்ற அந்தச் சாப்பாட்டுக் கடை இப்பொழுது 'மீனாட்சி விலாஸ் போர்டிங், அண்ட் லாட்ஜிங் ஹவுஸா'கப் பரிணமித்திருந்தது. கட்டடம் சற்றுப் புதிதாக்கப் பட்டிருந்தாலும் அதே கட்டிடம்தான்; அதே அறைதான். இப்பொழுது சுவர்களில் ஆங்காங்கே நிலைக்கண்ணாடிகள் பதிக்கப் பட்டிருக்கின்றன.

அவர் முகம் அதில் தெரிந்தது. நரை கிராப்பும், வரி விழுந்த முகமும்.

'வயசாகிறதே-நரைக்காதா, என்ன?'

'வயசு கிடக்கட்டும். நினைப்புக்கு வயசு உண்டா? உணர்வுக்கு. இந்த ஊருக்கு. இதன் அழகுக்கு. கற்பனைக்கு. கனவுகளுக்கு. வயசாம் வயசு! நரையும்... விட்டுத் தள்ளு!'

மாடியறையின் ஜன்னலைத் திறந்தார் ரகுராமன்.

'இதோ இருக்கிறதே இந்த ஜன்னல், இது அப்பொழுதும்தான் இருந்தது. ஆனால் உளுத்துப் போன வெறும் மரக் கதவுகள். இப்பொழுது அழகான கண்ணாடிக் கதவுகளும், இரும்பினாலான இழைக் கதவுகளும். ஆமாம்; அப்பொழுது வாடகையும் மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்தானே? ஹோட்டல் சொந்தக்காரக் கிழவர் வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவார். இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு, முன் புறத்தில் 'கௌண்டர்' அமைத்து அதன் நடுவே சுழலும் மின்சார விசிறிக்கடியில் ஓர் இளைஞன் உட்கார்ந்திருக்கிறான். காலத்தால் எது கெடாவிற்று? காலம் எல்லாவற்றையும் புதுப்பிக்கிறது; இளமை கொள்ளச் செய்கிறது.'

அவர் கை விரல்கள் ஜன்னலின் விளிம்பில் தாளமிட்டன; மெல்லிய குரல் ஏதோ ஒரு ராகத்தை இழைந்து இழைந்துப்பட்டை தீட்டிக் கொண்டிருந்தது.


'அதோ தெரிகிறதே, அதுதான் முப்பது வருஷங்களுக்கு முன் நான் வேலை பார்த்த தாராகா ஆபீஸ். இப்பொழுதும் அது தாராகா ஆபீஸ்தானே?'

தாராகா ஆபீசுக்குச் சற்றுத் தள்ளி ரயில்வே ஸ்டேஷன். மஞ்சள் பலகையில் 'மதனபுரி' என்று தெரியும் எழுத்துக்கள். இப்பொழுது ஹிந்தியிலும் இருக்கிறது. தூரத்தில் வான வெளியில் யானைக் கூட்டம் அணிவகுத்துப் படுத்திருப்பது போல் குன்றுத் தொடர். இடைவெளியில் பரந்து கிடக்கும் பச்சை வயல்களின் பாய் விரிப்பு. நடுவே வரப்பின் மீது நடந்து செல்லும் மனிதர்கள்; இதோ, இருபுறமும் பன்னீர் மரங்கள் அடர்ந்த ரயிலடிச்சாலை. பிறகு அந்தப் பாலம்...

அந்தப் பாலம்!

இதோ புகை கக்கி வரும் ரயிலின் அதிர்ச்சி! இசையாகவும் ஆவேசமாகவும் பாய்ந்து வரும் மாலைக் காற்று; பாலத்தின் இருமருங்கிலும், மேடுகளின் மீது, கம்பிகளின் ஓரத்தில் பசும் புற்களின் பட்டு விரிப்பு. சரம் சரமாய்ப் பூக்களை உதிர்த்து மலர்க்குப்பை சேர்க்கும் பவழமல்லிகை மரங்கள். கள்ளின் நெடியைப் பூத்துக் குலுங்கும் மாமரங்கள்; நெஞ்





சக்குள் பாதரசம் செலுத்துவதுபோல் கனி வதைக்கும் மாங்குயில்கள்...

'பாலம் அன்றுபோல்தான் இன்றும் இருக்கிறது. நானும் இருக்கிறேன். இடையில் நகர்ந்த காலத்திரை, கற்பனைத் திரையா? கனவின் நிழலா?'

* * *

பள்ளி வாழ்க்கையை முடித்துக் கொண்ட ரகுராமன் எத்தனையோ வேலைகளுக்கு மனுச் செய்து கொண்டே தாராகா ஆபீஸில் மாதம் இருபத்தைந்து ரூபாய்ச் சம்பள உத்தியோகத்தில் அமர்ந்து, வாழ்க்கை இவ்வளவேதான் என்ற திருப்தி அல்லது அதிருப்தியுடன் மதனபுரியில் குடியேறி யிருந்தார்.

ஹோட்டலில் சாப்பாடு, தாராகா ஆபீஸில் உத்தியோகம். மாலை நேரத்தில் ரயிலடிப்பாலம் வரை உலாப்போதல், இரவில் படிப்பதற்கு ஏதாவது ஒரு நாவல். இதைத் தவிர வேறு தொழிலோ, சிந்தனையோ, பொழுது போக்கோ எதுவு மற்ற அந்த வாழ்க்கை அவருக்கு மந்தமாகத்தான் இருந்தது.

'வாழ்க்கை எப்பொழுதும் மந்தமாக இருப்பதில்லை. மனிதன்தான் சில பிராயங்களில் மந்தமானவனாக இருந்து விடுகிறான்...'

இந்த உண்மை - இரவும் பகலும் உறங்காமல் வாழ்வின் சந்தைகள் போல் திகழும் உயிர்ப்பும் வேகமும் கூடிய பெருநகரங்களில் வாழ்ந்த காலத்தில் அவருக்குப் புலனாயிற்று. அதன்பிறகு வாழ்க்கை அவருக்கு என்றுமே மந்தமாக இருந்ததில்லை.

மதனபுரியில் அவர் வாழ்ந்த காலத்திலேயே வாழ்க்கையில் வசந்தம் மலர்ந்து விட்டது! ஆம்; அவர் எங்கெங்கோ திரிந்து கொண்டிருந்த காலத்திலும்கூட இந்தச் சிற்றூரின் நினைவு மனதில் மலர் போல மென்மையாய் முகிழ்க்கும்போதெல்லாம் அவரது உடல் சிலிர்க்கும். ரோஜாவின் மென்மையையும் சுகந்தத்தையும் உடலின் ஒவ்வொரு அணுவும் உணர்ந்து அநுபவிக்கும்.

அதே உணர்ச்சியைத்தான் அந்தக் கிழவர் அதோ ஜன்னலருகே நின்று, இப்பொழுதும் தம்முள் ஆழ்ந்து அநுபவித்துக் கொண்டிருக்கிறார்.

எல்லாம் எப்படி யெப்படியோ மாறியிருந்தபோதிலும், அந்த ஊர் முன் பொரு முறை — பலகாலம் பழகி இருந்த பாசத்தால், பந்தத்தால், எதுவும் அவருக்குப் புதுமையாகத் தோன்றவில்லை... குறிப்பாக அந்தப் பாலம்!

அது அப்படியேதான் இருக்கிறது.

மாலை நேரத்தில் பாலத்தின்மீது நீண்ட தென்னை மரங்களின் நிழல் படியும். அவற்றினூடே புகுந்துவரும் காற்றின் ஸ்பரிசத்தால் சரிவிலிருக்கும் செடியும் புல்லும் சிலிர்த்துக் குலுங்கும்...

வெள்ளைச் சட்டையும் வேட்டியும் படபடக்க, வீசியடிக்கும் காற்றில் முன் மயிர் சரிந்து நெற்றியில் புரளப் பாலத்தின் சரிவில் நிற்கிறான் இளைஞன் ரகுராமன்.

பாலத்தின் சரிவிலுள்ள இரும்புக் கிராதியின் மீது உட்காராமலும் நிற்காமலும் சாய்ந்திருக்கும் ரகுராமனின் பாதங்கள், சரிவில் மண்டிக் கிடக்கும் பட்டுப் புற்களில் பதியாமலும் பதித்தும் இருக்கின்றன. இயற்கையோடு இயைந்து அவனது தோற்றமும் புத்தெழில் பெறுகிறது. இயற்கையின் சோபிதம் வானத்திலிருந்து இழியப் போகும் அமிர்த கலசத்துக்கு முன்னறிவிப்போ?...

அந்திக் காற்றுக்கு ஏன் இந்தக் குதூகலம்?

அதோ, தாராகா ஆபீஸ் வெளியோரத்தில் இரண்டு இல்லங்களின் நடுவே காலியிலிருந்து மலர்ந்து காத்துக் கிடக்கும் ரோஜா மலர் ஒன்று தன் செக்கச் சிவந்த செவ்விதழ் காட்டி அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. அருகில் வர அவனை அழைக்கிறது. அவன் உடல் மோகனமாய்ச் சிலிர்த்தது. சரிவில் இறங்கி ரோஜாவை நோக்கி நடக்கிறான். செடியில் தவித்த மலர் அவன் கரத்தில் வீழ்கிறது. அதை அவன் கண்களில் ஒற்றிக் கொள்கிறான்.

'அப்பா! என்ன குளுமை...'

மீண்டும் அந்தக் கிராதியின் மீது வந்து அமர்கிறான். சிவந்த ரோஜாவின் மெல்லிய சுகந்தம் காற்றில் இழைகிறது. ரோஜாவின் இதழ்களில் அவன் முகம் கவிந்து நிமிரும் போது...

கண்ணின் புலனுக்கு உட்பட்ட எல்லையிலே ஒரு கனவு நிகழ்ந்தது.

என்றோ படித்து எந் நேரமும் மனதில் குதிபோடும் ஓர் இனிய கவிதை போல், கனவு போல், சித்திரம் போல், வெளவனத்தின் அர்த்தமற்ற சிந்தனைகளின் உருவம் போல்...சுவர்க்கமே இறங்கி நடை பழகுவது போல்—ரோஜா நிறத் தாவணி காற்றில் படபடக்க, மைக்குழற் காடு சரிந்து அலைபாய, கையில் புத்தகச் சுமையும், மேனியெலாம் எழிற்சுமையும் ஏற்று, எதிரில் வரும் கலைவாணிபோல்...

பொன்மயமான அந்திக் கிரணங்கள் அந்திக் கன்னி மகளின் சௌந்தர்ய மேனியை மஞ்சன மாட்டின.

அவள் வருகிறாள்...

வண்டுகள் போல் அவன் விழிகள் அவள் கையிலிருந்த ரோஜா மலரில் மொய்த்தன. பிறகு அவள் முகத்தில் ஊர்ந்தன...அவள் விழிகளைக் கவ்வின; அவளது கரு விழிகள் அவன் விழிகளில் பொதிந்து அவற்றைப் பறித்துக் கொண்டதும் ஒரே வெட்டில் மடிந்தது அவன் பார்வை.

அவன் நிலைகுலைந்து போனான்...அவளும்தான். அவனுக்குக் கால்கள் தடுமாறின. காற்றின் வீச்சில் பறந்துவிடுவோமா என்று தோன்றியது அவனுக்கு. அப்படியே காற்றோடு காற்றாய் மிதப்பது போலிருந்தது" அவளுக்கு.


அலை அலையாய்ப் பொங்கி வரும் காற்றின் படை வலிமையை எதிர்த்து அவள் முன்னேறி வரும்போது...

தன்னை மறந்து "அவளில்" லயித்திருந்த அவனது கரத்திலிருந்து நழுவிய ரோஜா மலர் காற்றில் "புரண்டு" அவள் காலடியில் வரும்போது—தவறி மிதிக்க இருந்த தருணத்தில் பதறிப் போய்க் குனிந்து அதைக் கையிலெடுத்தாள் அவள். அவள் கையிலிருந்த புத்தகங்களில் ஒன்று கீழே விழுந்தது. அவன் "எழுந்தோடி வந்து புத்தகத்தை" எடுத்தான்...

கைகள் இரண்டும் நடுங்கின.

ரோஜாவை அவனிடம் தரும்போது அவள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். ரோஜாவை வாங்கிக் கொள்ளாமல் புன்முறுவல் பூத்தான். அவள் தேகம் நடுங்கியது; உதடுகள் துடித்தன...அவளும் சிரித்தாள்...சிரிப்பா அது?...சிரிப்பின் துடிப்பு.

எல்லாம் ஒரு கணம்தான். அவன் அவளைக் கடந்து சென்றான். நடை தவித்



தது. திரும்பிப் பார்க்க மனம் துடித்தது. ஆனால்! எது தடுத்தது?...

மலரோடு மனசையும் பறி கொடுத்து நின்றான். அவள் போன திசையை வெறித்த அவனது பார்வையில் அவள் முடிவற்ற பாதை வழியே போய்க் கொண்டே இருந்தாள்.

*　　　*　　　*

மறுநாள்......

ஆபீஸிலிருந்து வெளியே வரும்போது வாசலில் நின்று வழிமறித்தது ரோஜா. அது அவனுக்காகவே மலர்ந்து அவள் வரவுக்காகவே காத்துக் கிடக்கிறது.

அது அவனை அழைக்கிறது; அவன் அதன் அருகே விரைகிறான். செடியில் தனித்த ரோஜா அவன் கரத்தில் விழ்ந்து சிரிக்கிறது.

பாலத்தை நோக்கி ஓடுகிறான்.

மெல்லிய காற்று தவழ்கிறது; குயில் கூவுகிறது; புல்தரை சிலிர்க்கிறது; பவழ மல்லிகை கனவுகளை உதிர்க்கிறது!

அதோ...

பாலத்தின் மறுகோடியில் அவள் நடந்துதான் வருகிறாளா?...அவளை நிறுத் திச் சுமந்து கொண்டு அந்த இடத்தில் பூமிதான் மெல்லச் சுழல்கிறதா?

கனவுகள் மின்னும் கண்கள் மட்டும் தான் அவனுக்குத் தெரிகின்றன...கவி தைகள் சொல்லும் இரண்டு கருவிழிகள் தான் அவனுக்குத் தெரிகின்றன.

கையில் ரோஜாவுடன் அவன் எழுந்து நிற்கிறான். முடியாமல் அவன் நிற்கிறான். ஆமாம்; அதற்குமேல் அசைய நகர முடியாது; நியதி இல்லை. அவள் அவன் விழி களில் தன்கோலம் கண்டு தவித்து நின் றாள். பார்வை கெஞ்சுகிறது. மலருக்கா?

அவன் அந்தச் செவ்விதழ் ரோஜா மலரை அவள் கையில் கொடுக்கும்போது மலரை தழுவவிட்ட விரல்கள்—மலரின் ஸ்பரிசத்தை விரலில் உணர்கின்றன.

அவன் பார்வை கவிழ்ந்தது. கவிழ்ந்த பார்வை கைநழுவிப் போன ரோஜா காலடியில் கிடப்பதைக் கண்டதும், உடலில் பரவிய மின்சார அதிர்ச்சியில் மனம் நடுக்குற்றது.

ரோஜாவை எடுத்துச் சிகையில் சூட்டிக் கொண்டு அவள் நடக்கிறாள். அவளைக் கடந்து அவன் நடந்தான்.

எல்லாம் ஒரு கணம்தான்.

காற்று வீசுகிறது; மனம் பட படக் கிறது; உடல் சிலிர்க்கிறது; மாலை மங்கி இருள் படிகிறது.

கனவுகள் கனக்க இதயத்துடன் அவன் பாலத்திலிருந்து இறங்கி நடந்தான்.

*　　　*　　　*

மூன்றும் நாள்.

பகலிலேயே வானம் இருண்டு அழுதது. மாலை நான்கு மணிக்கெல்லாம் கால வெள்ளம்போல் மழை வர்ஷித்தது. பசிய வயல்களில் நாளெல்லாம் பெய்த மழை நீர் தேங்கி நின்று சேறு சூழும் பிற்று. மரங்களெல்லாம் சோகமாய் நின்று அழுதன. எச்சதுற்ற எருமை போல் கூடல் வண்டியொன்று இரைச்ச லிட்ட வண்ணம் மெல்ல அசைந்தது. இரண்டு சோம்பேறிக் காகங்கள் மழை யில் நனைந்து அசிங்கமாக உடலைச் சிலுப் பிக்கொண்டு தாறுமாகா ஆபீஸ் வாசலில் உள்ள லாந்தர்க் கம்பத்தில் குந்தி இருந்தன.

ரகுராமன் ஆபீஸிலிருந்து வெளியே வந்தான்.

அவன் கண்கள் கலங்கின...கண்ணீர் நிறைந்து பார்வையை மறைத்தது. பார்க்கத்தான் அங்கு என்ன இருக்கிறது?

செடியில் மலரைக் காணேம்.

'அவள் வருவாளே, அவளுக்குத் தருவ தற்கு ரோஜா? ... வெறும் கையுடன் பார்வையற்ற குருடனைப்போல் அவள் எதிரே எப்படி நிற்பது?

மணி ஐந்தடித்தது.

பாலத்துக்கு ஓடுகிறான்.

மழையும் காற்றும் சுழன்று சுழன்று அவன் முகத்தில் அறைகின்றன. அவன் அங்கேயே நிற்கிறான். ஆமாம், வெறும் கையுடன்தான் நிற்கிறான்.

சில்லிட்ட குளிர்காற்று பிடரியில் அறைகிறது; குளிர் காற்று உடலை அறுக் கிறது. சத்திய சோதனைக் குட்பட்ட வன்போல், தண்டனை அநுபவிப்பவன் போல் அவன் அங்கேயே அப்படியே நின்று கொண்டிருக்கிறான்.

மழையின் வயிரக் கால்கள் பூமியில் பெருகிவரும் நீர்த்தடத்தில் நர்த்தன மிடும்போது, மாணிக்கப் பரல்கள் தெறிப்பன போன்று நீர்க் குமிழிகள் உடைந்து சிதறுகின்றன. பாலத்தில் பெருகிச் சரிவில் வழியும் வெள்ளம் அவன் கால்களைப் புரட்டுகிறது. வானம் இருண்டு மின்னுகிறது; அதிர்ந்து இடிக் கிறது. அவன் அவள் வருகையை எதிர் நோக்கி அங்கேயே நிற்கிறான்.

மாலை எப்போது மறைந்தது? இரவு எப்படி வந்தது? வானத்தில் நட்சத்தி ரங்கள் மின்ன, நிலவு எப்பொழுது மேலெழுந்து உலா வந்தது? அவனுக்கு ஒன்றுமே தெரியாது.

மரங்களின் இலைச் செறிவில் தங்கி இருந்த நீர்த்திவலைகள் நிலவொளியில் ஜொலித்தன. அவன் உடல் நீரில் நனைந்து நிலவில் குளித்துக்கொண்டிருந்த போதிலும் நீண்டு வந்த பெருமூச்சு தணலாய்த் தகித்தது.

அவன் தளர்ந்து நடந்தான். இரு ளைச் சுமந்துகொண்டு தன் இருப்பிடம் சேர்ந்தான்.

*　　　*　　　*

இரவில் அவன் ஹோட்டலுக்குத் திரும்பியபோது அவனுக்காகக் காத் திருந்தது ஒரு கடிதம்.

அவன் வேலைக்காக எழுதிப் போட் டிருந்த பல கம்பெனிகளில் ஒன்றிலிருந்து அவனுக்கு வேலைக்கான ஆர்டர் வந் திருந்தது.

பம்பாயில் உள்ள ரசாயனத் தொழிற் சாலை ஒன்றில் வியாபாரப் பிரதிநிதி உத்தியோகம். ஊர் சுற்றும் வேலை தான்... நல்ல சம்பளம்.

விருப்போ வெறுப்போ ஏதுமின்றி வேலையை ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்தான்.

அதன் பிறகு மூன்று நாட்களாக அந்தச் செடியில் மலரைக் காணேம். பாலத்தின் மீது குயிலின் குரலைக் காணேம்; காற்றின் ஸ்பரிசம், உடலின் புல்லரிப்பு... எலவற் றையும் துறந்து சிலையாய் அவன் உட் கார்ந்திருந்தான்.

அவளைக் காணேம். காத்திருந்ததெல் லாம் வீண். வாழ்க்கையே வீண்... வீண்!...

கடைசி நாள்...

அவன் தானாக ஆபீஸ் குமாஸ்தா உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து

விட்டு முன்பின் தெரியாத ஊருக்குப் பயணமாகி விட்டான்.

ஓட்டல் கிழவர் வாழ்த்தி வழியனுப்பினார். தோளில் படுக்கையும் கையில் பையும், மனதில் எதிர்காலத்தைப் பற்றிய அர்த்தமற்ற ஏக்கங்களும்...

அவன் இத்தனை காலமாய் உழைத்த அந்தத் தாஜாகா ஆபீஸ் கட்டிடம் வழியில் குறுக்கிட்டது.

அவன் உடல் சிலிர்த்தது...

ஆம்; வேலிக்கு மேலே அந்த ரோஜா தலை நீட்டி அவனைப் பார்த்துச் சிரித்தது. குழந்தைபோல் தாவிச் சென்று அவன் ரோஜாவைப் பறித்தான். செடியில் தவித்த ரோஜா அவன் கரத்தில் சிரித்தது. முகத்தில் ஒற்றிக்கொண்டான்; கண்கள் கலங்கின. அந்தச் செடியை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. அதன் உறவை அறுத்துக்கொண்டு போக மனமில்லாமல் தயங்கித் தயங்கி நின்றான்...

அப்பொழுது அவள் வந்தாள். அவளுடன் பெற்றோரும் உறவினர்களும் வந்தார்கள். பார்வைகள் உறவாடின. அவள் கண்கள் பனித்தன. அவர்கள் அவனைக் கடந்து அவனுக்கு முன்னே நடந்தார்கள். அவன் அவர்களைப் பின்தொடர்ந்து நடந்தான்.

ரயில்வே ஸ்டேஷனுக்கு முன்னால், முதல் நாள் பெய்த மழை நீர் தேங்கி நின்றிருந்தது. அவள் பாதங்கள் அதில் நனைந்தன. பிறகு, பிங்கான் தளவரிசை விட்ட தரையில் அவள் காலடிகள் அழகுறப் பதிந்தன.

அவன் அவளைத் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தான். அவன் கையிலிருந்த ரோஜாவின் இதழ்கள் ஒவ்வொன்றும் அவள் நடந்த வழியெல்லாம், ஈரக் கால்கள் தடம் பதித்த இடமெல்லாம் உதிர்ந்து கொண்டே இருக்க, அவன் நடந்துகொண்டே இருந்தான்.

பாதை பிரிந்தது.

அவள் மன நிறைவோடு ரயிலேறினாள். அவன் பார்வையிலிருந்து மறைந்த அவள், அவனது மன அரங்கில் சாயை போல் உலவினாள். ஆம்; அவள்கவிதை!

மதனபுரி!—ரயில் ஸ்டேஷனில் இருந்த எழுத்துப் பலகை மறைந்தது. ரயிலில் உட்கார்ந்திருந்த ரகுராமன் கையிலிருந்த நாவலைப் பிரித்தான். அதில், 'காதல் ஒரு சோகமா!' என்று முதல் வாக்கியம் ஆரம்பமாயிற்று.

"வாழ்க்கை எப்படியோ, அப்படித் தான் அதுவும்" என்று முனகிக் கொண்டே நாவலை மூடி வைத்தான்.

* * *

'மீருட்டி விலாஸ் போர்டிங் அண் லாட்ஜிங் ஹவு'ஸின் மாடியறையின் ஜன்னலருகே நின்றிருந்த ரகுராமன் தம்மைச் சுற்றிலும் ஒலிக்கும் தமிழ்க் குரல்களைக் கேட்டார்; தூரத்தில் தெரியும் ரயில்வே ஸ்டேஷன் போர்டைப் பார்த்தார்; அறையைச் சுற்றிப் பார்த்தார்; 'டில்டெம்பர்' பூசப்பட்ட சுவர் களைத் தொட்டுப் பார்த்தார்.

"நான் மதனபுரியில் அதே ஹோட்டலில் அதே அறையில் இருக்கிறேன்" என்று வாய்விட்டுக் கூறினார்.

சுவரிலிருந்த கடிகாரம் ஐந்தடித்தது.

அவர் உடலில் புதிதாய் இளமை பிறந்தது மாதிரி துள்ளி ஓடிச் சட்டையை மாட்டிக் கொண்டார். 'தடதட'வென மாடிப் படிகளில் ஓடி இறங்கினார், பாலத்தை நோக்கி ஓடினார்.

அதோ, தாஜாகா ஆபீஸ்!

சுவரருகே, என்ன அது?..." அவர் உடல் புளகமுற்றது. கண்களில் புதியதோர் ஒளி பிறந்தது.

அந்தச் செடியில் என்றும்போல் இளமை குன்றாத எழிலோடு பூத்த ரோஜா அவரைப் பார்த்துச் சிரித்தது; அருகே வர அழைத்தது. பாய்ந்தோடி அதைக் கைகளில் ஏந்தினார். முகத்தில் ஒற்றிக்கொண்டார். பறித்துக் கைகளில் வைத்துக்கொண்டு அதையே பார்த்த வாறு ஒருகணம் நின்றிருந்தார். அந்தக் கணத்தில் வாழ்வின் நிறைவே அவருக்குக் கிட்டியதுபோ லிருந்தது.

கையில் ரோஜாவுடன் பாலத்துச் சுவரில் சாய்ந்து கிராதியின் மீது அமர்ந்து கவிதையின் வரவுக்காகக் காத்திருந்தார்.

'கவிதையைக் காணுமே...'

'இதோ, ரோஜா மலர்ந்திருக்கிறது. அவள் வந்தேயாக வேண்டும்!' என்ற உறுதியான நம்பிக்கையுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

காற்றுப் பெருகி வந்து ஆரவாரிக்காமல் தவழ்ந்து வந்து இதம் தந்தது. குழந்தையின் பிஞ்சுக் கரங்கள் தோளை வருடுவதுபோல் சிலிர்த்தது.

"தாத்தா...! எனக்கு அந்தப் பூவைக் கொடேன்..." என்ற இனிய மழலைக் குரல் ஒன்று அருகே ஒலித்தது. கிழவர் திரும்பிப் பார்த்தார்.



ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி. கொப்புத் தலையும் கவுனுமாய் நின்று கன்னங்கள் குழியத் தேவதைபோல் சிரித்தாள்.

ரகுராமனின் முகத்தில் ஆனந்தமும் கனிவும் பொங்கி வழிந்தன.

"இந்தா கொழுந்தே!..." என்று குழந்தையின் மலர்க்கையில் ரோஜாவைச் சமர்ப்பித்தார். அவள் கன்னத்தைத் தடவிக்கொண்டே "உன் பேரு என்ன தாயே!..." என்று கொஞ்சி உருகினார்.

"என் பேரு மைதிலி" என்று கணீரென்று பதில் சொன்னாள் குழந்தை.

"நீ பேசும் கவிதை!"

"என்ன தாத்தா சொல்றே?..."

"உன் பாட்டியைப் பத்திச் சொல்றேன்..."

"பாட்டியை ஒனக்குத் தெரியுமா? நான், அம்மா, பாட்டி எல்லாரும் கோயிலுக்கு வந்தோம்..."

யாரோ ஒரு கிழவருடன் தங்கள் குழந்தை கொஞ்சிப் பேசிக்கொண் டிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தவாறே குழந்தையின் தாயும் பாட்டியும் அவர்கள் அருகே வந்தனர்.

"அம்மா இந்தத் தாத்தா பூ கொடுத்தாரம்மா..." என்று தாயிடம் ரோஜாவைக் கொடுத்தாள் குழந்தை.

"பூ வச்சிக்கத் தலையிலே முடியைக் காணும்... பூன்னு உதிரத்தான் விடறு..." என்றாள் வெள்ளைப் புடவை உடுத்திய விதவைப் பாட்டி.

கிழவர் குழந்தையின் தாயைப் பார்த்தார்; திகைக்கவில்லை; மனம் நிறைந்து சிரித்தார்.

ஆம்; அவளுடைய மறு பதிப்பு! எவனுடைய?...

குழந்தை பாட்டியைக் கேட்டாள்:

"பாட்டி ஒனக்கு இவரைத் தெரியுமோ?"

'தெரியாது' என்று தலையசைத்தாள்.

"கொழுந்தே... எனக்குத் தெரியும்னு தான் சொன்னேன். அவங்களுக்குத் தெரியும்னு சொல்லலையே?" என்று கேட்டுக் கிழவர் சிரித்தார்.

அந்தப் 'பேசும் கவிதை' அவரோடு சேர்ந்து சிரித்தது!

இதுபோல் ஒருநாள்!

துறைவன்



இதுபோல் ஒருநாள் வருமென்றே
எண்ணி யிருந்தேன் அடிமயிலே (இதுபோல்)
தெருவீட் வழிகள் பலசென்று—நான்
நிலைத்தது சொல்லுந் தரமன்று
பதறும் காற்றில் மோதுண்டு—நெடும்
பகலும் இரவும் தள்ளுண்டு (இதுபோல்)
தப்பும் தவறும் பல பேசி—நின்
தயவினுக்காக வலை வீசி
எப்படி எப்படி யெல்லாமோ—நின்
இனிய சொல்லுக் குள்ளாகி (இதுபோல்)
உச்சி வெயிலை நிலவென்றும்—வான்
ஊற்றும் மழையை மலரென்றும்
துச்சமாகக் கருதி இடர்—பல
சுமந்து நின்ற காலத்தும் (இதுபோல்)
ஊரார் பேசிய பேச்செல்லாம்—என்
உற்றார் ஏசிய ஏச்செல்லாம்
ஆரா அமுதாய் என்நினைவில்—நிதம்
அலைமேலலையாய் வளையுதடி (இதுபோல்)
இடர்செய் தாகம் என்னுயிரில்—கனல்
எரிக்கும் பொழுதில், இரு கரையும்
படரும் வெள்ளம்போல் வந்தாய்—இனிப்
பருகப் பருகத் தாகந்தான் (இதுபோல்)
கூடு நோக்கின புட்களெலாம்—உளம்
குதூகலித்தன தளிர்களெலாம்
வீடும் நிலவும் பஞ்சணையும்—நமை
விரைந்தழைத்தன, துணையே வா (இதுபோல்)

விதிக்கணை!

பாரதப் போர் முடிந்து விட்டது. பங்கயக் கண்ணன் தான் பாரில் உதித்த பயன் முடிந்து விட்டதென்று எண்ணினன். கானகம் ஏகினன் கண்ணன். அவனது ஆடிய கால் மலரைக் கண்ட வேடுவன் ஒருவன் கானகத்துப் புள்ளென்று கருதிக் கணை விடுத்தான். பின், உண்மை அறிந்து கண்ணனிடம் வந்து பிழை பொறுக்க வேண்டி வெருவாய் வருந்துகிறான்.

ஆடியதோர் அடிக்கமலம் அழகு பொங்கும்
அரும்புள்ளாய்த் தோற்றிடவே அறியாப்பாவி
நீடியதோர் கணைவிடுத்தே நிமலக் கண்ணா,
நெடும்பிழையே புரிந்துவிட்டேன் நீசன் யானே!

நின்பிழைதான் எதுவுமில்லை! நீசனென்றே
நினைத்தாழ்த்திக் கொளல்வேண்டாம்! நேயா, இந்த
மண்ணுலகில் நிகழ்வதெல்லாம் மாற்ற மில்லை!
மதிக்குமப்பால் மிளிர்விதியின் மகிமை யீதே!

விண்முதலாப் படைத்திட்ட விமலக் கண்ணா!
வெறுக்கும் விதிவினையும் விளையச் செய்த
கண்மலரோன் நீயலவோ? கனிவில் வேடன்
கணைதைக்க அதைத்தடுக்காக் கருத்தும் யாதோ?

கருமமுதல் ஞானநெறி கருத்தாய்ச் சொல்லிக்
கடமைதனைப் பார்த்தனுக்குக் காட்டி வித்த
தருமமுள்ளோன், விதிபடைத்தோன் தானென் றாலும்
தைக்கவந்த விதிக்கணையைத் தடுத்த லற்றேன்!


வேடுவன்என் வன்கணையே விரைந்துன் பாதம்
வீழ்ந்திப்புள் வீழ்க்குமென்ற விதியும் கூற்றுப்
கூடுமென்று கண்டேதான் கோல வண்ணா,
கொடுங்காட்டை அடைந்தனையோ? கூறு வாயே!

கலிபிறந்து நலிமிகுந்த காலங் கண்டு
கானகத்தைச் சார்ந்தேன்! உன் கணையும் என்பால்
வலியவரும் என்றறிவேன்! மாற்ற மின்றி
வல்விதியும் வென்றதுவே! வாழ்க அஃதே!






என்.எஸ். சிதம்பரம்


பிரதேசக் காட்சிகள் -ராஜஸ்தானம்
கல்கி தீபாவளி மலர் 1959


பிரதேசக் காட்சிகள் - காஷ்மீரம்
கல்கி தீபாவளி மலர் 1959


பிரதேசக் காட்சிகள் - வங்காளம்
கல்கி தீபாவளி மலர் 1959


பிரதேசக் காட்சிகள் - கேரளம்
கல்கி ஸ்ரீ தீபாவளி மலர் 1959


TYRESOLES succeed
again in the International
MONTE CARLO RALLY
1958
MONTE CARLO RALLY
1958-SUCCESS
Previous TyresoleS successes in Monte carlo Rally:
1953-1st-M. Gatsonides (Ford fitted with TyresoleS)
1955-1st-Captain P. Malling (Sunbeam fitted with TyresoleS)
1956-2nd-W. Schock (Mercedes Benz fitted with TyresoleS)
VOLD JOHANSEN Wins
1st place for Production and modified touring cars upto 1000 c.c. in 1958. Monte carlo Rally in DKW car fitted with
TYRESOLES
STANES MOTORS (SOUTH INDIA) LIMITED
TyresoleS Factories at
COIMBATORE, CALCUTTA, VIJAYAWADA, MADRAS, TIRUCHIRAPALLI, KOTTAYAM
AND ASSOCIATE FACTORY AT BANGALORE

ஊசி முனை

சுபஸ்ரீ

டாக்டர் பரிசுத்தத்தின் மருத்துவ விடுதியில் நோயாளிகள் நுழைந்து திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் சபாபதி மட்டும் தில்லை வெளியில் கலந்து கொண்டவர்போல் திரும்பி வராமலே அமர்ந்திருந்தான். டாக்டரைத் தனிமையில் சந்தித்துச் சாவகாசமாக ஏதோ கேட்க வேண்டும் என்ற எண்ணம். அதனால் தனக்குப் பின் வந்தவர்களை எல்லாம் முன் செல்ல அனுமதித்தபடி உட்கார்ந்திருந்தான்.

''என்ன ஸார், என்ன உடம்பு?'' என்று கேட்டுக் கொண்டே நண்பர் ராஜலிங்கம் உள்ளே வந்தார்.

ஒருகணம் திகைத்து நின்றபிறகு சபாபதி ''ஒன்றுமில்லே. மனைவிக்குப் 'ப்ளூ மாதிரி...' என்று இழுத்தான். குப்பியிலிருந்து குதித்தோடிவிட்ட 'கார்க்'கைத் தேடும் நபர்போல், ஒரு பொய்யைக் கண்டு பிடிப்பதற்குள் எப்படித் திணறி விட்டான்! 'அப்படியானால் அரிச்சந்திரன் சாதித்தது ஒன்றும் பிரமாதமல்ல' என்றே தோன்றியது சபாபதிக்கு.

''இந்த 'வெதரே' இப்படித்தான். ஏதாவது வியாதியை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். இதற்கெல்லாம் டாக்டர் மருந்தே வேண்டாம். நிலவேம்பு தெரியுமா?''

இங்கிலீஷ் டாக்டரின் சந்நிதியில் நாட்டு வைத்தியப் பிரசாரம் செய்வதற்கு ராஜலிங்கத்துக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? அவ்வளவு நம்பிக்கை உள்ளவர் ஏன் பரிசுத்தத்தைத் தேடி வரவேண்டும்? ராஜலிங்கத்தின் தோற்றத்தைப் பார்த்தால் சமீப வருடங்களாக அவரை எந்த வியாதிக் கிருமியும் அணுகி இருக்கும் என்று தோன்றவில்லை. ''நீங்க எப்படி இந்தப் பக்கம்?'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லே; நான்கு நாட்களாக ஆபீஸ் போகவில்லை. ஒரு 'ஸர்டிபிகேட்' வாங்கிப் போகலாம் என்று...''


டாக்டர் எழுதித்தரும் வியாதிப்பத்திரத்துக்குள்ள மகா சக்தியைப் பற்றிப் பலமுறை சபாபதி வியந்ததுண்டு. நெற்றிக் கண்ணனது பாடலிலும் குற்றம் இருக்கலாம். கடவுள் தந்துவிட்ட வரம்கூடத் தீர்ந்து விடலாம். ஆனால் டாக்டரது 'ஸர்டிபிகேட்'டுக்கு மட்டும் ஜனாதிபதியின் விசேஷ அதிகாரம் போன்று, எதிர்ச் சொல்லே கிடையாது. அலுவலகத் தொல்லைக்கு ஈடு கொடுக்கும் கடைசி வார்த்தை அது.

ராஜலிங்கம் பேசியவாறே இருந்து விட்டுப் 'பளிச்'சென்று உள்ளே நுழைந்துவிட்டார். அவருக்கு முன் வந்தவர்கள் நோயின் முனகலோடு முணு முணுப்பையும் உதிர்த்துத் தங்கள் வெறுப்பை உணர்த்தினர்.

சபாபதி, அறையில் காத்திருப்பவர்கள் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினான். ஓரத்தில் இருந்த இருவர் புதிய சம்பளக் கமிஷன் செய்யக்கூடிய சிபாரிசு பற்றித் தங்கள் ஊகங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். 'மப்ளர்' துணிக்குள் மறைந்து கிடந்த முகத்திலிருந்து மூக்கு மட்டும் பேசிக் கொண்டிருந்தது. 'சம்பளம்' அதிகமாக ஆக வியாதிகளும், டாக்டர் 'பில்'களும் ஏறிவிட்டன' என்று அனுபவஸ்தர் ஒருவர் அங்கலாய்த்தார். இரட்டை நாயனம் போல் மாறி மாறி அழுது கொண்டிருந்தன இரு குழந்தைகள். அவற்றுடன் போராடிக்கொண்டிருந்த எலும்புக்கூடு தாயாராகத்தான் இருக்க வேண்டும். தன் மனைவி அன்னத்துக்கு இந்த மாதிரி ஒரு நிலைமை வந்துவிடக் கூடாதே என்று அஞ்சியது சபாபதியின் மனம்.

■ மருந்து கலக்கும் தடுப்பு அறையின் கண்ணாடிச் சுவரில் 'கம்பவுண்டர்'ரின் நிழல் ஆடிக்கொண்டிருந்தது. மருந்தைப் பெற்றுக் கொண்ட ஒருவர் 'சாப்பிடும் முன்பு, பின்பு' என்று வினவிக் கொண்டிருந்தார். சரித்திர ஏட்டில் ஏசுவின் பிறப்பு கால நிர்ணயம் செய்யத் தொடக்கப் புள்ளியாக இருப்பது போல, மருத்துவத் துறையில் சாப்பாடு என்பது ஒரு எல்லைக்கோடாக அல்லவா திகழ்கிறது.

சுற்றிலும் மருந்துக் கம்பெனி காலண்டர்கள் நான்கைந்து; டாக்டரது தொழிற் பட்டத்தை விளம்பரப் படுத்தியவாறு கண்ணாடிச் சட்டத்துக்குள் சிறைப்பட்டுக் கிடந்த 'ஸர்டிபிகேட்'; வைத்திய விடுதி நேரத்தைக் குறிக்கும் அட்டைக் கடிகாரம் ஒன்று; அதன் அருகே 'குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக உங்கள் டாக்ட



ரிடம் ஆலோசனை கேளுங்கள்' என்ற பலகை பாதரஸ வண்ணப் பூச்சில் மின்னிக் கொண்டிருந்தது. சபாபதியின் கண்கள் ஒரு விநாடி அந்த விளம்பரப் பலகையின் வாசகங்களில் லயித்தன.

*　　　*　　　*

சபாபதி 'பதி'யாகி ஓர் ஐந்தாண்டுத் திட்டம் கழிந்து விட்டது. அவனது துணைவி அன்னத்தை அவன் வண்டலூரிலும் சோலையிலோ, தன்புறம் வாவியிலோ கண்டு மோகித்து விட வில்லை. காணாமற் போன, உடைந்த சாமான்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் ரயில்வே இலாகா ஒன்றில் தனது காரியாலய வேலையின் நிமித்தம் சென்றபோது இந்த மடவன்னத்தைப் பார்த்தான்; காணாத பொருளைக் கண்டதுபோல் கரைகாணாத சந்தோஷம் அடைந்தான்; அடிக்கடி அங்கு சென்று வந்ததில் தன்னுடைய இருதயமே காணாமற் போவதை உணர்ந்தான். ஆனால் அந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்கு விரைவிலேயே அவனது துணைவியாக மாறிவிட்டாள் அன்னம்.

கல்யாணம் ஆனதும் பெண்ணின் படிப்புக்கோ, நாட்டியத் துக்கோ, உத்தியோகத்துக்கோ முற்றுப்புள்ளி ஏற்படுவது இயல்பு. ஆனால் எல்லா உத்தமப் புருஷர்களும் செய்யும் காரியத்தைச் சபாபதியும் செய்யவில்லை. 'யான் பெறும் சம்பளம் என் மனைவியும் பெறுக' என்ற பரந்த நோக்கு மட்டுமல்ல; காரணம். அவளது ரயில் உத்தியோகத்தால் அவனும் மஞ்சள் 'பாஸ்'ல் பாரதம் முழுவதும் வலம் வரும் வாய்ப்புக் கிடைத்தது. ரயில்வேயில் உத்தியோகம் பார்க்கும் மனைவியிருக்க, அவளது 'பாஸ்' சலுகையில் பிரயாணம் செய்வதில் எந்தவித இழுக்கும் இருப்ப தாக அவனுக்குத் தோன்றவில்லை!

அவர்கள் சந்தித்துக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்ட அவசரத்தைப் போலவே இல்வாழ்க்கையில் அடுத்த நிகழ்ச்சியும் நடைபெற்று விட்டது. அவர்களது திருமண தினத்தின் முதல் வருடப் பூர்த்தி கொண்டாடுவதற்கு முன்பே வரப்போகும் குழந்தைக்கு 'உல்லன் உடைகள்' நெய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது! 'இத்தனை அவசரம் வேண்டாம்' என்றே இருவரும் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் நோயும், நொடியும் குழந்தையும் கேட்டுக் கொண்டா வருகின்றன?

இனிமேலாவது 'புத்திசாலி'களாக இருக்க வேண்டுமெனச் சபாபதி தம்பதியினர் சங்கல்பம் செய்து விட்டு நிம்மதியாக இருந்து வந்தனர். கணவன் மனைவி என்ற தாம்பத்தியக் கூட்டுறவில் இன்னும் பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ள வேண்டி இருந்தது. கசப்பு மருந்து என்பதற் காகக் கொட்டிவிட முடியுமா? தூரத்து அத்தை ஒருத்தி உதவிக்கு அழைக்கப்பட்டாள். ரயில்வே நிர்வாகம் கர்ப்பிணிகளிடம் காண் பித்த கருணையும், அளித்த பிரசவ லீவும் பேறு காலத்துக்குத் துணை புரிந்தன. மீண்டும் அன்னம் உத்தியோக வாயிலில் மிதக் கத்தான் செய்தாள். பெருகும் குடும்பத்துக்கு அது தேவை யாகக் கூட இருந்தது.

இப்போது மூன்றாவது உயிரின் வருகை! அதன் அறிகுறிகள் தென்பட்டு இன்றோடு ஒரு வாரமாகி விட்டது. 'இனத்துக்கு ஒன்றாகி விட்டது. இத்துடன் போதும்' என்ற திருப்தி இப்போது சரியத் தொடங்கி விட்டதே, என்ன செய்வது?

''எனக்குக் காரியாலயம் செல்லவே வெட்கமாக இருக்கிறது. இதற்கு ஏதாவது வழி செய்யுங்கள்!'' என்றாள் அன்னம்.


சபாபதி திகைத்து விட்டான்! மருந்து வழங்கும் ஜன்னலருகே பாட்டிலின்றிப் பரிதவித்து நிற்கும் நோயாளிபோல் விழித்தான்.

ஒரு வாரமாக இதே சிந்தனை! அந்தரங்க நண்பர்களிடம் பிரஸ்தாபித்து யோசனை கேட்கக்கூட முதலில் அவனுக்குத் தயக்க மாக இருந்தது. இரண்டொரு அனுபவஸ்தர்கள் கூறிய மாத்திரை களை வாங்குவதற்கு மருந்துக்கடை ஏறியவன் தெரிந்த முகங்களைப் பார்த்துவிட்டு, அதன் பெயரை உச்சரிக்கக் கூச்சப்பட்டுக்கொண்டு தலைவலி மாத்திரைகளை வாங்கி வந்தான். 'எதற்கும் இரண்டொரு நாள் பார்க்கலாம். வெறும் தாமத நிகழ்ச்சியாக இருக்கலாம்!' என்று நம்பி இயற்கைக்கு விட்டுப் பார்த்தார்கள். ஒவ்வொரு தினமும் மறுநாளைய நம்பிக்கையில் தேய்ந்தது. நாட்கள் நகர்ந் தன. பலனின்றிப் பயம் அதிகரித்தது. கண்ட மருந்துகளைக் குடிப்பது விவேகமல்ல. கடைசியில் 'மருத்துவர் ஒருவரிடம் சென்று விடிவு காண்பதே நல்லது' என்று முடிவு செய்தனர். எந்த வைத்தியரிடம் சென்று எவ்வாறு விஷயத்தைப் பிரஸ்தா பித்து ஆலோசனை கேட்பது என்று அவனுக்குப் புரியவில்லை.

முதல்நாள் பரிசுத்தத்தின் மருத்துவ விடுதி நடை வரை ஏறிவிட்டான். அங்கு வீற்றிருந்த கூட்டத்தைப் பார்த்ததும் சங்கோசம் ஆட்கொள்ள 'இன்று போய் நாளை வா' என்று ஆணை யிட்டது மனம். 'ஏதாவது நல்ல சேதியுடன் வருவான்' என்று எதிர்பார்த்த மனைவியும் அன்று ஏமாற்றம் அடைந்தாள்.



''இன்று இரண்டிலொன்று முடிவுசெய்து கொண்டு வாருங்கள். இல்லா விட்டால் தலையெழுத்தே என்று அநுபவித்து விட்டுப் போக வேண்டியதுதான்'' என்று அறுத்துக் கொண்டாள் அன்னம்.



அன்று உறுதி கொண்ட நெஞ்சுடன் சபாபதி சென்றான். தைரியத்தைத் திரட்டிக்கொண்டு டாக்டரின் அறைக்குள்ளும் நுழைந்து விட்டான்.

"உட்காருங்கள்; என்ன உடம்பு?" கசப்பும் இனிப்பும் கலந்த மருந்துபோல், அன்பும் அதிகாரமும் இணைந்த குரலில், டாக்டர் பரிகத்தும் வரவேற்றார். மருந்து ஏற்றும் ஊசி போன்று ஊடுருவும் கூரிய பார்வையால் அவனைப் பார்த்தார்.

"எனக்கு ஒன்றும் இல்லை; என் மனைவிக்கு..."

"அழைத்து வந்திருக்கிறீர்களா?"

"இல்லை..."

"நோயாளியைப் பார்க்காமலே வைத்தியம் செய்ய நான் சித்த புருஷனா?"

"இல்லை...வந்து...அவளுக்கு வியாதி என்று ஒன்றுமில்லை."

"அப்படியானால் என்னிடம் வரும் அவசியமில்லையே!"

"மன்னிக்கவும்; ஒரு சிறு உடற் பிரச்னை சம்பந்தமாக உங்கள் உதவியை நாடி வந்தேன்."

"தைரியமாகச் சொல்லுங்கள். வைத்தியனிடம் எதையுமே ஒளிக்கக்கூடாது."

"என் மனைவி இரண்டு குழந்தைகளுக்குத் தாய். மூன்றாவது அரும்பி நாற்பது நாட்கள் ஆகின்றன. மிகவும் பலஹீனமான உடம்பு..."

"அவ்வளவுதானே? பிரசவ காலத்துக்குள் உடம்பைத் தேற்றிவிடலாம். நாளை அழைத்து வாருங்கள்."

'இது என்னடா இது. மருந்து குடிக்க விஷமாக மாறிவிட்டது! ஊசி மருந்தின் கண்ணாடி முனையை உடைத்தால்தான் உபயோகிக்க முடியும். அதுபோல விஷயத்தை வெளிப்படையாக உடைத்துச் சொன்னால்தான் பரிகாரம் கிடைக்கும் போலிருக்கிறது' என்று தோன்றியது சபாபதிக்கு.

"ஹி......டாக்டர்; சொல்வதற்குத் தயக்கமாக இருக்கிறது. நாங்கள் குடும்பக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள். சொல்லப் போனால் நடைமுறையில் அனுஷ்டிப்பவர்களும் கூட. எப்படியோ தவறு நேர்ந்து விட்டது. மூன்று குழந்தைகள் இருப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் 'இடைவெளி' குறுகலாக இருக்கிறதே என்பதுதான். இந்த ஒருமுறை உதவி செய்தால்..."

"சரிதான்; அதற்கு என் உதவியா? நீங்கள் தவறான மனிதரை அணுகி விட்டீர்கள். நான் வைத்தியர். உயிரைக் காப்பது என் தொழில். அழிப்பதல்ல!"

இடையே கம்பவுண்டர் உள் நுழைந்து ஏதோ விளக்கம் கோரினார். மூன்றாம் மனிதர் வருகையையும் பொருட்படுத்தாமல், டாக்டர் பேசிக் கொண்டே போனது, சபாபதியின் எண்சாண் உடம்பை ஒரு சாணாகக் குறுக்கியது.

"மிஸ்டர் சபாபதி, இங்கு பாருங்கள். வருமுன் காப்பதற்கு யோசனை கேட்க என்னிடம் வாருங்கள். வந்த பின் அழிக்கும் யோசனையை அகற்றி விடுங்கள். ஆண்டவன் தரும் பரிசை அலட்சியம் செய்வது தவறு. உங்கள் குடும்பம் அதிகமாகப் பெருகி விடவில்லையே."

"என் மனைவியின் உத்தியோக வாழ்க்கைக்குத் தடங்கலாக இருக்கிறது."

"அப்படித் தோன்றினால் அலுவலகத்துக்கு முழுக்குப் போட்டு விடுங்கள்!"

சபாபதிக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. எதிர்ச் சுவரை நோக்கினான். இன்னா செய்தாருக்கும் இனியவை புரிந்து, சிலுவையில் உயிர் நீத்த கர்த்தரின் கருணை வடிவு வண்ணப் படத்தில் திகழ்ந்தது. 'ஒரு தீங்கும் செய்யாத வரப் போகும் சிசுவை அழிக்க முற்படும் சிறுமையை என்ன வேண்டுவது?' என்று கேட்பது போலிருந்தது.

"சரி; நான் வருகிறேன், டாக்டர்!"

'குளோரோபாரம்' கொடுக்கப்பட்ட நோயாளியின் குரல் போல், ஒடுங்கி ஒலித்தது சபாபதியின் குரல்.

"போய் வாருங்கள். ஏதாவது அசட்டுக் காரியம் செய்து விடாதீர்கள். மூன்றாவது சிசுவின் ஜனனத்தை முழு மனத்துடன் வரவேற்க முயலுங்கள்."

எழுந்து புறப்பட்ட சபாபதி தயங்கியவாறே, "டாக்டர்! கடைசியாக ஒரு வேண்டுகோள். நேரிடையாக உதவி புரியத் தங்கள் கொள்கை இடம் தரா விடில், வேறு எந்த டாக்டரையாவது சிபாரிசு செய்ய இயலுமா? அவரது 'பீஸ்' அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை!" என்றான்.

"உட்காருங்கள் சபாபதி. என் மனச்சாட்சிக்கு எதிராக உங்களுக்கு உதவி செய்ய முடிவு செய்திருக்கிறேன்!" என்றார் டாக்டர் பரிகத்தும்.

முடவனுக்கு மரக்கால் கிடைத்தது போல் ஆறுதலடைந்தான் சபாபதி. 'ஸ்டெதாஸ் கோப்' புக்கும் புலப்படாத இதயத் துடிப்பா? ரத்தப் பரிசோதனை


Make it
a Colourful Divali!
Take lively, natural colour photographs of your near and dear ones, on Agfacolor film. It's fast, sharp, brilliant and natural. You get bright prints, enlargements and transparencies in full colour or black-and-white, as desired. Your Agfa dealer will tell you all about it.
Agfacolor
NEGATIVE FILM
AGFA INDIA PRIVATE LTD.
BOMBAY · NEW DELHI · CALCUTTA · MADRAS
AGFA. 73 EVEREST

தெரிவிக்காத இரும்பு வகையா? பணத்துக்குக் கட்டுப்படாதவர்கள் யார்? பரிசுத்தம் எவ்வளவுதான் பரிசுத்தமான மனிதராக இருக்கட்டுமே! பணத்துக்கெதிரே பணியாமல் இருக்க முடியுமா?

"நாளைக் காலை தங்கள் துணைவியை அழைத்து வாருங்கள். மூன்று ஊசிகள் மூன்று நாட்கள் போட வேண்டும். ஆனால் விளைவுபற்றி எதுவுமே திடமாகச் சொல்வதற்கில்லை. சில கேஸ்களில் வேலை செய்கிறது. சிலருக்குப் பலனளிப்பதில்லை. எல்லாம் உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது!"

நாக்குச் செத்த பிணியாளனுக்கு நல்துணைவு கிடைத்ததுபோல, சபாபதிக்கு அவரது வார்த்தைகள் தேவாமிருதமாக ஒலித்தன. இதைவிட ஒரு கணவன் செய்வதற்கு ஒன்றுமில்லை. எந்தச் செயலில்தான் முடிவை முன்கூட்டித் தீர்மானம் செய்து கொண்டு முயற்சியில் இறங்க இயலும்?

'டிஸ்சார்ஜ்' ஆன நோயாளி போல, சந்தோஷத்துடன் சபாபதி வீட்டுக்குத் திரும்பினான். இருதயம் கனம் குறைந்து ஆனந்தத் தாண்டவமாடியது.

* * *

வீட்டிலுள்ள அத்தைக்கு ஏதோ கற்பனைக் காரணங்களைக் கூறிவிட்டு மருத்துவ விடுதியை அடைந்தனர் சபாபதி தம்பதியினர். ஆபரேஷன் அறைக்குள் பிரகாசமான விளக்கின் அடியில் கிடத்தப்பட்ட நோயாளியின் அடிவயிற்றிலே ஏற்படும் பீதி கலந்த உணர்ச்சியை அன்னம் அநுபவித்துக் கொண்டிருந்தாள். டாக்டரை நேரில் பார்ப்பதற்கே அவளுக்கு ரொம்பச் சங்கோசமாக இருந்தது.

"உட்காரம்மா!"

"உனக்குச் சம்மதம்தானே?" என்று சொல்லியபடி ஒரு கையில் ஊசியை ஏந்தியபடி டாக்டர் அவள் கரத்தைப் பற்றியபோது அவளது இருதயம் ஸ்தம்பித்துவிட்டது. பல வருடங்களுக்கு முன்பு, முதன் முதல் சபாபதி பெண் பார்த்துவிட்டுச் சென்ற பிறகு, அவளது தகப்பனார் அன்புடன் அருகில் வந்து, "உனக்குச் சம்மதம்தானே?" என்று கேட்டாரே அந்தக் கனிவுக் குரலையும், ஸ்பரிசத்தையும் இன்று மீண்டும் உணர்ந்தாள். ஆனால் சம்மதத்துக்குரிய செயல்களிடையே எத்தனை வேறுபாடு!

"முகத்தை அப்படித் திருப்பிக் கொள்ளம்மா!"

கழுத்தைத் திருப்பிய அன்னம், வெண் சுவரின் தூய்மையான பரப்பில் பரமபிதாவின் ஒளி உலவும் தடக்கண்களைக் கண்டாள்; ரட்சிக்கும் திருவடியைத் தரிசித்தாள்.

'இறைவா எப்பேர்ப்பட்ட இதயத்தை எனக்கு அளித்து விட்டாயடா! நான் உண்மையில் ஒரு தாய்தானா?'

டாக்டரது கைகள் ஏற்றிய ஊசி முனை அவளுக்கு வலிக்கவில்லை; கர்த்தரின் கன்னங்களில் தேங்கி நின்ற கேள்விக் குறி அவளது புண்களை அரித்தெடுத்தது.

சபாபதி தம்பதிகள் போனபின், தம் அலுவல்களை முடித்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்த டாக்டர் பரிசுத்தம் "இந்தா, இந்தப் பணத்தை எடுத்து வை!" என்று தம் மனைவிக்குக் கட்டளையிட்டபடி தமது உடைகளைக் களைந்து மாற்றுடை உடுத்திக் கொண்டிருந்தார். தொடர்ந்து, பேச்சோடு பேச்சாக அன்று வந்திருந்த சபாபதி தம்பதியினர் நிகழ்ச்சியையும் கூறினார்.

எரிந்துவிழுபவள் போல் குரையம்மாள் டாக்டரை நோக்கினாள். "நீங்களென்ன டாக்டர்தானா? கிறிஸ்துவர் என்று சொல்லிக் கொள்ள உங்களுக்கு வெட்கமாக இல்லை?" என்று கூறியவாறு நோட்டுக்களை விட்டெறிந்தாள்.

"ஏன் நாய் விற்ற காசு குரைக்குமா?"

"பேசாதீர்கள். எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமாகாமல், இந்த வீட்டில் மழலை பேசும் குழந்தைச் செல்வம் இன்றி நொந்து கிடக்கிறோமே, ஏன்? நீங்கள் இந்தமாதிரி பாவச் செயல்களுக்குத் துணை புரிந்தால் ஆண்டவன் உங்களுக்கு எப்படிக் கிருபை புரிவான்?" அவளது பேச்சின் உஷ்ணத்தை அளப்பதற்கு உஷ்ணமானி தேவையாக இருக்கவில்லை.

"ஆஹா, ஏசுவின் வாரிசே!" என்று நையாண்டி புரிந்துவிட்டுக் கலகலவென்று சிரித்தார் டாக்டர். அவளைச் சீற்றமுறச் செய்து வேடிக்கை பார்ப்பதில் அவருக்கு ஓர் ஆனந்தம்.

* * *

கல்லினுள் தேரைக்குக் கருணைபுரியும் தெய்வம் கருவினுள் சிசுவையும் ரட்சித்து விட்டான். குறிப்பிட்ட கெடு தேதி கழிந்த பின்னரும் விரும்பிய விளைவு ஏற்படவில்லை. மூன்றுவதும் நீர்த்து விட்டது என்று தெரிந்ததும் அன்னத்தின் முகத்தில் சோர்வின் சின்னம். விரக்தி வேதாந்த உருவெடுத்து 'இனி இறைவன் செயல்' என்று விட்டு விட்டாள்.

தீபாவளிக்கு ஒரு மாதம் முன்பாகச் சபாபதிக்குக் கை நிறையப் பணம் கிடைத்தது. மூன்று வருடங்களுக்குரிய 'போனஸ்' மொத்தமாக வந்தது.

"கண்டபடி செலவழித்துவிடாதீர்கள். மூத்தது பெண்ணாகப் பிறந்த பிறகு இனி மேல் நாம் சும்மா இருக்க முடியாது. அதற்கு ஏதாவது உருப்படியாகப் பொன்னாகச் செய்து உள்ளே வைத்துவிடலாம்!" என்று கூறினாள் அன்னம்.

"ஒரு பெண்ணுக்கே இவ்வளவு கவலைப்படுகிறாயே, வருவதும் பெண்ணாக இருந்தால்...?" என்றான் சபாபதி.

"உங்கள் பவித்திர வாயால் சொல்லி வைக்காதீர்கள். பலித்துவிடப் போகிறது!"

இருளையும் தூறலையும் பாராட்டாது பட்டுத் தீபாவளியாகத் தீபாவளித் திருநாள் விடிந்து கொண்டிருந்தது. எண்ணெய்க் குளியலுக்கு ஈடு செய்து விட்டு, அவசரமாகப் பட்டுத் துணிகள் உடுத்தி, அரை குறையாகப் பட்சணங்களைப் பதம் பார்த்து விட்டு, முழு உற்சாகத்தோடு பட்டாசுக் கட்டுக்களை அவசரம் அவசரமாகப் பிரிக்கத் தொடங்கின, குழந்தைகள்.

பிசுபிசுத்த மத்தாப்புக் குச்சி பற்றிக் கொள்ள மறுத்தது. வாயிற்புறத்தே நெருப்புப் பெட்டியை மார்பருகே பிடித்துக் கொண்டு கிழித்துக் கொண்டிருந்த ராஜிக்கு அலுப்பு ஏற்பட்டது. மீண்டும் முயற்சி. திடீரென்று பற்றிக் கொண்ட குச்சி ஒன்று, துணி உடைத்து மார்பிலே பள்ளி கொண்டு விட்டது. பிசுபிசுவென்று உடையில் புகை மண்டி எரியத் தொடங்கி விட்டது. கதவைத் தட்டிக் கொண்டு உள்ளே நுழைந்த பால்காரன் இந்தக் காட்சியைக் கண்டு குழந்தையை நெருங்கினான். வீட்டுக்குள்ளிருந்த பெற்றோரும் பதறி ஓடிவந்தனர். தீயணைக்கப் பட்டது; ஆனால் பட்டு கருகிற்று; பால் சிந்திவிட்டது.

சற்று முன்பு பட்டுத் துணி போர்த்தி நின்ற பச்சிளம் மார்பு தீக் காயத்துடன் ரணமாகக் காட்சி அளித்தது. 'ஐயோ' என்று அலறிய அன்னம் மயக்க முற்றாள்.

டாக்டர் பரிசுத்தம், வீட்டுக்கு வந்து குழந்தைக்குச் சிகிச்சை செய்தார். தீப் புண் மார்பிலே இருப்பதால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென எச்சரித்தார். ஒளித் திருநாளில் களையிழந்து இருள் நிழலளித்தது அந்த வீட்டிலே.

மூன்றும் நாள் குழந்தைக்கு உடம்பெல்லாம் வீங்கிவிட்டது. சீவிய தலை முடிக்காமல் அலங்கோலமாகக் காட்சி அளித்த அன்னம் மூன்று நாட்களாகத் துயிலவில்லை என்பது தெரிந்தது.

டாக்டர் ஊசியைக் கழுவிவிட்டுக் குழலில் செருகி, மருந்தை 'நிரப்பி, வெளிச்சத்துக்கு எதிராகப் பிடித்து, சில துளி மருந்தை வெளியேற்றினார். ஊசி முனையைக் கவனித்த அன்னத்தின் இதயத்தில்' ஊசி போன்று உறுத்திற்று. பழைய சம்பவத்தை நினைக்க, அவளது உடல் ஆடியது.



ணி போட்டு, அரைமணிக்குப் பிறகு டாக்டர் குழந்தையின் கையை எடுத்து நாடியைப் பரிசோதித்தார். அவர் கையிலிருந்து நழுவித் தண்டுபோல் பச்சிளம் கரம் துவண்டு விழுந்தது.

"ஐயோ, ராஜீ!" என்று கெலைக் கட்டிக் கொண்டு அலறினாள் அன்னம்.

"நானே என் குழந்தையைக் கொன்று விட்டேன், டாக்டர், கொன்றுவிட்டேன். ஒரு பாவமும் அறியாத உயிரை அழித்து விடுங்கள் என்று துணிவோடு வந்து உங்களிடம் கேட்டேனே, பாவி! எனக்கு இருதயம் இருந்திருந்தால் செய்திருப்பேனா? அந்தப் பாவம்தான் இன்று எனது ராஜியை விழுங்கிவிட்டது. அன்று ஒரு ஜீவன் துடித்துக் கொண்டிருந்ததே, டாக்டர்! தாய் என்ற முறையில் அதற்கு என்னால் உயிரூட்ட முடிந்ததா? உணர்வு அளிக்க முடிந்ததா? மூன்றாவது அதிகம் என்றேனே என்பதற்காக முதலைப் பறித்துக்கொண்டு விட்டதே, தெய்வம். என் மனம் பொல்லாதது. நான் பாவி டாக்டர்!" என்று தலையில் 'பட் பட்' டென்று அடித்துக் கொண்டாள்.

தாழ்ந்த கண்களை நிமிர்த்தி அன்னத்தை நோக்கினார் டாக்டர்.

அவளுடைய முகத்தில் உண்மையான 'அன்னை'யின் பூரண வடிவைத் தரிசித்தார். ஒரு தாய் உகுத்த வாத்ஸல்யக் கண்ணீரைக் கண்டார். அன்பு வடித்த அழுகையைக் கேட்டார். அவரது உள்ளம் நெகிழ்ந்தது.

மருந்துப் பெட்டியுடன் மௌனமாகத் திரும்பினார் பரிசுத்தம். தாயின் சோகப் புலம்பல் பின்னணியில் தேய்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

* * *

பல மாதங்களுக்குப் பிறகு சபாபதி தம்பதி டாக்டரது வீட்டுக்குள் நுழைந்தனர். "இதுதான் எங்கள் புதிய பெண். ஆண்டு நிறைவுக்கு அழைக்க வந்திருக்கிறோம்" என்று கூறினாள் அன்னம் கண்களில் தாய்மையின் ஒளி வீச.

"ரொம்ப சந்தோஷம். இதுதானே முன்பு நீங்கள்......"

என்று பரிசுத்தம் இழுத்தார். கேள்வியின் உள் அர்த்தத்தைச் சபாபதி உடனே புரிந்து கொண்டான்.

"ஆமாம்! வேண்டாமென்று கூறினோமே, அதுதான் விருப்பமான பொருளாக நிலைத்து விட்டது. மறைந்த குழந்தை எங்களது அகக் கண்களைத் திறந்து விட்டது!"

"விருப்பும் வெறுப்பும் நம் கையில் இல்லை, சபாபதி. எல்லாம் ஆண்டவன் கரங்களிலே இருக்கின்றன."

ஸ்ரீமதி பரிசுத்தம் குழந்தையை வாங்கி வாரி அணைத்துக் கொஞ்சினாள்.

"அதோ பாருங்கள், என் மனைவிக்குக் குழந்தை என்றால் எவ்வளவு ஆவல் என்று! ஆனால் கர்த்தரின் கருணை விலாசம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. நான் டாக்டர்தான். என்னால் ஒரு உயிரை சிருஷ்டிக்க முடியாது. ஆக்குவதற்கு வலிமை இல்லாதபோது அழிப்பதற்கு உரிமை எங்கிருந்து வரும்? அதனால் தான் முன்பு தயங்கினேன்!"—உணர்ச்சி மிகுதியால் அவரது குரல் கம்மிற்று.

"மறைந்தவள்தான் மறு ஜன்மம் எடுத்து வந்துவிட்டாள் என நம்புகிறோம், டாக்டர்! உங்கள் ஊசி பலிக்காமற் போனது நல்லதாகப் போயிற்று. இந்தக் குழந்தை பிறந்திராவிடில் ராஜியின் மரணம் இவளை எந்த நிலைக்கு ஆளாக்கி இருக்குமோ?" என்றான் சபாபதி.

டாக்டர் பரிசுத்தம் உள்ளூறச் சிரித்துக்கொண்டார்.

சபாபதியும் அன்னமும் விடைபெற்றுச் சென்றபின் ஆசையம்மாள், "அந்தக் குழந்தையின் திவ்விய முகம் கண்முன் நிற்கிறது. நீங்கள் செய்த அக்கிரமத்தை மன்னிக்கும்படி கர்த்தரிடம் தோத்திரம் புரியுங்கள். ஊசிமட்டும் பலித்திருந்தால் அந்தக் குடும்பத்தில் இத்தனை சந்தோஷத்தைக் காண முடியுமா?" என்று டாக்டரிடம் பொரிந்தாள்.

டாக்டரது முகத்தில் கள்ளச் சிரிப்பு ஒன்று வழிந்தது.

"ஆசையம்மா! என்னுடன் இத்தனை வருடங்கள் பழகியும் என்னை நீ நன்றாகப் 'புரிந்து கொள்ளவில்லை. இம்மாதிரியான அறிவுக் காரியங்களுக்கு எனது மருத்துவ ஞானம் ஒரு 'ஸி.ஸி.'கூடப் பயன்பட்டதில்லை!" என்றார் புன்சிரிப்புடன்.

"அப்படியென்றால்...?"

"கேள் ஆசை. நான் உயிர்கள் ஜீவிக்க உதவிபுரியும் வைத்தியன். கத்தோலிக்கக் கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவன். நான் எப்படி அக்காரியங்களில் ஈடுபடுவேன்? சபாபதியிடம் முதலில் ஒப்பமாட்டேன் என அடித்துக் கூறினேன். ஆனால் நான் கண்டிப்பாக மறுத்து விட்டால், வேறு யாருடைய உதவியையாவது பெற்றுக் காரியத்தைச் சாதித்துக் கொள்வான் எனத் தோன்றியது...."

"அதற்காக உங்கள் திருக்கரங்களால் தடுப்பு மருந்தை வழங்கினீர்களாக்கும்!"

"வழங்கினது உண்மை. ஆனால் தடுப்பு மருந்தை அல்ல; கர்ப்பிணிக்குச் சக்தி அளித்து, கருவை வளர்க்கும் **விடமின்** மருந்தை ஆசை, **விடமின்** மருந்தை!"


ஆசையின் கண்கள் அகல விரிந்தன.

"'டாக்டர்! என்ன மருந்து கொடுக்கிறீர்கள்' என்று பிணியாளர்கள் கேட்பதில்லை. அது நல்ல வழக்கம். தடுப்பு மருந்து என்று அவர்கள் எண்ணினார்கள். பலிப்பது நிச்சயமல்ல என்ற எச்சரிக்கை இருக்கவே இருக்கிறது. மருந்து தனது உடலில் வேலை செய்யவில்லை போலும் என்று நம்பி விட்டாள். அப்புறம் நாளடைவில் அவர்கள் அந்தப் புதிய ஜீவனை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்."

"இன்றாவது அதை அவர்களிடம் சொல்லி விடுவதுதானே? அவர்களுக்குக் குற்ற மனப்பான்மை இருந்தால் மறைந்திருக்கும்" என்றாள் ஆசை.

"அதுதான் தொழில் ரகசியம். மருந்து மாற்றியது இக் 'கேஸில்' நன்மை தந்தது என்பது வாஸ்தவம். ஆனால் அதற்காக நான் உண்மையை வெளியிட்டு விட்டால் மருத்துவக் குலத்தின் மீதுள்ள நம்பிக்கை குறைந்து விடும்."


ஆசையின் உள்ளத்து மலர்ச்சி நயனங்களிலே வழிந்தது. டாக்டர் பரிசுத்தத்தின் கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டு, "தாங்கள் வைத்தியர் மட்டுமல்ல; பெரும் மனோதத்துவ நிபுணரும் கூட. எனது பரிசுத்தத்தின் உள்ளம் என்றுமே பரிசுத்தமானது!" என்றாள்.




இந்த 'கப்'பை விட இப்பொழுது
ஒரு கப் நரசுஸ் காப்பி கொடுத்தால்
வெகு ஆனந்தமாக இருக்கும்...!
நரசுஸ் காபி
நரசுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி பிரைவேட் லிட்.,
மதராஸ் :: சேலம்

K. R. C.


எமது தீபாவளி வாழ்த்துக்கள்
ஓராண்டில் ஒரு நாள் மகிழ்வூட்டும்
"தீபாவளி"
ஒவ்வொரு நாளும் மகிழ்வூட்டும்
திண்டுக்கல்
அங்குவிலாஸ்
M.V. முத்தையா பிள்ளை (FIRM)
வாசனைப் புகையிலை
ரிஜிஸ்டர் 12700 149348 நம்பர்கள்
தந்தி "அங்குவிலாஸ்"
போன் நெ. 71.



காந்த விளக்கின் ஒளி கண்ணைப் பறித்தது.

காசியின் கண்களிலே உறக்கம் ஊஞ்சலாடியது: வெட்டிப் போட்டிருந்த துணி மணிகளைப் பகுதி பகுதியாகப் பிரித்தான்; சட்டை, கவுன், சோளி என்று தனித்தனியாக அடுக்கி வைத்தான். புறப்பட்டு வந்த கொட்டாவிக்கு வழி திறந்து விட்டவாறு, எல்லாவற்றையும் ஒரு முறை கண்ணோட்டம் செலுத்தினான். 'தீபாவளிக்கு இன்னும் மூன்று நாட்கள் தான் கிடக்குது!' என்ற நினைவு அவனுள் ஒரு வகையான கிளர்ப்பை உண்டாக்கி யிருந்தது.

"ராமையா! ரங்கூன்காரர் சட்டைக்கு 'காஜா' எடுத்து முடிச்சுட்டியா?"

"ஆமாங்க, அண்ணாச்சி!"

"பச்சை ஆச்சி தந்திட்டுப் போன ரவிக்கைக்கும் பொத்தான் தைக்க ஆரம்பி. இந்தா பொத்தான் எட்டு!"

"ஆகட்டுங்க!"

"அது முடிஞ்சதும், இந்தக் கொட்டடிப் பாவாடைக்கு நாடா போட்டுக் கைத் தையலாலே தைச்சிப்பிடு, தம்பி!"

"சரிங்க!"

"பாவாடை ஆறு 'பாட்டம்' அகலம்; நாடாவை டேப்பிலே கணக்கா அளந்து நறுக்கிக்க ராமையா!"

"ஓ!"

'ஓ' என்ற இணக்கக் குறிப்புடன் கொட்டாவியும் உறவாடி விளையாடியது.

"ஏ, சாயாவைக் குவளையிலே ஊத்திக் கொடு; சொச்சத்தை நீ குடி; குத்தினவன் எழுந்திருக்கையிலே இன்னிக்கு வந்த புது ஆர்டரை யெல்லாம் சாடாவா முடிச்சிப்பிட்டிருக்க வேணும்!"

"நல்லதுங்க!"

சோடாப் போத்தல் 'சாயா'வை இழந்த வருத்தத்தில் கன்னிப் பெட்டிக்கு அடியில் பதுங்கிக் கொண்டது.

தையல் இயந்திரம் சுறுசுறுப்புடன் இயங்கியது. மிதி பலகையில் பாதங்கள் அழுந்தின. இரட்டைத் தடமாக ஓட முனைந்த ஊசியைச் செம்மைப்படுத்தி ஜாக்கெட் துணியையும் சமன் செய்தான் காசி.

ஊர் காக்கும் காளி கோயிலில் இரவுப் பூசனை நடந்தது: ஆலய மணி அந்தத் தையற்கூடத்திலும் வந்து மோதியது.

"ராமையா! நான் முன்னாடி போய்ச் சாப்பிட்டுப்பிட்டு ஓடியாறேன். துணி மணியெல்லாம் போட்டது போட்டபடியே சிதறிக் கிடக்குது. பத்திரம். சைக்கிள் கம்பெனி அண்ணன் வந்தால் ஒன்னேகால் ரூபாய் வாங்கிக்கிட்டு நீலச் சட்டையை மடிச்சுக் கட்டிக் கொடு."

"ம்!"

வீட்டுக்குப் புறப்பட ஆயத்தப்பட்டான் காசி. கடையிலேயே வீடு முளைத்தது. இன்றோ நாளையோ என்று பிரசவ நாளை எதிர்பார்த்திருந்த உயிர்த்துணையின் உருவம் அவனுள் தோன்றியது. ஆற்றாமையுடன் பெருமூச்சை உதிர்த்தான். 'தலைப் பிரசவம். காமாட்சி பெற்றுப் பிழைக்கணும், கடவுளே!'

மிதியடியில் பாதங்கள் பதிந்தன; மடித்து வைக்கப்பட்டிருந்த முழுக் கைச் சட்டை ஒன்றில் 'ஜெரம்பல்' ஒன்று தலை காட்டியது. கத்திரிக்கோல் பணி புரிந்தது. அவன் புறப்பட்டு விட்டான்.

அப்போது, "காசி!" என்ற குரல் கேட்கவே திரும்பினான் அவன்.

அவனுக்குக் கைகால்கள் விளங்க வில்லை. 'கங்காணி ஐயாவா?'

கங்காணி கைப் பையை உதறிப் போட்டார். சங்கு மார்க்கு சுருட்டில் தீ எரிந்தது. இழுத்துப் போடப்பட்ட கயிற்றுக் கட்டிலில் அவர் அமர்ந்தார்.

"காசி! பொன்னுடுக உன்னைப் பத்திப் பெருமையாய்ச் சொன்னாங்க. எல்லாம் விலே ஓசத்தியான துணிமணிக. ஜாக்கிரதை! ஒவ்வொன்னுக்கும் அளவுக்கு மாதிரியும் இருக்கு. தீபாவளிக்கு முந்தி அவ்வளவையும் கொடுத்துப்பிடணும். கூலி அஞ்சு பத்து கூடுதலாகக்கூடப் பரவாயில்லே!" என்றார் கங்காணி.

"நல்லதுங்க, எசமான்! கொஞ்சம் சாயா சாப்பிடுங்க!"


"வேண்டாம்ப்பா!"

"ஒரு மடக்குக் குடியுங்க. தட்டப் படாதுங்க, கங்காணி ஐயா!"

* * *

காமாட்சி உணவு படைத்தாள். சமையல் கட்டுக்கும் நடைக்குமாக வந்து நிற்கிறாள். "நல்லாச் சாப்பிடுங்க, அத்தான்! ராத்திரி முச்சூடும் கண்விழிக்கணுமே! இன்னும் ஒரு வாட்டி குழம்பு ஊத்திக்கிடுங்க!" என்று கூறினாள்.





காசி கையமர்த்தினான். "ஊஹூம்!" விக்கல் வந்தது. "நீ உட்கார்ந்துக்க. நான் போய்த் தண்ணீர் வாத்துக்கறேன், காமாட்சி!" என்றுசொன்னான் அவன். அவள் கேட்பாளா?

உரிமை பூண்டு, மனத்தைக் கொள்ளைகொண்டு மணவறையில் கைத்தலம் 'பற்றியவனை ஒரு முறை கூர்ந்து நோக்கினாள் காசி. சுற்றிக் கொடுத்த தாம்பூலத்தில் முதல் இரவு நிழலாடியது. அவள் தாயாகப் போகும் இன்பச் செய்தியைக் கேட்ட நினைவு வளர்ந்தது. அவன் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்ப வேதனையையும் எண்ணினான். சிரிப்பும் அழுகையும் நெஞ்சில் மிதந்தன. 'தெய்வம் நம்மைச் சோதிக்காது, காமாட்சி! நீ பெற்றுப் பிழைத்துக் குழந்தையோடு சுகமாயிருப்பாய். உனக்கும் பிள்ளைக்கும் உயர்வான துணிமணி எடுத்துக் கொடுக்கிறேன். நான் இவ்வளவு கஷ்டப்படுறதெல்லாம் உனக்குத்தானே?' என்று கூறிய நாட்களும் மனத்தளத்தில் கவடு பதித்தன. பிரசவம் ஆகி விடுமென்று எண்ணிக் கணக்கிட்டு எதிர் நோக்கி ஏமாந்த சம்பவங்கள் வந்து போயின. அவன் பெருமூச் செறிந்தான்.

"வலி எடுத்தாக்க, ஆள் விட்டே சொல்லி யனுப்பு, காமாட்சி!"

கடமையும் நாணமும் அவளை நெட்டிப் பிடித்துத் தள்ளின.

* * *

ராமையா, தூங்கி வழிந்து கொண்டிருந்தான். சட்டையின் கைப்பொத்தான்களுக்குக் 'காஜா' எடுத்துக் கொண்டிருந்தவனை உறக்கம் ஆட்டிப் படைத்திருக்க வேண்டும். வலது கை நடுவிரலில் போட்டுக் கொண்டிருந்த இரும்புக் குமிழ் அவனது பாதங்களில் நழுவிக் கிடந்தது. பழக்கத்தின் விளைவினால், கைப்பற்றிய ஊசி இடது கைப் பெருவிரலுடன் உரசி விலகிக் கொண்டிருந்தது. கையிலிருந்த சட்டை கீழே விழுந்துவிட்டதை அவன் எப்படி அறிவான்?

எதிரிலிருந்த வேறொரு தையற்கடையின் சுவர்க் கடிகாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது.

சூடு பறந்திருந்த டீயில் ஒரு வாய் உறிஞ்சினான் காசி. எதிர்க் கடையைப் பார்த்தான். அப்துல்லா குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான். 'நாளைக்கு ஒரே ஒரு பொழுதுதானே மிஞ்சிக் கிடக்குது தீபாவளிக்கு! பாவம், சாயபுக்கு வேலே சரியாக் குதிரலே போலே!'—எண்ணத்தில் அனுதாப உணர்வு பொறி தட்டியது. 'இந்த மாங்குடிக் கிராமத்திலே அப்துல்லா பழம் தின்று கொட்டை போட்டவர்; ரொக்கப் பணமாக நிரம்ப வைத்திருக்கிறார்!' என்று தையற்காரர் அப்துல்லாவைப் பற்றிக் கேள்விப்பட்ட தகவலும் அப்பொழுது காசியின் உள்ளத்திடையே மின்வெட்டத் தவறவில்லை!

இருட்டின் பயங்கரமான தோற்றம் மாறிக் கொண்டிருந்த வேளை அது.

காசி தலையைத் திருப்பினான்; சின்னப் பையன் தென்பட்டான். இப்போதுதான் சுவரில் சாய்ந்தபடியே கண் வளர்ந்தான். காசி மெல்ல அவனை நெருங்கினான். ராமையாவின் இடது கைப் பெருவிரலில் ரத்தம் கசிந்து காய்ந்திருந்தது. காரணத்தை அவன் புரிந்து கொண்டான்; சிதறிக் கிடந்த பட்டுத் துணிச் சிதறலை எடுத்தான். பட்டில் ரத்தம் ஒட்டியது.

சிறுவனைத் தூக்கிக் கட்டிலில் படுக்க வைத்தான். 'பாவம்!'


இரண்டு வருஷங்களுக்கு முன்னர் ராமையா அநாதையாக வந்தான். வறுமைக் கோலம் பூண்டிருந்தான். இப்போது அவன் அநாதையில்லை. அவனுக்கு ஆதரவாகத்தான் காசியை அண்ணனாகவும், காமாட்சியை அண்ணியாகவும் தெய்வம் காட்டிற்றே? நீர் வற்ற ஆள் இருக்கையில் செடி வாடக் கேட்பானேன்? 'அண்ணிக்குப் பாப்பா பொறந்ததும் எனக்குப் பொழுது போறதே தெரியாது' என்று அன்பும் சிரிப்புமாகப் பேசத் தெரிந்தவன் அவன்.

தையல் இயந்திரத்தின் உயிர்ப் பகுதிகளுக்குத் தேங்காய் எண்ணெய் போட்டான் காசி. பிறகு கங்காணி கொடுத்து விட்டுச் சென்ற துணி மூட்டையை அவிழ்த்தான்; அளவெடுக்கும் நாடாவும் கத்திரிக்கோலும் முன் வந்தன.

அந்நேரத்தில், ''காசி! காசி!'' என்று கூவியபடியே பெரியவர் ஒருவர் வந்தார். ''உன் பெண்சாதிக்குப் பாதி சாமத்திலேயிருந்து இடுப்புவலி ரொம்பக் கடுமையாயிருக்கு; நாவிதச்சிகூடப் பயப்படுறே; ஆனதாலே, அறந்தாங்கிக்கு ஓடிப் போய் டாக்டர் ஐயாவை அழைச்சுக்கினு வந்திடு, காசி!'' என்றார். தெரிந்தவர்; அவ்வளவுதான் ஒட்டுதல்; ஏன் அவர் கண்களில் கண்ணீர் மல்க வேண்டும்? 'என்னோட காமாட்சிக்கு ஜாண்டியாத்தான் இருக்கும் போலிருக்குது! ஐயையோ!'

வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த தருணத்திலே, ''ஐயோ, அம்மா!'' என்ற தன் மனைவியின் அபயக் குரல் அவன் நெஞ்சத்தில் எதிரொலித்தது. அதைத் தொடர்ந்து, ''சுருக்க ஓடிப் போய் அறந்தாங்கி டாக்டரைக் கூட்டியாப்பா!'' என்ற எச்சரிக்கைத் தொனிகளும் ஒலித்தன. ஆறு மைல் தொலைவில் இருந்த 'பெரிய டாக்டர்' மனக்கண்ணில் தோன்றினார். அவர் மிகவும் கெடுபிடிக்காரர்; பண விஷயத்தில் கறார்ப் பேர்வழி. பெரியவரைக் கலந்து ஆலோசித்தான். ''ஆமாம், தம்பி! நூத்தைம்பது ரூபாயாச்சும் கொடுத்தாத்தான் அவர் கிளம்புவார்! இது ஊரறிந்த சேதியாச்சே!'' என்று கூறினார் அவர்.

டிரங்குப் பெட்டி திறந்தது; மூடிக் கொண்டது; பதினொரு ஒரு ரூபாய் நோட்டுக்கள் சிதறின. 'டாக்டரை இட்டுக்கிட்டு வரப் பணத்துக்கு எங்கே போவேன்?—காசியின் உயிர் அழுதது; அலைக்கழிந்தது. கடையில் இருந்த தையல் இயந்திரம் உருக்காட்டிற்று. பன்னத்தூரிலிருந்து அவன் கூடவே வந்தது அந்த இயந்திரம். புது மாப்பிள்ளைக் கோலம் மாறுமலிருந்த அவனுக்கு அதுவே வாழ்வும் வளப்பமும் தந்தது. 'இரண்டாங்கை மாறி வாங்கினதே நூற்றைம்பது ரூபாய்தானே? இதை வித்தாலும் நூறு ரூபாய் கூடத் தேறுதே? அடகு வைச்சா யார் இதை நம்பிப் பணம் தருவாங்க?—ஏமாற்றத்தின் பாதையில் வேறொரு ஒற்றையடி வழி புலப்பட்டது. 'முந்தி இருந்த காதர்பாஷா தைக்கக் கொடுக்கிற துணியை யெல்லாம் புதுக் குளத்து ஒண்டடியிலே இருக்கிற வேலாயுதம் செட்டியார் கிட்டே அடகுவச்சப்பிட்டுப் பணம் வாங்கிச் செலவு செய்து கடைசியிலே அகப்பட்டுக் கிட்டு ஊரைவிட்டே அவரைத் துரத்திப்பிட்டாங்க!' என்று பூடகமாக யாரோ ஒருவர் அறிவித்த தகவல் நினைவில் எழுந்த போது, காசியின் கண்களின் புறவெளியிலே நிழல் கோடிட்டுக் காட்டியவை கங்காணியின் விலையுயர்ந்த துணிமணிகள்தாம்!



''கண்ணை மூடிக்கிட்டு இருநூறு ரூபாய் கொடுப்பார் அந்தச் செட்டியார்; எல்லாம் அக்கரைச் சீமைத் துணிகள்'' — மனம்!

''ஐயோ, நான் மாட்டேன்!'' — மனச்சாட்சி.

''காசி!...காசி! நீ போகலே இன்னும்? உன் பெண்சாதியை உயிரோடே பறிகொடுக்கத் துணிஞ்சுப்பிட்டியா?'' என்று மெய் ஒருத்தி ஏசினள்.

பையப் பைய ஓடினான்; பிறகு தலைப்பித்தம் கொண்டவன் கணக்கிலே ஓட்டமாக ஓடினான்.

அவன்—காசி!

'பச்சை மண்' முதற் குரல் கொடுத்தது.

'காமாட்சி தாய் வேறே, பிள்ளை வேறே ஆகி ரெண்டு உயிரும் பிழைச்சதே கடவுள் புண்ணியம்.

அறந்தாங்கி டாக்டரிடம் பத்து ரூபாய் தான் பதினொன்றைக் கொடுத்து, வாடகைக் காரில் ஏற்றி, கைகூப்பி வழி யனுப்பி வைத்த காசியின் செவிகளில் ஊராரின் மேற்கண்ட பேச்சு எதிரொலி பரப்பியவாறு இருந்தது.

அப்பொழுது பத்து நாழிகைப் பொழுதிருக்கும்.

காசிக்கு உடம்பு முழுவதும் அடித்துப் போட்ட மாதிரி இருந்தது. பக்கத்து வீட்டுக்காரப் பெரியம்மா இட்லி கொணர்ந்தாள்.

''பல்லைத் தேய்ச்சுப்பிட்டு வந்து சாப்பிடு, தம்பி!'' என்று கூறினள்.

அவன் அசையாமல் இருந்தான். விழி வெள்ளம் சிந்தியது.

"என் தம்பி இப்படி அழுகிறே? அதான் தாயும்பிள்ளையும்பிரிச்சுட்டாங்களே!"

இவ்வளவு நாட்களாகக் காப்பாத்தி வச்சிருந்த என்னோட நாணயம் காற்றிலே பறந்திடுச்சே? என்னை இனி யார் நம்பப் போறாங்க? நான் பாவி!'—உள்ளம் அழுதால், கண்களும் அழத்தானே செய்யும்?

சிறுவன் ராமையா 'ஆயில்கானை' நழுவ விட்டான். அது சத்தம் விளைத்தது. அந்தச் சத்தத்தில் காசியின் மனம் விழித்தது. "டேய், தோசிப் பயலே! வேலை மேலே கண் வைக்கப் பாரடா!" என்று இரைந்தான். காசியின் காய்ந்த விரல்கள் பால் முகத்தைப் பதம் பார்த்து விட்டன.

"கோவிச்சுக்கிடாதீங்க, அண்ணாச்சி! நீங்க துணியை வெட்டிப் போடுங்க. நான் தைக்கிறேன். அப்பாலே நீங்க கொஞ்ச நேரம் தூங்கி முழிச்சதும், நீங்க தையுங்க!"

காசியின் விழி நீரில் ராமையா நகை புரிந்தான்.

'நான் தூங்கவா?'—வினவுக்கு உள்ள இதயம் ஒன்றல்லவே! வகை வகையான கேள்விகள் அவனை உரித்தெடுத்தன. சின வெடிகள் அதிர்ந்தன. அவன் மனம் அதிர்ந்தான். மணி பார்த்து, துணி வாங்கிச் செல்ல வந்தவர்களிடம் இதம் பதமாக விஷயத்தை விளக்கி, மாலையில் வருமாறு கோரினான். வாடிக்கைக்காரர்கள் அவர்கள்; வம்புக்காரர்கள் அல்ல!

ரங்கூன்காரர் வந்தார். நோட்டுப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து, சட்டை, ரவிக்கையை நீட்டினான் ராமையா. பணக்காரர் பணத்தைத் தானே நீட்டுவார்! "காசின்னு காசி தான்! எவ்வளவு நாணயம்! எவ்வளவு கரார்!" என்ற புகழுரையும் அல்லவா நீட்டினார்!

ஆனால், காசி அழுததை அவர் எங்ஙனம் அறிவார்!

'காசி! வீட்டிலே பொண்டுக உன்னைப் பத்திப் பெருமையாச் சொன்னாங்க. எல்லாம் விலை ஒசத்தியான துணிமணிக; ஜாக்கிரதை!'—கங்காணியின் எச்சரிக்கை ஆயிற்றே இது? அப்பொழுது காசியின் சப்த நாடிகளும் ஒடுங்கின. விழி திறந்தான். கங்காணி இல்லை!—வேலாயுதஞ் செட்டியார்!

வேலாயுதஞ் செட்டியார் 'கை தேர்ந்த செட்டியார்; இவ்வளவு நாள் முகம் அறிஞ்ச எனக்கு ஒருத்தர் கூட ஆபத்துக்கு உதவலியே இந்த ஊரிலே! ஆமா, இந்த மனுஷன் மட்டும் என்ன; கங்காணியோட துணிமணிகளைத்தான் நம்பிப் பணம் நூற்றைம்பது கொடுத்தார். இப்போ, இன்னொரு நூற்றைம்பது ரூபாய் சேர்த்துக் கொடுத்தா அடகுவைச்சிருக்கிற துணிகளைச் செட்டியார் திருப்பிக் கொடுப்பார். ஆனா, பணத்துக்கு எங்கே போவேன்? விடிஞ்சா தீபாவளி. இரவு கங்காணி வீட்டுத் துணிகளைத் தைச்சுக் கொண்டு போய்க் கொடுக்க வேணுமே! இயந்திரத்தில் அவனுடைய ஜீவன் இணைந்தது. 'ஆமாம்; அதுதான் வழி! பொழுது பட்டதும் கங்காணி ஐயா வீடு தேடிப் போய், வீட்டு நிலவரத்தைச் சொல்லி, இந்தத் தையல் மிஷினை அவர்கிட்டே அடகு வைச்சு, பணம் நூற்றைம்பது எப்படியும் கேட்டு வாங்கி, அதை வேலாயுதஞ் செட்டியார் கையிலே கொடுத்து, கங்காணி வீட்டுத் துணிமணிகளைத் திருப்பியாந்து, கங்காணி வீட்டிலேயே உட்கார்ந்து எல்லாத்தையும் ராத்திரியோட ராத்திரியா முடிச்சுக் கொடுத்துப்பிடணும். அப்பத்தான் என் நாணயமும் மானமும் பிழைக்கும்.

* * *

பொழுது பட்டது. சிறுவன் ராமையாவை வீட்டுக்கு அனுப்பி விட்டு, சந்தடி இல்லாத பகுதிகளில் மறுகி மறுகி வழி நடந்தான் காசி. தலையில் சுமந்து சென்ற தையல் இயந்திரத்தின் பாரத்தைத் துளியளவு கூட அவன் உணரவில்லை. தன் தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்ளப் போகும் நினைவு தான் அவனுக்கு ஓர் அமைதியாகத் தோன்றியது. குப்பான் ஊருணி, காளி கோவில், சாம்பான் தோட்டம் ஆகியவை விலகி வழி விட்டன. ஆயிக்குடியின் முகப்பில் இருந்த அந்தப் பெரிய மாடி வீடு தென்பட்டது. காசியின் உடல் தன்போக்கில் ஆடியது. சற்று வேலியை அணைத்திருந்த கதவைத் திறந்து உள்ளே அடியெடுத்து வைத்தான் அவன். இருட் செறிவில் மாட்டுத் தொழுவம் தட்டுப் பட மறுத்தது. பாதத்தில் ஏறிய நெருஞ்சி முள் கூட அவனுக்கு ஒரு பொருட்டெனத் தோன்றவில்லை.

தையல் இயந்திரத்தை இறக்கிக் கீழே வைத்தான் காசி. அணை வைத்திருந்த மேல் துண்டை உதறிக் கையில் பிடித்திருந்தான். "ஐயா!" என்று குரல் கொடுத்தான். 'தெய்வமே! என் மானத்தையும் நாணயத்தையும் காப்பாத்து!' என்று வேண்டினான்.

கங்காணி வந்தார். கூட, 'ஹரிக்கேன்' விளக்கும் வந்தது.

"ஐயா...!"

காசிக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"காசி! எல்லாத் துணிகளையுமே அற்புதமாத் தைச்சுக் கொடுத்துப்பிட்டாய். எல்லாத்தையும் கடைப் பையன் ராமையா கால்நாழிப் பொழுதுக்கு முந்திதான் கொடுத்திட்டுப் போனான். மனசுக்கு ரொம்பத் திருப்தியாயிருக்குது; கணக்குப் போட்டுக் கூலி என்ன ஆச்சுன்னு சொல்லு. இப்பவே தந்திடுறேன், காசி!" என்றார் கங்காணி.

கனவா இது என்று ஐயப்பாடு எழுந்தது; அவன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான்; கங்காணி கொண்டுவந்து போட்ட தைக்கப்பட்ட உடை வகைகள் வெளிச்சத்தில் அழகுகாட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன. அவனுக்குத் திக்குத் திசை ஏதும் புரியவில்லை.

கங்காணியின் பார்வையில் தையல் இயந்திரம் தட்டுப்பட்டது. "ஏன் இதைக் கொண்டு வந்திருக்கே, காசி?" என்று வினவினார் அவர்.

கங்காணியின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை; அவருடைய பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாகக் காசி விழுந்து கதறினான். "இது உங்களுக்குச் சேரவேண்டிய சொத்துங்க, முதலாளி!" என்று விம்மினான் அவன். நடந்த கதை நடை பயின்றது!

தீபாவளிப் பலகாரங்களைக் காசியின் அருகில் வைத்து விட்டுப் பேசத் தொடங்கினார் கங்காணி. "காசி! எல்லா நடப்பையும் கடைப் பையன் ராமையா வந்து சொன்னான். நான்தான் நூற்றைம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்து அடகிலிருந்த துணிமணிகளை மீட்டுக் கொடுத்தேன். உனக்கு உள்ள அலுக்கையிலே உன்னாலே இவ்வளவு துணிகளையும் தைக்க முடியாதுன்னுதான் உங்க எதிர்க்கடை சாயபு கிட்டே கொடுத்து வீட்டிலேயே தைக்கச் சொல்லிக் காரியத்தை முடிச்சுக் கொண்டாந்திட்டான், ராமையா! மூர்த்தி சிறிசானாலும் கெட்டிக்காரப் பையன்! அவன் செஞ்சதாக உனக்குச் சொல்லப் படாதுன்னு வேறே அவன் எங்கிட்டே கேட்டுக்கிட்டான்! சாயபுவுக்குச் சேர வேண்டிய தையற்கூலியை அனுப்பிச்சுப் புட்டேன். இவ்வளவு ரகசியத்தையும் இனியும் மூடி மறைச்சு, பாவம், உன்னோட மனக் குழப்பத்தை அதிகமாக்கி, உன்னைச் சோதிக்கிறதுக்கு என் மனம் ஒப்பலே! அதான் உன்னைத் தேடிப் புறப்பட்டேன்; நீயே வந்திட்டே! காசி! உன்னோட கடமையும் நாணயமும் நேர்மையும் எனக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுத்திப்பிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்குது. கஷ்டங்களிலேதான் சோதனைகளும் உண்டாகும். இதுதான் வாழ்க்கை என்கிறது! உன்னுடைய தையல் மிஷினை நீயே எடுத்துக்கிட்டுப் போ. உன்னுடைய கடமைக்கும் நல்ல மனசுக்கும் இந்த யந்திரமே சாட்சி சொல்லிப்பிடும். இந்தாப் பாரு. இந்தக் கவரையும் நீ மறுக்காமல் வாங்கிக்க. அக்கரைச் சீமையிலேயும் சரி, சொந்தத் தாய் நாட்டிலேயும் சரி, நான் கற்றுக்கிட்ட உண்மை மனிதன் மனிதனாக வாழ்ந்து காட்ட வேணும் என்கிறது தான்! நீ போ. நிம்மதியாய்த் தீபாவளி கொண்டாடு, அப்பா!"

மனிதர்களின் உருவிலே தெய்வம் வருவது உண்டாமே, அது இதுதானே?

* * *

ராமையாவின் பிஞ்சு மனம் தன்னுடைய முதலாளி காசியைக் கண்டதும் பயந்து விட்டது.

"ராமையா, இங்கே வா!"

அவன் அச்சம் ஏந்தி வந்தான்.

"நீ செஞ்ச வேலையைக் கங்காணி ஐயா என்னிடம் விளக்கமாச் சொன்னாங்க. ஆமாம், இம்புட்டையும் நீ ஏன் என் காதிலே அப்பவே போடலே?" என்று கேட்டான் காசி.

"உங்க ரகசியம் எனக்கு எப்படித் தெரிஞ்சது, இந்த ரகசியத்தை ஏன் நான் கங்காணிகிட்டே சொல்லணும்—அப்படின்னு நீங்க கேட்டு அடிப்பீங்களேன்னு தான் பதுக்கிப்பிட்டேனுங்க அண்ணாச்சி! உங்க தம்பி நான். நல்லதிலேயும் கெட்டதிலேயும் எனக்கும் பங்கு இல்லீங்களா?" என்று பதில் விடுத்தான் சிறுவன்.

"ராமையா! ஆமாம், நீ என்னுடைய தம்பிதான்!"

கங்காணியின் தீபாவளிப் பரிசு ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளாகப் பிரிந்தது. அவை ஒவ்வொன்றிலும், காசியின் ஆனந்தக்கண்ணீர்தெறித்தது. 'கங்காணியோட அன்புக் கடனைக் கழிக்கிறதுக்கு நான் இன்னும் எத்தனை பிறப்பு எடுக்க வேணுமோ, கடவுளே!' என்று எண்ணி மெய்மறந்தான் காசி.

தீபாவளி வாசலுக்கு வந்தது!


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன் நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, கன்ஸரா சால், பம்பாய் 2.


சுதர்சனம் பிக்சர்ஸ்
அவள் யார்
தயாரிப்பு, டைரக்ஷன்: K.J. மகாதேவன்



பாண்டியன் கோட்டம்

மயிலை சீனி. வெங்கடசாமி

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவுக்காக மதுரைக்குச் சென்றேன். அங்கு சிலநாட்கள் தங்கி, சரித்திர சம்பந்தமாகவும் சமய சம்பந்தமாகவும் உள்ள இடங்களைப் பார்த்தேன். அவ்வாறு பார்த்த இடங்களில் யானைமலையும் ஒன்று. யானைமலை, மதுரைக்கு வடகிழக்கே ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது. நேரில் பார்த்தபோதுதான் யானைமலை என்னும் பெயர் மிகப் பொருத்தமான பெயர் என்பது தெரிந்தது. பெரிய யானை ஒன்று இரண்டு முன் கால்களை நீட்டிக்கொண்டு தும்பிக்கையையும் கால்களுக்கு இடையே வைத்துக்கொண்டு படுத்திருப்பதுபோல் இந்த மலை காட்சியளிக்கிறது. தும்பிக்கைக்கு மேலே நெற்றியும், தலையும் கழுத்தும் பின்னும் முதுகும் அமைந்து, அசல் யானையின் உருவமாக, இந்த மலை காட்சியளிக்கிறது. மரம் செடிகள் இல்லாத வெறும் பாறையாக இருப்பதனால், இந்த மலை யானையின் நிறம் போலவும் காணப்படுகிறது.

யானையின் உருவமாக அமைந்திருக்கிற இந்த மலையைப் பற்றித் திருவிளையாடல் புராணத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. இக் கதையை யானை எய்த படலத்தில் காணலாம். சில முனிவர்கள் தமது மந்திர சக்தியினால் ஒரு பெரிய யானையை உண்டாக்கி, மதுரை நகரத்தை அழித்து விடும்படி அதை ஏவினார்களாம். வந்த யானையைப் பாண்டியமன்னன் தூரத்தில் கண்டு பயந்து, சொக்கப் பெருமானிடம் முறையிட்டானாம். சொக்கப் பெருமான் வேடன் உருவத்தோடு சென்று, நரசிங்க அம்பு எய்து யானையைக் கொன்றாராம். அம்பு பட்டு விழுந்த யானை கல்லாகச் சமைந்து விட்டதாம். இதுதான் யானைமலையைப் பற்றிய திருவிளையாடற் புராணக் கதை. இந்தக் கதையில் கூறப்படுகிற நரசிங்க அம்பு என்பது இந்த மலையின் அடிவாரத்தில் எழுந்தருளி இருக்கும் நரசிங்கப் பெருமான்தான்.

யானைமலையில், முன் காலத்தில் சமண முனிவர்கள் தங்கியிருந்த பொடவுகளும் (இயற்கைக் குகைகள்), கற்படுக்கைகளும் வட்டெழுத்து, பிராமி எழுத்துச் சாசனங்களும் இருக்கின்றன. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், தமது காலத்தில் இந்த யானைமலையில் இருந்த "யானைமாமலை"ச் சமண முனிவர்களைத் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

மதுரைக்கு அருகிலே எட்டு மலைகளில் தவம் செய்திருந்த சமண முனிவர்களைப் பெரிய புராணம், "எண்பெருங் குன்றத்து எண்ணாயிரம் சமணர்" என்று கூறுகிறது. அந்த எட்டு மலைகளில் ஒன்றுதான் ஆனைமலை. இந்த மலையைப்பற்றி ஏட்டில் படித்ததை நேரில் போய்ப் பார்க்கலாமே என்ற எண்ணத்தோடுதான் மதுரையிலிருந்து யானை மலைக்குச் சென்றேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் திரு டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்களும் என்னுடன் வந்தார்கள்.

பொடவுகளையும் கல் வெட்டெழுத்துக்களையும் பார்த்துவிட்டு, திருவிளையாடற் புராணத்தில் நரசிங்க அம்பு என்று கூறப்படுகிற நரசிங்கப் பெருமான் கோவிலுக்குச் சென்றோம். கோபுர வாயிலையும் மண்டபங்களையும் கடந்து உள்ளே சென்றோம். நரசிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கிற கர்ப்பக் கிருகம், பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட குகைக் கோயில். இந்தக் குகைக் கோயில், பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்துக் குகைக் கோயில்களைப் போன்று காட்சியளிக்கிறது. ஆனால் இந்தக் குகைக் கோயில், கி. பி. ஏழாம் நூற்றாண்டில், மகேந்திர வர்மன் காலத்தில் அமைக்கப்பட்டதல்ல. கி. பி. எட்டாம் நூற்றாண்டில், நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் பாண்டியன் காலத்தில் அமைக்கப்பட்டது.

பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனின் அமைச்சராக இருந்த மாறன் காரி என்பவர் இந்தக் குகைக் கோயிலை அமைத்தார் என்றும், இந்தக் கோயில் திருப்பணி முடிவதற்கு முன்பே அவர் காலஞ் சென்றதனால், அவர் தம்பியான மாறன் எயினன் என்பவர் இக் குகைக் கோயிலைப் பூர்த்திசெய்து இதில் நரசிங்கப் பெருமானை எழுந்தருளச் செய்தார் என்றும், இது நிகழ்ந்தது கலி 3871-ஆம் ஆண்டு என்றும் இந்தக் கோயிலிலுள்ள வட்டெழுத்துத் தமிழ்ச் சாசனமும் வடமொழிச் சாசனமும் கூறுகின்றன. கலி ஆண்டு 3871 என்பது கி. பி. 770-ஆம் ஆண்டு ஆகும். எனவே, இந்தக் குகைக் கோயில் அமைக்கப்பட்டு இப்போது ஆயிரத்து நூற்று எண்பத்தொன்பது ஆண்டுகள் ஆகின்றன.

இவற்றையெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பியபோது, நாங்கள் சிறிதும் எதிர்பாராத ஒரு புதிய குகைக் கோயிலைக் கண்டோம். இவ்வூருள்ளவர்கள் இந்தக் குகைக் கோயிலை **லாடமுனி கோயில்** என்று கூறுகிறார்கள். உள்ளே போய்ப் பார்த்தபோது, உண்மையில் இது கோயில் அல்ல என்றும் ஓர் அரசனுக்காக அமைக்கப்பட்ட நினைவுக் கோட்டம் என்றும் தெரிந்தது. இங்கு உள்ள சிற்பங்களில் சில, இந்தக் குகைக் கோயில் இறந்துபோன அரசனுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் என்பதைத் தெளிவாகக் காட்டின. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டி நாட்டை அரசாண்ட நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் அரசனுக்காக ஆகிய கோட்டம் என்பது தெரிகிறது.

மலைப் பாறையைக் குடைந்து அழகாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் குகைக் கோயில், வெளியில் இருந்து பார்க்கும் போது கம்பீரமான தோற்றத்தோடு காணப்படுகிறது.

மகேந்திர வர்மன் என்னும் பல்லவ மன்னன் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக் கோயில்களின் தோற்றம்போல் இந்தக் குகைக் கோயில் தோற்றம் அளிக்கிறது. தரை மட்டத்துக்குமேல் நான்கு அடி உயரத்தில் இந்தக் குகைக் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏறிப் போகப் படிகள் எதிர்ப்புறமாக இல்லாமல் இடது வலது புறங்களில் அமைந்துள்ளன. படிகளில் ஏறிச் சென்றால், நீண்ட சதுர அமைப்புள்ள மண்டபம் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மண்டபத்தின் முன்பக்கத்தில் இரண்டு தூண்களும் இரண்டு கோடியிலும் இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. இந்தக் குகைக் கோயில் மகேந்திரவர்மன் காலத்தில், அதாவது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட தல்ல. ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு கி. பி. 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைக்கப்பட்டது.

மண்டபத்தின் பின்புறச் சுவரின் நடுவில் கர்ப்பக் கிருகம் அமைக்கப் பட்டிருக்கிறது. கர்ப்பக் கிருகத்துக்குப் போவதற்கு முன்பாக, இந்த மண்டபத்தின் சுவரில் இருக்கிற சிற்ப உருவங்களைப் பார்ப்போம். கர்ப்பக்கிருக வாயிலுக்கு

இரண்டு பக்கங்களிலும், மண்டபச் சுவரில், சுவரோடு சேர்ந்தாற்போல் தூண்கள் செதுக்கப்பட்டுள்ளன. இந்தத் தூண்களுக்கு மேற்புறத்தில், போதிகை இருக்க வேண்டிய இடத்தில் பருத்த உடலும் குறுகிய உருவமும் உள்ள பூத கணங்கள் மண்டபத்தின் கூரையைத் தாங்கிக் கொண்டிருப்பது போல் சிற்ப உருவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

கர்ப்பக்கிருக வாயிலுக்கு வலது புறச் சுவரில், ஒரு கம்பத்தின் மேலே மயில் ஒன்று நிற்பதுபோலச் சிற்ப உருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சிற்பம் சிறிது சிதைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரிய குகைக் கோயிலின் உருவ அமைப்பு, பாண்டிய நாட்டில் ஆதிச்சநல்லூரில் தரையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழியுடன் காணப்பட்ட கோழியின் உருவம் போன்று காணப்படுகிறது. எனவே, இந்தக் குகைக்கோயில், இறந்து போன ஒரு பாண்டிய அரசனுடைய நினைவுச் சின்னமாக அமைக்கப்பட்ட கோட்டம் என்பது உறுதியாகிறது.

மண்டபச் சுவரில், மயில் சிற்பத்துக்குப் பக்கத்தில், ஓர் ஆள் நிற்பதுபோல் ஓர் உருவம் பாறையில் செதுக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆள் தன்னுடைய வலது கையை இடுப்பில் ஊன்றிக்கொண்டு இடது கையில் பூக்கொத்து ஏந்திக் கொண்டு வாயில் பக்கமாகத் திரும்பி நிற்கிறான். அரையில் கச்சையணிந்திருக்கிறான். மெய்ப்பை (சட்டை) அணிந்திருப்பது போலவும் காணப்படுகிறான். இவன் இறந்துபோன பாண்டிய அரசனுடைய சேநாபதி போலும்!

இடது பக்கத்துச் சுவரில், சேவல் சிற்பத்துக்குப் பக்கத்தில், மற்றோர் ஆளின் உருவம் அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆள், தன் இடது கையை இடுப்பில் ஊன்றி, வலது கையில் பூக்கொத்து ஏந்திக் கொண்டிருக்கிறான். தடித்த பூணூல் அணிந்திருக்கிறான். அரையில் கட்டியிருக்கிற ஆடை முழுங்கால் வரையில் தொங்குகிறது. இவனும் கர்ப்பக்கிருக வாயில் பக்கமாகத் திரும்பி நிற்கிறான். இது இறந்துபோன பாண்டிய அரசனின் அமைச்சன் உருவம்போலும்.

இந்த இரண்டு மனித உருவங்களும் கர்ப்பக்கிருக வாயிலுக்கு அருகில் (துவார பாலகர்போல்) இல்லாமல், அப்பால் விலகி, மயில் கோழி உருவங்களுக்குப் பின்னும் இருக்கின்றன. ஆகவே, இவ்வுருவங்கள் துவாரபாலகர் உருவங்கள் அல்ல என்பதும், இறந்துபோன அரசனுடைய அமைச்சன் சேனைத் தலைவன் உருவங்களாக இருக்கக் கூடும் என்பதும் தெரிகின்றன.

மண்டபத்தின் இடது கோடியில், தரையிலே ஓர் ஆள் மண்டியிட்டு அமர்ந்து இருப்பது போல் பாறையில் சிற்ப உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆள், இடதுகையை இடதுகால் முட்டியின் மேல் தாங்கி, வலது கையை உயர்த்தி வாயில் பக்கமாகக் காட்டுவது போல இருக்கிறான். இவன் தலையில் மகுடம் அணிந்திருப்பதும், காது கழுத்து கை கால்களில் ஆபரணங்கள் அணிந்திருப்பதும், ஆடையின் அமைப்பும் இவன் ஒரு சிற்றரசன் என்பதைத் தெரிவிக்கின்றன. கர்ப்பக்கிருகத்தின் பக்கமாகத் தலையைச் சாய்த்துக் கையைக் காட்டுவதை நோக்கும்போது, கர்ப்பக் கிருகத்துக்குள் இருக்கிற பாண்டிய அரசனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன் இவன் என்று கருத வேண்டியிருக்கிறது.

மண்டபத்தின் பின்புறச் சுவரின் நடுவில், சதுர அமைப்பான கர்ப்பக் கிருகம் இருக்கிறது. இதன் வாயிலில் இரண்டு படிகள் உள்ளன. வாயிலின் இரண்டு புறத்திலும், சுவருடன் சேர்ந்தாற்போல் இரண்டு தூண்கள் அமைந்துள்ளன. ஆனால், வாயிற் புறத்தில் துவார பாலகர் உருவங்கள் இல்லை. எனவே, இது தேவாலயம் அல்ல என்பது உறுதியாகத் தெரிகிறது.

சதுர அமைப்பாக உள்ள கர்ப்பக் கிருகத்தின் உள்ளே, உயரமான மேடையின் மேலே பாண்டிய அரசரும் பாண்டிமாதேவியும் அமர்ந்திருப்பது போல் சிற்ப உருவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அரசன் இடதுகாலை மடக்கி வலது காலைத் தொங்க விட்டுச் சுகாசனமாக அமர்ந்திருக்கிறார். இடது கையை இடது தொடையின் மேல் வைத்துக்கொண்டு வலது கையில் பூச்செண்டு பிடித்திருக்கிறார். தலையில் மகுடம் அணிந்திருக்கிறார். காது கழுத்து மார்பு கைகளில் ஆபரணங்கள் அணிந்திருக்கிறார். உடம்பில் ஆடை இல்லை. அரையில் பட்டு உடுத்தியிருக்கிறார்.

அரசனுக்கு இடது புறத்திலே, பாண்டிமா தேவியார் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு அரசனைப் போலவே சுகாசனமாக அமர்ந்திருக்கிறார். இடது கையை இடது தொடையின்மேலே வைத்து, வலது கையில் பூச்செண்டு பிடித்திருக்கிறார். தலையில் மகுடம் அணிந்திருக்கிறார். மார்பில் வார்க் கச்சு அணிந்து, அரையில் பட்டாடை அணிந்திருக்கிறார்.

அரசியின் இடதுகை சிறிது உடைபட்டிருக்கிறது. அரசர் அரசி உருவங்களின் மேலே கனமான எண்ணெய்ச் சிக்குப் படிந்திருக்கிற படியால் உருவங்களின் அமைப்பு தெளிவாகத் தெரியவில்லை.

இந்தக் குகைக் கோயிலை வாடமுனி கோயில் என்று பாமர மக்கள் கூறுகிறார்கள். ஏன் இப்பெயர் வந்தது என்று தெரியவில்லை. ஆனால், பாண்டிய அரசனுடைய நினைவுச் சின்னம் என்பது உறுதி. கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஏறக்குறைய கி. பி. 765 முதல் 790 வரையில் பாண்டிய நாட்டை அரசாண்ட நெடுஞ்சடையன் பராந்தகன் என்னும் பாண்டியனுடைய நினைவுச் சின்னமாக இது இருக்கக் கூடும். இந்த அரசன் காலத்தில் அமைக்கப் பட்டது தான் இந்த மலையின் அடிவாரத்தில் மற்றோர் இடத்தில் உள்ள நரசிங்கப் பெருமாள் குகைக் கோயில்.

பராந்தகன் நெடுஞ்சடையன் காலமான பிறகு, அவன் மகனான இரண்டாம் இராஜசிம்ம பாண்டியன், தன் தந்தையின் நினைவுக் குறியாக இந்தக் குகைக் கோயிலை அமைத்தான் போலும். என்னுடன் வந்து இக் குகைக் கோயிலைப் பார்வையிட்ட பேராசிரியர் சதாசிவப் பண்டாரத்தார் ஐயா அவர்களும் இதே கருத்தைத் தெரிவித்தார்கள்.

இக் குகைக் கோயிலுக்கு அருகில் ஆர்க்கியாலஜி இலாகாவின் அறிக்கைப் பலகை இக் குகைக் கோயில் பாதுகாப்புப் பெற்ற இடம் என்பதைத் தெரிவிக்கிறது. ஆனால், இது பாண்டிய அரசனுக்காக ஏற்பட்ட கோட்டம் என்பதைக் கூறவில்லை. இது பாண்டிய அரசனின் நினைவுக் கோட்டம் என்பதை இதுவரையில் ஒருவரும் அறியவில்லை.

இந்தக் கோட்டத்தில் சாசன எழுத்துக்கள் காணப்படவில்லை. உடனே திரும்பி வரவேண்டியிருந்தபடியால், சாவதானமாகத் தேடிப் பார்க்க நேரம் வாய்க்கவில்லை. இங்கே தேடிப்பார்த்தால் சாசன எழுத்துக்களும் இருக்கக் கூடும்.





கன்னியர் தவம்!

கந்தமாமலையில் கட்டிளங் காளைப் பருவத்து வாலிப முருகனை இரண்டு பெண் அணங்குகள் சந்திக்கின்றனர். கட்டமைந்த தோள்களும், கண்டோர் 'மன்மதனோ இவன்' என்று அதிசயிக்கத்தக்க தோற்றத்தோடு வேங்கை மரத்தடியில் நின்ற அந்தத் தெய்வீக வாலிபனை அவ்விளம் பெண்கள் இருவரும் கண்டு மையல் கொண்டனர்.

அவன் தங்களைப் பார்க்காதபோது தாங்கள் தலைநிமிர்ந்து அவனைப் பார்ப்பதும், அவன் தங்களைப் பார்க்கும்போது தாங்கள் தலைகுனிந்து தரையைப் பார்ப்பதுமாக அந்த யுவதிகள் நின்றனர். அமிர்தவல்லி, சுந்தரவல்லி என்பது அவர்கள் பெயர்கள். காத்தற் கடவுளான திருமாலுக்குப் புதல்வியர் முறையினர் அவர்கள். முருகனையே மணம் புரிந்து கொள்ளவேண்டுமென்று இமயமலைச் சாரலில் சரவணப் பொய்கையில் நெடுங்காலம் தவம் செய்தார்கள் இந்த இரு பெண்களும். அமிர்தவல்லி, தெய்வயானை என்ற பெயரில் இந்திரனுக்கு மகளாகவும், சுந்தரவல்லி மண்ணுலகில் வள்ளி என்ற பெயரில் வேடர் குலத்தில் பிறந்தும் தன்னை மணந்து கொள்வார்கள் என்று முருகன் அவர்களுக்கு வரமளித்தான்.

—கந்தபுராணம்.



நெஞ்சம் இளகிற்று!

"நான் உன்னைப் பிரிந்து பொருள் தேடுவதற்காக வெளியூர் செல்லப் போகிறேன்" என்று அவள் கணவன் அவளிடம் வந்து கூறியபோது அவள் ஒன்றுமே பதில் கூறவில்லை. மார்பில் அணைத்த குழந்தையோடு நின்று கொண்டிருந்த அவள் ஈரம் படிந்த விழிகளால் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பேசாப் பேச்சாக அவள் பார்த்த அந்தப் பார்வையில் என்ன குறிப்பைக் கண்டானோ? அப்படியே தயங்கி நின்றான். அப்போது அவள் கண்களில் நீர் பனித்தது. முத்து முத்தாகத் திரண்ட அவள் கண்களில் உணர்ச்சி முத்துக்கள் மார்பில் அணைத்துக் கொண்டிருந்த குழந்தையின் தலையில் சூட்டப்பட்டிருந்த கழுநீர்ப் பூக்களில் சிந்தின.


தாபத்தின் வேதனையில் உருவாகி உதிர்ந்த அந்தக் கண்ணீரின் வெம்மையில் குழந்தையின் தலையில் சூடியிருந்த கழுநீர்ப்பூ நிறமிழந்து வாடியது. அந்த வாட்டத்தைத் தலைவன் பார்த்தான். அவன் உள்ளமே வாடிவிட்டாற் போலிருந்தது. உணர்ச்சிகள் கலங்கின. தன் மனத்தில் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். "மனமே! நீ பிரிந்து செல்வதைக் கைவிட்டு விடு." அவன் அவளைப் பிரிந்து போகவில்லை. அங்கேயே தங்கிவிட்டான்.

இந்தக் கருத்தோடு அகநானூற்றிலே வரும் அழகிய பாடலொன்றுக்கு நமது ஓவியர் கல்பனு படம் வரைந்துள்ளார்.

மாப்பிள்ளை மறந்தது...!




"என்ன, மாப்பிள்ளே! பிரஷ் கொண்டு வர மறந்து போயிட்டீங்களா?"





PHONE : 3884.
Pretty Saree with
PRAKASH
YARNS
60s & 80s
The
PRAKASH
Mills Private Limited
PEELAMEDU..... COIMBATORE..


போன் : 41
தந்தி : "மைதீன்கோ"
எங்கள் அபிமானிகளுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்
மைதீன்
ஸ்பெஷல் புகையிலை
தாம்பூலத்திற்கு தனிச்சிறப்புடன் விளங்குவது
மிகவும் உயர்ந்த தரம்
E.S. மைதீன் & கோ
மைதீன் புகையிலை தயாரிப்பாளர்கள்.
கும்பகோணம்

டெலிவிஷன் காட்சிகள்!



பகவானே சொன்னார்!




நல் விருந்து!
எழில் மிக்க அழகு கண்ணிற்கு விருந்து
இனிமை மிக்க கானம் செவிக்கு விருந்து
பொருள்மிக்க காவியம் கருத்திற்கு விருந்து
சுவை மிக்க உண்டி நாவிற்கு விருந்து
மணம் மிக்க 'ரத்தினம் பொடி'
நாசிக்கு நல்விருந்தாமே!
T·A·S
ரத்தினம்
பட்டணம் பொடி
தயாரிப்பாளர்:
T.A.S. ரத்தினம் பிரதர்ஸ்
தபால் பெட்டி 1151, மதராஸ்-21
S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே

உணவுப் புரட்சி

பூர்ணம் விசுவநாதன்



காட்சி 1

[மாஜிஸ்திரேட் சாம்பமூர்த்தியின் வீடு அமர்க்களப்படுகிறது. காலையில் எல்லோருக்கும் காப்பி தயாரித்துக் கொடுத்துவிட்டு வெளியே போன சமையற்காரன் காசி, மணி ஒன்பதாகியும் திரும்பி வரவில்லை. அடுப்பெல்லாம் அணைந்து கிடக்கிறது. சாம்பமூர்த்தியும், அவருடைய மனைவி சாரதாவும், மகள் மஞ்சுளாவும், மகன் சுந்தரமும் ஆளுக்கொரு பக்கம் நின்று இரைந்துகொண்டிருக்கிறார்கள்.]

சாம்ப: (ஆத்திரத்துடன்) என்ன நெனைச்சிண்டான் இவன்! ஆபீசுக்கு நாழியாறதேன்னு நான் கடந்து துடிச்சிண்டிருக்கேன்; ராஸ்கல், அடுப்பை அணைச்சுப் போட்டுட்டு...

சாரதா: சமையலறையிலே சத்தத்தையே காணலியேன்னு நான் போய்ப் பாக்கலிட்டுன்னு தெரிஞ்சுது!

மஞ்சுளா: அப்பா, நீங்க அவனே இந்த நிமிஷமே 'டிஸ்மிஸ்' பண்ணிட்டு மறு ஜோலி பாருங்கோ.

சுந்தரம்: (நொடிப்பாக) ஆமாம், 'டிஸ்மிஸ்' பண்ணிட்டு அப்புறம் ஜோலி பாக்க வேண்டிய பொறுப்பும் அப்பாவோடதுதானு?......ஹூம் 'டிஸ்மிஸ்' வேணும்னு அப்பா பண்ணுவாரே ஒழிய, அதுக்கப்புறம் ஜோலிக்கறதெல்லாம் ஒங்களோடது தான்னேன்...... காசி போயிட்டா சமையல் ஒங்க ரெண்டுபேர் கையாலேதான் நடக்கணும், ஜாக்கிரதை!

சாம்ப: காசி டிஸ்மிஸ் ஆயி வெளியிலே போறது அப்புறம் இருக்கட்டும். இப்போ என் சாப்பாட்டுக்கு என்ன வழி?... நீங்க ரெண்டு பேருந்தான் ஏதாவது...

சாரதா: (அசட்டுச் சிரிப்புடன்) நாங்க ரெண்டு பேருமா? சரியாய்ப் போச்சு?... எங்களுக்கு...

மஞ்: (சிரித்து) நாங்க இனிமேல் சமைக்கக் கத்துண்டு, ஒங்களுக்குத் தயார் பண்ணிப் போட்டால் போதுமா?...

சுந்தரம்: ஒழுங்குதான். அப்படின்னு நான் காலேஜுக்கும், அப்பா ஆபீசுக்கும் ஒரு மாசம் லீவ் போட்டுட வேண்டியதுதான்; வேறே வழியில்லே.

சாரதா: ஒன் சமர்த்துப் பேச்சு இருக்கட்டும்...மொதலாவது, காசி போயிட்டாக்கூட நாங்க எதுக்காகச் சமைக்கணும்? இன்னொரு சமையல்காரனைப் போட்டுட்டுப் போறோம்.

சுந்தரம்: அப்பிடிப் போடுன்னேன்! எங்கே நீங்களே சமைக்கக் கௌம்பிடுவேளோன்னு பாத்தேன்.

சாம்ப: அதுதானே, நானும் பயந்து போனேன்.

மஞ்: நாங்க சமைச்சா ஒங்களுக்கு என்னப்பா பெருமை!... 'டிப்டி கலெக்டர்' வீட்டிலே போய்ப் பார்த்தாத் தெரியும்; வெரல் அசைக்கறதுக்குக்கூட அங்கே வேலைக்காரன் போனக்கறது. இங்கே நாம மட்டும் என்ன, மட்டமா போயிட்டோம்?

சாரதா: அப்பிடிக் கேளு மஞ்சுளா..! (இடைரென்று) கம்? இந்தக் காசியை என்ன பண்ணினுத் தேவலே!... அவன் வரட்டும் சொல்றேன்...

சுந்தரம்: அம்மா! கொஞ்சம் சாந்தமாகவே பேச ஆரம்பிக்கலாம்; அவன் வந்துண்டிருக்கான்.

சாம்ப: (வெளியே பார்த்து) ஆமாம், அவன்தான் வரான்...சாரதா, மஞ்சுளா, ஒங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்... அவன் கிட்ட வாய் குடுக்கவேண்டாம்.

சாரதா: நீங்க அவனுக்குப் பயப்படுங்கள். நான் எதுக்காகப் பயப்படணும்?

மஞ்: நானும் கேக்கத்தான் போறேன். இவங்களுக்கெல்லாம் எதுக்காகச் சம்பளம் குடுத்து வைச்சிருக்கு!

[காசி வருகிறான், கையில் ஒரு பெரிய பொட்டலத்துடன்.]

காசி: (வரும்போதே) என்ன, பெரிய சபை கூடியிருக்கு? என் மண்டைதானே உருண்டுண்டிருக்கு இங்கே?

சாரதா: (ஆத்திரத்துடன்) கேலிப் பேச்செல்லாம் அப்புறம் இருக்கட்டும்... இத்தனே நாழி எங்கே போயிருந்தே?

மஞ்: சமையலுக்கு அடுப்புகூட மூட்டாம எங்கே போனே?

காசி: (இருவரையும் அலட்சியமாகப் பார்த்துவிட்டு, சாம்பமூர்த்தியிடம்) ஸார்! எத்தனையோ நாட்கள்தான் வீட்டோடு அடைபட்டுக் கிடக்கறேன்; இன்னிக்கு ஏதோ காப்பிக்கடை சீக்கிரம் ஆயிடுத்தே, கொஞ்சம் வெளியே போயிட்டு வருவோம்னு போனேன்;

சாரதா: (சீறி விழுந்து) இந்தா காசி, நாங்க ரெண்டு பேரும் கேக்கறோம், எங்களை அலட்சியம் பண்ணிட்டு அவர் கிட்டே போய் ஒப்பிக்கறியே!

மஞ்: இங்கே கேக்கறவா மனுஷாளாத் தோணலியோ ஒனக்கு?

காசி: இதோ பாருங்கோம்மா, ஒங்க கிட்டல்லாம் பேசக் கூடாதுங்கறதுக்காகத்தானே அவர்கிட்ட சொல்லிண்டிருக்கேன்!...நீங்கள்ளாம் கொஞ்சம் மூச்சுக் காட்டாம...

மஞ்: மொதல்லே கேட்டதுக்குப் பதில் சொல்லு. அதுக்கு அப்புறம் எடுத்தெறிஞ்சு பேசலாம்....

சாரதா: எங்களுக்கெல்லாம் இங்கே தான் சாப்பாடுன்னு தெரியுமோல்லியோ? சமையலுக்கு என்ன ஏற்பாடு பண்ணினே?

காசி: என்னமோ ஒங்களோட சாப்பாட்டைப் பத்தியே பேசறேளே ஒழிய, என்னோட சாப்பாட்டைப் பத்தி ஒரு அக்ஷரம்கூட வெளியிலே வரமாட்டேங்கறதே! ஏம்மா அப்பிடி?

சாம்ப: (கண்டிப்பாக) காசி! ஒன்னோட ரோசமெல்லாம் இருக்கட்டும்... எங்களோட சாப்பாட்டுக்கு இப்போ என்ன வழிங்கறதைச் சொல்லு.

காசி: கோவிச்சுக்காதேங்கோ எல்லாருமா... ஒங்க சாப்பாட்டுக்கும் பாதி ஏற்பாடு ஏற்கெனவே ஆயிடுத்து; என் பேர்லே வஞ்சகமில்லே.

எல்லோரும்: (ஒரே குரலில்) ஏற்பாடு ஆயிடுத்தா? எங்கே?

சாம்ப: என்டா காசி! எங்கேயாவது மரத்தடியிலே சமையல் பண்ணிண்டிருக்கயா? வீட்டுக்குள்ள புகையைக் கௌப்பாம நீ எங்கே போய் ஏற்பாடு பண்ணிண்டிருக்கே?

காசி: விஷயத்தைச் சொல்றேன், கேளுங்கோ. நம்ம அடுத்த தெரு எஞ்ஜினியர் வீட்டுச் சமையல்காரன் கணபதியைப் பாத்துப் பேசிண்டிருந்தேன் இத்தனே நாழியா. அவன் சொன்னதைக் கேட்டப்பறம் இதை வாங்கிண்டு வந்திருக்கேன், சாப்பாட்டுக்கு. (பொட்டலத்தைக் காட்டுகிறான்).

சுந்த: என்னது அது! புல்லா, புண்ணாக்கா?

காசி: டபுள் ரொட்டியாக்கும்! (பொட்டலத்தைப் பிரித்து ஏகப்பட்ட

ரொட்டிப் பாளங்களையும், டின்களையும் வெளியில் எடுத்து வைக்கிறான்.)

சாரதா : ரொட்டியா ? எதுக்கு ?

காசி : (அலட்சியமாக) எல்லாம் முழுங்கி மூச்சு விடறதுக்குத்தான், வேறே எதுக்கு ?

மஞ் : சாப்பாட்டுக்கு என்ன வழின்னு கேட்டா, என்னமோ...

காசி : (ரொட்டியைக் காட்டி) இது சாப்பாட்டுக்கு இல்லாம தார வீசிப் போடறதுக்கா என்ன ? நம்ம எஞ்சினிய ரோட 'குக்' கணபதி சொன்னப்பறம்னு தெரிஞ்சுது. இப்பிடியும் ஒரு ஏற்பாடு உண்டுன்னு. அந்த எஞ்சினியர் வீட்டு லெல்லாம் அரிசி, ஆட்டான்னு எதுவுமே கெடையாதாம். எல்லாம் இந்த ரொட்டி வகையறுதானும்.

சாரதா : அப்பிடியா ?

காசி : பின்னே ? நம்ம எஞ்சினியரே சொல்லிட்டாராமே ; பெரிய மனுஷா வீடுன்னு பேரை வைச்சிண்டு மத்த சாதா ரண ஜனங்கள் மாதிரி சாதம், கொழம்பு, சப்பாத்தின்னு பண்ணக் கூடாது ; டபுள் ரொட்டிதான் சாப்பிடணும்னு உத்தரவு போட்டுட்டாராம்.

சாம்ப : (வியப்புடன்) நெஜமாகவா ?

மஞ்சு : (சந்தேகத்துடன்) நம்பவே முடியலியே !

சாரதா : (பொறுமையுடன்) அவா ளுக்கு இத்தனை ராங்கியா இப்போ ?

மஞ் : (ரோசத்துடன்) அவாளுக்கே இத்தனை இருக்கலாம்னு நமக்கு எத்தனை இருக்கப்படாது ! ஒரு சொன்னே எஞ்சி னியர் அவர் !

காசி : (விடாமல்) அந்தக் கணபதி சொன்னப்பறம் எனக்கு ஒரே வெக்க மாப் போயிடுத்து. இந்த வீடும் பெரிய ஆபீஸர் வீடுன்னு பேர்தானே ஒழிய, இங்கே போயும் வந்தும் அதே அரிசிச் சோறும், கொழம்பும் கறியும்தானேன்னு ரொம்ப அவமானமாக இருந்தது. அதுதான்...

சாரதா : எங்கே, அந்த ரொட்டியிலே ஒன்னு எடு. பார்ப்போம்... (காசியிட மிருந்து ஒன்றை வாங்கிப் பார்த்து) ரொம்ப நன்னா இருக்கும்போல் இருக்கே!

மஞ் : (தானும் ஒன்றை எடுத்துப் பார்த்து) நன்னாத் தான் இருக்கு அம்மா... ஏம்மா! நாம மட்டும் என் னத்துலே கொறைஞ்சு போயிட்டோம் ! அவா ளுக்கே முடியும்னு நம்மனா லேயும் நிச்சயம் முடியும்.

காசி : அதையேதான் நானும் சொல்றேன்.

சாரதா : இந்த ரொட்டி எப்பிடிப் பண்றதுன்னு ஒனக்குத் தெரியுமா ?

காசி : எனக்கு எதுக்காகத் தெரிய ணும் ? இதையெல்லாம் தெரிஞ்சு வைச் சிண்டு கடையிலே ஒருத்தன் பண்ணிப் பண்ணிக் குமிக்கிறானே, அவன் பொறுப்பு என்ன ஆறது ? எஞ்சினியர் வீடுமாதிரி நாமளும் 'பேக்கரி'யிலேருந்து தினம் வரவழைப்போம்.

மஞ் : ஓ, அவா வீட்டுலேயும் அப் படித்தான் செய்யறானா ?...

சுந்த : ஒரு விதத்துலே எஞ்சினியர் செய்யறதும் சரிதான்ம்பேன்... அரிசிச் சோத்துலே சத்தும் கெடையாது, ஒன் னும் கெடையாது. ரொட்டின்னா...


சாரதா : ரொட்டின்னு சத்துக்குச் சத்தும் ஆச்சு ; மொரமொரக்கவும் இருக்கும். (சாம்பமூர்த்தியிடம்) நீங்க என்ன சொல்றேள் ?

சாம்ப : நான் சொல்றதுக்கு என்ன இருக்கு ? மெஜாரிட்டி தீர்மானம் எப்ப டிப் போறதோ, அந்தப் பக்கம் நானும் சாஞ்சுடறேன்.

சாரதா : ரொட்டின்னு, வெறும் ரொட்டிதானு, இல்லாட்டா அதுக்குத் தொட்டுக்க ஏதாவது உண்டா ?

காசி : மொதலாவது ரொட்டியையே மூணு நாலு விதமாப் பண்றதுண்டு. எல்லாம் கணபதிகிட்ட கேட்டுண்டுதான் வந்திருக்கேன் ; அதுனாலேதானே இத்தனை தாமி !... அப்புறம், தொட்டுக்கிறதுக்கு வகை வகையா ஏகப்பட்ட தொக்குகள் வைச்சிருக்கான் கடையில். இதோ வாங்கிண்டு வந்திருக் கேனே டின்டின்னு ! இதுக்கு ஏதோ பேர் சொன்னானே...

சுந்த : அதெல்லாம் ஒனக்கு ஞாபகம் வராது. வீணா மண் டையை ஒடைச்சுக்காதே. கலி மண் மேலே சித்திடப் போறது !



சாம்ப : டேய், காசி! இதை நீ என்ன பண்ணுவியோ, காலாகாலத்துலே தயார் பண்ணிண்டு வந்து கொடுத்து விடு. ஆபீசுக்கு நேரம் ஆகிறது.

காசி : இதோ ! (ரொட்டிப் பாளங் களையும், டின்களையும் அள்ளிக்கொண்டு உள்ளே ஓடுகிறான்.)

சாரதா : காசி! ஒவ்வொரு சமயம் என்னமே மாதிரிப் பேசிடுறானே ஒழிய, நல்ல புத்திசாலி.

மஞ் : சந்தேகமென்ன ?

காட்சி 2

[" பேக்கரிச் சாப்பாடு " ஆரம்பமாகி விசேஷமாட்டுப் போல் இரண்டு வாரங்களாகி விடுகின்றன. சாம்ப மூர்த்தி முகவாட்டத்துடன் மாடி அறையில் உட்கார்ந்து அரைத் தூக்கமாகத் தூங்கி வழிந்து கொண்டிருக்கிறார். சுந்தரம் உள்ளே வந்து மெதுவாகக் கத வைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விட்டு அவர் அருகில் வருகிறான். அவர் உணர்ச்சியற் றுக் கீழே உட்கார்ந்திருக்கிறார்.]

சுந்த : (குனிந்து) அப்பா !

சாம்ப : (விழித்து) ஒக்காரு சுந்தரம்.. நானும்...(பெருமூச்சு)

சுந்த : அப்பா! ஒரு விஷயம் ஒங்க கிட்ட பேசணும்னு ரகசியமா வந்திருக் கேன்... எம்பேலே நீங்க எவ்வளவு கோவிச்சிண்டாலும் பரவாயில்லே, சொல் லத்தான் போறேன்.

சாம்ப : (மருண்ட பார்வையுடன்) என்ன சுந்தரம், தயங்காமச் சொல்லு...

சுந்த : (தொண்டை யடைக்க) அப்பா ! இந்த ரொட்டியைக் கண்டுபிடிச்ச வன் எவனோ, அவனைத் துண்டு துண்டா வெட்டிப் போட்டுடலாமான்னு கோபம் வரது எனக்கு...

சாம்ப : (முகம் மலர) என்ன சொல்றே சுந்தரம் ?

சுந்த : அப்பா, நான் சொல்றேன்னு வித்தியாசமா நெனைச்சுக்காதேங்கோ...... (திடீரென அழுதுகொண்டே) எனக்கு இந்தச் சாப்பாடு வெறுத்துப்போச்சு அப்பா... என்னால் தாங்கமுடியல்லே.

சாம்ப : (வியப்புடன்) யாரு ? சுந்தரமா பேசறது ?

சுந்த : (ஆவேசமாக) ஆமாம், அப்பா! சுந்தரம் தான். இன்னிக்கி நான் பேச லேன்னு என்னிக்குமே பேச முடியாதபடி டபிள் ரொட்டி என் தொண்டையை அடைச் சுடும். அதுனாலேதான் இன் னிக்குப் பேசறேன்...

சாம்ப : ......


சுந்த : (அழுகையைத் தொடர்ந்து) அப்பா ! எனக் குத் தொண்டை யெல்லாம் காஞ்சு போச்சு, இந்த வறட்டு ரொட்டியைத் தின்னு தின்னு...அதோடு ரொட்டியைப் பார்த்தாலே ஒடம்பையும், மனசையும் என்னமோ செய்யறது...

சாம்ப : (நாத் தழுதழுக்க, அவன் கையைப் பிடித்து) சுந்தரம்! நீ ஒரு தெய்வப் பிறவி. நான் மனசுலே என்ன நெனைச்சிண்டிருக்கேனோ, அதையெல் லாம் அப்பிடி அப்பிடியே ஆணி அடிச்சது மாதிரிச் சொல்லிட்டே நீ.

சுந்த : அப்பா! அரிசிச் சாதம் சாப் பிடாததுனாலே...

சாம்ப : நிச்சயம் தலை சுற்றலுக்கு வரும் ; எனக்குத் தெரியாதா ? எனக்கு வரலியா இப்போ ?...இந்த ரெண்டு வாரமா என்ன பாடு படறேன், தெரியுமா ? ரொட்டி ஒரு துண்டு சாப்பிட்டாக் கூட ஒரே தாகம்...






A.S. MENON
THE NATION'S BEST
Bengal
BENGAL
BENGAL ELECTRICALS CO.
BANGALORE·3 • MADRAS·17

சுந்த: ரொட்டியோடு என்னல் லாமோ தரான் காசி—ஜாம், அது இதுன்னு...என்ன பிரயோசனம்? நல்ல காரசாரமா சாம்பார் விட்டு என்னிக் கிடா சாப்பிடப் போறேம்னு இருக்கு.

சாம்ப: எனக்கு மட்டும் இல்லையா சுந்தரம்?...ஆனும் நாம இப்போ என்ன செய்ய முடியும்," சொல்லு... நாம இப்பிடிப் பேசிண்டதாக் கூடச் சாரதா வுக்குத் தெரியக் கூடாது; வீடு ரெண் டாய்ப் போய் விடும்.

சுந்த: அப்பா, நீங்க மாஜிஸ்ட்ரேட்; நான் மாஜிஸ்ட்ரேட்டோட 'ஸன்' நாம ரெண்டுபேரும் ஒளிஞ்சு ஒளிஞ்சு ஹோட்டல்லேயாவது ஏதேனும் சாப்பிட முடியுமா? அதுவும் முடியாது... என்ன செய்யறது சொல்லுங்கோ... நான் இந்த ஊரைவிட்டே எங்கயாவது ஓடட்டுமா?

சாம்ப: (ரோசத்துடன்) என்னது. ரொட்டிக்கும் பயந்துண்டு ஊரை விட்டே ஓடப் போறயோ? இதை விட மோசமான கஷ்டங்களை யெல்லாம் சகிச்சிண்டு, எத்தனை பேர்கள் போராடி யிருக்காங்கறதை யோசிக்கப் பாரு; ஷெல்லி, அசோகன் இவாளைப் பத்தி யெல்லாம் நீ வாசிச்சதில்லையா?... பொறுத்துக்கோ; கொஞ்சநாள் போனு பழகிப்போயிடும்....ஆனு நாம இப்பிடிப் பேசிண்டது யாருக்கும் தெரிய வேண்டாம். (அவர் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விழுகிறது.)

காட்சி 3

[அதேசமயம் சாரதாவும், மஞ்சுளா வும் அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசுகிறார்கள். இருவரும் வாடித் துவண்டு காணப் படுகிறார்கள்.]

சாரதா: (பெருமூச்சுடன்) என்னமோ எனக்கு ஒண்ணுமே தோணலே, மஞ்சுளா! பித்துப்பிடிச்சாப்லே இருக்கு.

மஞ்: எனக்கு எப்பப் பாத்தாலும் பசியும், தாகமும் பிச்சிண்டு போறது. ரொம்பத் தவிப்பா இருக்கு.

சாரதா: அன்னிக்கி என்தான் நமக்கு அப்படி புத்தி போச்சோ! 'எஞ்ஜினியர் வீட்டுலே என்ன சாப்பிட்டா நமக்கு என்ன; இங்கே அரிசிச் சாதமும், புளித் தீர்த்தமும் போறும்'னு சொல்றதுக்கு நமக்குத் துணிச்சல் இல்லே.

மஞ்: நீ இப்பிடித்தான் அம்மா சில சமயம் ரொம்ப ரோசப்பட்டுடறே.

சாரதா: அதென்ன அப்பிடிச் சொல்றே, மஞ்சுளா? நான் மட்டும்தான் ரோசப் பட்டேனு அன்னிக்கு? எல் லாரும் சேந்து தீர்மானிச்சது தானே? நீ எல்லாவு வாதாடினே அன்னிக்கி!

மஞ்: போதும் அம்மா, இருக்கும் போய் நாம இப்போ சண்டை போடுவானேன்? எனக்குப் பேசக்கூடச் சக்தியில்லே,...

சாரதா: இந்தக் காசியை என்ன பண்ணினுத் தேவலே! எதுக்காக அன்னிக்கி அந்த எஞ்ஜினியர் வீட்டுக் கணபதியைப் போய்ப் பார்த்து வச்சான்? ...ஜாம், காசியைச் சொல்லி என்ன ருத்தம்! நாமன்னு புத்திபோடு நடந்துண் டிருக்கணும்!

[காசி வருகிறான். அவன் முகமெல் லாம் உலர்ந்திருக்கிறது.]

காசி: வாங்கோம்மா சாப்பிட... எல்லாம் தயாராயிடுத்து... பிளேட் டெல்லாம் வெச்சாச்சு...

சாரதா: ஆகட்டும், ஆகட்டும் வரோம்...

[காசி திரும்பிப் போகிறான்.]

மஞ்: "என்ன சமைச்சிருக்கே" என்று கூட அவனைக் கேக்க முடியாதபடி தெய்வம் நம்ப வாயை அடைச்சுடுத்தே!

[இருவரும் எழுந்திருந்து சோர்வுடன் சமையலறைப் பக்கம் செல் கிறார்கள்.]

காட்சி 4

[சாப்பாட்டு அறை. மேஜையைச் சுற்றிச் சாம்பமூர்த்தியும், சுந்தர மும் ஒரு பக்கமும், சாரதாவும், மஞ்சுளாவும் எதிரேயும் உட் கார்ந்திருக்கிறார்கள். காசி, பீங் கான் தட்டுகளில் பரிமாறுகிறான். பரிமாறி முடிந்த பின்னும் நாலு பேரும் வெறுமனே உட்கார்ந் திருக்கிறார்கள்.]

காசி: என்ன, எல்லாரும் சும்மா ஒக்காந்திருக்கேள்! சாப்பிட ஆரம் பிக்கலாம்...

சாம்ப: வேறே ஒண்ணுமில்லையா, அப்பா தொட்டுக்க. இந்தத் தித்திப்பு பசியைத் தவிர?

காசி: வேறே ஒண்ணும் கெடையவும் கெடையாது, போட்டுண்டா நன்னாவும் இருக்காது.

சுந்த: (கெஞ்சும் குரலில்) காசி! எனக்கு வந்து ஒரு சின்ன ஊறுகாய்த் துண்டமாவது...

காசி: என்னது? ஊறுகாய்த் துண்டமா?... மிஞ்சியிருந்த ஊறுகாயை ஆனுக்கு ஆள், போக வரக் களவாண்டு திண்ணுட்டு. இப்போ அந்த ஜாடியிலே ஒரே ஒரு துண்டம்தான் பாக்கியிருக்கு.

சாரதா: காசி, அந்தத்துண்டத்துலே பாதி எனக்கும், பாதி மஞ்சுளாவுக்கும்...

சுந்த: அதெப்படி? அப்புறம் மத்தவா பங்கெல்லாம் சொன்னேப்பங்கான்னேன்!

சாம்ப: டேய், காசி! அதை ஆனுக்கு இத்தனையா பிச்சுப் போடு...

காசி: (ஊறுகாயைப் பிய்த்துப் போட்டுக் கொண்டே) இன்னிக்குக் கொஞ்சம் வெங்காய சாம்பார் வேணும்னு பண்ணலாமான்னு யோசிச் சேன்; ஆனல் ரொட்டி சாப்பிட ஆரம் பிச்சப்புறம் சாம்பார் எல்லாம் சாப் பிடறது அநாகரிகமாச்சேன்னு அந்த 'பாசனையைக் கைவிட்டுட்டேன்.

[எல்லோரும் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் திணறு கிறார்கள்.]

காசி: உம்! உம்! சாப்பிடுங்கோ, நீங்க சாப்பிட்டப்புறம்தான் நான் சாப் பிடணும்.

சாம்ப: (திடீரென்று) காசி, இன் னிக்கி என்னமோ என் வயறெல்லாம் ஒருமாதிரி பொருமிணுப்லே இருக்கு. இதை எடுத்து மூடி வை; அப்புறம் சாப்பிடறேன். (எழுந்திருக்கிறார்.)

காசி: அட பாவமே, ஏன் ஸார் அப்படி?

சாம்ப: அப்படித்தான்... (போய் விடுகிறார்.)

சுந்த: காசி...

காசி: ஏன், ஒங்களுக்கும் வயிறு ஒரு மாதிரி இருக்கோ?

சுந்த: (மிடுக்காக) அதில்லே.... என்னமோ இன்னிக்கிப் பசியேயில்லே.



காசி: அதுக்கு நான் என்ன பண்ண வேணும் சொல்லுங்கோ, செய்யறேன். ஆக்ஷேபணையில்லே.

சுந்த: ஒண்ணுமில்லே, என்னோட சாப்பாட்டையும் வைக்க முடிடு: அப் புறம் வந்து சாப்பிடறேன்.

காசி: ஒங்க இஷ்டம்; நான் என்ன சொல்றதுக்கு இருக்கு?

[சுந்தரம் எழுந்து போகிறான். கூடவே சாரதாவும், மஞ்சுளா வும் எழுந்திருந்து, காசியிடம் சேர்க்கக் கொள்ளாமலேயே நழுவுகிறார்கள்; காசி திகைத்துப் போய் நிற்கிறான்.]

காட்சி 5

[அன்று சாம்பமூர்த்தியின் ஆபீஸில் அவர் இடைவேளையின்போது தமது அறைக்குள் வருகிறார். அறைக்குள் ஏற்கனவே வந்து காத்துக் கொண்டிருக்கும் எஞ்சினியரைப் பார்த்ததும், சாம்பமூர்த்தி திடுக்கிடுகிறார்.]

எஞ்சி: ஹி ஹி... ஒங்களை எப்படியாவது இன்னிக்கிப் பார்த்துப் பேசிடணும்ங்கற நோக்கத்தோடுதான் காத்துண்டிருக்கேன்.

சாம்ப: (வியப்புடன்) என்னையா?... ஆச்சரியமா இருக்கே!...

எஞ்சி: பழைய விரோதத்தை யெல்லாம் மறந்துடணும்.

சாம்ப: விரோதமென்ன? அர்த்தமில்லாம பேச்சுவார்த்தையை நிறுத்திட்டோம். அதுக்குக் காரணமா இருந்தது? ரெண்டு பக்கத்துலேயும் விவேகம் இல்லாமல் போயிடுத்து...

எஞ்சி: ஒரு முக்கிய விஷயமா ஒங்களைப் பார்த்துப் பேசிடணும்னு வந்தேன். அதோடு நம்ம குடும்பங்களுக்குள்ளே மறுபடியும் சிநேகமும் ஏற்பட்டுட்டா ரெட்டிப்பு சந்தோஷம்.

சாம்ப: என்ன முக்கிய விஷயம்?... ஆறு நான்கூட ஒங்ககிட்ட...

எஞ்சி: கொஞ்சம் அந்தக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுட்டு வந்துடறேன். (எழுந்துபோய்த் தாளிட்டு விட்டுத் திரும்பி வருகிறார். அவருடைய கண்கள் கலங்கியிருக்கின்றன.)

சாம்ப: ஏன், என்ன விஷயம்?

எஞ்சி: (உட்கார்ந்து) எப்படிச் சொல்றதுன்னே தெரியலே... (திடீரென்று) ஏன் ஸார், நீங்க நெஜமாவே எப்படி இந்த ரொட்டிச் சாப்பாட்டைச் சாப்பிட்டுண்டு காலம் கடத்த முடியறது?

சாம்ப: (முதலில் திடுக்கிட்டவர், பின்பு ரோசத்துடன்) அந்தக் கேள்வியை நான்னா ஒங்ககிட்ட கேக்கணும்?

எஞ்சி: நீங்க பேசறது புரியலையே!

சாம்ப: எப்படிப் புரியும்?.... ஒங்களுக்கு ஒருவேளைச் சாப்பாடுதான் புடிக்கும்னு அதை ஒங்கமட்டுலே வைச்சுக்கணும். ஒங்க 'குக்' எங்க 'குக்'குகிட்ட வந்து மூட்டி விடறதும், எங்க 'குக்' குடும்பம் முழுதும் பட்டினிப் பட்டாளமா கவுத்தி விடறதும் இதெல்லாம் எதுக்குங்கறேன்! இதுக்கெல்லாம் கோர்ட் மூலமா ஏதாவது செய்ய முடிஞ்சா...

எஞ்சி: (தாமும் விடாமல்) இதே கேள்வியை நான்னா ஒங்களைக் கேக்கணும்? ஒங்க காசி வந்து கணபதி கிட்ட மூட்டி விட்டதுனாலென்னு எங்க வீடு பூராவும் பட்டினிக் கொட்டாரமா மாறித்து! அதுக்கு முன்னாலே ரொட்டின்னு என்னன்னே எங்களுக்குத் தெரியாதே!

சாம்ப: (திகைப்புடன்) ஆ! நெஜமாவா?

எஞ்சி: (திடீரென்று விம்மிக் கொண்டு) நெஜமில்லாட்டா என் ஒடம்பு இப்படி ஏன் வாடி மெலிஞ்சிருக்கணும்? என் குடும்பமே உருக்கொலைஞ்சு போயிடுத்து. வந்து பாருங்கோ.

சாம்ப: (அழாத குறையாக) சந்தேகமில்லாமல் இந்த ரெண்டு பயல்களும் சேந்து ஏதோ சூழ்ச்சி பண்ணித்தான் நம்ம குடும்பங்களை உருக்குலைச்சுப் போட்டுட்டான்கள்! நீங்க ரொட்டி சாப்பிடறதாக எங்க வீட்டுலே சொல்லிக் காசியும், நாங்க ரொட்டி சாப்பிடறதாக ஒங்க வீட்டுலே சொல்லிக் கணபதியும் தங்களோட வேலையைக் கொறைச்சிண்டுட்டான்கள்!... எவ்வளவு ஏமாந்து போயிட்டோம்!...

எஞ்சி: நான் இப்பவே போயி அந்தக் கணபதியை ரொட்டிமாதிரி பிச்சுப் போட்டுடறேன்...என்ன ஸார், இத்தனை நாளா...

சாம்ப: நான் சாயங்காலம் அந்தக் காசியை உண்டு இல்லேன்னு ஆக்கிடறேன்.

[அவமான மிகுதியால் இருவரும் பெருமூச்சு விடுகிறார்கள்.]

காட்சி 6

[மாலை: சாம்பமூர்த்தி ஆவேசத்துடன் வீடு திரும்புகிறார். வீட்டுக்குள் நுழையும் போதே "காசி! காசி!" என்று இரைந்துகொண்டு வருகிறார். ஆனால் காசியைத் தவிர பாக்கி எல்லோரும் வந்து கூடுகிறார்கள்.]

சாரதா: எதுக்காக இப்படி ஆவேசமா வரேள்? என்ன நடந்துடுத்து?

சாம்ப: என்ன நடந்துடுத்தா? இந்தக் காசியும், கணபதியும் சேர்ந்து ஏதோ சூழ்ச்சி பண்ணி நம்மளை இத்தனை நாளும் வாட்டி யிருக்கான்! எஞ்சினியர் வீட்டுலேயும், நம்ம வீட்டுலேயும் ரொட்டிச் சாப்பாடு ஒரே நாளிலேதான் ஆரம்பிச்சது, தெரியுமா?

எல்லோரும்: (திகைத்து) ஐயையோ, நெஜமாவா?

சாம்ப: வேலையைக் கொறைச்சுக்கணும்ங்கறதுக்காக அவங்க பண்ணியிருக்கிற பெரும் சூழ்ச்சி சாரதா... (உரக்க) காசி!...காசி!!

சுந்த: அவன் இல்லேபோலிருக்கே! மத்தியானம் காப்பி ஆனவுடனே வெளியிலே போனான்.

மஞ்: அவன் வரட்டும்; அவனை அடிக்க வெரட்டுங்கோப்பா.

சாரதா: (வெளியே பார்த்து) அதோ!

[காசி வருகிறான், கையில் ஒரு பை நிறையச் சாமான்களுடன். உள்ளே வந்தவன் நேராகச் சமையலறைப் பக்கம் போக முயற்சி செய்கிறான்.]


சாம்ப: (சீறி) ஏ காசி! இங்கே வா நீ... இன்னிக்கி ரெண்டுலே ஒண்ணு தீரணும்...

காசி: (வந்துகொண்டே) ஸார்! நீங்க ஒண்ணும் சொல்லாதேங்கோ....இப்பத்தான் கணபதியைப் பார்த்துட்டு வரேன். அவன் அந்த எஞ்சினியர் கிட்ட வசவு வாங்கிட்டு, சாம்பாரும், ரசமுமா கொதிக்க விட்டுண்டிருக்கான். நானும் இதோ எல்லாச் சாமானும் வாங்கிண்டு வந்திருக்கேன். இன்னும் ரெண்டு மணி நேரத்துலே சரியான விருந்து தயார் பண்ணிடறேன்.

எல்லோரும்: (வியப்புடன்) என்னது?

காசி: போதும் ஸார், வேலையைக் கொறைச்சுக்கறதுக்காக நாங்க ரெண்டு பேரும் தத்துப் பித்துன்னு என்னமோ செஞ்சுட்டோம். எல்லாரும் மன்னிச்சுட வேண்டியது...இந்த ரொட்டி திங்க ஆரம்பிச்சதிலேருந்து, நான் போடற பொஸையிலேலே கூட 'சாறு ஊறமாட்டேன்னுடுத்து... போதும் இந்த பேக்கரிச் சாப்பாடு!

[சமையலறையை நோக்கிச் செல்லுகிறான் காசி. எல்லோரும் திகைத்துப் போய் நிற்கிறார்கள்.]



கதவைத் திறந்துவிட்டு அலட்சியமாக இரண்டு கைகளாலும் நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு நின்றாள் அந்தக் கிராமத்து அழகி. சொருக்குக் கொண்டை, உயரமும் பருமனுமாக, திணித்துத் திணித்துப் பஞ்சு அடைத்த பட்டுத் தலையணைபோல் வாளிப்பான உடம்பு. திமிர் தெரியும் அழகுக் கண்கள். ஏனென்று கேட்கிற துடுக்குப் பார்வை. அலட்சியம் தவழும் சிரிப்பை மறைக்காத இதழ்கள். கருங்கல்லில் செதுக்கிய சிற்பம்போல் எடுப்பான மூக்கு, முழி. கொஞ்சம் அதிகமான அழகுதான்! தண்ணீரில் எண்ணெய் மாதிரி அந்தக் கிராமத்துத் திமிரோடு அழகு ஒட்டாமல் தெரிந்தது. செருக்கா? விருப்பா? கர்வமா?—ஏதோ ஒன்று அழகுக்கு மீறி, அளவுக்கு மீறி அவள் முகத்தில் தெரிந்தது.

முத்தழகு இதை எதிர்பார்க்கவில்லை. கதவைத் தட்டினபோது இப்படி ஒரு 'பெண் புலி' வந்து திறந்துவிட்டு முறைத்துப் பார்க்கும் என்றும் அவன் நினைக்கவும் இல்லை.

"இதுதானே வீரப்ப மல்லுக்காரர் வீடு?"—என்று கேட்டான் குறட்டில் ஏறித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டே. அவன் சிவந்த பாதங்களில் கறுப்பு நிறத் தோல் செருப்பு எடுப்பாகப் பொருந்தி இருந்தது. அந்தப் பெண் அவன் காலைப் பார்த்துச் சீறினாள். "எந்திரிச்சு வாசப்படிக்கிக் கீழே செருப்பைக் கழட்டிட்டு வந்து உட்காருங்க!"

"ஏனும்? கழட்டாட்டி என்ன செய்வே?"

"ஐயாவுக்கு இந்த வீட்டு வழமுறை தெரியாது போலிருக்கு. ஐயா; பட்டணத்து இங்கிலீசுத் துரையோ! இது சிலம்ப வாத்தியாரு வீடு. வித்தை குடியிருக்கிற இடம், சரசுவதி பீடம்பாங்க... வாசப்படிக்கு அப்பாலே யாரையும் செருப்போட விடறதில்லே இங்கே. இந்த ஊரிலே பச்சைப் பிள்ளையைக் கேட்டாக்கூடத் தெரியுமே இது?"



நிறைகாக்கும் காப்பு

"அப்படியா? நான் பச்சைப் பிள்ளை இல்லே பாரு; அதுனாலேதான் எனக்குத் தெரியாமப் போச்சு. நீ போயி உங்க அப்பாரைக் கூப்பிடு. இப்படியே உட்கார்ந்து இரண்டு வார்த்தை பேசிட்டுப் போயிடறேன்."

"கூப்பிடறது இருக்கட்டும்! முதல்லே கீழே இறங்கி வாசல்லே செருப்பைக் கழற்றிப் போடு ஐயா...!"

"இது புதுச் செருப்பு. சோடி பன்னண்டரை ரூபா. அந்தச் சாக்கடைப் புழுதியிலே போட மாட்டேன். வேணும்னு இங்கேயே காலடியிலே கழட்டிப் போட்டுக்கிறேன். நீ போய் அப்பாரைக் கூப்பிடு."

"இங்கே போட்டாத் தூக்கித் தெரு வாசல்லே எறிஞ்சிடுவேன். தெரியுமில்லே..." — அந்தப் பெண்ணின் கண்களில் சினத்தின் ஆணவம் பொங்கியது.

முத்தழகுக்கு ஆண் பிள்ளையின் தன்மானம் கொதித்தது. அவள் பெண் புலியாக இருக்கலாம். வீரப்ப மல்லுக்காரரின் திமிர்பிடித்த மகளாயிருக்கலாம். ஆனால் அவன் ஆண் புலியல்லவா? அவனும் ஆண் பிள்ளை சிங்கம்தானே? பட்டணத்துக் கல்லூரியில் 'ஆனர்ஸ்' வகுப்பில் வருடம் எழுதி விட்டு — முதல் வகுப்புத் தேர்ச்சியை நம்பிக்கொண்டு வந்திருக்கிறவனல்லவா அவன்? அந்த வெள்ளையுடைக்கும் நாகரிகத் தோற்றத்துக்கும் கொஞ்சமாவது மதிப்புக் கொடுத்துப் போக வேண்டாமா அந்தப் பெண்!

நா. பார்த்தசாரதி

"நான் இங்கேதான் கழற்றிப் போடுவேன்; உன்னும் முடிந்ததைச் செய்து கொள்..." — முத்தழகு செருப்பைக் கழற்றிப் போட்டான்.

குபீரென்று கதவிடுக்கிலிருந்து ஒரு நீண்ட சிலம்பக் கழியை உருவினாள். திண்ணைப்படிக்கு அந்தப்புறமிருந்தே கழியின் இரண்டு செருப்புக்களையும் கோத்துக் தெருவை நோக்கி ஓங்கி வீசினாள். நடுத் தெருவில் மழை பெய்து சேறுமிருந்த அளற்றுக் குழியில் போய்ச் 'சொத்' தென்று விழுந்தன அந்தப் புதுப் பாதரட்சைகள். "போய் எடுத்துக் கழுவிக் கிட்டுப் போங்க" என்று சொல்லி அலட்சியமாகச் சிரித்தாள் அவள்.

"என்ன திமிர் உனக்கு!" என்று அடிபட்ட புலிபோல் சீறிக் கொண்டு பார்த்தான் முத்தழகு.

"அவளோ, சிலம்பக் கழியை இரண்டு கைகளாலும் குறுக்கே பிடித்து மறித்துக்கொண்டு காளி மாதிரி நிமிர்ந்து நின்றாள். ஆண் பிள்ளை அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு வருகிறானே என்ற பயம் கூடவா ஒரு பெண்ணுக்கு இராது?

சும்மா அரட்டிச் சீறிக் கொண்டு பார்த்ததுதான் மிச்சம்! முத்தழகு ஒன்றும் செய்யவில்லை. ஒன்றும் செய்ய முடியாது. பெண் பிள்ளையை அடித்தாலும் அவமானம்; அடி வாங்கினாலோ அதைவிடப் பெரு அவமானம்.

நல்லவேளை! சீற்றத்தோடும், சீற்றத்தைக் காட்டுவதற்குத் தயக்கத்தோடும் அவன் இப்படித் திணறிக்கொண்டிருந்த சமயத்தில் வீரப்பமல்லுக்காரரே உள்ளேயிருந்து வந்துவிட்டார்.

"என்னம்மா அது கூப்பாடு? யாரோட வம்பு பண்ணிகிட்டு நிக்கிறே?"... என்று கேட்டுக் கொண்டே வந்தார் வீரப்ப மல்லுக்காரர்.

"அடேடே! பண்ணையார் வீட்டுத் தம்பியா? வாங்க; சுகந்தானே? இப்ப சிலாக்கும்; பட்டணத்திலேயிருந்து என்னிக்கு வந்தீங்க?..." — வீரப்ப மல்லுக்காரர் விசாரித்துக் கொண்டே அவனுக்கு எதிர்த்தாற்போல் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். என்ன தம்பி? அதுங்கிட்ட ஏதாவது வாக்குவாதங்களா? கொஞ்சம் துடுக்கா எடுத்தெறிஞ்சு பேசியிருக்கும். அதுக்குச் சுபாவமே அப்படி. மனசிலே வைச்சுக்கிடாதீங்க..."

அவருடைய சமாதானம் இன்னும் எரிச்சலைக் கிளப்பியது அவனுக்கு. அந்த நிலையில் அவரிடம் அதிகம் பேசிக் கொண்டிருப்பதற்கு நாணமும், பயமும் அடைந்தான் அவன். நேரடியாக வந்த விஷயத்தைத் தொடங்கினான். "அப்பா உங்களைப் பார்த்திட்டு வரச்சொன்னாங்க. 'வட்டி' நிறையச் சுமந்து போச்சாம். அசலைத் தீர்க்காட்டாலும், வட்டியையாவது அப்பப்ப 'பைசல்' செய்திட்டா நல்லாருக்குமின்னாங்க..."

"நான் மட்டும் வேண்டாமின்னு சும்மா இருக்கேன். ஏலாமைதான் காரணம். இந்த வருஷம் எனக்கு வெள்ளாமை ஒன்னும் சுகமில்லே. சாவியும், போக்குமா, ஏமாத்திடிச்சு. எப்படியாச்சும் பார்த்துக் 'கொடுத்திடணும்'னு தான் இருக்கேன்."

"சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்...வரேன்..." எழுந்திருந்தவன், 'உங்க பெண்ணுக்குத் துணிச்சலும், துடுக்கும் ரொம்பத்தான் அதிகமாயிருக்கு. கொஞ்சம் அடக்கியே வையுங்க' என்று சொல்ல நிமிர்ந்தான். திண்ணைப் படியில் கையூன்றி மறுபடியும் அவள் வந்து நிற்பதைக் கண்டதும் அவன் வாயில் வார்த்தைகள் வரவில்லை. தனியாக அவமானப்பட்டது போதாதென்று மறுபடியும் அவருக்கு முன்னால் அவமானப்பட விரும்பவில்லை அவன். தான் அவமானப்பட்ட விவரம் அவருக்குத் தெரியவிடுவதற்கும் அவன் தயாராயில்லை. சேற்றில் விழுந்திருந்த புதுச் செருப்புக்களை எடுத்துக் கொள்ளாமலே வெறும் காலோடு தெருவில் இறங்கி விறுவிறுவென நடந்தான். திண்ணைப்படியில் அவள் கலீரென்று இரைந்து சிரித்த சிரிப்பு அவன் செவிகளை எட்டி ஆண்மையைக் கொதிக்கச் செய்தது. அந்தச் சிரிப்பை ஒட்டி, "என்னம்மா சிரிப்பு வேண்டிக் கிடக்கு? கடன் வாங்கின லட்சணந்தான் சிரிப்பாச் சிரிக்குதே! நீ வேறே சிரிக்கணுமா?" என்று மல்லுக்காரர் மகளைக் கடிந்து கொண்ட குரலும் அவனுக்குக் கேட்டது.

'ஒரு பெண் பிள்ளைக்கு இத்தனை திமிரா? ஒரு விநாடி நேரமாவது இந்தத் திமிரை அடக்கிப் பார்த்தாலல்லவா ஆண் பிள்ளை என்ற வார்த்தைக்கு ஏதாவது அர்த்தம் இருக்க முடியும். 'நான் பொம்பளே; என்னை விட்டுடுங்க' என்று கண்ணில் நீர் மல்க அவள் கெஞ்சிக்கொண்டு மண்டியிடும்படி ஒரு நிமிஷமாவது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திப் பார்த்துவிட வேண்டும்' என்று கொதித்தது முத்தழகுவின் நெஞ்சம். பெரிய பஞ்சு மூட்டையில் ஒரு பொறி நெருப்பு விழுந்து சிதறினமாதிரி அந்த அவமானச் சம்பவம் அவன் மனத்துள்ளிருந்து விலகாமல் ஒரு மூலையில் கனிந்து கனன்று கொண்டேயிருந்தது.

2

விடுமுறையை நிம்மதியாகவும், இன்பமாகவும் கழிக்கலாமென்று கிராமத்துக்கு வந்த முத்தழகுவுக்குக் கிராமத்தில் கால் வைத்த முதல் நாளே இப்படிக் கடன் வசூலிக்கப்போன இடத்தில் ஒரு பெண் பிள்ளையிடம் அவமானப் பட நேரிடுமென்று தெரியாது.

மறக்க முடியாமல் அதே நினைவில் கொதித்துக் கொண்டிருந்த மனத்தை அமைதிப்படுத்த இயலாமல் சாயங்காலம் மாந்தோப்புப் பக்கம் உலாவப் போனான் அவன். ஊரிலேயே பெரிய மாந்தோப்பு அது. அவர்களுடைய பண்ணைக்குச் சொந்தமானது. மரங்கள் அடர்ந்து இருண்டு பசுமை செறிந்தது. தோட்டத்தின் நடுவில் நான்கு கமலை கட்டி நீர் இறைப்பதற்கு வசதியான பெரிய கிணறு.

கிணற்றைச் சுற்றிலும் பச்சரிசி மாங்காய் என்ற வகையைச் சேர்ந்த மாமரங்கள். உயர்ந்த ரக 'பிஸ்கட்டை'ச் சுவைத்துச் சாப்பிடுகிறமாதிரி அந்த மாங்காய்க்கு ஒரு தனி ருசி உண்டு. முத்தழகு பச்சரிசி மாமரத்தடியில் போய் உட்கார்ந்தான். உட்கார்ந்தபடியே கைக் கெட்டுகிறாற் போலிருந்த ஒரு மாங்காயைப் பறித்துச் சுவைக்க ஆரம்பித்தான்.

'சொத்'தென்று முத்தழகுவின் பிடரியில் ஒரு மாங்கொட்டை விழுந்தது. "சே! சே! வெளவும், அணிலுமே, இந்தத் தோப்பிலே முக்கால்வாசி மாங்காயை வேட்டு வச்சிடுது" என்று முணுமுணுத்தவாறே பிடரியைத் தடவி விட்டுக் கொண்டான் அவன்.

மறுபடியும் நன்றாகக் கடிக்கப்பட்ட கொட்டை ஒன்று 'ணங்' கென்று அவன் உச்சியண்டையில் விழுந்தது. "இதென்ன வம்பு? இந்தத் தோப்பிலே இவைகள் தொல்லை அதிகமாப் போச்சு" என்று எறிவதற்காகக் கீழே குனிந்து ஒரு கல்லை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தான் அவன்.

நிமிர்ந்தவன் அப்படியே திகைத்து நின்றான். மரக்கிளைமேல் வெளவி இல்லை. வீரப்பமல்லுக்காரர் வீட்டுப் 'பெண்புலி' படு அட்டகாசமாக உட்கார்ந்து கால் நீட்டி மாங்காயைக் கடித்துக் கொண்டிருந்தது. ஒரு விநாடி மரக்கிளையில் அவள் ஒயிலாகவும், அநாயாசமாகவும் உட்கார்ந்திருந்த தோற்றத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டு நின்றான் முத்தழகு. ஆனால் மனித இயற்கையான இந்தச் சிறிய பலவீனமெல்லாம் ஒரே ஒரு விநாடிதான். அடுத்த விநாடியே, 'அவள் தன்னை அவமானப்படுத்திய முரட்டுப் பெண் — அவள்மேல் தன் கோபத்தை முழு அளவில் ஒன்று திரட்டிக் காட்டவேண்டும்' என்ற உணர்ச்சிகளை மிகவிரைவாக அடைந்தான் அவன். முகத்தில் கடுமை பரவிப் படிந்தது.

"கீழே இறங்கி வா. சொல்லுறேன். இப்படிச் சர்வ சுதந்திரமாக ஏறி உட்கார்ந்து மாங்காய் பறித்துத் தின்பதற்கு இது உங்கள் அப்பன் வீட்டுத் தோப்பு என்ற எண்ணமோ? உன்னை நுழைகிற போதே காலை முறிக்க ஆளில்லாததனால் தானே இப்படித் துணிந்து, மாங்காய் திருட முடிகிறது?" என்று தோப்பே அதிரும்படி கூப்பாடு போட்டான்.

அவனையோ, அவன் கூப்பாட்டையோ, இலட்சியமே செய்யாதவள்போல் மெல்ல மரத்திலிருந்து இறங்கினாள் அவள். பதற்றமோ, பயமோ சிறிதுகூட இல்லை. இரண்டு கைகளையும் இடுப்பில் ஊன்றிக் கொண்டு அவனுக்கு முன்னால் வந்து நிமிர்ந்து நின்றாள் அவள். "ஐயா, ஆண் பிள்ளைச் சிங்கமே! எங்கள் அப்பன் வீட்டில் இப்படி ஒரு தோப்பு இருந்தால் இரண்டு மாங்காய்க்காக மட்டுமரியாதை இல்லாமல் பேச மாட்டோம். உங்கள் தோப்புக்கு வருகிறவர்களின் கால் ஒன்றும் முருங்கைக் குச்சி இல்லை,முறித்து விடுவதற்கு!"

"சீ! வாயைப் பாரு...திருடித் தின்னிட்டுப் பேச்சு வேறே....மரியாதை தெரிஞ்சவள் நீதான் என்கிறதைக் காலையிலே உங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப நல்லாக் காட்டினியே!"

"கொஞ்சம் பேச்சை அளந்து பேசுங்க. பணத்துக்குத் தான் உங்ககிட்ட கடன் பட்டிருக்கோம். மட்டு, மரியாதை, மானம், இதுக்கெல்லாம் கடன் படலே."

"அம்மா, பெண்புலியே! இந்தத் திமிர்ப் பேச்செல்லாம் உங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டு பேசலாம். இங்கே பேசினால்..."

"பேசினால் என்ன செய்வீங்களாம்?" அவன் கைகள் அவள் பிடரியை நோக்கிச் சினத்தோடு உயர்ந்தன.

"என்ன செய்வேனு? இதோ இப்படித் தான் செய்வேன்!"—மனத்திலும் கைகளிலும் ஏற்பட்ட ஒரு வெறியில் தான் என்ன செய்கிறோம் என்பதையே சிந்திக்

காமல் அவளைத் தள்ளிவிட்டான் முத்துமுரு. பின்புறம் நீர் நிரம்பிக் கிடந்த கிணற்றில் விழுந்தாள் அவள். ஏதோ அசட்டுத் துணிச்சலில் அதைச் செய்து விட்டாலும் அவன் உடம்பு பயத்தால் நடுங்கியது. நீரில் அவள் விழுந்ததால் எழுந்த ஓசையைக் கேட்டபோது அவனுக்குத் திகில் பிடித்தது. 'நீந்தத் தெரியுமோ, தெரியாதோ,—தான் முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளிவிட்டதன் விளைவு என்ன ஆகுமோ?' என்று நிதானமாக நினைத்துப் பார்த்தபோது தான் முரட்டுத்தனமாக ஏதோ பெரிய தப்புக் காரியம் செய்துவிட்டதை உணர்ந்தான்.

எப்படியாவது தன்னைத் தப்பிக்கச் செய்துகொண்டு ஓடிவிட்டால் போதுமென்று ஒரு கோழைத்தனமான முடிவு அவன் மனத்தில் தோன்றியது. திரும்பிப் பாராமல் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு விரைந்தான் முத்துமுரு. உள்ளங் காலில் முறிந்து நின்று வெளிவராத முள்ளைப்போல் அவளைக் கிணற்றில் தள்ளி விட்டு வந்த குற்ற நினைவுமட்டும் மனத்தில் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. அவன் மனமும் உடம்பும் ஒருநிலை கொள்ளவில்லை. முகத்தில் வேர்த்துக் கொட்டியது. உள் வீட்டுக்குள் போய் ஒரு இருண்ட மூலையில் ஈஸிசேரைப் போட்டுக்கொண்டு சாய்ந்தான். அவனுடைய மனக் கண்களுக்கு முன்னால் பயங்கரமான கற்பனை நிழல்கள் ஆடின.

வீரப்ப மல்லுக்காரரும், அவரிடம் சிலம்பம் படித்த சீடப் பிள்ளைகளும் கத்தியும், வெட்டரிவாளும், பாலாக் கம்பும், தூக்கிக் கொண்டு, கலகக்காரர் களைப் போல் அவன் வீட்டை நோக்கித் 'திமுதிமு' வென்று ஓடி வருகிறார்கள். 'ஒரு கன்னிப் பெண்ணைத் தொட்டுப் பிடித்துக் கிணற்றிலே தள்ளுவதாவது? வெளியே இழுத்துக்கொண்டுவா, அந்தப் படித்த நாய்ப் பயலே. பெண் பிள்ளையைத் தொட்ட கையை முறித்துப் போட்டு விடுகிறேன்' என்று வீரப்ப மல்லுக்காரர் உறுமுகிறார். ஊரே அவரோடு ஒன்று சேர்ந்து கொண்டு நியாயம் கேட்டு அவன் வீட்டுக்கு முன்வந்து கூடிக் கொதித்து நிற்கிறது.

'பிடித்துத் தள்ளியதில் இசைவு பிசகாகக் கிணற்றுச் சுவரிலாவது பாறையிலாவது, மோதி அடிபட்டிருக்குமோ? அல்லது தண்ணீரைக் குடித்து, முங்கி, மூழ்கி, மிதந்து விட்டாளோ?'

வெகுநேரம் அசையாமல் இருளில் கண்ணை மூடியவாறு ஈஸிசேரில் கிடந்தான் அவன். உடம்பு நெருப்பாய்ச் சுட்டது. கண்கள் 'கபகப'வென்று எரிச்சல் எடுத்தன. தலையை வலித்தது. ஜன்னி கண்டமாதிரி ஒரு நடுக்கமும், குளுகுளுப்பும் ஏற்பட்டிருந்தன.

'நீ கொலை செய்து விட்டாய்! அநியாயமாக ஒரு பெண்ணைக் கைகூசாமல் அத்தனை உயரத்திலிருந்து கிணற்றில் பிடித்துத் தள்ளலாமா? பாவி! பாதகா !' என்று அவன் மனமே அவனை இடித்துக் காட்டுவது போலிருந்தது. ஈஸிசேரில் உடம்பு தூக்கித் தூக்கிப் போட்டது!

"அடபாவி! உடம்பு ஏன்டா இந்தக் கொதி கொதிக்குது? ஏன்டா இப்படிப் பிசாசு அறைபட்டவன்மாதிரி முழிக்கிறே! என்னடா உனக்கு? தோப்புக்குப் போனேன்னியே....ஏதாவது பயந்துகிட்டியா?" என்று அவனுடைய அப்பா வந்து பார்த்துத் தடபுடல் படுத்தினார்.

"தோப்புலே கமலைக் கிணற்றண்டே போனியா? அங்கேதான் பண்ணைக்காரச் செங்கான் நாத்துக்கிட்டுச் செத்தான்!" என்று தாமாகவே வேறு காரணம் கற்பித்துக் கொண்டு பதறினார் அவனுடைய தந்தை.

இரவு முழுவதும் முத்துமுருக்கு உறக்கம் வரவில்லை. 'நாளைக்கு விடிந்தால் ஊருக்கெல்லாம் தெரிந்துவிடும். அத்தனை பேரும் அந்தக் கிணற்றுக்குத்தானே குளிக்கப் போவார்கள்? காலையில் முதல் முதலாகக் குளிக்கப் போகிறவன் அவள் மிதப்பதைப் பார்ப்பான். அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி மல்லுக்காரரிடம் சொல்லுவான்.'

அப்புறம்? அப்புறமென்ன? சந்தி சிரிக்க வேண்டியதுதான். விடிகிற நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. மணி நாலரை. இன்னும் சிறிது நேரத்தில் வீடு கலகலவென்று விழிப்புப் பெற்று விடும். ஊர் விழிக்குமுன் எங்கேயாவது ஓடிப்போய் விட்டால் என்ன? ஐந்தே கால் மணிக்கு வடக்கே போகிற ரயில் ஒன்று இருக்கிறது.

முத்துமுரு போர்வையை உதறித் தள்ளி விட்டுப் படுக்கையிலிருந்து எழுந்தான். அவன் மனம் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டது.

ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிற போக்கில் இன்னொரு சந்தேகத்தையும் தீர்த்துக் கொண்டு போய் விட்டால் நல்லதென்று அவனுக்குத் தோன்றியது. அவனுடைய சந்தேகப்படி நடந்திருக்கும் பட்சத்தில் சமீப காலத்தில் ஊர் திரும்ப வேண்டிய அவசியமே அவனுக்கு இருக்காது. எங்கேயாவது ஓடித் தலை மறைவாக இருந்து விடவேண்டியதுதான்.

ஸ்டேஷனுக்குப் போகிற வழியில் தான் அந்த மாந்தோப்பு இருந்தது. போகிறபோக்கில் ஒரு நடை உள்ளே



நுழைந்து பார்த்துவிட்டுப் போய்விட விரும்பினான். கிணற்றில் ஒன்றும் மிதப்பதாகத் தெரியாவிட்டால் கவலைக்கிடமாக எதுவும் நடக்கவில்லை என்று சந்தோஷ திருப்தியோடு இரயில் ஏறலாம் என்று எண்ணினான் அவன்.

மாந்தோப்புக்குள் நுழைந்தான் முத்தழகு. இருள் பிரிந்து ஒளி புலர்ந்தும் புலராமலும் இருக்கிற மங்கல் நேரம். நடந்து உள்ளே போவதற்கே பயமாக இருந்தது. கமலைக் கிணற்றடியில் பண்ணைக்காரச் செங்கான் நாந்துகொண்டு செத்த விஷயம் வேறு இந்தச் சமயம் பார்த்து நினைவுக்கு வரவா வேண்டும்? மருளும் மனமும், மிரண்ட கண்களும், தயங்கிய நடையுமாக அவன் கிணற்றடிக்குச் சென்று நின்றான். பயத்தினாலும், பதற்றத்தினாலும் வேகமாக அடித்துக் கொள்ளும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மெல்லக் குனிந்து கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான்.

'அப்பாடா!' கிணற்றில் எதுவும் மிதக்கவில்லை. நிம்மதியாக மூச்சு வந்தது முத்தழகுக்கு. ஆனாலும் ரயிலேறி ஓடிப் போய் விடவேண்டுமென்ற அவசரமும், பரபரப்பும் மட்டும் தணியவே இல்லை.

"செத்து மிதந்தால்தான் குற்றமா? கல்லிலோ, பாறையிலோ, மோதிக் காயம் பட்டால்தான் குற்றமா? திருமணமாகாத பெண்ணைத் தனியாக இருக்கும் போது ஓர் ஆண் பிள்ளை தொட்டுக் கிணற்றில் தள்ளியதே பெருங் குற்றம் தானே? அவள் ஆயிரம் குற்றங்கள் செய்து என்னை ஏளனமாகப் பேசியிருக்கலாம், அவமானப்படுத்தி யிருக்கலாம்! ஆனால் அதை யாரும் குற்றமாக ஒப்பமாட்டார்களே! நான் செய்ததுதானே குற்றமாகத் தோன்றும்?"

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ரேடியம் டயல் நீல ஒளியை உமிழ்ந்தது. மணி ஐந்து அடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்தது. 'ரயிலுக்கு இன்னும் பத்தே நிமிஷம்தான் இருக்கிறது. புறப்பட்டுவிட வேண்டியதுதான்' என்று கிணற்றடியிலிருந்து திரும்பியவன் தனக்குப் பின்னால் கிணற்று மேட்டில் நின்று கொண்டிருந்த உருவத்தைப் பார்த்தவுடன் பேயறை வாங்கியவன் போல் திகைத்துத் திடுக்கிட்டு நின்றான். அவன் உடம்பு பதறிப் பயந்து நடுங்கியது.

கைகளை இடுப்பில் ஊன்றிய மிடுக்குடன் அன்று மாலை அவன் கிணற்றில் தள்ளுமுன் நின்றாளே;—அதே கம்பீரத் தோற்றத்தில் வீரப்ப மல்லுக்காரர் மகள் அங்கு நின்று கொண்டிருந்தாள்.

இப்போது அவளுடைய வலது கையில் பளபளவென்று மின்னும் வெட்டரிவாள் ஒன்றும் இருந்தது. கோபம் உள்ளடங்கிய கள்ளச் சிரிப்பு அவள் முகத்திலும், இதழ்களிலும் தெரிந்தது. வெறியுடன் பழி வாங்க வந்து நிற்பவள் போல் நின்றாள் அவள். வந்து நிற்பது, அவளா, அவளுடைய பிசாசா என்று கூடச் சந்தேகம் ஏற்பட்டது அவனுக்கு.

"பண்ணையார் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் இவ்வளவு சீக்கிரமாக எழுந்திரிச்சிக் குளிக்க வரலாமா? பன்னிரண்டு நாழிகை வரை தூங்கிட்டுக் கிடக்க வேண்டாமா?" குத்தலாகக் கேட்டுக் கொண்டு விளையாட்டாக வெட்டரிவாளை வலது கையினுள் சுழற்றிய வண்ணம் அவனை நெருங்கி வந்தாள் அவள். குளிரக் காற்றில் ஆடுகிற கோரைத் தட்டைக் குச்சி மாதிரி அவன் உடம்பு வெடவெடத்தது. தன்னால் கிணற்றில் பிடித்துத் தள்ளப் படும்போது நேற்று அவள் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தாளோ, அதே இடத்தில் இன்று தான் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான்.

அவள் தன்னைப் பதிலுக்குப் பதில் கிணற்றில் பிடித்துத் தள்ளிவிட்டால் தனக்கு நீந்தக்கூடத் தெரியாதென்பதை நினைத்துக் கொண்டான். அவள் கையில் இருக்கிற வெட்டரிவாளைக் கண்டு குலை நடுங்கினான் அவன்.

'குதிகால் பிடரியில் பட ஒரே ஓட்டமாக ஓடிவிடலாமா?' என்று தோன்றியது. அப்படி ஓடுவதற்கும் வழி இல்லை. பின்னால் கிணறு: முன்னால் அரிவாளோடு அந்தப் பெண் புலி. நாக்குழறித் தடுமாற்றத்தோடு பேச ஆரம்பித்தான்.

"நேற்று நான் வேணுமின்னு அப்படிச் செய்யலே. ஏதோ கை தவறி.....தெரியாமே கிணற்றிலே பிடித்துத் தள்ளி விட்டேன்...உங்க அப்பா கிட்டச் சொல்லிடாதே...என்னை மன்னிச்சிடு..."

இதைக் கேட்டு அந்தத் தோப்பே அதிரும்படி இரைந்து சிரித்தாள் அவள்.

'இவள் ஏன் இப்படிச் சிரிக்கிறாள்? என்னுடைய மன்னிப்பை ஏற்றுக் கொள்ளாமல் எப்படியும் பழி வாங்கியே தீருவதென்று உறுதி செய்து கொண்டுதான் இப்படிச் சிரிக்கிறாளோ?' என்றெண்ணி மேலும் நடுங்கினான். கேட்பதற்குப் பயந்து கொண்டே, "நீ ஏன் இப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டு வைத்தான்.

"நீங்க என்னை எப்போது கிணற்றில் தள்ளினீங்க? ஏதாவது சொப்பனம் கண்டீங்களா? நான் குளிச்சிட்டுப்போகத் தான் நேற்று இங்கே வந்திருந்தேன். எனக்கு நல்லா நீச்சத் தெரியும்? கிணற்றுக்கரை மேலே இந்தப் பச்சிலி மாமரத்திலே ஏறி அங்கிருந்து தண்ணியிலே குதிக்க நீந்துவேன். அதுக்காகத்தான் மரத்துமேலே ஏறினேன். குதிக்கறதுக்கு முன்னாலே ஒன்னு ரெண்டு மாங்காயை குறி பார்த்தேன். நீங்க வந்தீங்க. ஏதோ சத்தம் போட்டீங்க. கீழே இறங்கிவந்து நானும் பதிலுக்குச் சத்தம் போட்டேன். உடனே 'இந்தத் திமிர்ப் பேச்செல்லாம் பேசினால் உன்னைச் சும்மாவிடமாட்டேன்' அப்படின்னீங்க. 'என்ன செய்வீங்களாம்?' என்று பதிலுக்குக் கேட்டேன். 'இதோ என்ன செய்கிறேன் பாரு!' என்று கையை ஓங்கிட்டுத் தொடவந்தீங்க. நீங்க எங்கே தொட்டுடுவீங்களோ என்கிற கூச்சத்திலே நானே தண்ணியிலே குதிச்சிட்டேன். கிணத்திலே நல்லாத் துளைந்து நீச்சலடிச்சுக் குளிச்சிட்டுக் கரையேறி வந்து பார்த்தேன். உங்களைக் காணலே. இதோ இந்தக் கைக்குட்டையை இங்கே போட்டுட்டுப் போயிட்டீங்க..." என்று ஒரு கைக்குட்டையை அவனிடம் நீட்டினாள்.

அவள் சொன்ன பதிலைக் கேட்டு அவன் மலைத்துப் போய் நின்றான். அவள் கிணற்றில் குதித்த அதிர்ச்சியில் தானே பிடரியைப் பிடித்துத் தள்ளிவிட்டதாகப் பரபரப்படைந்து பதறி ஓடியிருக்க வேண்டுமென்று அப்போதுதான் அவனுக்குத் தோன்றியது. தன்னுடைய வடிகட்டின கோழைத்தனத்தை எண்ணித் தானே வெட்கப்பட்டுக் கொண்டான் முத்தழகு. அவள் கூறியவற்றைக் கேட்டபின் அவனுக்கு அவளிடமிருந்த பயமெல்லாம் போய் விட்டது. முதல் நாள் அவளுடைய வீட்டில் பட்ட சிறு அவமானம் கூட மறந்து விட்டது.

அவளைக் கிணற்றில் தள்ளிவிட்டோமென்ற வீண் பிரமையினால் விடிய விடியத் தான் பட்ட பயத்தையும் ஊரை விட்டே ஓடி விடலாமென்று இருளோடு ரயிலுக்குப் புறப்பட்டதையும் சிரித்துக் கொண்டே அவளிடம் சொல்லிவிட்டான் முத்தழகு. எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அவளும் சிரித்தாள்.

"முதல்லே அந்த வெட்டரிவாளைக் கீழே போடு. உன்னை அதோட சேர்த்துப் பார்க்கறப்பப் பயமாயிருக்குது. நேற்று இரவு பூராவும் பயந்தது போதும்" என்றான் முத்தழகு.

"இராத்திரிப் பூரா ஏன் நீங்க பயந்தீங்களாம்?"

"ஏனா? கலியாணமாகாத உன்னை நான் தொட்டுப் பிடித்துக் கிணற்றிலே தள்ளிவிட்டேன்னு நீ உங்கப்பா கிட்டச் சொல்லிட்டா, அவர் ஊரெல்லாம் திரட்டிக்கிட்டு அரிவாளும், கம்புமா, எங்க வீட்டு வாசல்லே வந்து நிக்கப் போறாரேன்னுதான்!"

"அப்படி நினைக்கப் பயந்தது நிசந்தானே?"

"நிசந்தான். ஏன்இப்படிக்கேட்கிறே?"

"இல்லே; எங்கப்பா அடிக்கடி சொல்லுவாரு. 'எப்பவும் பொண்ணுங்கிறவள் நெருப்பு மாதிரி. ஆனாதான் நெருப்பை நெருங்கவிடாத குணம். பொண்ணுக்கு நிறைன்னு ஒன்னு இருக்கு. அந்த நிறை அவளுக்குக் காப்பு. அந்த நிறை தான் ஆம்பிளையை அவளிடம் நெருங்கவிடாமக் காக்குது. ஆம்பிளை இந்த நிறைக்கு அருகில் வரத்தான் பயப்படுகிறான். ஒரே ஒருத்தன்தான் நிறையை மீறணும். அவன் தான் புருஷன்'—அப்பிடிம்பாரு."

"அப்போ நீ உன்னை நெருப்புன்னு சொல்றே?" என்று சிரித்துக் கொண்டே அருகில் நெருங்கி அவள் தோளைத் தொட்டான் முத்தழகு. அவள் அசையவில்லை.

"நெருப்புச் சுடவில்லையே?"

"உங்களைச் சுடாது!"

"ஏனோ?"

அவள் தலை குனிந்தாள். அவள் முகம் மலர்ந்தது. "நான் வரேன். வெளிக்கு முன் வெட்டிட்டுப் போகணும். அதான் அதிகாலையிலே எழுந்திரிச்சிப் புறப்பட்டேன்..." என்று நகர்ந்தாள் அவள்.

"போயிட்டுவா! இனி மேல் தினம் உங்க வீட்டுப் பக்கம் வட்டி கேட்க வருவேன்..."

"வாருங்க... ஆனால் செருப்பு பத்திரம்..." வேடிக்கையாகப் பதில் சொன்னாள் அவள்.

இரண்டு பேருடைய சிரிப்பொலியும் அமர்க்களமாகக் காற்றில் கலந்தது.

'இந்த முரட்டுப் பெண்ணுக்குள் இத்தனை மென்மையான இதயம் இருக்கிறதா?' என்று வியந்துகொண்டே அவள் கொடுத்த கைக்குட்டையைச் சட்டைப் பைக்குள் வைக்கும்போது அவன் மனம் முழுமையாக நிறைந்தது. விரைவில் அந்த நிறையைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள விரும்பினான் அவன்.

வாழ்வு மலர்ந்தது

மாயாவி

பூனா - ஷோலாப்பூர் எக்ஸ்பிரஸ் பஸ் புழுதியைப் பரப்பிக் கொண்டு குருடுவாடி ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் ஸ்டேஷனில் வந்து நின்றது. யமுனா கையில் சிறு பெட்டி ஒன்றுடன் பஸ்ஸிலிருந்து வேகமாக இறங்கி, நேரே டிக்கட் கொடுக்கும் இடத்துக்குச் சென்று பண்டரீபுரத்துக்குப் போகும் கடைசி பஸ் போய் விட்டதா என்பதை விசாரித்தான். அது போய்விட்டது என்பதை அறிந்ததும், அவன் முகம் மிகுந்த ஏமாற்றத்தைப் பிரதிபலித்தது.

அன்று என்னவோ அவன் எல்லாவற்றையுமே தவற விட்டுக் கொண்டிருந்தான். மறுநாள் காலையில் எட்டு மணிக்கு முன் அவன், பண்டரீபுரத்தில் முகாமிட்டிருக்கும் சமூக சேவா தளப் பிரதம அதிகாரியின் முன் 'ஆஜர்' ஆக வேண்டும். அங்கே இன்னும் சில தினங்களில் ஏதோ ஒரு 'மேளா' நடக்க இருக்கிறதாம். அந்த மேளாவுக்கு வரும் பக்த கோடிகளுக்கு உதவும் வகையில் மாதிரி தொண்டர் படை ஒன்றைத் திரட்டி நடத்துவதற்காக அவனுக்கு அவசர அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அந்த மேலிடத்து உத்தரவை அவன் பார்த்த போதே பிற்பகல் நாலு மணி ஆகி விட்டது. ஐந்தரை மணிக்குப் பூனாவிலிருந்து புறப்படும் பம்பாய்-சென்னை எக்ஸ்பிரஸ் ரயிலைப் பிடித்தால்தான் குருடுவாடி ஜங்ஷனிலிருந்து கிளம்பும் கடைசி மாற்று ரயிலில் ஏறி, மறுநாள் அதிகாலையில் பண்டரீபுரம் போய்ச் சேரமுடியும்.

இப்படித் தன்னுடைய பிரயாணத்துக்குப் போதிய அவகாசம்கூட கொடுக்காமல் உத்தரவு அனுப்புவார்களா என்றால் அது அரசாங்கத்தின் தவறன்று. அவர்கள் உத்தரவை முதல் நாளே அவனுக்குக் கிடைக்கும்படியாகத்தான் அனுப்பியிருந்தார்கள். ஆனால் உத்தரவு வந்த சமயத்தில் யமுனா வீட்டில் இல்லை. நகரின் மராத்தி ரோட்டிலிருந்த அவனுடைய சிநேகிதி வீட்டில் சத்யநாராயணபூஜைக்கு அழைத்திருந்தார்கள். அதற்காக முன்னாள் மாலையே போனவன், அன்றிரவையும், மறு நாள் பகலில் பெரும் பொழுதையும் அங்கேயே செலவிட்டு விட்டு மாலையில்தான் சோமவார்பேட்டையிலிருந்த தன் வீட்டுக்குத் திரும்பிவந்தான். நியாயமாக, சமூக சேவா தளத்தின் பிராந்திய அதிகாரிகள் எந்த நிமிஷமும் எங்கும் தொண்டாற்றப் புறப்படத் தயாராக இருக்க வேண்டுமென்று விதி இருந்தது. யமுனாவும் முன்பெல்லாம் இதற்காகவே வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இருந்தான். ஆனால் இப்பொழுது அவனுக்கு இந்த வேலையே அலுத்து விட்டது.

திக்கற்று நின்றபோது பிழைப்புக்கு ஏதாவது வழி வேண்டுமேயென்று அவன் சமூக சேவைப் பயிற்சி பெறுபவர்களுக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் வழங்கி வந்ததனால், பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் மூன்றாண்டு காலம் கட்டாயமாகச் சமூக சேவாதளத்தில் தொண்டாற்றியாக வேண்டியிருந்தது. 'மூன்றாண்டுகள் என்ன? என் உயிருள்ள வரையில் இனி நான் சமூகத் தொண்டாற்றித்தான் மனச் சமாதானம் பெற வேண்டும்' என்று அப்பொழுது எண்ணினான் யமுனா. ஆனால் அந்த மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள்கூட இன்னும் முடியவில்லை; அதற்குள் அவனுக்கு இந்தப் பிழைப்பு அலுத்து விட்டது. ஆம்! அவன் இம்மாதிரிக் கடினமான வாழ்வுக்குப் பழக்கப்பட்டவன் இல்லை. அப்படி வாழ்ந்தாக வேண்டிய நிலைகூட அவனுக்கு ஏற்பட்டிராது. ஆனால், என் செய்வது? விதி அவனை இதில் கொண்டு தள்ளி விட்டது. விதியின் செயல்களை மனிதர் அனுபவிக்காமல் உதறிவிட முடியுமா?

யமுனா உத்தரவைப் படித்ததும், பரபரப்பாகச் சில துணிமணிகளைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டு ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் ஏறிப் பூனா ஸ்டேஷனுக்கு ஓடோடியும் வந்தான். ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! அவன் ஸ்டேஷனுக்கு வருவதற்கும் சென்னை எக்ஸ்பிரஸ் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது! உடனே அவன் பூனா ஷோலாப்பூர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸைப் பிடிக்க பஸ் ஸ்டாண்டுக்கு விரைந்தான். அதில் சென்றால் இரவு பத்து மணி அளவில் குருடுவாடி போய் விடலாம். பத்தரைக்குத்தான் பண்டரீபுரம் பாஸஞ்சர்



கிளம்புகிறது. எப்படியும் அதற்குள் போய் விடலாமென்றுதான் அவள் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தாள். எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் நல்ல வேளையாக இடமும் கிடைத்தது. ஆனால் மீண்டும் துரதிர்ஷ்டம் குறுக்கிட்டது. பாதிவழியில் பஸ் பழுதாகி விட்டது!

பஸ் பழுது பார்க்கப்பட்டுப் புறப்பட இரண்டு மணி நேரம் ஆகி விட்டது. டிரைவர் வேகமாகத்தான் வண்டியை ஓட்டினான். இருந்தாலும் பண்டரிபுரம் பாஸஞ்சரைப் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை யமுனாவுக்கு அற்றுப் போய் விட்டது. ஆனால் எக்ஸ்பிரஸ் பஸ்ஸின் கண்டக்டர் அவளுக்கு நம்பிக்கை ஊட்டினான். பாஸஞ்சரைத் தவற விட்ட பிரயாணிகளின் சௌகரியத்துக்காக இரவு பதினொரு மணிக்குக் குருடுவாடியிலிருந்து பண்டரிபுரத்துக்குக் கடைசி பஸ் ஒன்று விடப்படுகிறதென்று அவன் சொன்னான். அந்த பஸ் சாதாரணமாகப் பூனா-கோலாப்பூர் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் வரும் பிரயாணிகளுக்காகக் காத்திருப்பது வழக்கமாம். அதில் அவள் நிச்சயமாகப் போய் விடலாம் என்றான் அவன். ஆனால் இங்கேயும் யமுனாவின் துரதிருஷ்டம் அவளைச் சதி செய்து விட்டது. பண்டரிபுரத்துக்குச் செல்லும் அந்தக் கடைசி பஸ் எக்ஸ்பிரஸ் பஸ்ஸுக்காக நெடுநேரம் காத்திருந்து விட்டு, அது வராததால் சிறிது நேரத்துக்கு முன்தான் புறப்பட்டுச் சென்றிருந்தது.

★

இப்பொழுது யமுனாவுக்கு வேறு வழியே இல்லை; அவள் இன்றிரவைக் குருடுவாடியில்தான் தள்ளியாக வேண்டும். காலை ஏழரை மணிக்குப் புறப்படும் ரயிலையோ பஸ்ஸையோ பிடித்துப் பதினொரு மணி அளவில்தான் பண்டரிபுரம் போய்ச் சேர முடியும். பிரதம அதிகாரி புதியவர், மிகவும் கண்டிப்பானவர் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். கோபித்துக் கொண்டாலும் கொள்ளலாம். ஆனால் அவள் என்ன வேண்டுமென்று தாமதமாகப் போகிறாள்? தவிர, நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் தன்னை, இரண்டு மூன்று மணி நேரம் தாமதமாக வந்ததற்காக வேலையை விட்டுத் தள்ளி விடுவார்கள் என்றால், அதுவும் நல்லதுதான். அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு மனத்துக்குப் பிடிக்காத இந்த வேலையிலிருந்து விடுதலை கிடைக்குமானால் அதைவிட ஆறுதலான விஷயம் அவளுக்கு இப்பொழுது வேறு கிடையவே கிடையாது.

யமுனாவுக்கு இப்பொழுது தாமதமாகச் செல்லப் போவதால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றித் துளியும் கவலை ஏற்படவில்லை. ஆனால், அவளை வேறொரு கவலை வாட்டியது. ஆமாம், இரவு எங்கே தங்குவது? குருடுவாடியில் தங்குவதற்கு வசதியான ஹோட்டல்கள் இரண்டொன்று இருப்பதை அவள் அறிவாள். ஆனால் அவை தனியாக வரும் பெண்பிள்ளை தங்குவதற்கு ஏற்றவையல்ல; 'காலி'களின் நடமாட்டம் அந்த ஹோட்டல்களில் நிறைய உண்டு என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

யமுனா நெடுநேரமாக என்ன செய்வதென்று தோன்றாமல் தயங்கி நின்றாள்.

அவள் அப்படி நின்றதைப் பார்த்துவிட்டு யாரோ ஒரு கண்டக்டர் அவளிடம் வந்து, "ஏன் அம்மா ரொம்ப நேரமாக இப்படி நின்றுகொண்டு இருக்கிறீங்க? நீங்கள் எங்கே போகணும்?" என்று அன்புடன் விசாரித்தான். யமுனா தன் தவிப்பைச் சொன்னாள்.

"சமூக சேவாதளத்தைச் சேர்ந்தவங்களா? அப்பன்னா கவலைப்படாதீங்க, அம்மா. பண்டரிபுரத்திலே புதுசா போட்டிருக்கிற உங்கள் பிரதம அதிகாரியே இன்னிக்குத்தான் எங்கள் தெருவில் தமது சொந்தக்காரர் ஒருவர் வீட்டில் இறங்கியிருக்கிறார். நாளைக் காலைதான் பண்டரிபுரத்துக்குப் போய் வருகிறார். நேரே அங்கே போய் விடுங்கள். இரவு அவருடைய உறவினர் வீட்டிலேயே நீங்களும் தங்கி விட்டுக் காலையில் அவருடன் பண்டரிபுரம் போய் விடலாம்" என்றான் கண்டக்டர்.

யமுனாவுக்கு இந்தச் செய்தி மிகுந்த ஆறுதலை அளித்தது. 'ஆம்; அதுதான் சரி; அங்கேயே போய்விடுவோம்' என்று அவள் தீர்மானித்தாள். ஆனால் உடனே அவளுக்கு வேறொரு சந்தேகம் ஏற்பட்டது. அவர் தங்கியிருக்கும் வீட்டில் பெண் பிள்ளைகள் யாரும் இல்லாவிட்டால் அந்நியமான தான் இரவு நேரத்தில் அங்கே தங்குவது சரியா? இந்த ஐயம் எழுந்ததும் அவள் கண்டக்டரிடம், "ஏன், கண்டக்டர், அந்த ஐயா இறங்கியிருக்கிற வீட்டிலே பெண்கள் இருக்கிறார்கள் இல்லையோ?" என்று கேட்டாள்.

அக் கேள்வியின் நோக்கத்தைப் புரிந்து கொண்டவன் போல் கண்டக்டர் புன்னகை செய்துவிட்டு, "பயப்படாதீங்க, அம்மா! உங்கள் மேலதிகாரியே மனைவியோடுதான் அங்கே தங்கியிருக்கிறார்" என்றான்.

இனிக் கவலையில்லை என்று யமுனா, அவனிடம் அவ்வீட்டு முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, ஒரு வாடகை வண்டியில் அங்கே புறப்பட்டாள்.

பாவம், யமுனா! அவள் இருந்த சிறப்பென்ன? இப்பொழுது தவிக்கும் தவிப்பென்ன? தான் இப்படி அனாதையாக அலைந்து தங்க இடம் கிடைக்





புனித ஸ்னானம் செய்து, புத்தாடை உடுத்தி

மகிழ்ச்சியுற்றிருக்கும் உங்களுக்கு எங்கள்

தீபாவளி மங்கள வாழ்த்துக்கள்!

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.

மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்



காமல் தவிக்க நேரிடும் என்று அவன் சில ஆண்டுகளுக்கு முன்னால் கனவிலும் கருதி இருப்பானா?


ஆம், அந்தச் சில ஆண்டுகளுக்கு முந்தைய யமுனா வேறு. இன்றைய யமுனா வேறு. அன்றைய யமுனா கார்க்கி வெடிமருந்துத் தயாரிப்புச் சாலையில் மானேஜராகக் கை நிறையச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஜகந்நாத ராவ் தேஷ்பாண்டே என்பவரின் ஒரே மகள். பெர்கூஸன் கல்லூரியில் பி.ஏ. இறுதி வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். போக வரக் கார்! ஏவின வேலைகளைச் செய்யப் பணியாட்கள். ரேஞ்ச் ஹில்ஸ் பக்கமாக ஒரு பெரிய மாளிகை. இத்தனை போக பாக்கியங்களுடன் வாழ்ந்து வந்தாள். செல்வமாக வளர்க்கப்பட்டு வந்த பெண்; ஆதலால் அதற்கேற்றபடி பிடிவாதமும் செருக்கும் அவளுக்குத் தலை கொள்ளாமல் இருந்தன. இந்த உலகத்தில் தான் ஒருத்திதான் பெரியவள்; மற்றவர்கள் எல்லாரும் துரும்புக்குச் சமம் என்ற மிக மிக மோசமான நிலையுடன் வளர்ந்து வந்தாள். அவளுக்கு அன்று யாரும் பொருட்டில்லை; தாய் - தந்தையரானாலும் சரி; கடவுளேயானாலும் சரி.

யமுனாவைக் கைப்பிடித்த அபாக்கியவின் பெயர் யசவந்த் ரானடே. ஆம், இம்மாதிரித் தலைக் கனம் கொண்ட ஒருத்தியை மணந்து கொண்டவனை அபாக்கியன் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்லுவது? உண்மையிலே யமுனா அவனை ஒருநாள்கூடக் கணவனாக மதித்து நடத்தியது கிடையாது. ஆனால் ரானடே பொறுமையில் பூமியை நிகர்த்தவன். தவிர, அவள் பணக்காரி என்பதற்காக யமுனாவை மணந்துகொண்டு விடவில்லை. அவனுக்கும் கொஞ்சம் சொத்து-சொப்பு இருக்கிறது. ரெயில்வே இன்ஸ்பெக்டர் வேலை வேறு இருக்கிறது. ஆதலால் நாளடைவில் மனைவியை வழிக்குக் கொண்டுவந்து விடலாமென்று அவன் நம்பியிருந்தான்.

ஆனால் அவன் நம்பிக்கை உருப்பெறவில்லை. அது நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டுதான் போயிற்று. வர வர யமுனா அவனை வேலைக்காரனிலும் கேவலமாக நடத்த ஆரம்பித்தாள். ரானடேயின் குடும்பத்துக்கு ஒரு கெட்ட பெயர் இருந்தது. அவனுடைய மூத்த சகோதரி காந்திய வழியைப் பின்பற்றி ஒரு ஹரிஜன இளைஞனை மணந்துகொண்டு எங்கோ போய்விட்டாள். இதை வேறு அடிக்கடி குத்திக் காட்டுவாள் யமுனா. என்றோ நடந்து எல்லாரும் மறந்துவிட்ட ஒரு விஷயத்தைச் சொந்த மனைவியே சொல்லிக் காட்டுவதென்றால் யார் மனந்தான் நொந்து போகாது? இருந்தாலும் ரானடே அதையும் சகித்துக்கொண்டான். ரெயில்வே இன்ஸ்பெக்டராய்ப் பணியாற்றிக் கொண்டிருந்தான். ஒரு சமயம் யமுனாவின் தாய் 'ஆச்ச-போச்ச' என்று கிடப்பதாகத் தந்தி வரவே, அவர்கள் பூனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். சென்ற இடத்தில் யமுனா தன் தாயை இழந்து விட்டாள். அந்த அம்மாளின் விசேஷங்கள் முடிந்ததும் ரானடே நாகபுரிக்குப் புறப்பட்டான். அப்பொழுது அவன் மனைவியையும் உடன் வருமாறு அழைத்தான். ஆனால் யமுனா அவனுடன் புறப்பட மறுத்துவிட்டாள். "வேண்டுமானால் நீங்கள் பூனாவுக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு வாருங்கள். என்னால் என் தந்தையையும், அரண்மனை போன்ற இந்த வீட்டையும் விட்டு அங்கெல்லாம் வந்து குடிசையிலும் குப்பை மேட்டிலும் வாழ முடியாது" என்று அவள் தீர்மானமாகக் கூறி விட்டாள்.

ரானடே வேலை மாற்றலுக்கு முயற்சி செய்து பார்த்தான். பலன் இட்டவில்லை. ஓராண்டு காலம் மனைவியைப் பூனாவிலே விட்டு வைத்திருந்த பிறகு மீண்டும் ஒரு முறை அவளை அழைத்துப் போக வந்தான்.

இப்பொழுது அவள் தன்னுடன் நிச்சயமாகப் புறப்பட்டு விடுவாளென்று நம்பினான் அவன். ஏனென்றால் ஓராண்டுக்கு முன்னிருந்த நிலையில் அவள் அப்பொழுது இருக்கவில்லை. மனைவியை இழந்தபின்னர் தேஷ்பாண்டேயின் போக்கே வேறு விதமாக மாறிவிட்டது. அவர் அலுவலக வேலையாக அடிக்கடி பம்பாய் செல்வார். அங்கே யாரோ ஒரு சினிமாக்காரியோடு தொடர்பு கொண்டு குடி, குதிரைப் பந்தயம் என்று சொத்துக்களைக் கரைத்துக்கொண்டிருந்தார். இதையெல்லாம் மனைவிக்கு விளக்கி இனி அவள், தந்தையுடன் இருப்பது நல்லதல்லவென்று அவன் சொன்னான்.



கணவன் தன் தந்தையைக் குறை கூறியது யமுனாவை ஆத்திரம் அடையச் செய்தது. "போங்கள் இங்கிருந்து. நான் இனி எந்தக் காலத்திலும் உங்களுடன் வாழ வரமாட்டேன்" என்று அவனை அவமானக் குறைவாகத் துரத்தி விட்டாள்.

மேலும் இரண்டாண்டுகள் உருண்டன. தேஷ்பாண்டே, சினிமாக்காரியின் தொடர்பினால் சொத்தையெல்லாம் கரைத்துக் கடனாளியாகி, வேலையையும் இழந்து, கடைசியில் குடல் நோய் ஏற்பட்டு மரணமடைந்தார். யமுனா தெருவில் விடப்பட்டாள். வாழ்நாள் முழுவதும் விட்டுப் பிரியேன் என்று அவள் கூறிக்கொண்டிருந்த அந்த ரேஞ்ச் ஹில்ஸ் பங்களாவைக் கடன்காரர்கள் பிடுங்கிக் கொண்டு யமுனாவை அங்கிருந்து வெளியேற்றி விட்டனர். நாதியற்றுத் தெருவில் நின்ற பிறகுதான் கணவனின் மதிப்பு அவளுக்குத் தெரிந்தது. அவளை ஏனென்று கேட்க யாருமே இல்லை. உதவி கோரிப்போனால் எல்லோரும் ஏளனமாக நோக்கினர். மானத்தை விட்டுக் கணவனுக்குப் பல கடிதங்கள் எழுதினாள். ஒன்றுக்கேனும் பதில் இல்லை. கடைசியில் ஒருநாள் அவனைத் தேடிக் கொண்டு நாகபுரிக்கே புறப்பட்டுச் சென்றாள். ஆனால் ரானடே அப்பொழுது அங்கே இல்லை. அவன் இரண்டாண்டுகளுக்கு முன்பே வேலையை ராஜிநாமா செய்து விட்டு எங்கோ போய் விட்டான் என்ற செய்திதான் யமுனாவுக்குக் கிட்டியது.

சோற்றுக்கே திண்டாடும் நிலை ஏற்பட்டபோது தெய்வச் செயலாக, சமூக சேவா தளத்துக்குப் பிராந்திய அதிகாரிகள் தேவை என்ற விளம்பரத்தை அவள் பத்திரிகையில் படித்தாள். உடனே அதற்கு விண்ணப்பித்துக்கொண்டாள்; தேர்ந்தெடுக்கப் பட்டாள்; பயிற்சி பெற்று, இனி இந்த வேலை தான் தனக்குச் சதம் என்று அதில் தீவிரமாக ஈடுபட்டாள். நாளடைவில் இவ்வேலையிலும் அலுப்புத் தட்டியது.

★

யமுனாவைச் சுமந்து சென்ற மாட்டு வண்டி குறிப்பிட்ட தெருவின் நடுவிலிருந்த சிறிய வீடு ஒன்றின்முன் வந்து நின்றது. அவ்வீட்டு வாயிற் கதவு மூடப்பட்டிருந்தது. ஆயினும் சாளரத்தின் வழியே விளக்கு வெளிச்சம் இன்னும் வீட்டிலுள்ளவர்கள் உறங்கிவிடவில்லை என்பதை அவளுக்கு உணர்த்தியது.

யமுனா வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக் கதவைத் தட்டி, "சார்! சார்!" என்று அழைத்தாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு நடுத்தர வயதுடைய அம்மாள் ஒருத்தி வந்து கதவைத் திறந்து, "நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

தான் யார் என்பதையும், இந்த இரவு நேரத்தில் இங்கே வர நேர்ந்ததின் காரணத்தையும் யமுனா கூறினாள்.

"அட பாவமே! அப்படியா! உள்ளே வா, அம்மா! என் கணவர்தான் உன் மேலதிகாரி. மாலையிலேயே பண்டரிபுரத்துக்குப் போன அவர் இன்னும் திரும்பவில்லை. வந்து விடுவார். நீ உள்ளே வந்து உட்கார். இரவு இங்கே தங்கி விட்டுக் காலையில் அவர் காரிலேயே பண்டரிபுரம் போகலாம்" என்று அன்பு ததும்பக் கூறி விட்டு அந்த அம்மாள் யமுனாவை உள்ளே அழைத்துச்சென்றாள்.

வீடு சிறிதாகக் காணப்பட்டாலும் வசதிகள் நிறைந்ததாக இருந்தது. கூடத்தில் ஒரு பாயை விரித்து யமுனாவை அமரச் செய்த அந்த அம்மாள், "உன்பெயர் என்ன அம்மா?" என்று கேட்டாள்.

"யமுனா ரானடே!"

பெயரைக் கேட்டதும் அந்த அம்மாளுக்கு ஒரு கணம் தூக்கிவாரிப் போட்டது. அதைப் பார்த்துவிட்ட யமுனா, "என்ன திகைக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை. பூனாவில் இதே பெயரோடு என் சொந்தக்காரி ஒருத்தி இருக்கிறாள். அதுதான் திடுக்கிட்டுப் போனேன். ஆனால் அவள் இம்மாதிரி பொதுநலப் பணியில் ஈடுபடக் கூடியவள் இல்லை. அவள் பெரிய பணக்காரி. அவளுடைய அப்பா பெரிய வேலையில் இருப்பவர்."

"என் பெயருடையவளா? பூனாவிலா? அவளுடைய அப்பா பெரிய வேலையில் இருப்பவரென்றால் எனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! அவர் பெயர் என்ன அம்மா?" என்று அவள் வினவினாள்.

'அவர் பெயர் ஜகந்நாத ராவ் தேஷ்பாண்டே. கார்க்கியிலிருக்கும் வெடிமருந்து உற்பத்திச் சாலையின் பிரதான அதிகாரி அவர்!"

இப்பொழுது யமுனா திடுக்கிட்டாள். அந்த அம்மாள் தன்னையே குறிப்பிடுகிறாள்! ஆனால் இவள் எனக்கு உறவினளா? என்ன உறவு? நான் இவளைப் பார்த்ததே இல்லையே! தவிர பூனாவுக்கு வெளியே எங்களுக்கு உறவினர் யாரும் இருப்பதாக அப்பா கூடக் கூறியதில்லையே! வியப்பு மேலிட்டவள் தன்னைக் காட்டிக் கொள்ளாமலே, "உங்களுக்கு

அந்த யமுனா என்ன உறவு?'' என்று மொட்டையாகக் கேட்டாள்.

''என் தம்பியின் மனைவி!''

இதைக் கேட்டதும் யமுனாவின் உடல் ஒரு கணம் சிலிர்த்தது. 'ஓ! இவள்தான் ஜனார்த்தனனை மணந்துகொண்ட நம் கணவரின் தங்கையா?''

சட்டென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் கணவரின் சொந்தச் சகோதரி இந்த அம்மாள். இவளுக்கும் அவளுக்கும் இடையே அதிகத் தொடர்பு ஒன்றும் அன்று கிடையாது. இருந்தாலும் ஒருநாள் அவர் இப்பொழுது இருக்கும் இடம் இவளுக்குத் தெரிந்திருந்தாலும் இருக்கலாம். இந்த நினைவு எழுந்ததும், தான் யார் என்பதை வெளியிட்டுத் தனது கணவரின் இருப்பிடத்தை அறிந்து கொள்ளும் துடிப்புத்தான் யமுனாவுக்கு ஏற்பட்டது. ஆனால் தொடர்ந்து எழுந்த ஒரு சந்தேகம் அந்தத் துடிப்புக்கு அணையிட்டு விட்டது. 'தான் இவளைப் பற்றி அடிக்கடி பழித்துக் கூறியதையெல்லாம் அவர் இவளிடம் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லியிருந்தால், இவளுக்கு நம்மீது வெறுப்பு ஏற்பட்டிருப்பது இயற்கையே! தவிர, இதன் காரணமாக மேலதிகாரியின் தொல்லைகளுக்குக் கூட நாம் ஆளாக நேரிடும்.

இப்படியெல்லாம் நினைத்து அவள் சிறிது தயங்கினாலும் இறுதியில் தான் யாரென்று காட்டிக் கொள்ளாமலே கணவரைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ளுவது என்று துணிந்தாள். எனவே, ''சரி, சரி, தேஷ்பாண்டேயின் மகள் யமுனாவா? அவளை எனக்கு மிக நன்றாகத் தெரியுமே! அந்த அசத்தை கொண்டவளின் கணவர்தானா உங்கள் தம்பி? ஏன் அம்மா, அவர் எங்கோ நாகபுரிப் பக்கத்தில் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். இன்னும் அங்கேதான் இருக்கிறாரா?'' என்று சாதுரியமாக வினவினாள்.

''இல்லை; இல்லை. அவன் அந்த வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு இப்பொழுது இந்த ஊரில்தான் இருக்கிறான். இது அவன் வீடுதான்!''

யமுனாவுக்குப் புல்லரித்தது. கடைசியில் அவள் தேடிக் கொண்டிருந்த மூலிகை காலில்சுற்றிக்கொண்டுவிட்டது. தன் கணவன் வீட்டுக்கே அவள் வந்து விட்டாள்! ஆனால் இப்பொழுதும் அவள் தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஆம், தன் கணவரின் மன நிலையும், இந்த அம்மாளின் மன நிலையும் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ளாமல் தன்னைக் காட்டிக் கொண்டு என்ன பயன்? முதலில் அதைத் தெரிந்து கொள்ள விரும்பிய அவள், வியப்புற்றவள்போல், ''ஓ! இது உங்கள் தம்பியின் வீடா? ஆனால் அவர் எங்கே காணோம்? படுத்துத் தூங்கி விட்டாரோ?'' என்று கேட்டாள்.

''இல்லை; அவனும் என் கணவருடன் பண்டரிபுரத்துக்குப் போயிருக்கிறான். அங்கேதான் அவன் மனைவி இருக்கிறாள்!''

''மனைவியா?'' யமுனாவின் நெஞ்சில் இடி இடித்தது.

''ஆமாம்; ஆனால் அந்தக் கர்வம் பிடித்த யமுனா இல்லை. இவள் அவன் இரண்டாவது மனைவி!''

''ஐயோ! அப்படியானால் யமுனாவின் கதி!'' யமுனா தன்னை அறியாமலே அலறி விட்டாள்.

''அதோகதிதான். அவள் தானே கணவனுடன் வாழ வர மறுத்தாள்? அவளுக்காக என் தம்பி வாழ்நாள் முழுதும் சந்நியாசியாக இருக்க முடியுமா? மனைவியின் செயலால் மனமுடைந்து நாடோடியாகக் கிளம்பிப் போய்விட்ட அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லி அழைத்து வந்து, பண்டரிபுரத்தில் வேறொரு நல்ல குணமுள்ள பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்து, மீண்டும் பழைய ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வேலையையும் தேடிக் கொடுத்தோம். இப்பொழுதுதான் சில மாதங்களாக அவன் மறுபடியும் மனிதனாக வாழத் தொடங்கி யிருக்கிறான்! அவன் மனைவி கருவுற்றுப் பிறந்தகம் சென்றிருக்கிறாள். அவளைப் பார்த்துவிட்டு வரலாமென்று தான் என் கணவருடன் பண்டரிபுரம் சென்றிருக்கிறான். நீயே சொல் அம்மா, கட்டிய மனைவி கணவனுடன் வாழ மறுத்தால் என் தம்பிதான் என்ன செய்வான்...?''

அந்த அம்மாள் தொடர்ந்து பேசிச் சென்றதை யமுனாவால் கேட்டுக்கொண் டிருக்க முடியவில்லை. அவள் அருகில் இருந்த தனது பெட்டியைத் தூக்கிக் கொண்டு எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

ஆனால் அவள், தாழிடப்பட்டிருந்த வீட்டு வெளி வாயிற் கதவைத் திறந்ததும், எதிரே அவள் கணவன் ரானடேயும், அவளுடைய தலைமை அதிகாரியும் காரிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தனர். கணவன் தன்னைக் கவனிப்பதற்குள் நழுவி விடத்தான் முயன்றாள் அவள். ஆனால் அதற்குள் ரானடே அவளைப் பார்த்து விட்டான். ''யமுனா நீ... இங்கே,...'' என்று அவன் ஓடிவந்து அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

''ஓ! இவள்தான் உன் மனைவி யமுனாவா?'' என்று முகத்தில் வியப்புக் குறி தோன்ற அவளை நோக்கினார், யமுனா இதுவரை பார்த்தே இராத அவளுடைய மேலதிகாரி.

ஆனால் யமுனா இப்பொழுது மேலதிகாரிக்குக் காட்ட வேண்டிய மரியாதைகளை மறந்த நிலையில் இருந்தாள். ''மனைவி யில்லை, சார்! மாஜி மனைவி!'' என்று வெடித்தாள் அவள். அதோடு கணவனின் கையில் சிக்கிக் கொண்டிருந்த தன் இடக்கரத்தை உதறி விடுவித்துக்கொள்ளவும் முயன்றாள்.

''ஐயோ! நீ மனம் மாறி என்னைத் தேடிவந்திருக்கிறாய் என்று நினைத்தேனே, யமுனா. இன்னும் நீ பழைய பிடிவாதத் துடன்தான் இருக்கிறாயா? பின் 'மாஜி மனைவி' என்று சொல்வதன் அர்த்தம் என்ன?'' என்று இறைஞ்சும் குரலில் சொன்னான் ரானடே.

''இனி நான் மனம் மாறித்தான் என்ன பயன்? என் தவறுக்கு நீங்கள் என்னைக் கடுமையாகத் தண்டித்து விட்டீர்களே!'' என்று குமுறினாள் யமுனா.

''தண்டித்து விட்டேனா?''

''ஆமாம்; என்னை யாரென்று காட்டிக் கொள்ளாமல் உங்கள் சகோதரியிடம் எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டேன்! இந்தக் கொடுத்து வைக்காத கர்வம் பிடித்த பாவிக்கு நீங்கள் அளித்த தண்டனை சரியானது தான். ஆயினும் மறுமணம் செய்து கொள்ளுமுன் நான் என்ன நிலையில் இருக்கிறேன் என்பதை அறிந்துகொண்டு மணம் செய்து கொண்டிருந்தால்....''

''நீ என்ன பேசுகிறாய் யமுனா? மறுமணமா! நானா! யார் சொன்னது? அக்காளா?''

''ஆமாண்டா, தம்பி! நான்தான் சொன்னேன்'' என்று கூறிக்கொண்டே அங்கே வந்தாள் ரானடேயின் சகோதரி.

''இதெல்லாம் என்ன புரளி, அக்கா?''

''பின்னே உன் மனைவிமட்டும் என்னைப் புரளி பண்ணலாமோடா, தம்பி! நான் யார், நீ யார் என்பதையெல்லாம் சொன்ன பிறகுகூட அவள் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் வேறு யாரோ ஒருத்திபோல் பேசிக்கொண்டே போனாள்....?''

''ஐயோ, அம்மா! அப்படியானால் நீங்கள் சொன்னதெல்லாம்...''

''முழுப் பொய்!'' என்று குறுக்கிட்டார் யமுனாவின் மேலதிகாரி. ''உண்மையை நான் சொல்லுகிறேன், கேள். ரானடே உன்னை மணம் செய்து கொண்டதோ, நீ அவனுடன் வாழ மறுத்ததோ ஒன்றுமே எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பல காலமாக டில்லியில் வாழ்ந்து விட்டுச் சமீபத்தில்தான் பம்பாய் திரும்பினோம். உடனே எனக்கு இந்த உத்தியோகம் கிடைத்தது. பண்டரிபுரத்தில் அடுத்த வாரம் தொடங்க இருக்கும் மேளாவுக்கான ஏற்பாடுகளைச் செய்ய நான் இங்கு வந்தேன். இவளும் பண்டரிநாதரைத் தரிசிப்பதற்காக என்னுடன் வந்தாள். வந்த இடத்தில் உன் கணவனைச் சந்தித்தோம். ரானடேயும் மனமுடைந்து எங்கு எங்கோ சுற்றி அலைந்து விட்டுச் சமீபத்தில்தான் இங்கே வந்து, பழைய வேலையையே மீண்டும் பெற்றிருக்கிறான். விஷயத்தை அறிந்த நாங்கள் உடனே உன்னையும் அவனையும் சேர்த்து வைப்பதென்று உறுதி பூண்டோம். உன்னைப் பற்றி விசாரிக்கப் புகுந்தபோது நீ எனக்குக் கீழே ஒரு பிராந்திய அதிகாரியாகப் பணியாற்றி வருவது தெரிந்தது. ஆதலால்தான் இந்தக் குருடுவாடியில் சமூக சேவாதளம் பிராந்திய அதிகாரி ஒருவர் இருந்த போதிலும் மேளாவுக்குத் தொண்டர் படை அமைக்க உன்னையே நான் அழைத்தேன். நீ தானே வருவாய். உன்னுடன் தனிமையில் பேசி, நல்ல வார்த்தைகள் சொல்லிக் கணவனுடன் வாழச் செய்து விட வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். ஆனால் தானே நிகழ வேண்டிய சந்திப்பு இன்றே நிகழ்ந்து விட்டது'' என்றார்.

''சீக்கிரம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, பல நாட்கள் பிரிந்திருந்த தம்பதிகளைத் தனித்திருக்க விடுங்கள்'' என்று கூறிய ரானடேயின் சகோதரி யமுனாவின் கையைப் பிடித்துக்கொண்டு, ''வா, யமுனா! இந்த ஆண்பிள்ளைகளுக்கே சமயமா சந்தர்ப்பமா ஒன்றும் தெரியாது!'' என்று அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.



பார்வதி பரிணயம்

ஆதிவராக அய்யருக்கு ஒரே பெண். அவர் ஆரம்பத்தில் சிறு வியாபாரியாக இருந்து, சிறிது சிறிதாகத் தன் கடையைப் பெரிதாக்கிப் பார்வதிக்குப் பதினெட்டு வயதான வருடம் "ஆதி நிலையம்" என்ற ஒரு பெரும் வியாபார ஸ்தலத்தை மாம்பலத்தில் விமரிசையுடன் திறந்தார். சென்னையில் வேறு இடங்களிலும் கிளைக் கடைகளை நிர்மாணம் செய்தார். "பார்வதி பிறந்ததிலிருந்து எனக்கு லக்ஷ்மியும் கூடவே வருகிறாள்" என்று பெருமை பேசிக் கொள்வார். பார்வதியும் பணக்காரன் பெண்ணானாலும் படிப்பில் ஊக்கம் உள்ளவள். அவள் பி. ஏ. தேறியபொழுது ஆதிக்கு ஆனந்தம் அளவடங்கவில்லை.

ஆனால் அவர் மனைவிக்கு இந்தப் படிப்பெல்லாம் பிடிக்கவில்லை. "யாருக்குச் சம்பாதித்துப் போடப் போகிறாள் உங்க பெண்! நீங்க தான் பணத்தைக் கூடையில் வாரிக் கொட்டுகிறீர்களே" என்றாள். "நீ ஒரு பட்டிக்காடு. படிப்புக்குப் பெருமை அனாதி. நமது குடும்பத்துக்கே பார்வதி ஒரு கௌரவத்தைக் கொடுக்கிறாள்" என்றார் ஆதி.

"ஆமாம்! இந்தத் தடபுடலைக் கேட்டாலே பிள்ளை வீட்டுக்காரர் பயந்து போவார்கள். நாம் என்ன ராஜ வம்சமா? காலாகாலத்தில் குழந்தைக்குக் கல்யாணம் செய்யாமல் —"

"இதோ பார், இனிமேல் இந்தப் பேச்சை—" என்று ஆதி ஆரம்பித்ததும் மீதி வார்த்தைகளைக் கேட்காமலே அவர் மனைவி உள்ளே சென்று விட்டாள்.

ஆதி அங்கவஸ்திரத்தைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு கடைக்குச் சென்றார். அவருக்கு அன்று மன நிம்மதி இல்லை. தன்னை விட்டு ஒருநாள் பார்வதி போய்விடுவாள் என்ற எண்ணம் அவரை வருத்தியது. அன்று மாலை நேராக வீட்டுக்குப் போகாமல் எழும்பூரிலிருக்கும் தமது நண்பர் பசுபதி வீட்டுக்கு வண்டியை விட்டார்.

"இன்று பார்வதிக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று என் மனைவி நிர்ப்பந்தம் செய்தாள்" என்று பல்லவி வைத்தார்.

"உங்கள் பெண்ணுக்கா? அங்கப்பிரதட்சணம் செய்ய வேண்டுமே இடைக்க. தானாக வந்து தாலி கட்டுவான்" என்றார் பசுபதி.

"ஏதோ, நல்ல இடமாக இருந்தால் பாருங்கள்" என்று கூறி விட்டுத் தம் வீட்டுக்குச் சென்றார்.

ஆதியின் பெண்ணுக்கு வரன் தேடுவதில் பசுபதி தம் முழு முயற்சியையும் செலுத்தினார். மற்றவர்களிடமும் சொல்லி வைத்தார். ஜாதகங்கள் வந்து குவிந்தன. புடவைக் கடை சிப்பந்தியைப் போல் அவைகளை மூட்டையாய்க் கட்டிக்கொண்டு ஆதியிடம் செல்வார். இருவரும் ஒவ்வொரு ஜாதகமாகப் பரிசோதனை செய்வார்கள். ஒன்று செவ்வாய் தோஷம், ஒன்று ஏழாவது வீடு காலி. மற்றொன்றில் ஐந்தாவது வீட்டில் எல்லாக் கிரகங்களும் கூட்டுக் குடித்தனம். ஒன்றில் சுக்கிரன் சொந்த வீட்டில் குடியிருப்பு. "பேஷ்! பையன் மைனர் விளையாட்டில் இறங்கி விடுவான்" என்றார் ஆதி. ஒரு பையன் உயரம் அதிகம். ஒருவன் வாமனாவதாரம்; ஒருவன் கறுப்பு, ஒருவன் வெறும் சிவப்பு. "தோல் உரித்த சர்க்கரை வள்ளிக்கிழங்கு மாதிரி இது என்ன சிவப்பு?" என்றார் ஆதி.

இவ்விதம் ஒவ்வொரு ஜாதகமும் தள்ளுபடியாகி, ஒன்றும் பொருந்தாமல் பல மாதங்கள் கடந்தன. பார்வதி எம்.ஏ. படித்தாள். முதல் வகுப்பில் தேறினாள். ஆனால் அவள் முகத்தில் ஒரு சோர்வு தோன்றியது. குதூகலம் குன்றியது. 'வைடமின்' மாத்திரைகளைத் தவறாது உட்கொண்டும் தளதளப்பு ஏறவில்லை. தாயாருக்குக் கவலை அதிகரித்தது. தன் கணவன் போகும் வழியைப் பார்த்தால் தகுந்த பையன் இந்தியாவிலேயே இல்லை என்று எண்ணுவதுபோல் தோன்றியது.

ஒருநாள் பசுபதி பரபரப்புடன் ஆதி வீட்டில் நுழைந்தார். "இதோ பார், சரியான ஜாதகம் கிடைத்து விட்டது. இனிமேல் ஓர் ஆலோசனையும் வேண்டாம்" என்று கூறி ஒரு மஞ்சள் காகிதத்தைக் காண்பித்தார். ஆதி ஜாதகத்தை வாங்கிப் பார்த்தார்.

அவர் மனைவி உள் கதவருகில் நின்றுகொண்டு நடப்பதைக் கவனித்தாள். "ஊம் !" என்றார் ஆதி. "என்ன, நான் சொன்னது சரிதானே?" என்றாள் பசுபதி. "குற்றமில்லே, பார்ப்போம்" என்றார் ஆதி. "பார்த்துப் பார்த்து என்னவாயிற்று? நல்ல வரனுயிருந்தால் சட்டுப் புட்டுன்னு முடியுங்கள்" என்றாள் அவர் மனைவி.

பையன் ஐ.ஏ.எஸ். பரீட்சையில் தேறிப் பம்பாய் அரசாங்கத்தில் குட்டிக்காரியதரிசியாக வேலே பார்த்து வருகிறுனென்றும், தந்தைக்கு ஒரே மகன் என்றும் தெரிய வந்தது. அவர் இன்ஜினியராகவிருந்து ஒய்வெடுத்த பிறகு எழும்பூரில் ஒரு பங்களா கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறாரென்றும், பசுபதியின் அபிப்பிராயப் படி "நல்ல காஷ் பேர்வழி" என்றும் ஆதி அறிந்தார். "பையன் தந்தை சொற்படி நடப்பவனும். அவர் சரி என்றால் தட்டானுக்குச் சொல்லி அனுப்ப வேண்டியது தான்" என்றார் பசுபதி.

ஒரு நாள் மாலேயில் ஆதியும் பசுபதியும் அவரைக் காணச் சென்றார்கள். இன்ஜினீர் கோபால அய்யர் இவர்கள் சென்றபொழுது தமது காரைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார். இவர்களேக் கண்டதும் "இதோ வந்துவிட்டேன். இக் காலத்தில் ஐயாயிரம் பதினுயிரம் கொடுத்து மோட்டார் வாங்கி டிரைவர் கையில் கொடுத்தால் ஒரே மாதத்தில் காயலான் கடைக்கு அனுப்ப ஏற்பாடு செய்து விடுகிறார்கள். என் வண்டியை நானேதான் ஓட்டுவது" என்றார். இருவரும் உள்ளே சென்றனர். கோபாலய்யர் பின் தொடர்ந்து வந்தார். "வீடு நன்ருக இருக்கிறது" என்றார் பசுபதி. "ஏன் இருக்காது? அறுபதினுயிரம் கட்டடம் மட்டும் விழுங்கிவிட்டது. அசல் பர்மாதேக்கைத் தவிர வேறு கிடையாது. தாழ்ப்பாள் பூட்டு எல்லாம் பம்பாயிலிருந்து என்பையனே வாங்கி அனுப்பச் சொன்னேன். அதிலேரூபாய்க்கு நாலணு லாபம். கூட இருந்து நானே கட்டினேன்" என்றார். ஆனால் வீட்டில் நாற்காலியோ, மேஜையோ ஒன்றும் காணவில்லே. மூவரும் தரையில் அமர்ந்தனர்.

"ராமா !" என்றார் கோபாலய்யர்.

"என்ன?" என்றான் ராமன் கல்பாத்தி ஸ்வரத்தில்.

"ஒரு தட்டில் வாழைப் பழமும், ஜலமும் கொண்டு வா !" என்றார் கோபாலய்யர்.

ராமன் ஒரு பித்தளேச் சிப்பியில் நான்கு வாழைப் பழங்களும் கூஜாவில் தண்ணீரும் கொண்டு வந்தான்.

"எங்களுக்கு இப்பொழுது ஒன்றும் வேண்டாம்" என்றார் ஆதி.

"ராமா !" என்றார் கோபாலய்யர்.

"என்ன ?" என்றான் ராமன்.

"இவர்களுக்கு வேண்டாமாம். பழத்தை எடுத்துக் கொண்டு போ" என்றார் கோபாலய்யர்.

பசுபதி மெதுவாக வந்த காரியத்தை எடுத்துரைத்தார்.

"ஊம் !" என்றார் கோபாலய்யர்.

ஆதி, தம்முடைய பெண் ஜாதகத்தைக் கொடுத்தார்.

"வெள்ளிக்கிழமை வாருங்கள். பையன் ஜாதகம் தான் உங்களிடம் இருக்கிறதே!" என்றார் கோபாலய்யர்.

இருவரும் வெளியேறினார்கள். "ஆள் கெட்டி" என்றார் ஆதி. "கல்லிலே நார் உரிப்பார்" என்று கூறினார் பசுபதி.

வெள்ளிக்கிழமை வந்தது. பசுபதி கோபாலய்யரைக் கண்டு பேசினார். தாம் மறுநாள் பெண்ணைப் பார்க்க வருவதாகக் கோபாலய்யர் கூறினார். மாலே



எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி

ஐந்து மணிக்கெல்லாம் இரண்டாவது போருக்கு முன் செய்த மோட்டாரை ஓட்டிக்கொண்டு கோபாலய்யர் ஆதி வீட்டுக்கு வந்தார். மூவரும் உள்ளே சென்று அமர்ந்தனர். தட்டு தட்டாகப் பலவகைச் சிற்றுண்டிகள் வந்தன. அவசரமே இல்லாமல் கோபாலய்யர் ஒவ்வொரு தட்டாகக் காலி செய்தார். இடையிடையே நீரையும் அருந்தினர். காப்பியைக் குடித்தார். தாம்பூலம் போட்டுக் கொண்டார்.

"பெண்ணைப் பார்க்கிறீர்களா?" என்றார் ஆதி. 'சரி' என்று அய்யர் தலையை அசைத்தார்.

பார்வதி உள்ளிருந்து மெதுவாக வந்தாள். அடி மேல் அடிவைத்துத் தலை நிமிராது சிறிது தூரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். கோபாலய்யர் ஒரு விநாடி கூர்ந்து கவனித்தார்.

"குழந்தை உடம்பு ரொம்ப இளைத்திருக்கிறது. டி.பி. ஒன்றும் இல்லையே?" என்றார்.

"அதொன்றும் இல்லை. அதிகப் படிப்பினால் சிறிது சோர்வு" என்றார் ஆதி.

"இருந்தாலும் டாக்டரிடம் காண்பித்து நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். எனக்கு ஒரே பையன். எனது வம்சம் நன்றாக வளர வேண்டும்" என்று சொல்லி விட்டுப் பெண்ணிடம் பேசலானார். முழுதும் ஆங்கிலத்திலேயே பேசினார். பார்வதி அவர் அசட்டுக் கேள்விகள் ஒன்றுக்கும் பதிலளிக்கவில்லை.

"குழந்தை வெட்கப்படுகிறாள்" என்றார் ஆதி.

அதை அய்யர் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. "முப்பதாயிரம் ரொக்கமாகக் கொடுத்து விடவேண்டும். ஒரு இந்துஸ்தானோ, வான்கார்டோ புதிய மோட்டார் கொடுக்க வேண்டும். பெண்ணுக்கு வைர அட்டிகை இருக்குமென்று நம்புகிறேன். வேறு விஷயங்கள் உங்களுக்குத் தெரியாதா? ரூபாயை பாங்கியில் போடமுடியாது. நோட்டாகக் கையில் கொடுத்து விடவேண்டும்" என்றார் அய்யர்.

பார்வதி எழுந்திருந்தாள். மெதுவாக உள்ளே சென்றாள். "குழந்தைக்கு ஒரு கால் சிறிது நொண்டியோ?" என்றார் அய்யர். "அதொன்றும் இல்லை, சிறிது பயந்து நடக்கிறாள்" என்றார் ஆதி.

அய்யர் சென்றதும் ஆதி அடக்கி வைத்திருந்த கோபத்தைச் சீனிப் பட்டாசைச் சிதற விட்டார். "இந்தத் தரித்திரப் பயல் வீட்டில் நான் ஒருநாளும் பெண் கொடுக்க மாட்டேன். சந்தையில் மாடு வாங்குவது போல் நொண்டியாம், இளைத்திருக்காம்" என்றார். பார்வதி தன் தாயாரிடம் சென்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். "எனக்குக் கல்யாணம் வேண்டாம்" என்றாள் தந்தையிடம். "அதுதான், சரி!" என்றார் ஆதி.

பார்வதியின் கல்யாணத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது என்று ஆதி வீட்டில் உத்தரவு போட்டிருந்தார். பார்வதி படிப்பில் மனத்தைச் செலுத்தினாள். ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதினாள். அதில் தேர்ந்தாள். அரசாங்கத்தில் அவளுக்கு வேலையும் கிடைத்தது. வேலையில் அமர்ந்ததும் பார்வதி பயிற்சிக்கென்று புதுடில்லி சென்றாள். அங்கு ஐ. ஏ. எஸ். பரீட்சையில் தேறின பலருடன் அதற்கென்று அமைக்கப்பட்ட ஒரு நிலையத்தில் அரசாங்க விஷயங்களில் பயிற்சிபெற ஆரம்பித்தாள்.

அந்த நிலையத்தில் அரசாங்க அதிகாரிகள் தான் பாடம் சொல்லும் உபாத்தியாயர்கள். அவர்களுள் சட்டங்களைப் பாடம் சொல்பவர் வயதில் சிறியவர். சிரித்த முகம்; அழகான பேச்சு. அவர் பாடம் சொல்லும் முறையைக் கண்டு பார்வதி வியந்தாள். "எவ்வளவு நயமாகச் சிக்கலான பாகங்களை எடுத்துரைக்கிறார்! அவசரமின்றிப் பேசுகிறார். இப்படியன்றோ பாடம் கற்பிக்க வேண்டும்!" என்று எண்ணினாள்.

ஒரு நாள் அவர் கூடியிருந்த குட்டி அதிகாரிகளிடம் ஒரு கேள்வி கேட்டார்:

"ஒருவன் மீது சுமத்தப்பட்ட அபவாதத்தை உண்மையானால் பிரசுரிக்கலாமா?" என்று கேட்டார். அனைவரும் செய்யலாம் என்றார்கள். பார்வதி "உண்மையானாலும் பிரசுரிக்கக் கூடாது. பொது நலம் உண்டு என்று நிரூபிக்க வேண்டியது பிரசுரிப்பவர் கடமை. இல்லாவிட்டால் உண்மையானாலும் அபவாதம் சுமத்துவது குற்றமாகும்" என்றாள். உபாத்தியாயருடைய புன்சிரிப்பு மலர்ந்தது. பார்வதி திடீரென்று தலையைக் குனிந்து கொண்டாள். அதிகாரி என்பது அழிந்து போய்ப் பெண் என்பது மெய்யானது.

அன்றுதொட்டு இருவரும் பள்ளிக்கு வெளியே சந்திக்கலானார்கள். அனேக விஷயங்களில் அவர்கள் இருவருக்கும் ஒரே கொள்கை இருப்பதை அறிந்து கொண்டனர். சில கடிதங்களும் எழுதப்பட்டன.

"அன்புள்ள அப்பாவுக்கு, பார்வதி அனேக நமஸ்காரம். படிப்பெல்லாம் படித்ததும் எனக்குப் பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கைதான் முக்கியம் என்று தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

அதற்குப் பதில்—

"திடீரென்று ஏன் இந்தப் புதிய கொள்கை? இல்லை, என்னைக் கேட்காமல் நூதன மணம் செய்து கொள்ளப் போகிறாயா?"

அதற்குப் பதில்—

"அப்படி ஒன்றும் இல்லை. உங்களுடைய சம்மதமின்றி நான் ஒன்றும் செய்ய மாட்டேன். ஆனால் மணம் செய்து கொள்வது தவறாகுமா?"

தந்தையின் தந்தி—

"நாளை மாலை டில்லி வருகிறேன்."

ஆதிவராக அய்யர் டில்லி வந்தார். இளைஞனைச் சந்தித்தார். அவன் வேறு ஜாதி இல்லை என்று தெரிந்தது. 'அப்பாடா' என்று தேறினார். அவருக்குத் தைரியம் வந்துவிட்டது. "இதோ பாருங்கள், எனக்கு ஒரே பெண். அவளுக்கு ஏராளமான பணம் இருக்கிறது. இருந்தாலும் ஒரு கணவன் தனது மனைவியைத் தகுந்த அந்தஸ்தில் வைக்க வேண்டும். அவளுக்கு வேண்டிய நகை செய்து போடவேண்டும். ஒரு இந்துஸ்தானோ, ஸ்டாண்டார்ட் மோட்டாரோ வாங்க உன்னால் முடியுமா? இருபதினாயிரம் ரூபாயாவது உன்மனைவிமீது நீ பாங்கியில் போட முடியுமா?" என்று கேட்டார்.

சந்திரசேகரனுடைய முகம் வாடவில்லை. புன்னகை மாறாது அத்தனைக்கும் சம்மதமளித்தான்.

ஆதிவராக அய்யர் ஒன்றும் கூறவில்லை. "என் தந்தைக்குக் கடிதம் எழுதுகிறேன். ஆனால் அதைப் பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். என் சொல்லை அவர் தட்ட மாட்டார்" என்று மீண்டும் உரைத்தான் சந்திரசேகரன்.


ஆனால் பயிற்சியின் நடுவில் இருவருக்கும் ஓய்வு கிடைக்கவில்லை. அரசாங்கம் பயிற்சியைத் தள்ளி வைக்க முடியாது என்று உத்தரவிட்டது. ஆகையால் டில்லியிலேயே திருமணம் நடத்தவேண்டி வந்தது. சந்திரன் தனது தந்தைக்கு எழுதி மோட்டார், நகை முதலியவைகளுக்குப் பணம் தருவித்து எல்லாப் பொருள்களையும் வாங்கிக் குறையின்றித் தன் வாக்கைக் காப்பாற்றினான்.


சந்திரசேகரனுடைய தந்தை திருமணத்தன்றுதான் வந்தார். ஆதியும் சந்திரனும் பார்வதியும் ரயிலடிக்குச் சென்றார்கள்.

"இவர்தான் எனது தந்தை" என்றான் சந்திரன்.

"ஆ! இவரா?" என்றார் ஆதி. பார்வதிக்கு நகைப்பை அடக்க முடியவில்லை.

"இதோ, எனது புதிய இந்துஸ்தான்" என்றான்.




சித்திரங்களில் சிறந்தவை
அஜந்தா
வர்ணங்களில் வனப்பு மிகுந்தவை
ஸ்பார்ட்டன் Spartan
Addisons
PAINTS
அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் அண்டு கெமிகல்ஸ்
பிரைவேட் லிமிடெட், செம்பியம், மதராஸ் -11
APC.56

விழாக்களும்
கோ-ஆப்டெக்ஸ் ஆடையும்



ஆடைக்கோ அல்லது
இதர பல அலங்காரங்களுக்கோ,
ஏறக்குறைய எல்லா இந்திய
இல்லங்களிலும் கோ-ஆப்டெக்ஸ் ஓர்
உன்னத நிலையைப் பெற்று விட்டது.
அதிலும், ஆடைகளோ விழா
காலங்களில் புகழைப் பெறுகின்றன.

இத் தீபாவளி விழாவுக்கு கோ-ஆப்
டெக்ஸ் சேலைகளில் கவர்ச்சியான
ரகங்கள் - வேஷ்டிகள் - சோளிகள்,
சர்ட்டிங்குகள், அலங்காரத் துணிகள்
முதலியன நம் தேசத்திலுள்ள எல்லா
விற்பனை நிலையங்களிலும், டெப்போக்
களிலும் காட்சியிலுள்ளன.



வாழ்த்துக்களுடன்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்



சென்னை ராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம்
லிமிடெட்,
பாக்கியன் ரோடு
சென்னை-8.

அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த

தீபாவளி நல் வாழ்த்துக்கள்




ஸ்பைடர்
பனியன்கள்


○★○

SPIDER KNITTING CO.
TIRUPUR


Telephone: 160 Telegrams: SPIDER



எங்கள் மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்
“சுபத்வார்”
தரத்துக்கும் பாதுகாப்புக்கும்
மனத்திருப்திக்கும் உறுதியளிக்கிறது
மின் சக்தியினும் இயங்கக் கூடிய கதவு.
The
SHUBHDWAR
Rolling Shutters
& Engineering Co.
208, COMMERCE HOUSE, MEDOWS ST., FORT, BOMBAY
Grams: "SHUBHROLI." Phone: 252982
சென்னைக் கிளை: துளசியாம் பில்டிங், முதல் மாடி
17, பைக்கிராப்ட்ஸ் ரோடு, சென்னை - 5


J. B.
MANGHARAM'S
ENERGY
FOOD
Biscuits
திடமான தேக ஆரோக்கியத்துக்கும் வளமான வளர்ச்சிக்கும் பால், மால்ட், க்ளுகோஸ் மற்றும் விட்டமின் சத்துக்கள் நிறைந்துள்ள
எனர்ஜி புட் பிஸ்கோத்துகள்
ஜே. பி. மங்காராம் & கோ.
குவாலியர்
வருங்கால சந்ததியை வளமுடன் வளர்க்கிறது
ஜே. பி. மங்காராம் & கோ.
35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1



துரிதமாக எடுத்துச் செல்லும் சர்வீஸ்
உங்கள் சரக்குகளை, ஒரு வாகன எடை உள்ளதாக இருந்தாலும் அதற்குக் குறைவாக இருந்தாலும் துரிதமாக எடுத்துச் செல்லும் சர்வீஸ் மூலம் நிலையந்தோறும் அனுப்பி வைக்கலாம்.
இந்த துரித சர்வீஸ் மூலம் அனுப்பும் சரக்குகளுக்கு சாதாரண கட்டணத்துக்குமேல் ரூபாய்க்கு 3 நயா பைசாதான் அதிகம். குறைந்த கட்டணம் 30 நயா பைசா. சரக்குகள் குறித்த காலத்தில் டெலிவரி செய்யப்படாவிட்டால் அதிகமாக வசூலிக்கப்படும் தொகை வாபஸ் செய்யப்படும்.
SOUTHERN RAILWAY




Deming
DEMING

திரும்பவும் கிடைக்கிறது...

யுத்த காலத்திற்கு முன்பெல்லாம் நீங்கள் ஆசையுடன் உபயோகித்து வந்த முடியலங்கார சாதனம்



ஈவான்ஸ் லைம்ஸ் அண்டு கிளிஸரின்

அதற்கே உரிமையானத் தனி இயற்கை மணத்துடனும், மனத்துக்குப் பிடித்த பிசுக்கற்ற அலங்கார சாதனம் திரும்பவும் உங்களை மகிழ்விக்க வருகிறது. முன்பைவிடப் புதுமையுடனும், புது மணத்துடனும் புது சிறப்புடனும் வருகிறது! தூய வெண்மை நிறமுள்ளதும் நெகிழ்ச்சியுடனுமுள்ள இந்தத் தயாரிப்பு உங்கள் முடிகளை நாள் முழுவதும் பளபளப்பாகவும், படிந்து அமரும்படியாகவும் வைத்திருக்க உதவும். தலைக்குக் குளிர்ச்சி அளிப்பதுடன், மண்டையின் சருமத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.

குடும்பத்தின் ஆரோக்கிய முடி அழகுக்கு ஏற்றது

EVANS

LIMES & GLYCERINE

4, 8 அவுன்ஸ் பாட்டில்கள்

வியாபார விசாரணைகளுக்கு

ராகா கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.
138, மூர் தெரு, சென்னை-1
மற்றும் விஜயவாடா, ஹைதராபாத், எர்ணாகுளம், கட்டாக்

EVANS IS THE-ORIGINAL LIMES & GLYCERINE

நமது கைத்தொழில் பற்றி

ஆபரணங்கள்

கவர்ச்சிகரமான எளிமை

அரிய மதிப்பு

சிறந்த வேலைப்பாடு

நாகரீக மங்கைக்கு உகந்த

பிரத்தியேக டிசைன்

மழலையருக்கு அல்லது மணப்பெண்ணுக்கு


எளியது அல்லது நவநாகரீகமானது


விதவிதமான டிசைன்

என்றும் மங்காத நமது சிறந்த

தரத்திற்காகப் போற்றப்படுவது

கலைத்திறனைப் பிரதிபலிப்பது










அகில இந்திய கைத்தொழில் போர்டு








வணிக-தொழிலியல் அமைச்சகம், இந்திய அரசாங்கம், புதுடில்லி





Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10 Managing Editor, T. Sadasivam.

சிற்பச் சித்திரங்கள்

செந்தமிழ் நாட்டிலேயுள்ள கோயில்களையும் சிற்ப, சித்திரச் செல்வங்களையும் பார்க்கும் போது, நாம் எத்தகைய உயர்ந்த பண்பாட்டைப் பெற்ற மக்களின் வாரிசுகள் என்ற பெருமித உணர்ச்சி எழுகிறது! அத்தகைய உணர்ச்சி தரக்கூடிய சிற்பச் செல்வத்திலிருந்து நான்கு சிற்பச் சித்திரங்களை நேயர்களுக்கு வழங்குகிறோம். இதோடுள்ள முதற் சிற்பச் சித்திரத்தைப் பாருங்கள்.

"நீயும் நானுமடி எதிரும் புதிருமடி"

என்று காட்சி தருபவர்கள் யார் என்பது அவர்கள் வாகனத்தையும் கரும்பு வில்லையும் பார்த்தாலே தெரிந்துவிடும். ஆம்; ரதியும் மன்மதனும்தான்! அவர்கள் காளையர்கள் நெஞ்சங்களையும் கன்னியர்கள் உள்ளங்களையும் சூறையாடக் கிளம்பி விட்டனர்! இந்தத் தீபாவளித் திருநாளில் அவர்களுக்கு அதிக வேலையிருக்கும். இனி நாம் அவர்களுக்குக் குறுக்கே நிற்கக் கூடாது. மேலே செல்வோம்!— இச் சிற்பம் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள குடுமியாமலைச் சிற்பங்களிலிருந்து பெயர்த்தெடுத்தது.

கும்பகோணம் ராமசுவாமி கோவிலுக்குள் சற்றுப் போய்விட்டு வருவோம் வாருங்கள்!

அதோ உலகளந்த பெருமாள் காட்சியளிக்கிறார். அவர் மகாபலி சக்கரவர்த்தியிடம் வாமனனாகச் சென்று மூன்றடி மண் யாசகம் கேட்ட கதை யாவரும் அறிந்ததே!

அந்த வாமனருக்கு நீர் தாரைவார்த்து 'மூன்றடி மண் தந்தேன்' என்று மகாபலி கூறிய, அடுத்த கணம் நிகழ்ந்த நிகழ்ச்சியை அற்புதமாகக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வர்ணிக்கிறார்.

கயம்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர் களும் இகழ் குறளன், பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே!

உயர்ந்தவர்களுக்குத் தினையளவு உதவி செய்தாலும் அதைப் பனையளவாக அவர்கள் உள்ளத்தில் உயர்த்திக் கொள்வது போல், வாமனன் வளர்ந்தான் என்கிறார் கம்பர். அற்புதமான பாடல்! பாடலுக்கு ஏற்ற சிற்பம்! சிற்பத்துக்கு ஏற்ற சித்திரம்!

கையில் தாரைவார்க்கும் கிண்டியுடன் மகாபலி நிற்கிறான். அவன் உயரத்துக்கும் மகாவிஷ்ணு சிற்பத்தின் உயரத்துக்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும், விசுவரூப தன்மை உணர.

பெண்கள் இந்தக் காலத்தில்தான் ஆண்களோடு போட்டி யிடுகின்றனர் என்பதில்லை! ஆதி பராசக்தியும் கூத்தாடும் பிரானோடு போட்டி யிட்டிருக்கிறாள்! அதுவும் நடனப்போட்டி! காளி, நடராஜனுக்குச் சமமாகவே நடனமாடி வந்தாள். திடீர் என்று சிவபெருமானின் காதிலிருந்த குழை கீழே விழுந்து விட்டது! அதைக் கட்டை விரலால் எடுத்து அந்த நடனத்திலேயே அந்தப் பாதத்தை லாகவமாக மேலே தூக்கிக் காதில் அணிந்துகொண்டு விட்டார்! இந்த நடனக் காட்சியைப் பார்த்து, இது நம்மால் இயலாது என்று கையைப் பிசைந்து, தோல்வியைக் காளி ஏற்றுக் கொண்டதாக வரலாறு! இந்த ஊர்த்துவ நடனக் காட்சியும், காளி தோல்வியுற்று அவமான மடைந்ததையும் ஆவுடையார் கோயிலில் சிற்பி அற்புதமாகச் செய்து வைத்திருக்கிறான்!

ஸ்ரீ ஸோமயாஜி மாற நாயனார் பசி என்று வருபவருக்கு இல்லை என்னாது உணவளிக்கும் பண்பாளர். ஒரு சமயம் நாட்டில் பஞ்சம் வந்தது. சோமயாகம் செய்தால் பஞ்சம் தீரும் என்றனர். அதற்கு ஏற்பாடுகள் செய்தார். இந்த யாகத்தில் சிவபெருமானே நேரில் வந்து அவிர்பாகம் பெற்றால் பலன் கிடைக்கும் என்பதை அறிகிறார். சிவபெருமானை நேரில் வரவழைக்கும் ஆற்றல் பெற்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்தான். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வேண்டிக் கொள்கிறார்;

இறைவனைச் சுந்தரர், மாற நாயனாரின் யாகத்துக்கு வருமாறு வேண்டிக் கொள்ளுகிறார். வேள்விக்கு சிவபெருமானும் அம்மையும் புலையனாகவும் புலைச்சியாகவும் வேடம் தரித்து வருகின்றனர். உண்மையை உணராத அந்தணர்கள் கோபமுற்று யாகசாலையைவிட்டு வெளியேறுகின்றனர். சுந்தரர் மாற நாயனாருக்கு வந்திருப்பவர்கள் யார் என்பதை அறிவித்து அவிர்ப்பாகம் வழங்குகிறார்.

சிவபெருமான் புலையனாகவும் அம்மை புலைச்சியாகவும் வந்த கோலத்தை ஆவுடையார் கோயில் சிற்பங்களில் காண்கிறோம். அதை நான்காவது சிற்பச் சித்திரமாக இங்கே பார்க்கிறோம். புறப் படலத்திலே சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், மாற நாயனாரையும், அவருடைய இல்லக்கிழத்தியையும் காண்கிறோம். வேள்வித் தீயையும், அந்தணர்கள் கோபமுற்று வெளியேறுவதையும் காண்கிறோம். இப்புறப் படலக் காட்சிகள் நமது ஓவியர் வினுவின் கற்பனை வண்ணம்; கைவண்ணம்!

இந்த நான்கு சிற்பச் சித்திரக் காட்சிகளையும் நமது ஓவியர் வினு அவர்கள் நேரில் சென்று பார்த்துப் பெயர்த்தெழுதி வந்து இங்கே வழங்கி யிருக்கிறார். சிற்பத்தில் சிதிலமடைந்த இடங்களைத் தமது கற்பனையால் நிறைவுபடுத்தி யிருக்கிறார்.



பாவனை கொண்டாடும் பாதம்

பாடகமும் சிறுபாதமும் அங்கொரு
பாவனை கொண்டாட —குறவஞ்சி

பெண்களுக்குச் சிங்காரித்துக் கொள்வதில் ஆசை அதிகம் என்று நாம் நினைப்போம்.

உண்மையில் பிறருக்குச் சிங்காரித்து விட்டு அழகு பார்ப்பதில் தான் அவர்களுக்கு அதிக ஆனந்தம். அதுவும் கல்யாணம், கார்த்திகை என்று வந்து விட்டால், மணப் பெண்ணுக்குச் சிங்காரித்து விடுவதில் அவள் தோழிகளுக்குள் பலத்த போட்டியே ஏற்பட்டுவிடும் !

" நான்தான் பின்னி விடுவேன் !" என்பாள் ஒரு தோழி. " இல்லை நான்தான்......" என்பாள் இன்னொரு தோழி. இந்தப் போட்டியில் கல்யாணப் பெண்ணுக்குச் சிங்காரம் ஆகாமலே காலம் தாழ்ந்து விடுவதும் உண்டு! பெரியவர்கள் வந்து அதட்டி மிரட்டின பிறகுதான் தோழிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக் கொண்டு சிங்காரித்து முடிப்பார்கள்.

அப்படிச் சிங்காரித்தல் என்பது அழகும் ஆனந்தமும் அளிக்கும் ஓர் அருங் கலை.

இதோ, இந்தப் பெண்ணுக்கு இவ்வருஷம் தலை தீபாவளி போலிருக்கிறது ! அவள் பிறருடைய உதவியை நாடாமல் தானே ஒருமாதிரி சிங்காரித்துக் கொண்டு முடித்து விட்டாள். அப்போது அவளுடைய அண்டை வீட்டுத் தோழி வந்தாள்; பார்த்தாள். "அது சரி, உன் காலில் சலங்கை எங்கேடி ?" என்றாள், ஒரு குற்றத்தைக் கண்டு பிடித்துவிட்டோம் என்ற பெருமிதத்தில்.

" இந்தக் காலத்தில் யார் காலுக்குப் பாதச் சலங்கையும் கொலுசும் கட்டிக் கொள்கிறார்கள் ! அவை யெல்லாம் கர்நாடக முறை !"

" நன்றாகச் சொன்னாய் ! கல்யாணத்துக்கு அப்புறம் இப்பொழுது தான் உன் கணவனைப் பார்க்கப் போகிறாய். அப்படிப் பார்க்கப் போகும்போது உன் வருகையைக் கட்டியங் கூற வேண்டாமோ ! அந்தப் பணியை எவ்வளவு நாசூக்காக இந்தப் பாதச் சலங்கை செய்து விடும் ! அப்படிப்பட்ட பேருபகாரியான சலங்கையை அணிந்து கொள்ளாமல் இருப்பதாவது ! இங்கே கொண்டு வா உன் காலை ! நான் கட்டி விடுகிறேன் !" என்றாள் தோழி.

'தோழி சொல்வதிலும் உண்மை இல்லாமற் போகவில்லை. தூரத்தே என் பாதச் சிலம்பொலி கேட்டால் அவர் எவ்வளவு ஆவலுடன் என்னை நேரில் காண விழைவார் !' என்று நினைத்தாள். உடனே காலுக்குச் சலங்கைகள் அணியச் சம்மதித்து விட்டாள்.

நாயகிக்குப் பாதச் சிலம்பு அணிவித்து அழகுபடுத்தும் கலை நயத்தை ஓவியர் கனுதேசாயின் கைவண்ணத்தில் காண்கிறோம்.

கண்ணன் என் காதலன்

கண்ணன் மீது பக்தி கொண்ட பக்தர்களைப் போல் பாக்கியசாலிகள் கிடையாது!

அரச பரம்பரையில் தேவகியின் வயிற்றில் பிறந்தாலும், ஆயர்பாடியில் வளர்ந்து மகிமைகள் புரிந்தவனல்லவா கண்ணன்! சாதாரணக் குழந்தையைப் போல் வெண்ணெயும் தயிரும் திருடித் தின்று மத்தடி பட்டவனல்லவா கண்ணன்? இந்த லீலைகளை எல்லாம் நினைக்கும்போது ஒருசமயம் கண்ணனைக் கொஞ்ச வேண்டும் என்றும், மற்றொரு சமயம் அடிக்க வேண்டுமென்றும் பலப்பல பாவங்கள், மனத்தில் தோன்றுகின்றன, பக்தர்களுக்கு. அவன் கோபியருடன் விளையாடியதை நினைத்தால் பக்தர்கள் தாங்களும் கோபியராக மாறிக் கண்ணனின் காதலுக்கு ஏங்குகிறார்கள். இப்படிக் குழந்தையாகவும் சிறுவனாகவும் காதலனாகவும் இன்னும் பலப்பல முறைகளில் பழகும்படியான பாக்கியம் கிருஷ்ணபக்தர்களுக்கே உரியதல்லவா?

இத்தகைய பக்த கோஷ்டிகளில் ஆழ்வாராதிகளையும், பக்த மீராவையும், கிருஷ்ண சைதன்யரையும், சண்டிதாஸரையும் குறிப்பிட வேண்டும். அவர்கள் மட்டுமல்ல, நமது மகாகவி பாரதியாரையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

அவர் கண்ணனைக் குருவாகவும், அரசனாகவும், சேவகனாகவும் குழந்தையாகவும், காதலியாகவும் காதலனாகவும் பாவித்துப் பாடிய பாடல்கள் எவ்வளவு பக்தியுணர்ச்சியுடன் இருக்கின்றன!

அத்தகைய அற்புதமான பாடல்களில் ஒன்றிற்கு ஓவியர் ராஜம் இந்தப் பக்கங்களில் வண்ணச் சித்திரங்கள் தீட்டியிருக்கிறார்.

* * *

கண்ணன்மீது காதல்கொண்ட அந்தப் பெண்ணிடம் கண்ணன் ஏதோ ரகசியம் சொல்லியிருந்தான். அதை அவளுடைய தோழிகளிடம் சொல்லமுடியுமா? முடியாது! தோழிகளோ இரவு வெகுநேரமாகியும் அவளை விட்டுப் போக மாட்டேன் என்கிறார்கள். பாட்டும், கூச்சலும், தாளமுமாகக் கொம்மாளமடிக்கிறார்கள்! இவர்கள் எல்லாரும் எப்பொழுது போய்த் தொலைவார்கள் என்று ஏக்கமே வந்துவிட்டது. அவளே வாய்விட்டு ஏசத் தொடங்குகிறாள்:

நேரம் மிகுந்ததின்னும் நித்திரையின்றி—உங்கள்
நினைப்புத் தெரியவில்லை கூத்தடிக்கிறீர்....
பாரம் நந்ததென்று வார்த்தை சொல்கிறீர்—மிகச்
சலிப்புத் தருகுதடி சகிப் பெண்களே!

அவளுக்கு எவ்வளவு சலிப்பு வந்துவிட்டது என்பதைப் பாட்டின் அடிகள் குறிப்பது போலவே அந்தச் சலிப்புப் பாவத்தை முதல் படத்தில் அவள் முகத்தில் பார்க்கிறோம்.

அதனால் அவள் தன் சகிப்பெண்களைப் பார்த்து என்ன சொல்லுகிறாள், தெரியுமா?

சந்தமிடும் குழல்கள் வீணைகள் எல்லாம்
தாளங்களோடு கட்டி முடிவைத்திங்கே
மெத்த வெளிச்சமின்றி ஒற்றை விளக்கை
மேற்குச்சுவரருகில் வைத்ததன் பின்னர்
நித்திரை கொள்ள எனைத் தனியில் விட்டே
நீங்கள் எல்லோரும் உங்கள் வீடுசென்றிடுவீர்!

அவள் சொன்னதும் போலவே தோழிகள் வீணையையும் புல்லாங்குழலையும், மத்தளத்தையும் கட்டி வைத்தனர். கவர் ஓரத்தில் ஓர் ஒற்றை விளக்கை வைத்துவிட்டு அவளையும் தனியே விட்டு அவரவர் வீட்டுக்குச் சென்றனர். இது இரண்டாவது படம்.

தோழிகள் எல்லாரும் போய் விட்டார்கள் என்று நிச்சயமானவுடன், அவள் படுக்கையை விட்டு எழுந்திருந்தாள்! "இன்றைக்குத் தூக்கம் எங்கிருந்து வருமா?" என்று கூறினள்.

கண்கள் உறங்கவொரு காரணமுண்டோ
கண்ணனை இன்றிரவு காண்பதன் முன்னே

பெண்கள் எல்லோரும் அவர் வீடு சென்றிட்டார். பிரியம் மிகுந்த கண்ணன்,

வேலிப் புறத்தில் என்னைக் காணடி என்றான்
கண்கள் உறங்கல் எனும் காரியமுண்டோ
கண்ணனைக் கையிரண்டும் கட்டவின்றியே!

இப்பொழுது புரிந்ததா ரகசியம். "வெண்ணிலவு காலிகளின் வீடு முன்னையின் வேலிப்புறத்தில் என்னை வந்து பார்!" என்று கண்ணன் சொல்லியிருக்கும்போது, அவளைத் தோழிகள் சூழ்ந்து கும்மாளம் அடித்தால் கோபமாகத்தானே இருக்கும்!

அவள் இப்பொழுது கண்ணனைக் காணவும் தட்டித் தழுவவும் கொஞ்சிக் குலவவும் புறப்பட்டு விட்டாள்! இது மூன்றாவது படம்!

கண்ணன் காதலியைப் பார்த்து என்ன சொல்லுகிறான், தெரியுமா?

தாரையடீ நீ எனக்கு தண்மதியம் நானுனக்கு
வீரமடீ நீ எனக்கு வெற்றியடீ நானுனக்கு
தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம்
ஓருருவமாய்ச் சமைந்தாய் உள்ளமுதமே! கண்ணம்மா!

இப்படி எவ்வளவோ பேசிக் கொஞ்சியிருப்பான் கண்ணன்! அந்தக் காட்சியே நான்காவது படம்!


DPC-100-TH
மங்கள கரமான
நாளில்
மகிழ்ச்சியூட்டும்
ஒரு மகத்தான
பரிசு
டன்லப்பில்லோ





இன்று முதல்

ஸாவ்லான்

டிரேட்மார்க்

உங்களுக்குப் போதிய நன்மை செய்வது ஆன்டிஸெப்டிக் ஒன்றே

ஆம், உண்மை இதுதான். ஏனெனில் வேறெந்த தயாரிப்பிலும் விஷக்கிருமிகளைக் கொல்வதற்குச் சேர்க்கப்படாத இரு வஸ்துக்கள் ஸாவ்லானில் சேர்ந்திருக்கின்றன. அவைகளில் ஒன்று ஹிபிடேன். மற்றொன்று ஸெட்ரிமைட். இவை இரண்டும் ஐ.ஸி.ஐ. ஆராய்ச்சி சாலையில் கண்டு பிடிக்கப்பட்டவை. ஹிபிடேன் விஷக் கிருமிகளைக் கொல்லுகிறது. ஸெட்ரிமைட் கிருமி நாசினியாக இருப்பதுடன், பரிசுத்தப் படுத்தும் சிறந்த சக்தியுடைய பொருள் கொண்டதாகும். லண்டனில் தலை சிறந்த ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்ட இரண்டு வருட சோதனைகளில் வேறெந்த ஆன்டிஸெப்டிக்கைக் காட்டிலும் 'ஸாவ்லான்' அதிகமான கிருமிகளை அதிவிரைவில் கொல்லுகிறது என்று நிரூபிக்கப் பெற்றிருக்கிறது.


உங்களுக்கும் நல்லது: குழந்தைக்கும் நல்லது!

'ஸாவ்லான்' அவ்வளவு பத்திரமானதும், நாற்றமில்லாததாகவும் இருப்பதால் கிருமிகளைக் கொல்லும் இந்த 'ஸாவ்லான்' ஆன்டிஸெப்டிக் ஒரு குழந்தையின் மெல்லிய தோல் மீதும் உபயோகிக்கத் தக்கதாக இருக்கிறது. தேவதாருவின் புது மணம் வீசும் 'ஸாவ்லான்' வலியை உண்டாக்காது. வெட்டுக்காயங்கள், திறந்த புண்கள் மீது அப்படியே உபயோகிக்கலாம். அது கெடுதல் செய்யாது. நோய் பரவாமல் தடுப்பதுடன் 'ஸாவ்லான்' சுத்தம்செய்கிறது. இதை முதல் சிகிச்சைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் வீட்டுத் தேவைக்கும் உபயோகியுங்கள். 'ஸாவ்லான்' ஆன்டிஸெப்டிக் திரவம் 4 அவுன்ஸ் பாட்டில்களில் கிடைக்கிறது.

'ஸாவ்லான்' ஆன்டிஸெப்டிக் க்ரீம் இயற்கையாக குணமடைய உதவுகிறது.

சிறிய வெட்டுகள், தீப்புண்கள் சாதாரண சரும வியாதிகளுக்கு 'ஸாவ்லான்' ஆன்டி ஸெப்டிக் க்ரீமை உபயோகியுங்கள். குணம் அளிக்கும் இந்த வெண்மையான க்ரீமில் ஐ.ஸி.ஐ.யின் பரிசுத்தப்படுத்திய அழுகாமல் தடுக்கும் ஸெட்ரிமைட் சேர்ந்திருக்கிறது. 'ஸாவ்லான்' ஆன்டி ஸெப்டிக் க்ரீம் 30 கிராம் ட்யூபில் வருகிறது. ஒரு ட்யூப் எப்பொழுதும் தயாராக வைத்திருங்கள்.

எல்லா கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.



ஸாவ்லான்

குடும்பத்திற்கேற்ற புதிய ஆன்டிஸெப்டிக்

தயாரிப்பாளர்கள் &
இந்தியாவில் விநியோகிப்பாளர்கள்:

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
கல்கத்தா-பம்பாய்-சென்னை-புதுடெல்லி.

ISC 4 TM

SISTA'S-SG-71-TAM

சிறிதளவு * டினோபால் வெள்ளைத்




துணிகளை அதிவெண்மையாக்குகிறது



* டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்

தயாரிப்பவர்கள் : ஸுஹ்ருத் கெய்கி லிமிடெட், வாடி, வாடி, பரோடா

ஏக விநியோகஸ்தர்கள் : ஸுஹ்ருத் கெய்கி டிரேடிங் லிமிடெட், பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்-1



ஆண்டு முழுதும் கொண்டாடப்படும் அநேக விழாக்களுக்கு இடையே, இந்தியர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். விளக்கொளி அலங்காரமும் சங்கீதமும் எல்லா விழாக்களையும் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் பொருந்தியதாகச் செய்கின்றன.



பிலிப்ஸ்

விழாக்களை மேலும் மிகுந்த மகிழ்ச்சி பொருந்தி மிளிரச் செய்கிறது.


பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

P 3654


இலேசானவை!
பளபளப்பானவை!
சுத்தமானவை!
எல்லாம
உடையாத
'ஆல்கதீனில்'
செய்யப்படுகின்றன
'ஆல்கதீன்'
1ST IN THE WORLD
IN INDIA
ICI
CORPORATION OF INDIA LTD.



வெட்கத்துக்கு வெட்கம்!



பாட்டி: என்னடிது! மாப்பிள்ளைகிட்டே போறப்போ கொஞ்சம் வெட்கப் பட்டுண்டு போக மாட்டியோ?

பேத்தி: போ, பாட்டி! எனக்கு வெட்கப்படறத்துக்கு வெட்கமாக இருக்கு!

கிராமக் காட்சி

உப்புத்தண்ணி கோட்டையூரு
உவருதண்ணி பாலேபமாம்
தேங்காத்தண்ணி கோகிலாபுரம்—நீங்க
தேடிவந்தா லாகாதோ !

—நாடோடிப் பாடல்

வங்க நாட்டுக் கிராமக் காட்சியை வங்க நாட்டு ஓவியர் பினோத் கர்மாகர் இங்கு அளித்திருக்கிறார்.

வங்க நாட்டுக்குப் போனால், நாம் சோழ நாட்டுக்கே வந்துவிட்டோமோ என்ற பிரமைதான் ஏற்படும்.

தஞ்சை ஜில்லா காவிரியின் 'டெல்டா' பிரதேசமாக இருக்கிறது. வங்கநாடு கங்கையின் டெல்டா பிரதேசம். அதனால் இரு நாடுகளும் நீர்வளம் கொழித்து விளங்குகின்றன.

மக்களின் பழக்க வழக்கங்களும், கிராமச் சூழ்நிலையும் ஒரேமாதிரியாக இருக்கின்றன.


ஊருக்கு நடுவே குளம், தோப்பு துரவுகள், குடிசைகள் யாவும் இரண்டு நாடுகளுக்கும் ஒன்றுபோலவே இருக்கின்றன !

இதோ ஒரு வங்க நாட்டுப் பட்டிக்காட்டு மங்கை அந்தக் குளத்தில் நீர் மொண்டு எடுத்து வருவதைப் பாருங்கள். அப்படி வரும்போது அவள் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டு வருவாள் என்று கற்பனை செய்து பார்த்தோம்.

தமிழ் நாட்டில் கோகிலாபுரம் என்ற ஊரைச் சேர்ந்த பெண், தன் ஊரைப் பற்றிப் பெருமிதமாகச் சொல்லிக் கொண்ட வரிகள்தான் நினைவுக்கு வந்தன ! அந்தக் குளத்தின் நீர் அத்தனையும் தேங்காய்த் தண்ணீராம் !

தேங்காத்தண்ணி கோகிலாபுரம்—நீங்க
தேடிவந்தா லாகாதோ !






சோதியும் சுடரும்

★

சோதி தவழும் திருமுகமும், தூய்மை தவழும் திருவுருவும்
கனிவும் கருணை கொழித்தடியார் துன்பம் மாற்றும் திருவிழியும்
யாது யாவர் வேண்டினும் எளிதில் அதனை அருளிஅவர்க்
கின்பம் வழங்கும் இன்னுரையும், ஏற்ற ஞான அரசாட்சிக்
கிது செங்கோல் எனும்தண்டும், இடையில் காவித் திருவுடையும்
எங்கே நடந்து செலினும்அங்கே ஏற்றம் விளக்கும் மலரடியும்,
ஆதி சங்க ராசார்ய னவனே வந்தான் எனும்புகழும்
அமைந்து காம கோடிவளர் ஆசான் சீர்த்தி வாழியவே!

★

கனியும் ஞானத் திருவுருவைக் கண்டு, கருணை வளம்கொழிக்கும்
கனிவு ரன்புச் சொல்லமுதைக் காதாற் கேட்டார் எவரேனும்
இனிப் பெருமாற் காளாகும் இதுவே வாழ்வின் பயன்என்ன
எண்ணும் படிசெய் பேராளன்; இலங்கு காம கோடியெனும்
தனிமெய்ப் பீடத் தவப்பெருங்கோன்; சந்த்ர சேக ரேந்திரப்பேர்
தரித்த குரவன் புகழ்வாழி! சாரும் அவன்றன் நிழல்போல
இனிமை தவழும் இளங்கன்றும் இயங்கும் ஜயேந்த்ர சரஸ்வதிப்பேர்
இணையும் சுடரின் நலம்வாழி! எங்கும் அன்பு வாழியவே!



பிரதேசக் காட்சிகள்

முப்பது கோடி முகமுடையாள்—உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்
— பாரதியார்

எதையும் மேம்போக்காகப் பார்க்கிறவர்களுக்கு இந்தப் பாரத நாடு எத்தனை எத்தனை வேறுபாடுகள், வித்தியாசங்கள் நிறைந்த தேசம் என்றுதான் தோன்றும். மொழியால், உடையால், நடையால் எல்லாம் மாறுபட்டிருக்கிறோம் என்று நினைப்பார்கள். ஆனால் பண்பாட்டினால், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றுபட்டிருக்கிறோம்.

இத்தகைய நாட்டில் நான்கு பகுதியினரை நமது ஓவியர்கள் இங்கு பிரித்துக் காட்டுகின்றனர். ஆடவர் அணியும் ஆடைகளைவிடப் பெண்டிர்களின் ஆடையலங்காரத்தில்தானே மாறுபாடுகளை அதிகமாகக் காண்கிறோம்?

இதோ, வீர ரஜபுத்திரர்களைப் பெற்றெடுத்த தேசமாகிய ரஜபுதனக் காட்சியைப் பாருங்கள்.



பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ரவீரர்

என்று ரஜபுதன வீரர் பற்றிப் பெருமிதத்தோடு பாடினார் பாரதியார்.

வறண்ட பூமியாக இருக்கலாம். ஆனால் வீரம் விளைந்த பூமி என்று மார் தட்டுகிறான் ஒட்டகையின் மீது அமர்ந்திருக்கும் முதுபெரும் போர்வீரன். அவன் தாடி நரைத்து விட்டது; எதிரிகளைக் கண்டு அவன் கண்கள் நகைக்கின்றன. அவனைப் போன்ற வீரர்களால் எழுந்த வெற்றிக் கோபுரம்தானே இன்னும் வானை முட்ட நிற்கிறது. இவர்கள் வீரத்துக்கெல்லாம் ராஜஸ்தானத்துப் பெண்கள்தான் காரணம். ராணி சம்யுக்தை—பிருத்விராஜன் கதை ஞாபகமிருக்கிறதல்லவா? அத்தகைய பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் கலைநயத்தை என்னவென்பது? அந்தக் கலை அவர்களிடம் இன்றும் இருக்கிறது.—ஓவியர்: விஜயா



இயற்கை அன்னை தனது முழு சௌந்தர்யத்தையும் உலக மக்களுக்கு எங்கேயாவது ஓர் இடத்தில் காண்பித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்படி அவள் காண்பித்த அந்த இடத்துக்கு உலக மக்கள் காஷ்மீரம் என்று பெயரிட்டார்கள். வெள்ளிப் பனிமலைகளும், நெடிதுயர்ந்த தேவதாரு விருட்சங்களும், வண்ண மலர்ச்செடிகளும் கொடிகளும், நிச்சலமான நீர்நிலைகளும் கல்போன்றவர்களையும் கவிபாடச் செய்து விடும் என்றால், காளிதாஸன் போன்ற கவிஞர்கள் எவ்வளவு ஆனந்தத்தில் திளைத்திருப்பார்கள்! காளிதாஸனுடைய மேகசந்தேச காவியத்தைப் படித்து அநுபவித்தவர்கள் காஷ்மீரத்துக்குச் சென்று விட்டால் அவன் கவிதையில் வடித்துக் காட்டிய காட்சிகளை யெல்லாம் நேரில் கண்டு மெய்சிலிர்ப்பார்கள்!

அங்கு வாழும் ஏழைமக்களும் அழகு துலங்கக் காட்சி யளிக்கின்றனர். அது அன்னையின் கருணை. இதோ இந்த ஆடு மேய்க்கும் சிறுமியின் அழகைப் பாருங்கள்! —ஓவியர்: லதா



பக்தி மலிந்த தேசம் வங்க தேசம். கிருஷ்ண சைதன்யர், சண்டிதாஸ் போன்ற பக்தர்கள் கண்ணன் பிருந்தாவனத்தில் கோபியருடன் ஆடிப் பாடி மகிழ்ந்ததை அரும் கீதங்களாகப் பாடிப் பரவசமானார்கள். அவை இன்றும் வங்க நாட்டு மக்களுக்கும் இலக்கியத்துக்கும் பேராதரவாக இருந்து வருகின்றன.

வங்க மக்களுக்குத் தாயாக அன்னமூட்டி வளர்ப்பவள் கங்கைதான். அவள் பல கிளைகளாகப் பல பெயர்களில் பாய்ந்து தனது செல்வங்களை ஊட்டி வளர்க்கிறாள். அவளைப் புனிதங்களில் வங்க நாட்டுப் பெண்கள் பக்தியுடன் பூஜை செய்கிறார்கள். பெண்கள், விளக்கேற்றி ஆரத்தி எடுத்து ஆற்றில் விடும் பூஜை கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அத்தகைய பூஜையில் ஈடுபட்டிருக்கும் அணங்கைப் பார்க்கிறோம்!

பக்தியும் உணர்ச்சியும் நிரம்பிய வங்க நாட்டில்தான் சுதந்திரப் பொறி வெடித்தது. பின்னர் அது தேசத்துக்கே வழிகாட்டிச் சுதந்திரப் பாதையில் அழைத்துச் சென்றதும் நினைவிருக்கும். —ஓவியர்: கல்பனா



எளிமையும் தூய்மையும் எங்கே காணலாம் என்றால் கேரள நாட்டிலேதான். உணவில் உடையில் எல்லாம் எளிமையைக் காணலாம். ஏழைமுதல் பணக்காரர் வரை அத்தனைபேரும் ஒரே மாதிரியாக உடையில் தூய்மையை விரதமாக அனுஷ்டிப்பது போல், பாரத நாட்டில் வேறு எங்கும் காண முடியாது.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த நாட்டுக்கு மணற்பாங்கான கடற்கரையும் உப்பங்கழிகளும் அவற்றில் வரிசை வரிசையாக மிதக்கும் படகுகளும், நெடிதுயர்ந்த தென்னை மரங்களும் இயற்கை வனப்பை அளிக்கின்றன. உழைக்கும் வேழங்களுக்கு அங்கே எண்ணிக்கையில்லை. கேரள மக்களும் உழைப்புக்கு அஞ்சாதவர்கள்தான். ஆண்களும் சரி, பெண்களும் சரி வெய்யிலானாலும் மழையானாலும் சதா ஏதாவது காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள். கல்வி அறிவு வளர்ந்திருப்பதைப் போலவே கலை ரசனைக்கும் அங்கே குறைவில்லை. பாட்டும் கூத்தும் அங்கே அதிகம். கேரளத்துக்கே உரித்தான கதகளி நடனம் இன்று உலகத்தின் கவனத்தையே கவர்ந்திருக்கிறது. —ஓவியர்: விஜு

சேராதன உளவோ?

வாழ்க்கையின் விநோதங்களை என்னவென்று சொல்வது!

ஒருவன் தன் சொந்த முயற்சியாலும் அறிவுத் திறனாலும் முன்னுக்கு வந்தாலுனும், உலகம் அவன் உழைப்பையோ, முயற்சியையோ, மேதாவிலாசத்தையோ பாராட்டுவதில்லை. அவன் கைப்பிடித்த மனைவி படிப்போ, அறிவோ, சாமர்த்தியமோ இல்லாத பட்டிக்காட்டுக் கட்டுப்பெட்டியாக இருப்பாள். அவளுடைய அதிர்ஷ்டத்தினால்தான் அவனுக்கு இவ்வளவு சீரும் சிறப்பும் நேர்ந்தன என்பார்கள். பாலை பிடித்தவள் பாக்கியம் அப்படி என்பார்கள். இது உலக வழக்கு!

இந்தக் கதி இவ்வுலக மக்களுக்கு மட்டும் என்பதில்லை. ஈரேழு பதினாலு உலகங்களை யும் படைத்துக் காத்து ரக்ஷிக்கும் சர்வ சக்தி வாய்ந்த ஆண்டவனுக்கும் இந்தக் கதிதான்!

வேதங்களால் பாடப்பட வேண்டுமென்றால் அது எவ்வளவு பெரிய பேறு. அந்தப் பேறும் கிடைக்கிறது. ஆயிரம் நாமங்கள் சொல்லி வேதங்கள் துதிக்கின்றன, ஆதி பரம் பொருளான ஆண்டவனை.

அது மட்டுமா? நாராயணனுக்கு ஆயிரம் பொன்முடிகள் வேறு; நறுமணம் கமழும் துளசி மாலைகளும் ஆயிரம்!

இவையெல்லாம் போதாதென்று திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார் அருளிச் செய்த அற்புதமான பாடல்கள் ஆயிரம் வேறு அந்த ஹரிக்கு வாய்த்தது!

இத்தனை பாக்கியங்கள் நேர்ந்ததற்குக் காரணம் யார் தெரியுமா? லக்ஷ்மி தேவிதான் என்கிறார் கம்பர்!

ஆம். அவள் கிடைத்து விட்டால், பின்னர் கிடைக்கக்கூடாததுதான் என்ன இருக் கிறது?—எல்லாம் தானே கிடைத்துவிடுமே!

சேரா தனஉள
வோதிரு சேர்ந்தார்க்கு
வேதம்செப் பும்

பேரா யிரம்பொன்
முடியா யிரம்நறை
பெய்துள வத்

தாரா யிரம்நம்
திருக்குரு கூர்சட
கோபன்சொன் ன

ஆரா அமுதக்
கவியோர் ஆயிரம்அல்
அரியினுக் கே.

—கம்பர்

[சேராதன: கிடைக்கக் கூடாதவை; உளவோ: இருக்க முடியுமா? திரு: லக்ஷ்மி; சேர்ந்தார்க்கு: சேர்ந்தவருக்கு; செப்பும்: சொல்லும்; நறை பெய்துளவம்: மணம் கமழும் துளசி; தார் ஆயிரம்: ஆயிர மாலைகள்.]

தமிழ் மரபோடு ஒட்டிக் கவிச்சக்கரவர்த்தி ஆயிரம் வருஷங்களுக்கு முன் எவ்வளவு அழகாக ஹாஸ்யமும் பக்தியும் கலந்த முறையில் பேசுகிறார்.

'நம் திருக்குருகூர் சடகோபன்' என்று சொல்லும்போது, அந்த 'நம்' என்ற சொல் லில் தமிழ் மக்களின் பெருமிதத்தை யெல்லாம் காட்டி விடுகிறார்.

ஆராத அமுதம் போன்ற கவி ஒன்றிரண்டல்ல 'ஓர் ஆயிரம்' என்று சொல்லும்போது கம்பருக்குப் பொறாமையே ஏற்பட்டு விடுகிறது! "ஆரா அமுதக் கவி ஓர் ஆயிரம்!"

இந்தச் சீரும் சிறப்பும் யாருக்கு?—'அல் அரியினுக்கே' என்னும்போது 'அல்' என்ற சொல்லில் 'ஒன்றுக்கும் உதவாதவன்' என்ற அலட்சிய பாவத்தைக் காண்கிறோம்.

இத்தனை கேலிக்கும் பரிகாசத்துக்கும் மேலே அற்புதமான பக்தி உணர்ச்சி பொங்கித் ததும்புவதை மறந்துவிடக் கூடாது.

இவையெல்லாம் ரஸிகமணி டி. கே. சி. சொல்ல வேண்டும்; கேட்க வேண்டும். பாடல் உயிர் பெற்று நம் முன் துள்ளிக் குதிக்க ஆரம்பித்துவிடும்!

* * *

இவ்வளவு பாக்கியங்கள் பெற்ற லக்ஷ்மிநாராயணனின் காஞ்சியிலுள்ள பல்லவர் காலச் சிற்பத்தை நமது ஓவியர் வினு இங்கே அளிக்கிறார்.

திருப்பாற்கடலில் அரவணை ஆசனத்தில் எம்பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் கம்பீர உருவங்கொண்ட நாராயணனைப் பார்க்கும்போது கவிச்சக்கரவர்த்தியின் பாடலிலுள்ள உண்மை நம் உள்ளத்தை ஆட்கொள்கிறது!



REGISTERED No. M. 4302
Supplement to the Kalki issue dated 1-11-1959

Registered as a Newspaper in Ceylon


முதல் ஸ்தானம்!

பிரயாணிகளுக்கான பஸ்கள், சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரிகள், விவசாயத்திற்கான டிராக்டர்கள், ரோடு ரோலர்கள் மற்றும் இவை போன்று அதிக சக்தியைக் கொண்டு இயக்க வேண்டிய எல்லா அவசியங்களுக்கும் உலகப் புகழ்பெற்ற **பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்களைத்** தான் எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள்.


நம்பகம் மிக்க **பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்கள்** எவ்வளவு கடினமான வேலைகளையும் மிகவும் சுலபமாகச் செய்து முடிக்கின்றன. மேலும் இவற்றின் பராமரிப்புச் செலவும் மிகவும் குறைவு. எண்ணெய்ச் செலவையும் பாதிக்குமேல் குறைத்து விடுகின்றன.

மற்ற எல்லா என்ஜின்களையும் விட, பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்கள் எந்த வேலையையும் மிகவும் துரிதமாகவும், சிக்கனமாகவும், திருப்தியாகவும் செய்து முடிக்கின்றன.


பெர்க்கின்ஸ் டீஸல் என்ஜின்களையே வாங்குங்கள்!














Perkins HIGH QUALITY DIESELS

பெர்க்கின்ஸ்

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:

ஸிம்ஸன் & கோ. லிட்

மதராஸ்-2

கிளைகள்:

பெங்களூர் - உதகமண்டலம் - திருச்சிராப்பள்ளி
செகந்திராபாத்

பெர்க்கின்ஸ் உயர்தர டீஸல் என்ஜின்கள்

போக்குவரத்து சாதனங்களுக்கும், விவசாய யந்திரங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இணையற்றவை.

முக்கிய அம்சங்கள்:

- ★ கணநேரத்தில் இயங்கும்.
- ★ மிகவும் நம்பகமான உழைப்பு.
- ★ வேகம் குன்றாமல் இயங்கும் தன்மை.
- ★ சுலபமாகப் பராமரிப்பதற்கு ஏற்றவை. எந்த பாகத்தையும் தனியே பழுது பார்க்கலாம்.
- ★ நீண்ட நாள் சேவை புரிகின்றன.
- ★ உதிரி பாகங்களும், உற்பத்தியாளர்களின் சேவையும் தாராளமாகக் கிடைக்கும்.

S-302